# பிற்காலப் புலவர்கள்



# பிற்காலப் புலவர்கள்

பதிப்பாசிரியர்

வித்துவான். எச். வைத்தியநாதன்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்
பெசன்ட் நகர். சென்னை-600 090
1986

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண்-95

முதற்பதிப்பு 1986-1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090

விலை ரூ. 35—00

Published With the Financial Assistance of
The Goverment of India.
Dept. of Edn. and Culture, New Delhi.

Printed at: B. R. V. Press.
11, Singa Perumal Koil Street.
Triplicane. Madras-600 005.

# பதிப்புரை

"திருவும் கலையும் திகழும் பெருமை
மருவும் திருவே ரகமா மலையாய்!
அருவும் உருவும் அலனாம் ஒருவன்
தருமெம் பரனே! தமிழ்தந் தருளே."

(ஐயரவர்கள்)

தமிழ் நாட்டில், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆங்கில மொழிப் பயிற்சி பரவத் தொடங்குவதற்கு முன்பே நெடுங்காலமாகச் சங்க நூல்களில் பயிற்சி குறைந்தது. புலவர்களுள் பெரும்பாலோர் குறள், நாலடியார் முதலிய நூல்களைத் தவிரச் சங்கநூற் பெயர்களையும் அறியாமல் இருந்தனர்.

பத்துப் பாட்டு, எட்டுத்தொகை இன்னவையென்று தெரியா திருந்த காலம் அது. திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டைச் சேர்ந்தது என்று தெரியாமல் பாராயணம் மட்டும் செய்து வந்தனர்.

சமயப் பற்றுக்கும் மொழிப் பற்றுக்கும் எவ்வகையிலும் விரோதம் இல்லை என்று நினைப்பவர்கள் சிலராயிருந்தனர். அப்படி யிருந்த காலத்தில் ஐயரவர்கள் சிந்தாமணியையும் பத்துப்பாட்டு முதலான சங்க நூல்களையும் பதிப்பித்தார்கள். அவர்கள் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகளால் அவற்றின் அருமை பெருமை முதலியவைகளும், பதிப்பிப்பதில் ஏற்பட்ட காலச் செலவு பொருட்செலவு முதலியவைகளும் ஊன்றிப் படிப்போர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும்.

ஐயரவர்களைப் பதிப்புத் துறையில் ஈடுபடுத்தியவர் சேலம் இராமசாமி முதலியார் அவர்கள். முதன் முதல் ஐயரவர்கள் பதிப்பிக்க ஆரம்பித்த நூல் சீவக சிந்தாமணி. அந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பிக்க வேண்டும் என்றெண்ணியது முதல் ஏடு தேட ஆரம்பித்துக் கல்லூரி விடுமுறை நாட்களிலும், கிடைத்த நேரங் களிலும் பல இடங்களுக்குச் சென்று தேடுகையில் பல புலவர்

களைப் பற்றி அறிய வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களைப் பற்றிப் பலர் கூறிய விஷயங்களையெல்லாம் உடனுக்குடன் அப்போது குறித்து வைத்துக் கொண்டார்கள்.

இதுபற்றி ஐயரவர்கள், தாம் எழுதிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார்கள்:-

"தங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை அக் காலப்புலவர்கள் எழுதி வைக்கவில்லை. ஆகவே ஒரு சாரார் புலவர்களைப் பற்றிக் கூறும் செய்திகளில் சில நம்ப முடியாதவையாகவும் இருந்தன.

"கம்பர் முதலிய சில புலவர்களை வரகவிகள் என்றும், கல்லாமலேயே சரஸ்வதி தேவியின் திருவருளால் பாடினர் என்றும் கூறுவது தான் பெருமை எனவும், அவர்கள் பழம் பிறப்பில் செய்த புண்ணியத்தாலும், திருவருளாலும் கிடைத்த நல்லறிவைக் கொண்டு பல நூல்களைப் பயின்று செயற்கையறிவும் வாய்க்கப்பெற்று நூல்களை இயற்றி னார்கள் என்பது சிறுமை எனவும் சில கருதுகின்றனர். மிகவும் புகழ் பெற்ற ஒரு புலவர் செய்தனவாகத் தெரிவித் தால் நூலுக்கு மதிப்புண்டாகுமென்று தாமாகவே கருதி அவருடைய தலையில் பிழைமலிந்த நூல்களையும், தனிப்பாடல்களையும் ஏற்றிவிடுகின்றனர்; சரித்திரங்களை யும் அவற்றிற்கு ஏற்ப அமைத்து விடுகின்றனர். ஒருவரு டைய வரலாறும் அவர் செய்த நூல் முதலியனவும் வேறொருவருடைய வரலாறாகவும் வேறொருவர் செய்தன வாகவும் வழங்குகின்றன. தங்கள் தங்கள் அபிமானம் காரண மாகப் புலவர்களின் சாதி, மதம், தொழில், ஊர் முதலிய வற்றை மாறுபாடாகக் கூறி, அவற்றிற்கு உரியவற்றைக் கற்பித்தவர்களும் உண்டு. ஆண்பாலாரைப் பெண் பாலா ராகவும் பெண்பாலாரை ஆண் பாலாராகவும் மயங்கிக் கூறுவதும், ஒரு காலத்தில் இருந்தவரை வேறொரு காலத் தினராகக் கூறுவதும், பிறவுமாகிய தடுமாற்றங்கள் புலவர் வரலாறுகளில் காணப்படுகின்றன.

"பண்டைக் காலத்தில் முறையாகப் பாடஞ் சொல்லி வந்த புலவர்கள் நூலாசிரியருடையவரலாற்றை மாணாக்கர் களுக்கு முதலிற் சொல்லி விட்டுப் பிறகு நூலைக் கற்பித்து வந்தனர். அதனாலேதான் புலவர்களுடைய சரித்திரத்தை எழுதி வைக்கும் வழக்கம் இல்லாமல் போயிற்று என்று தோன்றுகின்றது. முறையாகப் பாடஞ் சொல்லுதலும் கேட்டலும் தவறிய காலத்தில் ஆசிரியர் வரலாறுகள் பல படியாக வழங்கத் தலைப்பட்டன. ஒரு புலவர்பால்

பாடம் கேட்டவரேனும் பழகினவரேனும் அவருடைய பரம்பரையினரேனும் அவரது சரித்திரத்தை எழுதி வைப்பது தமிழ்நாட்டில் இல்லாமல் போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே.

"தமிழ்ப்புலவர் சரித்திரங்கள் இங்ஙனம் இருத்தலை எண்ணியபொழுது சங்க காலம் முதல் சமீப காலம்வரையில் இருந்து விளங்கிய புலவர்களைப்பற்றி ஆராய்ந்து தெரிந்த வற்றைத்தொகுத்து எழுதவேண்டும் என்னும் அவா எனக்கு உண்டாயிற்று. ஆதலின் நூல்களை ஆராயும் பொழுதெல் லாம் ஆசிரியர்கள் வரலாற்றைப் பற்றித் தெரிந்தனவற்றை யெல்லாம் குறித்துக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண் டேன். வெளியூர்களுக்கு யாத்திரை சென்றபோது கிடைத்த சிலருடைய வரலாறுகளையும் குறித்து வைத்துக் கொண் டேன். தக்க உதவியும், திருவருளும் இருக்குமாயின் அவற்றை முறையே வெளியிடும் விருப்பம் உண்டு."

சங்க நூல்கள் பெருங்காப்பியங்கள், பலவகைப் பிரபந்தங்கள் முதலியவற்றைப் பதிப்பித்துத் தமிழை உய்வித்த ஐயரவர்கள் தம் வாழ்நாளில் கம்பராமாயணம், அகநானூறு, நற்றிணை, தேவாரம், புலவர்கள் வரலாறு முதலியவற்றையும் பதிப்பிக்கத் திட்டமிட்டுப் பல குறிப்புக்களை எழுதி வைத்துள்ளார்கள். அவர்களுடைய இந்த எண்ணத்தை ஓரளவு அவர்கள் பெயரால் இலங்கும் நூல் நிலையம் செய்து கொண்டு வருகிறது.

ஐயரவர்கள் ஏடுகள் தேடத் தாம் போன இடங்களில் அங்குள்ள புலவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டு உடனுக்குடன் குறித்து வைத்துள்ளவை கணக்கிலடங்கா. அங்கங்கே இருந்த முதியவர், புலவர், ஆசிரியர் போன்றவர்களிடம் அங்கு யாரேனும் புலவர்கள் இருந்திருக்கிறார்களா என்று தூண்டித் தூண்டிக் கேட்டு அவர்கள் கூறியவற்றை அப்படி அப்படியே குறித்து வைத்துள்ள செய்திகளே இந்நூலாக வடிவெடுத்துள்ளன. இந்தச் செய்திகளில் கொள்ள வேண்டியனவும் தள்ளவேண்டியனவும் எவை எவை என்று ஐயரவர்கள் ஆராய்ந்து செப்பம் செய்யவில்லை. எனினும் துண்டுத்தாள்களில் குறிப்புக்களாக இருந்த இவை அழிந்து போய் விடாமல் காக்கப்படவே இந்த நூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

நான்—என்னை போன்ற சொற்கள் செய்திகளின் இடையே வருபவை ஐயரவர்களைக் குறிப்பனவாகும்.

புலவர் வரலாறுகளும், புலவர்களை ஆதரித்த புலமைமிக்க செல்வர்களின் வரலாறுகளும் இதில் இடம் பெற்றுள்ளன. அவை அகராதி வரிசையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் செய்திக்குறிப்புக்கள் சரியாக விளங்கவில்லை. ஆயினும் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளன.

அருணகிரிநாதர் வரலாறு புலவர் புராணம் என்ற நூலில் உள்ளபடி உரைநடையில் எழுதி வைக்கப்பட்டிருந்தமையால் அப்படியே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

ஐயரவர்கள் பெயரால் **திருமதி ருக்மிணிதேவி** அவர்களால் நிறுவப்பட்டு இலங்கிக் கொண்டிருக்கும் நூல் நிலையம் இந்த நூலைத் தனது 95-ஆம் வெளியீடாகத் தமிழுலகுக்கு அளிக்கின்றது.

நூல்நிலைய வளர்ச்சிக்காக ஊக்கம் காட்டி வரும் நூல் நிலையத் தலைவர் அவர்களுக்கும், நிர்வாகக்கமிட்டி உறுப்பினர் களுக்கும் நன்றி.

ஐயரவர்கள் பதிப்பித்துள்ள புராணங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றில் உள்ள புலவர் வரலாறுகளையும், உதிரித்தாள்களில் எழுதியுள்ள புலவர் வரலாறுகளையும் பிரதி செய்து கொடுத்துதவி நூல்நிலையத்தில் பண்டிதராகப் பணியாற்றிய திரு. **அ. ராசப்பா** அவர்களுக்கும், நூல் நிலையத்தில் பணி புரிகின்ற திரு. **சாமிராமன்** அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்கப் பலவகையிலும் உதவிய நூல்நிலைய நூலகர் வித்துவான் திரு. **எஸ். பாலசாரநாதன்** அவர்களுக்கும் நன்றி.

மத்திய அரசு இப்பதிப்பு வெளிவருவதற்கு மானியம் அளித்து உதவியமைக்கு நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் விரைவில் அச்சிட்டுக்கொடுத்த பி.ஆர்.வி. பிரஸ் உரிமையாளர் திரு. வி.பாலன் அவர்களுக்கு நன்றி.

**பதிப்பாசிரியர்**

**ஸ்ரீ. ஐயரவர்கள் தமிழ்ப் பணியில் ஈடுபட்டு அனவரதமும் உழைக்க, வேண்டிய அறிவும் திறனும் பெறச் செய்த மூவர்**

**ஸ்ரீ. சுப்பிரமணிய தேசிகர், மகாவித்துவான் ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், வித்துவான் ஸ்ரீ. தியாகராஜ செட்டியார்.**



ஆகவே, இம்மூவர் வரலாறுகள் முதலிலும், அவற்றைத் தொடர்ந்து ஸ்ரீ ஐயரவர்கள் வரலாறும், அதன் பின் பிற்காலப் புலவர் வரலாறும் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ. தேசிகர், ஸ்ரீ. பிள்ளையவர்கள், ஸ்ரீ. செட்டியார் வரலாறுகள் ஸ்ரீ. ஐயரவர்களாலேயே எழுதப் பட்டவை. ஸ்ரீ.ஐயரவர்கள் வரலாறு நூலகத்தாரால் எழுதப்பட்டது.



Mahavidwan Pillai Avargal
**1815-1876**



திருவாவடுதுறை யாதீன கர்த்தர்களாக

விளங்கிய

மேலகரம்

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள்



வித்துவான் தியாகராச செட்டியார்

# மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்

மேலகரம் என்பது தென்காசியிலிருந்து திருக்குற்றாலத்திற்குப் போகும் வழியில் உள்ள ஒரூர். இந்த ஊரினர் தேசிகர். இவர் தமிழ்ப் பெருங்கவிஞராகிய அவ்வூர் திரிகூடராசப்பக்கவிராயர் பரம்பரையில் அவதரித்தவர்; இயல்பிலேயே தமிழார்வம் மிக்கவர்; தாண்டவ ராயத்தம்பிரானிடத்துப் பல தமிழ் நூல்களைப் பாடங் கேட்டவர்; தமிழிற் சிறந்த புலமை உடையவர்; வடமொழியிலும் சங்கீதத் திலும் நல்ல ஞானம் உள்ளவர்; நுணுகிய அறிவு வாய்ந்தவர்; பிள்ளையவர்கள் காலத்திலும், ஐயரவர்கள் காலத்திலும் (19 ஆம் நூற்றாண்டு) திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக விளங்கியவர்; வித்துவான்களுடைய திறமையை நன்றாக அறிந்து கொள்ளும் ஆற்றலுடையவர்.

தேசிகர் தமது ஞானாசிரியரும், தமக்குமுன் திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக இருந்தவருமான அம்பலவாணதேசிகரிடம் பிள்ளை யவர்களின் புலமைத்திறத்தையும், கல்விச் சிறப்பு முதலியன வற்றையும் பலவகையிற் பாராட்டி அவ்வரை ஒப்பாரும், மிக்காரும் தமிழ் நாட்டிலேயே இல்லை என்று கூறிப் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஆனதற்கு மூலகாரணமாக இருந்தார். அம்பலவாண தேசிகர் இவருடன் ஆலோசித்தே பிள்ளை யவர்களுக்கு 'மகாவித்துவான்' என்னும் பட்டத்தை வழங்கினார். சிவஞான யோகிகள் சரித்திரத்தைத் தமிழ்ச் செய்யுளாக இயற்ற வேண்டுமென்றும், அதில் ஆதீனத்தின் பரம்பரை வரலாறுகள் முறையே கூறப்பட வேண்டுமென்றும், ஆதீனத்து அடியார்கள் பலர் நெடுநாளாக விரும்பியதையறிந்து இவர் பிள்ளையவர்களுக்குக்* குமாரசாமித் தம்பிரான் மூலம் தெரிவித்தார். உடனே பிள்ளை யவர்கள், அங்ஙனம் செய்ய வேண்டுமென்று தமக்கு நீண்டநாளாக எண்ணம் இருந்ததென்றும், சந்நிதானம் கட்டளையிட்டது அனுகூல மாயிற்றென்றும் சொல்லிச் செய்வதற்குப் பிள்ளையவர்கள் உடன் பட்டார். கச்சியப்ப முனிவருடைய நூல்களில் பிள்ளையவர்கள்

---

இவர் திருவாவடுதுறையில் சைவசித்தாந்த சாஸ்திர பாடம் சொல்லி வருவதுண்டு. படிப்பவர்கள் அப்பொழுது இடர்ப்படு வதையறிந்து சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு ஒரு பதவுரையை இவர் வரைந்தளித்தனர். அவ்வுரை மிகப் பயன்படுவதாயிற்று. இவர் பிள்ளையவர்களைக் கொண்டு ஆதிகுமரகுருபரஸ்வாமிகள் சரித்திரத்தை இயற்றுவித்த ஸ்ரீராமலிங்கத் தம்பிரானவர்களால் நியமிக்கப்பெற்று அவர்களுக்குப் பிற்காலத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக இருந்து விளங்கியவர்.

மிக்க மதிப்பு வைத்துப் படித்துப் பாடஞ் சொல்லிக்கொண்டு வந்தவ ராதலால் கச்சியப்ப முனிவரிடம் அவருக்குப் பக்தி அதிகம். கச்சியப்ப முனிவர் சிவஞான யோகிகளைப் போலவே புலமை வாய்ந்தவ ரென்பதும், உடன்படித்தவரென்பதும் பிள்ளையவர்களுடைய கருத்து. சிவஞான யோகிகள் இயற்றிய செய்யுள் நூல்களிலும், வசன நூல்களிலும் தேசிகர் மிக்க பயிற்சியுடையவர். ஆகையால் கச்சியப்ப முனிவருடைய பயிற்சியினும் யோகிகள் பயிற்சி உயர்ந்த தென்பதும் கச்சியப்ப முனிவர் சிவஞான யோகிகளுடைய மாணாக்க ரென்பதும் தேசிகருடைய கருத்து. இதுபற்றி விவாதம் நெடுநாளாக நிகழ்ந்து வந்ததுண்டு. இரு திறத்தாரும் தம்பால் வந்தவர்களோடு பேசிக் கொள்வதேயன்றிச் சந்தித்த பொழுது நேரே தம்முள் பேசிக் கொள்வதில்லை. சிவஞான யோகிகளோடு கச்சியப்ப முனிவர் படித்தவரென்று பிள்ளையவர்கள் பாடி விடுவாரென நினைத்துக் கச்சியப்ப முனிவரைச் சிவஞான யோகிகளுடைய மாணாக்கரென்று பாட வேண்டுமென்று சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களுக்குத் தெரிவித்தார். அதற்கு அவருடைய மனம் உடன்படவில்லை. அது தெரிந்த தேசிகர் மடத்துப் புத்தக சாலையிலிருந்த பழஞ்சுவடி ஒன்றை எடுத்து வரச் செய்து அதில் கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவருடைய மாணாக்கரென்று குறிப்பிட்டிருந்த ஒரு செய்யுளைப் படித்துக் காட்டச் செய்தார். அந்தச் செய்யுள் வருமாறு:

(விருத்தம்)

ஏர்தரு சாலி வாகன சகாத்தம்
ஆயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின்மேற் சாதா ரணவரு டத்தில்
இயைதரு சித்திரைத் திங்கள்
சார்தரு தேதி பத்தினோ டொன்று
தகுசெவ்வாய் வாரம்பூ ருவத்திற்
சத்தமி புனர்ப்பூ சத்திரு நாளில்
தவலருங் கும்பலக் கினத்திற்
சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான
தேவன்மா ணாக்கரின் முதன்மை
திகழ்ந்துள கச்சி யப்பமா முனிவன்
திருப்பெருங் காஞ்சியி லெய்திச்
சேர்தரு மடியார் தமதக விருளைத்
தினகரன் முன்னிரு ளென்னத்
திருந்துதன் னருளா லகற்றிவீ டுறுத்திச்
சிறந்தபூ ரணமடைந் தனனே.''

என்ற ஒரு செய்யுளைப் படித்துக் காட்டச் செய்தார். அப்பால் பிள்ளையவர்கள் இவருடைய நோக்கத்தை யறிந்து, அங்ஙனமே செய்வதாக ஒப்புக் கொண்டு அக்கருத்தை அமைத்துப் பாடுவா ராயினர். பிள்ளையவர்கள் காலத்திற்குப் பின்னர் தேசிகர் எனக்கு இலக்கண நூல்களையும், சைவசித்தாந்த சாஸ்திரங்களையும், சில இலக்கியங்களையும் பாடம் சொன்னார். என்பால் பேரன்பு பூண்டு என்னை ஆதரித்து வந்தவரும் இவரே. இவர் 7-1-1888 மாலை 4 மணிக்குப் பூரணமானார்.

### திரிசிரபுரம் மகாவித்துவான்

# மீனாட்சி சுந்தரம் பிள்ளை

''பாண்டி நாடே பழம்பதி'' என்று திருவாதவூரடிகளால் சிறப்பிக்கப் பெற்ற பாண்டி நாட்டுள், பூலோக சிவலோகம் சிவ்ராசதானி முதலிய திருநாமங்களைப் பெற்று விளங்குவதும், சொல்வடிவாகிய ஸ்ரீ மீனாட்சியம்மை தடாதகைப் பிராட்டியராகியும் பொருள் வடிவாகிய ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் சுந்தர பாண்டியராகியும், முருகக் கடவுள் உக்கிர பாண்டியராகியும் அரசாட்சி செய்த பெருமை மேவியதும், ஸ்ரீ சோம சுந்தரக் கடவுள்அறுபத்து நான்கு திருவிளையாடல் களை இயற்றியருளிய ஏற்றமுடையதும், தமிழைப் பலவாற்றாலும் வளர்த்து விளங்கிய பாண்டிய மன்னர்களால் செங்கோல் செலுத்தப் பெற்றதும்,

**''உலகமொரு துலையாத் தானோர் துலையாப்,**
**புலவர் புலக்கோலாற் றூக்க-உலகமெலாந்,**
**தான்வாட வாடாத் தகைமைத்தே தென்னவன்றன்,**
**நான்மாடக் கூட னகர்,''**

''அனலும் புனலும் இயலறிவும்'', யாரறிவார் தமிழருமை யென்கின் றேனென்னறிவீன மன்றோவுன் மதுரை மூதூர், நீரறியு நெருப்பறியும்.'' என்று ஆன்றோர்களால் புகழப்பெற்றமதுரையம்பதியிலே ஸ்ரீ சோம்சுந்தரக் கடவுளின் ஆலயத்தில் முத்திரைக் கணக்கர் பணியில் பரம்பரையாக அமர்ந்திருந்த சைவ வேளாளர் குடும்பம் ஒன்றில் சிதம்பரம்பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம் மனைவியான அன்னத்தாச்சி என்பவருடன் மதுரையை விட்டு நீங்கி திரிசிரபுரத்திற்கருகில் உள்ள சில ஊர்களில் கணக்காயராய் அமர்ந்து பலராலும் ஆதரிக்கப் பெற்றிருந்தார். அவ்வாறு அவர் அதவத்தூர் என்னுமிடத்தில் இருக்குங்கால் அவருடைய அருமைப் புதல்வராக

நம் புலவர் பெருமானார் பிள்ளையவர்கள் 6-4-1815—இல் அவதரித்தார்.

இவர், தம் ஐந்தாம் பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய் விக்கப் பெற்று 15-ஆம் பிராயம் வரை தந்தையாரிடத்திலேயே தமிழ்க் கல்வி பயின்று வந்தார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க அவ்விளமைப் பருவத்திலேயே பல நல்ல பண்புகளும், கவிகளை எளிதில் இயற்றும் ஆற்றலும் இவர்பால் நன்கு விளங்கின. அவ்வப்போது தோன்றும் ஐயங்களைத் தந்தை யாரிடம் கேட்டுத் தெளிவார். தந்தையாரும் தம் புதல்வனின் திறனைக் கண்டு மகிழ்ந்து, அவ்வப்போது கவிகளை இயற்றுவதில் இவருக்கு ஊக்கமளித்துப் பயிற்றுவித்து வந்தார்.

அவ்வாறிருக்கும் நாளில் சிதம்பரம் பிள்ளை அதவத்தூரை விட்டுச் சில அன்பர்களின் வேண்டுகோளின்படி சோமரசம் பேட்டை என்ற ஊருக்கு வந்து அங்கே பள்ளிக்கூடம் ஒன்று அமைத்து நடத்தி வந்தார். அந்நாளில் நம் புலவர் பெருமானாருக்குத் தமிழ் நூல்கள் பலவற்றையும் நன்கு பயின்று மேன்மேலும் தமிழறிவைப் பெருக்கிக் கொள்ளும் ஆர்வமும் மிகுவதாயிற்று. தம்மோடு பழகு பவர் அன்பினை எளிதில் கவர்ந்து கொள்ளும் ஆற்றலும் அவர்பால் இருந்தது. இந்நிலையில் இவர் தந்தையார் காலமானார். அப்போது பிள்ளையவர்கள் வருந்திப் பாடிய பாடிய பாடல்களுள் ஒன்று:

> ''முந்தை யறிஞர் மொழிநூல் பல நவிற்றும்
> தந்தை யெனைப்பிரியத் தான்செய்த—நிந்தைமிகும்
> ஆண்டே விரோதியெனு மப்பெயர்நிற் கேதகுமால்
> ஈண்டேது செய்யா யினி.''

சோமரசம் பேட்டையிலுள்ள மக்களின் ஆதரவால் அவ்வூரி லேயே இருந்து காலம் கழித்து வந்தார். அவ்வூரார் இவருக்கு வீட்டுக் கவலை யில்லாதபடி வேண்டியவற்றைக் கொடுத்து உதவி வந்தார்கள். உதவி செய்து வந்த பல நண்பர்களும், வேறு பல கன வான்களும் இவருக்குக் ''காவேரியாச்சி'' என்னும் பெண்ணை மிகவும் சிறப்பாக விவாகம் செய்து வைத்தார்கள். இவ்வாறு சில வருடங்கள் சென்றன.

பின்பு இவர் தம் கருத்துக்கள் நிறைவேறுவதற்குத் திரிசிர புரமே தக்கவிடம் என்று கருதி, அன்பர்களிடம் தமது கருத்தைத் தெரிவித்தார். அவர்கள் இசைவுடன் திரிசிரபுரம் சென்று தங்க லானார். அங்கே இவர் தமிழ்ப் புலவர் பலரிடம் பழகித் தம் கல்வி

யறிவையும் கவித்திறமையையும் மேன்மேலும் பெருக்கிக் கொண்டார்; பல பிரபுக்களின் ஆதரவையும் பெற்றார். பரம்பரையின் விசேடத்தாலும், தந்தையாரின் பழக்கத்தாலும் பிள்ளையவர்களுக்கு அக்காலத்தில் உண்மையான சிவபக்தியும் சைவ நூல்களில் ஆர்வமும் உண்டாகிப் பெருகலாயின. பிள்ளையவர்கள் எங்கே சென்றாலும் ஆங்காங்குள்ள சிவாலயங்களைத் தவறாது தரிசித்தலோடு, அவற்றைப் பற்றிய செய்திகளை அறியவும் முனைந்து வந்தார். பல ஆலய தரும கர்த்தர்களும், பிறரும் தத்தம் ஆலயங்களுக்கு இவர் வாக்கால் நூல் பாடுவிக்க விரும்பினர். இவ்வாறு காலக்கிரமத்தில் பிள்ளையவர்களால் பாடப்பெற்ற பிரபந்தங்களும் தலபுராணங்களும் மிகப் பலவாகப் பெருகின.

பிள்ளையவர்களுக்குக் கச்சியப்ப முனிவரின் நூல்களில் மிக்க ஈடுபாடு ஏற்பட்டது. இம்முனிவர் போல் திருவாவடுதுறையாதீனத் தொடர்பைத் தாமும் பெறவேண்டும் என்று இவர் விரும்பினார். அதனால் இவர் ஒரு நல்ல நாளில் தம் சீடருள் ஒருவரை அழைத்துக் கொண்டு திரிசிரபுரத்திலிருந்து திருவாவடுதுறையை நோக்கிப் புறப்பட்டார். வழியில் பட்டீச்சுரம் என்ற ஊரில் இவர் தங்கி, அவ்வூராரின் வேண்டுகோளின்படி அவ்வூர் ஸ்ரீ தேனுபுரீசர் மீது **பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி** என்ற பிரபந்தத்தைப் பாடினார். பின்பு திருவாவடுதுறையை அடைந்து, அப்போது அவ்வாதீன கர்த்தராக விளங்கிய வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரால் நன்கு வரவேற்கப் பெற்றார். தாம் படித்த நூல்கள் பலவற்றில் தமக்குண்டாகியிருந்த ஐயங்களைத் தேசிகர்பால் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஸ்ரீ தேசிகரவர்களும் பிள்ளையவர்களின் கல்வியாழத்தையும், நல்லியல்புகளையும் கண்டு அவரைப் பெரிதும் மதித்தனர். அப்போது பிள்ளையவர்களுக்குப் பிராயம் இருபத்தொன்று.

இவர் திருவாவடுதுறையிலிருந்து திரிசிரபுரத்திற்குத் திரும்பி வந்த பின், **திருவானைக்காத் திரிபந்தாதி**, **திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை**, **திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி**, **அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்** என்ற நூல்களை இயற்றினார்.

அக்காலத்தில் 'சென்னையில் துரைத்தனத்தார், கல்விச் சங்கம் ஒன்றையமைத்துப் பல ஊர்களிலிருந்த சிறந்த தமிழ் வித்துவான்களை வரவழைத்துக் கூட்டி அவர்கள் வாயிலாக மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லுதல், பிரசங்கம் புரிவித்தல், பழைய தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்து பதிப்பித்தல், பாடசாலைகளுக்கு உபயோகமாகும்படி வசனநடையில் இலக்கணங்

களையும் பாடங்களையும் இயற்றுவித்தல், வடமொழி முதலிய வேறு நூல்களில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பித்தல் முதலியவற்றை நடத்தி வருகிறார்கள்' என்பதையறிந்து அங்குச் சென்றால் பல வித்துவான்களுடைய பழக்கம் ஏற்படும் என்று நினைத்தார். அதற்கேற்ப ஒரு வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. அதனால் இவர் சென்னைக்குச் சென்று சற்றேறக் குறைய ஓராண்டளவு சென்னையில் தங்க நேர்ந்தது. அக்காலத்தில் பிள்ளையவர்கள், தாம் கருதியவாறே பல வித்துவான்களுடனும் பெரியோருடனும் பழகிப் பல புதிய விஷயங்களை அவர்களிட மிருந்து அறிந்து கொண்டனர். மாணவர்களுடைய ஆற்றலை யுணர்ந்து அதற்கு ஏற்றவாறு கற்பிக்கும் முறைகளை நன்கு அறிந்ததும் அவற்றுள் ஒன்றாகும். இவரோடு பழகிய அனைவரும் இவரது சிறப்பியல்களையும் ஆற்றலையும் அறிந்து பாராட்டினார். பின்பு பிள்ளையவர்கள் திரிசிரபுரம் வந்தார்.

பூவாளூர்த் தியாகராச செட்டியார் அவர்கள் பிள்ளையவர் களுடைய மாணாக்கர். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பிள்ளையவர்கள் **பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி** என்ற பிரபந்தம் ஒன்றினைப் பாடினார்கள்.

அக்காலத்தில் இவருடைய கீர்த்தி நெடுந்தூரம் பரவலாயிற்று. பங்களூரிலிருந்த தேவராச பிள்ளையென்னும் களவான் சில நண்பர்களால் இவருடைய கல்வி மிகுதியையும், பாடஞ் சொல்லும் திறமையையும் கேள்வியுற்றுப் பிள்ளையவர்களைப் பங்களூருக்கு அழைத்து வந்து சில காலம் தம்மோடு வைத்துக் கொள்ள விரும்பித் தக்கவர்கள் மூலமாகப் பிள்ளையவர்களை அழைத்து வரச்செய்தார். தேவராசபிள்ளை தமிழார்வம் உடையவர். ஆதனால் பிள்ளை யவர்களை மிகச்சிறப்புடன் உபசரித்துப் போற்றிச் சில தமிழ் நூல்களைப் பயின்றார். பிள்ளையவர்களுடைய கவிபாடும் ஆற்றலைக் கண்டு வியந்து பாராட்டினார். அப்பொழுது தேவராச பிள்ளை தாமும் கவிகளியற்ற ஆர்வங் கொண்டு கன்னட மொழியில் இருந்த குசேலோபாக்கியானத்தையும், சூத சம்ஹிதையையும் தமிழிற் கவிகளாகத் தாமே பாட வேண்டுமென்று விரும்பினார், அது கைகூடவில்லை. அவருடைய அன்பின் திறத்தைக் கண்டு வியந்த பிள்ளையவர்கள் மனங்கசிந்து, அவ்விரண்டு நூல்களையும் தாமே இயற்றி அவரிடம் கொடுத்து அவற்றை அவர் பேராலேயே அச்சிட்டு வெளிப்படுத்திக் கொள்ளும்படி செய்தார். பின்பு திரிசிரபுரத்திற்கு வந்தார். அப்போது பிள்ளையவர்களுக்குப் பிராயம் முப்பந்தைந்து.

கீழ்வேளூரில் இருந்த சுப்பிரமணிய தேசிகரைத் திரிசிர புரத்திற்கு அழைத்து வந்து இலக்கண விளக்கம் என்னும் நூலையும், வேறு சிலவற்றையும் கற்றுத் தெளிந்தார்.

திருவாவடுதுறை யாதீனத்துச் சின்னப் பட்டத்தில் அப்பொழுது எழுந்தருளியிருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் பிள்ளையவர்களின் தமிழறிவாற்றலையும், மாணவர்களுக்குக் கற்பிக்கும் திறத்தையும் கேள்வியுற்றுப் பிள்ளையவர்களைத் தம் ஆதீனத்தில் அமர்த்தி, அங்குள்ள பலருக்குப் பாடம் சொல்லுவிக்க விரும்பி அதற்கேற்ற தருணத்தை எதிர்பார்த்திருந்தார். அச்சமயம் பிள்ளையவர்கள் திரிசிரபுரத்திலிருந்து மாயூரத்துக்குத் தமதிருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். தருணம்பார்த்திருந்த தேசிகரவர்கள் ஆதீனகர்த்தரிடம் தக்கவாறு பேசிப்பிள்ளையவர்களைத் தம் ஆதீன வித்துவானாக அமர்த்திப் பிள்ளையவர்களுக்கு தங்கியிருப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். அப்போது ஆதீனகர்த்தராக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் விஷயமாகப் பிள்ளையவர்கள் **கலம்பகம்** ஒன்று இயற்றி அரங்கேற்றினார். அதன் அருமை பெருமைகளை அறிந்த ஆதீன கர்த்தர் அவர்கள் பிள்ளையவர்களுக்கு '**மகாவித்துவான்**' என்ற பட்டம் அளித்துப் பாராட்டிச் சிறப்பித்தார். பிள்ளையவர்களும் தம் இறுதிக் காலம் வரை அப்பதவியையும், பட்டத்தையும் போற்றி வந்ததோடு, வேறெவரும் எக்காலத்திலும் செய்திராத வகையில் தமிழ்த் தொண்டுகளையும் செய்து வந்தார். அளவற்ற தல புராணங்களையும் பிரபந்தங்களையும் இயற்றினார். தமது இறுதிக் காலம்வரை திருவாவடுதுறையில் இருந்து வந்தார்.

பிள்ளையவர்களுக்குச் **சிதம்பரம் பிள்ளை** என்ற புதல்வர் ஒருவர் இருந்தார்.

பிள்ளையவர்கள் 1876—ஆம் வருஷம் ஜனவரி மாதம், நோய்வாய் பட்டார். 31-ஆம் தேதி அன்று பிள்ளையவர்களுக்குத் தேகத் தளர்ச்சி அதிகமாயிற்று. அடிக்கடி ஞாபகம் தவறியது. நள்ளிரவுக்கு மேல் நெடுநேரம் பிரக்ஞை இழந்திருந்தார். பிறகு, விழித்துப் பார்த்து ஏதோ சொல்ல வாயெடுத்தார். அக்குறிப்பு, திருவாசகம் என்று சொன்னதாக எனக்குப் புலப்படுத்தியது. நான் திருவாசகத்தை எடுத்து அடைக்கலப்பத்தை வாசித்தேன். பிள்ளையவர்கள் கண்ணை மூடிக்கொண்டே இருந்தார். திருவாசகச்செய்யுள் பிள்ளையவர்கள் காதின் வழியே உள்ளத்துள் புகுந்து இன்பத்தை விளைவித்திருக்க வேண்டும். அந்த இன்பம் அவர் முகத்தில் ஒரு மலர்ச்சியை உண்டாக்கியது. திடீரென்று அவரது தேகத்தில் உள்ளங்கால் முதல்

உச்சி வரையில் ஒரு துடிப்பு உண்டாயிற்று. மூடியிருந்த கண்களில் வலக்கண் திறந்தது. அவ்வளவுதான். சிவலோகத்தில் அதே சமயத்தில் அந்த நல்லுயிர் புகுவதற்கு வாயிலும் திறந்தது போலும். அப்போது அவருக்கு பிராயம் அறுபத்தொன்று.

## இயல்புகளும் பிறவும்

**தோற்றம்:-** பிள்ளையவர்களுடைய சரீரம் மாநிறம் உடையது. இவர் நல்ல வளர்ச்சியடைந்த தோற்றமுடையவர். இவரைப் பார்த்த மாத்திரத்தில் யாரும் 'சிறந்த தகுதியுடையவர்' என்று எண்ணுவர். நெற்றியின் அகலமானது இவருடைய அறிவைப் புலப்படுத்தும். கைகள் முழங்கால் வரையில் நீண்டிருக்கும்.

காட்சிக்கு எளிமையும், பணிவும், சாந்தமும் இவர்பால் உளவென்பதை இவரைக் கண்டவுடன் அறியலாம். ஆழ்ந்த அறிவும் இணையற்ற கவித்துவமும் வாய்க்கப் பெற்றிருந்தும் அவைகளெல்லாம் அடங்கி ஒலியற்றிருக்கும் ஆழ்ந்த கடலைப் போல் அறிவின் விசித்திர சத்தியெல்லாம் கண்டவுடன் அறிய முடியா வண்ணம் அடங்கியிருக்கும் தோற்றமுடையவராக இவர் இருந்தார்.

இடையில் ஆறுமுழ நீளமும் மூன்றுமுழ அகலமும் உள்ள தூய வெள்ளை உடை; ஆறுமுழ நீளமுள்ள மேலாடை; உதரபந்தனமாக ஒரு சிறிய சவுக்கம்; இவ்வளவே இவர் எக்காலத்தும் அணியும் ஆடைகள். உடையை மூலக்கச்சமாக உடுத்திக் கொள்வார். முன்னும் பின்னும் கௌரிசங்கரமுள்ள ருத்திராட்ச கண்டியைத் தரித்திருப்பார். இடையின் வலப் புறத்தில் நன்றாக வடிகட்டிய விபூதி நிறைந்த வெள்ளிச் சம்புடம் ஒன்றும், இடப்புறத்தில் மூக்குத்தூள் டப்பி ஒன்றும் இவர் உடையில் செருகப்பட்டிருக்கும்.

**வழக்கம்:-** விடிய நான்கு நாழிகைக்கு முன் எழுந்திருப்பது இவரது வழக்கம். உடனே ஒரு நாழிகை வழித் தூரத்திற்குக் குறையாமல் நடந்து சென்று தந்த சுத்தி முதலியவற்றைச் செய்து அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு வருவார். ஆறுமணி நேரம் வரையில் காலைப் பெயர்த்து வைக்காமல் அமர்ந்தபடியேயிருந்து பாடம் சொல்வார். எந்த வகையான் செய்யுளையும் ஒரே வகையான இசையிலேதான் சொல்வது இவருடைய வழக்கம்.

**உணவு:** காலையில் எவ்வித உணவையும் இவர் உட்கொள்வதில்லை. தினந்தோறும் பகலில் பூஜை பண்ணிய பின்பே உண்பார். இரண்டு வேளையே உணவு கொள்வார். மிளகு சேர்த்த உணவு வகைகளிலும், கீரை வகைகளிலும், சித்திரான்னங்களிலும் புளி

சேர்த்துச் செய்த அரைக்கீரை உணவிலும், நறுநெய்யிலும், மாம்பழத்திலும், தேங்காய் வழுக்கையிலும் இவருக்கு விருப்பம் அதிகம். இரவில் பால் பருகுதல் ஒரு நாளும் தவறியதே இல்லை.

**குணங்கள்:** இவருடைய அரிய குணங்களுள் பொறுமை, திருப்தி, தம்மை வியவாமை, பிறருடைய குற்றத்தைக் கூறாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியறிவு, சிவபக்தி, மாணாக்கர்பால் அன்பு முதலியவற்றைச் சிறப்பாகச் சொல்லலாம்.

**பாடஞ் சொல்லுதல்:-** பாடஞ்சொல்வதில் பிள்ளையவர்களுக்குச் சலிப்பே உண்டாவதில்லை. தமக்குத் தெரிந்தவற்றை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் உபகார சிந்தையுடையவர். மாணாக்கர்களுடைய தரமறிந்து பாடஞ்சொல்வார். பாடஞ் சொல்லும் காலத்தில் கையில் புத்தகம் வைத்துக்கொண்டு சொல்வதில்லை. பாடஞ்சொல்லும் செய்யுட்கள் எல்லாம் இவருக்கு மனப் பாடமாகவே இருக்கும். இவர் பாடஞ் சொல்லும்பொழுது கடின பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்வார். பண்டைக்கால முதல் நூல்களில் வழங்கிவந்த சொற்பிரயோகங்களை நாம் மாற்றுதல் பிழையென்று சொல்வார். வடமொழிச் சொற்களைத் திரித்து வழங்கும்பொழுது மனம் போனவாறு திரித்தலை இவர் விரும்பார்.

இவர் இயற்றிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில; தெரிந்தவற்றுள் புராணங்கள் 22; பிற காப்பியங்கள் 6; பிரபந்தங்கள் 45; தனிப்பாடல்கள் அளவிறந்தன.

**தலபுராணங்கள்:**

1. அம்பர்ப் புராணம் 2. ஆற்றூர்ப் புராணம் 3. உறையூர்ப் புராணம் 4. கண்டதேவிப் புராணம் 5. ஸ்ரீகாசிரகசியம் 6. குறுக்கைப் புராணம் 7. கோயிலூர்ப் புராணம் 8. சூரை மாநகர்ப் புராணம் 9. தனியூர்ப்புராணம் 10. தியாகராசலீலை 11. திருக்குடந்தைப் புராணம் 12. திருத்துருத்திப் புராணம் 13. திருநாகைக் காரோணப் புராணம் 14. திருப்பெருந்துறைப் புராணம் 15. திருமயிலைப் புராணம் 16. திருவரன்குளப் புராணம் 17. பட்டீச்சுரப் புராணம் 18. மண்ணிப் படிக்கரைப் புராணம் 19. மாயூரப் புராணம் 20. வாளொளிப் புற்றூர்ப் புராணம் 21. விளத்தொட்டிப்புராணம் 22. வீரவனப் புராணம்.

2. **சரித்திரம்:** 1. ஆதிகுமர குருபரஸ்வாமிகள் சரித்திரம் 2. சிவ ஞான யோகிகள் சரித்திரம் 3. மயில் ராவணன் சரித்திரம்.

3. **மான்மியம்:** குருபூசை மான்மியம்

4. **பிற காப்பியங்கள்:** 1. குசேலோபாக்கியானம் 2. சூதசங்கிதை

5. **பதிகம்:** 1. கச்சி விநாயகர் பதிகம் 2. சுப்பிரமணியசுவாமி பதிகம்

6. **பதிற்றுப்பத்தந்தாதி:**
1. தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி
2. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பதிற்றுப்பத்தந்தாதி
3. திருவூறைப் ,,
4. பழசைப் ,,
5. பாலைவனப் ,,
6. பூவாளூர்ப் ,,

7. **திரிபந்தாதி**

1. குடந்தைத் திரிபந்தாதி 2. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி 3. திருவானைக்காத் திரிபந்தாதி 4. திருவிடை மருதூர்த் திரிபந்தாதி

8. **யமக அந்தாதி**

1. திருச்சிராமலை யமக அந்தாதி 2. திருவாவடுதுறை யமக அந்தாதி 3. தில்லை யமக அந்தாதி

9. **வெண்பா அந்தாதி:** எறும்பீச்சரம் வெண்பா அந்தாதி

10. **மாலை:** 1. அகிலாண்டநாயகி மாலை 2. கற்குடி மாலை 3. சிதம்பரேசர் மாலை 4. சுப்பிரமணிய தேசிகர் மாலை 5. சச்சிதானந்த தேசிகர் மாலை 6. சவராயலுநாயகர் மாலை 7. சித்திரச் சரித்திர புகழ்ச்சி மாலை.

11. **பிள்ளைத்தமிழ்:**
1. அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்
2. காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்
3. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
4. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ்
5. திருவெண்ணீற்றுமை ,,
6. பாகம் பிரியாள் ,,
7. பிரம்ம வித்தியா நாயகி ,,
8. பெருந்திருப்பிராட்டியார் ,,
9. மங்களாம்பிகை ,,
10. அம்பலவாண தேசிகர் ,,

12. **கலம்பகம்:-** 1. வாட்போக்கிக்கலம்பகம் 2. அம்பலவாண தேசிகர் கலம்பகம்

13. **கோவை:-** 1. சீகாழிக்கோவை 2. குளத்தூர்க்கோவை 3. வியாசைக் கோவை

14. **உலா:-** திருவிடை மருதூர் உலா

15. **தூது:-** 1. சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது 2. தானப்பாசாரியார் தசவிடுதூது

16. **குறவஞ்சி:-** திருவிடைக்கழிக் குறவஞ்சி

17. **சிலேடைவெண்பா:-** திருவாவடுதுறைச் சிலேடைவெண்பா

18. **வேறு:-** 1. கப்பற்பாட்டு 2. குருபரம்பரை அகவல் 3. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஆனந்தக்களிப்பு 4. பொன்னுசல் 5. மங்களம் 6. லாலி 7. வாழ்த்து

இவற்றையன்றி இவர் வேறு பல நூல்களை இயற்ற வேண்டுமென்று எண்ணியிருந்ததுண்டு. குறிஞ்சித்திணை வளங்கள் நிறைந்து விளங்கும் குற்றாலத்திற்கு ஒரு கோவை பாட வேண்டுமென்று எண்ணியிருந்தனர். அவ்வெண்ணம் என்ன காரணத்தாலோ நிறைவேறவில்லை.

[**குறிப்பு:** மேலும் விரிவான செய்தியை ஐயரவர்கள் இரண்டு பாகங்களாக எழுதியுள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தில் காணலாம்.]

## வித்துவான் தியாகராச செட்டியார்

கல்வியிற் சிறந்த பெரியோர்களிற் பலர் தங்கள் கடமைகளை உண்மையோடும் ஊக்கத்தோடும் அன்போடும் செய்து கொண்டு பிறருடைய செல்வத்துக்கேனும் அதிகாரத்துக்கேனும் அஞ்சிப் பிறழ்ந்தொழுகாமல் இன்புற்று வாழ்ந்து வந்ததுண்டு. அத்தகையோர்கள் நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்திலும் பிற்காலத்திலும் இருந்தனரென்பதை நூல்கள் வாயிலாகவும், கண்கூடாகவும், வேறுவிதமாகவும் அறிந்து வருகிறோம். பிற்காலத்தில் வாழ்ந்தவர்களுள், கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்து பெரும் புகழ் பெற்ற ஸ்ரீ சி. தியாகராச செட்டியார் ஒருவராவர்.

செட்டியார் தைரியம் மிக்கவர்; தம்முடைய கடமைகளை ஒழுங்காகச் செய்துவருபவர்; பிறருடைய நூல்களிலும் உரை

களிலும் உள்ள நயமான பகுதிகளைக்கண்டு மகிழ்ந்துபாராட்டுபவர்; பிழைகள் கண்டவிடத்து அஞ்சாமற் கண்டிக்கும் துணிவுடையவர். கல்வியறிவில்லாருடைய மேற்போக்கான நடிப்புக்கள் அவரிடம் பயன்படா.

அவர் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கேயுள்ள பூவாளூரென்னும் ஊரில், 'பூவாளூர்ச் செட்டியார்' என்னும் சைவ மரபிற் பிறந்தவர். அவர் பிறந்த வருடம் 1825. அவருடைய தந்தையார் பெயர் சிதம்பரஞ் செட்டியாரென்பது. அவர் பதினெட்டுப் பிராயம் வரையில் தம்முடைய குடும்பத்திற்குரிய விவசாயத்தையும் வர்த்தகத்தையும் கவனித்து வந்தனர்; தமிழ் நூல்களையும் தக்கவர்களிடத்திற் கற்று வந்தார். அக்காலத்தில் அவருக்குப் பயிர்த் தொழில் முதலியவற்றில் ஊக்கம் உண்டாகவில்லை. பழம் பிறப்பின் வாசனையால் தமிழ்க் கல்வியை நன்றாகப் பயின்று தேர்ச்சி பெற வேண்டுமென்னும் அவா அவர் பால் உண்டாகி முதிர்ந்தது. ஆதலின் தந்தையாரிடம் விடை பெற்றுக்கொண்டு திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்று படிக்கத் தொடங்கினார். பிள்ளையவர்கள் அவருடைய அன்பையும் அறிவையும் ஊக்கத்தையும் அறிந்து அவர்பாற் பெரிதும் அன்பு வைத்துப் பாடஞ் சொல்லி வந்தனர். நாளடைவில் செட்டியார் தமிழ்ப் புலமை மிக்கவரானார். பிள்ளையவர்களுக்கு அவரிடம் அளவற்ற அன்பு உண்டாயிற்று; தம்முடைய மாணாக்கர்களுக் குள்ளே சிறந்தவராக அவரைக் கருதினார்.

அதன் பயனாக, அவர் திரிசிரபுரத்திற் பட்டாளத்தார்க்குரிய பள்ளிக்கூடமொன்றில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பெற்றார். அங்கிருந்து பாடஞ் சொல்லி நன்மதிப்பை அடைந்தார். அதன் பிறகு ஸ்ரீ ரங்கத்திலிருந்த ஒரு பள்ளிக் கூடத்திற் (Taluk High School) பண்டிதராக இருந்து பாடஞ் சொல்லி வந்தார். அக் காலத்தில் அவர் பாடஞ் சொல்லும் இயல்பு மாணாக்கர்கள் மனத்தையும் அவர்கள் வழியாக ஏனையோர் மனத்தையும் கவர்ந்து கொண்டது.

அப்போது கும்பகோணம் 'மாகாணக் கலாசாலை' (Provincial School) யில் ஆசிரியராக இருந்த தண்டலம் கோபாலராவ் அவர்கள் செட்டியாருடைய கல்வியாற்றலைப்பற்றி யறிந்து 1865-ஆம் ஆண்டில் கும்பகோணத்திற்கு வருவித்துக் கொண்டார். அது முதல் செட்டியார் அங்கேயே பண்டிதராக இருந்து வந்தார். அந்தப் பள்ளிக்கூடம் காலேஜான பின்பும் இருந்து

புகழ்பெற்றார். அவருடைய கல்வியாற்றலின் சிறப்பும் எங்கும் பாராட்டப்பெற்றது. யாவரும் அவரை மேலாக மதித்து 'மிக்க மரியாதையோடு உபசாரம் செய்து வந்தனர்.

1880-ஆம் வருஷம் வரையில் அங்கே வேலை பார்த்தனர். பின்பு உபகாரச் சம்பளம் பெற்று முதலில் திருவானைக்காவிலும் அப்பால் உறையூரிலும் இனிது வாழ்ந்து வந்தார். தாம் ஈட்டிய பொருளின் பெரும் பகுதியைப் பூவாளூர் நடராஜப்பெருமான் கட்டளை முதலியவற்றிற்குச் சேர்ப்பித்து ஸர்வஜித்து வருஷம் தை மாதம் 7-ஆம் தேதி (19-1-1988) சிவபிரான் திருவடி நீழலை அடைந்தார்.

ஸ்ரீ தியாகராச செட்டியாருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் அவருடைய தைரியத்தையும் கல்விப் பெருமையையும் பிற இயல்புகளையும் நன்கு விளக்கும். இங்கே மூன்று நிகழ்ச்சிகளை மட்டும் தெரிவிக்கிறேன்.

தியாகராச செட்டியார் கும்பகோணத்தில் இருந்த காலத்தில் ஹைகோர்ட்டு வக்கிலாகிய ஒரு பெரிய கனவான் நன்னூற் சூத்திரங் களில் 200-க்கு மேல் நீக்கி விட்டு, மற்றவற்றைத் தொகுத்து உரை யெழுதி வெளியிட்டார். அக் கனவான் சிறிதளவு தமிழறிவுடை யவர்; தம்முடைய பிள்ளைகளும் தம் நண்பர்களுடைய பிள்ளைகளும் பள்ளிக் கூடங்களில் நன்னூற் பாடத்தைப் பயில இயலாமல் இருத்தலை அறிந்து வருந்திய அவர், 'இப்படி ஒன்றை வெளியிட்டு நம்முடைய நண்பர்களாகிய அதிகாரிகளின் உதவியாற் பள்ளிக்கூடங் களில் இதையே பாடபுத்தகமாக வைத்தால் பயன்படுமே' என்று எண்ணினார்; நண்பர்கள் சிலர் அங்ஙனம் செய்தல் மிகவும் நல்ல தென்று தூண்டினார்கள். அதனால் அக்கனவான் சட்டைப்பையில் வைத்துக்கொள்ளும் அளவில் அதனைப் பதிப்பித்து ஊர்தோறும் உள்ள பள்ளிக் கூடங்களில் பாடம் வைக்கச் செய்தார். அதனை யாவரும் வாங்கியதோடன்றி அவ்வக்கிலை மிகவும் பாராட்டவும் தலைப்பட்டனர். தமிழ்ப் பண்டிதர் வேலை பார்த்தவர்களில் இலக்கணம் கற்பிக்கும் வன்மையற்ற சிலர் அப்பதிப்பை விரும்பிப் பெற்று மிகவும் புகழ்ந்தனர்.

புத்தகத்தை வெளியிட்ட கனவான் கலாசாலைகள் உள்ள இடங்களுக்கெல்லாம் அதனை அனுப்பி அங்கங்கே பாடமாக வைக்கும்படி ஏற்பாடுகளைச் செய்து வந்தார். கும்பகோணத்தில் உள்ள 'டௌன் ஹைஸ்கூலுக்கும் ஒரு பிரதியை அனுப்பினார். அந்தப் பள்ளிக் கூடத்துத் தலைமையாசிரியரோ தமிழ்ப்பாட புத்த

கங்களைப் பற்றிய வரையில் தியாகராச செட்டியார் அவை தகுதி யுடையனவென்று சொன்னால்தான் பாடமாக வைப்பார்; ஆதலின் அந்தப் புத்தகத்தைச் செட்டியாரிடம் கொடுத்து அவருடைய அபிப் பிராயத்தைக் கேட்டார். அதனைப் படித்து பார்த்த செட்டியார், 'இது' பாடமாக வைப்பதற்குத் தகுதியற்றது' என்று சொல்லி விட்டார். அதனால் அந்தப்பள்ளிக் கூடத்தில் அது பாடமாக வைக்கப்பெறாமற் போயிற்று. பிறகு அப்புத்தகம் கும்பகோணம் காலேஜுக்கு அனுப்பப் பட்டது. அங்கும் அது பாடமாக வைக்கப் படவில்லை. செட்டியார் அந்த நூலை மதிக்கவில்லையென்ற செய்தி அருகிலுள்ள ஊர்களிலும் பரவியது. அதனால் அங்கங்கே உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்கள் அதனைப் பாட புத்தகமாக வைக்க விரும்ப வில்லை. அதனை வெளியிட்டோர் தக்க அதிகாரிகள் மூலம் செய்து வந்த முயற்சிகளால் அவ்வாசிரியர்கள் தரும சங்கடத்துக்கு ஆளாயினர்.

இந்த நிலையில், அந்தக்கனவான் ஒரு முறை கும்பகோணம் கோர்ட்டுக்கு வந்திருந்தனர்; அப்படியே காலேஜுக்கும் வந்தார். தம் புத்தகம் பாடமாக வைக்கத் தகுதியற்றதென்று செட்டியார் கூறி யதையும், அதனாற் பல பள்ளிக்கூடங்களில் அது பாடமாக வைக்கப் படாமல் மறுக்கப் பெறுவதையும் அவர் உணர்ந்திருந்தார். தம் முடைய மதிப்பைச் செட்டியாருக்கு அங்குள்ளவர்களாற் புலப் படுத்திக் கண்டித்துவிட்டுச் செல்ல வேண்டுமென்பது அவர் எண்ணம்; அதனால் காலேஜுக்கு வந்த அவர், தம்மோடு படித்த ஒருசாலை மாணாக்கரும் அங்கே ஆங்கில ஆசிரியாக இருந்தவருமான சுந்தரராவ் என்பவருடன் சென்று பல வகுப்புக்களையும் ஆசிரியர் களையும் பார்த்துவிட்டுத் தமிழ் வகுப்புக்கும் வந்து நின்றார்; தியாகராச செட்டியார் பாடஞ் சொல்லும்ஆற்றலைக் கவனித்தார். அவரிடம் நேரிலே தம் புத்தகத்தைப்பற்றிக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்த அக்கனவான், 'இவரிடம் நாம் எப்படிக் கேட்பது? இவர் மிகச் சிறந்த கல்வியாற்றல் உடையவராகத் தோற்றுகிறார்' என்று எண்ணி அஞ்சி யாதொரு பேச்சும் பேசாமல் சுந்தரராவுடன் சென்றார்.

சுந்தரராவ் நாள்தோறும் பாடம் முடிந்தவுடன் தம்முடைய வண்டியில் தியாகராச செட்டியாரையும் ஏற்றிக் கொண்டு செல்வது வழக்கம். அன்று அவர் செட்டியாரையும் தம் நண்பராகிய அக்கன வானையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

வண்டி செல்லுகையில், சுந்தரராவ் தம்முடைய நண்பரை இன்னாரென்று செட்டியாருக்குப் பழக்கம் செய்வித்து, ''இவர்கள்

புதிய முறையில் நன்னூல் ஒன்று அச்சிட்டிருக்கிறார்கள்; அதைத் தாங்கள் பார்த்ததுண்டோ?'' என்று கேட்டனர். செட்டியார், ,'ஆம்; பார்த்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டுப்பேசாமல் இருந்தார்.

உடனே சுந்தரராவ் அந்தக் கனவானைப் பார்த்து, ''இவர்கள் தியாகராச செட்டியாரவர்கள்; சிறந்த வித்துவான். இந்நாட்டில் இவர்களைப் போன்ற தமிழ் வித்துவான்களே இல்லை'' என்று சொல்லிச் செட்டியாரைப் பழக்கம் பண்ணுவித்தார்.

அதனைக் கேட்ட கனவான் தம்முடைய நண்பராகிய சுந்தரராவ் அருகில் உள்ளாரென்ற தைரியத்தினால் செட்டியாரை நோக்கி, ''என்ன, ஐயா! நான் ஆராய்ந்து அச்சிட்ட நன்னூலைப் பாடம் வைக்கக் கூடாதென்று நீங்கள் கண்டித்தீர்களாமே! என்ன நியாயத்தைக் கொண்டு அப்படிச் செய்தீர்கள்?'' என்று கேட்டார். அவருடைய கேள்வி அதிகாரத் தொனியோடு இருந்தது.

செட்டியார் உடனே, ''அந்த நன்னூலைப் பதிப்பித்தவர்கள் தாங்களா! எனக்குத் தெரியாது. இருக்கட்டும்; நன்னூலில் 200 சூத்திரங்களுக்கு மேல் விலக்கியிருக்கிறீர்களே; என்ன நியாயத்தைக் கொண்டு விலக்கினீர்கள்?'' என்று வினவினார்.

**கனவான்:-** எல்லாச் சூத்திரங்களும் பயன்படுகின்றனவா? பிள்ளைகளுக்கு அவசியமானவற்றை மட்டும் வைத்து மற்றவற்றை நீக்கிவிட்டால், அவர்கள் எளிதிலே படிப்பார்களல்லவா?

**செட்டியார்:-** எல்லாச் சூத்திரங்களும் பயன்படவில்லையென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எந்தப் பள்ளிக் கூடத்திலாவது பாடஞ் சொல்லியிருக்கிறீர்களா? பிள்ளைகளுக்கு எளிதாயிருக்க வேண்டுமென்றால் எல்லாச் சூத்திரங்களையும் எடுத் திருக்கலாமே? நீங்கள் விலக்கியுள்ள சூத்திரங்களெல்லாம் அவசிய மாக இருக்க வேண்டுமென்று நான் காரணங்காட்டி நிருபிப்பேன்; நீங்கள் அல்லவென்று மெய்ப்பிப்பீர்களா? நன்னூல் உங்கள் விருப்பப் படி குறைப்பதற்கும் கூட்டுவதற்கும் என்ன கிள்ளுக்கீரையா? அது கிடக்கட்டும். நீங்கள் நன்னூலைப் பதிப்பிக்கவந்தீர்களே? அதிலுள்ள உதாரணங்களை ஏன் குறைத்திருக்கிறீர்கள்? அந்த உதாரணங்கள் எதற்காக இருக்கின்றன வென்பதை நீங்கள் அறிந்ததுண்டா? அன்மொழித் தொகைக்கு உதாரணம் வாக்கியத்தில் அமைத்துக் காட்டாமல் தொகை மொழியை மட்டும் காட்டியிருக்கிறீர்களே! பூங்குழல் வந்தாளென்பதைப் பூங்குழலென்று குறைத்துவிட்டால் அன்மொழித் தொகையென்று விளங்குமா? பூங்குழல் வந்தாளென்று

வாக்கியத்தில் வரும்போது தானே அது பூங்குழலை யுடையாளென்று பொருள் படும்? இவைகளை அறிந்து கொள்ளாமற் பதிப்பித்திருக் கிறீர்களே! 'தண்டையி னினக்கிளி கடிவோள், பண்டைய ளல்லண் மானோக் கினளே' என்ற உதாரணத்தைப் பிள்ளைகளுக்கு எளிதாக இருக்க வேண்டுமென்று நினைந்து 'தண்டையி னினக்கிளி கடிவோள்' என்பதைமட்டும் காட்டியிருக்கிறீர்களே; பண்டையளல்லளென் பதும் இருந்தால்தானே எதுகையின் பொருட்டுத் தட்டை யென்பது தண்டையென்று வந்ததென்று தெரியும்?

**கனவான்:-** அவையெல்லாம் உபாத்தியாயர் சொல்லி விளக்கமாட்டாரா?

**செட்டியார்:-** உபாத்தியாயர் புத்தகத்தில் இருப்பதைத் தானே விளக்குவார்? உதாரணத்தின் பகுதி முற்றும் இல்லாதிருந் தாலும், இருப்பதே தப்பாக இருந்தாலும் எப்படிவிளக்குவார்? உபாத்தியாயர் நன்னூல் முழுவதையுமே மனப்பாடம் பண்ணிச் சொல்லி விடுகிறார்; உங்களுடைய புத்தகம் எதற்கு?

இங்ஙனம் சொல்லி மேலும் மேலும் அப்பதிப்பிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டியதோடு சில கேள்விகளையும் செட்டியார் கேட்கத் தொடங்கினார். அவற்றிற்கு விடை சொல்ல இயலாமலிருந்த கனவான் மனங் குழம்பி ஆத்திரம் மிக்கவராகி உரத்த குரலில், ''நான் என்ன பண்டிதனா?'' என்றார். அவர் கேட்ட மாதிரியில், பண்டிதனென்று கூறப்படுதல் இழிவென்று அவர் நினைத்தமை தோற்றியது.

செட்டியாருக்குக் கோபம் வந்து விட்டது; ''உங்களை எவனையா பண்டிதரென்று சொன்னான்? பண்டிதரல்ல என்று நினைத்துத்தானே சொல்லுகிறேன்! இதை உங்களுடைய ஏவலின்மேற் பதிப்பித்தவன் யாரோ அவன் அறியாதவன்; குல்லாவுக் கேற்றபடி தலையை நறுக்கிக் கொண்ட புத்தி சாலியைச் சேர்ந்தவன்; நீங்கள் பண்டிதரென்பது இழிவான பட்டமென்று நினைப்பதாகத் தெரிகிறது; இப்படிப்பட்ட காரியத்தைப் பண்டிதர்களே செய்யவேண்டும். நீங்கள் சட்ட புத்தகங்களைப் படித்து ஆராய்ந்து வாதம் பண்ணுவதோடு நில்லாமல் தமிழ் வழிக்கு ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குத் தெரியாத துறையில் இவ்வளவு துணிவாக நீங்கள் இறங்கியதோடு தமிழ்ப் பண்டிதர்களையும் வற்புறுத்திப் பாடம் வைக்கும்படி தூண்டலாமா? உங்களுக்குத் தமிழபிமானம் இருந்தால் நல்ல புத்தகங்களை வாசித்து இன்புறும் அளவோடல்லவா நிற்கவேண்டும்?'' என்றார்.

அந்தக் கனவானுக்கும் கோபம் சிறிது சிறிதாக வளர்ந்தது; மீசை துடித்தது; ''என்னை இன்னாரென்று தெரியாமற் பேசு கிறீரே'' என்று கோபத்துடன் அவர் கூறினார்.

உடனே செட்டியார், ''உங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு தான் பேசுகிறேன்; உங்கள் கடிகாரச் சங்கிலிக்கும் சட்டைக்கும் மீசைக்கும் பயந்தவனல்லன் நான். வண்டியை விட்டு இறங்குங்கள்; ஓரிடத்தில் இருந்து பேசுவோம். உங்களுடைய அறியாமையை வெளிப்படுத்துகிறேன்'' என்று சொல்லிச் சுந்தர ராவைப் பார்த்து, ''வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள்'' என்றார்.

இந்த விபரீதத்தைக் கண்ட சுந்தர ராவ் கவலையுற்று அந்தக் கனவானைப் பார்த்து, ''நாமெல்லாம் படித்தவர்களோடு வாதம் செய்யலாமா? இவர்களிடம் நாங்கள் பெரிய மதிப்பு வைத்து மரியாதையாக நடந்து கொள்ளுகிறோம். இவர்கள் இருப்பது எங்கள் காலேஜுக்கே கௌரவம். நீங்கள் இவர்களைத் தெரிந்து கொள்ளாமற் பேசுகிறீர்களே. தமிழ் விஷயத்தில் இவர்கள் இட்ட சட்டத்தை மீறுபவர் இங்கே யார் இருக்கிறார்? உங்களுடைய தமிழ்ப் படிப்பு எனக்குத் தெரியாதா? நாமிருவரும் சேர்ந்து படித்த வர்களல்லவா? இப்போது நான் ஒரு புத்தகம் போட்டு விடலாமா? நன்னூலைப் பதிப்பிக்க நம்மைப் போன்றவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்று சொல்லிவிட்டுச் செட்டியாரையும் சமாதானப் படுத்தினார்.

இந்தப் பேச்சுக்கள் வண்டியிலே நிகழ்ந்த போதிலும் பக்கத்தில் நடந்து சென்ற மாணாக்கர்கள் காதிலும் மற்றவர்கள் காதிலும் பட்டன. மாணாக்கர்களுக்குத் தெரிந்தால் அப்புறம் வேறு விளம்பரங்கள் எதற்கு? இந்த நிகழ்ச்சி எங்கும் பரவியது; தியாகராச செட்டியாருடைய புகழ் பின்னும் மிகுதியாயிற்று.

மதுரையிலிருந்த ஓர் ஐரோப்பியர் தமிழின்பால் விருப்பமுற்று ஒரு பண்டிதருடைய உதவிபெற்றுப் படித்து வந்தார். தமிழ்ச் செய்யுட்களுக்கு ஒருவாறு பொருள் தெரிந்து கொள்ளும் அறிவைப் பெற்ற பின்பு தமிழில் மிகச் சிறப்பான நூல் யாதென்று விசாரித்தார்; திருக்குறள் ஒப்பற்ற நூலென்பதை அறிந்து அதனைப் படித்தார்; இலக்கண நூலையும் இடையிடையே பயின்று வந்தார்; போப்பையர் இலக்கணத்தைப் படித்தார்; பிறகு யாப்பிலக்கண வசனத்தைப் படித்து அசை, சீர், தளை, தொடை என்பவற்றை

ஒருவகையாகத் தெரிந்துகொண்டார். அதனால் தாம் படித்த நூல்களிலுள்ள செய்யுட்களில் எதுகை மோனை சரியாக அமைந்திருக்கின்றனவாவென்று ஆராயத் தொடங்கினார்.

ஒருசமயம் அவர் தாம் படித்துவந்த திருக்குறட் புத்தகத்தை எடுத்துத் திறந்தார்; திறந்த பக்கத்தில்,

**''தக்கார் தகவில ரென்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்''**

என்ற குறள் அவர் கண்ணிற்பட்டது. 'இதில் எதுகை நன்றாக அமையவில்லையே' என்று எண்ணினார். எச்சமென்பதற்கு மக்களென்பது பொருளென்று அறிந்துகொண்ட பிறகு, 'ஏன் மக்களென்றே இதை மாற்றிவிடக் கூடாது? அப்படிச் செய்தால் எதுகை அழகாக அமையுமே' என்று எண்ணித் தம் புத்தகத்தில் அவ்வாறே திருத்திக் கொண்டார். திருக்குறளைத் திருத்திவிட்டோம் என்ற எண்ணத்தால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. இப்படியே மேலும் மேலும் சில குறள்களைத் திருத்தினார்; தமக்குப் பாடஞ் சொல்லும் பண்டிதரிடம் இவற்றைக் காட்டி, ''ஏன்? நான் செய்தது எப்படி? இப்போது இந்தச் செய்யுட்கள் முன்பிருந்ததைவிட அழகாக இல்லையா?'' என்று கேட்டார். பண்டிதர் என்ன செய்வார்? அவர் கூறுவதை மறுத்தற்கு அஞ்சினார்; ''நன்றாக இருக்கின்றன. ஆனால் தக்க பண்டிதர்களிடம் காட்டி, இப்படிச் செய்வது சரியாவென்று ஆராய வேண்டும்'' என்றார்.

**ஐரோப்பியர்:-** தாங்கள் பண்டிதரல்லவா?

**பண்டிதர்:-** நான் பண்டிதனனாலும் உங்களைச் சேர்ந்தவனாதலின் என் கருத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வேறு சிலர் உடன்பட்டால் தான் உங்கள் திருத்தத்துக்குக் கௌரவம் உண்டாகும்.

ஐரோப்பியர் தம் திருத்தங்களை யாரிடம் காட்டலாமென்று ஆராய்ந்தபொழுது, கும்பகோணம் காலேஜிற் பண்டிதராக இருந்த தியாகராச செட்டியார் அவற்றை ஏற்றுக்கொண்டால் மற்றப் பண்டிதர்கள் சம்மதிப்பார்களென்றும், அவர் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு திரிசிரபுரத்துக்கு அடுத்த உறையூரில் உள்ளாரென்றும் அறிந்தார். உடனே அவர் திருச்சிராப்பள்ளியிலிருந்த சுவல் பாதிரியாருக்கு (Father Sewell)த் தாம் புறப்பட்டு வருவதாகத் தெரிவித்து ஸ்ரீ தியாகராச செட்டியாரைப் பார்ப்பதற்கு

உதவி புரிய வேண்டுமென்று கடிதம் எழுதினார். பிறகு குறித்த காலத்தில் திரிசிரபுரம் சென்றார். சுவல்பாதிரியார் அவரைத் தக்க வண்ணம் உபசரித்து ஓர் அழகிய பெரிய வண்டியில் அவரை உறை யூருக்கு அனுப்பினார்; அவருடன் தக்கவர் சிலரையும் போகச் செய்தார்.

ஸ்ரீ தியாகராச செட்டியார் உறையூரிலுள்ள பெரிய தெருவில் அண்ணாமலை செட்டியாரென்பவருடைய வீட்டில் இருந்து வந்தார். அக்காலத்தில் அவருடைய கண்ணொளி சிறிது மழுங்கி யிருந்தது. அவரைத் தேடிவந்த ஐரோப்பியர் உறையூருக்கு வந்து செட்டியாருடைய வீட்டை விசாரிக்கலானார். அங்குள்ள வர்கள் அத்தகைய சிறந்த வண்டியையும் வெள்ளைக்காரரையும் கண்டு வியப்பு மேலிட்டவர்களாகிப் பெருங் கூட்டமாகக் கூடி அவ்வண்டியைப் பின் தொடர்ந்து வந்தார்கள். வண்டி செட்டியா ருடைய இருப்பிடத்தின் முன்னே வந்து நின்றது.

செட்டியார் சிவபூசையை முடித்து உணவருந்திவிட்டு வழக்கப்படியே கையில் ஒரு விசிறியுடன் வந்து இளைப்பாறுதற்கு அப்பொழுதுதான் வெளித்திண்ணையில் அமர்ந்திருந்தார்; முழங் காலளவுள்ளதாகிய பழுப்புநிற ஆடையொன்றை அவர் உடுத் திருந்தார்.

துரையுடன் வந்தவர்களுள் ஒருவர் வண்டியிலிருந்து இறங்கி வந்து செட்டியாரிடம், "ஒரு பெரிய துரை வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம்; அவரை வரவேற்று நாற்காலி போட்டு இருக்கச் செய்யுங்கள்" என்றார்.

செட்டியார், "துரையா? வரட்டுமே. இங்கே நாற்காலி இல்லை: இந்தத் திண்ணையிலேதான் உட்காரவேண்டும்" என்றார்.

கும்பகோணம் காலேஜில் எவ்வளவோ 'துரைகளைப்' பார்த் தவர் அவர்; அன்றியும் அவரைப் பார்க்கப் பல துரைகள் வந்து செல்வதுண்டு: ஆதலின் அவருக்கு இந்தத் துரை வந்தது ஒரு பெரிய சிறப்பாகத் தோன்றவில்லை.

துரை வண்டியை விட்டு இறங்கிவந்து எதிர்த்த திண்ணையில் அமர்ந்தார்.

"தாங்கள் வந்தது எதன் பொருட்டு?" என்று கேட்டார் செட்டியார். துரை, "நான் குறளைத் திருத்தியிருக்கிறேன்.

உங்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்றுபோக வந்தேன்'' என்று கூறத் தொடங்கினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டது செட்டியாருக்கு இடி விழுந்தது போல இருந்தது! ''என்ன? குறளையா திருத்தினீர்கள்?'' என்று வியப்பும் கோபமும் நிறைந்த தொனியிற் கேட்டார்.

''ஆமாம்; எதுகை மோனை சில இடங்களில் சரியாக இல்லை. சரியாக அமையும்படி திருத்தினேன். 'தக்கார் தகவில ரென்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்' என்பதைவிட, 'தக்கார் தகவில ரென்ப தவரவர், மக்களாற் காணப்படும்' என்பது எதுகை நயத் தோடுகூடி எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?'' என்றார் துரை.

செட்டியார் எழுந்து நின்றார்; தலையிலே இரண்டடி அடித்துக் கொண்டு காதைப் பொத்திக் கொண்டார்; ''ஐயோ! குறளையா திருத்தினீர்? அது மதிப்புள்ள பழைய நூலாயிற்றே! இவ்வளவு நாளாக அறிவாளிகள் செய்யாத ஒன்றைச் செய்து விட்டதாக எண்ணமோ! எச்சமென்னும் சொல்லின் பொருள் மக்களென்பதற்கு உண்டா? ஒருவருக்குப் பிறகு அவருடைய குண முதலியவை எஞ்சி நிற்கும் சந்ததியென்ற காரணத்தைப் புலப் படுத்தும் சொல்லல்லவா எச்சமென்பது. அவ்விடத்தில் அச்சொல் அமைந்ததனால் உண்டாகும் பொருட் செறிவு மக்களென்னும் சொல்லால் உண்டாகுமா? ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தமிழில் இருந்தாலும் அவை ஒன்றற்கொன்று சிறிது சிறிது வேறு பட்ட பொருளுடையனவாக இருக்கும். அவற்றை இடமறிந்து பெருங் கவிஞர்கள் உபயோகிப்பார்கள். அது தெரியாமல் திருத்தி விடலாமா? எதுகை நயத்தைவிடப் பொருள் நயம் அல்லவா சிறந்தது?'' என்று சொல்லிவிட்டு, ''குறளைத் திருத்தினவர் முகத்தில் விழிப்பது கூடப் பாவம்!'' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று கதவைத் தாழிட்டு இடைகழித் திண்ணையில் அமர்ந்து விட்டார்.

துரைக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. உடன் வந்தவர்கள் ஜன்னல் வழியாகச் செட்டியாரிடம், ''இவர் பெரிய மனிதர்; இப்படி இவரைத் தாங்கள் அவமதிக்கக் கூடாது. இவரால் உங்களுக்குப் பெரிய லாபம் உண்டாகும்'' என்றார்கள்.

செட்டியார், ''இவரை யாரையா இங்கே வரச் சொன்னார்? உலகமெல்லாம் புகழும் திருக்குறளைத் திருத்திய இச் செயல்

திருவள்ளுவரை அவமதித்ததாகுமல்லவோ? தெய்வம்போல யாவரும் கொண்டாடும் அவருடைய குறள் வேதமல்லவா? அதைத் திருத்தத் துணிந்தவர் வேறு என்னதான் செய்ய மாட்டார்? இவருக்கு மதிப்பு எங்கிருந்து வரும்? இவரால் எனக்கு ஒரு லாபமும் வேண்டாம். இனிமேல் நான் சம்பாதித்து யாருக்குக் கொடுக்கப் போகிறேன்? எனக்குப் பிள்ளைகுட்டிகள் இல்லை. போதும், போதும்; உங்கள் துரையை அழைத்துக் கொண்டு போய்விடுங்கள்" என்றார்.

தாம் என்ன கூறினாலும் செட்டியார் வழிக்கு வாராரென்பதை உணர்ந்த அவர்கள் துரையை அழைத்துக்கொண்டு மீண்டு சென்றார்கள்.

பிறருடைய குறையைக் கண்டவிடத்துக் கண்டிக்கும் இயல்புடைய செட்டியார் தம்முடைய நிலையை நன்றாக உணர்ந்திருந்தார். தம்முடைய அளவுக்கு மிஞ்சிய காரியத்தைப் பிறர் வற்புறுத்தினாலும் செய்யார். இது சிலரிடத்தில் மாத்திரம் காணப்படும் அருமையான குணம்.

திருச்சிராப்பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிரஸ்தேதாராகவும் டிப்டி கலெக்டராகவும் இருந்து விளங்கிய திரு. பட்டாபிராம பிள்ளையென்பவர் தமிழபிமானம் மிக்கவர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் பாதுகாக்கும் இயல்பினர்; மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை நன்கு அறிந்தவர்; ஸ்ரீ தியாகராச செட்டியாரிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்; அறிவாளிகள் நிலையான காரியங்கள் செய்யவேண்டுமென்பது அவருடைய விருப்பம். திவ்யப் பிரபந்தங்களுக்குப் பெரியோர்களால் வடமொழி தென்மொழியிற் செய்யப்பெற்ற வியாக்கியானங்கள் இருப்பது போலத் தேவார திருவாசகங்களுக்கு இல்லையேயென்ற வருத்தம் அவருக்கு உண்டு. இதனால் சைவ மடாதிபதிகளையும் சைவ வித்துவான்களையும் சந்திக்கும் பொழுதெல்லாம் திருமுறைகளுக்கு ஓர் உரை எழுதும்படி வற்புறுத்திக் கூறுவர். கேட்பவரிற் பெரும்பாலோர் இயன்றவரையில் உழைத்துப் பார்ப்போமென்றே விடை பகர்ந்து வந்தார்கள்.

தியாகராச செட்டியார் உபகாரச் சம்பளம் பெற்றுத் திருவானைக்காவில் சில ஆண்டுகள் இருந்தபோது பட்டாபிராம பிள்ளை அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று பார்த்து வருவார். அப்பொழுது அவரைத் திருவாசகத்திற்கு உரை எழுத வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவார். அன்றியும் அங்கங்கே நிகழும் கலியாணங்களை விசாரிக்கப் போன காலங்களிலும், மற்ற இடங்களுக்குச் சென்றிருந்த காலங்களிலும் அவரைச் சந்தித்தபோதெல்

லாம் மேலும் மேலும் கூறுவார்; "எழுதஆரம்பித்தீர்களா? எவ்வளவு ஆயிற்று?" என்று கேட்பார்; அருகிலுள்ள கனவான்களிடம், "இவரிடம் எவ்வளவு நாளாகச் சொல்லி வருகிறேன்; கேட்கமாட்டே னென்கிறாரே!" என்று சொல்லுவார்.

ஒரு நாள் செட்டியார் திருச்சிராப் பள்ளியிலுள்ள உறவின ரொருவர் வீட்டில் நிகழ்ந்த ஒரு துக்கத்துக்காக அங்கே சென்று விசாரித்து நீராடிவிட்டு ஈரத்துணியோடு மீண்டு காவிரி யாற்றுப் பாலத்தின் மேல் நடந்துவந்தார். அப்பொழுது நடுப்பகல் பன்னிரண்டு மணிநேரம். செட்டியார் வெயிலாலும் பசியாலும் மிகவும் களைப்படைந்திருந்தார்.

அச்சமயம் பட்டாபிராம பிள்ளை ஸ்ரீரங்கம் சென்று பெருமாளைத் தரிசனம் செய்து விட்டு மார்பிற் சந்தனம் விளங்க உத்ஸாகமாக எதிரே ஒரு வண்டியில் வந்தார். செட்டியாரைக் கண்டவுடன் அவர் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினார்; செட்டியாரையணுகி க்ஷேம சமாசாரம் விசாரித்த பின்பு வழக்கம் போலவே திருவாசகவுரை எவ்வளவாயிற்றென்று கேட்டார்.

நீண்ட நாளாக இந்த விஷயத்தைப்பற்றி எவ்விடத்திலும் கேட்டு வந்ததனாலும், அப்பொழுது தமக்கு இருந்த தளர்ச்சி யினாலும் செட்டியாருக்குக் கோபம் உண்டாயிற்று. "நீங்கள் கொஞ்சமாவது திருவாசகத்தின் பெருமையை அறிந்து கொள்ளவே யில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். அதற்கு என்னால் உரை எழுத முடியுமா? திருவாசகம் எவ்வளவு! என்னுடைய படிப்பு எவ்வளவு! அதற்கு உரையெழுத வேண்டுமென்றால் வேதம், உபநிஷதம், ஆகமங்கள், புராணங்கள், யோக சாஸ்திரங்கள் முதலியவை தெரியவேண்டாமா? தமிழில் உள்ள இலக்கண இலக்கியங்களையும் சில சைவ சித்தாந்த சாஸ்திரங்களையுமே படித்த நான் எப்படி எழுத முடியும்?" என்றார்.

**பட்டாபிராம பிள்ளை:-** திவ்யப் பிரபந்தத்திற்கு அவர்கள் வியாக்கியானம் செய்யவில்லையா?

**செட்டியார்:-** என்ன ஐயா! உங்களுக்கு அவர்களுடைய படிப்பின் அளவு சிறிதேனும் தெரியாது போல் இருக்கிறது. அவர்கள் வடமொழி தென்மொழி இரண்டிலும் சிறந்த புலமை யுடையவர்கள்; அவர்கள் உரையினாலல்லவா நூலின் பெருமை அதிகமாகின்றது? நான் உரை எழுதினால் திருவாசகத்திற்கு எவ்வளவு குறைவு உண்டாகுந் தெரியுமா? என்னுடைய உரையினால் அதற்குக் குறைவு ஏற்பட வேண்டுமென்பது தங்கள் எண்ணமோ? எங்கே கண்டாலும் நச்சு நச்சென்று என் படிப்பின் அளவு தெரியாமல் திருவாசகத்துக்கு உரை யெழுதும்படி சொல்லிச் சொல்லி என்னை வருத்துகிறீர்கள். இனி மேலும் இப்படித்

தொந்தரவு செய்வதாயிருந்தால், இதோ இந்தக் காவிரியில் இப்படியே பொத்தென்று விழுந்து என் உயிரை விட்டுவிடுவேன். பட்டாபிராம பிள்ளையவர்கள் திருவாசகத்திற்கு உரையெழுதும் படி அடிக்கடி தொந்தரவு செய்ததனால் அந்தத் துன்பத்தைத் தாங்கமாட்டாமல், தியாகராச செட்டியார் ஆற்றில் விழுந்து விட்டாரென்ற அபக்கியாதி உங்களுக்கு ஏற்படட்டும்.

பட்டாபிராம பிள்ளை உடனே செட்டியாருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "ஐயா! ஐயா! வேண்டாமையா! இனிமேல் நான் இதைப்பற்றிக் கேட்பதே இல்லை ஐயா!" என்று சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டு அவருடைய அயர்ச்சியான நிலையை அறிந்து தம் வண்டியில் ஏற்றித் திருவானைக் காவிலுள்ள அவர் இருப்பிடத்தில் அவரை விட்டு விட்டு மீண்டும் திரிசிரபுரத்திலிருந்த தம்மிடம் சென்றார்.

**சரம தசை**

இவருடைய மரண காலத்திற்கு முன்பு இவர் படுக்கையாகவே இருக்கலாயினர். ஆகாரம் செல்லவில்லை. கண்ணும் ஒளிமழுங்கியது. பேச்சு அடங்கி விட்டது. இவர் முன்பே தெரிவித்திருந்தபடி தேவாரத்தைக் கொணர்ந்து ஒருவர் படிக்கலாயினர். அவருக்குத் தமிழில் நல்ல பயிற்சி இல்லை. ஏதோ ஒருவாறு துணிந்து படித்தார். அப்போது செட்டியார் கையைத் தட்டினார். அதன் குறிப்புச் சிலருக்கு விளங்கவில்லை. தேவாரம் படிப்பவர் அதைப் பிழையாகப் படிக்கிறாரென்பதையும், அதைத்தான் செட்டியார் குறிப்பிக்கிறா ரென்பதையும் உணர்ந்த ஓரன்பர் தாமே வாங்கிப் படிக்கத் தொடங் கினார். பேச்சு முதலியன அடங்கிய காலத்திலும் செட்டியாரின் அறிவு 'அவியுறு சுடர் போலே' விளக்கம் பெற்றிருந்தது. அந்தத் தேவார நினைவிலேயே இவர் இவ்வுலகத் தொடர்பை நீத்தார். ஸர்வஜித்து வருஷம் தைமாதம் ஏழாந்தேதி (19-1-1888) செட்டியார் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

இவருடைய மரணத்தைக் கேட்டு அன்பர்கள் வருந்தினர்; மாணாக்கர்கள் பதறினர். நான் துயரில் மூழ்கினேன். இவருடைய பிரிவாற்றாமல் பலர் பல கவிகளை இயற்றினர். என்னுடைய துயரிற் பிறந்தவை வருமாறு:

1. சருவசித்திற் றையேழிற் சத்தமியோ டுற்ற
குருவாரந் தோணிநாள் கோடாத்-திருவத்
திடராசன் கல்வித் தியாகரா சன்சீர்
நடராசன் றாளடைந்த நாள்.

[தோணிநாள் - ரேவதி நட்சத்திரம். கோடாத் திருவத் திட ராசன் - பட்சபாதமற்ற நடுநிலைமைச் செல்வத்தையும் மன வுறுதியையுமுடைய அரசனைப் போன்றவன்.]

2. வானாட்சி யுறுஞ்சீர்த்தி மலிந்தகவி வலவர்சிகா
மணியா யோங்கும்
மீனாட்சி சுந்தரவா ரியன் வியக்கக் கவிபாடும்
விறலோ யென்றும்
தேனாட்சி யுறுமொழியாம் தியாகரா சப்பெயர்கொள்
செல்வா துன்பம்
யானாட்சி யுறத்தணந்த தென்னேயோ வென்னேயோ
வியம்பிடாயே.

[துன்பம் யான் ஆட்சியுற-நான் துன்பத்தை அடைய, தணந்த-பிரிந்த.]

3. மடியென்றுந் தவிர்திமதி யினைவளர்க்கும் நூல்கள் பல
மகிழ்ந்தே மெல்லப்
படியென்றுஞ் சுவையொழுகப் பாடென்று மெனக்கன்பிற்
பகர்வோர் யாரே
மிடியென்று மெனையகலச் செயுந்தியாக ராசனெனு
மேன்மை யோனே
துடியென்று முறுகரத்தா னடியென்று மறவாத
தூய்மை யோனே.

[மடி-சோம்பல், மிடி-வறுமை, துடி-உடுக்கை. கரத்தான்-சிவபெருமான்.]

4. அந்நாளின் மீனாட்சி சுந்தரவா ரியனகன்றா
னைய கோமற்
பின்னாளிற் றுறைசையிற்சுப் பிரமணிய குருமணியும்
பிரிந்தா னந்தோ
இந்நாணீ யும்பிரிந்தா யானிருந்தே னென்னபய
னெய்த வோவென்
மன்னாவோ சிரகிரியிற் றியாகரா சப்பெயர்நா
வலவ ரேறே.

[துறைசை-திருவாவடுதுறை. சுப்பிரமணிய குருமணி-மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்.]

5. வற்றாத வளத்துறைசை வருகுருசுப் பிரமணிய
வள்ள றன்னை
உற்றார்வ மொடுதொடர்ந்து சென்றனைமற் றவற்பிரிந்த
வுறுக ணீக்கிப்

பற்றாத வெனைப்புரப்பா ரெவரெவர்க்கென் மனத்துன்பைப்
பகர்வே னென்பாற்
கற்றாவிற் கசியுளத்துத் தியாகரா சப்பெயர்கொள்
கவிவல் லோனே.

[செட்டியார் காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் (7-1-1888) ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பரிபூரணமானார். உறுகண்-துன்பம். பற்றாத-எதற்கும் உபயோகமில்லாத. கற்றாவின்-கன்றை யுடைய பசுவைப் போல்.]

6. புகழ்பூத்த வறிவுடையோர் நாவாயி லெஞ்ஞான்றும்
பொருந்தி வாழ்வாய்
திகழ்பூத்த தியாகரா சப்பெயரோய் சிவபத்திச்
செல்வம் வாய்ந்தோய்
அகழ்பூத்த சிரபுரத்தா யிஞ்ஞான்று நாவாயி
லகன்ற வாற்றால்
இகழ்பூத்த பெரும்பிறவிக் கருங்கடலைக் கடந்தாயென்
றெண்ணி னேனால்.

[அறிவுடையோர் நாவாயில்-புலவர்களுடைய நாவினிடத்தே, நாவாயில்-ரேவதி நட்சத்திரத்தில்; தோணியிலென்பது மற்றொரு பொருள்.]

7. தாம்படைத்த பொருளினைச்சே மித்து மகிழ்ந் திடுவாரித்
தரணியோர்கள்
ஓம்படைத்த பொருளாய வருளாளன் பூசைவிழா
வுளுற்ற லாதித்
தேம்படைத்த வறம்விளங்கச் செயல்படைத்த பொருளுடைநிற்
சிவணு வோர்யார்
தோம்படைத்த வழிமாற்றுந் தியாகரா சப்பெயர்கொள்
சுகுணக் குன்றே.

[சேமித்து - தொகுத்து, ஓம்பு அடைத்த - பாதுகாப்புப் பொருந்திய, அருளாளன் - அருளையுடைய சிவபெருமான், சிவணுவோர் - ஒப்பவர். தோம் - குற்றம்.]

பார்த்தமுகம் யாவையுமே வேற்றுமுக மாய்த்தோன்றும்
பார்வைக் கிந்நாள்
பேர்த்ததுய ருடையேனா வெனைச்செய்து மகிழ்ந்திடுநீ
பிரிந்த வாற்றால்

சீர்த்ததிரி சிரபுரத்துத் தியாகரா சப்பெயர்கொள்
செல்வா வென்றும்
கார்த்தகளத் தமலனடிக் கமலமலர் பொருந்திதய
கமலத் தோனே.

[கார்த்த களத்து அமலன் – கறுத்த கண்டத்தையுடைய சிவபெருமான்.]

**சில செய்திகள்**

தியாகராச செட்டியார் தம்முடைய அறிவையும் பொருளையும் நல்ல முறையிலே பயன்படுத்தினார். அதனால் இவருக்குப் புகழும் புண்ணியமும் உண்டாயின. தம் அறிவுத்திறத்தால் இவர் பிரபுக்களை நண்பராக்கினார்; புலவர்பால் மதிப்படைந்தார்; மாணாக்கர்களுடைய அன்பைப் பெற்றார். சிறந்த ஆசிரியரென்ற பெயர் இவருக்கு உண்டாயிற்று. தெரிந்த விஷயத்தைத் தெளிவாகக் கற்பிக்கவேண்டுமென்பதே இவர் கருத்து. பல விஷயங்களைத் தெரிந்து கொண்டதாக மாணாக்கர்களுக்குத் தம்மைப் புலப்படுத்திக் கொள்வதைவிட அவர்கள், தாம் கற்பிப்பவற்றை முற்றும் உணர்கிறார்களா என்பதை உணர்ந்து போதிப்பதுதான் ஆசிரியனது இலக்கணம். அந்த இலக்கணம் செட்டியாரிடம் நிரம்பியிருந்தது. மாணாக்கர் பலர் இவர்பால் ஈடுபட்டு இவரை என்றும் மறவாமல் பாராட்டி வந்தனரென்பதே இதற்குச் சிறந்த சான்றாகும்.

தம் மாணாக்கர்களிடம் இவர் பூண்டஅன்பு சிறிதும் குறைந்ததன்று. இவருடைய ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கர்களையே தம் சுற்றமாகக் கொண்டு வாழ்ந்தவர். அந்தப் பேராசிரியரிடம் கல்வி கற்ற செட்டியார் அவருடைய இயல்புகளிலும் பலவற்றை அவரிடமிருந்து மேற்கொண்டார்.

இவருக்குக் கல்வியினால் வந்த கௌரவம் மிகுதி. கனவான்கள் பலர் இவரைத் தெய்வமாகக் கொண்டாடினர். வித்துவான்களில் அரைகுறைப் படிப்புடையவராக இருந்தால் இவர் முன்னே வருவதற்கும் நடுங்குவார். நல்ல வித்துவான்கள் இவரை அணுகி நூல்களிலுள்ள சந்தேகங்களைக் கேட்டுச் செல்வார்கள்; தாம் தாம் இயற்றிய நூல்களைக் காட்டித் திருத்தச் செய்து சிறப்புப் பாயிரம் பெற்று மகிழ்வார்கள்.

பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம் ஸ்ரீ ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை முதலிய பலரைப் பாராட்டி அவர்

களுடைய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியிருக்கிறார். பிள்ளையவர்கள் இயற்றிய திருநாகைக் காரோணப் புராணம், திருவானைக்கா மாலை, சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை என்னும் நூல்களுக்கு இவர் அளித்த சிறப்புப்பாயிரங்களில் இவருடைய வாக்கு வன்மையும் குருபக்தியும் புலப்படும். வேதநாயகம்பிள்ளை இயற்றிய நீதி நூலுக்கு இவர் சிறப்புப்பாயிரம் உதவினார்.

ஒரு சிறந்த மகாகவியினுடைய மாணாக்கராகிய இவர் செய்யுள் இயற்றும் திறமை பெற்றிருந்தது ஆச்சரியமன்று.

இவர் இயற்றிய நூல்கள் வருமாறு:-(1) *ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அந்தாதி, (2) வீரை உமையம்மை பிள்ளைத் தமிழ், (3) சவராயலு நாயகர் இரட்டைமணிமாலை, (4) திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி, (5) திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி, (6) திருவாரூர் மருந்து வெண்பா மாலை, (7) வியாசைக் கோவையின் பிற்பகுதி.

இவர் பதிப்பித்த நூல்கள்வருமாறு:-(1) உறையூர்ப் புராணம், (2) திருக்குடந்தைப் புராணம், (3) திருப்பெருமண நல்லூர்த் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், (4) திருத்தவத்துறைப் பெருந் திருப்பிராட்டியார் பிள்ளைத் தமிழ், (5) திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழ், (6) திருவானைக்கா அகிலாண்டேசுவரி மாலை, (7) பூவாளூர்ப் புராணம். முதல் ஆறு நூல்களும் பிள்ளையவர்கள் இயற்றியவை.

செட்டியார் தாம் சேமித்து வைத்திருந்த பொருள் முழுவதையும் பூவாளூர் ஆலயத்திற்கு உரிமையாக்கி விட்டார். அந்தப் பொருளைக்கொண்டு செட்டியாருடைய அன்பர்கள் பத்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வாங்கிச் செட்டியார் கருத்துக்கிணங்க ஆலயத்தில் கட்டளைகளை நடத்தி வரலாயினர். இப்போது அந்நிலங்கள் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட மதிப்புடையனவாக உள்ளன. செட்டியார் மெய்யன்பினால் உதவிய அந்தப் பொருள் இவருடைய புகழ்போலப் பெருகி நிற்கின்றது.

இவருடைய இயல்புகளையும் இவர் செய்த சிவ தருமச் சிறப்பையும் பாராட்டி ஓரன்பர் சில செய்யுட்களை இயற்றினார். அவற்றில் இப்போது கிடைத்தவை வருமாறு:

---

* இன்னும் அச்சிடப்படாதது.

"பொன்பூத்த நெடுவரைவே யுகுத்திடுநித் திலத்திரளின்
பொலிவை வாரித்
தென்பூத்த தென்னருவி சொரிதரக்காண் வாரணங்கள்
செறிந்து லாவிக்
கொன்பூத்த வாலரியின் குலமெனக்கால் சீத்தென்றுங்
கொறிக்க மேவும்
மன்பூத்த பெருவளங்கள் மாறாது பொலியுமெழில்
மழவ நாட்டில்."

[வேய்-மூங்கில். நித்திலத் திரள்-முத்தின் தொகுதி. தென்-அழகு. வாரணங்கள்-கோழிகள். வால் அரியின் குலம் என-வெள்ளிய அரிசியின் தொகுதி என்றுகால். சீத்து-காலால் துடைத்து. கொறிக்க-கொத்த.]

* * *

"பொலிதருபொற் சபையினிடைப் பிரமன்மால் முதற்றேவர்
புரிந்து வாழ்த்த
மலியருட்கட் கடையிடப்பாற் சிவகாம வல்லியருள்
வதன மார
நலிதருதுன் பொழிந்தன்ப ரரகரவென் றேமுழங்க
நடன மாடும்
புலிதருதோ லுடையுடுத்த வானந்த தாண்டவர்க்கும்
புகலுமைக்கும்."

"பொன்னாலு மணியாலும் புனையப்பட்டி ளங்கிரணம்
பொலிய வீசித்
தென்னாலு நெடுஞ்சிகரந் தினகரன்போல் விளங்குமெழிற்
சினக ரத்தில்
மன்னாலு மறைமுதல பன்னூலு மாய்புலவர்
மகிழ்ந்து பன்னாள்
சொன்னாலு முலவாச்சீர்த் திருமூல நாதர்பதந்
தொழுது நாளும்."

[சிகரம்-கோபுரம். சினகரம்-கோயில். உலவா-குறையாத. திருமூலநாதர்-பூவாளூர்க் கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான்.]

"நலம் பொலிநை வேத்தியமு மருச்சனையும் தினந்தோறும்
நடக்கு மாறும்
வலம் பொலிமார் கழிமதியில் வருதிருவா திரைநாளில்
மலியு மன்பால்

புலம்பொலியு மபிடேக மலங்கார நனிசிறப்புப்
புரிந்து வேதச்
சிலம் பொலிக்குஞ் சிதபாத மமரர்தொழ நகர்வலஞ்செய்
விக்குமாறும்,"

[வேதச் சிலம்பொலிக் குஞ்சிதபாதம் - வேதமாகிய சிலம்பு முழங்கும் தூக்கிய திருவடி.]

* * *

"நவின்றவிழாச் சிறப்புகளி லுறுப்பொன்றுங் குறையாமல்
நடத்தக் கற்றுக்
கவின்ற அந்தப் பெருமானார் காரியஞ்செய் அண்ணாவென்
கவின்பேர் பூண்டு
துவன்று சிவபுண்ணியமே சொருபமெனக் கொள்பெரியோன்
துளங்கு கையில்
எவன்றரணி யிடையிவனை நேர்வானென் றேவிரும்பி
ஈந்திட் டானால்."

[அண்ணா - அண்ணாமலை செட்டியாரென்பவர். பெரியோனது கையில் ஈந்திட்டான்.]

"இன்னசிவ காரியஞ்செய் அண்ணாவென் புண்ணியவான்
இலங்க முன்னர்ச்
சொன்னவிளை நிலமெல்லாந் தானேபோய் விளைவித்துத்
தொகுநெற் கொண்டு
பன்னுவிழா விற்சிறிதுங் குறையாமற் புரிந்தெவரும்
பரவ நின்றான்
பின்னுந்தன் சந்ததியார் தமைக்கொண்டே நடப்பிக்கும்
பெட்பி னானால்."

[பெட்பு - விருப்பம்.]

"பின்புநைந்தே யுளமுருகு மன்பர்குழீஇ யானந்தப்
பெருக்கி லாழக்
கொன்புனைந்த கரஞ்சிரமேற் குவியவெதிர் நின்றுகூத்
தாடி மேவ
மின்புனைந்த செஞ்சடில விமலர்திரு மிடற்றழகு
விளங்கச் செய்யப்
பொன்புனைந்த வேறுமுகக் கண்மணிமா லிகையொன்று
புனைவித் தானால்."

[குழீஇ -கூடி, ஏறுமுகக் கண்மணி மாலிகை - ஏறுமுக ருத்திராட்ச கண்டி.]

"அனையவிழாச் சிறப்பாற்றிக் கண்மணிமா லிகையணியும்
அணிந்து வந்த
வினையமலி சுகுணமுடைப் பேரறிஞன் யாவனெனில்
விளம்பு வாமால்
கனையபெருங் கடல்படைசூழ் புவிமாதின் றிலகமெனக்
கவின்று வல்லோர்
புனையவள மலிந்திலகு பூவாளு ரெனமுன்னர்ப்
புகன்ற வூரில்."

[கண்மணி மாலிகை-ருத்திராட்சமாலை, வினயம்- அடக்கம்.
கனைய-மிகுதியுடைய, கவின்று-விளங்கி.]

"துலங்குறுகண் மணிபூண்டு வெண்ணீறு நுதலணிந்து
தூய ஞான
"வலங்குலவு மஞ்செழுத்து முறச்செபித்துச் சிவபூசை
மறவா தென்றும்
நலங்குலவப் புரிந்தோங்கு நம்பெருமான் றிருவடிக்கண்
நண்ணும் தூய்மை
குலம்புரியு முரிமையெனக் கொளுஞ்சைவ வைசியர்தங்
குலத்தின் மாதோ."

"தேங்குபெரு வாய்மைபொறை தெளிவுயர்வு நல்லொழுக்கஞ்
சிறந்த ஞானம்
ஓங்குபெருங் கல்விகொடை யடக்கமுய ரன்புடைமை
ஒருவர் செய்த
பாங்குபெறு நன்றிமற வாமைமுதற் பலகுணமும்
படைத்தெஞ் ஞான்றும்
தீங்குதவிர்ந் திலகுகல்விக் குடையார்கோத் திரமினிது
செழிக்க வந்தோன்."

"நிதம்பரவு சிவனடியார் திருவடியே யெஞ்ஞான்றும்
நினைக்குஞ் சீலன்
இதம்பரவு பேரன்பின் கடலாய வாதவூ
ரிறைவர் செய்யற்
புதம்பரவு வாசகப்பா முறையையன்பின் மலர்கொண்டு
பூசிப் போனஞ்
சிதம்பரவே ளுவந்துபுரி செழுந்தவத்தின் பெரும்பயனாச்
சிறந்து வந்தோன்."

[வாசகப்பாமுறை-திருவாசகமாகிய திருமுறை]

"விண்மதிசெஞ் சடைக்கணிந்த சிவபெருமான் சரியென்று
விளம்பு நூல்கள்
நுண்மதிகொண் டினிதுநுனித் துணர்ந்தந்த வழியெவர்க்கும்
நுவலுந் தூயன்
மண்மதிக்குஞ் சமயகுர வர்புகன்ற வருட்பாவை
மதிப்போன் யாரும்
எண்மதிருன் வெண்மதிசேர் புலவர்நவின் மொழிசெவியி
லென்று மேவான்."

[இறை-தெய்வம். நுனித்து-ஆராய்ந்து. வெண்மதி-அறியாமை]

"மடந்தையா கங்கொண்ட மாதேவ னருளுடனே
மகிழ்ந்து வாழும்
குடந்தைமா நகரினிடைப் பலவருட முவந்திருந்து
கோதி லாமல்
இடந்தையந் தவிர்ந்தொழிய மாணாக்கர்க் கினியதமிழ்
இசைத்த மேலோன்
படந்தை முடிச் சேடனிகர் தியாகரா சப்பெயர்கொள்
பாவ லோனே."

[இடந்து-நீக்கி, ஐயம்-சந்தேகம். படந்தை-படம்.]

"அன்றியுந்தென் கயிலையெனுந் திரிசிராப் பள்ளியிடை
யாக சாலை
முன்றயங்கு மண்டபத்தி லாத்தான மண்டபமென்
முதற்பேர் பூண்டு
மின்றயங்கு மரகதத்தா லியற்றியதென் றேயெவரும்
விரும்பச் செய்தான்
பொன்றயங்கு மணிபுனைந்த தியாகரா சப்பெயர்கொள்
புலவ ரேறே."

செட்டியாருடைய பெருமை முற்றும் இச்செய்யுட்களில் அடங்கவில்லை. ஆயினும் இவரது புகழைப் பாட்டாகப் பாட வேண்டுமென்று ஓரன்பருக்குத் தோற்றியதே இவருடைய மதிப்புக்கு ஓர் அடையாளமாகும்.

தியாகராச செட்டியார் சிறந்த பண்டிதர்; உபகாரி; ஆற்றலுள்ள ஆசிரியர்; நல்ல அன்பர். இவருடைய அன்பர்கள் இவருடன் பழகிய காலத்தில் நிகழ்ந்த ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை யாவது மறவாமல் நினைத்திருப்பார்கள். இவருடைய செயல்களும் பழகுவோர் மனத்தில் பதிந்து நிற்பன.

தமிழுலகம் இவ்வகையான மனிதர்களைப் பெறுவது அருமை.

மகாமகோபாத்தியாய

# டாக்டர். உ. வே. சாமிநாதையர்

தமிழ்த் தாத்தா என்று தமிழ்க் குழந்தைகளால் அன்புடன் போற்றப் பெறும் ஐயரவர்கள் 1855-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி தோன்றினார்கள். அவர்கள் தோன்றிய ஊர் தஞ்சை ஜில்லாவில் உள்ள உத்தம தானபுரம் என்ற சிறிய கிராமம். சங்கீத வித்துவானாகிய ஸ்ரீ வேங்கடசுப்பையருக்கும் ஸ்ரீமதி சரசுவதியம் மாளுக்கும் புத்திரராக ஐயரவர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய தந்தையார் பல இடங்களுக்குச் சென்று தம்முடைய இசைத் திறமையைக் காட்டிப் பொருளீட்டி வாழ்ந்து வந்தார்கள். குறிப் பிட்ட வேலையும் குறிப்பிட்ட சம்பளமும் இல்லா விட்டாலும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் அன்பும் கலையபிமானமும் அவரைப் போன்ற கலைஞர்களைப் பாதுகாத்து வந்தன. அங்கங்கே இருந்த செல்வர்களும் ஜமீன்தார்களும் அவருக்குச் சிறப்புச் செய்து வாழ்க்கையைச் சுவையுடையதாக்கினார்கள்.

இந்தச் சூழ்நிலையில் ஐயரவர்கள் வளர்ந்துவந்தார்கள். தந்தையாரிடமும், சில திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்களி டமும் இப்பேரறிஞர் இளமையில் கல்விபயின்றார்கள். அக்காலத்தில் சில நூல்களையே கற்றிருந்தாலும், அவற்றைத் திருத்தமாகப் பயின்று மற்றவர்களுக்கும் தெளிவாகப் பாடஞ் சொல்லும் சிறிய புலவர்கள் அங்கங்கே இருந்தார்கள். அத்தகையவர்களாகிய அரியிலூர்ச் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டி யார் முதலியவர்களிடம் ஐயரவர்கள் சில நூல்களைக் கற்றார்கள்.

ஐயரவர்களுடைய தந்தையாருக்குத் தம் குமாரரைப் பெரிய சங்கீத வித்துவானாக ஆக்கவேண்டுமென்ற ஆசையே முதலில் எழுந்தது. ஆனால் இவர்களுக்குத் தமிழில் உண்டான பெரும் பசியைக் கண்டபோது அந்தத் துறையில் இவர்களை ஈடுபடுத்து வதுதான் தம்முடைய கடமை என்பதை அவர் உணர்ந்தார். அதனால் எங்கெங்கே தமிழ் நூல்களைப் பாடம் செல்லுகிறவர்கள் இருக்கிறார்களோ, அந்த அந்த ஊர்களுக்கெல்லாம் குடியேறித் தம்முடைய குமாரர் தமிழ்க் கல்வி பெறும்படி செய்து வந்தார்.

அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் பெருங்கவிஞராகவும் சிறந்த புலவராகவும் திகழ்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்

பிள்ளையவர்களின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது, அவர் பல மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறார் என்ற செய்தி ஐயரவர்களின் தந்தையார் காதில் விழுந்தது. 'நம் பிள்ளையையும் அந்த மகாவித்துவானிடம் சேர்த்துவிட வேண்டும்' என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று.

1870-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐயரவர்கள் வாழ்க்கையின் இரண்டாம் பகுதி தொடங்கியது. மாயூரத்தில் இருந்த மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் இவர்கள் மாணாக்கராகச் சேர்ந்தார்கள். அதுமுதல் அந்தத் தமிழ்க் கடலின் மறைவு வரையில் (1-2-1876) உடனிருந்து பலவகையான தமிழ் நூல்களைக் கற்றார்கள். அப்புலவர்பிரான் அவ்வப்போது இயற்றி வந்த நூல் எழுதுவதும், திருவாவடுதுறை மடத்தின் ஆதீன கர்த்தர்களான ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் பழகுவதும், அந்த மடத்துக்கு வரும் தமிழ்ப் புலவர்களிடத்திலும் வடமொழி வாணரிடத்திலும் சங்கீத வித்துவான்களிடத்திலும் நெருங்கிப் பழகுவதும் போன்ற செயல்களால் இவர்களுக்குக்கிடைத்த அநுபவம் அளவிடற்கு அரியது. அத்தகைய அநுபவத்தினால் ஐயரவர்கள் பெற்ற பயன் மிக அதிகம். எந்தப் பொருளானாலும், மனிதர்களின் எத்தகைய இயல்பானாலும், எந்த விதமான நிகழ்ச்சியானாலும் அவற்றைக் கூர்ந்து கவனித்து உணரும் இயல்பு ஐயரவர்களிடம் சிறந்திருந்தது. அதனால் அக்காலத்தில் அவர்கள் கண்டவையும் கேட்டவையும் அப்படியப்படியே இவர்களுடைய இளநெஞ்சில் நன்றாகப் பதிந்தன, பெரிய ஆதீனத்தின் தொடர்பால் பலவகை மக்களின் பழக்கம் இவர்களுக்கு ஏற்பட்டது. பெரும்புலவருடைய தொடர்பால் பல நூல்களில் அறிவு உண்டாயிற்று. பல கலைஞருடைய நட்பினால் பல துறையிலும் அறிவு சிறந்தது. வெவ்வேறு ஊர்களுக்குத் தம்முடைய ஆசிரியருடன் செல்ல வேண்டியிருந்தமையால் பல தலங்களைப்பற்றிய செய்திகளும் அங்கங்குள்ள பெரிய மனிதர்களின் பழக்கமும் ஐயரவர்களுக்குக் கிடைத்தன.

பிள்ளையவர்கள் மறைவுக்குப்பின்பு திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு ஐயரவர்களுக்குப் பின்னும் இறுகலாக அமைந்தது. அதற்கு முன் பிள்ளையவர்கள் மூலமாக ஆதீனத்தின் தொடர்பு இருந்துவந்தது. அதற்குப்பின் ஆதீனகர்த்தராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடமே பாடம் கேட்கத் தொடங்கினர் ஐயரவர்கள். அதோடு மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் பணியையும் மேற்கொண்டார்கள். இதனால் இவர்களுடைய தமிழறிவு உரம் பெற்று வந்தது.

அக்காலத்தில் கும்பகோணம் அரசாங்கக் காலேஜில் தியாகராச செட்டியார் என்ற பெரும்புலவர் தமிழாசிரியராக இருந்தார். அவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் படித்தவர். அவர் ஒய்வு பெறவேண்டிய காலம் வந்தபோது அவர் தம்முடைய இடத்தில் ஐயரவர்களை நியமிக்கும்படி செய்தார். 1880 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி முதல் ஐயரவர்கள் கல்லூரித் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கினார்கள்.

நிறைந்த தமிழ்ப் புலமை, எதையும் சுவையாக எடுத்து விளக்கும் ஆற்றல், இசைப்பயிற்சி, அன்பு முதலிய இயல்புகளை இவர்கள் சிறப்பாகப் பெற்றிருந்தமையால் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளத்தை எளிதில் கவர்ந்தார்கள். ஆங்கில மோகம் உச்சநிலையில் இருந்த காலம் அது. ஆங்கிலமும் பிறபாடங்களும் கற்பிக்குங் பேராசிரியர்களிடம் மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்ல மதிப்பு இருந்து வந்தது. இங்கிலீஷ்காரர்கள் சிலர் அந்தப் பாடங்களைக் கற்பித்து வந்தார்கள். அதனாலும் அவற்றிற்கும்,அவற்றைக் கற்பிப்பவர்களுக்கும் மதிப்பு உயர்ந்திருந்தது. தமிழாசிரியர்களுக்கு அத்தகைய மதிப்பு இல்லை. அவர்களுக்குக் கிடைத்த ஊதியமும் மிகக்குறைவு. கல்லூரிச் சேவகனுக்கு அடுத்தபடி சம்பளம் வாங்கினவர் தமிழாசிரியரே.

இத்தகைய நிலையில் ஐயரவர்கள் மாணாக்கர்களின் உள்ளத்தைப் பிணித்ததோடு மற்ற ஆசிரியர்களுக்குச் சமமான மதிப்பையும் பெற்றார்கள். ஆங்கிலம் சிறிதும் அறியாவிட்டாலும், வயதில் இளைஞராக இருந்தாலும், அவர்களுடைய புலமையும், பண்பும் மாணாக்கர்களும் ஆசிரியர்களும் பிறரும் இவர்களைச் சிறந்தவர்களாக மதிக்கும்படி செய்தன.

காலேஜில் ஆசிரியராகப் புகுந்த ஆண்டிலேயே ஐயரவர்களுக்கும் கும்பகோணத்தில் ஜில்லா முன்சீபாக இருந்த சேலம் இராமசுவாமி முதலியாரவர்களுக்கும் பழக்கம் உண்டாயிற்று. அந்தப் பழக்கமே ஐயரவர்கள் பிறந்ததன் பயனைத் தமிழும் தமிழுலகமும் பெறும்படி செய்வதாயிற்று. முதலியார் **சிந்தாமணியைப்** பாடம் சொல்லும்படி ஐயரவர்களிடம் கேட்டுக் கொண்டார். அதனை முன்பு பாடம் கேட்டறியாதவர்கள் இவர்கள்; அந்த நூலைப் பார்த்ததுகூட இல்லை. ஆயினும் தைரியமாகப் பாடம் சொல்லப் புகுந்தார்கள்; ஏட்டுச் சுவடியை வைத்துக் கொண்டு பாடம் சொன்னார்கள்; சிந்தாமணியில் ஆழ்ந்தார்கள்; தாம் அதுகாறும் படித்த நூல் குவியல்களால் அறியவொண்ணாத பலவற்றை அதில் கண்டார்கள். அது ஜைனசமய நூலாதலால் பல செய்திகள்

ஐயரவர்களுக்கு விளங்கவில்லை. அவற்றையெல்லாம் ஜைனர்களிடம் சென்று கேட்டு அறிந்தார்கள். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையைப் படித்தார்கள். அவருடைய உரைப்போக்கும் அதனிடையே அவர் காட்டியிருக்கும் மேற்கோள்களும் ஏதோ ஒரு புதிய பிரபஞ்சத்தையே அவர்கள் அகக்கண் முன் தோற்றுவித்தன; சங்கநூல்களும், பழைய காப்பியங்களின் பெயர்களும் பிறவும் அங்கங்கே மின்னலொளியாகத் தோன்றின. அதனால் இவர் களுக்குச் சிந்தாமணியைப் பதிப்பிக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆராய்ச்சி நடைபெற்றது. மேட்டுமடையில் நீர் பாய்வது போன்ற வேதனையைப் பல சமயத்தில் அவர்கள் அடைந் தார்கள். ஆனாலும் விடாப்பிடியாக முயன்று 1887-ஆம் ஆண்டு **சிந்தாமணியை** வெளியிட்டார்கள். அந்தப் பதிப்பைக் கண்ட தமிழ் நாட்டினர் மிகவும் ஆனந்தமடைந்து களிக்கூத்தாடினர். அது கண்டு ஐயரவர்கள் பழைய நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் மேலும் ஈடுபடலானார்கள்.

சிந்தாமணிக்குப்பின் **பத்துப்பாட்டு** வெளியாயிற்று. அதன்பின் **சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை** என்பவை வந்தன. **புறநானூறு** கண்ட தமிழுலகம் ஏதோ ஒரு புதிய கண்டத்தைக் கண்டு பிடித்தது போன்ற மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அடைந் தது. ஆராய்ச்சிக்காரர்களுடைய மூளை வேலை செய்யத் தொடங் கியது. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சி களை அறிஞர்கள் எழுதத் தொடங்கினார்கள்.

ஐயரவர்கள் மேலும் மேலும் பழந்தமிழ் நூல்களை அச்சிடும் தொண்டை விடாது செய்து வந்தார்கள். ஐம்பெருங் காப்பியங்கள் என்று சேர்த்துச் சொல்லும் நூல்களில் கிடைத்த **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி**, என்ற மூன்றையும் அவர்கள் வெளி யிட்டார்கள். **பத்துப்பாட்டு** அவர்களுடைய உழைப்பால் தமிழுலகம் காண முடிந்தது. எட்டுத்தொகைகளில் **ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு** என்பன மலர்ந்தன. **பெருங்கதை** காட்சி தந்தது. **புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரை** என்னும் இலக்கணங்கள் வெளிவந்தன. இவற்றையன்றித் **திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருக்காளத்திப் புராணம்** முதலிய பல புராணங்களும், **கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், இரட்டை மணிமாலை, அந்தாதி, குறவஞ்சி** முதலிய பலவகைப் பிரபந்தங்களும் குறிப்புரைகளுடன் வெளிவந்தன. தம்முடைய ஆசிரியர் இயற்றிய **பிரபந்தங்கள்** எல்லாவற்றையும் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட்டார்கள்.

ஏட்டில் இருக்கிறதை அப்படியே பெயர்த்துக் காகிதத்தில் அச்சிடும் வேலை அன்று, ஐயரவர்கள் செய்தது. புத்தகப் பதிப்பு அவ்வளவு எளிதாக இருந்தால் எத்தனையோ அறிஞர்கள் அதை முன்பே செய்து புகழ் பெற்றிருப்பார்கள். ஏட்டில் உள்ள பாடம் பிழைபட்டிருக்கும். பல இடங்களில் இன்னதென்று ஊகிக்க முடியாத அளவுக்குச் சிதைவு உண்டாகியிருக்கும். அவற்றையெல்லாம் பல நூல் அறிவினாலும், இயற்கையான அறிவுத் திறமையாலும், விடா முயற்சியினாலும், திருவருளின் துணையாலும் ஆராய்ந்து செப்பம் செய்யவேண்டும். ஐயரவர்கள் திக்குத் தெரியாத காட்டில் நுழைந்துதாமே வழியமைத்துக் காடு நாடாக்கிய பெருந்தொண்டர். அவர்களுடைய பதிப்பு என்றாலே தமிழ்ப் புலவர்களும் ஆராய்ச்சியாளரும் இப்போதும் போற்றிப் பாதுகாக்கிறார்கள். ஒவ்வொரு நூலிலும் முன்னே உள்ள முகவுரையும், ஆசிரியர்வரலாறும், நூலைப் பற்றிய குறிப்புக்களும், பிற செய்திகளும் மிகமிக அற்புதமானவை. நூலில் ஒவ்வொரு பக்கத்திலும் அடிக்குறிப்பில் பல வகையான விளக்கங்களும் பல நூல்களிலிருந்து எடுத்த ஒப்புமைப் பகுதிகளும் காட்சிதரும். அவை ஐயரவர்களுடைய பரந்த நூற்புலமைக்குச் சான்றாக விளங்கும். இறுதியில் நூலில் கண்ட சொற்களுக்கும் பொருள்களுக்கும் அகராதி இருக்கும். ஆசிரியரின் உதவியின்றியே பயிலும் வகையில் அமைந்தவை ஐயரவர்களின் பதிப்புக்கள்.

இந்த முறையில் கண்ணாடிபோல மேல் நாட்டாரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலமே அறியாத ஒரு தமிழ்ப் பண்டிதர் புதிதாக இத் துறையில் புகுந்து சாதித்தார் என்று சொன்னால் அது அதிசயமான செயல் அல்லவா!

முன்னுரை முதலியவற்றை எழுதி உரைநடை எழுதும் ஆற்றலைச் சிறிய அளவிலே வெளிப்படுத்திய ஐயரவர்கள், தாம் பதிப்பித்த நூல்களின் அங்கமாக மணிமேகலைக் கதைச்சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச்சுருக்கம் என்பவற்றை எழுதியளித்தார்கள்.

கும்பகோணம் கல்லூரியிலிருந்து சென்னை கல்லூரிக்குத் தமிழாசிரியராக 1903-ஆம் ஆண்டு வந்தார்கள். அப்பால் அந்தப் பதவியிலிருந்து 1919-ஆம் ஆண்டு ஒய்வு பெற்றார்கள். கல்லூரி ஆசிரியர் என்ற அலுவலிலிருந்து ஒய்வு பெற்றார்களேயன்றி மாணாக்கர்களுக்குப்பாடம் சொல்லும் ஆசிரியத்தொண்டிலிருந்தோ, நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியத் தொண்டிலிருந்தோ, அவர்கள் ஓய்வு பெறவில்லை. உண்மையில் அவ்வேலைகள் பின்னும் பன்மடங்கு பெருகின.

கல்லூரியில் வேலையாக இருந்தபோதே வீட்டில் தனியே இவர்களிடம் பலர் பாடம் கேட்டார்கள். மகாபாரதப் பதிப்பாசிரியராகிய மகாமகோபாத்தியாய ம. வீ. இராமாநுஜாசாரியார், திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபராக விளங்கிய சொக்கலிங்கத் தம்பிரான் முதலிய சிலர் அவ்வகையில் பாடம் கேட்டவர்கள். இவர்களிடம் இருந்து ஆராய்ச்சி முறையைக் கற்றுக்கொண்டு தாமே நூல்களை வெளியிட்டவர்கள் சிலர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இ. வை. அனந்தராமையர் முதலியவர்கள் இத்தகைய வரிசையில் இருந்தவர்கள். இவர்கள் ஏடுதேடி ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்ட நூல்களைப் படித்து அந்த முறையையும் அறிந்த சில புலவர்கள் பழந்தமிழ் நூல்களைத் தாமே வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

1924 முதல் 1927 வரையில் ஐயரவர்கள் ராஜா அண்ணாமலை செட்டியாரவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராக இருந்தார்கள்.

இவர்கள் ஓய்வு பெற்ற பிறகு தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதோடு தம்முடைய அநுபவங்களை இனிய உரைநடையில் எழுதத் தொடங்கினார்கள். இந்தத் துறையில் ஐயரவர்கள் தொண்டாற்றப் புகுந்தபோது பெரியவர்களும் சிறுவர்களும், ஆடவரும் பெண்டிரும், புலவர்களும் பிறரும் ஒருங்கே இவர்கள் எழுத்தைப் படித்து இன்புற்றார்கள். பத்திரிகைகளில் இவர்கள் கட்டுரைகள் வெளியாயின. மாதந்தோறும் முதலில் ஐயரவர்கள் கட்டுரை ஒன்றைத் தாங்கிச் சிறப்படைந்தது கலைமகள் பத்திரிகை. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளின் சிறப்பு மலர்கள் ஐயரவர்களின் கட்டுரைகளோடு மலர்ந்தன.

தம்முடைய ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றை வெளியிடவேண்டும் என்னும் நெடுநாள் ஆர்வத்தால் அவர்கள் பல செய்திகளைத் தொகுத்து வைத்திருந்தார்கள். அவற்றைக் கொண்டு மிக விரிவாக அச்சரித்திரத்தை இரண்டு பாகங்களாக எழுதி முடித்தார்கள். தம்முடைய வாழ்க்கையில் எந்தப் பெரியார்களோடு பழக நேர்ந்ததோ அவர்களைப் பற்றிய வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் சுவை ததும்ப எழுதினார்கள். தியாகராச செட்டியார் சரித்திரம், கோபாலகிருஷ்ண பாரதியார் சரித்திரம், மகா வைத்தியநாதையர் சரித்திரம், கனம் கிருஷ்ணையர் வரலாறு என்பன அவர்களிடத்து இவர்களுக்கிருந்த அன்பையும், நன்றியறிவையும், எழுதும் ஆற்றலையும் விளக்குகின்றன. சிலருடைய வரலாற்றை சுருக்கமாக எழுதினார்கள். இந்த வகையில் பூண்டி அரங்கநாத முதலியார், மணி ஐயர், வி. கிருஷ்ண

சாமி ஐயர், திவான் சேஷையா சாஸ்திரிகள் முதலியவர்களைப் பற்றிய கட்டுரைகள் வெளியாயின.

இவர்களுடைய பெருமையைத் தமிழுலகம் மெல்ல மெல்ல உணரலாயிற்று. அரசாங்கத்தார், 1906-ஆம் ஆண்டு 'மகாமகோ பாத்தியாய' என்ற பட்டத்தை அளித்தார்கள். 1917-ஆம் ஆண்டு பாரததர்ம மண்டலத்தார், 'திராவிட வித்தியா பூஷணம்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள். 1925-ஆம் ஆண்டு காம கோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் 'தாக்ஷிணாத்திய கலாநிதி' என்ற பட்டத்தை அருளினார்கள். இவர்கள் சென்னை, மைசூர், ஆந்திரம், காசி முதலிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் பல வகையில் கலந்து தொண்டாற்றி னார்கள். 1932-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் 'டாக்டர்' பட்டம் அளித்தார்கள்.

1935-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ஆம் தேதி ஐயரவர்கள் 80-ஆண்டுகள் நிறைந்து விளங்கினார்கள். அவர்களுடைய சதாபிஷேக விழாவைத் தமிழுலகம் முழுவதும் கொண்டாடியது. சென்னையில் பல்கலைக் கழக மண்டபத்தில் மிகமிகச் சிறப்பாக விழா நடை பெற்றது.

பழுத்த பருவத்திலும் ஐயரவர்கள் தமிழ்த்தொண்டு வீறு கொண்டு நடைபெற்றது. குறுந்தொகையை விரிவான உரையுடன் பதிப்பித்தார்கள். சிவக்கொழுந்து தேசிகர், குமரகுருபரர் என்னும் புலவர்களின் பிரபந்தத் திரட்டுகள் குறிப்புரையுடன் வெளியாயின. தமிழன்பர்களின் விருப்பப்படி ஆனந்த விகடனில் வாரந்தோறும் தம்முடைய வரலாற்றை "என் சரித்திரம்" என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார்கள். 1940-ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கிய அது 122 அத்தியாயங்களோடு சுய சரித்திரமாகத் தொடர்ந்து வெளிவந்தது.

உலகப் பெரும்போர் நிகழ்ந்தபோது 1942-ஆம் ஆண்டில் ஐயரவர்கள் தம் குடும்பத்துடன் சென்னை நகரை விட்டுத் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார்கள். ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி அந்தத் தலத்திலேயே தமிழ்த்தாயின் தவப்புதல்வராகிய ஐயரவர்கள், தாம் பிறந்த காலத்தில் கண்ட தமிழ் நிலையை மாற்றித் தமிழ் மக்களைப் பழந்தமிழ்ச் செல்வத்துக்கு உரிமை யுடையவர்களாக ஆக்கி, ஆசி கூறிவிட்டு இறைவன் திருவடியை அடைந்தார்கள்.

**மேலும் சில செய்திகள்**

தமிழகப் பொது மக்கள் 1948-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆறாம் தேதி சென்னை அரசினர் கல்லூரியில் ஐயரவர்களுடைய முழு உருவச்சிலை யொன்றை நிறுவினார்கள். தமிழ்க் கடலின் விரிவை மீட்டும் தமிழுலகத்துக்குக் காட்டிய ஐயரவர்களின் திருவுருவம் பெருங்கடலை நோக்கி நிற்கும் கோலத்தை இன்றும் கண்டு மகிழலாம்.

உயர்திரு. எஸ். கலியாணசுந்தரையர் (ஐயரவர்களின் ஒரே புதல்வர்) தம் தந்தையார் அரிதிற் சேகரித்துப் பொன்னே போல் போற்றிவந்த சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும், பலமுறை படித்துப் பயன்படுத்திய புத்தகங்களையும் எக்காலத்தும் அழியாமல் காக்கவும், அவர்கள் தொடங்கிய தமிழாராய்ச்சித் தொண்டு நாட்டில் இடையறாமல் நிகழ்ந்து வளர்ந்து வரவும், புதிய நூல்களைப் பதிப்பித்து நாளடைவில் தம் தந்தையார் இயற்றிய பணியின் பயன் அகில உலகமெங்கும் பரவ, ஸ்ரீ ஐயரவர்கள் பெயரால் ஒரு நூல் நிலையத்தை நிறுவவேண்டும் என்று உறுதி கொண்டு, அதற்கு ஏற்ற இடம் கலாக்ஷேத்திரம் தான் என்று உணர்ந்து, அதன் தலைவரான திருமதி **ருக்மிணிதேவி** அவர்களிடம் ஒப்படைக்க, திருமதி **ருக்மிணிதேவி** அவர்களும் அன்புடன் ஏற்று 5-7-1943 அன்று ஸ்ரீ ஐயரவர்கள் பெயரால் ஒரு நூல் நிலையத்தைத் தோற்றுவித்தார்கள். மத்திய மாநில அரசுகளின் உதவியால் திருவான்மியூரில் நிரந்தரமான கட்டிடம் 5-2-1967 அன்று திறக்கப் பட்டு, அன்று முதல் நூல் நிலையம் தனக்கே உரிமையான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. நூல் நிலையம் சொசைட்டி ரிஜிஸ்டரேஷன் ஆக்ட் No. XXI, 1860 என்ற சட்டத்தின் கீழ் (S. No. 7 of 1964 எண்ணாக) 17-1-1964 அன்று பதிவு செய்யப் பட்டது. இந்நூல் நிலையத்தை 30 அங்கத்தினர் கொண்ட பொதுக் குழுவினர், திருமதி ருக்மிணிதேவி அவர்களைத் தலைவராகக் கொண்டு நடத்தி வருகின்றார்கள்.

நூல்நிலையத்தில் 2169ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப்பிரதி களும் உள்ளன. சுவடிகளின் விளக்கமும், கையெழுத்துப் பிரதிகளின் விளக்கமும் ஆறுதொகுதிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 18000 நூல்கள் நூல்நிலையத்தில் உள்ளன. அவற்றில் பழைய பதிப்புக் களும் புதிய பதிப்புக்களும் அடங்கும். 272 ஓலைச்சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும் மைக்ரோபிலிம் செய்யப்பட்டுள்ளன, ஐயரவர்களுக்கு வந்த கடிதங்களையும், பிறகுறிப்புக்களையும், பல சிறுதுண்டுத் தாள்களில் எழுதி வைத்துள்ளவைகளையும்

24 தொகுதிகளில் பிரதி செய்யப்பட்டுள்ளன. ஐயரவர்கள் தொகுத்து வைத்தவற்றிலிருந்து இதுவரை நூல்நிலையம் 86 நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றில் கம்பராமாயணம் ஆறுகாண்டங்களும், ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களின் மறுபதிப்புக்களும் அடங்கும்.

நூல் நிலையத்தில் ஐயரவர்கள் பெற்ற பரிசுப்பொருள்களும், உடைமைகளும் காட்சிப் பொருள்களாகத் தனியே வைக்கப் பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் நம் நாட்டிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் வந்து நூல்நிலையத்தை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஐயரவர்களுடைய குணநலங்கள் பல. சிறந்த பண்பு உள்ளவர்கள் இவர்கள்; இணையற்ற ஆசிரியர்; பலவகை மாணாக்கர்களுடைய உள்ளம் அறிந்து தக்கவண்ணம் பாடம் சொல்வதில் வல்லவர்கள்; புலமைப்பெருங்கடல்; கவிஞர்; சிறந்த எழுத்தாளர்; முன்னும் பின்னும் கண்டறியாத அற்புதப் பதிப்பாசிரியர். சுப்பிரமணிய பாரதியார் தாம் பாடிய பாட்டில்,

**“கும்பமுனி எனத்தோன்றும் சாமிநாதப் புலவன்”**

என்று ஐயரவர்களைச் சிறப்பிக்கிறார்.

**“பொதியமலைப் பிறந்த தமிழ் வாழ்வறியும்**
**காலமெலாம் புலவோர் வாயில்**
**துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்**
**இறப்பின்றித் துலங்கு வாயே”**

என்று அவர் பாடியிருப்பதற்குமேல் நாம் என்ன சொல்ல முடியும்?

# ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களும் எழுதிய நூல்களும்

## சங்க நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு | 1889 |
| 2. | புறநானூறு | 1894 |
| 3. | ஐங்குறு நூறு | 1903 |
| 4. | பதிற்றுப்பத்து | 1904 |
| 5. | பரிபாடல் | 1918 |
| 6. | பத்துப்பாட்டு மூலம் | 1931 |
| 7. | புறநானூறு மூலம் | 1936 |
| 8. | குறுந்தொகை | 1937 |

## காவியங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சீவகசிந்தாமணி | 1887 |
| 2. | சிலப்பதிகாரம் | 1892 |
| 3. | மணிமேகலை | 1894 |
| 4. | பெருங்கதை | 1924 |
| 5. | உதயணகுமார காவியம் | 1935 |
| 6. | பெருங்கதை மூலம் | 1936 |
| 7. | செவ்வைச்சூடுவார் பாகவதம் | 1941 |

## தலபுராணங்கள்

| | |
|---|---|
| திருக்குடந்தைப் புராணம் | 1883 |
| திருப்பெருந்துறைப் புராணம் | 1892 |
| வீரவனப் புராணம் | 1903 |
| சூரைமாநகர்ப் புராணம் | 1904 |
| தியாகராச லீலை | 1905 |
| திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் | 1906 |
| தணியூர்ப்புராணம் | 1907 |
| மண்ணிப்படிக்கரைப் புராணம் | 1907 |
| திருக்காளத்திப் புராணம் | 1912 |
| விளத்தொட்டிப் புராணம் | 1934 |
| ஆற்றூர்ப்புராணம் | 1935 |
| தணிகாசல புராணம் | 1939 |
| வில்லைப்புராணம் | 1940 |

## இலக்கணம்

புறப்பொருள் வெண்பாமாலை 1895
நன்னூல்-மயிலைநாதர் உரை 1918
நன்னூல்-சங்கரநமச்சிவாயர் உரை 1925
தமிழ் நெறி விளக்கம் 1937

## கோவைகள்

சீகாழிக்கோவை 1903
திருவாவடுதுறைக்கோவை 1903
பழமலைக்கோவை 1935
கலைசைக்கோவை 1935
சிராமலைக்கோவை 1937
திருவாரூர்க்கோவை 1937

## உலாக்கள்

திருப்பூவணநாதருலா 1904
திருக்காளத்திநாதருலா 1904
திருவாரூர் உலா 1905
தேவை உலா 1907
சொக்கநாதர் உலா 1931
கடம்பர் கோயில் உலா 1932
சக்கரலிங்க உலா 1933
திரு இலஞ்சி முருகன் உலா 1935
திருக்கழுக்குன்றத்து உலா 1938

## தூது

கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது 1888
தமிழ்விடுதூது 1930
பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது 1932
மான் விடுதூது 1936
அழகர் கிள்ளை விடுதூது 1938
புகையிலை விடுதூது 1939

## குறவஞ்சி

திருமலையாண்டவர் குறவஞ்சி 1938

## கலம்பகம்

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் 1908

## பரணி

| | |
|---|---|
| தக்கயாகப்பரணி | 1930 |
| பாசவதைப்பரணி | 1933 |

## பிள்ளைத்தமிழ்

| | |
|---|---|
| பழனிப் பிள்ளைத் தமிழ் | 1932 |

## பிரபந்தத்திரட்டு

| | |
|---|---|
| மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு | 1910 |
| சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத்திரட்டு | 1932 |
| குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு | 1939 |

## விருத்தம்

| | |
|---|---|
| தண்டபாணி விருத்தம் | 1819 |
| திருத்தணிகைத் திருவிருத்தம் | 1914 |

## வெண்பா

| | |
|---|---|
| சிவசிவ வெண்பா | 1938 |
| திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா | 1930 |
| குற்றாலச் சிலேடை வெண்பா | 1940 |

## மாலை

| | |
|---|---|
| திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை | 1938 |
| மகரநெடுங்குழைக்காதர் பாமாலை | 1939 |

## அந்தாதி

| | |
|---|---|
| திருச்சிற்றம்பல வெண்பா அந்தாதி | 1838 |
| திருமயிலைத் திரிபந்தாதி | 1930 |
| சங்கர நயினார் கோயில் அந்தாதி | 1934 |
| திருமயிலை யமக அந்தாதி | 1936 |

## இரட்டைமணி மாலை

| | |
|---|---|
| பழனி இரட்டை மணிமாலை | 1932 |
| களக்காட்டுச் சத்தியவாகீசர் இரட்டை மணிமாலை | 1932 |

## மும்மணிக்கோவை

| | |
|---|---|
| மதுரை மும்மணிக் கோவை | 1932 |
| வலிவல மும்மணிக்கோவை | 1932 |

## பஞ்சரத்தினம்

| | |
|---|---|
| கபாலீசுவரர் பஞ்சரத்தினம் | 1932 |

## கீர்த்தனை

| | |
|---|---|
| இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை | 1936 |
| திருநீலகண்ட நாயனார் சரித்திரக்கீர்த்தனை | 1939 |

## பிற

| | |
|---|---|
| வேணுவன லிங்க விலாசச் சிறப்பு | 1878 |

## உரைநடை நூல்கள்

| | |
|---|---|
| மத்தியார்ச்சுன மான்மியம் | 1885 |
| புத்த சரித்திரம் | 1898 |
| மணிமேகலைக் கதைச் சுருக்கம் | 1898 |
| உதயணன் கதைச் சுருக்கம் | 1924 |
| சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் | 1928 |
| ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் | |
| முதற்பாகம் | 1933 |
| இரண்டாம் பாகம் | 1934 |
| நான் கண்டதும் கேட்டதும் | 1936 |
| புதியதும் பழையதும் | 1936 |
| திருவள்ளுவரும் திருக்குறளும் | 1936 |
| கனம் கிருஷ்ணையர் | 1936 |
| கோபால கிருஷ்ண பாரதியார் | 1936 |
| மகாவைத்திய நாதையர் | 1936 |
| நல்லுரைக் கோவை 1 | 1936 |
| ,, 2 | 1937 |
| ,, 3 | 1938 |
| ,, 4 | 1939 |
| நினைவு மஞ்சரி 1 | 1940 |
| நினைவு மஞ்சரி 2 | 1942 |
| வித்துவான் தியாகராச செட்டியார் | 1942 |

[என் சரித்திரம் 1940 ஜனவரி முதல் 1942 மே வரை ஆனந்த விகடன் வாரப் பத்திரிகையில் எழுதப்பட்டது; இப்போது புத்தகமாகவுள்ளது.]

*

# பிற்காலப் புலவர்கள்

## 1. அகோர தேவர்

இவர் அந்தணர் என்பர்; தேவர் என்ற முடிவைக் கொண்டு மறவர் என்றும் சிலர் சொல்கின்றனர்.

இவர் 4000 பாடலுள்ள வேதாரணிய புராணமும் சின்னத் தம்பி நாவலர் செய்ததல்லாத மற்றொரு மறைசை யந்தாதியும் இயற்றியவர்; மேற் கூறிய இரண்டு புராணத்திலும் பாயிரங்களில் அந்தண வருணத்தினராகிய மாளிகைத் தேவர் என்பவருடைய துதி கூறப்பட்டிருத்தலின் அவர் இவருடைய ஆசிரிய ரென்று தெரிகின்றது. மற்றபடி எதுவும் விளங்க வில்லை.

இலிங்க புராணத்தும் சங்கர நாராயணர் கோயிற் புராணத்தும் அகோர சிவன் துதிகள் உள்ளன.

இந்தச் சிவன் வேறே.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புரா ணம் பாயிரத்தில் **தில்லை மாளிகை மடம்** என்ப தொன்று கூறப் பெற்றுள்ளது.

காளையார் கோயிலுக்கு இவர் செய்ததல்லாமல் வேறொரு பழைய தமிழ்ப்புராணம் இருப்பதாகக் கேள்வி.

சங்கச்செய்யுட்கள், தமிழ் நாவலர் சரிதம், பெரிய புராணம் இவற்றில் இப்பெயர் வந்துள்ளது.

## 2. அங்கமுத்துப் புலவர்

இவரது ஊர் சங்கர நத்தம். சைவர். தமது தந்தையாகிய இராமலிங்கப் புலவரிடத்தில் கல்வி பயின்றவர். இவரது வயது முப்பத்தைந்து என்றும், இன்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன் இறந்தார் என்றும் ஐயரவர்கள் குறித்துள்ளார்கள். நூறு செய்யுட்களுளதான திருப்பரங்குன்ற மாலையென்று கலித்துறையில் ஒரு பிரபந்தம் பாடியிருக்கின்றார். சரவணப் பெருமாள் கவிராயர் பாடிய (ஆற்றங்கரை ஜமீன்தாராகிய சொக்கலிங்கப் பெத்தண்ணர் வேண்டுகோளுக்கு இணங்கி) புவனேந்திரன் அம்மானைக்கு இவர் சாற்றுக்கவி கொடுத்திருக்கிறார்

துய்ய கமல மலர்வதனன்
றுதிகம் பளநற் குலதிலகன்
றுலங்கு பொய்கைப் பதிவேந்தன்
சொக்க லிங்கப் பெத்தணமால்

வையம் புரக்கு மரச ரெலா
மகிழ்.........தசா வவதானி
வழங்கு சரவ ணப்பெருமாள்
வாணர்க் கதிபன் றன்னிடத்திற்

செய்ய புவனேந் திரன்கதையைச்
செஞ்சொற் றரும்ம் மானையதாய்ச்
செய்க வென்றுஞ் செய்ததமிழ்ச்
சிறப்பைக் கேட்ட குறுமுனிவ

னய்ய முடன்ற் றுளம்நாணி
......................
டலைவாய்ப் பயங்கொண் டதுமன்றி
யந்தோ மலைவா யிருந்தனனே.

## 3. அண்ணாசாமி முதலியார்

இவர், 1861-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்ட கம்பராமாயணம் பாலகாண்டத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியவர் என்று தெரிகிறது.

## 4. அண்ணாமலை ரெட்டியார்

புகழ்பெற்ற காவடிச்சிந்தை இயற்றியவராகிய சென்னி குளம் அண்ணாமலை ரெட்டியார் அக்காலத்தில் திருவாவடுதுறை மடத்தில் தமிழ் படிக்கலாம் என்று வந்தார். சேற்றூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர் என்பவர் அவரை அழைத்து வந்தார். தேசிகர் அவரை ஐயரவர்களிடம் ஒப்பித்தார். ஐயரவர்கள் அவருக்கு நன்னூலும், மாயூரப் புராணமும் பாடம் சொல்லிக் கொடுத்தார். அப்பொழுதே அவரிடத்தில் செய்யுள் இயற்றும் ஆற்றல் நன்கு அமைந்திருந்தது. யமகம், மடக்கு, திரிபு, சந்தம் முதலிய அமைப்புக்களோடு செய்யுட்களை வெகுவிரைவில் இயற்றுவார். அவர் பாடம் கேட்டு வந்த போது இலக்கணத்தில் அவருக்கு மனம் செல்லவில்லை. சில காலம் திருவாவடுதுறையில் இருந்துவிட்டு விடைபெற்றுத் தம் ஊருக்குப் போய் விட்டார்.

## 5. அணியியலுடையார்

இவருடைய காலமும், இவரது இயற்பெயர் இன்னதென்பதும் ஒருவாற்றானும் விளங்கவில்லை. அணியியல் என்பதோர் இலக்கணநூல் இவரால் இயற்றப்பட்டுள்ளதென்றும் அது சூத்திர ரூபமாக உள்ளதென்றும் தெரிகின்றது. யாப்பருங்கல விருத்தியுரையில் இவர் இயற்பெயராலேயே வழங்கப்படுகிறார். இவர் செய்த சூத்திரங்களாக அவ்வுரையாசிரியர் காட்டியவை வருமாறு:

1. இயன்ற செய்யுட் கியைந்த பொருளை
உயர்ந்த நடையால் உணரக் கூறலும்
அருங்கல மொழியால் அரிதுபடக் காட்டலும்.
ஒருங்கிரண் டென்ப உயர்நடைப் பொருளே.

2. செய்யு டாமே மெய்யுற விரிப்பின்
தனிநிலைச் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள்

அடிபல தொடுத்த தனிப்பாச் செய்யுள்
உரையிடை மிடைந்த பாட்டுடைச் செய்யுள்
இசைநுவல் மரபின் இயன்ற செய்யுள்
நயநிலை மருங்கின் சாதியொடு தொகைஇ
அவையென மொழிப அறிந்திசி னோரே.

3. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில் என்றாங்
கிருமூ வகைய பருவம் அவைதாம்
ஆவணி முதலா இவ்விரண் டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே.

இச்சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப் படாமையின் அணியியல் என்ற நூல் தண்டியலங்கார மன்று என்பதும் வேறொரு நூலென்பதும் தெரி கின்றது. நாலடியாரிலுள்ள ''வைகலும் வைகல்'' என்னும் வெண்பாவை இவர் அகவல் வெண்பா என்று சொல்லியிருப்பதாக அவ்வுரையாசிரியர் எழுதியிருக் கிறார். (யாப்பருங்கல விருத்தி, பக்கம் 180.) சிலப்பதி காரப் பதிகத்தைச் சார்ந்த உரை பெறு கட்டுரை யினது இறுதிப் பாகத்துள்ள விசேட வுரையில்,

''உரையும் பாடையும் விரவியும் வருமே''

என்னும் சூத்திரத்தையும், மனையறம் படுத்த காதையின் 26, 27-ஆம் அடிகளின் விசேட வுரையில்,

''உதார மென்ப தோதிய செய்யுளில்
குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல் ''

என்னும் சூத்திரத்தையும் மேற்கோளாக எடுத்துக் காட்டிய அடியார்க்கு நல்லார் இச்சூத்திரங்கள் அணியியல் என்று வரைந்து விளக்கியிருக்கின்றா ராதலின் இச்சூத்திரங்களும் அணியியலினுள்ளன வாகவே சொலற்பாலன. இந்த இரண்டையும் தண்டி யலங்கார நூலாசிரியர் தம் நூலில் ''முன்னோர் மொழி பொருளேயன்றி யவர் மொழியும், பொன்னே போற் போற்றுவம்'' என்றதற்கு இணங்க எடுத்தாண்டனர் போலும். இதனால் அணியியல் தண்டியலங்காரத் திற்கு முந்தியதென்பது பெறப்பட்டது.

## 6. அதிராவடிகள்

இவர் திருவிசைப்பாச் செய்தவர்களுள் ஒருவரென்று ''சீரார் மாளிகைத்தேவர்'' (சைவ. பாயி. 13. செ. உரை) என்னும் செய்யுளால் தெரிகின்றது. இப்போது வழங்கும் திருவிசைப்பாப் பிரதியில் இவர் செய்ததாக ஒன்றும் காணப்படவில்லை. 11-ஆந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள மூத்தபிள்ளையார் திரு மும்மணிக்கோவை இவராலருளிச் செய்யப்பட்டது. இந்தத் திருமுறையில் பட்டணத்துப் பிள்ளையார் பிரபந்தத்திற்கு முன்னே இவருடைய பிரபந்தம் வைக்கப்பட்டிருத்தலின் இவர், அவர் காலத்திற்கு முற்பட்டவரென்று நினைக்கப்படுகிறார். [மூத்த பிள்ளையார்-விநாயகர்] இவரைப்பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

## 7. அதி வீரராம பாண்டியர்

தென்காசியிலுள்ள விசுவநாத சுவாமி கோயில் சிலாசாஸனம் ஒன்றால் இவர்காலம் நிச்சயிக்கப்படுகிறது. இப்பொழுது அதிராமபட்டினமென்று வழங்குவது அதி வீர ராமன் பட்டினமென்றும், இதை முன்னொருகாலத்தில் இவர் வந்து கோட்டை முதலியன எடுப்பித்து நகரம் எனக் கட்டுவித்தாரென்றும், அதற்குரிய சின்னங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றனவென்றும் கூறுவர். கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய மூன்றும் வரதுங்கராம பாண்டியரியற்றியவையென்றும், இவரால் இயற்றப்பட்டன வல்லவென்றுஞ் சொல்லுகிறார்கள்.

இவர் பாண்டிய வம்சத்தினரல்லர்; ஆனாலும் பாண்டிய நாட்டில் தென்காசிப் பகுதி நகரத்தில் சிற்றரசராக இருந்தாரென்று தெரிதலின், அதுபற்றி இவருக்குப் பாண்டியரென்ற சிறப்புப்பெயர் கொடுக்

கப்பட்டது போலும். இக்காலத்தும் ஒரு நாட்டுச் சிற்றரசர்களைப் பாண்டியரென்று வழங்குவது மரபு. இவருடைய நூல்களை ஆராய்ந்து பார்க்கையில் சங்கச் செய்யுளில் அதிபரிச்சயமுடையவரென்றும் கௌடபக்ஷத்தில் அதிப்பிரீதியுடையவரென்றும் அவைகள் தெரிவிக்கின்றன.

இவர் செய்த நூல்கள்:

1. நைடதம்
2. காசிகாண்டம்
3. வெற்றிவேற்கை
4. கூர்ம புராணம்
5. கொக்கோகம்
6. சங்கர நாராயணசாமி கோயிற் புராணம்
   சில தனிப் பாடல்கள்.

இவர் தமையனாராகிய வரதுங்க ராமர் தாம் இயற்றிய பிரமோத்தர காண்ட பாயிரத்தில் குருவணக்கமாக நிம்பை ஈசான தேசிகரைத் துதித்திருத்தலின் இவரும் அவரையே குருவாகப் பெற்றவரென்று தெரிகின்றது.

இவர் தமையனாரும், இவரும் உடன் கற்றிருத்தல் வேண்டும்; அவரே இவர் காலத்துப் பிரசித்த வித்வான்களிலும், பிரபுக்களிலும் ஒருவர்.

கௌடபக்ஷம் பாடுதலிலும் வடசொல் விரவாமல் பாடுதலிலும் தமது பிற்காலத்திலிருந்த ஸ்ரீ குமரகுருப ஸ்வாமிகளை ஒப்பர்.

சிருங்கார விஷயங்களைச் சொல்லுவதில் அதி சமர்த்தர்.

தமையனாருக்கும் இவருக்கும் ஒரு சமயத்தில் பகைமை உண்டாகி அப்பால் அது நீங்கிற்றென்றுங் கூறுவர்.

நிம்பை ஈசான தேசிகர்-இவர் பிராமணர். பதத்தி(?) செய்தவரின் பரம்பரையார்.

அதிவீரராமன் பட்டினமென்ற ஒரூர் முத்துப் பேட்டைக்கு மேற்கில் 8 மைல் தூரத்திலுள்ளது. அங்குக் கருங்குளத்தின் கரையிலுள்ள திடரில் முன்பு கோட்டையிருந்த சின்னங்கள் காணப்படுகின்றன.

## 8. அதிமதுரக் கவிராயர்

தமிழ் நாவலர் சரிதத்தால் இவர் காளமேகத்திற்கு நட்புடையவராக நினைக்கப்படுகிறார். இவர் பாட்டுக்களும் அதில் சிலவுண்டு. இவர் சோழநாட்டைச் சார்ந்த திருமலைராயன் பட்டினத்தில் அரசன் அவைக் களத்தில் இருந்தவர். இவர் மாணாக்கர்கள் 64 பேர்கள் தண்டிகை வித்வான்களாக இருந்தார்களாம். இவர் இருந்த இடம் திருமலைராயன் பட்டினத்தின் வட பாகத்திலுள்ள கோவல் என்னுமூரென்று தெரிகின்றது. ஊரிலுள்ள சோளேசுவரமுடையார் கோயிலிலிருந்த ஒரு கல் வெட்டால் அரசன் மாணப்பாடித் திருமலை ராயனென்னும் பெயரை யுடையவனென்று தெரிகின்றது.

## 9. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

"நிழலூர் தேம்பொழி லுழலூர்ப் பதியினன்
மிக்கவே ளாண்குல மேதகு தவமென
இக்கடற் புவியி லெழில்பெற வந்தோன்
கண்ணினு முயர்மனக் கண்ணி னொருவரும்
உண்ணிலா வியற்றமி ழியல்பெலா மகங்கை
யுட்கனி போன்மென வொருங்கினி துணர்ந்தோன்
நட்புறு கலைமக ளடநவி னாவினன
சொல்லுவோர் சொல்வன துகளற நோக்குறின்
ஒல்லுவ சிலபல வொல்லா வெனுமொழி
பிற்பட வுட்பரிந் தற்புற யாவரும்
தேவரும் வியப்ப மூவரும் பொருள்பகர்

கண்ட சுத்தியைக் காணா துரைத்தாங்
கெண்டரு புலவரு ளிதுமுற் பெற்றுளார்
இத்தகை யோன்றா னேயென நுவலும்
அத்தகை நீளிடை யவனியிற் பராவ
ஆனைக் கன்று மணிவள நாடும்
தானப் பெருவளந் தங்கு மீழ
நன்னாட் டரசனின் முன்னாட் பெற்றுள
கவிவீர ராகவ னென்னுங் கவிஞன்"

—புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்

கவிவீரராகவ முதலியாரென்னும் புலவர் தொண்டை மண்டலத்தில் உள்ள உழலூர் என்னும் ஊரில் பரம்பரைச் சைவவேளாளர் குலத்தில் வடுகநாத முதலியாரென்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். இவர் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் வாழ்ந்தவர். இவர் புறக்கண் இல்லாதவர்; பிறவியிலேயே கண் இழந்தவரென்று சிலர் கூறுவர்.

இளமை முதல் தமிழ்க்கல்வியில் இவருக்குள்ள ஆர்வம் அளவிறந்ததாக இருந்தது. அதனால் இவருடைய தந்தையார் இவருக்கு ஏற்ற ஆசிரியர்கள் யார் இருக்கிறார்களென்று ஆராய்ந்தார். அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் பரம்பரைத் தமிழ்ப் புலமை வாய்ந்த பலர் இருந்தனர். கந்தபுராணத்தை இயற்றிய கச்சியப்ப சிவாசாரியாருடைய பரம்பரையிற் பிறந்த கச்சியப்பக் குருக்கள் என்பவர் தமிழ் நூலறிவு மிகுதியாகப் பெற்றிருந்தார். வீரராகவ முதலியார் அவரிடத்திலே சென்று இலக்கண இலக்கியங்களைப் படித்தறிந்தார்.

பிறரைக் கொண்டு படிப்பித்தே இவர் பாடங் கேட்டவரென்று தெரிய வருகின்றது.

தம்முடைய முதுகில் எழுதச் சொல்லி எழுத்துக்களை அவர் கற்றனரென்று பெரியோர் சொல்லுவர்.

புறக்கண்ணால் உலகத்துக் காட்சிகளைக் கண்டு இன்புறும் நிலையில் இவர் இலராயினும் தமிழ்க் கல்வியாகிய கண்ணால் கவியுலகத்தின் இனிய காட்சிகளை உணர்ந்துணர்ந்து இன்புற்றார்.

தமிழ் நூல்களைப் பயின்று வந்த காலத்தில் இவருடைய தெளிவான அறிவிலே மறைந்திருந்த கவித்துவம் சிறிது சிறிதாக அரும்பத் தொடங்கிற்று.

கம்பராமாயணத்தில் முதலியார் மிகவும் ஈடுபட்டார். பெரியபுராணம் முதலிய சைவ நூல்களில் இவர் மனம் அழுந்தியது. பல தல வரலாறுகளை அறிந்து சிவபெருமானுடைய பெருங் கருணைத் திறத்தையும் திருவிளையாடல்களையும் உணர்ந்து வந்தார். இவற்றால் இவர்பால் தமிழறிவும் சிவ பக்தியும் சேர்ந்து முதிர்ச்சி பெற்று வந்தன. இவர் அவ்வப்பொழுது சில செய்யுட்களை இயற்றி வந்தார். கம்பராமாயணம் முதலிய நூல்களிலுள்ள செய்யுட் களைக் கூறி அவற்றின் பொருளைக் கேட்போர் விரும்பும் வண்ணம் சொல்லும் ஆற்றலும் இவருக்கு உண்டாயிற்று. இடையே சங்கீத வித்துவான் ஒருவரிடம் வீணைப் பயிற்சியும் பெற்றார்.

இவ்வளவு திறமையும் ஒருங்கே இவர்பால் அமைந்திருத்தலை யறிந்த அன்பர்கள் நாளடைவில் இவரது பெருமையை உணரத் தலைப்பட்டனர். இவருடைய கவித்துவ சக்தியின் புகழும் பரவத் தொடங்கியது.

இங்ஙனம் இருக்கையில் ஒருநாள் இவர் மனைவி இவரை அவமதித்தமையால் அது பொறாமல் தம் ஊரைவிட்டுப் புறப்பட்டார். பல ஊர்களுக்குச்சென்று அங்கங்கே உள்ள பிரபுக்களாலும் புலவர்களாலும் உபசரிக்கப் பெற்று இலங்கைக்குச் சென்றார்.

அங்கே அக்காலத்தில் ஆட்சி புரிந்து வந்த பரராசசேகரனென்னும் அரசனிடம் தம்முடைய

கவித்திறமையையும் கல்வித்திறமையையும் புலப்படுத்தி யானை, கிராமம், அணிகலங்கள் முதலிய பரிசுகள் பெற்றார். அம்மன்னன் தமிழ்ப் புலமை வாய்ந்தவனாதலின் இக்கவிஞர்பால் பேரன்பும் பெருமதிப்பும் பூண்டு பாராட்டினான். இவர் அவனைச் சிறப்பித்துப் பல கவிகள் இயற்றினார். அவனும் இவரது புலமையைப் பாராட்டிச் சில செய்யுட்களைக் கூறினான். பரராசசேகரன் மீது இவர் ஒரு வண்ணம் பாடினாரென்று தெரிய வருகின்றது.

அப்பால் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தம் ஊர் வந்து சேர்ந்தார். இவர் உழலூரிலிருந்து சென்று பூதூரிற் பலகாலம் வாசம் செய்தார். பொன் விளைந்த களத்தூர் என்னும் ஊரிலும் சிலகாலம் இருந்தார். இதனால் இம்மூன்று ஊர்களையும் இவரோடு சார்த்திக் கூறுவர்.

வண்மையாளர்கள் பலரால் அழைக்கப்பட்டு உபசரிக்கப்பட்டுப் பரிசளிக்கப் பெற்று வாழ்ந்தவரென்றும் அங்ஙனஞ் செல்லுகையில் குதிரையூர்ந்து செல்வது இவருக்கு வழக்கமாக இருந்ததென்றும் தெரிகின்றன. இவ்வழக்கத்தை வெளிச் சேலத்திலிருந்த சிற்றரசனாகிய தாகந் தீர்த்த செழிய தரையன் என்னும் உபகாரியிடம் குதிரை பெற விரும்பி விடுத்த இவருடைய சீட்டுக்கவி விளங்கச் செய்யும்.

அக்காலத்தில் தொண்டை நாட்டில் அரசாங்க அதிகாரியாக இருந்த திம்மைய அப்பையனென்பவருடைய வேண்டுகோளின்படி திருக்கழுக் குன்றத்திற்குரிய வடமொழிப் புராணத்தை இவர் ஆராய்ந்து தமிழ்ச் செய்யுளால் இயற்றினார். பிறகு அத்தல சம்பந்தமாகத் திருக்கழுக் குன்றத்து உலாவையும் இயற்றினார்.

அவ்வப்பொழுது தமிழ்நாடு முழுவதும் இவர் யாத்திரை செய்து அங்கங்கே உள்ளவர்களால்

பாராட்டப் பெற்றார்; உபகாரிகளைக் கவி மாலை புனைந்து புகழ்ந்தும் வந்தார். சிலகாலம் திருவாரூரில் இருந்தனர். அப்போது அத்தலத்திற்கு ஒருலாவை இயற்றினார். திருவாரூருக்கு அருகிலுள்ள கீழ் வேளூரில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் மீது இவர் பாடிய உலாப் பிரபந்தம் ஒன்று உண்டு. கயத்தாறு என்னும் இடத்திற்குச் சென்று தமிழ்ப் புலமை படைத்த அங்கர் அரசனைப் பாராட்டி ஓர் உலாப் பாடினார். அனந்தை யென்னும் இடத்தில் வாழ்ந்திருந்த சந்திர வாணன் மீது ஒரு கோவை இயற்றினார். சேயூர் முருகக் கடவுள் மீது இவர் பாடிய பிள்ளைத் தமிழ் ஒன்று உண்டு. அதில் சேறைக் கவிராச பிள்ளை யென்னும் புலவரை இவர் பாராட்டி இருக்கிறார். சேயூர்த்தல சம்பந்தமாக ஒரு கலம்பகமும் இவர் இயற்றினார். இவரால் பாராட்டப் பெற்றவர்கள்: சேறைக் கவிராச பிள்ளை, பர ராச சிங்கம், அரியிலூர்க் கிருஷ்ணைய மழவராயர், குமார ஒப்பிலாத மழவராயர், ஆஆர்த்தீத்தான், சேலம் தாகந்தீர்த்த செழிய தரையன், அனந்தைச் சந்திர வாணன், மயிலைக் காளத்தி கிருஷ்ணப்பன், திம்மைய அப்பையன், விசயராசனென்னும் அந்தணன், நந்திய மாணிக்க மென்பவராவர்.

இவரைப் பாராட்டியவர்கள்; கச்சியப்ப சிவாசாரியர், பர ராச சிங்கம், நிரஞ்சன நாதர்.

இவர் அவ்வப்போது உபகாரிகளுக்குக் எழுதிய சீட்டுக்கவிகள் பல உண்டு; சிலரைக் குறை கூறிப் பாடிய வசைக்கவிகளும் உண்டு. இவற்றிற் சில தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றன. இவரால் வசை பாடப் பட்டோர்: நாக தேவன், தினகரன், சடையாண்டி.

## 10. அப்பாவையன்

இவர் இயற்றியது தாண்டவ மாலையுரை. இவர் சைன மதத்தினர். திருநயம் அப்பாவையர் என்பவர் வேறு.

## 11. அப்பாவையர் (திருநயம்)

இவர் திருவிளையாடற் கீர்த்தனம் முதலிய வற்றை இயற்றியவர்; பரம்பரையாகத் தமிழ்ப் புலமை வாய்ந்த குடும்பத்தினர்; அடிக்கடி திருசிரபுரம் வந்து செல்வர்.

## 12. அப்புவையங்கார் (வில்லிபுத்தூர்)

இலக்கண இலக்கிய நூல்களில் நல்ல பயிற்சி யுள்ளவர். இவர் சேற்றூர் சமஸ்தானவித்துவான்.

## 13 அம்பலவாண தேசிகர்
(சூரியனார் கோயில்)

அம்பலவாண முனிவர் எனப்பட்டவர் பின்பு சூரியனார் கோயில் ஆதீனகர்த்தாவாக நியமிக்கப் பெற்று அம்பலவாண தேசிகர் என்ற பெயருடன் விளங்கி வந்தார். முதுமைப் பருவமுடைய அவர் ஒரு நாள் பரிவாரங்களுடன் திருவாவடுதுறை மடத்திற்கு விஜயம் செய்திருந்தார். பிள்ளையவர்கள் அவரைப் பற்றியும் அவர்பால் தாம்பாடங் கேட்டதைப் பற்றியும் ஐயரவர்களிடமும், உடன் படித்தவர்க ளிடமும் முன்னரே சொல்லியதுண்டு. ஆதலின் அந்தப் பெரியவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஐயரவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் மிகுதியாக

இருந்தது. திருவாவடுதுறை மடத்தில் ஓரிடத்தில் ஐயரவர்களும் உடன்படிப்பவர் சிலரும் பழைய பாடங்களை வாசித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். கம்பராமாயண அச்சுப்பிரதிகள் ஐயரவர்கள் கையில் இருந்தன. அப்பொழுது அவ்வழியே அம்பலவாண தேசிகர் வந்தார். ஐயரவர்கள் அவரை இன்னாரென்று அறிந்து எழுந்து நின்றார். அவர் புத்தகங்களை வைத்துப் படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து, ''என்ன வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? கையில் இருப்பது என்ன புத்தகம்?'' என்று கேட்டார். ''கம்பராமாயணம்'' என்று விடை கூறினார்கள். உடனே வியப்படைந்து ''அப்படியா! இதைக்கூட 'புக்கு' போட்டு விட்டானா?'' என்று கூறினார். அந்த நூல் அச்சிற் பதிப்பிக்கப்பட்டதற்காக ஆச்சரியப்பட்டனர் என்று ஐயர் முதலானோர் வியந்தனர். உலக இயல்பு அதிகம் அவருக்குத் தெரியாதென்பதையும் சிவபூஜை செய்தல், புத்தகங்களைப் படித்தல் முதலியவற்றில் நல்ல பழக்கமுள்ளவரென்பதையும் பிள்ளையவர்கள் மூலமாக அறிந்திருந்தாராதலின் அப்பொழுது அவர் கூறிய வார்த்தைகள் அவர்களுக்குச் சிரிப்பை உண்டாக்கி விட்டன. அவர் போகும் வரையில் சிரிப்பை அடக்கிக் கொண்டே இருந்து போனபின்பு சிரித்தனர். எல்லாப் புத்தகங்களையும் வெள்ளைக்காரர்களே அச்சிட்டுவிட்டார்கள் என்ற எண்ணம் அவருக்கு இருந்து வந்தது போலும்!

## 14. (அம்பி) அறம் வளர்த்த முதலியார்

அம்பி எயிற்கோட்டத்திலுள்ள ஓரூர். கன்று மேய்த்தானேரி என்று ஒரு பெரிய ஏரி உண்டு. அதில் இவருடைய பசுக்கன்றுகள் தருமத்திற்கு மேய்ந்தனவாம். இவர் கரிகாற் சோழனுடைய மந்திரிகளுள் ஒருவர்.

## 15. அம்பிகாபதி

இப்பெயருடையார் இருவருளர். அவருள் ஒருவர் கம்பருடைய குமாரர்; மற்றொருவர் வீரை கவி ராஜ பண்டிதருடைய குமாரர். கம்பருடைய குமாரராகிய இவர் ஒரு கோவை செய்திருக்கின்றார்; அஃது **அம்பிகாபதிக்கோவை**யென்று வழங்கப்படும். இவருடைய பாடல்கள் தனிப்பாடல் திரட்டிலும், தமிழ் நாவலர் சரிதையிலும் காணப்படுகின்றன.

அம்பிகாபதி என்பது சிவபெருமான் பெயர் ஆதலின் கம்பர் சைவராகவே நினைக்கப்படுகிறார்.

இவருடைய ஊர் கம்பர் ஊராகிய தேரழுந் தூரே. ஊரின் தென் பாகத்தில் கம்பர் மேடென்று வழங்கப்படுகிற இடம் கம்பருடைய வீடு இருந்த இடமென்று தெரிதலின் அவ்விடமே இவருடைய வீடுமென்று தெரிகின்றது.

கம்பராமாயணப் பாயிரத்தில் "நாரணன் விளையாட்டெல்லாம்..." "சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூருவச்சன்" (இப்பாடம் ஏட்டுப் பிரதியிற் கண்டது) என்று கூறப்படுதலின் இவர் உவச்ச வேளாளர் (ஓச்சர்) என்று தெரிகிறது.

**காலம்:** கம்பராமாயணம் அரங்கேற்றிய காலம் மேற்படி நூற்பாயிரத்துள்ள "எண்ணிய சகாப்தம்" என்னும் செய்யுளில் உள்ள "எண்ணூற்றேழு" என்பதினால் வெளிப்படுதலின் இவர் காலமும் அதை அடுத்ததென்று தெரிகிறது.

**உடன் பழகிய புலவர்:** கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியோர்.

**பிரபுக்கள்:** கம்பரிடத்து அன்பு பாராட்டிய சோழன், வெண்ணெய் நல்லூர்ச் சடையன் முதலியோர்கள் இவரிடத்தும் அன்புள்ளவர்களாகவே இருந்திருத்தல் வேண்டும்.

கம்பரிடத்தும், அவரிடங் கல்வி பயின்ற மாணாக்கர்களிடத்தும் இவர் தமிழ் நூல்களைக் கற்று அவர்களுடைய பயிற்சியாலேயே எல்லையற்ற கவித்துவம் இவருக்கு உண்டாயிருத்தல் வேண்டுமென்றே தோற்றுகின்றது.

இவர் இயற்றிய கோவையில் நூற்றலைவராக ஒருவரையும், மற்றவர்கள் இயற்றிய கோவைகளிற் போல கூறாமையால் இவர் செல்வவான்கள் ஒருவரையும் மதியாதிருந்தனர் என்றே தெரிகின்றது.

இவர் அக்கோவையையன்றி வேறு நூல் எதுவும் செய்ததாகத் தற்காலத்தில் தெரியவில்லை.

இவர் அவ்வச் சமயத்துச் செய்தனவாகிய தனிப் பாடல்களும், ஒட்டக் கூத்தரும் இவரும் செய்ததாக ஒரு செய்யுளும் தமிழ் நாவலர் சரித்திரத்திலும், தனிப்பாடற் றிரட்டிலும் காணப்படுகின்றன.

இவருடைய கோவையைப் போன்ற சிறந்த நடையுள்ள நூல் தமிழ் மொழியிலேயே இல்லையென்று சொல்லலாம். இவர் நூலை நோக்குங்கால் எட்டுத் தொகைப் பாக்களின் கருத்தும், பதினெண் கீழ்க் கணக்கைச் சார்ந்த ஐந்திணை ஐம்பது முதலிய நூல்களில் உள்ள செய்யுட்களின் கருத்தும், திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய நூல்களின் கருத்தும் இவர் கருத்தில் நிறைந்திருந்தனவென்று தெள்ளிதிற்புலப்படும். ''மாதவி பெற்ற மணிமேகலை'' யென்று அந்நூலில் இவர்கூறி இருத்தலின், இவருக்குச்

சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் விசேட ஞாபகம் இருந்ததென்பது வெளியாகின்றது.

இந்நூல் ஐந்திணைக் கோவையே. நாற்கவி ராச நம்பி அகப்பொருளுக்கு இலக்கியமாக உள்ள தஞ்சை வாணன் கோவையில் இடையிடையே இந்நூற் செய்யுட்கள் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டிருப்ப தன்றி **இலக்கண விளக்கம்** அகத்திணையியலிலும் இடையிடையே உதாரணங்களாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. இலக்கண விளக்க நூலாசிரியர் இந் நூலிலுள்ள சில செய்யுட்களின் கருத்துக்களையே முக்கியமாகத் தழுவிச் சில துறைகளை அந்நூலில் நூதனமாக அமைத்தாரென்று தெரிகின்றது. இவர் கோவையிலுள்ள செய்யுட்கள் குறைந்தும், கூடியும், பிறழ்ந்தும் பலவாறாக இத்தமிழ் நாட்டில் ஆங்காங்கு வழங்குகின்றன.

இவர் சிற்றின்பத்தில் மிக்க பிரீதியைஉடையவர் என்றும், சில சமயத்தில் கம்பரைக் கூட மதியாமல் சில மாணவர்களோடும், சில தோழன்மார்களோடும் தனியே உலாவித் திரிந்தவர் என்றும் முதியோர் சொல்லக் கேள்வி யுண்டு.

இவர் அரசனால் வெட்டுண்டிறந்த காலத்தில் பிரிவாற்றாது மனங்கலங்கிக் கம்பர் சொன்னதாக ''மட்டுப் படாக் கொங்கை'' என்னும் செய்யுளொன்று வழங்குகின்றது.

இன்னும், இவர் செய்யுள் நடையைப் பார்க்குங் கால், மிக்க இரக்கம் உடையவர் என்று தோன்று கிறது.

## 16. அமரம் பேடு மதுரகவிராயர்

அமரம்பேடென்பது தொண்டை நாட்டில் உள்ளதோர் ஊர். இவர் இயற்றிய நூல் திருக்கச்சூர் நொண்டி நாடகம். திருக்கச்சூர் என்பது தொண்டை நாட்டுச் சிவஸ்தலங்களுள் ஒன்று; தேவாரம் பெற்றது. செங்கற்பட்டுக்கு அருகில் உள்ளது.

நொண்டி நாடகம் என்பது நாடகத்தமிழ் நூல்களில் ஒன்று.

## 17. அமித சாகரனார்

இவர் சைன மதத்தினர். காரிகை நூலாசிரியர். காரிகை நூலை நோக்கின், இவருடைய கல்விப் பெருமை நன்கு புலப்படும். காரிகை நூல் உரையின் முதலில் "ஆரியமென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப் படுத்திய அருந்தத்துவப் பெருந்தகைமை அமித சாகரரென்னும் ஆசிரியர்" என்று மேற்படி நூலுரையாசிரியராகிய குணசாகரர் எழுதியிருப்பதைக் கொண்டு இவர் வடமொழியிலும் மிக்க பயிற்சியுடையவர் என்பதும், துறவறத்தினர் என்பதும், வட நூலிற் காரிகை யென்று ஒரு நூல் செய்திருக்கின்றனர் என்பதும் வெளியாவதன்றி யாப்பருங்கலம் முதலிய தமிழ் யாப்பு நூல்கள் பல வற்றிலும், வடமொழி, கன்னடம் முதலிய பிற பாஷை நூல்களிலும் மிக்க பயிற்சியை உடையவர் என்பதும் காரிகை நூலில் இவர் நூதனமாக அமைத்துள்ள சில பகுதியை நோக்குங்கால் பிறருக்கு அஞ்சாத மனவலிமையை உடையவர் என்பதும் வெளியாகின்றன.

"காரிகை படித்துக் கவிசொல்வதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று" என்று ஒரு பழமொழி வழங்குகின்றது.

பழைய மிகப் பரந்த இலக்கண நூல்களின் பரப்பைத் தொகுத்துக் கூறுவதில் பவணந்தி முனிவரையும், நேமிநாத நூலாசிரியரையும் பிறரையும் ஒப்பர்.

## 18. அரங்கநாதக் கவிராயர்

இவர் சேக்கிழார் பரம்பரையோர் அட்டாவதானம் (குன்றத்தூர்) சொக்கநாத முதலியாருடைய பேரர். இவரும் அஷ்டாவதானியே. இவர் பாரதத்தில் சௌப்திக பர்வத்திற்கு மேலுள்ள எட்டுப் பர்வமும் பாடித் துறையூரில் (துறைசை) சிவப்பிரகாச சுவாமிகள் மிகவும் மகிழ்ச்சியடையுமாறும், சபையினர் புகழுமாறும் அரங்கேற்றினார். சௌப்திக பருவத்தின் பிற்பாதி முதல் சொர்க்கர்ரோகணப் பருவம் வரை மகாபாரதம் முழுவதையும் தமிழில் பாடும்படி இவரிடம் விண்ணப்பித்துக் கொண்ட கோட்டூர்ச் சிற்றரசராகிய திருமலை ரெட்டியார் என்னும் ஜமீன்தார் காலம் சகாப்தம் முதலியன அதிற் சொல்லப் பட்டுள்ளது. இந்நூல் சாரதி பர்வமென்றே வழங்கி வருகின்றது.

### அரவங் குறிச்சி சொக்கலிங்கக் கவிராயர்

இவர் வரலாற்றை வெண்பாப்புலிக்கவிராயர் பெயரிற் காண்க.

## 19. அரன் வாயில் வேங்கட சுப்புப்பிள்ளை

அரன்வாயிலென்பது தொண்டை நாட்டில் உள்ளதோர் ஊர். இவர் சைவ மதத்தினர். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பால் வந்து ஆதரிக்கப்பெற்று முறையாகப் பாடங்கேட்டு நல்ல தமிழ்ப் பயிற்சியையும் செய்யுள் செய்யும் ஆற்றலையும் அடைந்து சென்று

புகழ் பெற்று விளங்கினார். இவர் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்ட செய்தி வேதநாயகம் பிள்ளைக்கு ஒரு முறை இவர் எழுதிய கீழ்க்கண்ட பாடலால் விளங்கும்.

மீனாட்சிசுந்தரனா மேலோன் சிரகிரியில்
தானாட்சி யாவாழ் தருணத்தே-தேனாட்சிச்
செந்தமிழ வன்பாற் சிறிதுணர்ந்தேன் மன்னவித்தாற்
பந்தமெனக் குண்டேயுன் பால்.

## 20. அரியிலூர்ச் சண்பகமன்னார்

இவர் தென்கலை வைஷ்ணவப் பிராமணர். இவர் இயற்றிய நூல்கள் திருக்குடந்தைச்சாரங்கபாணி நொண்டி நாடகம் முதலியன. இவர் வடமொழியிலும், தெலுங்கிலும், ஸங்கீதத்திலும் நல்ல பயிற்சியுடையவர். அரியிலூர் ஜமீன்தாராகிய மழவராயரிடத்தில் ஆஸ்தான பண்டிதராக இருந்தவர். மூன்று பாஷைகளிலும் பற்பல கீர்த்தனங்கள் செய்திருக்கின்றனர். அத்வைத சாஸ்திரத்தில் அதி பரிச்சயம் உடையவர். இவருடைய மாணாக்கர்கள் மிகப் பலர். அவர்கள் காவிரியின் வடக்கேயுள்ள ஊர்கள் பலவற்றிலும் அத்வைத ஆசிரியராகப் பரம்பரையாக இன்றும் உள்ளனர். சாத்துவிக குணமே மேலிட்டவராக இவரை அறிந்தோர் சொல்லுவார்கள். சண்பக மன்னார் என்பது இவருடைய பரம்பரைப் பெயர்; இவருடைய இயற்பெயர் ஸ்ரீநிவாஸையங்கார் என்பது.

இவருக்கு ஐயாவையங்கார் என்றும், சீனிவாசையங்கார் என்றும் இரண்டு புத்திரர்கள் உள்ளனர். இருவரும் தமிழிலும், இசையிலும் நல்ல பயிற்சியுடையவர்கள்.

ஜமீன்தார் மழவராயர் மீது நவராத்திரி நாடகம் என்றொரு நூல் இயற்றியிருக்கின்றனர். இவருடைய

முன்னோர்கள் சோழநாட்டில் சண்பகாரணியம் என்று கூறப்படுவதாகிய இராசமன்னார் கோயிலில் இராசமன்னாருக்குக் கைங்கரியம் செய்து கொண்டிருந் தார் என்றும், அதனால் இளமைப் பருவத்திலேதானே விரைந்து பாடுந் திறமையை அடைந்தார் என்றும், அதனால் அவருக்கும் அவர் பரம்பரையோர்களுக்கும் சண்பக மன்னார் என்பதும், பாலகவி என்பதும், பால சரசுவதி என்பதும் சிறப்புப் பெயர்களாக அமைந்தன என்றும், அவர்கள் சைவ வைஷ்ணவ மதங்களை ஒப்பாக எண்ணியிருந்தவர்கள் என்றும் பெரியோர்கள் சொல்லக் கேள்வி. இவர்களுடைய முன்னோர்களிற் பலர் பற்பல இசைத்தமிழ் நூல்கள் செய்திருக்கின்றனர். இவருடைய பரம்பரையோர் மேற்படி அரியிலூரில் பெருமாள் கோவில் சந்நிதித் தெருவில் வடசிறகில் மேற்கிலிருந்து எண்ணும் முறையில் இரண்டாவதாகிய வீடு முதலியவற்றில் இருக்கின்றார்கள். இவரையும், இவர் பரம்பரையோர் களையும் எடுத்துச் சொன்னால் அந்நாடு முழுவதும் நன்கு மதிக்கும். இவருடைய மாணாக்கர்களுள் ஒருவராகிய ஆறுமுகப் பரதேசியார் என்பவர் சோழ நாட்டில் பசுபதி கோவிலில் சாலைக்கருகே மணல் மேட்டில் பலருக்கும் பயன்படும் வண்ணம் குளம் வெட்டுவித்துச் சோலைகள் வைப்பித்துச் சத்திரங் கட்டி அவ்விடத்தில் தமது சிஷ்ய பரம்பரையையும் உண்டாக்கி வருஷந்தோறும் இவருக்கு குருபூஜையும் நடத்தி வந்தனர்.

இவர் இயற்றிய நூல்கள்:

சிவராத்திரி நாடகம் — கஸ்தூரி ஐயங்கார்
அரியில் சிலேடை வெண்பா—சடகோப ஐயங்கார்
இராமாயண வண்ணம் — ,,
இராமாயணச் சிந்து — ,,
சீவப்பிரம ஐக்கிய சரித்திரம்— ,,
பஞ்சாயத்து மாலை — ,,

## 21. அருணகிரிநாதர் (புலவர் புராணப்படி)

அருணகிரியார்

பூர்வ புண்ணியச் சருக்கம்

பொதியின் மலையிலிருந்த அகத்திய முனிவர் முன்னொரு காலம் உலகத்தியல் காணக் கருதிப் பல நகரும் சென்று மீண்டு பொதியிலுக் கேகினார்; அங்ஙனம் போகும் பொழுது தம்பால் அன்பு பூண்டு பின் தொடர்ந்து வந்த ஒரு நாய்க்குட்டியை நோக் குற்றுக் கருணை கூர்ந்து அதனைத் தாம் இருக்கு மிடத்துக்கு அழைத்துச் சென்றனர். சென்று அந்நாய்க் குருளையை வளர்த்து வரும் நாளில் அட்டமாசித்தி வல்லான் ஒருவன் குறு முனிவரிடஞ் சென்று செருக் கினால் வாது கூறத் தொடங்கினான், அவனுக்குத் தாம் விடை கூறாமல், அருகு இருந்த நாயைக் கடைக் கணித் தருளலும், இஞ்ஞமலி தமிழில் பாடத் தொடங் கிற்று. அதுகண்ட சித்தன் அஞ்சி வணங்கி யகன் றனன்; பின்னர் குறுமுனிவர் அந்நாயை நோக்கி நினக்கு விருப்பம் என்னவென இந்திரனாக விரும்பி னேன் என, அவ்வண்ணமே வரமளித்தனர். அவ்வரத் தைப் பெற்று இந்திரனாகத் தோன்றி அநேக நாள் இன்புற்று ஈற்றில் பாண்டவரில் அருச்சுனனாய்ப் பிறந்து, அவ்வருச்சுனனே மீண்டும் கண்ணப்ப நாயனார் ஆகிச் சிவனை ஆறுநாள் பூசித்து ஏழா நாட் கயிலை சென்றனர். சிறிது நாள் கயிலையில் தங்கி நக்கீர தேவராக வந்தவதரித்தனர். நக்கீர தேவர் கடைச் சங்கத்திலிருந்து அப்பிறவி நீங்கிய பின்னர் பொய்யா மொழியாகப் பிறந்தனர்; குமாரக்கடவுள் அப்பொய்யாமொழியார் கனவில் தோன்றி என்னைப் பாடுகவெனப் பாடாதொழிந்தனர். பின்னர் வறுமை மேலீட்டால் வாணன் கோவை பாடிப் பரிசு பெற்றனர்; ஒரு பொழுது தம் மனைவியோடு ஒரு பாலை நிலத்தின் வழியே செல்லும்போது முருகக்

கடவுள் வேடன் வடிவத்தோடு சென்று எதிரே தடுத்துத் தன்னைப் பாடும்படி கட்டளையிட அங்ஙனம்பாடினர்; பாண்டியன் காணச் சங்கப்பலகை தோன்றுதல் முதலிய அற்புதங்களைச் செய்தனர். பிறகு கயிலை புகுந்தனர்.

**இரண்டாவது** திரு வவதாரச் சருக்கம்: புகார் நகரத்து உதித்த பட்டினத் தடிகள் துறவு பூண்டு பல சிவ ஸ்தலங்களுஞ் சென்று சேவித்து அருணையம்பதி புகுந்தனர். அங்கு ஒரு பரத்தையைக் கண்டு காமித்து, அவள் பால் அருள் வைத்தவளவிலே அவள் கருவுற்றனள். அவள் வயிற்றில் பொய்யாமொழிப் புலவர் ஒரு புத்திரனாகத் திருவவதாரஞ் செய்தருளினார். பட்டினத் தடிகளும் திருவொற்றியூரடைந்து முத்தி பெற்றனர்.

**மூன்றாவது** மாயா வினோதச் சருக்கம்: பிறந்த குழந்தைக்கு ஒரு பிராயத்தில் அருணகிரியென நாமகரணஞ் செய்தனர்; மூன்றாவது வயதில் பாட்டி இறந்தனள். அருணகிரியாரைப் பள்ளியில் அமர்த்த, மறுத்து வீடு வரலானார். ஒருநாள் தாய் கனவில் குமரவேள் போந்து இன்று முதல் அருணகிரி என் மகனென்று போயினார். அருணகிரியாருக்கு ஏழாவது வயதில் தாய்க்கு மரணகாலம் சமீபித்தலும் தனது மகளைக் கூய் அருணகிரியார் தோற்றம் முதலியவற்றை விரித்துக் கூறி விட்டு விண்ணுலகெய்தினள். அருணகிரியாருக்குப் பதினாறுவயதாயிற்று. அப்போது அவர் மிக்க காமுகனாகி தமக்கையார் தரு பொருளையெல்லாம் தாசிக்கே கொடுத்தழித்ததன்றி வீடு முதலியவற்றையும் விற்று அழித்தனர்; ஒருநாள் தமக்கையார் சொன்ன கடுஞ்சொல்லுக் கஞ்சி அருணைக் கோபுரத்தேறி வீழ்ந்திறப் பேனெனத் துணிவு பூண்டு அங்ஙனம் ஏறி வீழ்ந்தபொழுது கடவுளால் காக்கப்பட்டு உபதேசமும் பெற்றனர். அப்பால் அவர் மெய்யிலுள்ள குட்ட நோய் நீங்கிற்று.

**நான்காவது** அருட் பேற்றுச் சருக்கம்: முருகவேள் கருணையினால் தமிழில் செய்யுள் செய்யத் தொடங்கி ஆயிரந்திருப்புகழ் பாடியருளினார். 32 வகுப்புப் பாடியருளினர். பின்னர் குகக் பெருமான் நனவிற்றோன்றி உண்மைப் பொருளுரைக்கக் கொண் டனர். வேல்விருத்தம், மயில்விருத்தம் இயற்றி யருளினர். பழமலைக் கீழ் பால் ஒரு குகை திருத்த மாக்கி அவ்விடத்திற்கு அடிக்கடி சென்று மீண்டனர். பின்னர் தலயாத்திரை செய்யத் தொடங்கினர். திருச்செந்தூர் சென்றனர். அங்கே தாம் பாடிய திருப்புகழ் முற்ற அரங்கேற்றினர். தாம்பாடிய திருப்புகழ் கடல் கொண்டு போயிற்று. அதனால் வருத்தமுற்றுக் கடவுள் தேற்றத் தேறி இலஞ்சியம்பதி சென்று மீண்டு அருணாசலத்தை யடைந்தனர்; பிரபுட தேவனென்னும் அரசன் வந்து கேட்ட வினாவிற்கு விடையளித்தனர்.

## ஐந்தாவது ஸ்ரீவில்லிபுத்தூராழ்வார் கலகச் சருக்கம்

பாண்டிய நாட்டில் வில்லிபுத்தூர் எனும் பதியில் தோன்றிய வில்லிபுத்தூர் ஆழ்வார் கொங்க மன்னவன் வேண்டலிற் பாரதம் பாடிப் பலவிருது பெற்று இறுமாப்புப் பெற்று அருணகிரியாருடன் எதிர்த்துத் தோல்வியுற்றனர்.

**ஆறாவது** சம்பந்தாண்டான் விகாதச் சருக்கம்: ஆருகத மதப்பற்றுடையோனான சம்பந்தாண்டான் தேவி உபாசனையிற் செருக்கெய்தி அரசன்பால் சென்று அருணகிரியாரை அவமதித்துத் தெய்வத் திறமை காட்டும்படி சொல்ல, அப்படி இருவரும் இரண்டு தினத்தில் தாங்கள் தாங்கள் கொண்ட தெய்வங்களை வெளியிற் றோன்றச் செய்வதாக உடன் பட்டு அதிற் சம்பந்தாண்டான் தோற்ப அருண கிரியார் வென்று அரசனைத் தம்வயமாக்கித் திருப் பணிபுரியும்படி கட்டளையிட்டனர். மீண்டும் சம்பந்

தாண்டான் அருணகிரியாரோடு தருக்கித்து கற்பக மலர் கொணரச் சொல்ல அப்படியே இன்னதினம் தருவேனெனக் கூறியருளினர்.

**ஏழாவது** பாரிசாதச் சருக்கம்: கூறிய தினத்தில் தம் சரீரத்தைத் தாமிருக்கும் இடத்தில் வைத்துவிட்டு ஒரு கிளி வடிவமெடுத்துத் தேவருலகு சென்றனர். அதனையறிந்த சம்பந்தாண்டான் அரசனிடம் வந்து அருணகிரியார் இறந்தனர் என்று கூறி ஏகினன். அரசன் சென்று சரீரம் இருப்பக் கண்டு அதனைத் தகனம் செய்வித்தனன். அருணகிரியார் தேவருலகு சென்று இந்திரனால் தொழுப்பட்டு அமுத மருந்திக் கற்பக மலரும் கையேந்திப் பிரபுட தேவனிடம் வந்து அதனை யளித்தருளினார். அரசன் கண்டு நடுங்கித் தான் செய்த காரியத்திற்கிரங்கிச் சம்பந்தாண் டானைக் கொல்லப்புகக் கிளி வடிவமாகிய அருண கிரியார் தடுத்தனர். பின்னர் அவன் உபாசனைத் தெய்வமே அவனைக் கொன்றது.

**எட்டாவது** கிளி வாழ்க்கைச் சருக்கம்: அருண கிரியார் கிளிவடிவமாகவே இருந்து கந்தரநுபூதி, கந்தரலங்காரம் முதலாயின செய்தனர். பின்னர் மேற்றிசையில் உள்ள சிவகிரிக்குச்சென்றனர். அங்குக் கிளி வடிவத்தோடு முருகக் கடவுளைப்பாட அவர் அருகில் அழைத்துக் கொண்டனர்.

**ஒன்பதாவது** கோபுரச் சருக்கம்: திருத் தணிகைச் சந்நிதி முறை, சேவற்பத்து, உலா 14, 28,

திருவிடைக் கழிப்புராணம் பாயிரம் 11-ஆம் பாட்டில் பொய்யாமொழியாரே அருணகிரியாராகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திருத்தணிகை முதலிய இடங்களில் இவருடைய திருவுருவம் பிரதிஷ்டை செய்வித்துப் பூசிக்கப் பெற்று வருகிறது.

உலகில் முக்கியமான சுப்ரமணிய ஸ்தலங்கள் இவராற் பாடப்பெற்றுள்ளன.

இவர் இயற்றிய நூல்கள்.

திருப்புகழ் 16,000
கந்தரந்தாதி
கந்தரலங்காரம்
கந்தரநுபூதி

வகுப்புக்களில் சில. இவர்காலத்துப் புலவர் ஸ்ரீ வில்லிபுத்தூரர்.

## 22. அருணாசல ஐயர்

இவர், ஞான வாசிட்டத்துக்கு பிறையாற்று அருணாசல சுவாமிகள் செய்த உரையைப் பாராட்டிச் உரைச் சிறப்புப் பாயிரம் பாடியவர் என்றும் தெரிகிறது.

## 23. அருணாசலப் புலவர்

இவர் காளமேகப் புலவரின் மாணவரென்றும், திருவாரூர்த் தியாகராசப் பள்ளும், தியாகராசக் குறவஞ்சியும் இவரால் செய்யப்பட்டன என்றும் சொல்லுவர்.

## 24. அருணாசல முனி

இவர் தருக்க சங்கிரக தீபிகையென்னும் தருக்க வசன நூலொன்று தமிழில் செய்தவர். நூல் வசன நடையாக உள்ளது. தருக்க சங்கிரக விருத்தியென்றும் கூறப்படும் நூலிலுள்ள சிறப்புப்பாயிரச்செய்யுள் இது.

விருத்தம்

நையாயிக வைசேடிக மதநூனெறி ஞாலத்
தெய்யாதுத மிழ்ப்பாலர்க ளெளிதிற் பொருளுணர
உய்யாவகை நூலும்மத னுரையும்முறை செய்தான்
ஐயாறடை யாமானத னருணாசல முனியே.

## 25. அவிநய நூலுரையாசிரியர்

"இந்தப் பத்தெச்சமும்
புவிபுகழ் புலமை யவிநயநூலுட்
டண்டலங் கிழவன் தகைவரு நேமி
யெண்டிசை நிறை பெயரிராசப் பவித்திரப்
பல்லவ தலரயன் பகர்ச்சி" (நன்னூல், சூ. 35, உரை)

என்று **மயிலைநாதர்** எழுதியிருப்பதிலிருந்து அவிநய நூலின் உரையாசிரியர் பெயர் வெளியாகின்றது.

## 26. அவிநாசி முத்துச்சாமிப்புலவர்

இவர் சங்கர நயினார் கோயிலைச் சார்ந்த வாசுதேவ நல்லூரில் ஏறக்குறைய 130 வருடங்களுக்கு முன்பிருந்தவர்.

## 27. அவிரோதி நாதர்

இவர் ஜைனர்; அவிரோதி நாத ஆழ்வார் என்றும் வழங்கப்படுவர்; இவருடைய ஊர் மயிலாப்பூர். சொற்சுவை பொருட் சுவையிற் சிறந்த **திரு நூற்றந்தாதி** என்னும் ஜைனப் பிரபந்தமொன்று இவராற் செய்யப்பட்டுள்ளது.

அந்த நூலை ஆராய்ந்து பார்ப்பின் ஜைன நூல்கள் பலவற்றிலும் இவர் அதிபரிச்சயம் உடையவரென்பது புலப்படும். வடமொழியிலும் இவர் பரிச்சயம் உடையவரென்றும் அதனால் தெரிகிறது.

## 28. அழகு முத்துப் புலவர்

இவர் நாகப் பட்டினத்தில் (நாகை) சற்றேறக் குறைய 200 வருடங்களுக்கு முன் இருந்தவர்; சுப்ர மணியப் பிரஸாதி யென்று சொல்லப் படுவர்.

இவர் செய்த நூல்கள்:

1. மெய்கண்ட வேலாயுத சதகம்
2. திருப்புகழ்
3. மெய்கண்ட வேலாயுத உலா

இவை நாகை நீலலோசனி பத்திராதிபர் சதாசிவப் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப் பட்டன.

## 29. அளகைச் சம்பந்த முனிவர்

இவர் திருவாரூர்ப் புராணமாகிய 2929 செய்யுட்கள் அமைந்த நாகரகாண்டத்தைத் தமிழிற் பாடியவர். நூலின் பாயிரத்துள்ள நாதனார் கமலா லயம் என்னும் செய்யுளாலும் "பார்புகழ்" என்னும் செய்யுளாலும் இவருடைய ஊர் அளகை (தஞ்சாவூர்) யென்றும், இவர் வணிகரென்றும், திருவாரூர்ப் புராணத்தை அரங்கேற்றிய இடம் திருவாரூர்த் தேவாசிரய மென்னும் சரவணம் (ஆயிரக்கால் மண்டபம்) என்றும், அரங்கேற்றியகாலம் சகாப்தம் 1514-ஆம் வருஷமாகிய பிங்கலவென்றும் தெரிகிறது. இதனால் இவர் 307 ஆண்டுகளுக்கு முன்பிருந்தவர் என்று சொல்லலாம். நூற் பாயிரத்துள்ள "உரு நிரம்பு" என்னும் 22 ஆம் செய்யுளால் இவர் சேது புராணம் செய்த நிரம்ப வழகிய தேசிகருடைய மாணாக்கரென்று தெரிகிறது. இவரைப் பற்றிய சரித்திரம் நூல் அச்சுப் புத்தகத்தின் முன்னே எழுதியிருக்கிறார்கள்; நாட்டுக்கோட்டை வணிகரென்று தெரிகின்றது.

## 30. அறிவானந்தர்

இவர் கும்பகோணத்தைச் சார்ந்த வலங்கை மீகாமன் (வலங்கிமான்) என்னும் ஊரிலிருந்தவர். இவர் 326 கட்டளைக்கலித்துறைப் பாக்களாலாகிய அறிவானந்த சித்தியார் என்னும் நூலை இயற்றியவர்.

### கலித்துறை

குறையா வடிவுடைக் கோமளவல்லி குடியிருந்த
மறையா கமத்தை வலங்கைமீ காமனில் வாழ்ந்திருந்தே
அறிவான்தன் னுரைஅறி வானந்தசித்தி யதனை யென்றும்
நெறியாக் கற்றுணர் வார்க்குப் பரிசது நிச்சயமே.

## 31· ஆண்டான் கவிராயர்

இவர் பாண்டி நாட்டிலுள்ள ஓட்டைப் பிடாரத்திற் பிறந்தவர். இவர் காலம் 180 ஆண்டுகட்கு முன்னர் என்பர். இவர் சிச்சிலிச் சோழியர்; வைஷ்ணவர். தந்தையார் பெயர் வைகுந்தநாதர். அவர் ஊரிலுள்ள உலகம்மையின் அருள்பெற்றுப் பாடத் தொடங்கியவர். இவர் ஆழ்வார் திருநகரிக் கோயிலில் விநியோகம் வாங்கப் போன பொழுது சொல்லிய

சேலடி பட்டு வராலுக ளும்குரு கூரிற்சென்று
மாலடி போற்றி வினியோகம் வாங்க வணங்கி நின்றேன்
வேலடி பட்டது போலே கதவடை யானைவிட்டுத்
தோலடி சாதிப்பர் வேண்டாமென் றாலுந் துரத்தி வந்தே"

கதவடையான் - சாத்தாதவன்

ஒரு சமயம் தாதனொருவன் இவரைப் பொடி கேட்ட பொழுது இவர் **போதாதா** என்றாராம்.

ஒரு சமயத்தில் யாரோ ஒருவர் இழிவுக் குறிப்பாக எச்சிக்கலை யெடுப்பவனல்லவா என்ற பொழுது எச் சிக்கலையும் எடுப்பேன் என்றாராம்.

ஆறுமுக மங்கலத்துக் காம்ராருவர் போனாலுஞ்
சோறுகொண்டு போங் கோள் சொன்னேன் சொன்னேன்
ஆற்றோடே போனாலு மாத்தூரோடு போகாதே

என்ற தொடர்களெல்லாம் இவர் சொன்னவை என்பர். இவர் காலத்தில் இருந்தவர் சிந்துக் களஞ்சியப் புலவர். அவர் ஏறி வந்த பல்லக்கில் அவர் இல்லாத

சமயத்தில் இவர் ஏறினர் என்றும், அது பற்றி அவர் சில பாடல் சொன்னதுண்டென்றும், இவர் பிரதி சொன்னாரென்றும் கேள்வி.

இவர் சாபானுக்கிரகசக்தி உடையவர் என்பர். ஆண்டான் கவிராயர் விலைக்கு வாங்கிய குதிரை சரியாக நடவாதபொழுது சொல்லியது.

என்னைச் சுமக்க வறியாய் சுமக்கு மியல்பறியாய்
பொன்னைப் பறித்துக் கொடுத்தா யொருகட்டுப்
புல்லுந்தின்பாய்
பின்னைச் சவுக்கடிக் கஞ்சா யடிக்கடி பேண்டுகொள்வாய்
உன்னைக் குதிரையென் றேபடைத்தான் மல ருள்ளவனே.

இவர் வறுமையினால் மிக்க வருத்தமடைந்து கொண்டிருந்த பொழுது தமது தகப்பனார் "சருக்கரை வேண்டும் சருக்கரை வேண்டும்" என்று அலட்டிய காலத்தில் பாடிய செய்யுள்:

"நக்கத் தவிடற் றுடுக்கச்சீ லையுமற்றிந் நாட்டிலுள்ளே
எக்கப்ப டும்பஞ்ச காலத்தி லேயுள் ளறிவுகெட்டுச்
சிக்கையில் வைகுந்த நாதா சவலைச் சிறுபிள்ளைபோற்
சர்க்கரை சர்க்கரை யென்றே சிணுங்கத் தலைப்பட்டையே!

இவர் சொக்கப் பழங்கரை யென்னு மூருக்குப் போன போது அவ்வூரார் தம்மை உபசரியாதது பற்றிப் பாடிய செய்யுள்:

காருக்குத் தீய்ந்துவிருவ் கார்போய்ப் பிசாசம்வரி
லூருக்குள் வெள்ளமெடுத் தோடுமே பாருக்குள்
ஆற்றுக் கடுத்தவூர்க் கரையி னின்றவூர்
சோற்றுக் கலந்தவூர் சொக்கப்பழங் கரையே."

"சுருக் கவிழ்ந்த" என்பது இவர் செய்த செய்யுளே. இதில் "உசனப் பிரமன் போட்டானே" என்பது பாடம்.

ஆண்டு கொண்டான் ஆண்டான் கவிராயரென்றும் இவர் கூறப்படுவர். ஆண்டு கொண்டானென்பது திருநெல்வேலியைச் சார்ந்த தோரூர். இவருடைய சரித்திரம் விரிவாகத் **தண்டபாணிப் பரதேசியார்** செய்த புலவர் புராணத்தில் உள்ளது.

ஒருவரையுமே மதியாது வசை பாடுதலையே நியமமாகக் கொண்டவராதலின் வசைகவி ஆண்டா னென்றும் கூறப்படுவார்.

தனிப் பாடல்களாகவும் சிலபாடல்கள் இவர் செய்தனவாக வழங்குகின்றன. இவர் இயற்றிய செய்யுட்களுள் ஒன்று வருமாறு:

காளை நகர்கண்டேன் கன்மவினை யைத்தொலைத்தேன்
ஆனைமடு விற்றீர்த்த மாடினேன்—ஞானம்
பொருந்தினேன் காளீசர் பொற்றா மரையில்
வருந்தினேன் பெற்றேன் வரம்.

காளைநகர்-**காளை**யார் கோயில்

## 32. ஆண்டு கொண்டான் கவிராயர்

இவரது இயற்பெயர் சுப்பிரமணியக் கவிராயர். இவரது ஊர் இராமநாதபுரம் மாவட்டத்துச் சிவ கங்கையைச் சார்ந்த ஆண்டுகொண்டான் ஆதலின் ஆண்டு கொண்டான் கவிராயரென்று வழங்கப் பெறுவர். இவர் முகவையில் (இராமநாதபுரத்தில்) முன்னமிருந்த பழைய கோட்டைச் சாமித்தேவர் மீது **திருமணக் குறவஞ்சி** என்னும் குறவஞ்சி நாடகமொன்று செய்திருக்கின்றார்.

## 33. ஆதி வாயிலார்

இவர் இசை நாடகத் தமிழ் நூலாசிரியர்களுள் ஒருவர். இவரியற்றிய நூல் பரதசேனாபதீயம். இது சிலப்பதிகாரவுரையில் இசை நாடகப் பகுதிகட்கு மேற்கோள்களாக அடியார்க்கு நல்லார் கைக்கொண்ட ஐந்து நூல்களுள் ஒன்று. உரையில் நூற்பெயர்க் குறிப்புடன் காட்டப்பட்டிருக்கும் இந்நூற்பாக்கள் எல்லாம் வெண்பாவாகவே இருத்தலின் இது வெண் பாவால் ஆக்கப்பட்ட நூலென்று தெரிகிறது.

## 34. ஆயதோத்தாரணர்

இவருடைய ஊர் மருதூரென்று வழங்குகிற நயினார் கோயில். இந்த ஊரிலுள்ள நாகநாதசுவாமி மீது இவர் தொள்ளாயிரம் கண்ணிகளைக் கொண்டதான **நாகநாத சுவாமி பூகோள விலாசம்** என்னும் நூலொன்று இயற்றியிருக்கின்றனர். இந்நூல் அச்சானது. இவர் பரம்பரையோர் இன்றும் நயினார் கோயில் ஸ்தலத்தில் இருக்கின்றனர் என்றும் ஐயரவர்கள் குறித்துள்ளார்கள்.

## 35. ஆவுடை நாத நாவலர்

தம்பிப் பட்டி முத்துவேலுக் கவிராயர் பாடிய "புனிதமாகு" என்னும் பாடலில் உள்ளார். மருத பாண்டியன் காலத்தவர். நல்ல வாக்கி.

நல்வாக்கி ஆவுடை நாத நாவலனென்றும் (புனிதமிகு)

## 36. ஆழ்வார் திருநகரி அண்ணா வையங்கார் ஸ்வாமி

இவர் உபய வேதாந்த வித்வான்; பலருக்குப் பகவத் விஷய கால க்ஷேபம் செய்து வைத்தவர்.

## 37. ஆழ்வார் திருநகர் அப்பன்ஜீயர்

திருமாலிருஞ்சோலை மலையிலும் மதுரையிலும் இவர் இருந்து நாலாயிரத் திவ்யப்பிரபந்த காலட்சேபஞ் செய்தவர்; கூடலழகர் சந்நிதியில் நம்பிள்ளை சக்கரவர்த்தி சந்நிதி கட்டுவித்தவர்.

## 38. ஆழ்வார் திருநகரிச் சடையன் கவிராயர்

இவர் செய்த நூல்: **மாற னலங் காரம்.**

ஆழ்வார் திருநகரி என்பது திருநெல்வேலிக்குக் கிழக்கேயுள்ளது; சடகோபாழ்வார் அவதரித்த தலம்.

இவருடைய ஆசிரியர் ஸ்ரீநிவாஸ கவிராயர் என்பவர்; அவரிடம் தொல்காப்பியம் முழுவதும் படித்தவர்; சீரக மாலையை யுடையவர்; வணிகர்; திருக்குருக்கைப் பெருமாள் கவிராயரென்பது இவருடைய மரபினர் பொதுப் பெயர்; இவை நூலின் முதலிலுள்ள "உலகம் யாவையு முறுபயன் விளைப்பான்" என்னும் சிறப்புப் பாயிரத்தால் விளங்குகின்றன. இந்நூலுக்கு உரை செய்தவரான காரிரத்தின கவிராய ரென்பவர் இவருடைய மாணாக்கர். இந்நூலுரைச் சிறப்புப் பாயிரமாகிய "தருகாள மேகங் கவிராச ராசன் சடையன் பாற்—குருகாபுரேசர் புனையலங்காரம்" என்பதனால் இவருடைய சிறப்பு விளங்குகின்றது.

## 39. ஆழ்வார் சுப்பிரமணிய தீட்சிதர்

இவரியற்றிய நூல் தமிழ்ப் பிரயோக விவேகம். இவர் காலத்தவர்கள்:—திருவாவடுதுறை சாமிநாத தேசிகரும், திருவாரூர் வைத்தியநாத தேசிகரும். இவர் காலத்தில் வடமொழி வியாகரணத்திற் சிறந்தவராக இராமபத்திர தீக்ஷிதரென்பவர் இருந்தாரென்றும் அவர் இவருடைய நூலை அங்கீகரித்தாரென்றும், பாடல்களால் தெரிகின்றது. (விவேக சிந்தாமணியைப் பார்க்க.) இந்நூலையும் இதன் உரையையும் உற்று நோக்கும் இடத்து தமிழ் மொழியில் உள்ள இலக்கண நூல்களிலும் வடமொழியில் உள்ள இலக்கண நூல்களிலும் பழக்கமுடையவராக நினைக்கப்படுகிறார். மேற்கூறிய பிரயோக விவேகத்தின் உரையாசிரியரும் இவரே. இது இலக்கணக் கொத்துப் பாயிரத்துள்ள "நூல் செய்தவன் அந்நூற்கு" என்னும் சூத்திரத்தாற் புலப்படுகின்றது. இவர் சூத்திரம் போதாயனம்; ஸ்மார்த்தப் பிராமணர்: இவர் பரம்பரையினர் இப்பொழுதும் இருந்து வருகிறார்கள்.

## 40. ஆழ்வார் திருநகரித் திருக்குருகைப் பெருமாள் கவிராயர்

இவருடைய ஊர் ஆழ்வார் திருநகரி. இவர் திருவரங்க யமக வந்தாதிக்கு அரிய வுரையொன்று செய்திருக்கின்றனர். இதனால் இவர் வெண் மணிப் பிள்ளைப் பெருமாள் ஐயங்காருடைய காலத்திற்குப் பிந்திய காலத்தினரென்று தெரிகின்றது. திருக் குருகைப் பெருமாள் என்பது ஆழ்வார் திருநகரி யிலுள்ள பெருமானின் பெயர்.

பெருமாள் கோவில் கவிராயருடைய பரம்பரை யினராதலின் இவருக்கு இப்பெயர் வைக்கப்பட்டது.

இடம் ஊரிலுள்ள பெருமாள் கோயிலின் கீழை வீதியிலுள்ள கீழ்ச்சிறகு வீடு. மதம் வைஷ்ணவம்.

இவர் தமது வீட்டிலுள்ள முன்னோர்க ளிடத்தே படித்திருத்தல் வேண்டும்.

இயற்றியது திருவரங்கத்து யமக வந்தாதியுரை. உரைநயத்தை யுற்று நோக்குங்கால் தமிழிலக்கணம் ஐந்திலும் மிக்க பயிற்சியுடையவரென்றும் வைணவ சமய நூல்களிலும் பாண்டித்திய முடையவரென்றும் எண்ணப்படுகிறார்.

இவருடைய முன்னோர்கள் ஒல்வொருவரும் சிறந்த தமிழ் நூல்கள் இயற்றிப் புகழ் பெற்றவர்களாக இருத்தலின் இவருடைய பரம்பரைப் பெருமை சொல்ல வேண்டுவதில்லை.

## 41. ஆளவந்த பிள்ளையாசிரியர்

இவர் ஓர் உரை ஆசிரியர்; இவர் நச்சினார்க் கினியருடைய காலத்திற்கு முன்பிருந்தவர். இதனைப் பத்துப்பாட்டு மலைபடுகடாத்தில் 'தீயினன்ன

வொண் செங்காந்தள்' என்பது ஆனந்தக் குற்றமுள்ள தென்று இவர் கூறியிருப்பதாக நச்சினார்க்கினியர் அங்கே எழுதியிருத்தலின் இவர் ஏதோ ஒரு நூலுக்கு உரை செய்திருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. அஃது இலக்கண நூலோ இலக்கிய நூலோ ஒன்றும் விளங்கவில்லை.

ஆளவந்தார் என்று வேம்பத்தூர்க் கவிஞர்களில் ஒருவருக்கும் வைணவ மதாசாரியரொருவருக்கும் பெயருண்டு. அவர்கள் வேறு; இவர் வேறு.

## 42. ஆறெழுத்தானந்த சுவாமிகள்

இவருடைய இயற்பெயர் முதலியன ஒன்றுந் தெரியவில்லை. இவர் **சகலாகம சாரக் கட்டளை**யென்று ஒரு நூல் இயற்றியிருக்கின்றார். அடியிற் குறித்த நூல்களை யாராய்ந்து இவர் இந்நூலியற்றி யிருப்பதாகத் தெரிகின்றது.

1. சிவஞான போதம் 2. திருமந்திரம் 3. சிவ வாக்கியம் 4. சிவஞான சித்தியார் 5. சிவப் பிரகாசம் 6. தத்துவப் பிரகாசம் 7. சிவஞான தீபம் 8. ஞான நெறி விளக்கம் 9. உண்மை விளக்கம் 10. உண்மை நெறி விளக்கம் 11. அருண் ஞான சாரம் 12. சிவானந்த மாலை 13. ஞான மணி மாலை 14. சிற்றம்பல நாடிக் கட்டளை 15. பஞ்சாக்கரக் கட்டளை 16. உண்மைக் கட்டளை 17. அட்டமா சித்திக் கட்டளை 18. சர சாத்திரம் 19. வயித்திய சாத்திரம் 20. வேதாந்தத்தில் மகா வாக்கியக் கட்டளை 21. தத்துவமசி மகாவாக்கியக் கட்டளை 22. வேதாந்த சாரம் 23. விவேக சிந்து 24. சிந்தாமணி 25. பகவத் கீதை 26. **புராணத்தில்** சிதம்பரபுராணம் 27. கோயிற்புராணம் 28. பெரிய புராணம் 29. வாதவூர் புராணம்.

## 43. ஆறைத் திருவேங்கடம் பிள்ளை

ஆறை—ஆற்றங்கரை ஜமீன்; இது திருநெல்வேலியைச் சார்ந்தது.

## 44. ஆறைத் தெய்வச் சிலையா பிள்ளை

இவர் பூவைசிய குலத்தினர். இவரது தந்தையின் பெயர் இராமநாதன் என்பது. தமிழில் இனிய செய்யுட்களைப் பாடுவதில் திறமை வாய்ந்த இவர் திருமாலின் திருவருளைப் பெற்றவர்; மகாபாரதப் பிரசங்கம் செய்வதில் வல்லவர். இவர் இயற்றிய நூல் **மநு நீதிக் காதல்.**

## 45. ஆனந்தக் கூத்தர்

இவர் பாண்டி நாட்டில் திருநெல்வேலி ஜில்லா தாம்பிரபர்ணி நதிக்கரையிலுள்ள வீரவநல்லூரில் பிறந்தவர். நல்லாசிரியரிடத்தே சிறந்த இலக்கியங்களையும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் முறையே கற்றுச் சிந்தித்துத் தெளிந்தவராகி அவராலும், மற்றையோராலும் பயிற்சி செய்விக்கப் பெற்றுச் செய்யுள் செய்தலிலும் வல்லுநரானார். சைவ நூல்களிலும் நல்ல பாண்டித்தியமுடையவர். இவருடைய ஞானாசிரியரது பெயர் **சத்திய ஞானி** அல்லது **சத்தியஞான தேசிகர்** என்பது. பாபநாச க்ஷேத்திரத்தின் தமிழ்ப்புராண நூலாசிரியருடைய ஞானாசிரியர் பெயரும் சத்தியஞானி என்று காணப் படுகின்றது; அவரும் இவரும் ஒருவரோ வேறோ விளங்கவில்லை.

இவர் தலயாத்திரை செய்து கொண்டு திருக் காளத்தியையடைந்து பொன்முகரியில் நீராடிக் காலந் தோறும் சுவாமி தரிசனம் செய்பவராய்ச் சிலநாள் தங்கி, அங்கே செந்தமிழ்ப் பயிற்சியும், சிவநேசச்

செல்வமும் வாய்ந்த பெரியார்களோடு அளவளாவி வருங்காலத்தில் இவருடைய கல்வித்திறத்தையும் இனிய செய்யுள் இயற்றும் வன்மையையும் அறிந்த அவர்கள் "**திருக்காளத்திப் புராணத்தைத்** தமிழில் செய்யுள் நடையாக இயற்றுக" என்றுகூற, அவர்கள் சொல்லைச் சிரமேற்கொண்டு இவர் அங்ஙனமே இயற்றி அவர்களை மகிழ்வித்தார்.

இவருக்கு வடநூலை மொழி பெயர்த்தளித் தவர் விரவநல்லூரிலிருந்த பௌராணிகராகிய **சங்கர நாராயணர்** என்னும் அந்தணர்.

இவருடைய செய்யுளின் இனிமையையறிந்த அக்காலத்துப் பெரியோர்களால் இவர் அடைந்த சிறப்புப்பெயர் **பரிமளகவிராயர்** என்பது.

பொருனைநதி யுவட்டெறியுந் தமிழ்நாட்டி
　　லளகைநகர் பொருவும் வீரைக்
குரிசில்பரி மளகவிரா சன்றமிழ்தே
　　ரானந்தக் கூத்தன் விண்ணோர்
பரவுமியற் காசிதனில் வாசமா
　　யகிலேசன் பாதம் பெற்றோன்
சுருதிபுகழ் காளத்திப் புராணத்தைச்
　　செந்தமிழாற் சொன்னா னன்றோ.

திருக்காளத்திப் புராணக்கதைகளை அங்கங்கே எடுத் தாண்டிருப்பதும், பழைய நூல்களின் சிறந்த கருத்துக் களை உரிய இடங்களில் அழகாக அமைத்திருப்பதும், வேறு தல புராணக் கதைகளை திருக்காளத்திப் புராணத்தில் எடுத்தாளுவதும் திருக்காளத்தி நாதரு டைய மகிமையையும், தலமகிமையையும், பேறு பெற்றோருடைய அருஞ்செயல்களையும் மனமுருகிப் பாடிக்கொண்டு செல்லுதலும்' பிறவும் ஆகிய இவற்றை உற்றுநோக்குகையில் இவருடைய இயற் பெயரும் சிறப்புப் பெயரும் இவருக்குத்தகும் எனலாம்,

ஸ்ரீகாசியிலேனும் திருக்காளத்தியிலேனும் ஒரு நாள் நியமத்துடன் தங்கிச் சுவாமி தரிசனம் செய்பவர்களுக்குக் கலியின் பீடை நீங்குமென்றும், அவர்களுக்குப் பிறவிப்பிணி தீருமென்றும் திருக்காளத்திப் புராணம் தெரிவித்தலை அறிந்த இவர் இங்கு வசித்ததுபோலவே ஸ்ரீகாசியிலும் வசிக்க வேண்டுமென்றெண்ணி அங்கே சென்று சிலநாள் நியமத்தோடிருந்து சிவபதம் அடைந்தார்.

இவரைப்பற்றி மேற்கொண்டறிய ஆதாரம் கிடைக்கவில்லை. இவர் இயற்றிய புராணம்:- திருக்காளத்திப் புராணம்.

(திருக்காளத்திப் புராணம் ஐயரவர்கள் முகவுரை)

## 46. இந்திரகாளியார்

இவர் பொருத்த இலக்கணத்தையும் பிரபந்த இலக்கணத்தையும் தெரிவிக்கும்நூலான இந்திரகாளியமென்ற நூலை இயற்றியவர்.

## 47. இம்முடி நல்லதம்பிக் காங்கேயர்

இம்முடிக் காங்கேயப் பட்டம் பெற்றவர். திருச்செங்கோட்டிற்கு வடக்கே மூன்று மைலிலுள்ளதான மோகூரிலிருக்கும் கொங்கு வேளாளரின் தலைவராகிய இம்முடி நல்ல தம்பிக் காங்கேயரென்பவர். இவர் திருச்செங்கோட்டின் ஆலயத்தைப் புதுப்பித்துப் பின்னுள்ள நூல்களை ஆக்குவித்தும் விளங்கியவர்.

1. தக்கராமாயணம் 2. திருச்செங்கோட்டுச் சதகம் 3. திருச்செங்கோட்டு வெண்பாவந்தாதி 4. திருச்செங்கோட்டுப் பள்ளு 5. மோகூர்ப்பள்ளு 6. மோகூர்க் குறவஞ்சி 7. திருச்செங்கோட்டுக் கோவை 8. திருச்செங்கோட்டு முருகர் பிள்ளைத் தமிழ் 9. திருச்செங்கோட்டு வருக்கக் கோவை 10. திருச்செங்கோட்டுக் குறவஞ்சி (ஸ்வாமி விஜயம்)

**11. மோசூர் பாம்பலங்காரர் வருக்கக் கோவை (ஸ்வாமி பெயர்)**

இவரைப் பற்றிய செய்தி திருச்செங்கோட்டுச் சிலா சாசனங்களிலும் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையிலும் உள்ளன. திருச்செங்கோட்டில் திருப்பணி செய்தோர்கள் வரலாறு திருப்பணிமாலையில் அடங்கியுள்ளது. இவர் பரம்பரையில் முன்னமிருந்த இம்முடி சூரிய காங்கேய ரென்பவர் பாண்டியன் விரோதியான ஆறைவாணனை அடக்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர். இவருடைய சந்ததியார்களே திருச்செங்கோட்டிற்கு அருகிலுள்ள கொங்கராயன் பேட்டையிலிருப்பவர்கள்; ஆறைவாணன் ஆறை ஏகம்பவாணன் எனப்படுவன்.

வெண்பாவாலமைந்ததான உரிச்சொல் நிகண்டின் ஆசிரியராகிய இம்முடிக் காங்கேய ரென்பவர் இவர் பரம்பரையினராக இருத்தல் வேண்டும்.

## 48. இயற்றமிழாசிரியர் அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார்

இவர் கம்பராமாயணத்தில் 4, 5-ஆம் காண்டங்களை வசனமாக எழுதியவர். கி. பி. 1864. பால காண்டச் சிறப்புப்பாயிரம் கி. பி. 1861.

## 49. இரட்டையர்

ஆங்கூர். பு. த: ௬௬௯

இரட்டையர் பாடியது. இப்பெயர் ஓங்கூர் என்றும் அவ்வூர் விழுப்புரத்திற்குச் சமீபத்திலுள்ளதென்றும் கூறுகின்றனர்.

(தென்திருப்பேரை அ. கிருஷ்ணையங்கார் சொல்லியது.)

**இரட்டையர்:-** இவர்கள் ஓரரசனிடம் போன போது அவன் உங்களுக்கு என்ன தெரியுமென்று கேட்க, இவர்கள் கண்டும் பாடுவோம். காணாமலும் பாடுவோம் என்றார்கள். உடனே அவன் தன்னைச் சூழத் திரைச்சீலையை வளைவித்துக் கையில் வில்லைப் பிடித்துக் கொண்டிருந்த பொழுது ஒருவர் அவரை இராமனாகவும், அவன் வில்லைக் கீழே போட்டு விட்டுக் கம்பளம் ஒன்றைப் போர்த்துக் கொண்டும் கோலொன்றைப் பிடித்துக் கொண்டும் நின்ற பொழுது மற்றொருவர் அவனைக் கண்ண னாகவும் சொல்லிய பாடல்.

வாலியு மரங்க ளேழும் வலியதோ ரரக்கர் மாதர்
தாலியும் பொடியதாகத் தடஞ்சிலை பிடித்த கையும்
பீலியுங் கன்றுந் தாம்புங் குழைகளுந் தொங்கியாடக்
காலியின் புறத்தே சென்ற கோலமுங் கண்கொளாவே.

அந்தகக் கவிவீரராகவ முதலியாரைப் பற்றியும் இம்மாதிரியான சரித்திரங் கூறுவதுண்டு.

பு—தனி, ருது, கசஅ.

இவர் செய்த நூல்கள்:

1. தில்லைக் கலம்பகம்
2. திருக்காளத்தியுலா
3. திருக்கச்சி ஏகாம்பரநாதர் உலா
4. ஆமாத்தூர்க் கலம்பகம்
5. இசையாயிரம்

இவர் பிறந்தவூர் சோழநாட்டில் இலந்துறை என்று சோழ மண்டல சதகம் 58 ஆம் பாட்டால் தெரிகிறது.

இவர்கள் இருவரும் முதுசூரியர், இளஞ்சூரியர் என்று வழங்கப் படுவர்; (தமிழ் நா) திருவக்கைக் கோங்கராயனையும் பல்லவர்களுள் ஒருவனாகிய ஏகாம்பர சம்புவையும் இவர்கள் பாடியிருக்கின்றனர்.

இவர்கள் சரித்திரம், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், தமிழ் நாவலர் சரித்திரம் இவைகளிற் சொல்லப்படுகின்றது. "அத்த திருவாலங்காட்டு" என்பது இவர்கள் பாடியவற்றுள் ஒன்று.

## 50. இராச கேசரி

பு. தனி. அக

இவர் ரகுவம்சம் செய்தவர். இவர் சரிதச் சுருக்கம். அப்புத்தகத்தின் முதலில் எழுதப்பட்டுள்ளது.

## 51. இராசைவரதர்

இவர் சாதியில் மறையவர். **பரமஞான விளக்கம்** என்பதோர் சைவநூல் இவராற் செய்யப்பட்டுள்ளது. அதைப் புலப்படுத்தும் பாயிரச் செய்யுள் இது.

வளங்கெழு மிராசை வாழு மறையவன் வரதன் சொன்ன
விளங்கிய பரம ஞான விளக்கினை விரும்பிக் கற்றோர்
துளங்கிய பிறவி நீங்கிச் சோதியாம் பரத்தைத் துன்னிக்
களங்கமின் முத்தி யின்பங் காதலாற் காண்பர் சென்றே.

இராசை: இராசவல்லிபுரம்: திருநெல்வேலிக்குக் கிழக்கேயுள்ளது.

## 52. இராதா நல்லூர் நமச்சிவாயபிள்ளை

இவ்வூர் திருவெண் காட்டிற்குத் தென்மேற்கில் நான்கு கல்லிலுள்ளது. இவர் எல்லப்ப நாவலருடைய பரம்பரையினர்.

## 53. இராமநாதபுரம் அண்ணாமலைப்பிள்ளை

இவர் ஒரு பிரபு. இராமநாதபுரத்தில் மந்திரியாக இருந்தவர். ஒருதுறைக் கோவை செய்த அமிர்த

கவிராயர் இவ்வூர்க்கு வந்து துயில் புரிகையில் அவருடைய காலைச் சிறிதுநேரம் வருடி விழித்தெழுந்து அவரால் மிகவும் பாராட்டப்பட்டுச் "சிரிலகுமல்" என்னும் முதற்குறிப்பையுடைய இரட்டையாசிரிய விருத்தமொன்று செய்யப் பெற்றவர்.

## 54. இராமநாதபுரம் சுப்பிராய வாத்தியார்

இவர் கன்னட அந்தணர்; அரண்மனை வாத்தியார். செங்நெல்குடி சாமிக்குட்டி ஐயரவர்கள் என்றும் இவர் பெயர் வழங்கும். தர்ப்பசயனத்துப் பெருமாள்மீது இவர் பாடிய வெண்பா ஒன்று உளது.

இவர் விஷ்ணு புராணத்தைத் தமிழிற் செய்தவர்; பல பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். அவை இராமநாத வண்ணம் முதலியனவாம்.

## 55. இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை (1)

இவர் திருவாவடுதுறைச் சிவஞான முனிவருடைய மாணாக்கர் பன்னிருவரில் ஒருவர். இராமானுஜ கவிராயர், தேவிபட்டணம் முத்துசாமிப் பிள்ளை முதலியோர் இவருடைய மாணாக்கர்களென்று தெரிகின்றது. இவர்மீது நடுவெழுத்தலங்காரமாகத் தேவிபட்டணம்முத்துசாமிப்பிள்ளையால் பாடப்பட்டதான "கண்ணன்றாய்" என்னும் நடுவெழுத்தலங்கார வெண்பா வொன்றுண்டு. இவரைப் பற்றிய துதிகவிகள் வேறு சிலவும் உள்ளன. இவர் பலநூல்கள் செய்திருப்பதாகத் தெரிகிறது. அவற்றுள் கிடைத்திருப்பவை திருப்போரூர்க் கோவையும், திருக்கழுக்குன்றக் கோவையும்.

இவர் மாணாக்கர் எண்மர் என்பர்.

1. சரவணப் பெருமாள் கவிராயர்

2. இராமலிங்கக் குருக்களின் பாட்டனார். இவர் துறைசையில் நடுவெழுத்தலங்காரமொன்று பாடினர்.

3. **வைரவலிங்கம் பிள்ளை:-** இவர் பரம்பக்குடி வக்கீல் ஐயாத்துரைப் பிள்ளையின் பாட்டனார்: இவரூர் பாஞ்சாலக் குறிச்சி.

4. தேவிபட்டணம் முத்துசாமிப்பிள்ளை

5. இராமானுஜ கவிராயர்

மற்றைய மூவர் பெயர் தெரியவில்லை.

சோமசுந்தரம் பிள்ளையின் பௌத்திரருடைய புத்திரர் பரம்பக்குடி டிஸ்டிரிக் முனிசீப் கோர்ட்டில் தலைமை குமாஸ்தா; பெயர் பெத்தையாப் பிள்ளை என்பது. இவருடைய தம்பி பெயர் சோமசுந்தரம் பிள்ளை என்பது. இவர் முகவையில் பிரதானி வேலையிலிருந்தார்.

## 56. இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை (2)

இவர் இவ்வூரில் வனசங்கரியம்மன் கோயில் தெருவிலிருந்தவர்; ஸமஸ்தான வக்கீல்; துறைசைச் சிவஞான முனிவர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர்; இவர் பேரர் முத்துசாமிப் பிள்ளையென்ற ஒருவர் முகவையில் அதே தெருவிலும், இவர் பரம்பரையோர் பேரையூரிலும் இருக்கிறார்கள்.

இவர் செய்த நூல்கள்:

1. திருக்கழுக் குன்றக் கோவை

2. திருப்போரூர்க் கோவை

இவர் மாணாக்கர் தேவிபட்டிணம் முத்துசாமிப் பிள்ளை

## 7. இராமநாதபுரம் பஞ்சவர்ணம் பிள்ளை

இவர் இயற்றிய நூல் சித்திர புத்திர நாயனார் புராணம்.

## 58. இராமநாதபுரம் முத்துச்சுவாமி ஐயங்கார்

இவர் தமிழிலக்கண இலக்கியங்களில் நல்ல பாண்டித்திய முடையவர். அஷ்டாவதானஞ்செய்பவர்; இவராற் செய்யப்பட்ட சில பிரபந்தங்களும், தனிப் பாடல்களும் உள்ளன. இவருடைய சகோதரியின் புத்திரரே இராமநாதபுர சமஸ்தான வித்வானாகவும் சிறந்த தமிழறிஞராகவும் இருந்த ரா. இராகவையங்கார்.

இவருடைய மாணாக்கர் பாண்டித்துரைச் சாமித்தேவர் முதலியோர். இவருடைய தமையனார் வித்துவான் கிருஷ்ணையங்கார். இவருடைய புத்திரரே மு. இராகவ ஐயங்கார். தமிழில் நல்ல பயிற்சியுடையவர். இவருடைய சரித்திரம் "மணவாள மாமுனி நூற்றந்தாதிப் பதிப்பின்" முதலில் எழுதப் பட்டுள்ளது.

## 59. இராமநாதபுரம் முத்துவீரப் பிள்ளை

இராமநாதபுர சமஸ்தானப் பிரதானியாக இருந்தவர். இராச தந்திரம், யஜமான விசுவாசம், குடிகளிடத்தன்பு, வித்வத் பக்ஷபாதம், சிவபக்தி முதலியன இவர் மாட்டிருந்த சிறந்த குணங்கள். இந்த சமஸ்தானத்தில் இரவும் பகலும் அன்னதானம் செய்யப்படும். பல சத்திரங்களும் பல ஆலயங்களின் ஜீர்ணோத்தாரணங்களும் செய்வித்தவர். இராமேசுவரத்தில் உள்ள பணிகளுள் பெரும்பாலும் இவருடையனவே யென்பர். ஸேது சமஸ்தான முழுமையும்

நிலங்களைச் சர்வே செய்து அவ்வூர்களிலுள்ள கோயில், சத்திர முதலியவற்றின் வாயினிலைகளே மேற்கூறிய நிலங்களின் அளவுகோலின் அளவாக ஏற்பாடு செய்தனராம். இவரைப் பற்றிப் புகழா தாரில்லை.

இவர் மீது 'முத்திருளப்பக் கோவை' என்று ஒரு நூலிருப்பதாகக் கேள்வி. தனிப்பாடல்கள் பல.

## 60. இராமாநுச கவிராயர்

இவரது ஊர் முகவை என்னும் இராமநாதபுரம். ஸ்ரீமத் சங்கராசாரியர் செய்த ஆத்மபோதம் என்னும் அத்வைத வடநூலைத் தமிழில் வசனமாகப் பெயர்த்தெழுதியிருக்கிறார். இது பதிப்பிக்கப்பட்டுள்ளது. பின்னுள்ள வாக்கியம் மேற்படி புத்தகத்தினிறுதியிலிருந்தது.

> "முத்தமிழ்க்கடற்சேண் முழுவதுங் கடந்து அத்வைத
> தத்துவ மெலாந் துரீ இயுணர்ந்த—"
> சோமசுந்தரனெனுந் தொல்லாசிரியன்
> நாம மந்திர மென நவின் மாணாக்கன்
> தரங்கநீர் முகவையந் தண்பதி யதனுள்
> இரங்கையன் மாதவத் தெய்திய தோன்றல்
> இயற்றமிழாசிரியன் இராமானுசன் செய்த மொழி
> பெயர்ப்பு முற்றிற்று

இவர் இயற்றமிழாசிரியர் என்றுங் கூறப்படுவர். இவர் கவரைச் சாதியார்.

சமயம் வைணவம். சில வருடங்களுக்கு முன் சென்னையிலிருந்த திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர், விசாகப் பெருமாள் ஐயர் என்னும் இருவரும் இவரிடத்தே கல்வி பயின்றார்கள்.

இவருடைய ஆசிரியர் இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை என்பவர். இது பல புத்தகங்

களிலும் இவரால் செய்யப்பட்டு அமைந்துள்ள துதிகளால் நன்கு விளங்கும். இலக்கணத்திற் கூரிய பயிற்சியுடையவர். நன்னூலுக்குப் பழைய வுரைகளை அநுசரித்துத் தொல்காப்பியக் கருத்துக்களை அவ்வவ்விடங்களில் விளங்கப் புலப்படுத்தி ஒருரை செய்து பதிப்பித்து வெளிப்படுத்தி இருக்கிறார். அப்புத்தகம் இராமாநுச காண்டிகை என்றும் ஐங்காண்டிகை என்றும் வழங்கப்படும்

திருக்குறள் பரிமேலழகர் உரை.........வது அதிகாரம் வரையில்......வருஷத்தில் இவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறளுக்கு அதுவரையில் இவர் பதவுரையும் எழுதிச் சேர்த்திருக்கிறார். பரிமேலழகர் உரையிலுள்ள கடின பதங்களுக்கு அங்கங்கே பொருளும் எழுதியிருக்கிறார். ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் இரண்டிற்கும் உரையெழுதி இருப்பதோடு ஒவ்வொரு வாக்கியங்களின் பின்னும் அந்தஅந்த வாக்கியங்களின் பொருளமைந்தகுறளொவ்வொன்று இவரால் சேர்க்கப்பட்டுள்ளன. தன் மாணாக்கராகிய சரவணப் பெருமாளையராதியாராலும், மகாலிங்கையராலும் உதாசீனம் செய்யப்பட்டமையின், மனம் வேறுபட்டு அவர்கள் பதிப்பித்த நூல்களையெல்லாம் இவரும் பதிப்பித்தனரென்பார்கள். ஒரு சமயம் மஹாசபையொன்றில்— ''இவ்வூரில் இலக்கண விதையை விதைத்தவன் யானே'' என்று சென்னையில் இவர் உபந்யாசம் செய்ததாகவும் சொல்லுவார்கள். மொத்தத்திற்குத் தமிழ் மொழியை அபிவிருத்தி செய்த மகாபண்டிதர்களுள் இவர் ஒருவரென்று சொல்லத் தடையில்லை. இவர் வின்ஸ்லோ அகராதி பதிப்பிக்கும்பொழுது உடனிருந்து சகாயஞ் செய்தவர்களுள் ஒருவர். இவர் பரிசோதித்தும் உரையெழுதியும் பதிப்பித்த நூல்களிற் சில.

திருக்குறள் பரிமேலழகருரை—
பதிப்பித்த வருஷம் 1840, 1852
நன்னூல் விருத்தியுரை " 1845
கொன்றை வேந்தன் " 1847
இலக்கணச் சுருக்கம் " 1848
ஆத்திசூடி, வெற்றிவேற்கை "

இவர் சங்கராசாரியர் பேரில் பாடிய பாடல்களுள் ஒன்று.

பூந்தா மரையெனினும் போழுமால் வல்லிருளைக்
காந்துகதிர் ஞானவொளி கான்றாங்கு—நாந்தொழவே
துங்கரா காதியவன் றொல்பிறவி நோயகற்றுஞ்
சங்கரா சாரியன்பொற் றாள்.

## 61. இராமானுஜபுரம் தாண்டவராயப் பிள்ளை

இவர் கவித்தலம் வேலை. பிதா சிவப்பிரகாசருடைய மாணாக்கர். இராமானுஜபுரம் கவித்தலத்திற்குக் கிழக்கேயுள்ளது. இவர் செய்ததனிப்பாடல்கள் பல. நூல்கள்:-

1. சிவ தத்துவ விளக்கம். இது 50 விருத்தங்களாலாகியது.

2. திருவேரக வந்தாதி—யமகம் திரிபில் பிழைகள் உள. 100 பாடல்கள்.

சிவதத்துவ விளக்கத்திலுள்ள வணக்கச் செய்யுட்களுளொன்று.

முந்திமெய்ஞ் ஞான சிவப்பிரகாச
முதல்வனன் றெனக்குரைத் ததையான்
.........கடந்த. சிவதத்துவத்தின்
விளக்கமென் றிட்டுரைப் பதற்கு
புந்திதந் தருளுந் தெய்வமீநாக்ஷி
சுந்தரக் குரவன்சேவடிகள்
அந்தியும் பகலும் பரவியெ னுளமா
மாலயந் தனிலிருத் தினனே.

## 62. இருங்குன்றம் வேதகிரிநாயகர்

ஞானவாசிட்டச் சிறப்புப் பாயிரம் அளித்தவர்.

## 63. இருஞ்சிறை நிலமேகக் கவிராயர்

(இருஞ்சிறை—ஓரூர்— மானாமதுரைக்குத் தெற்கே 8 மைலிலுள்ளது. பார்த்திப னூர்க்கு மேற்கே 3 மைலிலுள்ளது.)

மதம்—சைவம்; சுத்த சைவ மன்று—துரை ராஜா அவர்களாகிய முத்துராமலிங்க சேதுபதி யவர்கள் காலத்திருந்தவர்; இவர் 40-வயது வரையி லிருந்தார். இவர் செய்த நூல்கள் பல. இவர் தனிப் பாடல்கள் பலவும் செய்துள்ளார். பரமக் குடியில் வக்கீல் சோமசுந்தரம் பிள்ளையவர்களின் பேரில் பாடியது.

வண்டார்ந்த கூந்தல் மனையாட்டிக் கஞ்சும் மடையரெனும்
சண்டாள னுத்தர்கள் தம்மீது செந்தமிழ்ச் சாற்றி லென்னாம்
தண்டா மரைப்புய னாம்சோம சுந்தரத் தன்மனமும்
கண்டாற் கவடி கவடியென் றோடுங் கலிப்புவியே.

(கவடி கவடி யென்பது சிறுவர் மூச்சடக்கியோடும் ஒலிக்குறிப்பு)

பரமக்குடியில் குமாஸ்தாவாயிருந்து பின் சப் ஜட்ஜாய் இருந்த கனகசபை முதலியார் அவர்கள் பேரிலியற்றியது.

பானுவைக்கண் டலர்கின்ற மலரைப் போலும்
பசுங்குழவி தாய்முகத்தைப் பார்த்தாற் போலும்
கானகத்தில் மழைகண்ட பயிரைப் போலும்
கன்னிதனை மதன்கூடிக் கலந்தாற் போலும்
ஜானகியைக் கண்டனுமான் மகிழ்ந்தாற் போலும்
தரித்திரவான் புதையல்கண்ட தன்மை போலும்
தேன்கனிவாய்க் கனகசபை சிவந்தே யுன்றன்
றிருமுகத்தைக் கண்டுகளி சிறந்திட் டேனே.

சோமசுந்தரம் பிள்ளையவர்கள் பேரில் (கூறை).

கோலா கலனங்கள் மா. ராம நாதன் குமாரனென்னும்
நாலா கலையு மறிந்த வனாமிக்க நாகரிகன்
மேலாம் பரம்பைத் துரைசோம சுந்தர வேந்தனிரு
காலால் முடித்ததைக் கையால் வீழ்ப்பது கக்குசமே.

(கக்குசம்—கஷ்டம் என்னும் பொருளை உணர்த்தும் சொல். இராமநாதபுரத்தில் வழங்குவது,) பரம்பை—பரம்பக்குடி,

## 64. இலக்கண முத்துக்கவிராயர்

சிவஞானபுரத்தைச் (எட்டையபுரம்) சார்ந்த ஊரான பொன்மய புரத்திலிருந்தார். இவர் சோழ வந்தான் சின்னிமடம் சாமியாரிடம் படித்தவர்.

தமிழ்ப் புலவர் வரிசை 14 ஆம் புத்தகத்தில் இவரது ஊர் பொம்மையாபுரமென்றும், சோழ வந்தான் சின்னிமடம் என்பது கிண்ணிமடமென்றும், உள்ளன.

## 65. இலம்பூர் வீரநாத பண்டிதர்

இவர் திருவாவடுதுறைச் சுப்பிரமணிய முனிவ ரென்றுங் கூறப்படுவர். இவர் செய்தது கடம்பவனப் புராணம்.

இலம்பூர்—இலம்பையங் கோட்டூர். இது திருவள்ளூருக்குத் தெற்கேயுள்ளது. இவர் தொண்டை நாட்டு வேளாளர்.

## 66. இறும்பூதூர்த் தத்துவராயர்

வீரசைவர். இவர் இயற்றியவை ஈசுவரகீதை, பிரம கீதை, பாடுதுறை முதலியவைகளும். அஞ்ஞவதைப் பரணி முதலான பிரபந்தங்களும். எல்லாம் உபநிடதப் பொருள்களை விளக்கி இருப்பதோடு ஆசிரியருடைய

துதிகளாகவேஇருக்கும். தமிழ்ப்பாஷைக்குரிய ஐந்திலக் கணங்களையும் இவர்நன்குணர்ந்தவர் என்பதை அவர் நூல்கள் செவ்வனே தெரிவிக்கும். யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும் உவமை முதலிய பொருளணிகளும் இவர்நூல்களில் பரக்கக் காணலாம். பக்திச் சுவை நிரம்பியவைகள் அவை. இறும்பூதூர் என்பது சிதம்பரத்திலிருந்து விருத்தாசலத்திற்குப் போகும் சாலையின் பக்கத்தில் உள்ள ஓரூர். இவர் பலவிடத்துஞ் சென்று அவ்வூரில் வந்து தேகவியோக மடைந்தாரென்றும் அதனால் அவ்வூரில் இவருக்குச் சமாதிக் கோயில் ஏற்பட்டு நித்திய பூசை முதலியவை கள் அவருடைய மாணாக்கர்களால் நடத்தப்பட்டு வருகின்றனவென்றும் சொல்வார்கள். இவருடைய சரித்திரம் மேற்குறித்த புஸ்தகங்களில் எழுதப் பட்டுள்ளது.

## 67. இளம்பூரணர்

இவர் தொல்காப்பியத்துக்கு முதலில் உரை செய்தவராக நினைக்கப்படுகிறார். அதனால், இவர் உரையாசிரியரென்ற பெயராலும் வழங்கப்படுவர். மூவாயிரம் வருடங்களுக்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியத்திற்கு இவர் காலம் வரையில் உரை இராமலிராதென்றும் சுருக்கமாக ஏதேனும் ஒருரை இவர் காலத்திற்கு முன்பு இருந்திருக்க வேண்டு மென்றும் சிலர் கருதுவதுண்டு. இளம்பூரண வடிக ளென்றும், அடிகளென்றும் புலவுத் துறந்த பெரியோ ரென்றும் பேராசிரியர்,அடியார்க்கு நல்லார் முதலியோ ரால் இவர் பாராட்டப் பெறுவர்.

நன்னூல் மயிலைநாதருரை இவருரையைத் தழுவியே இயற்றப்பெற்றதென்று விளங்குகின்றது. மயிலைநாதர், "பெயர் வினையும்மை" என்னும் சூத்திரவுரையிற் பத்தெச்சங்களையும் கூறிவிட்டு'

''இஃது ஒல்காப் புலமை தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வியிளம்பூ ரணரெனு மேதமின் மாதவ ரோதிய வுரையென்றுணர்க'' என்று எழுதியிருத்தலால் இவர் பெருமை நன்கு விளங்கும்.

இவருடைய உரையால் பழைய நூற்பெயர் களிற் சில தெரிய வந்தன. சில பழைய செய்யுட்களின் சுத்தமான முழுவடிவமும், சில் பாடல்களின் சிதைந்த பகுதிகளும் விளங்கின.

## 68. இன்பகவி

இவர் ஊர் திருநெல்வேலி, ''பிலிப்புக் குறவஞ்சி'' யென்று ஒருநூலை யரங்கேற்றிய பொழுது, சேனாதி ராய முதலியார் பிதா நெல்லைநாதர் ''அஞ்சம்பினா லெய்தான் என்பதை ஆக்ஷேபிக்கையில் அஞ்சம்பில் நாலெய்தானே என்று உடனே வேறு பொருள் கூறினாரென்று கேள்வி. இது சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் சொல்லியது. இவர் சரிதம் பாவலர் சரித்திர தீபகத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## 69. ஈசூர்க் கணக்குச் சச்சிதானந்தம் பிள்ளை

இவர் 21 படலமும் 229 கவியுமுள்ள **உத்தமவாத** நூல் என்னும் பெயரையுடைய நூலொன்றியற்றியவர். தமிழ் வேதாந்த நூல்கள் பலவற்றை ஆராய்ந்து பதிப் பித்தவர்; பலர்க்கு மேற்படி நூல்கள் பலவும் பாடம் சொல்லியவர்; வாசிட்டச் சிறப்புப் பாயிரம் கொடுத் தவர். இவர் பலநாள் தங்கியிருந்து தேகவியோக மடைந்த இடம் சென்னையிலுள்ள சூளையைச் சார்ந்த குசப்பேட்டை.

தமிழ்ப்புலவர் வரிசை என்னும் நூலில் இவரது பெயர் ஈசூர்-சச்சிதாநந்த அடிகள் என்று உள்ளது.

## 70. ஈசுவர மூர்த்தி தம்பிரான்

இவர் காசிக்குச் சென்றபொழுது உடையவர் பூசை கைதவறிப்போக இடையே **பார்த்தி** வழுசை செய்து மூன்று முறை கைநீரை மட்டும் உண்பவராய்க் காளத்திக்கு வந்து ஸ்வாமி தரிசனஞ் செய்து மடத்துக்கு வந்து சாய்ந்து கொண்டு பஞ்சாட்சர ஜபம் பண்ணிக் கொண்டிருக்கையில் ஆன்மா பிரிந்து விட்டது என்பர். வித்துவான் தாண்டவராய தம்பிரான் இவருடைய முதல் வித்தியா குருவாக நினைக்கப்படுவார்.

## 71. உடையூர்ச் சிதம்பரம் பிள்ளை

**காந்த மகா சங்கிரகம்** என்னும் நூலில் 6-செய்யுட்கள் இவர் செய்த சிறப்புப் பாயிரங்களாக உள்ளன. (ஸாமானியர்)

உடையூர்த் தியாகராசப்பிள்ளை என்பவரால் (நாவலர்) உற்பத்தி காண்ட முதல் தக்ஷகாண்டமிறுதியாகவுள்ளதும் 285 செய்யுட்களையுடையதுமாகிய காந்த மகா சங்கிரகமென்னும் நூல் செய்யப்பட்டது. இதற்கு உடையூர்ச் சிதம்பரம் பிள்ளையென்பவர் சிறப்புப் பாயிரங் கொடுத்திருக்கிறார். இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் படித்தவர்.

## 72. உதீசி தேவர்

இவர் சைனர். இவர் செய்த நூல் **திருக்கலம்பகம்.** இதில் சைன மத சித்தாந்தமான பல விஷயங்களும் உள்ளன. இந்த நூலுக்கு அரிய உரை ஒன்று உண்டு.

## 73. உப்பை

இவர் பெண்பால் வகுப்பினர்; திருவள்ளுவருடைய "மூத்த சகோதரிகளுள்ஒருவரென்றும் பிறந்த

வுடன் 'கண்ணுழையாக் காட்டில்" என்னும் வெண்பா, இவராற் பாடப்பட்ட தென்றும் சொல்லுவர்; பிற திருவள்ளுவர் சரித்திரம், வள்ளியம்மை நாடகம், பாவலர் சரித்திர தீபகம் இவற்றிற் காண்க.

## 74. உபேந்திராசாரியார்

இவர் இயற்றிய நூல் சினேந்திர மாலை. இவர் நச்சினார்க் கினியருக்கு முந்தியவர். இவர் சைனர். இவரியற்றிய சினேந்திர மாலையிலிருந்து "ஆழியும் ஆரும் போற்கீறி" என்ற வெண்பா சீவக சிந்தாமணி யுரையில் நச்சினார்க்கினியர் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருத்தலின், இந்நூலாசிரியர் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முந்தியிருந்தவரென்று உணர்விக்கப் படுகிறார்.

## 75. உமறுப் புலவர்

இவர் துலுக்கச்சாதி; மகமதிய நூலாகிய ஐயாயிரத்துச் சொச்சம் செய்யுளடங்கிய "சீறா" வென்பதை இயற்றியவர் இவரே. இவர் முகமது மதத்தினர். செய்தக்காதி என்னும் பிரபுவின் சமூக வித்துவான். கடிகை முத்துப் புலவருடைய மாணாக்கர்.

தமிழ் அன்பர் மகாநாட்டில் மகாநாட்டின் அங்கத்தினரும் ஸேது சமஸ்தான மஹாவித்வானும் பாஷாகவி சேகரரும் ஆகிய ரா. இராக வையங் காரவர்கள் பாடிய வாழ்த்து.

*தத்துவ ராயரி னத்து விதத்தின்*
*தத்துவ நாடெங்கு முய்த்துணர் வித்தாய்*
*பத்த மிலாமகா வீரர் கொள்கை*
*பற்றுந லோரையும் வைத்துயர் வித்தாய்*

சுத்தநலேசு தெளித்த மதத்திற்
றோயும் பலோரையு மார்பி லணைத்தாய்
ஒத்தும கம்மது ரைத்த நெறிக்கே
உமறுப் புலவரை யுய்த்தளித் தாயே.

## 76. உலக நாதர் (பாவலர் சரித்திரம்)

இவர் சாதி பேத நூலை ஆக்குவித்தோர். "உலகநீதி" என்னும் நூலை உலகநாத ரென்பவர் இயற்றியதாக அதன் இறுதிச் செய்யுள் தெரிவிக்கின்றது. துறவி; சைவ சமய பரிபாலகர் (சாதி பேதம்-3)

"தவநெறி யுலகநாதன் றமிழினாற் றருக வென்னச், சிவனருள் கருதி யானுஞ் செப்புவன் செய்யுளாக", மேற்படி நூல், 103-"திலகமாய்ப் புவியனைத்துஞ் சிவமயமாக வந்த, வுலக நாயகன்றன் கீர்த்தி யுலகினில் வாழி வாழி" என்பவற்றால் உணர்க,

## 77. உலகுடைய நாயனார்

உலகுடைய பெருமாள் (பாவலர் சரித்திர தீபம்)

இவர் உலகுடை நைனாரென்றும் கூறப்படுவர். இவர் திருவாவடுதுறை மடத்தில் மூன்றாம் ஆசிரியராக எழுந்தருளியிருந்த அம்பலவாண தேசிகரிடத்து ஞானோபதேசம் பெற்றவராகத் தெரிதலின் இவர் அவர் காலத்தவராக நினைக்கப்படுகிறார்.

உலகுடைய நாயனார் கழிநெடிலென்று வழங்குவதாகிய சைவநூலொன்று இவரால் செய்யப்பட்டுள்ளது. இவர் வைணவப் பிராமணர் என்பது கர்ண பரம்பரை. உலகுடை நாயகனார் என்றும் கூறப்படுவர். மேற்படி நூல் பண்டார சாஸ்திரம் 14-னுள் ஒன்றாக மேற்படி ஆதீனத் தலைவர்களால் நன்கு

மதித்து அங்கீகரிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டிருக்கின்றது.

## 78. உறுவை (பாவலர் சரித்திரம்)

இவர் பெண்பாலர். திருவள்ளுவரின் சகோதரிகளுள் ஒருவர். பிறந்தவுடன் தாயை நோக்கி,

சண்டப்பைக் குள்ளுயிர்தன் தாயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர் பிழைப்ப தாச்சரியம்—மண்டி
அலைகின்ற வன்னா யரனுடைய வுண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்.

என்னும் வெண்பாவைப் பாடி ஆற்றுவித்தாரென்று சொல்லுவர். இவருடைய சரித்திரம், வள்ளியம்மை நாடகம், வள்ளியம்மை புராணம், திருவள்ளுவர் சரித்திரம் முதலிய நூல்களில் உள்ளது.

## 79. உறையூர் முத்துவீர வாத்தியார்

இவர் திரிசிரபுரம் வண்டிக்காரத் தெருவில் இருந்தவர். சாதியில் கொல்லர்; கம்மாளவாத்தியாரென்றும் கூறப்படுவார். முத்துவீரியம் என்னும் இலக்கண நூல் முதலியன இவரால் செய்யப் பெற்று வழங்குகின்றன; இவரை டாக்டர் ஐயரவர்கள் பார்த்திருக்கின்றார்.

மீ. பிள்ளையவர்கள் இயற்றிய திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழுக்குச் சிறப்புப் பாயிரம் பாடியிருக்கிறார்.

## 80. ஊற்றுமலைப் புலவர்கள்

ஊர்க்காடு பாண்டி நாட்டுப் பொதியமலைச் சாரலிலுள்ள ஓர் ஊர்-ஜமீன்.

கன்றாப்பூர்க் கவிராயர்
திருக்கமலப் புலவர்
முத்துவீரப்பப் புலவர்
கந்தசாமிப் புலவர்

## 81. ஊர்க்காவலர் புலவர்

இவர் சாதியாற் குடிமகன். இவருடைய ஊர் கல்போது; இவர் கன்னி வாடியிலிருந்த புலவர்களுள் ஒருவர். இவருடைய பாடல்களுளொன்று:-

"கல்லொக்குஞ் சிந்தைமுட் டாட்டுரை காள்கல்வி
கற்கவென்றால்
வல்லக்க வார்குல மலையாண்டி யப்பைய மன்னன்பெற்ற
செல்லத் துரையெனும் பங்காரு ஜயசிங் குத்துரைக்குப்
பல்லக்குக் கொம்பு சுமப்போரைச் சும்பனம் பண்ணுங்
களே.

இப்பாடல் பல மாறுதல்களுடன் சங்கரமூர்த்திக் கவிராயர் பாடியதாகத் தனிச் செய்யுட் சிந்தாமணியில் அச்சாகியுள்ளது.

## 82. ஊருணிக் கோட்டை நாகமுத்துப் புலவர்

இவர் மாசிலாமணிப் புலவர் பரம்பரையிற் பிறந்தவர். இவ்வூர் இராமநாதபுரம் சமஸ்தானம் அநுமந்தக் குடித் தாலுக்காவில் மங்கலக் குடிக்கு ஸமீபத்திலுள்ளது.

இவர் ஜீவந்தர் என்றும் ஐயரவர்கள் குறித்துள்ளார்கள்.

## 83. ஊருணிக் கோட்டை மாசிலாமணிப் புலவர்

இவர் சேதுபதி யொருவரால் இவ்வூரைச் சர்வ மானியமாகப் பெற்றவர். இவராற் செய்யப்பட்ட நூல்கள் பலவுண்டென்று கேள்வி.

## 84. ஊற்றுமலைக் கந்தசாமிப் புலவர்

இவர் திருக்கமலப் புலவர் குமாரர். இவர் செய்த நூல்களுள் வடபழனி வண்ண மஞ்சரி யென்பது ஒன்று.

## 85. எட்டையபுரம் கடிகை முத்துப் புலவர்

இவர் எட்டைய புரத்தில் இருந்தவர். எட்டைய புரம் வம்ச மணிதீபிகை யென்னும் நூலில் 10-ஆம் பிரகரணத்தில் சொல்லப் பட்டவரும் கி. பி. 1705-ஆம் வருடம் முதல் 1725-ஆம் வருடம் வரையில் அரசாண்டவருமாகிய ஜகவீர ராம வெங்கடேசுர எட்டையப்ப நாயக்கரையனவர்கள் காலத்தில் மேற்படியார் மீது சமுத்திரவிலாசமும், காமராச மஞ்சரியும் செய்து அரங்கேற்றியதாகத் தெரிதலின், இவர் அக்காலத்தவராக நினைக்கப் படுகிறார். இவரால் பாடப்பட்ட யமகமும், திரிபுமான மிகச் சுவையமைந்த தனிப்பாடல்கள் மிகப் பல. இவர் செய்த வண்ணங்கள் சிலவுள்ளன. 'பாலுங் கசக்க வில்லை; பிழிந்த துணியும் கசக்கவில்லை' யென்றவரும் 'ஓரப்பன் போனால் எட்டப்பனுண்டு' என்றவரும் இவரே.

ஒரு சமயம் சிவகிரி ஜமீன்தார் வரகுணராம பாண்டியன் பேரில் "பூதர விலாஸம்" என்று ஒரு நூல் பாடிக் கொண்டு போய் நேரில் படித்துக்காட்டிச் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கும் போழ்து இப்பிரபந்தத்தினருமை நோக்கி ஜமீன்தார் "தாம் நிரம்பப் பணம் கொடுக்க வேண்டி நேரிடுமோ" என்று எண்ணிய எண்ணத்தைப் புலவரவர்கள் குறிப்பா லறிந்து ஜமீன்தாரிடம் "எனக்குப் பணத்தில் விருப்ப மில்லை. மரியாதையிலே விருப்பம். அவ்விருப்பத்தைத்

தாங்கள் பூர்த்தி செய்தாற் போதும்" என்று கூற ஜமீன்தார் "தங்கள் எண்ணப்படியே மரியாதை செய்கிறேன்" என்று சொல்லித் தங்கள் எண்ணம் யாது என்று வினவ, புலவரவர்கள் "இப் பிரபந்தம் அரங்கேறி முடிந்ததும் பட்டணப் பிரவேசம் வரும் போது நான் ஏறிச் செல்லும் பல்லக்கின் முன் கொம்பைத் தாங்கள் சுமந்து வரல் வேண்டும்" என்று தெரிவித்தார். அவரும் அதற்கிசைந்தனர். பிரபந்தம் சுபதினத்தில் அரங்கேறி முடிந்தது. புலவரவர்களின் பட்டணப் பிரவேசத்திற்குப் பல்லக்கு வருமாறு ஜமீன்தார் ஆக்ஞாபித்தனர். பல்லக்கு வந்தவுடன் அதிற் புலவரவர்கள் ஆரோகணித்தார்கள். அப்போது தமது சமஸ்தான மந்திரிகள் பிரதானிகள் ஊரார்கள் யாவரும் ஒரே திரளாகக் கூடியிருந்தார்கள். அப்போது ஜமீன்தார் 'பல்லக்கிலிருந்து நம்முடைய குடிகளின் மத்தியிற் காட்சி கொடுக்கும் நாம் பல்லக்குச்சுமப்பதா' வென்றெண்ணித் தமக்குப் பதிலாக மந்திரியைச் சுமக்குமாறு குறிப்பாகச் சொன்னார். இவற்றை யெல்லாம் குறிப்பாலறிந்த புலவரவர்கள்"வாக்கிரண்டு பேசா வரகுணராம் பாண்டியன், வாக்கிரண்டு பேச மனம்வைத்தான்" என்று இரண்டடிகள் கூறியவுடன் ஜமீன்தார் மற்றைய வடிகளில் ஏதேனும் அறம்பாடி ஜமீனுக்குக் கெடுதி விளைவித்து விடுவாரோ என்றுபயந்து"நான் தயாராயிருக்கிறேன்" என்று முன் கொம்பு தாங்கி நடந்தார். உடனே புலவர்,

"தாக்கும்—மருவலரைக் கொல்லென்றான்
வந்தடைந்த போது, வெருவாமற் காவென்றான் மேல்"

என்று மற்றையவடிகளைப் பூர்த்தி செய்தார்.

**இவர் இயற்றிய நூல்கள்:**

1. மதனவித்தார மாலை (ஊற்றுமலை ஜமீன்தார் ஹிருதயாலய மருதப்பத்தேவர் மீது)

2. சமுத்திர விலாசம்
3. காமரச மஞ்சரி
4. திக்கு விஜயம் (சிவகிரி ஜமீன்தார் வரகுண ராம பாண்டித்துரையவர்கள்மீது)
5. கூழையந்தாதி (கூழையென்பது பசுவந்தனையென்னும் ஸ்தலம்)

## 86. எட்டையபுரம் கருத்த முத்துப் பிள்ளை

ச்ரேஷ்டனென்பது பிராகிருதத்தில் ஸெடியென்றும் மாகதியில் செடியென்றும் எடியென்றும் ஆகித் தமிழில் எட்டன் என்றும் வந்திருத்தல் வேண்டும் என்பது பெரியோர் கருத்து.

இவருடைய ஊர் எட்டையபுரம். பரம்பரைச் சைவ வேளாளர். இவர் இராமநாதபுரத்தைச் சார்ந்த நயினார் கோயில் (மருதூர்) வில்வவனம் ஸ்தல புராணத்தைத் தமிழ்ப் படுத்தி யிருக்கிறார். இவர் குமாரர் ஆண்டியாப் பிள்ளையென்பவர்.

இவர் மேற்படியூர் சிவகாமிநாத பிள்ளையென்பவரின் கனிஷ்டர். இவர் செய்த நூல்கள்.

1. சிவதத்துவ சுதாநிதி
2. திரிபுவனப் புராணம்
3. வேளாளர் பள்ளு
4. சிவகிரிப் பிள்ளைத் தமிழ்
5. கழுகுமலைப் பள்ளு
6: திருச்செந்தில் கலித்துறை யந்தாதி
7. வெண்பா வந்தாதி (செந்தூர்)
8. பதிற்றுப் பத்தந்தாதி (செந்தூர்)

செந்தூருக்குப் பழைய புராண மொன்றுண்டு

மேற்படி ஊரில் ஒரு தெருவில் சிற்சில வீடுகள் இவருக்கு உண்டு. எட்டைய புரத்திலிருந்த ஜமீன்தார், ராமநாதபுர ஜமீன்தார், திருவாவடுதுறையாருடைய உதவி பெற்றவர். இவரோடு பழகினவர்கள் மேற்படியூர்க் கடிகை நமச்சிவாயப்புலவர் முதலியோர்.

இவர் 70 வது வயது வரை இருந்தார். மேற்படியார் பிள்ளையாலும், சேறைச் சுப்பிரமணிய கவிராயர்முதலியோர்களாலும்இவருடையவரலாறுகள் தெரிகின்றன. மேற்படியூர் தமிழ் ராஜபரமாதலால், அங்கே பரம்பரையாக உள்ள வித்துவான்களுடைய பழக்கமும் இவருக்குத் தமிழ்க் கல்வியின் பெருக்கத்தையும் பாடுந்திறமையையும் விருத்தி செய்தன. அவ்வூரில் 70-வது வயதில் தேகவியோகமானார். சைவ சித்தாந்தி. இவருக்கு ஞானாசிரியஸ்தானம் திருவாவடுதுறை மடம். இவர் அவ்வச் சமயத்தில் செய்த பாடல்கள் பல. இவர் செய்த சில சிறப்புப் பாயிரங்களும் உண்டு.

அடக்கம், அன்பு, வணக்கம், பிறரை மதித்தல் முதலியன இவரிடமிருந்த சிறந்த குணங்கள். இவர் பெரும்பாலுமிருந்து காலங்கழித்த இடம் எட்டையபுரம். இவருடைய நிறம் கறுப்பு; குட்டையுருவம்; நான் (ஐயரவர்கள்) பார்த்ததுண்டு. சிறந்த வித்துவானாகவே யாவரும் இவ்வரை மதித்து வந்தார்கள். நல்ல நடையுள்ளவர்.

## 87. எட்டையபுரம் சிவகாமி நாத பிள்ளை

இவரது ஊர் எட்டையபுரம். பஞ்சலக்ஷண வித்துவான். எட்டைய புரத்தைச் சார்ந்த கழுகு மலையிலுள்ள குமாரக் கடவுள்மீது "கழுகாசலக்

கோவை" யென்று ஒரு நூல் இவராற் செய்யப் பட்டுள்ளது. இவர் எழுபத்தொன்பது வயதுவரையில் இருந்தவர். கருத்தமுத்துப் பிள்ளையின் ஜேஷ்டர்.

## 88. எதிரிக்கோட்டை சேஷையங்கார்

ஊற்றுமலை சமஸ்தான வித்துவான். தூது மஞ்சரி என்னும் நூலொன்று ஆண்டாள்மீது இயற்றி யுள்ளார். வேறுநூல் 'எட்டையபுரம் காதல்.' இதற்கு ரூ. 300 சம்மானம் பெற்றார்.

## 89. எம்பார்

இவர் பெரிய திருமொழிக்கு இரண்டு தனி யன்கள் செய்துள்ளார்.

## 90. எம்பெருமானார்

இவர் பெரியதிருவந்தாதிக்கு ஒரு தனியனும், திருவெழு கூற்றிருக்கைக்கு இரண்டு தனியன்களும் செய்துள்ளார்.

## 91. எல்லப்ப நயினார்

திருவாரூர்க்கோவையின் ஆசிரியராகிய எல்லப்ப நயினாரென்பவர் பதினாறாம் நூற்றாண்டின் பிற் பகுதியிலேயே விளங்கியவர்; பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் ஒருங்கு வாய்ந்தவர்; தென்மொழி வடமொழி யென்னும் இரண்டிலும் வன்மை பெற்றவர். இவரது இருமொழிப் புலமை,

> "முத்தமிழ்க் கோவைசெய் தான்வட சொற்களுக்கும்
> புணையான வன்றிரு வுண்ணா முலையெல்ல பூபதியே"

என்னும் இந்நூற் சிறப்புப்பாயிரப் பகுதியால் வெளி யாகின்றது.

இவர் திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள தாழைமா நகரிலே பிறந்தவர்; திருவண்ணாமலைத் தலத்திலே பேரன்புடையவராக இருந்தார்; அத்தல புராணத்தையும், அருணையந்தாதி, அருணைக் கலம்பக மென்பவற்றையும் இயற்றினார். 'அவற்றை யன்றித் திருவிரிஞ்சைப் புராணமும், தமிழ்ச் சௌந் தரிய லகரியின் உரையும் இவரால் இயற்றப் பெற்றன.

எல்லன், எல்ல நயினான், எல்ல பூபதி, உண்ணா முலை யெல்லப்ப நயினாரென இவர் வழங்கப் படுவார். இவர் காலிங்கராயன் உண்ணாமுலை எல்லப்ப நயினாரெனவும், எல்லன் காலிங்கனெனவும் குறிக்கப் பெறுவதுண்டு. இவராற் பாடப்பெற்ற சில செய்யுட்களும் இவரைப் பாராட்டிப் பாடப்பெற்ற சில செய்யுட்களும் சிலாசாஸனங்களிற் காணப்படு கின்றன. இவர் சில தலங்களிற் சில திருப்பணிகள் செய்வித்திருக்கின்றனர்.

இக்கவிஞர் பால் வெறுப்புக் கொண்ட பரமேசு வரப் புலவரென்பவர் ஒருவர் அக்காலத்தில் திருவண் ணாமலையில் வாழ்ந்து வந்தனர். இவ்விருவரும் ஒருவரையொருவர் இழித்துப் பாடிய இரண்டு செய்யுட்கள் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளன.

இவர் அடக்கமென்னும் அருங்குணமுடையவ ரென்பதை இக்கோவையிலுள்ள அவையடக்கச் செய்யுட்கள் புலப்படுத்தும்.

முருகக் கடவுளிடத்திலும் இவர் பேரன்புடை யவரென்பதை,

"கதையயா யிதுசொல்லப் போதுநங் காவிற்
களிறுபுக்காற்
சிதையயா தனதழை கண்டறி யேஞ்செங்கை
வேலர்பொற்றாள்

இதயார விந்தத் திருத்திய காலிங்க னெல்லன் வெற்பில்
மதயானை யைத்தழை யேசெற்ற தாமிவர் வல்லபமே''

என்னும் பாடல் தெரிவிக்கின்றது. இந்நூலுக்குக் காப்பு உரைக்கையில் விநாயகர் கடவுளோடு ''வான வரைக்காக்குமயில் வாகனக்' கடவுளையும் கூறுதலும், தலைமகள் மணம் பொருட்டாகத் துர்க்கையைப் பரவியதாகப் பிறர் கூறியிருப்ப இவர் செவ்வேளைப் பரவியதாகக் கூறுதலும் (340), நற்றாய் கூற்றில்,

''..........................மயில் வாகனனை
வேந்தனைச் சேந்தனை வேலா யுதனைச்
செவ்வேளை வள்ளி காந்தனை''

என முருகக்கடவுளைப் பாராட்டிக் கூறுதலும் (361), செவிலி தெய்வம் வாழ்த்தலென்னும் துறையில் (386) அவள் முருகக் கடவுளை வேண்டுவதாகக் கூறுதலும் இக்கருத்தை வற்புறுத்தும். இவர் முருகக் கடவுள்மீது தனியே இயற்றிய சில பிரபந்தங்கள் இருத்தலும் கூடும். அவை இப்பொழுது கிடைக்கவில்லை.

இந்நூலை ஆராயும்பொழுது, இவர் சொல்லணி பொருளணிகளை எளிதில் அமைத்துக் கவிபாடும் ஆற்றலுடையவரென்பதும், எதுகை, மோனை முதலியன வருத்தமின்றிப் பாடும் போக்கிலேஅமையும் நாவன்மையுடையவரென்பதும், சிவபக்தி, அடியாரிடத்தன்பு முதலிய நற்குணங்களுடையவரென்பதும் புலனாகின்றன. இவருடைய கவித்துவம் மிகச் சிறந்ததாக இருத்தலின் இக்கோவையை, 'அருட் கோவை' என்று சிறப்புப்பாயிரம் பாராட்டுகின்றது. தஞ்சை வாணன் கோவைப் பிரதிகள் சிலவற்றில் அக்கோவைச் செய்யுளில்லாத சில துறைகளுக்கு இக்கோவைச் செய்யுட்கள் அமைக்கப் பெற்றிருத் தலும் இதனுடைய பெருமையை விளக்கும். இந்நூற்

செய்யுட்களுக்குரிய பாடபேதங்கள் மற்றக் கோவைகளைக் காட்டிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் யாவரும் இக்கோவையின் பால் அன்புற்றுப் பெற்றுப் படித்து வந்தார்களென்றும், அங்ஙனம் பலராற் படித்து மனனம் செய்யப் பெற்ற காரணத்தால் பாடபேதங்கள் அதிகமாயினவென்றும் கருத இடமுண்டு.

இவ்வாசிரியருடைய புலமைத் திறத்தைப் அவரது நூலாராய்ச்சிப் பகுதியினால் ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

இவர் காலத்தார் பரமேசுவரப் புலவர், கவிராஜ சிங்கம் தருமை வெள்ளியம்பலவாணர், வெண்மணிப் பிள்ளைப் பெருமாள் ஆகியோர்.

உண்ணாமுலை எல்லப்ப வாத்தியார் "அஞ்சரி யாரரி யேழரி உழுணுமரனுக் கொவ்வாதேல்—உஞ்சரி கதவுந் திண்ணையும் வாயிலு மொட்டாக் கொவ்வா தால், மஞ்சரி யென்றொரு பாவுண்டேயது மனிதர்க் காகாதே (சொல்வதால்), இன்சொலு ணாமுலை எல்லப் பன்குடி இன்றொரு பற்றறுகும் (திருக்குருகாவூர் சாமி ஐயர் சொல்லியது.) இது திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் வீட்டு ஏட்டுப் பிரதிகளுள் பலபாடல் திரட்டென்ற நூலின் முதலில் காணப் பட்டது. பிரையாற்றிலிருந்த ஒரு வணிகப் பிரபுவின் மீது இவர் மஞ்சரி பாடிப் பழிக்கப் பெற்றார்.

இவர் இயற்றிய நூல்கள்:-

1. திருவெண் காட்டுப் புராணம்
2. செவ்வந்தி புராணம்
3. தீர்த்தகிரிப் புராணம்

4. அருணாசல புராணம்
5. திரு விரிஞ்சைப் புராணம்
6. அருணைக் கலம்பகம்
7. ஆரூர்க் கோவை
8. ஆனந்தலஹரி, சௌந்தரியலகரியினுரை.

தலைச்சன் காட்டுப் புராணமும் இவர் செய்ததாகத் தெரிகிறது. இது காவிரிப்பூம்பட்டினம் சொக்கலிங்கம் பிள்ளை வீட்டிலிருக்கிறது. உண்ணாமுலை எல்லப்ப நயினார் என்றும் கூறப்படுவர்.

இவர் பரம்பரையோர் திருவெண் காட்டிற்குத் தெற்கே, ஒரு நாழிகை வழி தூரத்திலுள்ள நாதாநல்லூரில் இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிறவர் சுந்தரம் பிள்ளை. திருவெண்காட்டு மேற்புறத்துள்ள காரைமேட்டிலிருக்கிற எல்லப்பச் செட்டிச்சத்திரமென்பதைக் கட்டியவருக்கு இப்பெயர் இருந்ததாகத் தெரிகிறது.

காவிரிப்பூம் பட்டினத்தைச் சூழ்ந்த ஊர்களில் யாருடைய வீட்டிலேனும் விவாகம் நடந்தால் இவருக்கும் இவருடைய சந்ததியாருக்கும் இராஜாங்கக் கட்டளைப்படி ஐந்து பணம் கொடுப்பது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. அதற்குப் பட்டயமும் உண்டு. அதன்படி இதற்கு 50 வருடத்திற்கு முந்திய காலம் வரைத் தவறாமல் நடந்து வந்தது. பின்னர் இது ஈனமானதென்று இவர்பரம்பரையோர் பெற்றுக் கொள்ளாமல் நிறுத்திவிட்டார்கள்.

காஞ்சிபுரத்தில் கைக்கோளரில் எல்லப்ப நாவலரென்று ஒருவர் அக்காலத்தில் இருந்தனரென்றும் அதனால் இவருக்குச் சைவ எல்லப்ப நாவலரென்பது பெயராயிற்றென்றும் சொல்லுவர். தருமபுரம் வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம்

படித்ததாகக் கேள்வி. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் காலமும் இவர் காலமும் ஒன்றென்று பெரியோர் சொல்வர்.

இவர் பிறந்த ஊர் ராதா நல்லூர் (இது காவிரிப் பூம் பட்டினத்தில் மேலையூருக்கு மேற்கே ஒரு மைலிலுள்ளது). இவர் கார்காத்த வேளாள ருடைய மரபினர். இவருடைய மரபினர்—இவருடைய உறவினர் மேற்படி ராதா நல்லூரில் உள்ளார்கள். இலையமுது கூடத்திலும் இருக்கின்றார்கள். 225-குடும்பம் இருக்கலாம்; சில நாளைக்கு முன் தாசில் பண்ணின சுப்பப் பிள்ளையென்பவர் இவர் குலத்தவரே. இலையமுது கூடத்திலுள்ள சிதம்பரம் பிள்ளையென்பவரும் ராதா நல்லூரில் இருக்கும் சுந்தரம் பிள்ளையென்பவரும் தற்காலத்தில் பிரப லர்கள். ராதா நல்லூரிலிருந்த நமச்சிவாயப்பிள்ளை என்பவர் சிறந்த தமிழ் வித்துவானாக இருந்தார். இவருடைய கோத்திரம் காலிங்கராய கோத்திரம். எல்லப்பனென்பது அந்தப் பக்கத்துள்ள பலரும் வைத்துக் கொள்வது, இது ஒரு தெய்வத்தின் பெயர்.

ஸ்தலபுராணம் ஐந்தும், கலம்பகம் ஒன்றும் கோவை ஒன்றும், உரை ஒன்றும் அவர் செய்த வையே. மேற்படி நூல்களுள் ஒவ்வொன்றும் சிறந்தவையே.

மேற்படி வெள்ளியம்பல வாணத் தம்பிரானும் திருவண்ணாமலை வண்ணம் பாடிய கவிராச சிங்கமும், பரமேசுவரப் புலவரும், வெண்மணிப் பிள்ளைப் பெருமாள் அவர்களும் இவர் காலத்துப் புலவர்கள்.

இவரியற்றிய நூல்களாலும் இவர் பரம்பரை யோராலும் தமிழ் நாவலர் சரிதத்தாலும் இவர் சரிதம் ஒருவாறு புலப்பட்டது.

மதம்—சைவம்.

எல்லப்ப வாத்தியார் என்றும் உண்ணாமுலை எல்லப்பரென்றும், முலை யெல்லப்பரென்றும் அழைக்கப்படுவர். மேற்படி பிள்ளைப் பெருமாள் தமது நூல்களில் சிவதூஷணை செய்து வந்தது, இவரை விஷ்ணு தூஷணை செய்து வரும்படி ஏவியதாகத் தெரிகிறது.

கவிராஜ சிங்கத்தைக் கண்டு இவர் ஒளிந்த பொழுது பரமேசுவரப் புலவர் இவரை இகழ்ந்து பாடியதையும், அதற்கு இவர் மறுமொழி கூறியதையும் தமிழ் நாவலர் சரித்திரத்தில் உணர்க.

சிலேடை அணியில் இவருக்கு மிகுந்த பிரீதி உண்டு.

## 92. ஐயனாரிதனார் (புறப்பொருள் வெண்பா மாலை)

ஐயனாரிதனார் தமிழ் நூல்களிற் சிறந்த அறிவு வாய்ந்தவர். சைவ சமயத்தினர். தாம் சேரர் மரபினராயினும் சோழ பாண்டியர்களையும் ஒப்பச் சிறப்பித்தலும், சைவரேனும் திருமாலைப் பற்றி உரிய இடங்களிற் கூறுதலும் இவருடைய நடுநிலையின் உயர்வைப் புலப்படுத்துகின்றது.

## 93. ஒட்டக்கூத்தர்

இவர் பெயர் கூத்தர் என்பது; இவர் கூத்த முதலியார் என்றும் வழங்கப்படுவார். கூத்தரென்பது ஸ்ரீ நடராசப் பெருமானுடைய திருநாமம். இவர் பிறந்த ஊர் மலரி என்பர்; "மலரி வருங்கூத்தன்" (தண்டியலங்காரம், மேற்.)

இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வடமொழி நூல்களிலும் மிகுந்த பயிற்சி வாய்ந்தவர்.

செய்யுள் இயற்றுமாற்றல் இவர்பால் மிகச்செவ்வனே அமைந்திருந்தது. வடமொழியிலுள்ள பலவகையான சொற்களையும் தொடர்மொழிகளையும் தாம் இயற்றும் செய்யுட்களில் உரிய இடங்களில் அமைத்துப் பாடுபவர். அவ்வாறமைப்பதில் இவருக்கு மிகுந்த ஊக்கமும் பிரீதியுமுண்டு. பல மாணாக்கர் கட்குப் பாடஞ் சொல்லும் இயல்பினர். சிவபக்திச் செல்வம் வாய்ந்தவர்; கலைமகளையும் வழிபட்டுப் பேறு பெற்றவர். இவர் இன்னராதல் இவரியற்றிய நூல்களாலும், தக்கயாகப்பரணி உரையாலும் விளங்கும்.

இவர் விக்கிரமசோழன் காலத்தில் அவனுடைய ஆஸ்தான பண்டிதராகவும், குலோத்துங்கனுக்கு வித்தியா குருவாகவும், அவனுக்கும் அவன் குமாரன் இரண்டாம் இராசராசனுக்கும் ஆஸ்தான பண்டித ராகவும் இருந்து அவர்களுடைய அவைக்களத்தை அலங்கரித்தும், பல புலவர்களை ஆதரித்தும், பல நூல்களை இயற்றியும், இயற்றுவித்தும் விளங்கியவர், அக்காலத்தில் அம்மூவருள் ஒவ்வொருவர் மீதும் ஒவ்வோருலாவும், குலோத்துங்க சோழன்மீது ஒரு பிள்ளைத் தமிழும் இயற்றினார். இவரிடத்துப் பேரன்புற்ற அம்மூவருள் ஒருவன் இவருக்கு அரிசி லாற்றங்கரைக் கண்ணதாகிய ஓரூரை அளித்தனன். அஃது இவர் பெயரால் கூத்தனூர் என்று இக்காலத்து வழங்கப்படுகிறது. இவர் கலைமகளுடைய திருவருள் பெற்றவராதலின் அவ்வூரில் அத்தேவியின் திருவுரு வத்தைப் பிரதிஷ்டிப்பித்துக் கோயில் எடுப்பித்து வழிபட்டு வந்தனர். இஃது "ஆற்றங்கரைச் சொற் கிழத்தி வாழியே" (தக்க. 813) என்பதனாலும் விளங்கும்; இத்திருக்கோயில் இன்றும் உள்ளது.

தன்மீது இவர்செய்த உலாவிலுள்ள ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றும்படி விக்கிரம சோழன் சொல்ல, அவ்வாறே விரைந்து

பாடினமையால் இவர் **ஒட்டக் கூத்தர்** என்னும் பெயர் பெற்றார் என்பர். இப்பெயருக்கு வேறு காரணம் கூறுவாருமுளர்.

விக்கிரமசோழன் இவருக்கு யானை, காளம் முதலிய வரிசைகளை அளிக்க இவர், "இவ்விருது களைப் பெறுதற்கு யான் உரியேனல்லேன்" என்று "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்பதற்கிணங்கத் தம்முடைய பணிவைத் தெரிவித்தனர். இவை பின்னுள்ள செய்யுட்களால் விளங்கும்.

"இடுக்கண் புண்படு நிரப்புக் கொண்டுழன்
றிரக்கச் சென்றவன் றெனக்குச் சிங்களந்
திடுக்குற் றஞ்சும் வெஞ் சினத்துச் செம்பியன்
றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன
படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலங் கலிக்கச் சங்கினங்
கவிக்குப் பஞ்சரங் கவிக்கத் தொங்கலே."

"பத்துக் கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொற்றா ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மானா பரணா
முத்துப்பந் தரினிற்குங் குருளைக்குஞ் சினவேல்
முருகற்கும் பொதியக்கோ முனிவற்குப் பதுமக்
கொத்தற்குஞ் சடிலக்குந் தளருக்கு மல்லாற்
கூழைத்தண் டமிழுக்கேன் கொடியுங்கா ளமுமே"

இராசராசனுலாவைப்பாடி அரங்கேற்றிய பொழுது இவருக்கு அவ்வரசன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் விழுக்காடு வழங்கினான்.

இது,

"தெள்ளித்தம், முன்னா யகரிலவன் மூதுலாக்
கண்ணிதொறும், பொன்னா யிரஞ்சொரிந்த பூபதியும்"
(சங்கர சோழனுலா)

"கூட னராதிபன் கூத்தனெதிர்
நண்ணியோர் கண்ணிக் கொராயிரம்பொ னீந்தவுலாவும்"
(தமிழ் விடுதூது) என்பவற்றால் தெரிகின்றது.

இவரை ஆதரித்தவர்கள் மேற்கூறிய மூவரே யன்றி, திருச்சிற்றம்பல முடையான் பெருமாள் நம்பி, காவிரிப் பூம்பட்டினத்திருந்த உபகாரிகளாகிய வீரர் சிலர், புதுவைக் காங்கேயன், திரிபுவனச் சோமன் என்னும் செல்வர்களுமென்று தக்கயாகப் பரணியாலும் அதனுரையாலும் பிறவற்றாலும் விளங்குகின்றது.

தக்கயாகப் பரணியின் இறுதியில் "ஆக்கம் பெருக்கு மடந்தை வாழியே" என்று திருமகளை வாழ்த்தியிருத்தல் சோழர் முதலியோரால் நன்கு ஆதரிக்கப்பட்டு மேன்மேலும் செல்வம், புகழ், மதிப்பு இவற்றை மிகுதியாக அடைந்து யாதுங் கவலையின்றி இவர் வாழ்ந்து வந்தனரென்பதைப் புலப்படுத்துகின்றது.

இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் முதுமைப்பிராயம் அடைந்திருந்த இவர் உடற்றளர்ச்சி யுற்றிருந்தாரேனும் அறிவில் தளர்ச்சியுறவில்லை. இவர் இயற்றிய மூவருலாவில் இராசராச சோழனுலா ஏனைய இரண்டிலும் அளவாலும் சுவையாலும் மிக்கிருத்தலும், இந்நூலமைப்பும் இதனை அறிவிக்கும்; "நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவி னுரைமூதாளன்" என்னும் மணிமேகலை யடிகள் இங்கே ஞாபகத்திற்கு வருகின்றன.

இவர் காலத்திலிருந்த புலவர்கள் நம்பிகாளியார். நெற்குன்றவாண முதலியார். கம்பரும், புகழேந்தியும் இவர் காலத்தில் இருந்தவர் என்பது சிலர் கொள்கை; அதற்குத் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

இவர் "பாடற் பெரும்பரணி தேடற்கருங்கவி கவிச் சக்கரவர்த்தி பரவச், செஞ்சேவகஞ் செய்த சோழன் றிருப்பெயர் "(குலோத். பிள்ளை.) என்பதில் முதற் குலோத்துங்கன் மீது சயங்கொண்டார் கலிங் கத்துப்பரணி இயற்றியதை எடுத்துக் கூறுதலால் பிற

புலவர்களைப் பாராட்டும் இவருடைய அரியகுணமும், சயங்கொண்டார்பால் இவர் கொண்ட மதிப்பும் விளங்கும்.

இவர் உலக இயல்பைக் கடந்து வருணனைகளை அமைப்பதாற் கௌடப்புலவர் எனப்படுவார். அவ்வாறமைப்பதைத் தக்கயாகப் பரணியுள் 27, 37, 85-ஆம் தாழிசைகளாலும், பூதகணங்களின் செயல்களை விரித்துக் கூறும் பகுதி முதலியவற்றாலும் உணரலாகும். செய்யுள் செய்யும் ஆற்றலில் அக்காலத்துள்ள கவிகளுட் சிறந்து விளங்கினமையால் கவிராக்ஷஸன் என்றும், கவிச்சக்கரவர்த்திகள் என்றும், சக்கரவர்த்திகளென்றும், அரசனால் காளம் என்னும் விருது பெற்றமையால் காளக்கவி என்றும், இருமொழி நூல்களுள்ளும் இன்றியமையாதனவற்றைச் செவ்வனே அறிந்து, அறிந்தவற்றை நன்கு புலப்படுத்திச் செய்யுள் செய்யும் திறம் வாய்ந்திருந்தமையின் சருவக்ஞக் கவி என்றும் இவர் வழங்கப்படுவர்.

இவர் தேவியைப் பற்றிக் கூறுவனவெல்லாம் பெரும்பாலும் யாமளசாஸ்திரக் கருத்துக்களைப் பின்பற்றியனவென்று தெரிவதால் இவருக்கு அந்நூல்களில் பயிற்சி யுண்டென்றும், சைனமுதலிய பிற சமயங்களைப் பற்றிய செய்திகளையும், பரிபாஷைகளையும் எடுத்தாளுதலின் அச்சமய நூல்களை யறிந்தவரென்றும் சொல்லலாம்.

இவர் செய்த வேறு நூல்கள்:- காங்கேயன் நாலாயிரக்கோவை, அரும்பைத் தொள்ளாயிரம், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், ஈட்டியெழுபது முதலியன. அன்றியும் இவர் அவ்வப்பொழுது செய்தனவாகச் சில செய்யுட்கள் தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றிற் காணப்படுகின்றன. தக்கயாகப்பரணி 776-ஆம் தாழிசை உரையினால், விக்கிரமசோழன் மீது கலிங்கவெற்றியைக் குறித்து

ஒரு பரணி இவரால் பாடப்பட்டது என்று தெரி கின்றது. தக்கயாகப்பரணி 13-ஆம் தாழிசை உரையில் உரையாசிரியர் "என்றார் தாமே" என்று குறிப்பிட்டுக் காட்டிய, "முத்தின் கனங்குழையை யுங்குமிழை யுங்கதுவி முட்டும்கருங்கயல் களின்கடை யடங்குவன" என்பதும்,சிலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார் காட்டிய மேற்கோள்களுள் பரணித் தாழிசைகளாகக் காணப்படும்,

"மோடி முன்றலையை வைப்பரே மூடி குலைந்த குஞ்சியை முடிப்பரே
ஆடி நின்று குருதிப்பு துத்திலத மம்முகத்தினி லமைப்பரே,"
"மண்ணினாளற வறுத்த தங்கடலை வைத்த பீடிகை வலங்கொள
விண்ணி னாயகிதன் யாக சாலைதொறு மீளவுஞ்சிலர் மிறைப்பரே"

என்பவைகளும் அப்பரணியிலுள்ளன போலும்,

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே,
நின்றளவிலின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று,
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று,
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு"

என்ற தண்டியலங்கார மேற்கோட் செய்யுளால் இவர் வாக்கு நயத்தை அக்காலத்தார் நன்கு மதித்திருந்தா ரென்பதும், இவரால் ஆதரிக்கப் பெற்ற புலவர்களுள் தண்டியலங்கார மேற்கோளாசிரியரும் ஒருவர் என் பதும் விளங்குகின்றன.

இவர் இயற்றிய தக்கயாகப்பரணியிலும், வேறு நூல்களிலும் அமைந்துள்ள பிரயோகங்களை உற்றுநோக்குகையில் இவர் சைவத்தில் மிக்க பற் றுடையவர் என்பது தெளிவாகும்.

துர்க்கா பரமேசுவரி கலைமகளை நோக்கி ஆளுடைய பிள்ளையார் கதையைச் சொல்லும்படி கட்டளையிட்டு, அங்ஙனமே சொல்லிய கலைமகளை

மனமுவந்து தன் அருகில் வீற்றிருக்கும்படி அருளிச் செய்ததாகக் கூறியிருப்பதும், தக்கயாக சங்காரத்தைக் கூறும் ஏனைய நூல்களில் வீரபத்திரதேவர் கலைமகளுடைய நாசியை அரிந்ததாகக் காணப்படும் செய்தியைக் கூறாது ஒழிந்ததும், வாழ்த்தில், "ஆற்றங் கரைச் சொற்கிழத்தி வாழியே" என்று பாராட்டியிருப்பதும் இவருக்குக் கலைமகள்பாலுள்ள பேரன்பைப் புலப்படுத்துகின்றன. இவர் தமிழ்ப் பரமாசாரியராகிய அகத்தியரிடத்து மிக்க பக்தியுடையவர்; 40, 233, 624-ஆம் தாழிசைகளில் பார்க்க. இருமொழியிலும் நல்ல பயிற்சியுடையவராயிருப்பினும் வீரபத்திரதேவர் போர்க்கோலங் கொண்டெழுந்த காலத்தில் "தும்பை மாலையை அணிந்து கொண்டதாகக் கூறப்புகுந்த இவர், "பொதியில் வாழ்முனி புங்கவன்றிரு வாய்மலர்ந்த புராணநூல், விதியினால் வரு தும்பை மாலை விசும்புதூர மிலைச்சியே" என்று கூறியதாலும், அகத்திய முனிவரை, "ஒரு தமிழ் முனிவரன்" என்றும், பொதியின் மலையை, "தமிழ்க் குன்று" "தமிழ்ப் பொதியில்" என்றும் சொல்லியதாலும், "கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே" "வாழி தமிழ்ச் சொற் றெரிந்த நூற்றுறை, வாழி தமிழ்க்கொத்தனைத்து மார்க்கமும், வாழி திசைக்கப் புறத்து நாற்கவி" என்று வாழ்த்தியதாலும் தமிழ்மொழியிலும், அதன் வளர்ச்சியிலும் இவர் அதிக அபிமானம் உடையவரென்பது விளங்கும்.

கடவுள் வாழ்த்தில் திருஞானசம்பந்த மூர்த்தியை வாழ்த்தியிருத்தலாலும் அவர் கதையைக் கோயில் பாடியதில் புகுத்தி விளங்கப் பாராட்டியிருத்தலாலும் பிறவற்றாலும் இவருக்கு அவரிடத்திருந்த சிறந்த பக்தி வெளியாகின்றது.

இவர் நன்றியறிவிற் சிறந்தவர்; இந்நூலில் பொதுவாகச் சோழர்களைச்சிறப்பித்தும், சிறப்பாகத்தம்மை ஆதரித்த சோழர்களைப் பலபடப் பாராட்டியும்,

காவிரிப்பூம்பட்டினத்திருந்த உபகாரிகளையும் பல்லவ ராயன் என்று பட்டம் பெற்ற நம்பிப்பிள்ளையையும் நல்ல சந்தர்ப்பத்தில் எடுத்துச் சிறப்பித்துமிருப்பதால் இது தெளிவாகும்.

போர் செய்யச் சென்ற வீரபத்திரதேவர் காஞ்சி சிவபெருமானுக்கு நீழல் செய்யும் மாமரத்தின் பல்லவத்தை (தளிரை) அணிந்தனரென்று கூறியிருத்தலால் காஞ்சிபுரத்தில் இவருக்கிருந்த பேரன்பு விளங்கும்.

இவருடைய வரலாறுகளைத் தனிப் புத்தகமாகவும் வேறு வேறாகவும் பலர் வெளியிட்டிருத்தலால் அவற்றை விரித்து எழுதாமல் இன்றியமையாத சில வரலாறுகளும் தக்கயாகப் பரணியாலறியப்பட்ட செய்திகளுமே இங்குத் தெரிவிக்கப்பட்டன.
(தக்கயாகப்பரணி. முகவுரை)

## 94. ஒற்றியூர் ஞானப்பிரகாசர்

இவர் சிவஞான சித்தியாருரை செய்தவர்; தத்துவப் பிரகாசருக்கு முந்தியவர்.

## 95. கச்சியப்ப சிவாசாரியார்

காஞ்சியில் இவர் இருந்த தெரு மேலை ராஜ வீதி. இது கச்சித்தெரு என்றும் வழங்கப்பெறும். தெற்கு ராஜ வீதி தண்டகநாடு என்று வழங்கப்படும். அறப்பெருஞ் செல்வித்தெருவெனக் கீழை ராஜ வீதி வழங்கப்படும். அறப்பெருஞ்செல்வித் தெருவில் பல தருமசாலைகள் இருந்தனவாம். வடக்கே செங்கழுநீர்க் கோயில் தெரு என்று ஒன்று உண்டு. இவரது தகப்பனார் பெயர் காளத்தியப்ப சிவாசாரியார். இவர் இயற்றிய நூல் கந்தபுராணம்.

இவர் கவி வீரராகவ முதலியாரைப் புகழ்ந்து பாடிய செய்யுளில் ஒன்று.

நாரேனும் பூவா நறுமணமா நின்கவிதை
ஆரேனும் கேட்கில் அவர்க்குந் தமிழ்வருங்காண்
போரேறே யெங்கும் பொழியவருங் கல்விக்குக்
காரே கடலே கவிவீர ராகவனே."

## ௯௬. கச்சியப்ப முனிவர்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ கச்சியப்ப முனிவரால் கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது என்னும் நூல் இயற்றப்பெற்றது.

ஆனந்த ருத்திரேசர் விஷயமாக இந்நூலை யன்றி இப்புலவர் பதிற்றுப்பத்தந்தாதியொன்றும் கழி நெடிலொன்றும் இயற்றியுள்ளார். திராவிட மகா பாஷியகர்த்தரும் இந்நூலாசிரியருடைய தமிழாசிரியரு மான ஸ்ரீ சிவஞான யோகிகளால் இயற்றப்பெற்ற பதிகம் ஒன்றும் உண்டு. இவற்றையன்றி இவ்விரு வராலும் வேறு சிலராலும் இம்மூர்த்தி சம்பந்தமாக அவ்வப்போது பாடப்பட்ட பல தனிச் செய்யுட்களும் உள்ளன.

கவிஞர் பெருமான் என்றும் கவிராட்சஸரென்றும் பெரும் புகழ் பெற்று விளங்கிய கச்சியப்ப முனிவர் இதன் ஆசிரியர் என்பதனாலேயே இந்நூலின் பெருமை விளங்கும். வண்டு விடுதூது ஒரு சிறுநூலாக இருப்பினும், இதனுட் பொதிந்துள்ள உயர்ந்த கருத் துக்களும் சாத்திரங்களும் சொற்பொருட் பிரயோகங் களும் அணிவகைகளும் நடை நயமும் மிகப் பெரிய நூலில் அமைந்தன போலவே விளங்குகின்றன. சிறிய கிழியிற் பெரிய பொருள்களை அமைத்துக் காட்டிய ஓவியமும், பல் வகைப் பொருள்களையும் சில்வகை யுருவிற் செவ்வன் செறித்து இனிது விளக்கும் கண் ணாடியும், வல்லவன் தைஇய பாவையும் இதற்கு

உவமையாமெனல் மிகையாகாது. கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தரித்தது என்றல் இதற்கும் அமையும். இவர் சைவ சித்தாந்த கருத்துக்களை இடை இடையே அமைத்துள்ளார்.

இவர் சில தினத்தின் காலையில் ஸ்நானஞ் செய்து வந்த பின் தூண்களிற் கட்டப்பட்டுள்ள கயிற்றிற் சடையை யுலர்த்தி விட்டு இருந்து 'நாம் கொடிகட்டியிருக்கிறோம்; நம்மிடம் பாடங் கேட்கவோ, சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளவோ வாதிக்கவோ வருபவர்கள் வரலாம்' என்று சொல்வாராம். பாடுந்திறமையின் மிகுந்திருப்பது பற்றிக் கவிராக்ஷஸன் என்று கூறப்படுவாராம். வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் பட்டத்திற்கு வருமுன் ஒரு நாள் ஜ்வரத்தில் வருந்திப் படுத்துக் கொண்டிருக்கையில் அவரைப் பார்க்கச் சென்ற இவர் அவர் கையிற் புத்தகமில்லாதிருப்பதைப் பார்த்து ஏன் படித்துக் கொண்டிருக்கவில்லையென்றார். அருகிருந்தோர் ஜ்வரமடிக்கின்றது என்றனர். இவர் ஜ்வரமாயிருந்தால் வாய் என்ன செய்கிறது என்றாராம். காத்தியாயனிருப்பு வடுகநாத தேசிகரென்பவர் வந்து இவர் ஏதாவது நூல் செய்யத் தொடங்குகையில் இந்நூலில் எனக்கும் ஏதாவது பாகங் கொடுக்க வேண்டும் என்பார். இந்நூல் செய்தல் என்னுடைய நாவின் தினவையே அடக்காதே; உமக்குக் கொடேன் என்பார். இவரது பரம்பரையோர் திருப்பாண்டிக் கொடுமுடியில் மாலை கட்டிப் பண்டாரங்களாகவும் ஓதுவார்களாகவும் இருக்கிறார்கள். இவர் பாடிய வேறு நூல்கள்: காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம், கச்சியாநந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி பஞ்சாக்கரவந்தாதி. இவர் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எழுநூற்றுப் பன்னிரண்டிற்குச் சரியான 'சாதாரண வருடம் சித்திரைத் திங்கள் புனர்ப்பூச நட்சத்திரத்தினத்தன்று இறைவனடி சேர்ந்ததாகத் தெரிகிறது.

## 97. கடந்தை மறைஞான சம்பந்த சிவாசாரியார்

இவர் சந்தானாசாரியருள் ஒருவர். சிவ புராணாதி தோத்திர மஞ்சரியில் இவர் துதி [333-ஆம் பக்கம்] வந்துள்ளது.

கடந்தை—பெண்ணாகடம்.

கடந்தைக்குத் தமிழ்ப் புராண மொன்றுண்டு.

## 98. கடம்பர் கோயில் மதுரை நாயகம் பிள்ளை

இவர் சைவ வேளாளர்; சார்வாய்க் கதிர்வேற் கவிராயருடைய அம்மான். சிறந்த வாக்கி. செய்யுட்களை விரைந்து செய்தலில் அதி சமர்த்தர். இவரால் அவ்வச் சமயத்துச் செய்யப் பட்ட தமிழ்ப் பாடல்கள் மிகப்பல; வசைக்கவிகள் பல; சீட்டுக்கவிகள் பல. இவர்பாடிய கீர்த்தனங்கள் பல ஆங்காங்கு வழங்குகின்றன.

அடியிற் குறிப்பிட்டுள்ள நூல்கள் இவராற் செய்யப்பட்டவை.

**1. அரியிலூர் அருந்தவ நாயகி பதிகம்:-** இது மழை இல்லாத காலமொன்றில் ஆண்டுள்ள பக்தர்களின் வேண்டுகோளின்படி செய்யப்பட்டதென்றும், இஃது அரங்கேற்றி முடிந்தவுடன் மழை பெய்ததென்றும் அரியிலூரிலும் அதைச் சார்ந்த ஊர்களிலுமுள்ள முதியோர்கள் சொல்லக் கேள்வி.

**2. அரியிலூர் துரைக்கண் குறவஞ்சி:-** துரைக்கண் என்பவர் அரியிலூர் பெரிய அரண்மனை ஜமீன்தார்களுள் ஒருவர்.

**3. உடையார்பாளையம் கச்சிரங்கன் குறவஞ்சி:—** கச்சிரங்கன் என்பவர் உடையார் பாளையம் ஜமீன்தார்.

**4. கடம்பர் கோயில் நொண்டி நாடகம்:-** இவர் அரியிலூரிலும் உடையார் பாளையத்திலும் ஆஸ்தான வித்துவானாக இருந்து பெரும்பாலும் காலங்கழித்தவர்.

இவருடைய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் முன்னோர்கள் புதுக்கோட்டையைச் சார்ந்த திருப்புல்வயலி லிருந்தவர்களென்று தெரிகிறது.

## 99. கடவுளா மகா முனிவர்

இவர் சைவாசாரியரென்று சொல்லப்படுகிறார். இவரியற்றிய நூல் **திருவாத வூரடிகள் புராணம்.** திருப்பெருந்துறைப் புராணம் செய்து கொண்டிருக்கையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் **பிள்ளையவர்கள்** இப்புராணத்திற் சில பகுதியைப் படிப்பித்துக் கேட்டு மனமுருகிக் கண்ணீர் விட்டு **அவர்கள்** ஆனந்தப்பெருக்க மடைந்ததை நேரிற் கண்டுள்ளேன் என்று ஐயரவர்கள் கூறியுள்ளார்.

இவர், அகத்திய முனிவர்பால் வரம்பெற்றுப் பாடத் தொடங்கியவரென்று **பிள்ளையவர்கள்** சொல்லக் கேள்வி.

## 100. கடாரம் சருக்கரைப் புலவர்

[கடாரம் என்பது உத்தரகோச மங்கைக்குச் சமீபமான தோரூர்.]

மேற்படி யூரிலிருந்த சாந்தப் பிள்ளை என்பவரின் மூத்த மனைவியின் குமாரர். இவருக்கு மனைவிகளைவர்.

இவர் செய்த நூல்கள் **மிழலைச்சதகம்** முதலியன.

சிறுகம்பையூர்ச் சருக்கரைப் புலவர் என்பவரும் இவரே.

## 101. கடிகை நமச்சிவாயப் புலவர்

இவர் கடிகை முத்துப் புலவருடைய பரம்பரையார். பர்த்ருஹரியையும், வல்லீ பரிணயத்தையும் இவர் தமிழ்ப் படுத்தியிருக்கிறார்.

எட்டையபுரத்திலேயே ஆஸ்தான வித்துவானாக இருந்தவர்; இவரை ஐயர் அவர்கள் நேரிற் பார்த்துள்ளார். மிக்க சாந்தமும் அடக்கமும் உடையவர்.

## 102. கடிகை முத்துப் புலவர்

இவருடைய ஊர் எட்டையபுரம். அந்த ஊர் அரண்மனை வித்வான். அங்கிருந்த சிற்றரசராகிய வேங்கடேசுவர எட்டப்பன் மீது அதிகமாகப் பாடியிருத்தலால் இவர் அவர் காலத்தினரென்று தெரிகிறது. சற்றேறக் குறைய இருநூற்று எண்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்.

**இவர் செய்த நூல்கள்:**

1. மதன விஸ்தார மாலை (ஊற்று மலையார் மீது)
2. ஸமுத்திர விலாசம்
   காமரஸ மஞ்சரி (எட்டையபுரத்தார் மீது)
3. திக்கு விஜயம் (சிவகிரியார் மீது)

இவர் செய்த யமகமுந் திரிபுமாகிய தனிப் பாடல்கள் மிக அதிகம். இறந்து போகுந் தறுவாயில்

இவரது கடைவாய் வழியே பால் வழியக் கண்ட அருகிலுள்ளார் 'ஏன் உண்ணவில்லை? பால் கசக்கின் றதோ' வென்று கேட்ப இவர் பாலொழுகுந் துணியின் அசுத்தத்தைப் புலப்படுத்தற் பொருட்டு "பாலுங் கசக்கவில்லை, துணியுங் கசக்கவில்லை" என்று சொன்னார் என்றும் அச்சமயத்தில் இவருடைய குமாரன் சமீபத்தே வந்து இனி யெங்களைப் பாதுகாப்பார் இல்லையே யென்று வருந்திய பொழுது இவர் அவனைப் பார்த்து "நீ ஏன் வருந்துகிறாய்? ஓரப்பன் போனால் உன்னைக் காத்தற்கு எட்டப்ப னுண்டு" என்று சொன்னார் என்றுங் கேள்வி.

இவர் காலம் எட்டைய புரத்தாருடைய வம்சா வளிப்படி சதகத்தால் தெரிகின்றது.

இவர் செய்த தனிப்பாடல்கள் பல.

திருகலகு வாய்ப்பறந்து சிறையொடுக்கி
யிருந்துவயற் சேலை வாரிக்
குருகலகு வாய்ப்பிடிக்குங் கூடனகர்த்
திருமலைவேள் கொலுவி னீயோய்
இருகலகு தலைமொழிக ளொத்தனைமா
லானாளென் றிசைத்தா லன்னம்
பருகலகு வளைத்தாரா யினுங்கேட்பர்
........................................

## ஒரு துறைக் கோவை

கைப்பது மங்கொடை யனெழுத் தாய்ச்சங்
கரன்றுணை யென்
றொப்பம் விசய ரகுநாதன் தேவை
யுயர்வரைமேல்
எப்பொற் பணிதியும் வேண்டாமென் றேசொலி
யிங்குலிகச்
செப்பைத் திறந்து மணிநீலங் கைவளை
சேர்த்தியதே.

## 103. கண்டராதித்தர்

இவர் திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவர். கண்டராதித்தம் என்பது ஓரூர். திருமழபாடிக்குப் பக்கத்தே உள்ளது. இப்பெயரால் இவர் சோழ பரம்பரையினராக எண்ணப்படுகின்றார். இவர் திருவிசைப்பா பெற்ற தலம் கோயில். பதிகம் 20.

உறையூரிலிருந்து அரசு செலுத்திய அரசர்களுள் ஒருவர். இராசராச தேவருக்கு ஐந்தாம் பாட்டர் என்பர். சிவமூர்த்தியைப் பாடி முக்தியடைந்தவர். இவர் பாசுரங்கள் ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. பராந்தக சோழனுடைய இரண்டாம் குமாரர். காவிரியின் வடகரையில் தம் பெயரால் ஓரூர் அமைத்தார். இவர் மனைவி உடைய பிராட்டியார்—செம்பியன் மாதேவியார் என்பவர். இவர் தம் பதிகத்துள் "கோழி வேந்தன் தஞ்சையர் கோன் கலந்த" எனவும்." தென்னன் நாடும் ஈழமும் கொண்ட திறற் செங்கோற் சோழன்" எனவும் கூறுதலில் தம் முன்னோர் பெருமை கூறியிருத்தலில் சோழவரசர் என்பது பெறப்பட்டது. புறச் சமயத்தார்களை மதிக்கும் பண்பு இவரிடம் இருந்தது. கண்ட ராதித்த சதுர்வேதி மங்கலம் இப்போது கண்டி ராஜ்யம் என வழங்கப்படுகிறது.

அவர் இயற்றிய பாடல்களுள் ஒன்று.

சீரால் மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத் தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன்
தஞ்சையர் கோன்கலந்த
ஆரா இன்சொற் கண்டராதித்தன்
அருந்தமிழ் மாலைவல்லார்
பேரா உலகில் பெருமை யோடும்
பேரின்பம் எய்துவரே.

## 104. கந்தசாமிக் கவிராயர் (சேற்றூர்)

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்களின் பரம்பரையினரும், சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங் கேட்டவரும், விரைவாகச் செய்யுள் செய்பவருமான கந்தசாமிக் கவிராயர் என்பவர் ஒரு சமயம் சுப்பிர மணிய தேசிகரைத் தரிசிக்கும் பொருட்டு வழக்கம் போலவே திருவாவடுதுறைக்கு வந்தார். பிள்ளை யவர்களுடைய புகழைக் கேள்வியுற்றவராதலின் இவரைக் கண்டு அளவளாவ வேண்டுமென்னும் விருப்பம் அவருக்கு மிகுதியாக இருந்து வந்தது. சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துவிட்டுப் பிள்ளை யவர்களைப் பார்க்க வந்தார். அப்பொழுது இவர் ஏதோ ஒரு நூலின் பகுதிக்குரிய செய்யுட்களை இயற்றி எழுதுவித்துக்கொண்டிருந்தார். ஒரு செய்யுள் செய்வதற்கே பல நாழிகை யோசித்து உபகரணங் களைத் தேடி வைத்துக்கொண்டு பாடுபவர்களை அக்கந்தசாமிக் கவிராயர் பார்த்தவராதலின், இவர் அநாயாஸமாகப் பாடுதலையும் இடையிடையே நண்பர்களோடு பேசுவதையும் அப்பேச்சினால் செய்யுள் இயற்றுதலில் யாதொரு தடையும் நேராமை யையும் கண்டு அளவற்ற ஆச்சரியம் அடைந்தார். உடனே வியப்பு மிகுதியால்,

ஓலை தேடி எழுத்தாணி தேடியாள்
 ஒய்ந்தி ருக்கு மிடந்தேடி யேயொரு
மூலை தேடி யிருந்துதன் மூக்குக்கண்
 ணாடி தேடி முகத்திற் பொருத்தியே
மாலைதேடி வருமட்டு மோர்கவி
 வந்த தென்று வரைந்து வழுத்துவன்
சாலை நீடிய பாப்பாங் குளத்துக்குத்
 தக்க சொக்கலிங் கக்கவி ராயனே

என்னும் பழைய தனிப்பாடலை அங்கே உள்ளவர் களுக்கு எடுத்துச்சொல்லி இவரை மிகவும் பாராட்டி னார். சிலநாள் பிள்ளையவர்களுடன் இருந்து சல்லாபம் செய்துவிட்டுச் சென்றார்.

## 105. கந்தசாமிப் புலவர்

'பூவணநாதருலா' ஆசிரியர். இவர் ஊர் திருப் பூவணமே; இது, திருவாப்பனூர்ப்புராணம், பாயிரம்3,

"கனியினைப் பிழிந்து செந்தேன் கண்டெடன வாப்ப
னூர் நம்
பனிமதி மிலைந்த நாதன் பன்னரும் புராணந் தன்னைப்
புனிதன்மெய்க் கந்த சாமிக் கவிஞன்பூ வணத்தான்
பார்மே,
லினிதெனப் புலவர் கூற வின்றமிழ்ப் புணர்த்தி னானே."

என்பதனாலும், திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் என்ற வழக்கத்தாலும் விளங்குகின்றது. திருப்பூவணத் திலிருந்த ஓர் உருத்திரகணிகையின் புத்திரராக இவர் கூறப்படுவர்; இது, "திருவால வாயர்" (31-ம் பக்கம்) என்னும் இந்நூற் சிறப்புப் பாயிரச் செய்யுளில், "பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனோர் கந்த சாமி" எனக் கூறப்பட்டிருத்த லாலும், பொன்னனையாளை, 'எம், பொன்னனை யாள்' (52-53 ம் கண்ணி) என இவ்வுலாவில் இவரே பாடியிருத்தலாலும் கர்ண பரம்பரைக் கேள்விக ளாலும் விளங்குகின்றது. இவ்வுலாவில், 46; 'மன் போசன் முத்து வடுகநா தேந்த்ரனருள், பொன்போலு மாடை புனைந்தருளி.' என்பதனால், இவர், சிவகங்கை அரசராக இருந்த முத்துவடுகநாத துரை யவர்களின் காலத்தவராக எண்ணப்படுகிறார். அக்காலம் சற்றேறக் குறைய 130 வருடங்களுக்கு முற்பட்டிருக்கலாமென்று தெரிகின்றது. திருப்பூவணப் புராணம், பாயிரம், 3-ம் செய்யுளிற் கூறப்பட்டிருக் குங் காலம் இற்றைக்கு 283-வருடங்களுக்கு முந்திய தாகின்றமையாலும், அந்தப் புராணஏட்டுப்பிரதிகளில் அந்நூல் இவர் செய்ததாக எழுதப் படாமையாலும், செய்யுட்களின் நடைவேறுபாட்டினாலும் அந்தக் காலத்தை இவருடைய காலமாகச் சொல்லக் கூட

வில்லை. இவ்வுலாவும் திருவாப்பனூர்ப் புராணமும் இவரியற்றிய நூல்களென்று சிறப்புப் பாயிரங்களால் நிச்சயமாகத் தெரிகின்றன. புஷ்பவன நாதர் வண்ணமும் திருப்பூவண ஸ்தல வகுப்பு தீர்த்த வகுப்பு, மூர்த்தி வகுப்பு என்பவைகளும் திருப்பூவண வாயிற் புராணமும் இவராற் செய்யப்பட்டனவென்று சொல்லுகின்றனர். இவரியற்றிய செய்யுட்களை ஆழ்ந்து பார்க்கையில் தேவாரம் முதலியவற்றிலும் சைவ புராணங்களிலும் சங்கச் செய்யுட்கள் முதலிய வற்றிலும் ஒழுங்கான பயிற்சியுள்ளவரென்றும், தமிழ் மொழிமீது மிக்க பற்றுடையவரென்றும், சிவபக்தி, அடியார் பக்தி வாய்ந்தவரென்றும் இவர் எண்ணப் படுகிறார். மேலே காட்டிய, "கனியினைப் பிழிந்து" என்னுஞ் செய்யுளால், இவருடைய வாக்கு, அக்காலத்திலேயே இன்ன வண்ணம் மதிக்கப்பெற்று வந்ததென்பது விளங்குதலின், அதன் அருமையைப் பற்றி ஈண்டு எழுதுவது மிகையென்று இம்மட்டோடே நிறுத்துகின்றனன். இவருடைய நூலாராய்ச்சி முதலியன பின்பு வெளிப்படுத்தப்படும்.

**வெண்பா**

*பூவணத்தெம் புண்ணியன்முன் பொன்னனையா ளுக்காக்கொள்*
*தூவணத்த பொன்மேனிச் சுந்தரன்மேற்—பாவணத்த*
*கந்தசா மிப்பேர்க் கவிஞனன்பிற் செய்திநூற்*
*கெந்தநூ லாகு மிணை.*

## 106. கந்தசுவாமி ஐயர்

சரவணப் பெருமாளையர் புத்திரர். பிரபுலிங்க லீலையுரை அச்சிட்டவர். சாலி. 1769.

## 107. கந்தப்பையர்

இவர் 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் திருத்தணிகையில் வாழ்ந்திருந்தனர். திருவாவடுதுறை

யாதீன வித்துவானாகிய ஸ்ரீ சிவஞான முனிவருடைய மாணாக்கரும், 'கவிராக்ஷஸர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவருமாகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவருடைய மாணாக்கர்களுள் ஒருவர். பரம்பரையாகத் தமிழறிவில் சிறந்திருந்த வீரசைவ குடும்பத்தில் உதித்தவர். இவருடைய பெயர் கந்தப்ப தேசிகர் எனவும் வழங்கும். தணிகாசல புராணம் சிறப்புப் பாயிரம் "கந்தப்பமுனி" என்று கூறும்.

இவருடைய முன்னோர்கள் கல்வியறிவிற் சிறந்திருந்தவாறே இவருடைய பின்னோரும் சிறந்திருந்தனர். இவருக்கு விசாகப்பெருமாளையர், சரவணப் பெருமாளையர் என்னும் இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். இருவரும் தம் தந்தையாரிடம் கல்வி பயின்றதோடு இராமாநுச கவிராயர் என்னும் சிறந்த வித்துவானிடத்தில் தமிழ் பயின்றனர். இருவரும் தமிழில் பல நூல்களுக்கு உரையெழுதி வெளியிட்டிருக்கின்றனர், பஞ்சலட்சண வசனம், பஞ்சலக்ஷண வினாவிடை என்பவற்றைத் தாமே எழுதியும், சில பழைய நூல்களைப் பதிப்பித்து முள்ளனர், இவர்களுள் விசாகப் பெருமாளையர் என்பவர் அப்போது சென்னை மாகாணப் பள்ளிக்கூடம் (Pnovincial School) என்று வழங்கிய இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராக இருந்து புகழ் பெற்றார்.

கந்தப்பையர் திருத்தணிகையில் இப்போது 'சீர்கருணீகர் மடம்' என்று வழங்கும் இடத்தில் வாழ்ந்து வந்தார். இவர் தணிகாசலபுராணத்தைத் தம்முடைய இளமைக் காலத்தில் இயற்றியிருத்தல் கூடும். கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்ற திருத்தணிகைப் புராணம் அவருடைய பன்னூலறிவையும் கம்பீரத்தையும் வெளிப்படுத்துகின்றது. தணிகாசல புராணம் கந்தப்பையருடைய சுப்பிரமணிய பக்தியையும், இளமைக்காலத்துத் தமிழ்ப் பயிற்சியையும்

விளக்குகின்றது. இவர் பாடிய திருத்தணிகைச் சந்நிதி முறை இப்புராணத்திற்குப் பல வருஷங்களுக்குப் பிறகு இயற்றியிருத்தல் கூடும் என்று தோன்றுகிறது.

கச்சியப்பமுனிவர் இயற்றியுள்ள தணிகைப் புராணத்திலுள்ள வரலாறுகளுக்கும் தணிகாசல புராணத்தில் கண்ட வரலாறுகளுக்கும் பலவகையில் வேறுபாடுண்டு. தணிகாசலபுராணத்தில் கண்ட செய்திகள் தணிகைப்புராணத்தில்இல்லை. தணிகைப்புராணத்தில் கண்ட வரலாறுகள் சில தணிகாசலபுராணத்தில் இல்லை. அன்றியும் தணிகாசல புராண நூலின் போக்கைஆராய்கையில்ஆசிரியர் பின்னும் சிலபகுதிகள் இயற்றியிருக்கக் கூடும் என்றும், இன்றேல் இயற்ற எண்ணியிருக்கக் கூடுமென்றும் தோன்றுகின்றது.

தணிகாசல புராணத்தின் நடை எளியதாகவும் வடமொழிச் சொற்களும் தொடர்களும் விரவிய தாகவும் உள்ளது. ஆசிரியர் தம்முடைய புலமையைக் காட்டுவதைக் காட்டிலும் பொருளை யுரைப்பதே பெரிதெனக் கருதி தணிகாசலபுராணத்தை இயற்றினர் போலும்.

இவர் முருகக்கடவுள்பால் உள்ள அன்போடு சிவபக்தியும் உடையவராதலின் சிவபெருமானே தேவர்களிற் சிறந்தோரென்றும் (தணிகாசல. செய். 111) அவரே மும்மூர்த்திகளாக இருந்து முத்தொழி லையும் இயற்றுகின்றனரென்றும் (தணிகாசல. செய். 38) சிவபெருமானே பக்வான்மாக்களுக்கு உபதேசம் செய்யும் பொருட்டுக் குருமூர்த்தியாக எழுந்தருளுவா ரென்றும் (தணிகாசல. செய். 21.) கூறுகின்றார்.

முருகக்கடவுளிடத்தே முறுகிய பக்தியுடைய இவ்வாசிரியர் அப்பெருமானுடைய பெருமைகளைப் பலபடப் பாராட்டியுள்ளார் தணிகாசலபுராணத்தில்.

ஓரினப்பட்ட பொருள்களைத் தொகுத்துக் கூறுவதில் இவருக்குத் தனி ஊக்கம் உண்டு. அங்ஙனம் கூறும் இடங்களில் பெரும்பாலும் அடைமொழி யின்றியே அவற்றைப் புலப்படுத்தும் இயல்பினர் இவர்.

இவர் இயற்றிய தணிகாசல புராணத்தில் சொற் பொருளணிகளை அங்கங்கே காணலாம். இவருடைய வாக்கில் பல வடசொற்களும், வடசொற்றொடர்களும் விரவி வந்துள்ளன.

இவர் இயற்றியுள்ள தணிகாசல புராணம் 426 செய்யுட்களைக் கொண்டது. அவற்றிலொன்று.

> போற்றி போற்றி சடானனா போற்றி போற்றி புராதனா
> போற்றி போற்றி வரோதயா போற்றி போற்றி நிராமயா
> போற்றி போற்றி சிலாதலா போறறி போற்றி நிராகுலா
> போற்றி பார்வதி நந்தனா போற்றி காங்கெய போற்றியே.

## 108. கம்பம் திருச்சிற்றம்பலம் பிள்ளை

இவர் ரகுநாத சேதுபதி காலத்திற் செவ்வந்தி முனிவன் திருப்பணி செய்கையில் 4143 செய்யுளுள்ள தான திருமருதூர்ப் புராணம் செய்தவர்; காரானர் குலத்திற் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சுப்பிர மணிய பிள்ளை யென்பது. கம்பம் என்பது திருமரு தூருக்கருகே யுள்ளதான ஓரூர். இது கம்பை யெனவும் வழங்கும்.

## 109. கம்பம் வீரராகவ ஐயங்கார்

கம்பம்—ஒரு ஜமீன் பெயர். கம்பராமாயணப் பிரசங்கம் செய்வதில் வல்லவர். மாம்பழக் கவிராயரின் நண்பர்.

## 110. கம்பர்

இவர் பிறந்த ஊர் சோழநாட்டிலுள்ளதாகிய தேரழுந்தூர். இது தமிழ் நாவலர் சரித்திரத்திலுள்ளதாகிய "கம்பன் பிறந்த ஊர்" என்னும் வெண்பாவால் வெளியாகின்றது. தேரழுந்தூரில் மேல்புறத்தில் ரோட்டுக்குத் தெற்கில் இக்காலத்துப் பாழாகக் கிடப்பதும் கம்பன் மேடென்று வழங்கப் படுவதுமாகிய இடத்தைப் பல் நிலைகள் அமைத்து மிகவுன்னதமாகக் கட்டப்பட்டிருந்த கம்பர் வீடும் அவருடைய தாசியின் வீடுமிருந்த இடமென்று சொல்லுகிறார்கள். அக்காலத்தில் இவ்வூர் வழியே காவிரி சங்கம ஸ்நாநத்திற்குச் சென்ற ஓரரசன் நிலைகடோறும் தீபங்கள் வைக்கப்பட்டு விளங்கிய கம்பர் வீட்டை ஏதோ ஆலயமென்றறிந்து அஞ்சலி செய்து, பின்பு ஆலயம் அன்று என்பதை அருகிலுள்ளோரால் அறிந்து சினந்து 'நான் மீண்டும் வருவதற்குள் இவ்வீட்டையிடித்து விடுக' என்று கட்டளையிட்டு விட்டுச் சென்றான் என்றும், அவர்கள் அவ்வாறே செய்துவிட்டு அவ்விடத்திற்கருகே விநாயகர் ஆலயம் ஒன்று கட்டுவித்தார்களென்றும் சொல்லுகிறார்கள். அப்பிள்ளையார் வெள்ளை நிறமுடையவராக விளங்குகிறார். அக்கோயில்மேட்டுக்கு அருகிலுள்ளது. கம்பரால் பூசிக்கப்பட்டு வந்தவர் என்று சொல்லப்படுகிறார். இந்த ஆலயத்திற்கருகே மாரியம்மன் கோயில் ஒன்றுமிருக்கிறது. "சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூரில் வாழ்வோன்" என்று இராமாயணச் சிறப்புப் பாயிரத்திற் கூறியிருப்பதும் கம்பர் திருவழுந்தூரில் வாழ்ந்தாரென்பதை வலியுறுத்துகின்றது. இந்த ஊரில் ஆமருவிப் பெருமாள் கோயிலின் வெளிக் கோபுரத்து உட்புறத்தே தென்புறமாக மேற்றிசையைப் பார்க்க ஓராண் வடிவமும் பெண் வடிவமும் கை குவித்த வண்ணமாகக் கருங்கல்லில் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வடிவங்களுக்கு அருகே கோயில் செலவிலிருந்து

தினந்தோறும் தீபம் போடப்பட்டு வருகிறது. இதைப் பற்றிப் பலரிடத்தும் விசாரித்த பொழுது ஆண் வடிவம் கம்பர் வடிவமென்றும், பெண்வடிவம் அவர் மனைவி வடிவமென்றும் சொல்லுகிறார்கள்.

கம்பர்க்கு வித்தை வந்த வரலாறு.

தேரழுந்தூர்ச் சிவாலயத்தில் அகிலாண்ட நாயகியைக் குறித்துத் தவஞ் செய்து கொண்டிருந்த ஒரு பிராமணப் பிரமசாரிக்கு முன்பு. தேவி நீசமங்கை வடிவுகொண்டு வந்து தம்பலமுமிழ்தற்கு வாயைத் திறக்கச் சொல்ல, அப்பொழுது நீசப் பெண்ணென்று மறுக்க, அப்பொழுது அவ்வழியே சென்று கொண் டிருந்தவனும் காலிங்கராயன் என்னும் நொண்டி உபாத்தியாயரிடம் படிப்பவனுமாகிய ஓர் உவச்சப் பையனை யழைத்து வாயைத் திறக்கச் சொல்ல அவன் திறக்க, அவன் வாயில் தம்பலத்தை யுமிழ்ந் தாள். அவன்தான் கம்பன். அது மூலமாக அவனுக் குத் தமிழ் வித்தை யாவும் வந்தன என்பர் தேரழுந் தூரில் ஒரு சாரார். கிழக்கேயுள்ள அசிக்காட்டிலிருந்த பள்ளிக்கூடத்தில் காளிங்கராயனிடம் கம்பர் படித்துக் கொண்டு வருகையில், இவர் தந்தையார் பாடங்களை உடனுடன் இவர் மறந்து விடுதலைப் பரீக்ஷித்தறிந்து உபாத்தியாயருக்குச் சொல்லி அடிப்பிக்க, இவர் அவ்வூரிலுள்ள சிவன் கோயிலிலே கவலையோடு படுத்துறங்குகையில் அக்கோயிலிலுள்ள அம்பிகையின் திருவருளால் இவருக்குத் தமிழ் வித்தைகள் யாவும் எளிதில் வந்தன என்பர், மற்றொரு சாரார். நல்ல சிவன் கோயிலுள்ள இடமும் அதைச்சூழ்ந்த இடமும் காலிங்கராயன் கட்டளையென்று சொல்லப் படும் என்பர்.

**பெயர்க்காரணம்:-** காலிங்கராயனுடைய கம்பங் கொல்லை காத்தமையால் இவர் இப்பெயர் பெற்றார் என்பர்.

**சடையனிருந்த வெண்ணெய் நல்லூர்:-** இது முள்ளுக்குடிக்குத் தெற்கு மாயூரம்போகும் ரோட்டிற்கு வடக்கு முள்ளுக்குடி கிராமத்திற்கு மேற்கு, கதிரா மங்கலத்திற்குக் கிழக்கு ஆகிய இந்த நான்கு எல்லைக் குட்பட்ட கிராமம். இது 60 வேலி நன்செய் நில முள்ளது. இக்காலத்துக் கதிராமங்கலத்தைச் சேர்ந்து விட்டது. அவ்வெண்ணெய் நல்லூரின் தென்பாகத்தில் நூறு வீடுகளுள்ள ஒரு வேளாளர் தெரு இருக்கிறது. பண்டைக் காலத்தில் இது சடையனுடையதாக இருந்ததென்பது இதற்கு இப்பொழுது வழங்கும் சடையப்பபிள்ளை கிராமம் என்பதனாலேயே வெளியாகும். இதில் அக்காலத்தில் கட்டிடமாக இருந்து இப்பொழுது பாழாகக் கிடக்கும் முப் பெருமாள் கோயிலுக்கருகே முக்கால் வேலி நிலம் பாழாகக் கிடக்கின்றது. அவ்விடததில் மிகுதியாகச் செங்கற் குவியல்களும் அஸ்திவாரங்களும் காணப் படுகின்றன. அவ்விடத்தேதான் சடையப்ப பிள்ளை யின் வீடு மிகப்பெரியதாக இருந்ததென்று சொல்லு வார்கள். அத்திடலுக்குக் கிழக்கே இப்போது குளக் காணியென்று ஓரிடம் வழங்கப்படுகின்றது. அது சடையப்ப பிள்ளையின் வீட்டுக்கெதிரே ஒரு பெரிய குளமிருந்த இடமென்று சொல்லப்படுகிறது. இதில் மணியனாரென்று பெயர் கொண்ட ஐயனார் கோயில் தென்புறத்திலும், தன்னத் தலையம்மன் என்று பெயருள்ள பிடாரியின் கோயில் வடபுறத் திலும் கிலமாய்க் கிடக்கும் சிவன் கோயிலொன்று கிழ்ப்புறத்திலும், முப்பெருமாளென்கிற வேங்கடா சலபதியின் சிலை மேல்புறத்திலு முள்ளன. ஐயனார்க்கும் பிடாரிக்கும் உற்சவம் நடப்பது தனியே. அதுகதிராமங்கலத்தில் நடப்பதோடுசேராது. அக்கிராமத்திலிருந்த கோயில்களிலுள்ள கற்சிலைகள் பலவும் அப்போதைக்கப்போது பலராலும் கொண்டு போகப் பட்டனவென்பர். அவற்றுள் ஒரு விநாயகச் செப்பு விக்கிரகம் ஒன்று கதிராமங்கலம் விசுவநாத

சுவாமி கோயிலிற் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பீடத்தில் 'வெண்ணெய் நல்லூர்ப் பிள்ளையார்' என்று பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது, கிராமத்திற்கு வெண்ணெய் நல்லூர் என்று பெயருண்டென்பதை வெளியாக்குகின்றது. குதிரை மேய்ந்தான் என்று பெயருள்ள வயல்கள் 13 மா நிலமுள்ளவை ஒரு பாகமுண்டு. அதில் சடையனுடைய குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தனவென்பர். காடு வெட்டி என்று ஒரு பாகமுண்டு.

**கம்பர் செய்த நூல்கள்:-** 1. தேரழுந்தூர்ச் சதகம். 2. ஆழ்வார் நூற்றந்தாதி. வருஷத்திற்கு ஒருமுறை தேரழுந்தூர்க் கோயிலில் இஃது அரையரால் படிக்கப்படுகின்றது. 3. திருமங்கை மன்னன் செய்த சிறிய திருமடலினிறுதியிலுள்ள "ஊராதொழியேன்" என்பதும், பெரிய திருமடலின் இறுதியிலுள்ள 'என்னிலைமை', 'மண்ணில்' ஆகிய வெண்பா இரண்டும்.

### 111. கமலை நகர்ச் சிற்றம்பலவர்

இவர் அவ்வூர்ச் சுப்பிரமணிய பிள்ளையின் புதல்வர். இவராற் செய்யப்பட்ட நூல் திருமருதூர்ப் புராணம். (திருச்சிற்றம்பல அய்யர்).

இப்புராணத்தில் மருதூர் அந்தாதி பாடிய தலைமலை கண்ட தேவர் சரித்திரம் கூறப் பெற்றிருத்தலின், இவர் அத்தேவர் காலத்திற்குப் பிந்திய காலத்தவர் என்று தெரிகிறது.

### 112. கம்மாள இராமசாமிக் கவிராயர்

இவர் சென்னையில் இருந்தவர். பட்டு ராமச்சந்திர கவிராயருடைய ஆசிரியர். இவர் வண்ணம்,

சிந்து, குறவஞ்சி முதலிய செய்தலில் வல்லவர். சரஸ்வதி பதிகம் இவராற் செய்யப்பட்டது. குறித்த நாவிதன் வராதபொழுது பின்வரும் செய்யுளைப் பாடி, அது தெரிந்து வந்து குறையிரந்த அந்நாவிதன் வேண்டுகோளுக்கிரங்கி அதை மறுத்தும் பாடினர்.

1. வானின் மறைந்தனனோ வாரேனென் றேயொழியப்
போனவிடத் தன்னிற் புதைந்தனனோ—தானேபோய்
அம்பிட்டுக் கொண்டனனோ எமனிடத்திற் சிக்கினனோ
அம்பட்ட ரங்க னெதோ?

## மாற்றிப் பாடியது

2. வானின் மறையவில்லை வாரேனென்றே யொழியப்
போனவிடந் தன்னிற் புதையவில்லை—தானேபோய்
அம்பிட்டுக் கொள்ளவில்லை யெமனிடத்திற்
சிக்கவில்லை
அம்பட்ட ரங்க னதோ!

## 113. கருணாகரக் கவிராயர்

இவர் செய்த நூல் **திருவோத்தூர்ப் புராணம்.**

## 114. கருணைப் பிரகாசர்

இவர் துறை மங்கலம் சிவப்பிரகாசருடைய இரண்டாஞ் சகோதரர். இவர் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் கூறப்படுவர். சோண சைல மாலை யுரையும், சீகாளத்திப் புராணத்தின் முதற் பாகமும் இவர் செய்தவை.

குருதேவராதீனத்தர் சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரத்தில் இவர் சரிதம் இருக்கின்றது.

## 115. கருவூர்த் தேவர்

இவர் திருவிசைப்பாச் செய்தவர்களுள் ஒருவர்; சிவபுராணாதி தோத்திர மஞ்சரியில் இவர் துதி வந்துள்ளது. பக். 328 கருவூர்ப் புராணத்தில் இவர் சரித்திரம் காணப்படும். இவர் சமாதி கருவூர்

ஆனிலைக் கோயிலில் முதல் பிராகாரத்தில் தெற்கு மூலையிலிருக்கின்றது; பூசிக்கப்பட்டும் வருகின்றது.

இவர் உலகவாழ்வில் புளியம்பழமும் ஓடும் போல ஒட்டியும் ஒட்டாமலும் விளங்கியவர். இவர் செய்த அற்புதங்கள் பல.

இராசராச சோழன் காலத்தவர். திருப்புடை மருதூர் ஸ்வாமியைத் திருமேனி சாய்ந்திருக்கும்படி செய்தவர். இது "கான்சாயும் வெள்ளி மலைக்கரசே" செய்யுளால் விளங்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கோயில் | பதிகம் | — 1 | பாடல் | 11 |
| 2. | திருக்களந்தை ஆதித்தேச்சரம் | ,, | — 1 | ,, | 10 |
| 3. | திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம் | ,, | — 1 | ,, | 11 |
| 4. | திருமுகத்தலை | ,, | — 1 | ,, | 10 |
| 5. | திரைலோக்கிய சுந்தரம் | ,, | — 1 | ,, | 11 |
| 6. | கங்கை கொண்ட சோளேச்சரம் | ,, | — 1 | ,, | 11 |
| 7. | திருப்பூவணம் | ,, | — 1 | ,, | 8 |
| 8. | திருச்சாட்டியக்குடி | ,, | — 1 | ,, | 10 |
| 9. | தஞ்சை இராசராசேச்சரம் | ,, | — 1 | ,, | 11 |
| 10. | திருவிடை மருதூர் | ,, | — 1 | ,, | 10 |
| | | மொத்தம் பாடல் | | | 103 |

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல் நிறையஆனந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே யென்று
குழைவரே கண்டவர் உண்ட
-லமே ஆகில் அவரிடம் களந்தை
ணிதிகழ் ஆதித்தேச் சரமே.

## 116. கல்போது பிச்சுவையர்:

கல்போது:—பாண்டிநாட்டில் உள்ள சாத்தூர்த் தாலுகாவிலுள்ளதோர் ஊர். இவர் பரம்பரையில் ஒவ்வொருவரும் தமிழ் வித்வான்கள். விநோதமாகக் கவி பாடுவதில் வல்லவர். கல்போது என்ற ஊருக்கு வாடி என்ற பெயருமுண்டு. இவர் பாடிய பாடல்களுள் ஒன்று.

"வாடி நகரிருக்க மன்னன் தயவிருக்க
ஓடிப் பணிவிடைசெய் வோரிருக்கப்—போடிநகர்க்
கேன்றான் பெரியமலை யேறிவந்தே னையையோ
நான்றா னினிவருவே னா."

## 117. கல்போது முத்துக் குமாரசாமி மணியகாரர்

கல்போது என்பது திருநெல்வேலி ஜில்லாவைச் சார்ந்த சாத்தூர் தாலுக்காவில் உள்ள ஓரூர்.

இவர் இவ்வூரில் உள்ள ஜமீனுக்குத் தலைவரென்றும் சிறந்த தமிழ்க் கல்விமானென்றும் செய்யுள் செய்தலில் வல்லவரென்றுங் கேள்விப்பட்டிருக்கிறார் ஐயரவர்கள்.

## 118. கல்லாடர்

இவர் செய்தது கல்லாடம். இன்னும் இவர் செய்தவை 11-ஆம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் அபிதான கோசம் மூலம் அறியலாம்.

'கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே' என்று ஒரு பழமொழி வழங்குகின்றது.

கல்லாட மாமூலரென்று சேர்த்து வழங்குவதால் மாமூல ரென்பவர் இவருடைய நட்பினரென்று எண்ணப் படுகிறார்.

இப் பெயருள்ளவர்கள் சிலரென்பது ஒரு சாரார் கொள்கை.

## 119. கலியுகத்து மெய்யன் கவிராயர்

இவர் சைவர்; இவர் திருக்குற்றாலத்திற்குப் புராணமொன்று செய்திருக்கின்றனர்; இது திரிகூட ராசப்பக் கவிராயருடைய புராணத்திற்கு முந்தியதென்று தெரிகிறது. அதை நிச்சயமாகச் சொல்லக் கூட வில்லை. இதிலுள்ள சுருக்கங்கள் மிகவும் சுருக்கமாக வருகின்றன. பத்தைக்கு அருகே யுள்ள சாஸ்தாவுக்கு இப்பெயருண்டு.

திருக்கழுக்குன்றத்தி லெழுந்தருளிய சிவ பெருமானுக்குக் கலியுகத்து மெய்யனென்று பெய ருண்டு.

## 120. கவித்தலம் சிவப்பிரகாச ஐயர்

இவர் கவித்தலம் வேலையருடைய தந்தையார். அவருக்கும் இராமானுஜபுரம் தாண்டவராயப் பிள்ளைக்கும் ஆசிரியர். இது வேலையர் செய்த திருவே ரகத்தந்தாதியிலுள்ள துதியால் விளங்கும். வீர சைவர்.

## 121. கவித்தலம் வேலையர்

இவர் வீரசைவர்; துறைமங்கம் வேலையரு டைய பரம்பரையினரென்று சொல்லப்படுவர். இவர் தந்தையார் சிவப்பிரகாசையர். இது திருவேரகத்தந் தாதியிலுள்ள 'கொந்தார் கடம்பணி' என்பதனாலறியப் படும். இவரிருந்த விடம் கீழைக் கவித்தலத்தைச் சார்ந்த கோழிப்புற்றுத் தெரு. இவர் பரம்பரையில் ஒவ்வொருவரும் படித்தவர்கள். கவித்தலத்திலிருந்த

பெரியப்பு மூப்பனாரென்று வழங்குகிற ராமபத்திர மூப்பனாரால், ஆதரிக்கப்பட்டவர். மூப்பனார், "ஆனையுங் காத்தவனே யெனைக்காப்ப தரிதல்லவே" என்னும் ஸமஸ்தி கொடுக்க இவர் அதைப் பாடி முடித்தனர். சின்னப்பு மூப்பனார் இவருடைய மாணாக்கர். சிறந்த இனிய வாக்கி. விரைந்து செய்யுள் செய்தலில் மிகவல்லவர். இவர் செய்த நூல்கள்:

1. திருப்பழூர்ப் புராணம்
2. பழூர் அருந்தவ நாயகி மும்மணிக் கோவை
3. திருவேரகத்தந்தாதி
4. திருவைகாவூர்ப் புராணம்

## 122. கவிராச நாயகம் பிள்ளை

இவர் எல்லப்ப நாவலருடைய பரம்பரையிற் பிறந்தவரென்று சொல்லுகிறார்கள். இவர் வடபாதி மங்கலத்து முதலியார் ஒருவர் கேட்டுக்கொள்ள, சாயாவனப் புராணமொன்று செய்திருக்கின்றனர். இவரூர் காவிரிப்பட்டினத்தைச் சேர்ந்த இராதா நல்லூர்.

## 123. கவிராசர்

திருக்குறளுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர், "ஆறுமுக னாணை" என்னுஞ் செய்யுளில் இவர் பெயர் வந்துள்ளது.

## 124. களக்காரு சந்திரசேகரபண்டாரம்

இவர் வேளாளர்; மதம் சைவம்; அபிஷிக்தர். இவர் செய்த நூல் தசகாரிய மொன்று.

## 125. களந்தை ஆதியப்பர்

சாலிசகம்—1642
சாருவரி—வருஷம்

திருக்களர்ப் புராணஞ் செய்தார் என்று புராண உரைச் சிறப்புப் பாயிரத்தால் தெரிகிறது.

களந்தை—பொன் விளைந்த களத்தூர்.

இவர் மாயூரத்தின்பழைய புராண நூலாசிரியர். தமிழ்த் தரையர்; 'கம்பனென்னும்' என்பது இவரைப் பற்றியதாகத் தெரிகிறது. **'நற்களந்தை யாரியப்பன்'** என்பது பாடம்.

இவர் செய்த நூல்கள்:

1. மாயூரப்புராணம் (பழையது)
2. திருக்களர்ப் புராணம்
3. திருக்கொள்ளம் பூதூர்ப் புராணம்
4. தஞ்சைப் புராணம்.

மா வண்டூர் விசுவநாத முதலியார் தமிழ்த் தரையர் கோத்திரத்தினர்; ஆதியப்ப முதலியாரென்று தொண்டைநாட்டார்களிற்பலருக்கு நாமதேயம்உண்டு.

நாயகன் **வாழ்** மாயூரத் தலபுராணம் பாடி நவின்ற தாமால்—பாயிரம் 23.

'மாத்தூர்' என்று காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ளது.

எங்கு நுவல் வடகலையிற் சருக்க மெல்லா
மிலகுபசுந் தமிழ்மொழியா லெவர்க்குந் தோன்றப்
பொங்கு புகழ் வாணிகர்கோத் திரத்தின் மேவும்
பொன்மாறைப் பதிபுரக்கும் போசன் பூத,
செங்குவளைத் தொடையல் வயித் தியநாதன் சேய்
திரா வினைதீர்த்தான் சேய் என்றோதச்,
சங்க வயற் பொன் விளைந்த களத்தூர் மேய
தமிழ்த்துரைய னாதியப்பன் சாற்றி னானால்.

## 126. களந்தைக் குமர முனிவர்

இவர் திருவாஞ்சியத்திற்குப் புராணஞ் செய்திருக்கிறார். அப்புராணஞ் செய்வித்தோர் முகுந்தனூர்

அடிகளென்பவர். **முகுந்தனூர் குழிக்கரைஸ்டேஷனுக்கு** வடக்கே **5** மைல் தூரத்திலுள்ளது.

புராணம்—செய்யுள் **830**

களந்தை—பொன் விளைந்த களத்தூரோ களப் பாழோ யாதும் தெரியவில்லை.

## 127. கற்குடி மருதமுத்துப் பிள்ளை

இவர் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலன்றிச் சோதிட சாத்திரத்திலும் வல்லவர்.

## 128. கன்றாப் புடையார்

இவர் தில்லை வண்ணம் பாடியவர். இது சிற்றம்பல வாணர் வண்ணம் என்று வழங்கும். இன்னும் சில பிரபந்தங்கள் செய்தவர். சோழ மண். 74.

## 129. கன்றாப்பூர்க் கவிராயர்

இவ்வூர் நாட்டியத்தான் குடிக்கருகிலுள்ளது.

**இவர் செய்த நூல்கள்**

1. வனச விடு தூது
2. திருவருட் பாமாலை

இவர் பாண்டி நாட்டில் ஊற்று மலையில் மருதப்பத் தேவரென்ற ஜமீன்தார் காலத்தில் ஆஸ்தான வித்வானாக இருந்து அவர்மீது சில பிரபந் தங்கள் பாடினர். இவர் பரம்பரையோர் வீரகேரளம் புதூரிலிருக்கிறார்கள். (ஐயரவர்கள் காலத்தில்)

## 130. கன்னிவாடி ஜமீன்தார் மலையாண்டி யப்ப நாயக்கர்

(இவர் பிரபுவும், வித்துவானும் ஆவர்.) தும்பிச்ச நாயக்கனாரென்ற—பேரையூர் அரைக்கிரை

யைக் குறித்துக் கன்னிவாடி ஜமீன்தார் நாரசிங்கப்ப நாயக்கர் புத்திரர் மலையாண்டியப்ப நாயக்கரியற்றிய கவிகள்.

உரகமுடிச் சுமையுலகிற் பேரையூ
ரரைக்கிரைக் குடனே யாருஞ்
சிரகரகம் பிதந்தரவே நற்பூசைக்
கமுதளிக்கச் செய்யும் போதி
லரகரவென் றுரைக்கிலங்க ணோடவென்று
பரங்கிரிமே லையரின்று
மரகதக லாபமயிற் கிமொருகான்
மேலொருகால் வைக்கின் றாரே.

பூவினிக்குந் சுழையினிக்கும் வேரினிக்கும்
விதையினிக்கும் புடைசூழ் கின்ற
காவினிக்குந் தன்மைபெற்ற பேரையூ
ரரைக்கிரைக் கறியுண்டார்கள்
நாவினிக்கு மதைக்கண்ட கண்ணுமிக
வினிக்குமதை நாடிப் பாடும்
பாவினிக்குங் கேட்டசெவி யினிக்குமன
மினிக்குமெனப் பகர லாமே.

நட்டியமந் தரங்கடலைக் கடைந்தபொழு
திமையவர்க்கு நரர்க்கு மென்றே
கட்டியமு தொடு பிறந்த பேரையூ
ரரைக்கிரைக் கறியை யுண்ண
வட்டில்புகுந் தவர்பாக மிட்டலவ
ணச்சுவையை யறிய வேண்டிப்
பிட்டிடக்கண் டெமக்கெனவே நரசிங்க
ரின்னமும் வாய் பிளக்கின்றாரே.

பலபடைப்பை யுற்றதனா லன்னமிசை
யேறியிருப் பதனா னாளும்
நிலவுமுடல் பசந்ததனா லரியரியென்
றருந்தவர்க ணிகழ்த்த லாலும்
மலைகயிலை வாய்வாச மணத்தலினாற்
சைவர் நம்பி நாட லாலும்
சொலவரிய பேரையூ ரரைக்கிரை திரிமூர்த்தி
சொரூபந் தானே.

## 131. கனகசபாபதி வள்ளலார்

திருவொற்றியூர் மும்மணிக் கோவையென்பது இவர் செய்ததாக வழங்குகின்றது. இந்நூல் பவ வருஷம் ஐப்பசி மாதம் பதிக்கப்பட்டது.

## 132. காசீம் புலவர்

இவர் முகம்மது மதத்தினர். ஊர் மதுரை ஜில்லாத் துறைமுகமாகிய காயற்பட்டின மென்பது. இவர் திருவடிக்கவிராய ரென்பவருடைய மாணாக்கர். இவர் செய்த நூல் முகம்மது நபியின் திருப்புகழ். இவர், தம் ஆசிரியரால் புகழப்பட்டிருக்கிறார்.

## 133. காஞ்சிக் கோனேரியப்ப முதலியார்

இவர் சைவர். இவராற் செய்யப்பட்ட நூல் உபதேச காண்டம்.

## 134. காஞ்சிச் சரவண தேசிகர்

இவர் சிவஞான முனிவர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர்.

## 135. காஞ்சிபுரம் கச்சபாலையர்

திருவேட்டீசர் பதிற்றுப் பத்தந்தாதியென ஒரு நூல் இவர் செய்ததாக வழங்குகின்றது. ஸ்வாமி சென்னையைச் சார்ந்த திருவேட்டீசுவரன் பேட்டையிற் கோயில் கொண்டிருப்பவர்.

## 136. காஞ்சிபுரம் லக்ஷ்மண முதலியார்

இவர் கம்பராமாயணத்தில் முதல் 3 காண்டத்தையும் வசனமாக எழுதினவர். இராமாயண வசனம் 1864-இல் பதிக்கப்பட்டது. உடன் இருந்தவர் வீராசாமி செட்டியார்.

## 137. காத்தியாயன ரிருப்பு வருகநாத தேசிகர்

காத்தியாயி யிருப்பென வழங்கும் காத்தியாயன ரிருப்பென்பது வைத்தீசுவரன் கோயிலைச் சார்ந்த தோரூர். இவர் அபிடிக்தர். இவர் செய்த நூல்கள்.

வடகுடிப் புராணம். இது நாகூர்ச் செட்டியார் வீட்டிலுள்ளது.

திருவீழிமிழலை அம்பிகை பிள்ளைத்தமிழ் குப்புசாமி தேசிகரிடமுள்ளது.

வேளூர்ப்புராணம்.

## 138. காரி ரத்தினக் கவிராயர்

இவர் மாறனலங்காரத்திற்கு அரியதோருரை செய்திருக்கின்றனர். உரையாசிரியராகிய இவர் ஆழ்வார் திருநகரிச் சடையன் கவிராயருடைய மாணாக்கர். இவருடைய ஊர் தென்திருப்பேரை. இது "தருகாளமேகம்" என்னும் நூல் உரைச் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். இவர் திருமேனி ரத்தினக்கவிராயர் என்றும் கூறப்படுவர். சமயம்-வைணவம். காலம் இற்றைக்கு முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் என்பர். இவர் பல நூல்களுக்கு உரைசெய்துள்ளனர் என்பர். மாறனலங்காரவுரையிலே தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணங்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களையும் காட்டிச் செல்வர். சில சொற்களுக்குப் புதுமையான பொருளும் சொல்வர்.

## 139. காலாண்டார்

இவர் சாதுர்பாக மிராசுதார் என்று வழங்கப்படுவார். ஏகாம்பரேசுவரர் கோயிலிலுள்ள ஐவகைச் சிவலிங்கங்களின் பிருதிவிலிங்கங்களைப் பூசிக்கும் அபிடிக்தர். இவ்வைவருள் வாமதேவர் ஒழிந்த நால்

வருக்கு ஏகாம்பரர் கோவிலிலிருந்தும் இவருக்குக் காமக்கோட்டத்திலிலிருந்தும் வருமானம் கிடைத்து வந்தன. இவர்களுக்கு விடப்பட்டிருந்த கிராமம் ஆண்டார் தெருவில் காணப்படும். இவருடைய மடமும் காலாண்டார் வீதியில் உண்டு. காஞ்சிப் புராணம் :சிறப்புப் பாயிரத்தில் வீரமகேசர் ஐவர் என்றது இவ்வைவரே? (கேள்விக்குறி ஐயரவர் களாலேயே இடப்பட்டிருந்தன.)

## 140. காலிங்கர்

திருக்குறளுக்கு உரைசெய்தவர்களுள் ஒருவர். எல்லப்ப நாவலருடைய கோத்திரத்துக்குக் காலிங்க கோத்திரமென்று பெயரிருத்தலால் அக்கோத்திரத் தலைவர் இவராக இருத்தல் கூடுமோவென்று ஊகித் தற் கிடமுண்டு.

## 141. கர்வை அம்பலவர்

இவர் சிவப்பிரகாசத்திற்குச் சிறந்த ஒருரை செய்திருப்பதாகப் பின்வருங் கலிவெண்பாவாற் தெரிகிறது.

### கலிவெண்பா

*பாயிரமீ ராறு பதியாறு பல்லுயிரொன்*
*றேயுந் திரோதமல மொன்றென்பர்—தூயபத*
*முத்திதரும் மாமாயை யொன்றாகு மூவுலகில்*
*புத்திதரும் மாயைப் புணர்ப்பானு—பெத்தம்விட*
*நன்றிபயக்கும் வினை நாலாகு நாடோறுந்*
*துன்று மலத்தின் றொகையொன்று—பொன்றவரும்*
*கேவல மைந்து கிளக்கி லுயிருக்குப்*
*பாவுணர்த்தும் வைகரியின் பாலிரண்டு—தேவர்களும்*
*கூடுஞ் சகலநா லைந்தாகுங் கூடுமலம்*
*வீடுகின்ற சுத்த வியப்பொன்று—நீடுமின்ப*
*முத்தியொன் றாக மதித்தருளால் முன்னோர்கள்*
*பத்தியாற் சொன்ன பரிசினால்—இத்தலமேல்*

உண்மை யுரைக்கி லுயிருண்மை யொன்பதா
நண்ணவத்தை மூன்று நலமாக— எண்ணரிய
தன்னை யுணர்த்துந் தகையைந்து தன்னுணர்த்து
மன்னுணர்வின் மெய்மைவகை மூன்று—பின்னுயிரை
மாசறவே காணும் வகையைந்து மற்றதனில்
ஆசொழிக்குந் தன்மையது நாலும்—தேசனுறு
பார்வையறப் பார்க்கும்வகை பத்தாம்பஞ் சாக்கரத்தைத்
தேரும் வகை மூன்று தெரியுங்கால்—சீர்மருவு
மின்பாற் சிவனையனு பவிக்குமெய் யடியார்
இன்பப் பகுதி யிருமூன்று —துன்பமறச்
சொற்றரு நூலின் கருத்தொன்று சொற்றருநூல்
நற்றவருக் கியும் நலமொன்று—முத்தவரும்
பந்தமறுத்த **செகநாதன்** பார்வையென
வந்தளித்த சம்பந்த மாமுனிவன்—எந்தைபதம்
சென்னியின் மேல் வைத்துச் சிவப்பிரகாசக் கருத்தை
யன்னவ்யற் காவையம் பலவன்—நன்னயத்தால்
சொன்னா னெழுபிறப்புத் தொல்லைவினை யுந்தீர
மன்னாகமத்தை மதித்து.

திருவானைக் காவுக்குக் **காவை** யென்று பெயர்.

சிவப்பிரகாச உரையாசிரியர்களுள் ஒருவராகிய மதுரைச் சிவப்பிரகாசருடைய உரைச் சிறப்புப் யாயிரத்தில் அவர் இவருடைய உரையை அனுசரித்துச் செய்தவராகக் கூறப்பட்டிருத்தலின் இவர் மதுரைச் சிவப்பிரகாசருக்குக் காலத்தால் முற்பட்டவரென்று தெரிகிறது.

## 142. காவைச் சரவணப் பெருமாள் (குரு)

இவர் சைவச் சுந்தரன் குலத்து வந்தவர். திருவிடைக்கழிப் புராணப் பாயிரம் 17ஆம் பாட்டிற் றுதிக்கப்பட்டிருக்கிறார்.

இங்கே சைவச் சுந்தரனென்றது சுந்தரமூர்த்தி நாயனார் போலும்,

## 143. காழிக் கண்ணுடை வள்ளல்

காழி என்பது சீகாழி. மாயாப்ரலாபம் என்னும் நூலொன்று இவராற் செய்யப்பட்டுள்ளது. ஒழிவிலொடுக்கமும், சிவானந்த மாலையும் இவர் செய்தனவே.

இவர் சைவாசாரியர்களுள் ஒருவர், வேளாளர், சோழமம 25. ஞானசம்பந்தருடைய சிஷ்யர்.

இவருடைய பரம்பரை மடம் சீகாழியில் உள்ளது.

இவருடைய சிஷ்யர்கள் 96 பேர்கள்.

1. ஓதாதுணர்ந்த வள்ளல்
2. மாணிக்க வள்ளல்
3. முத்து வள்ளல்

## 144. காளமேகம்

காளமேகனார் இருந்த இடம் சித்தாம்பூர். சித்தாம்பூர் ஸ்ரீ இராமையர் அவர்கள் ஐயரவர்களுக்கு சொல்லியது:

"காளமேகனார் என்பவர் ஜாதியில் சோழியப் பிராமணர்; அவர் திருமலைராயனாலளிக்கப்பட்ட பரிசு முதலியன பெற்று மீண்ட காலையில் இச் சித்தாம்பூரில் வந்து தங்கினார்; இவ்வூரில் இருபத்து நாலு வீடு கட்டி இருபத்து நாலு பிராமணருக்குத் தானஞ் செய்து தாமும் ஒரு வீடுகட்டிக் கொண்டு அதிலிருந்தனர்; அவரால் தானங் கொடுக்கப்பட்ட வீடுகளில் ஒன்றினை என் வமிசத்தினர் தானம் வாங்கிக் கொண்டு அதிலிருந்தனர்; இதற்குச் சுமார் பத்துத் தலைமுறைக்குள்தான் இருக்கும். இவ்வூர்க்குச் 'சித்தம்பூர்' என்று பெயர். அக்கிரகாரத்துக்கு ஈசானிய

திக்கில் இப்போது பாழாய்க் கிடக்கிற ஒரு பெரிய கோயில் நெடுநாள் முந்தி சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வதற்காகக் கட்டப்பட்டது. கட்டி முடிவாகுமுன் பூமியிலிருந்து ஒரு பிள்ளையாரகப்பட்டது; அதனை அந்தக் கோயிலிலேயே பிரதிஷ்டித்தார்கள். பிறகு அந்தக் கோயிலில் சிவலிங்கத்தை ஸ்தாபிக்கக் கூடா தென்று பிள்ளையார் கனவிற் பலருக்கும் கூறி விட்ட தாகவும் அது முதற்கொண்டு பிள்ளையார் கோயி லென்று வழங்கப்பட்டு மிக்க பிரபலமாயிருந்ததாகவும் தெரிகிறது. அந்தப் பிள்ளையாரைச் சிறப்பித்துக் காளமேகனார் "சித்தம்பூர் வாழுஞ் சிவனொழிந்த பிள்ளையார்" என்று ஒரு பாட்டுப் பாடினதாகப் பெரியோர் சொல்லக் கேள்வியுண்டு; அந்தக் காள மேகனாருடைய சிஷ்யர்கள் பலர் பிரபல வித்து வான்களாக இருந்ததாகத் தெரிகிறது; அத்தகைய மாணாக்கர்களுள் ஒருவர் 'கெருடப்பய்யர்' என்பவர் வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவராகி மேற்குறித்த பிள்ளையாருக்குச்சில சுலோகஞ் சொல்லி யிருக்கிறார். அவை எனக்கு ஞாபகத்துக்கு உண்டு;

"அந்த அக்கிரகாரத்துக்குக் "காளமேகந்தெரு" என்றே பெயர். பிறகு 'காளமேகம்' நிரியாண காலத்தில் அவர் சொந்த வீட்டையும் எங்கள் வமிசத்தினருக்கே கொடுத்து விட்டனர். அது இப் போது நானிருக்கிற வீடே. அவரால் கட்டப்பட்ட வீடு. இதுவரையில் அழியாமல் இருந்து இப்போது மிகுந்த ஜீரண தசையை அடைந்தமையால் ஏழெட்டு வருஷத்துக்குமுன் நான் அதனைப் பிரித்துக் கட்டினேன்.

"அவருடைய சிஷ்ய வருக்கப் பரம்பரையில் சுமார் 90 வருஷத்துக்குமுன் அருமைப் புலவரென்று ஒரு வித்துவானிருந்தார்; அவரைத் தான் பாலியத்தில் அறிந்திருப்பதாக என் தகப்பனார் எனக்குச் சொல்லி யிருக்கிறார்; புலவன் தாங்கல் என்ற கட்டளை

அவருக்கு இனாமாக அக்காலத்தில் உள்ளோரால் விடப்பட்டதென்று தெரிகிறது. அவர் 'திருவாரூர்த் தியாகராஜஸ்வாமி பேரில்—குறவஞ்சியோ என்னவோ ஒரு பிரபந்தம் பாடியிருக்கிறார். வேறு இவற்றைப் பற்றிச் சிலாசாசனம் இருப்பதாக எனக்குத்தெரியாது. எனக்குப் பூர்விகமாய்க் கிடைத்த சாசனம் ஏட்டுப் பிரதி. அதில் காளமேகனால் கொடுக்கப்பட்டதென்று தெரிந்தது; இப்போது அந்தச் சாசனம் சிதிலமாய் அழிந்து போயிற்று."

இந்தச் சித்தாம்பூர் என்னுமூர் மன்னார் குடித்தாலூகாவைச் சேர்ந்தது; கஸ்பா மன்னார் குடிக்கு ஈசானிய திக்கில் நாலு மைல் தூரத்தி லுள்ளது; நான் நேரில் போய்ப் பார்த்தேன்; சுற்றுப் பக்கத்தில் விசாரித்தாலும் 'காளமேகம்' இருந்ததாகச் சொல்லுகிறார்கள்; ஸ்ரீ இராமையர் அவர்கள்சொல்லிய 'சித்தம்பூர் வாழும் சிவனொழிந்த பிள்ளையார்' என்ற பாட்டு மூவரம்மானையில் "சித்தம்பூர் வாழும் சிவனளித்த பிள்ளையார்" ரென்னும் முதற்பாட்டாக இருக்கிறது; இராமையர் மேலும் சில சுலோகங்களும் சொன்னார்கள். அவைகளை நான் எழுதிக் கொள்ள வில்லை.

வேம்பத்தூரில் காளமேகம் வந்து சோறெங்கே விற்கும் என்ற பொழுது "தொண்டையிலே விக்கும்" என்றொரு பையன் சொன்னானாம்.

உடனே காளமேகம் 'கன்று வேம்புங் கசக்கு மோ?' வென்ன, அச்சிறுவன் 'மூலமும் கசக்கு'மென் றானாம்.

விளைந்து சாய்ந்து கிடக்கும் நெற்பயிரைப் பார்த்து 'மஞ்சட் பூசி மலர்ந்து கிடக்கிறது' என்ற காளமேகத்தைப் பார்த்து அறுப்புக்கு வந்திருந்த பையன் 'அறுத்துக் கட்டுகிற சாதிதானே' என் றானாம் (சிலேடை)

இவர் ஒருதினம் கோமலென்ற ஊருக்குப் போய் ''தீர்த்தம் தருக'' என்றபோது ''கொக்கு வேகும்படி பாடு'' என்ற வைணவர்களைச் சினந்து பாடிய பாடல்:-

**வெண்பா**

''ஆண்டவனே தில்லைநக ரம்பலவா வக்கரவம்
பூண்டவனே யென்வாக்குப் பொய்யாது—நீண்ட
கொழுங் கொக்கு வேகுமோ கோம லகரம்
ஒழுங்கிற்கு வேகுமுண் மை.''

இக்கோமல் இப்போது **குட்டிச்சுவர்க்கோமல்** என்று வழங்குகின்றதென்பர். இது மாயூரம் தாலூகா குற்றாலத்திற்குத் தெற்கே ஆறுமைல் தூரத்தி லுள்ளது.

மதுரைக்கு வடக்கே 5-நாழிகை வழித் தூரத் திலுள்ள திருமோகூரிலுள்ள வைணவர்களில் ஒரு வகையினராகிய........... மோகூர்ச் சோழியர்களின் ஜாதியாரென்றும், அத்தலத்துள்ள பெருமாளுக்குக் காளமேகப் பெருமாளென்று பெயருண்மையின், இவருக்கு அப்பெயரிடப்பட்டதென்றுஞ் சொல்லு கின்றனர். பு. தனி-யஉ

நாச்சியப்ப செட்டியென்றோர் நட்டுவாற் காலிக்குக்
கூர்ச்சியமா மூன்று கொடுக்குண்டே—வாய்ச்ச
கடைக்கொடுக்கு முற்கொடுக்குங் கந்தப்பா தள்ளி
நடுக்கொடுக்கைக் கல்லா னருக்கு''

இது நாச்சியப்பச்செட்டியார் பிள்ளைகள் மூவரில் நடுப்பிள்ளை காளமேகத்தை ஒரு சுப்பிர மணிய சுவாமி கோயிலில் கண்டு தூடித்ததாகவும் அவர் கோபம் கொண்டு மேலே சொன்ன கவியைப் பாட மண்டபமிடிந்து விழுந்து அவன் இறந்ததாகவும் கதை.

## 145. காளி இராமசாமிப் புலவர்

இவர் இருந்த ஊர் போடி நாயக்கனூருக்குச் சமீபத்திலுள்ள **'அன்னஞ்சி'** யென்பது; இவர் சாதி ஒன்பது வகுப்புக் கவண்டருள் ஒரு பிரிவினராகிய அனுப்பக் கவண்டரின் வகுப்பைச் சார்ந்தவர்; இவர் எழுபது பிராயம் வரையிலிருந்தார்; கன்னிவாடி ஜமீன் வித்வான்களுள் ஒருவர்; இவருடைய மதம் சைவம்.

**இவர் செய்த நூல்கள்:-**

1. பங்கார அப்பைய நாயக்கர் பேரில் பள்ளு (கன்னி வாடி ஜமீன்தார்)
2. போடி நாயக்கனூர் ஜமீன்தார் ஒருவர் பேரில் சந்திர விலாசம்.
3. மதுரைவீர னம்மானை

**இவர் மகன்** காளி சிவஞான சுந்தரப்புலவர்.

## 146. காளியப்பிள்ளைப் புலவர்

பூந்துறை நாட்டுக்குரியவர். இவர் இயற்றிய புராணம் பூந்துறைப் புராணம், ஆத்திசூடி வெண்பா.

## 147. கீரர்

உறையூரிலிருந்த தமிழறியும் பெருமாளென்னும் விதுஷி யொருத்தியால் வெல்லப்பட்டார்.

சோழ மண்டல—46

## 148. கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர்

கீழ்வேளூர் சுடபிர மணிய தேசிகருடைய தந்தை. தியாகராசர் பேரில் வெறிவிலக்கல் என்னும்

துறையில் அமைந்த நானூறு செய்யுட்களைக் கொண்ட ஒருதுறைக் கோவை என்னும் நூலைப் பாடியவர். பல்லக்கு நாடகம், நாகப்பட்டினப் புராணம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

## 149. குகை மறை ஞான சம்பந்தர்

இவர் சைவாசாரியார். இவர் பிராயச்சித்த சமுச்சயப் பாயிரம் 7-ஆம் பாட்டில் "தில்லைக் குகை யுட்டிரை போட்டுப், பங்க மறவாழ் மறைஞான சம்பந்தனெனும் பதியாவார்" என்று கூறப்பட்டிருக் கிறார்.

**இவர் செய்த நூல்கள்:**

1. அருணகிரி புராணம்
2. சிவதருமோத்திரம்
3. சைவ சமயநெறி
4. பரமத திமிர பானு
5. சங்கற்ப நிராகரணம்
6. இறைவனூற் பயன்
7. சிவராத்திரி கற்பம்
8. சோமவார கற்பம்
9. வருத்தமறச் செய்யும் வழி.
10. உருத்திராக்க விசிட்டம்
11. பஞ்சாக்கர மாலை
12. சிற்றம்பல நாடிகள் மாலை

## 150. குணபத்திர தேவர்

இவர் திண்டிவனம் தாலுக்காவிலுள்ள செஞ்சியைச் சார்ந்த சித்தாம்பூர் மடத்துக்குத் தலைவராக

முன்பு இருந்தவர்களுள் ஒருவர். இம்மடத்தைச் சார்ந்த முன்னோர்கள் வசித்துக் கொண்டிருந்த இடம் திருநறுங் குன்றமலை. இம்மலையில் அப்பாண்ட நாதரென்று வழங்குகிற பார்சுவ தீர்த்தங்கரராலயம் ஒன்று உண்டு. கிழங்கு கல்லிய வேடனொருவன் அறியாமல் தனது கருவியால் கிழங்கு கல்லுகையில் இந்த ஸ்வாமியின் முழந்தாள் சிதைத்தலினால் அவன் கண் கெட்டு அறிந்து "அப்பனே! ஆண்டவனே" என்று பாடினமையின் இவர் இப்பெயர் பெற்றார் என்பர். அவ்வேடனால் இத்தெய்வத்தின் மீது செய்யப்பட்டதாகிய "திரு நறுங்குன்றைப் பதிகம்" என்ற ஒரு நூல் இப்பொழுதும் வழங்கி வருகின்றது. இந்தக் குணபத்திர தேவர் ஆசிரியர் முனிபத்திர தேவர் என்பவர்; இவர்தாம் செஞ்சி அரசனையடுத்து அவனைத் தம் வயமாக்கிச் சித்தாம்பூரில் மடம் ஏற்படுத்திக் கொண்டனர். சூடாமணி 9-வது தொகுதியில் கொடை மடச் செய்யுளில் கூறப்பட்ட கிருஷ்ணராயன் என்பவன் அப் பெருமண்டூரைச் சார்ந்த செஞ்சியை ஒரு காலத்திலாண்ட கிருஷ்ணைய நாயக்கன் என்று சொல்லுகிறார்கள்.

## 151. குணவீர பண்டிதர்

இவர் ஐந்திலக்கணங்களுள் முதலிரண்டு இலக்கணங்கள் மட்டுமுள்ள வெண்பாக்களாலாகிய **நேமிநாதம்** என்னும் நூலின் ஆசிரியர். பொருத்த இலக்கணத்தையும், பிரபந்த இலக்கணத்தையும் தெரிவிக்கும் வெண்பாக்களால் அமைந்த நூலான **'வச்சணந்தி மாலை'** இவரால் இயற்றப்பெற்றது. இவருக்கு ஆசிரியர் வச்சணந்தி யென்பவராதலால் அவரிடத்துள்ள அன்பின் மிகுதியால் அவர் பெயரால் இந்நூலை இவர் வெளியிட்டனர் என்பர்.

## 152. கும்பகோணம் பழைய மல்லைய தேசிகர்

இவர் வீரசைவர். இவர் சரிதம் வீரசிங்காதன புராணத்திற் சொல்லப் பட்டுள்ளது. இவருடைய மடம் அவ்வூரில் மகாமக தீர்த்தத்தின் வடகரையில் இப்போது இடிந்து கிடப்பதான வீரமுஷ்டி மடம்.

## 153. குமரகுருபரர்

ஒன்பதுகைலாசங்களும், ஒன்பது திருப்பதிகளும் தன் கரையில் அமையப் பெற்ற தாமிரபர்ணி நதியின் வடகரையில் ஸ்ரீ வைகுண்டம் என்று வழங்கும் திருப்பதியின் வடபாலில் ஸ்ரீகைலாசமென ஒருபகுதி உண்டு. அங்கே பரம்பரையாகத் தமிழ்ப் புலமையும் முருகக் கடவுளது பக்தியும் வாய்ந்த சைவ வேளாள குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயர் என்ற ஒருவர் தம் மனைவியாரான சிவகாம சுந்தரியம்மையாரோடு வாழ்ந்து வந்தார். அவ்விருவருக்கும் ஓர் ஆண் குழந்தை உதித்தது. அதற்குக் **குமர குருபரன்** என்னும் பெயர் சூட்டி அவர்கள் வளர்த்து வருவாராயினர்.

குமர குருபரர் ஐந்தாண்டு வரையிற் பேச்சின்றி ஊமைபோல் இருந்து வந்தார். அதுகண்டு நடுங்கிய பெற்றோர்கள் அவரைத் திருச்செந்தூருக்கு எடுத்துச சென்று செந்திலாண்டவர் சந்நிதியிலே வளர்த்தி விட்டுத் தாமும் பாடுகிடந்தனர். முருகவேள் திருவருளால் குமரகுருபரர் பேசும் ஆற்றல் பெற்றுக் கல்வியிலும் சிறப்புற்றனர். செந்திற்பெருமான் திருவருளால் வாக்குப்பெற்ற இவர், அப்பெருமான் விஷயமாகக் **கந்தர் கலிவெண்பா** என்ற பிரபந்தத்தைப் பாடினார். அப்பால் தம் ஊரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கைலாச நாதர் மீது **கைலைக் கலம்பகம்** என ஒரு பிரபந்தம் இயற்றினர். இவருக்குக் குமார சுவாமிக் கவிராயர் என ஒரு தம்பியார் இருந்தனர்.

குமரகுருபரர் தமிழ் இலக்கண இலக்கியங் களையும், ஞான சாத்திரங்களையும் திருவருளால் விரைவில் கற்றுத் தேர்ந்தார். மருவுக்கு வாசனை வாய்த்தாற் போன்று, பக்தி ஞான வைராக்கியங்கள் இவரிடத்தே உண்டாகி வளரத் தொடங்கின. அப்பால் பல சிவதலங்களுக்கும் சென்று சிவதரிசனம் செய்யத் தொடங்கினர். மதுரையிலே சில காலம் தங்கியிருந் தார். அப்போது "**ஸ்ரீ மீனாட்சியம்மையின்** திறத்து ஒரு **பிள்ளைத் தமிழ்** பாடி, அக்காலத்தில் மதுரையில் அரசாண்டிருந்த திருமலை நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். அதனை அரங்கேற்றுகையில் ஸ்ரீ மீனாட்சியம்மையே குழந்தை உருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்தனரென்றும் குமரகுருபரர் முத்தப்பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில் தம் திருக்கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றையெடுத்து இவருக்கு அணிந்து விட்டு மறைந்தனரென்றும் கூறுவர். அந்தப்பிள்ளைத் தமிழைக் கேட்டு மனமுவந்த திருமலை நாயக்கர் குமரகுருபரருக்குப் பலவகையான சம்மானங்களை அளித்து வழிபட்டனர். குமரகுருபரர் பின்னும் சிலகாலம் மதுரையிலே தங்கி **மதுரைக் கலம்பகம்** என்னும் பிரபந்தத்தை இயற்றினார்.

பிறகு சோழநாட்டு ஸ்தலங்களைத் தரிசிக்கத் தொடங்கித் திருவாரூருக்குச் சென்றார். அங்கே ஸ்ரீ தியாகப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு சிலகாலம் இருந்தனர். அக்காலத்தில் **திருவாரூர் நான் மணிமாலை** என்னும் பிரபந்தத்தை இவர் இயற்றினார்.

சிவஞான உபதேசம் பெறவேண்டுமென்ற கருத்து இவருக்கு வரவர அதிகமாயிற்று. தமக்குரிய ஞானாசிரியரைத் தேடித் தேர்ந்து சரண்புக வேண்டு மென்று இவர் மனம் ஆவலுற்று நின்றது. அக் காலத்தில் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தில் 4 ஆம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சிவஞானச் செல்வராக இருப்பதை அறிந்து அவரிடம் சென்றார். அங்கே உண்டான சில குறிப்புக்களால் அப்பெரியாரே தமக்குரிய ஆசிரியர் என்பதை இவர் தேர்ந்தனர். அப்பால் தமக்குத் துறவுநிலை யருளவேண்டுமென்று அத்தேசிகர்பால் குமரகுருபரர் வேண்டினர். அங்ஙனம் செய்வதற்குமுன் ஸ்தலயாத்திரை செய்து வரும்படி பணித்தல் அவ்வாதீன மரபாதலின் அப்பெரியார் காசியாத்திரை செய்து வரும்படி கட்டளையிட்டனர். காசிக்குச்சென்று வருவதில் நெடுங்காலம் செல்லுமே யென்று கவன்ற குமர குருபரரை நோக்கிச் சிலகாலம் சிதம்பர வாசமேனும் செய்யும்படி பணித்தனர்.

ஞானாசிரியர் கட்டளைப்படியே சிதம்பரத்துக்கு இவர் பிரயாணமாகி இடையே ஸ்ரீ வைத்தீசுவரன் கோயிலில் தங்கித் தரிசனம் செய்து கொண்டு அங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ முத்துக் குமார சுவாமி** விஷயமாக ஒரு **பிள்ளைத் தமிழ்** இயற்றினார். பிறகு சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராசப் பெருமானைத் தரிசனஞ் செய்து கொண்டு சிலகாலம் தங்கினர். அக்காலத்தில் **சிதம்பர மும்மணிக் கோவை** என்னும் பிரபந்தம் இவரால் இயற்றப்பெற்றது. அதில் முதற் செய்யுளில் காசிக்குச் செல்வதில் உளவாகும் துன்பங்களையும், சிதம்பரத்திற்குச் சென்று தரிசனம் செய்யும் எளிமையையும் "காசியி லிறத்தல் நோக்கி" (452) என்பது முதலிய அடிகளில் உணர்த்தியிருக்கின்றார். அவ்வடிகள், தம்மை ஆசிரியர் காசிக்குச் செல்லப் பணித்ததும், அதன் அருமையைத் தாம் விண்ணப்பித்துக் கொண்டபோது சிதம்பரவாசம் செய்யும்படி கட்டளையிட்டதுமாகிய நிகழ்ச்சிகளின் நினைவிலிருந்து எழுந்தனவென்றே தோற்றுகின்றது.

சிவநேசச் செல்வர்களும், தமிழறிவுடையவர்களுமாகிய சில அன்பர்கள், "யாப்பருங்கலக்

காரிகையில் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் பெரும்பாலும் ஜைன சமயச் சார்புடையனவாக விருத்தலின், அந்நூலின் இலக்கணங்களுக்கு உதாரண மாக ஸ்ரீ நடராசப் பெருமான் விஷயமான செய்யுட் களை இயற்றித்தர வேண்டுமென்று பிரார்த்திக்க இவர் அங்ஙனமே **''சிதம்பரச் செய்யுட் கோவை''** என்னும் பிரபந்தத்தை இயற்றியளித்தார்.

இவர் சிதம்பரத்தில் இருந்த காலத்திலேயே **''நீதிநெறி விளக்கம்''** என்னும் நீதிநூலும் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும் என்று தோன்றுகின்றது. அந்நூலுக்குச் சிதம்பரம் நடராசப் பெருமானது துதியை முதலிற் காப்பாக அமைத்திருத்தல் இதற்கு ஓர் ஆதாரமாகும்.

சிதம்பரத்தில் இங்ஙனம் வாழ்ந்து வந்த குமர குருபரர் பின்பு தம் தேசிகர்பாற் சென்று தம்முடைய வேட்கையை மீட்டும் விண்ணப்பித்துக் கொண்டனர். இவருடைய பரிபக்குவத்தையறிந்த ஞான தேசிகர் இவருக்குக் காஷாயம் உதவினர். அதுமுதல் இவர் குமர குருபர முனிவரென வழங்கப் பெறுவாராயினர். அப்பொழுது தம் ஞானதேசிகர் விஷயமாகப் **பண்டார மும்மணிக் கோவை** என்னும் பிரபந்தம் ஒன்று இயற்றினர்.

அப்பால் ஞானதேசிகரிடம் விடைபெற்றுக் காசிக்குச் சென்று தம்முடைய கல்வியறிவினாலும் தவப் பண்பினாலும் டில்லி பாதுஷாவின் உள்ளத் தைக் கவர்ந்தார். அந்தப் பாதுஷாவின் தாய்மொழி யாகிய ஹிந்துஸ்தானியை விரைவில் அறிந்துகொள்ள வேண்டுமென்றெண்ணிச் **சகல கலாவல்லி மாலை** என்னும் பிரபந்தத்தை இயற்றக் கலைமகளை வேண்டினார். கலைமகள் திருவருளால் அம்மொழி யிலே சிறந்த அறிவு பெற்றுப் பாதுஷாவினிடம் பேசிப்

பழகினார். அவர் இவர்பால் ஈடுபட்டு இவருடைய விருப்பத்தின்படியே இவர் காசியில் இருத்தற்குரிய மடம் அமைப்பதற்குக் கேதார கட்டத்தில் இடம் உதவினார். குமரகுருபரர் அதுகாறும் மறைபட்டிருந்த ஸ்ரீ விசுவலிங்கப் பெருமானை வெளிப்படுத்தி அங்கே கோயில் முதலியன நிருமிக்கச் செய்து நித்திய நைமித்திகங்களும் குறைவற நடக்கும்படி செய்தார்.

குமரகுருபர முனிவர் காசியில் தங்கியிருந்த மடத்திற்குக் 'குமாரசாமி மடம்' என்று பெயர். அங்கே இவர் சிவயோகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் **காசித் துண்டிவிநாயகர் பதிகமும் காசிக்கலம்பகமும்** இவரால் இயற்றப்பெற்றன. இவர், தாம் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே ஹிந்துஸ்தானி பாஷையிலும், தமிழிலும் புராணப் பிரசங்கங்கள் செய்து வந்தார். சில சமயங்களில் கம்பராமாயணப் பிரசங்கமும் செய்ததுண்டு. சிறந்த இராமபக்தராகிய துளஸிதாஸர் அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு உவந்தனரென்றும், கம்பராமாயணத்திலுள்ள கருத்துக்களைத் தாம் ஹிந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக் கொண்டனரென்றும் கூறுவர்.

இவருடைய புலமைத்திறம் முதலியன 'குமரகுருபரர் பிரபந்தங்கள்' என்ற நூலிலுள்ள ஆராய்ச்சியினால் விளங்கும். (இந்தப் பிரபந்த நூல் ஐயரவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது)

குமரகுருபரர் பின்னும் ஒருமுறை தருமபுரம் வந்து ஞானாசிரியரைத் தரிசித்து மீண்டும் காசிக்கே சென்று வாழ்ந்து. விளங்கியிருந்து ஒரு வைகாசி மாதத்தில் கிருஷ்ணபக்ஷத் திருதியையிலே சிவபெருமான் திருவடி நிழலிற் கலந்தனர்.

குமரகுருபரர் காலத்திற்கு பின் வந்தவர்கள்: (2) ஸ்ரீகாசிவாசி சொக்கநாத ஸ்வாமிகள் என்பவர்

குமாரசாமி மடத்தில் இருந்து வந்தனர். அவருக்குப் பின் முறையே (3) ஸ்ரீ காசிவாசி அருணாசல ஸ்வாமிகள். (4) ஸ்ரீ காசிவாசி அம்பலவாண ஸ்வாமிகள் (5) ஸ்ரீ காசிவாசி சடையப்ப ஸ்வாமிகள் என்பவர்களும் அப்பால் (6) ஸ்ரீ காசிவாசி தில்லை நாயக ஸ்வாமிகளும் இருந்தனர்.

ஸ்ரீ காசிவாசி தில்லை நாயக ஸ்வாமிகள் கி.பி. 1756 வரையில் இருந்தனர். அவர் திருப்பனந்தாளில் கி.பி. 1770இல் ஒரு மடத்தை ஸ்தாபித்தனர். திருப்பனந்தாள் மடம் காசிமடத்தின் தொடர்புடைய தாதலின் அதற்குக் காசிமடம் என்னும் பெயர் வழங்கி வருகின்றது.

ஸ்ரீ தில்லை நாயக ஸ்வாமிகளுக்குப் பின் காசி மடத்துத் தலைவர்களாக விளங்கியவர்கள் (7) ஸ்ரீ காசிவாசி குமரகுருபர ஸ்வாமிகள்; (8) ஸ்ரீ காசிவாசி சிதம்பரநாத ஸ்வாமிகள், (9) ஸ்ரீ காசிவாசி சடையப்ப ஸ்வாமிகள் (10) ஸ்ரீ காசிவாசி கணபதி ஸ்வாமிகள், (11) ஸ்ரீகாசிவாசி இராமலிங்கஸ்வாமிகள்' (12) ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள், (13) ஸ்ரீ காசிவாசி கணபதி ஸ்வாமிகள் (14) ஸ்ரீ காசிவாசி இராமலிங்கஸ்வாமிகள் (15) ஸ்ரீ காசிவாசி பொன்னம்பலஸ்வாமிகள், (16) ஸ்ரீ காசிவாசி சோமசுந்தரஸ்வாமிகள் (17) ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கஸ்வாமிகள் (18) ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க ஸ்வாமிகள்.

குமரகுருபரர் இயற்றிய நூல்கள்:

1. கந்தர் கலிவெண்பா
2. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
3. மதுரைக் கலம்பகம்
4. நீதி நெறி விளக்கம்
5. திருவாரூர் நான்மணிமாலை
6. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

7. சிதம்பர மும்மணிக் கோவை
8. சிதம்பரச் செய்யுட் கோவை
9. பண்டார மும்மணிக் கோவை
10. காசிக் கலம்பகம்
11. சகலகலாவல்லி மாலை
12. கைலைக் கலம்பகம்
13. காசித் துண்டி விநாயகர் பதிகம்

## 154. குரவை இராமானுஜதாசர்

இவர் இயற்றிய நூல் நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ். இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லுநர் என்பது நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் என்னும் நூலால் நன்கு விளங்கும். நூற்றெட்டுத் திருப்பதிகளையும் பாடிய பெருமை திவ்யகவி — பிள்ளைப் பெருமாளையங்காருக்கும் குரவை இராமநுஜதாசருக்கும் உண்டு. இவர் பிறந்த குலம் இருந்த இடம், வாழ்ந்தகாலம் முதலானவை தெளிவாக விளங்கவில்லை, இவருடைய புலமைத் திறம், ஞானம், பக்தி வைராக்கியம் முதலானவை நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் என்னும் நூலால் அறியலாம்.

ஆசிரியர் நூலைத் தொடங்கு முன்பு நம்மாழ்வாருக்கே காப்புப் பாடுகின்றார். ஆசிரியர் சிறந்த அனுபூதிமான்.

## 155. குலசேகர வரதுங்கராம பாண்டியர்

இவர் செய்தது வாயு சங்கிதை. இவர் பாண்டிய வம்சத்தரல்லரென்பது ஒரு சாரார் கொள்கை.

## 156. குன்றக்குடி அய்யாப்பிள்ளை

இவர் தளவாய் இரகுநாத சேதுபதிகாலத்தினர். சேதுபதிக்கு மைத்துனர் முறையினர். சேதுபதியின்

மனைவியார் தன் மகனுக்கு மருந்து செய்யக்கொட்டை முத்தெண்ணெய் வேண்டியிருந்தபடியால் முத்து வேண்டுமென்று தனது தமையன் முறையினராகிய சேதுபதிக்குச் சொல்லி விடுக்க, அவர் இரண்டு பொதி நன்முத்து அனுப்பினார்; அதனை அறிந்த சேதுபதி நான் கொட்டை முத்துக் கேட்க நன் முத்துக் கொடுத்தது நின் செல்வப் பெருமையைக் காட்டுகிறது. இது நீர் வேட்டவற்குத் தேனளித்தது போலுமெனக்கூறி மீட்டும், அம் முத்துப் பொதியைச் சேதுபதி பக்கலனுப்பிவிட அது கண்ட சேதுபதி கொட்டை முத்துக்கொண்ட இரண்டு பொதியிலும் நன்முத்தும் கலந்து சேதுபதிக்கு அனுப்பித் தானும் பின்சென்று எங்கள் தங்கைக்குக் கொடுத்ததனை நீயிர் தடுக்கலாகாதெனச் சொல்லி, அம்முத்துக்களின் விலையால் வந்த பொருளைக் கொண்டு கோட்டை கட்டுவித்தனர்.

## 157. குன்றக்குடி வீரபத்திரக் கவிராயர்

புகழேந்தி வம்சத்தினர்; வேளாளர்; சைவ மதத்தினர்; குன்றக் குடியில் வேலாயுத பண்டாரச் சந்நிதியோடு வெகுநாள் கூட இருந்தவர். இவர் செய்த நூல்கள்:

1. குன்றக்குடிக் குறவஞ்சி
2. கம்மாள.........ருடைய மாந்தைக் குறவஞ்சி

இந்த நூலுக்காகக் கம்மாளர்கள் கல்யாணத்திற்கு அஞ்சு பணமென்று இந்த பிரதேசத்திற் கொடுத்து வருகிறார்கள்.

இவர் திருவண்ணாமலை ஆதீன வித்துவான்.

இவர் பல தனிப்பாடல்களும் செய்துள்ளார்; இவருடைய பிள்ளைகளிருவர்; பேரர் வீரபத்திரக் கவிராயர்; அந்த ஆதீனத்தைச் சார்ந்த ஐந்து கோயிலிலும் கட்டளையுண்டு; மங்கள கவி சொல்லுவதுண்டு.

## 158. குன்றைக்குளத் தண்ணாவியார்

தம்பிப்பட்டி முத்துவேலுக் கவிராயருடைய சீட்டுக் கவியான "புனிதமிகு" என்பதில் வந்துள்ளார். மருதபாண்டியன் சமூகத்து வித்துவான்களில் ஒருவர்.

## 159. குன்னூர் பெரியவீடு குமாரசாமி முதலியார்

இவர்பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சிறுபிரிவில் உள்ள குன்னூரில் 1850-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் பழநியப்ப முதலியார். இவர் செல்வந்தராக இருந்தமை குறித்து இவருடைய வீட்டிற்குப் பெரிய வீடு என்று பெயர் ஏற்பட்டது. செய்யுள் இயற்றுவதில் தேர்ந்த இவர் நூல்கள் ஒன்றும் இயற்றவில்லை. நண்பர்களுக்கு எழுதும் கடிதங்களெல்லாம் செய்யுள் வடிவத்தில் எழுதுவார். தமிழ்ப்பயிற்சி மிக்கவர். கவிஞர். இறந்த செல்வவான். இசைப்பயிற்சியுடையவர். சிவபக்தர். சிவபூசை துரந்தரர். எண்பத்தைந்து வயது வரை இருந்தவர். வெ. ப. சுப்பிரமணிய முதலியாருக்கு உறவினர். 1935-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31 ஆம் நாள் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

அகலிகை வெண்பா என்னும் நூலிற்கு இவர் சிறப்புப்பாயிரமாக அளித்த செய்யுள்:-

"ககனமளாஞ் சோலைவெள்ளக் காலூரன் மேலோர்
புகழ்சுப் பிரமணிய பூபன்—அகலிகை
வெண்பா அமுதை விருந்தாப் புலவர்குழாம்
உண்பான் அளித்தான் உவந்து."

## 160. கூறைநாட்டுச் சாமிநாத வாத்தியார்

இவர் சிலருக்குத் தமிழ் நூல்கள் பாடஞ் சொல்லிக் கொண்டு பாடசாலை வைத்து ஜீவித்தவர். வீரசைவர்.

கூறை நாட்டிலிருந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் துறவு பூண்டவர்களும் வேதாந்த சாத்திரங்களில் நிபுணர்களுமாகிய இருவர் இவரிடம் அடிக்கடி வந்து சல்லாபம் செய்து போவார்கள்.

## 161. கொங்குவேளிர்

கொங்குவேளிர் என்பார், கொங்குநாட்டு வேளாள வகுப்பினரைச் சார்ந்த சிற்றரசர்களுள் ஒருவர். இவருக்குரிய வேளிர்என்னும் பட்டப்பெயரும் இக்கருத்தைத் வலியுறுத்தும். அழுந்தூர்வேள், நாங்கூர் வேள் என்பாரைப் போல முடி மன்னர்பால் மகட் கொடை நேர்தற்குரிய பெருமை வாய்ந்தவரென்று இவர் கருதப்படுகிறார். இவரிருந்த ஊர் கொங்கு நாட்டிலுள்ள ஸ்ரீ சந்திரப்பிரபா தீர்த்தங்கரருடைய ஆலயத்தையுடையதும் தமிழ்ப்புலவர்கள் சிலர் வாழ்ந்து வந்ததுமான விசயமங்கலமென்று தெரிகின்றது.

இவர் பல தமிழ்ப்புலவர்களை ஒருங்கு சேர்த்துக் கவலையின்றியிருக்கும்படி அவர்களுக்கு வேண்டியவற்றைக் குறிப்பறிந்தளித்துப் பரிபாலித்து அவர்களோடு தாம் இடைவிடாமற் பழைய நூல்களை ஆராய்ச்சி செய்து வந்தவர். பின்னும் அவர்கள் கூறுவனவற்றைத் தாம் கேட்டு இன்புற்றும், தாம் இனியவற்றைக் கூறி அவர்களை மகிழ்வித்தும் காலங் கழித்துவந்த அருங்கலை விநோதர். இங்ஙனம் இருப்பதே தம் கடமையென்று பண்டைக்காலத்துச் செல்வர்கள் எண்ணி நடந்து வந்தமை முன்னம் தமிழ் நாட்டிலிருந்த முடிமன்னர்கள், பல சிற்றரசர்கள், வேறுள்ள பல உபகாரிகளுடைய சரித்திரங்களால் நன்றாகத் தெரிகின்றது. 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின்...உதயணன் கதை' என்றுஅடியார்க்கு நல்லார் இந்நூலைப் பாராட்டி எழுதியிருப்பதை

உற்று நோக்குகையில், இவர் காலத்தில் இடைச்சங்க நூல்கள் இருந்தனவென்பதும் அவற்றிலுங்கூட இவரும் இவர் காலத்தவர்களும் பயிற்சி பெற்றிருந் தார்கள் என்பதும் தெரிகின்றன.

அடியார்க்கு நல்லார்க்கு நிரம்பையயர் காவலர் என்னும் பெயர் ஊரால் வந்ததென்றும், நிரம்பை யென்னூர் விசயமங்கலத்தின் பக்கத்தில் உள்ள தென்றும் இவ்விரண்டு ஊர்களும் குறும்பு நாட்டைச் சார்ந்தவை யென்றும் கொங்கு மண்டல சதகம் விளக்குகின்றது. அணித்தான இடத்தில் இருந்தமை யாலேதான் அடியார்க்குநல்லார் கொங்குவேளிருடைய ஆற்றலையும் பெருங்கதையையும் பரம்பரைக் கேள்வியால் நன்கறிந்தவராயினர் போலும்.

''நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார் வெள்க வேகொங்கு வேளடிமை
மாதைக்கொடுத் தரஞ் சொன்னதுவுங்கொங்கு மண்டிலமே

(கொங்கு மண்டல சதகம்-99)

என்பதனால் கொங்குவேளிர் பிறந்த ஊர் மங்கையென்பதும், இவர் இந்நூலை இயற்றுவதற்கு மூன்று சனனம் எடுத்தார் என்பதும், சங்கத்தார் கேட்ட கேள்விகளுக்குத் தம்முடைய வேலைக்காரி ஒருத்தியைக் கொண்டு விடை பகருவித்தார் என்பதும் வெளியாகின்றன; இச்செய்யுளில் உதயேந்திரன் காதை என்றது உதயணன் கதையை; மங்கை யென்றது விசயமங்கலம் என்னும் ஊரை; கொங்கு மண்டலத்தில் மங்கலம் அல்லது மங்கை என்ற ஊர்கள் பல காணப்படினும் இங்கே குறித்த மங்கை யென்னூர் அதுதான் என்று தக்க ஆதாரங்களால் தெரிய வருகின்றது.

'மூன்று பிறப்புற்ற கொள்கை' என்பதைக் குறித்து நன்றாக அறிந்து எழுத முடியவில்லை;

ஆனாலும் ஆச்சிரம வேறுபாடும் பிறப்பு வேறுபா டாகக் கருதப்படும் என்றும், அதனால் நீட்டித்த ஆயுளைப் பெறலாமென்றும் ஸ்ரீ ஆதி சங்கராசாரிய ருடைய சரித்திர முதலியவற்றால் இவ்வழக்கம் விளங்குகின்றதென்றும் பண்டிதர்கள் சொல்லு கிறார்கள்.

ஒரு பிறப்பில் தொடங்கிய பிராரத்த வினை மூன்று பிறப்பு வரையில் தொடரும் என்பதும், வாம தேவர் ஜடபரதர் என்பவர்களுடைய சரித்திரங்கள் இதற்கு இலக்கியமாகும் என்பதும் ஒரு சாரார் கொள்கை. கொங்குவேளிர் இந்நூல்செய்துவருகையில் தம் அகால மரணத்தைச் சோதிடரால் அறிந்து எப்படியேனும் அதனை மாற்றிக் கொண்டு இந் நூலைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கவலையுற்று இல்லறத்தினின்றும் நீங்கி வானப்பிரத்தமும், பின் அதனின்றும் நீங்கித் துறவறமும் பூண்டு இந்நூலைப் பூர்த்தி செய்திருக்கலாம் என்றும் தேரிய வருகின்றது. 'மூன்று பிறப்புற்ற' என்பதன் பின்னுள்ள 'கொள்கை, என்பது இக்கருத்தை வலியுறுத்தும். நம்முடைய செயல்களெல்லாம் ஒடுங்கி மிக மெலிந்து தமக்கு மரணகாலம் வந்து விட்டதென்பதை அனுபவத்தால் நன்கு அறிந்த ஒருவர் நற்கதியடைய வெண்ணிப் பின் துறவு பூண்டு பிழைத்து அப்பால் பல ஆண்டுக ளிருந்து விளங்குவதை இக்காலத்திலும் பல இடங் களில் கண்கூடாக அறியலாகும். சந்நியாசம் அளித்த பெரியோரை ஞானபிதாவென்றும் அது பெற்றவரை ஞானபுத்திரரென்றும் கூறுதல் மரபு.

பெருங்கதையை முதலிற் பைசாச பாஷையில் இயற்றிய குணாட்டியரும், வடமொழியில் இயற்றிய துர்விநீதன் என்னும் அரசனும், தமிழில் இயற்றிய கொங்குவேளிரும் ஒருவரே என்றும், உபசாரவழக்குப் பற்றி இங்ஙனம் கூறப்பட்டதென்பாரும் உளர்.

கொங்குமண்டல சதகச் செய்யுளில் 'சங்கம்' என்று கூறியது மதுரையிலிருந்த கடைச்சங்கத்தை யன்று; அதன் பிற்காலத்திருந்த உபகாரிகளால் தத்தம் காலங்களில் அங்கங்கே அமைக்கப்பட்டிருந்த சங்கங்களுள் ஒன்றாக இருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. சைனர்களிலும், மற்றைச் சமயத்தோர் களிலும் சிறந்து விளங்கிய இருவகைச் செல்வர்கள் பண்டைக் காலத்தில் அங்கங்கே பாஷையின் வளர்ச்சி யையும் மதத்தின் பெருக்கத்தையும் கருதிச் சங்கங் களை நிறுவி ஆதரித்து வந்தார்களென்பது மைசூர் சமஸ்தான முதலிய இடங்களில் கிடைக்கும் சாசனங் களாலும், "இந் நூல் கேட்பித்தது யாரவைக்களத் தெனின், கடவுள் முதலிய நற்சங்கத்தார் அவைக் களத்து என்று உணர்க" என்னும் வச்சணந்தி மாலையின் பாயிர வுரையாலும்,

> "எங்குமிவ னிசைபரப்பி வருநாளில் யாமுரைத்த விந்த
> நாட்டிற்,
> கொங்கர்குல வரபதியாட் கொண்டானென் றொரு—
> வண்மைக் குரிசி றோன்றி,
> வெங்கலியின் மூழ்காமற் கருநடப்பேர் வெள்ளத்து விழாம
> னெண்டாம்
> சங்கமென முச்சங்கத் தண்டமிழ் நூல் கலங்காமல்
> தலைக்கண் டானே
>
> (வி. பா. பாயிரம் 18.)

என்னும் செய்யுளாலும், கொங்குமண்டல சதகத் தாலும் வெளியாகின்றன.

சங்கத்தார் கேட்ட வினா இன்னது என்பதும், அதற்குத் தம்முடைய வேலைக்காரியைக் கொண்டு இவர் சொல்லுவித்த விடை இன்னதென்பதும் விளங்கவில்லை. சிறந்த கல்விமான்களது வீட்டில் இடைவிடாமல் பயிலும் வேலைக்காரர்களாகிய இரு பாலாரும் கல்விப் பயிற்சியில் சிறந்தவர்களாக இருப்பார்களென்பது "பண்டைக் காலத்தில்வடமொழி

தென்மொழிகளில் சிறந்து விளங்கிய பண்டிதர்கள் பலருடைய சரித்திரத்தால் விளங்கும். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியுங் கவி சொல்லும்' என்னும் பழமொழியும், ஒருவர் எடுத்துக் கொடுத்த கருத்துக் களைக் கம்பர் வீட்டு வெள்ளாட்டி பாடி முடித்ததாக வழங்கும் 'நெற்பாடி விளைகழனி' என்னும் செய்யுளும் இங்கே அறியற்பாலன. மேலும் ஐயரவர் களுடைய தமிழாசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய தவசிப் பிள்ளைகளில் சிலருக்குக் கேள்வி மிகுதியால் சிறந்த தமிழ்ப் பயிற்சி காலக்கிரமத்தில் உண்டானதையும் அரிய விஷயங்களில் ஐயம் தோன்றியபோது மாணாக் கர்களுக்கு அவர்கள் அவற்றைத் தீர்த்ததையும் ஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்,

அடியார்க்கு நல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார வுரைப்பாயிரத்தில், சிந்தாமணியின் பெயர்க்கு முதலில் பெருங்கதைப்பெயரை வைத்திருத்தலாலும், திருத்தக்க தேவருக்கும், பேராசிரியர் முதலியோர்களுடைய உரைகளில் பெருங்கதைப்பகுதி எடுத்தாளப்பட்டிருத் தலாலும் அவர்களுக்கும் இவர்காலத்தால் முற்பட்டவர் என்று தெரியவருகின்றது. இவரது சமயம் சைனம். இவர் இயற்றிய நூல்:- பெருங்கதை, இவரது காலம் திருத்தக்கதேவர் காலத்திற்கு முற்பட்டது என்று தெரிகிறது.

## 162. கொட்டடி ஆறுமுகம் பிள்ளை

இவர் இருந்த இடம் திரிசிரபுரம் கள்ளத்தெரு; தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலன்றி வைத்திய நூல்களிலும் பயிற்சி மிக்கவர். பலவகையான மருந்துகளைத் தொகுத்து ஒரு கொட்டகையில் வைத்துக்கொண்டு நோயாளிகளுக்குக் கொடுத்து வந்தமையால் இவர் பெயருக்கு முன்னம் 'கொட்டடி' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டதென்று

சொல்வர். சென்னை இராசதானிக் கலாசாலையில் இருந்தவரும் குணாகரம் என்னும் நூல் முதலியவற்றை இயற்றியவருமாகிய சேஷையங்கார் என்பவர் இவரிடம் பாடங்கேட்டவர். இவரும் சேஷையங்காரும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள வேண்டிய செய்திகளைச் செய்யுட்களாகவே அஞ்சற் கடிதங்கள் மூலம் தெரிவித்துக் கொள்வது வழக்கம். அச் செய்யுட்கள் பலவற்றைத் தாமே கேட்டிருப்பதாக ஐயரவர்கள் கூறியுள்ளார்கள்.

## 163. தோடைநகர் அரங்கர்

இவ்வூரின் இயற்பெயர் தெரியவில்லை; இது தொண்டைநாட்டில் பாலாற்றங் கரையிலுள்ளது; அரங்கரென்பவர் சம்புமுனி என்பவருடைய யாகத் தழலிற் றோன்றிய மரபிற் பிறந்தவர். இவரியற்றிய நூல் விசுவ புராண சாரம். இவை அந்நூல் 14, 15 ஆம் பாடல்களால் விளங்குகின்றன.

[புறம் 201-ஆம் பாடலில் 'வட பால் முனிவன் தடவினுள் தோன்றி' என்பதாலும், **இரட்டையருலாவில்** 'சம்பு குலத் தொருவன்' என்பது முதலிய வாக்கியங்களாலும் குறிப்பிக்கப்பட்டவன் இம்முனிவன் பரம்பரையோரென்றும் தெரிகின்றது]

இதனைச் செய்வித்தோன் காவிரி சூழ்ந்த திருவிடை மருதூரில் பஞ்சம குலத்திற் பிறந்தவனும் தமிழ்ப்பரிபாலகனும் செல்வவானும் ஆகிய **பழங்கொண்டான்** என்பவன். இதனை இந்நூல் 132, 211, 248, 276-ஆம் செய்யுட்கள் தெரிவிக்கின்றன.

விசுவபுராண சாரம் பின்னுள்ள பகுப்புள்ளது.

1. கடவுள் வாழ்த்து 12 செய்யுள். பின் 11 செய்யுளில்லை.
2. ஆக்கியோன் ஆக்குவித்தோன் வரலாறு அவையடக்கமும் 2-ஆம் பக்கம்.

3. பதிகம் 3-ஆம் பக்கம்
4. விசுவமான்மியம் 14-ஆம் பக்கம்
5. மரபு விளக்கம் 17- ”
6. நாச்சியார் திருக்கல்யாணம் 24
7. நாச்சியார் தவநிலை 29
8. ஆரிய தேசச் சிறப்பு 28
9. மகமாயி சிறப்பு 33
10. அடைக்கலம் பெற்ற சிறப்பு 35
11. போர்புரி சிறப்பு 43-ஆம் பக்கம்

இது அபூர்த்தி

உள்ள செய்யுள்......

## 164. கோயம்புத்தூர் கந்தசாமி முதலியார்

இவர் சரித்திரம் திருப்போரூர்க்கிள்ளை விடுதூதில் எழுதப்பட்டுள்ளது. மேலைச் சிதம்பர விஞ்ஞானமென்பதொரு நூல் இவரால் செய்யப்பட்டது.

## 165. கோயம்பேரு வேங்கட கிருஷ்ணதாசர்

இவர் செய்த நூல் **எவ்வுட் கலம்பகம்.**

## 166. கோனேரி அப்பனையங்கார்

இவர் **பிள்ளைப்** பெருமாள் அய்யங்காருடைய **பிள்ளை**யென்றும் இவர் பாடிய நூல் **சீரங்க நாயகியாரூசல்** என்றும் தெரியவருகிறது.

“நீராழி நிறத்தரங்கர் அடிகள் வாழ
  நெடுமகுடப் பணிவாழக் கருடர் வாழப்
பேராழி செலுத்தியசே னையர்கோன் வாழப்
  பேய்பூதன் பொய்கைமுதற் பதின்மர் வாழ
ஓராழிக் கதிர்வாழத் திங்கள் வாழ
  உம்மடியார் மிகவாழ உலகம் வாழச்
சீராழி சங்குகதை சிலைவாள் வாழச்
  சீரங்க நாயகியா ராடீரூசல்.”

## 167. கோனேரியப்ப முதலியார்

இவர் கோனேரியப்ப நாவலர் எனவும் கோனேரி யப்பக்கவிராயர் எனவும் அழைக்கப்படுவார். இவர் பிறந்த இடம் காஞ்சிக் காலாண்டார் வீதியை அடுத்து வடக்கேயுள்ள தெருவாகிய கோனேரிக் குப்பம் என்பது. இதுவே சங்கமங்கலம் எனப்படும். அந் நாவலர் இதில் தான் வாழ்ந்து வந்தார். இதனால் இவ்விடம் கோனேர்க் குப்பம் எனப்பெயர் பெற்றது. இவர் கச்சியப்ப சிவாசாரியாருடைய சிஷ்யர், அவருடைய கட்டளையின்படி உபதேச காண்டம் இவராற் செய்யப்பட்டது. இவ்வூரிலுள்ள ஷண்முகா லயத்தின் முன்பாக இருந்தது, இவரது சொந்தவீடு. இவர் தமக்கு அரசன் இட்டிருந்த விலங்கு முறியும் படி பாடிய பாடல்.

செய்வதொன் றறிகிலன் செழுமென் போதுதாட்
பெய்வதொன் றறிகிலன் பேதை யேன்சுடர்
வைதிகழ் வேற்படை முருக வன்றனை
கொய்தெனக் கிரங்கியாட் கொள்ள வேண்டுமால்.

## 168. கௌசிக முனிவர்

இவர் செய்ததாகச் **சர்ப்பநூல்** என்று ஒன்று வழங்குகின்றது.

## 169. சங்கர சிந்தாமணிப் புலவர்

மதுரைப் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூரில் சங்கர சிந்தாமணிப்புலவரென்ற கவிஞர் ஒருவர் இருந்தார். செம்பாகமான கவிகளை எளிய நடையில் இயற்று வதில் அவர் வல்லவர். அவருடைய உள்ளம் கல்வி யறிவினால் உவப்புற்று நிறைவடைந்ததெனினும் அவர் இல்லம் வறுமைக்கே இருப்பிடமாக இருந்தது. தம் தாய் தந்தையர், மனைவி மக்கள், உற்றார் உறவினர் முதலியவர்கள் வறுமையால் மிக்க தளர்ச்

சியை அடைந்து துன்பப்படுவதை அறிந்து அந் நிலையை அவர் மாற்ற நினைத்தார்.

ஆனாலும் பிறரிடத்துத் தம் வறிய நிலையை எடுத்துக்கூறி உதவி பெறுவதற்கு அவர் மனம் துணிய வில்லை. அவருடைய நிலையைக் குறிப்பினால் அறிந்து உதவிபுரியும் பிரபு ஒருவரேனும் அவ்வூரிலும் அயலிடங்களிலும் அக்காலத்தில் இல்லை.

எவ்வாறேனும் பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளத்தானே வேண்டும்? பிறர்பாற் சென்று கேட்பதற்கு அவர் நாணம் கொண்டாரெனினும் உறவினர் படும் பசித்துன்பத்தினைப் பார்க்கையில் உண்டான இரக்கம் அந்நாணவுணர்ச்சியை வென்றது. பிறருடைய நலத்தின் பொருட்டு எத்தகைய முயற்சி யையும் செய்யலாம் என்ற நினைவு அவருக்கு உண்டு. அருமையறியாதவர்களிடம் சென்று துன்புறுத்தலை அவர் விரும்பவில்லை. எனவே, தமிழ்ப் புலவர்களை உள்ளுவப்போடு பாராட்டி ஆதரித்து உதவி புரிவோர் யாரென்று விசாரித்து வந்தார்.

போடிநாயக்கனூரில் அக்காலத்தில் இருந்த ஜமீன்தார் தமிழ்ப் பயிற்சியும் தமிழ்ப் புலவர்களை எப்பொழுதும் உடன் இருக்கச்செய்து அவர்களுடன் சல்லாபம் செய்யும் தன்மையும் உடையவரென்று அவர் கேள்வியுற்றார். அன்றியும் புலவர்களை உயிர் நண்பர்களாக எண்ணி அவர்களோடு பழகும் இயல்பு அந்த ஜமீன்தாரிடம் நன்றாக அமைந்திருந்ததென்றும் அறிந்தார். அவரிடம் சென்று தம் வறுமை நோயைப் போக்கிக் கொள்ளலாமென்று அந்த வித்துவான் எண்ணி ஒருநாள் புறப்பட்டுப் போடிநாயக்கனூர் சென்றார்.

அவர் சென்ற சமயம் ஒரு பிரார்த்தனையை நிறைவேற்றும் பொருட்டு ஜமீன்தார் பழனிக்குத்

தம் பரிவாரங்களுடன் போயிருந்தார். புலவர் தாம் பேராவலோடு ஜமீன்தாரைப் பார்க்க வந்தும் உடனே காணக் கிடையாமைக்கு வருந்தினர். ஜமீன்தாருடைய உயர் குணங்களைப் பின்னும் பல பேர் வாயிலாக அங்கே கேட்டு இன்புற்றார். அவ்வாறு கேட்கக் கேட்க அப்பிரபுவை விரைவிற் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு அதிகரித்தது. ஜமீன்தார் பழனியிலிருந்து திரும்பி வரும் காலத்தில் அவரை எதிர்சென்று காணலாமென்று நினைத்தார். ஜமீன்தார் பரிவாரங்களுடன் திரும்புங்காலத்தில் அவ்வாறே சென்று இடைவழியில் சந்தித்தார்.

வித்துவான்களோடு நட்புமுறையில் பழகி வருபவரென்று ஜமீன்தாரைப் பற்றிக் கேள்வியுற்றிருந்த புலவர் தம்முடைய வறுமை நிலையைச் சமற்காரமாகத் தெரிவிக்க வேண்டுமென்று நினைந்து, அவர்முன் ஓடிச்சென்று, "கூ, கூ புலி துரத்தி வருகிறது" என்று கூவினார். அவருடைய செயலைக் கண்டு திடுக்கிட்ட ஜமீன்தார், என்ன ஐயா, பயமுறுத்துகிறீர்? நீர் யார்? புலி எங்கே?" என்று கேட்டார். புலவர், "ஐயோ! பாழும் புலி துரத்துகின்றது. அதைக் கொன்று என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று மீண்டும் ஓலமிட்டு விட்டு,

"பையா டரவணி சொக்கேசர் கூடற் பதியைவிட்டு
வையா புரிக்கு வரும்வழி யேவழி தான்மறித்து
மெய்யா வறுமைப் புலிதான் மிகவும் வெருட்டுகின்ற
தையாதென் போடை யதிபா புலவர்க் கருணிதியே"

என்ற பாடலைக் கூறினார். ஜமீன்தார் தமது சாதுர்யத்திற்குத் தக்க பரிசும் உபசாரமும் அளிப்பாரென்று புலவர் நம்பினார்.

ஜமீன்தார் ஒரு வினாடி நேரம் பேசாமல் இருந்தார்; பின்பு அருகில் இருந்த ஒரு வேலையாளை அழைத்து அதிகாரத் தொனியில் இந்த மனுஷரை அழைத்துச் சென்று பாதுகாப்பில் வைத்திருந்து

நாம் ஊர் வந்து சொல்லியனுப்பும்போது நம்மிடம் அழைத்து வா" என்று கட்டளையிட்டார். பிறகு ஜமீன்தாரின் உத்தரவுப்படியே புலவர் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடைய மனநிலை அப்பொழுது எவ்வாறிருக்கும்!

'ஐயோ! வஞ்சகர்கள் இந்த ஜமீன்தாரைப் பற்றி இல்லாத குணங்களையெல்லாம் ஏற்றிக் கூறி நம்மை ஏமாற்றி விட்டார்களே! இவர் நமது செய்யுளைக் கேட்டுச் சந்தோஷிக்கக் கூடுமென்றல்லவோ சொன்னோம். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலவன்றோ ஆயிற்று! இவர் சிறந்த அறிவாளி யென்றும் குறிப்பறிந்து கொடுப்பவரென்றும் நம்மிடத்திற் சிலர் சொன்னார்களே. அந்த இயல்பு இவரிடம் சிறிதும் காணப்படவில்லையே. நம்முடைய செய்யுளைக் கவனிக்கவில்லையே. முகமலர்ச்சியையும் காணோம்! இன் சொல்லையும் காணோம், நம்மை என்ன செய்ய நினைத்திருக்கிறாரோ தெரியவில்லை. முன்பின் தெரியாமல் இவரிடம் வந்து அகப்பட்டுக் கொண்டோமே. நம்முடைய வறுமைக்கு அஞ்சி இவரிடம் வந்தது தேளுக்குப் பயந்து பாம்பின் வளையிற் கைவிட்டது போலாயிற்றே. நமக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் நம் தாய் தந்தையர் முதலியவர்கள் என்ன செய்வார்களோ தெரியவில்லை. கடவுளுடைய சித்தம் எப்படியோ" என்று நினைந்து நினைந்து ஏங்கினார்.

அவரை அழைத்துச் சென்ற வேலையாள் அவரைத் தனியாக ஓரிடத்தில் இருக்கச் செய்து சரியான வேளைகளில் உணவு அளித்து வந்தான். ஒருவரும் அவரோடு பேசவில்லை. அவர் தூக்குத் தண்டனையை எதிர்பார்த்து நிற்கும் குற்றவாளி யைப்போல் உயிர் உடம்பு உள்ளம் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தார்.

ஜமீன்தார் தம் அரண்மனை வந்து சேர்ந்தார். கவனிக்க வேண்டிய காரியங்களையெல்லாம் கவனித்து விட்டு ஆஸ்தான மண்டபத்தில் வந்து அமர்ந்தார். பின்பு புலவரை அழைத்து வரும்படி உத்தர விட்டார். சிறிது நேரத்தில் வாடிய முகமும் நடுங்கிய உடம்பும் கந்தைத்துணியும் கொண்ட வறுமைத் திருக்கோலத்தோடு புலவர், ஜமீன்தார் முன்னே நிறுத்தப்பட்டார். அவர் தம் கண்களால் ஒருமுறை அந்த ஆஸ்தான மண்டபத்தின் இயற்கையைப் பார்த்தார். ஜமீன்தாரின் இரு பக்கத்திலும் கத்தி, தடி, துப்பாக்கி முதலிய ஆயுதங்களையுடைய சேவகர்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். யாவரும் வாய்பொத்திக் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றனர். ஜமீன்தாரோ மீசையை முறுக்கிக்கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் கோபக்குறிப்பே தாண்டவமாடியது. இவற்றையெல்லாம் பார்த்த புலவருக்குச் சிறிதளவு இருந்த தைரியமும் போய் விட்டது. உடம்பெல்லாம் அச்சத்தால் வேர்த்தது.

ஜமீன்தார் ஒரு கனைப்புக் கனைத்தார். அருகிலிருந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து, "நாம் பழனிக்குப் போய்விட்டு வருகையில் நமக்கும் பிறருக்கும் பயமுண்டாகும்படி வழிமறித்து, 'கூ! கூ' என்று சத்தம்போட்ட மனுஷ்யர் இவரல்லவா?" என்றார். அவர், "ஆம்" என்றார். "ஐயா! நீர் அப்படிச் செய்யலாமா?" என்று புலவரை நோக்கி ஜமீன்தார் கேட்கவே, புலவருக்கு நா எழவில்லை. தம்முடைய கருத்தைச் சொல்ல ஆரம்பிக்கையில் வார்த்தைகள் குழறி வந்தன. ஒரு புலியைக் குறித்துச் சொல்வதற்குமுன் 'கிலி' அவரைப் பிடித்துக் கொண்டது. கடைசியில் ஒருவாறு துணிந்து குழறிக் கொண்டே, "எஜமானவர்கள் வேட்டையாடித் துஷ்ட மிருகங்களைக்கொன்று ஜனங்களைக் காப்பாற்றும் மகாவீர ரென்று தெரிந்தமையால் இந்தப் புலியையும்

கொல்லவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டேன். வறுமையைப் புலியாக உருவகப்படுத்தித் தமிழருமையறிந்த துரையவர்கள் சந்தோஷிக்க வேடிக்கையாகச் சொன்னேனேயொழிய, யாருக்கும் அச்சமுண்டாக்க வேண்டுமென்பது என் கருத்தன்று. இவ்வாறு உருவகம் செய்து கூறுதல் முன்னோருடைய வழக்கம். அப்படி ஏதாவது நான் செய்தது பிழையாகத் தோன்றினால், அதனைப் பொறுத்தருள வேண்டும்,'' என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டார்.

ஜமீன்தார், ''செய்ததைச் செய்துவிட்டுப் பொறுத்தருள வேண்டுமென்றால் முடியுமா? திடீரென்று புலி துரத்துகின்றதென்றால் எல்லாரும் என்ன நினைப்பார்கள்? உமக்குச் சிறிதேனும் சமயோசிதம் தெரியவில்லையே. நமது முன்னிலையில் இன்னபடி பேச வேண்டுமென்பது தெரியாதா?'' என்று கடுமையான குரலில் கூறிவிட்டு அருகில் நின்ற ஒரு வேலைக்காரனை நோக்கி, ''இந்த மனுஷருடைய மேல் துணியைப் பிடுங்கி என் எதிரே வை'' என்றார். பல தையல்களோடும் முடிப்புக்களோடும் அழுக்கோடும் புலவரது வறுமை நிலைமையைப் புலப்படுத்திக் கொண்டிருந்த அந்தத் துணியை அவன் வாங்கிச் சுருட்டி எதிரே இருந்த ஒரு மேஜையின் மேல் வைத்தான். மருந்திட்டு வைத்திருந்த துப்பாக்கியொன்றை ஜமீன்தார் கையிலெடுத்து வைத்துக் கொண்டு, ''அந்த மனுஷரை இப்படி நேரே கொண்டு வந்து நிறுத்துங்கள்'' என்றார். புலவர் தமக்கு ஆயுட்காலம் முடிந்து விட்டதென்றே நிச்சயித்து விட்டார். இந்த வறுமையினால் துன்புறுவதைக் காட்டிலும் இறந்து போதல் ஒரு வகையில் நல்லதென்றெண்ணினார்; தம் முதிய தாய் தந்தையர்களையும் இளைய மனைவி மக்களையும் பிற உறவினர்களையும் நினைந்து கண்ணீர் வடித்தார்.

துப்பாக்கியுடன் இருந்த ஜமீன்தார், "ஓய்! உம்மைப் புலியா துரத்துகிறது? அந்தப் புலியை இதோ சுட்டுக் கொன்று விடுகிறேன் பாரும்" என்று சொல்லிக்கொண்டே, தம் எதிரில் இருந்த கந்தைத் துணியை நோக்கிச் சுட்டார். படீரென்ற சத்தம் கேட்டது; துப்பாக்கியிலிருந்த குண்டு பாய்ந்து அந்தக் கந்தைத் துணியை எரித்து விட்டது; புலவர் ஒன்றும் தோன்றாமல் சிறிது நேரம் மயக்கத்தில் ஆழ்ந்தார்.

புலவர் அருகிற்சென்று ஜமீன்தார் அவர் முதுகைத் தட்டிக் கொடுத்து, "இதோ உம்மைத் துரத்திய புலி இறந்துவிட்டது. இனி அந்தப் புலியால் உமக்கு அச்சம் இராது" என்று சொல்லி ஓர் ஆசனத்தில் இருக்கச் செய்து நல்ல ஆடைகளை வருவித்து அணிந்துகொள்ளச் செய்தார். பின்பு அவருடைய உள்ளம் பூரிக்கும்படி உயர்ந்த உபசாரங்களையெல்லாம் செய்தார்.

வறுமைப் புலியின் அச்சம் நீங்கிய புலவர் சில காலம் அங்கேயேயிருந்து புதிய புதிய செய்யுட்களைப் பாடி ஜமீன்தாரை உவப்பித்தும் பலவகை உபசாரங்களைப் பெற்று உவந்தும் வந்தார். சில நாள் சென்ற பின்பு தம் ஊரிலுள்ள உறவினர்கள் தம் நிலையை யறியாமல் வருந்துவார்களென்பதைக் கூறி ஜமீன்தாரிடம் விடைபெற்றுப் பல மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் தக்க ஸம்மானங்களும் வழங்கப் பெற்றுத் தம்மூர் வந்து சேர்ந்து கவலையின்றி வாழ்ந்து வருவராயினர். அக்காலத்துக்குப் பின்பும் அடிக்கடி ஜமீன்தாரிடம் சென்று சம்பாஷித்து இருந்துவிட்டு வருதல் அவரது வழக்கமாக இருந்தது.

இந்நிகழ்ச்சியை யறிந்தவர்கள் அந்தப் பிரபுவினது பெருந்தன்மையை மிகவும் பாராட்டினார்கள்.

[இச்சரித்தையும் பாடலையும் ஐயரவர்களுக்குச் சொன்னவர் ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன் ஊற்றுமலை ஜமீன்தாராக விளங்கிய ஸ்ரீ ஹிருதயாலய மருதப்பத் தேவருடையஆஸ்தான வித்துவான்கள் நால்வருள் ஒருவரான புளியங்குடி முத்து வீரப் புலவர் என்பவர்.]

## 170. சங்கர நத்தம் கறுப்பண்ணப்புலவர்

இவர் ஊர் சாத்தூருக்கு மேற்கு ஒரு கல் தொலைவிலுள்ள சங்கர நத்தம் என்பது. இவர் 45 ஆவது வயதில் இறந்தார். மதம்-சைவம். ஆனால் சுத்த சைவம் அன்று. பல தனிப்பாடல்கள் பாடியுள்ளார். இவர் கொல்லப்பட்டி (சாத்தூர் தாலுகா) ஜமீன்தாராகிய இராமசுவாமிக் கிச்சலம்ப நாயகர் பேரில் ஒரு காதலும், சங்கர நத்தம் சங்கரலிங்க முதலியார் பேரில் ஒரு காதலும், சாத்தூர் வேங்கடாசலபதிப் பெருமாள் மீது ஒரு பதிகமும் இயற்றியுள்ளார்.

இவர் பரம்பரை கொல்லப்பட்டி அரண்மனையைச் சார்ந்த புலவர் பரம்பரை.

## 171. சங்கர நமச்சிவாயர்

இவருடைய ஊர் திருநெல்வேலி. அங்கு இவர் வாழ்ந்த இடம் தடிவீரையன் கோயில் தெரு. குலம் வேளாளர் குலம்; சமயம் சைவம்; இவருடைய வழித் தோன்றலாகிய பௌராணிகர் சண்முகம்பிள்ளை என்பவரையும், அவர் புதல்வராகிய வேலாயுதம் பிள்ளை என்பவரையும் 'ஐயரவர்கள் கண்டு பழகியிருக்கின்றார்கள். அந்த வேலாயுதம் பிள்ளை தென்காசி முதலிய இடங்களில் தாலூகா குமாஸ்தாவாக இருந்தார்.

சங்கர நமச்சிவாயபிள்ளையென்று இவரது பெயர் அக்காலத்தில் வழங்கப்பட்டு வந்ததென்றும்

முத்துக்குமாரபிள்ளை என்று பெயருள்ள ஒரு புதல்வர் இவருக்கு உண்டென்றும் அவர்களால் தெரிய வந்தன. புலவரென்பது கல்விச் சிறப்பால் இவருக்கு அமைந்த பெயர்.

நெல்லை ஈசானமடத்திலிருந்த இலக்கணக் கொத்து நூலாசிரியராகிய ஸ்ரீசாமிநாத தேசிகரிடம் இவர் தொல்காப்பியம் முதலான இலக்கணங் களையும், சங்க இலக்கிய முதலியவற்றையும், வட நூல்கள் சிலவற்றையும், முறையே கற்றுத் தேர்ந்தவர். மேற்கூறியவற்றோடு திருமுறைகள் முதலியவற்றிலும் சைவசித்தாந்த நூல்களிலும், திவ்யப்பிரபந்தம் முதலிய வைணவ நூல்களிலும், கம்பராமாயணம் முதலிய காப்பியங்களிலும் இவர்க்கு நல்ல பயிற்சியுண் டென்று இவருடைய உரை தெரிவிக்கின்றது.

சாமிநாத தேசிகர் மட்டுமன்றி இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர் முதலியோரும் அவர் போன்ற வேறு சிலரும் இவர் காலத்தவர்களாதலின் கல்வி கேள்விகளிற் சிறந்து, ஓரிலக்கண நூலுக்கு உரை இயற்றுதற்குப் போதிய ஆற்றலையும் பெறுவது இவருக்கு எளிதாயிற்று.

இது கீழே காணும் பாடல்களால் நன்கு விளங்கும்.

## உரைச் சிறப்புப்பாயிரம்

1. தன்னூலுட் கருத்துலகோர் அறியவுரை
செய்கவென நரேந்திர சிங்கம்
தென்னூற்று மலைமருதப் பன்புகலப்
பொருள்விளங்கச் செய்தான் பாரில்
எந்நூற்கும் எழுத்தொடு சொற் பொருளறிசங்
கரநமச்சி வாய னென்னும்
பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசிகா
மணி நெல்லைப் பதியினானே.

2. அகத்தியந்தொல் காப்பியமே முதலியமுன்
ஞூல்கள்பல வாய்ந்து முப்பால்
பகுத்ததிரு வள்ளுவரே முதன்ஞான
நூல்களெலாம் பகல்செய் வான்போல்
இகத்திலுரை செயவலசங் கரநமச்சி
வாயனெனும் இசைப்பேர் பெற்ற
தகைப்புலவ னன்னூலுக் குரைவகுத்த
தொருவியப்போ தமிழ்வல் லோரே.

3. முன்னூற்கு மலயமுனி தன்னூற்கும்
புலியிடத்து முதியோ ராற்சொல்
எந்நூற்குந் தமிழ்க்கடலுள் இனியயற்று
நூற்கும் வகை யிதனாற் காட்டி
நன்னூற்கு விரித்துரை செய் தான்றிகாந்
தத்தளவு நடத்துங் கீர்த்தித்
தென்னூற்று மலைமருதப் பன்சொலச்சங்
கரநமச்சி வாயன் றானே.

நன்னூல் சூத்திரங்களில் விருப்பும், மயிலை நாதருரை, அந்நூலுக்கு ஏற்றவுரையன்றென்பது பற்றி அதன்பால் வெறுப்புமுள்ள தம் ஆசிரியர் சாமிநாததேசிகர் நன்னூலுக்குச் சிறந்ததோருரை நீர் செய்திடுக" என்று பணித்தமையாலும், கல்வி கேள்வி களிற் சிறப்புற்று 'முத்தமிழ்ப் புலமையும் முறையரசுரிமையும் இத்தலத்தெய்திய இறைமகன்' என்று பாராட்டப்படும் ஊற்றுமலை மருதப்பத்தேவருடைய வேண்டுகோளாலும் இந்நூலுக்கு மிக அழகிதாகிய ஒருரையை இவர் இயற்றுவாராயினர். சாமிநாத தேசிகருக்கு அக்கருத்துக்களுண்மை,

"சேற்று நிலத்திற் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவும் சேறானாற் போல நன்னூற் சூத்திரமும் மயிலைநாதருரையுடனே கலந்து குற்றப்பட்டதென்க; முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோவென்னுந் துணிவே மன்னுக; முன்னோரொழியப் பின்னோர் பலரினுளென்றலுமொன்று" (இ. கொ. சூ. 8. உரை) "அவனருளால்" என்பவற்றாலும் மருதப்பதேவர் விரும்பினமை "நன்னூலுட் கருத்துவகோ ரறியவுரை செய்கவென"

என்பது முதலிய மூன்று அருமைச் செய்யுட்களாலும் விளங்கும். மருதப்பர் என்பது அந்த ஜமீன் தலைவர் களுக்கெல்லாம் உரிய பொதுப்பெயர்; அவருடைய இயற்பெயர் தெரியவில்லை.

''சங்கர நமச்சிவாயர் ஹிருதயாலய மருதப்பத் தேவருடைய ஸமஸ்தான வித்துவான்களுள் முதன்மை வாய்ந்திருந்தவர். நன்னூற்கு உரை யிற்றும் , பொழுது மாதம் ஒன்றுக்கு ''நான்கு கோட்டை நெல்லும் தினந்தோறும் ஒரு படி பாலும் அவருக்கு அரண்மனையிலிருந்து கொடுக்கப் பட்டு வந்தன; உரையை அரங்கேற்றிய பின்பு தக்க பரிசிலும் நன்மதிப்பும் பெற்று விடைபெற்றுச் சென்று திருநெல்வேலியையே தமக்கு இருப்பிடமாக ஆக்கிக் கொண்டு இருந்து வந்தனர்''

''மலர்தலை யுலகிற் பல நூலாய்ந்து........தொழுது''

என்பதனால் இவருக்குள்ள அடக்கமும் குருபக்தியும் விளங்குகின்றன.

இவர் மயிலைநாதருரையைப் பின்பற்றியவராக இருப்பினும் அவராற் புலப்படுத்தப்படாத பல விஷ யங்கள் இவருரையிற் காணப்படுகின்றன. பதசாரம் எழுதிச் செல்லுதலிலும், பொருளை நுட்பமாக ஆய்ந்து அறிந்து தக்க ஆதாரங் காட்டி விளக்கு தலிலும், உவமை காட்டலிலும், பிறவற்றிலும் இவ் வுரை அவ்வுரையைக் (மயிலைநாதருரை) காட்டிலும் மேற்பட்டதென்று சொல்லலாம்; காரணம், அவருடைய காலத்திற்குப் பின்பு பற்பல ஆசிரியர்கள் தோன்றி இயற்றித் தந்த நூல்கள் உரைகளின் பேருதவிதான் என்று சொல்லவேண்டும். இவருடைய உரையில் சில பகுதிகள் சேனாவரையம் முதலிய வற்றைப் போற் சிறந்திருக்கின்றன.

ஆய்தம் ஒரு மொழிக் கண்ணும், தொடர் மொழிக் கண்ணும் முதலெழுத்துக்கள் இருமருங்கும்

நின்றெழுப்ப ஒலித்தற்கு இரு சிறகெழுப்ப எழு முடலையும், யகரம் சுட்டு வினா வெழுத்துக்களை முதலில் பெற்று வருவதற்கு முடவன்கோலுன்றி வருதலையும், உயிரொடு புணர்த்திய மெய் தன்னளவு தோன்றாது ஒன்றாய் நிற்றற்கு அப்பொடு பெய்த உப்பையும், மொழிக்கண் எழுத்து நிற்றற்கு மாலையின்கண் மலர்பொருந்தி நிற்றலையும், தன் இயல்பின் நிற்கும் பகுதியை இடைநிலை முதலிய வற்றோடு முன்னின்று விகாரப்படும் விகுதிக்குத் தன் இயல்பினிற்கும் ஒருவனது உள்ளத்தை ஆடை முதலிய வற்றோடு முன்னின்று விகாரப்படுத்தும் ஒருத்தியை யும் இவர் உவமைக் காட்டிச் செல்லுதலும் இவை போன்ற பிறவும் அறிந்து இன்புறற்பாலன.

சைவசிகாமணி என்று பாராட்டப்படுதற்கேற்பத் தேவாரம் முதலியவற்றிலிருந்து எடுத்து அங்கங்கே மேற்கோள் காட்டுவர். திருவாசகம், திருவாய்மொழி எனவும், ஆதிரையான், ஓணத்தான் எனவும் காட்டப் பட்டுள்ள உதாரணங்களையும் பிறவற்றையும் நோக்கு கையில் இவர் வைணவத்தில் வெறுப்பில்லாத நிலையையுடையவர் என்று தெரிகின்றது.

பகுதி விகுதி முதலிய வடமொழிகளுக்குரிய உருவத்தைப் புலப்படுத்திப் பொருளெழுதிச் செல்லு தலையும், அங்கங்கே காட்டும் வடமொழிப் பிரயோகங் களையும் நியாயங்களையும் விதிகளையும் நோக்கு கையில் இவருக்குள்ள வடநூற் பயிற்சி புலனாகும்.

வடநூற்கடலையும், தென்றமிழ்க்கடலையும் நிலைகண்டு உணர்ந்த ஸ்ரீ சிவஞான யோகிகள் இரு மொழிக்கண்ணும் தாம் ஆராய்ந்தறிந்த அரியவிதிகளை அமைத்தற்குத் தக்க இடமென்று இவர் உரையைக் கொள்வாராயின் **சங்கர நமச்சிவாயருடைய** பெருமை யைக் கூறவும் வேண்டுமோ?

## 172. சங்குப் புலவர்

இவர் சேற்றூர் சமஸ்தான வித்வான். இவருடைய சொந்த ஊர் எட்டிச்சேரியென்பது. சேற்றூர் சமஸ்தானத்திலுள்ள தேவதானம் என்னும் ஸ்தலத்திலுள்ள தவம் பெற்ற நாயகியம்மை மீது, திருப்பணிக்காக மலைசாயப் பாடினார். அதனால் இவர் பெயர் மலைசாய்த்த சங்குப் புலவர் என்று வழங்கும். இச்சங்குப் புலவரின் ஆசிரியரின் பெயர் ஆறுமுகக் கவிராயரென்பது.

இவருடைய பரம்பரையினராகிய திருமலை வேற் கவிராயரென்பவர் கரிவலம் வந்த நல்லூர்ப் புராணம் பாடினார். அவருடைய குமாரர் சங்குப் புலவர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷையில் பண்டித பரீக்ஷையில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றுத் தோடா பெற்றார் என்றும், அவர் ஓர் உயர்நிலைப் பள்ளியில் உபாத்தியாயராக இருக்கிறார் என்றும் ஐயரவர்கள் குறித்துள்ளார்கள். இவர் பாடிய பாடலொன்று:

> "நிலைசாயொணாத தவசே புரிந்து நிறையமுத
> கலைசார் தவம்பெற்ற தென்சேறை நாதனைக் கண்டவளே
> உலைசார் உளிவைத்துக் கற்பணி செய்ய உனதருளால்
> மலைசாய வேண்டுந் தவம்பெற்ற நாயகி மாதங்கியே"

இவர் இயற்றிய நூல்கள்.- விநாயகர் ஒருபா ஒருபஃது, சரசுவதி நாற்பா மூவினமாலை, கலைமகள் பதிகம், திருச்செந்தூர் நிரனிறை யெதுகைமாலை, மதுரைச் சிலேடை வெண்பா. மாணவர் தமிழிலக்கணம் முதலியன. இவர் பிறந்த ஆண்டு 1893.

## 173. சடகோப ஐயங்கார்

சடகோபையங்கார் பரம்பரையாக வித்துவான்களாக இருந்தோர் மரபில் பிறந்தவர். அவர் பரம்பரை

யினர் யாவருக்கும் சண்பகமன்னார் என்ற குடிப் பெயர் உண்டு. அவர்கள் தென்கலை ஸ்ரீவைஷ்ண வர்கள். அவர்களிற் பலர் சிறந்த கவிஞர்களாக விளங்கினர். அவர்களுக்குப் பாலசரஸ்வதி, பாலகவி என்னும் பட்டங்கள் உண்டு. அவர்களில் ஒருவர் 'திருக்கலியாண நாடகம்' என்பதையும் மற்றொருவர் 'சிவராத்திரி நாடகம்' என்பதையும் இயற்றியிருக்கின் றனர். சடகோபையங்காருடைய பாட்டனாராகிய ஸ்ரீநிவாசையங்கார் என்பவர் சிறந்த ஞானி. அத்வைத சாத்திரங்களில் தேர்ச்சி பெற்றவர். தமிழ்ப்புலமையும் மிக்கவர். அவர் நவராத்திரி நாடகம், சாரங்கபாணி நொண்டி நாடகம் முதலியவற்றை இயற்றியிருக்கிறார். அவருக்கு அவர் குடிப்பெயராகிய சண்பகமன்னா ரென்பதே இயற்பெயரைப்போல வழங்கிவந்தது.

சடகோபையங்கார் மாநிறமுடையவர். குட்டை யாகவும், பருமனாகவும் இருப்பார்; பலசாலி. அவர் பேசும்போது அவரது குரல் சிறிது கம்மலாக இருக்கும். ஆனால் பாடும்போது அது மறைந்து விடும். தமிழின் சுவை அறிந்து படித்தவர் அவர். சடகோபையங்காரிடமிருந்த தமிழானது சங்கீதம் போலவே அவரை முதலில் இன்புறச் செய்து பின்பு மற்றவர்களையும் இன்புறுத்தும்.

பாடம் சொல்வதில் அவருக்கு விருப்பம் அதிகம். காலையில் ஐந்து மணிக்கே எழுந்துவிடுவார். நித்திய கர்மானுஷ்டானங்களை ஒழுங்காகச் செய்வார். பின்பு புத்தகங்களை எடுத்துக்கொண்டு தம்வீட்டு வெளித் திண்ணையின் மேலைக்கோடியில் உட்கார்ந்து கொள் வார். எந்த நூலையாவது படித்து இன்புற்றுக் கொண்டே இருப்பார். அந்த வழியே போவோர் அவரைக் கண்டு வணங்குவார்கள். சிலர் திண்ணையில் வந்து மரியாதையோடு அமர்வார்கள். உடனே சடகோபையங்கார் ஏதாவது தமிழ்ப்பாடல் சொல்ல

ஆரம்பித்துவிடுவார். நயமாகப் பொருள் சொல்வார். வந்தவர் கேட்டு மகிழ்வார்கள். அவர் இருக்குமிடம் தேடி வந்து அவருடைய இனிய தமிழ்ப்பிரசங்கத்தைக் கேட்டுப் போவார் பலர். செவ்வைச் சூடுவார் பாகவதத்திலும், அத்வைத சாத்திரத்திலும் அவருக்கு ஆராய்ச்சி அதிகம். அவரிடம் சிலர் முறையாகப் பாடங்கேட்டு வந்தார்கள். நாள் தவறாமல் திண்ணையில் உட்கார்ந்து வந்தவர்களுக்குப் பாடஞ் சொல்வதில் அவருக்குச் சலிப்பே உண்டாவதில்லை. "கம்பத்தை வைத்துக் கொண்டாவது பாடஞ் சொல்ல வேண்டும்; கேட்பவனை மாத்திரம் உத்தேசித்துச் சொல்லக்கூடாது. பாடஞ் சொல்வதனால் உண்டாகும் முதல் லாபம் நம்முடையது. பாடஞ் சொல்லச் சொல்ல நம் அறிவு உரம்பெறும்" என்பார். இவர் இயற்றிய பாடல்:

"வஞ்ச மாரும் மனத்தரைக் காவென்று
வாழ்த்தி வாழ்த்தி மனதுபுண் ணாகவே
பஞ்ச காலத்தில் பிள்ளைவிற் பார்கள் போல்
ப்ரபந்தம் விற்றுப் பரிசுபெ றாமலே
நெஞ்சம் வாடி இளைத்துநொந் தேனையா
நித்த நின்மல நின்னடி தஞ்சங்காண்
செஞ்சொல் நாவலர் போற்றஎந் நாளினும்
செழித்து வாழரி யில்நர சிங்கமே."

இச்செய்யுள் அரியிலூர்ப் பெருமாள் கோயில் நரசிங்கமூர்த்தி மீது பாடியது.

இவர் இயற்றிய நூல்கள்: இராமாயண வண்ணம், இராமாயணச் சிந்து, சிவப்பிரம ஐக்கிய வரலாறு, தனிச்செய்யுட்கள், இசைப்பாடல்கள் முதலியன. ஐயரவர்களுக்குச் சில அந்தாதி நூல்களையும், கலம்பகங்களையும், நீதி நூல்கள் சிலவற்றையும் கற்றுக்கொடுத்தார். ஐயரவர்களுக்குத் தமிழில் ஊக்கம் ஏற்படச் செய்தவர் இவரே. ஐயரவர்கள்

இவரிடம் பாடங்கேட்ட நூல்கள்:- திருவேங்கடத் தந்தாதி, திருவேங்கடமாலை, அழகர் கலம்பகம், மணவாள நாராயண சதகம், இரத்தின சபாபதி மாலை, நீதிவெண்பா முதலியன.

## 174. சண்டமாருதக் கவிராயர்

இவர் பாரத வண்ணம் பாடிய மலையலங்காரக் கவிராயருடைய தந்தையார்.

## 175. சண்பை நகர்த் தத்துவநாதர்

இவர் இருபா விருபஃதுக்கு உரை செய்திருக் கின்றனர். [சண்பை—சீகாழி]

## 176. சத்தி முற்றப் புலவர்

இவர் சோழிய வேளாளர்; திருச்சத்தி முற்றத் தைச் சார்ந்த பட்டீசுவரத்தில் தெற்கு வீதியில் வசித்து வந்தார் என்று தெரிகிறது. இவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அங்கே இருந்து வருகின்றனர். இந்தப் பரம்பரையோரில் மூன்று தலைமுறைக்கு முன்பு முத்துக்கருப்ப வாத்தியாரென்பவரும், அவர் குமாரர் அப்பாவு வாத்தியார் என்பவரும் இவர் தம்பி ஐயா வாத்தியாரென்பவரும் படித்தவர்கள்.

இவர் மதுரைக்குச் சென்றிருந்தபோது தம் நிலைமையைச் சுட்டிப் பாடிய பாடலொன்று உள்ளது.

### நாரை விடு தூது

''நாராய்! நாராய்! செங்கா னாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா னாராய்
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி

*வடதிசைக் கேகுவீ ராயின் எம்மூர்*
*சத்தி முத்த வாவியுட் டங்கி*
*நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி*
*பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே*
*எங்கோன் மாறன் வழுதி கூடலில்*
*ஆடை யின்றி வாடையின் மெலிந்து*
*கையது கொண்டு மெய்யது பொத்திக்*
*காலது கொண்டு மேலது தழீஇப்*
*பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்*
*ஏழை யாளனைக் கண்டன மெனுமே!''*

நகர்ச்சோதனையில் வந்த பாண்டியன் இப்பாடலைக் கேட்டு இவரை அழைத்துபசரித்துப் பல பரிசில் களைக் கொடுத்து அனுப்பிச் சில காலம் சென்றபிறகு இவர்கள் க்ஷேம நலம் விசாரித்தபோது கூறிய பாடல் வருமாறு:-

*வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை சோருமென் வீட்டில் வரும்*
*எறும்புக்கு மார்பத மில்லைமுன் னாளென் னிருங்கலியாம்*
*குறும்பைத் தவிர்த்த குடிதாங்கி யைச்சென்று கூடியபின்*
*தெறும்புற்கை யானை கவளங்கொள் ளாமற் றெவிட்டியதே,*

## 177. சந்தான குரவர்

சிவபுராணாதி தோத்திர மஞ்சரியில் (320-ஆம் பக்கம்) இவர்கள் துதி வந்துள்ளது.

இவர்களுக்குத் திருவாரூர் சாமிநாத தேசிக ரென்பவர் புராணம் செய்திருக்கிறார்.

## 178. சந்திரசேகர கவிராஜ பண்டிதர்

இவரது ஊர் தில்லையம்பூர். வித்துவான் தியாக ராசசெட்டியார் ஆறுமாதகாலம் ரஜா எடுத்துக்கொண் டார். அவருடைய ஸ்தானத்தில் இவர் நியமிக்கப் பட்டார். இவர் சென்னையில் மிக்க புகழ் பெற்ற வித்துவானாக விளங்கிய ஸ்ரீ விசாகப் பெருமாளை

யரிடம் பாடம் கேட்டவர். அவர் எழுதிய பஞ்சலக்ஷண வினாவிடை, பாலபோத விலக்கணம் என்பவற்றையும், நன்னூல் விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, தண்டியலங்காரவுரை, வச்சணந்தி மாலை முதலிய நூல்களையும் அச்சிட்டார்; தமிழ் நாட்டில் அங்கங்கே வழங்கும் தனிப்பாடல்களை யெல்லாம் திரட்டித் **தனிப்பாடற் றிரட்டு** என்ற பெயரோடு முதல் முதல் வெளியிட்டவர் இவரே.

இவர் சென்னையில் இருந்தபோது வண்ணார் பட்டையிலுள்ள சஞ்சீவிராயன் தெருவில் சில வருஷங்கள் வசித்து வந்தார். ஒருநாள் இரவு நிலா நன்றாக வீசிய நேரத்தில் இராப் பிச்சைக்காரன் ஒருவன் வீடுதோறும் சென்று அன்னப்பிச்சை வாங்கிக்கொண்டே வந்தான். அவன் பல ஊர்களைச் சுற்றினவன்; பல செய்யுட்களை அவன் அறிந்திருந்தான். "அம்மா, பிச்சை" என்று மட்டும் சொல்லிப் பிச்சை வாங்காமல் இனிய சாரீரத்தோடு தமிழ்ப் பாடல்களைப் பாடி அன்னங்கேட்பது அவன் வழக்கம்.

பிச்சைக்காரன் பாடிக்கொண்டே சந்திரசேகர கவிராஜ பண்டிதர் இருந்த தெருவழியே வந்தான். அவனுடைய இனிய குரல் வீட்டுக்குள் இருந்தவர்களை வெளியே வரச்செய்தது. பெண்டிர் அவன் பாட்டில் மயங்கி அவனுக்கு மனமுவந்து அன்னமளித்தனர்.

தெம்மாங்கு, வெண்ணிலாப்பாட்டு, பராபரக் கண்ணி முதலியவற்றை அவன் பாடுவான். ஒரு கண்ணியில் ஓரடியையே திருப்பித் திருப்பிப்பாடுவான். ஒரு தெரு முழுவதற்கும் அந்த ஒரு கண்ணியே அவனுக்குப் போதியதாக இருக்கும். அன்று வீசிய நிலவொளியில் அவனுடைய ஞாபகம் நிலாவைப் பற்றிய பாட்டொன்றில் சென்றது.

"ஊரைச் சுடுமோ" என்று அவன் ஆரம்பித்தான். தமிழ்ப்பாட்டாக யார் எதைச் சொன்னாலும் கேட்பதில் ஆவல் கொண்ட கவிராஜ பண்டிதரை அந்த ஒலி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருவித்தது. பண்டிதர் பிச்சைக்காரன் அருகிலே சென்று நின்றார். அவன் "ஊரைச் சுடுமோ" என்னும் தொடரையே நீட்டியும் குறுக்கியும் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்றான்.

இவருக்கோ அந்த நிமிஷத்திலேயே பாடல் முழுவதையும் கேட்கவேண்டும் என்ற ஆசை உந்தவே பொறுமையிழந்து "அந்தப் பாட்டை முழுவதும் சொல்லி விடப்பா" என்று கேட்டார். பிச்சைக்காரன் தலைநிமிர்ந்து பார்த்தான். அவரைப் பார்த்து இதோ சொல்லுகிறேன்" என்று கூறி "ஊரைச்சுடுமோ" என்று ஆரம்பித்தான். அதைக் கேட்ட பண்டிதர் அந்தப்பாடல் ஒரு வெண்பாவாக இருக்க வேண்டுமென்று ஊகித்தறிந்தார். பிச்சைக்காரன் நினைவுபடுத்திக் கொண்டு பாடிய பாடல் பின் வருமாறு:

"ஊரைச் சுடுமோ வுலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ அறியேனே— நேரே
பொருப்பு வட்ட மானநகிற் பூங்கொடியீ ரிந்த
நெருப்பு வட்ட மான நிலா"

பண்டிதர் பாட்டைக் கேட்டு, இனாம் கொடுத்தார்; வேறு சில செய்யுட்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

கவிராச பண்டிதர் பதிப்பித்த தனிப்பாடற்றிரட்டில் உள்ள மற்றப் பாட்டுக்கள் சிலவே அவருடைய ஞாபகத்தில் இருந்தன. அவற்றுள்ளும் இந்தப் பாட்டே அவருடைய மனத்தில் பசுமரத்தாணி போலப் பதிந்து நிலவியது.

சுப்பிரமணிய தேசிகர் மீது "**மும்மணிக் கோவை**" என்ற நூலொன்று இயற்றினார்.

## 179. சபாபதி ஐயர்

இவர் எழும்பூர் திருவேங்கடாசல முதலியாரிடம் பாடம் கேட்டவர். இராமாயணப் பிரசங்கம் செய்பவர். கூறை நாட்டில் உள்ள சாலிய கனவான்கள் விருப்பத்தின்படி தினந்தோறும் கம்பராமாயணம் படித்துப் பொருள் சொல்லி வந்தார். அவர் வந்த காலத்தில் பிள்ளையவர்களிடம் கம்பராமாயணத்தைப் பற்றி நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தனர். சில சந்தேகங்களையும் தீர்த்துக் கொண்டார்.

## 180. சபாபதி முதலியார்

இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். அந்த ஊரிலிருந்த தமிழ் வித்துவான்களிடத்தும் பின் திருவாரூர் சென்று அங்கேயிருந்த சைவப் பெரியாரொருவரிடத்தும் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையே கற்றார். பின்பு சென்னையிலும் சில வித்துவான்களிடத்திற் பாடங்கேட்டனர். சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தமிழாசிரியராகப் பல வருடங்கள் இருந்து வந்தனர். பல சைவ நூல்களையும் பிரபந்தங்களையும் பதிப்பித்தனர். சில நூல்களுக்கு உரையெழுதினர். பலபிரபந்தங்களும் சில ஸ்தல புராணங்களும் இயற்றினர். பலர் வேண்டுகோளின்படி வாரந்தோறும் ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயிலிற் சைவப் பிரசங்கம் செய்து வந்தனர். சென்ற நூற்றாண்டில் சென்னையில் தமிழ் நூல்களைப் பலருக்கும் முறையே பாடஞ் சொல்லித் தமிழறிவைப் பரப்பிய பெரியோர்களுள் அவரும் ஒருவர். இவரிடம் பாடங்கேட்ட மாணவர்கள் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய பலர். ஐயரவர்களுடைய ஆசிரியராகிய திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்

களுக்குப் பாடஞ் சொன்னவர்களுள் இவரும் ஒருவர். அவரிடத்தில் பிரபுக்கள் பலர் நன்மதிப்பு வைத்து அவரை ஆதரித்து வந்தனர்.

இவர் இயற்றிய நூல் **திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, சைவசமய விளக்க வினாவிடை, பிரமோத்தர காண்டத்துக்குப்** பொழிப்புரை முதலியன.

பல வருடங்களுக்கு முன்பு திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா எழுதிய ஏட்டுச்சுவடியொன்று திரிசிரபுரம் வித்துவான் சி. தியாகராஜ செட்டியாரிடத்திலிருந்து கிடைத்தது. தம்முடைய ஆசிரியருக்குப் பாடஞ் சொன்னவர் இயற்றிய நூலென்ற அன்பினால் அவர் இதனைத் தாமே எழுதி வைத்திருந்தார். திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா இப்பொழுது படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கும்படி சுருக்கமான குறிப்புரையுடன்ஐயரவர்களால் வெளியிடப்பெற்றது. அதில் ஒரு செய்யுள்:

> "திங்களர வங்களணி செஞ்சடையர் பங்கிலொரு
> மங்கையையம ணைந்துளம கிழ்ந்தவிறை—குங்கிலியர்
> பாலருளு நாதர்வரு பாணரிசை யாவலினர்
> ஆலமுணு நாதர்சிவ னார்".

## 181. சம்பந்த சரணாலய சுவாமிகள்

இவர் தென்பாண்டி நாட்டின் கண்ணே பரம்பரைச் சுத்த சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். இவர் ஸ்ரீ வெள்ளியம்பல வாணத் தம்பிரான் சுவாமிகள் அவர்களிடம் வடமொழி, தென்மொழி ஆகிய இருமொழிகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர். திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்து ஆறாவது பட்டத்தில் வீற்றிருந்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய

சுவாமிகள் அவர்களிடம் சைவ சந்நியாசமும், ஞானோபதேசமும் பெற்று, அவர்பால் நீங்காத அன்பு கொண்டு வந்தமையால் **சம்பந்த சரணாலயர்** என்ற பெயரையும் பெற்றவர். இவரது இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயரே வழங்கலாயிற்று.

இவர் ஒழுக்கத்தாலும், ஞானத்தாலும், புலமையாலும் சிறந்து விளங்கியமையின் இவருடைய புகழ் தமிழ்நாட்டிலும், மைசூரிலும், பிற இடங்களிலும் பரவியது.

இவரது சிறப்பை அறிந்த மைசூர் அரசர் இவரைத் தரிசித்து இவருடன் பழக வேண்டுமென்னும் அவாவுடையவரானார். அவ்வரசர் தமிழ் நூல்களில் ஓரளவு அறிவுடையவர். அவர் தம் விருப்பத்தைத் தருமையிலிருந்த சுவாமிகளுக்குத் தெரிவிக்க, அவரும் இவரை மைசூருக்கு அனுப்பினார்.

சுவாமிகளுடைய துறவுக் கோலத்தில் மன்னர் உள்ளம் ஈடுபட்டது. பேச்சுக்களிலும், இயல்புகளிலும் தனிச்சிறப்பைக் கண்டு தெய்வமெனப் போற்றினார். சிலகாலம் தம்முடன் இருக்கவேண்டுமென்று வேண்ட அங்ஙனமே இவர் அங்கே இருந்தார்.

அரசரின் வேண்டுகோளுக்கிணங்க கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இயற்றிய கந்தபுராணத்தை 1048 செய்யுட்களில் சுருக்கிப் பாடினார். அரசருடன் திருச்செந்தூர் அடைந்து செந்திலாண்டவன் சந்நிதியிலே அரங்கேற்றினார். தமது ஞானாசிரியராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிகர் மீது **சிகா ரத்தின மாலை** என்னும் நூலை இயற்றினார்.

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று தெரியவருகிறது.

இவர் இயற்றிய துதிப்பாடல்கள்;-

**சம்பந்த சரணாலயர் (தருமை)**

1. காரானை யுரித்தானை இமையோர் தம்மைக்
காத்தானை வஞ்சநெஞ்சக் கள்வர் தம்பால்
வாரானைச் சுந்தரனைத் தடுத்தாட் கொள்ள
வந்தானைச் செஞ்சடைமேல் வளருங் கொன்றைத்
தாரானை மார்க்கண்டர்க் கிரெட் டாண்டு
தந்தானைத் துறைசையெனச் சகமீ தோங்கு
மூரானை வெள்ளானை யூர்ந்தான் றன்னை
யொருகாலு மிருகாலு முளத்திற் கொள்வாம்.

2. கலைத்தழும்பு பெற்றுளமெய் யன்பர் போற்றுங்
கவுமாரி யுலகீன்ற கன்னி கையின்
மலைத்தழும்பு பெறவெடுத்தா னிரைகாத் திட்ட
மால்துணைவி சிவகாம வல்லி பார்த்தன்
சிலைத்தழும்பு கொண்டபிரான் மேனி தன்னிற்
றென்காஞ்சி மாநிழற்கீழ்ச் செகமேழ் காண
முலைத்தழும்பும் வளைத்தழும்பும் வைத்தாள் தெய்வ
முளரியந்தாட் டழும்பெனது முடிமேற்
கொள்வாம்.

கொற்றமா தவன்முன் னுரைத்திடச் செம்பொற்
குன்றின்மேல் வேழமா முகத்தோன்
பொற்றடக் கரத்தால் வரைந்திடுந் தெய்வப்
புண்ணியப் பாரதக் கதையைக்
கற்றறி புலவர் தங்கள்முன் சிறியேன்
கழறிடத் துணிந்திடு முறைதான்
சிற்றெறும் பொன்றேழ் கடலினைக் குடிப்பான்
சிந்தைகொண் டெழுந்தென லாமால்.

## 182. சம்பந்த முனிவர்

இவர் சிவப்பிரகாசத்திற்கு உரை செய்த காவை அம்பலவருடைய உரைச் சிறப்பும் பாயிரத்தில் கூறப்பட்டிருத்தலின் அவருக்கும் முற்பட்டவராக நினைக்கப்படுகிறார். இப்பெயருள்ளவர்கள் சில புலவருண்டு.

## 183. சமய திவாகர வாமன முனிவர்

இவர் நீலகேசிக்கு விருத்தியுரை (சமய திவாகரம்) இயற்றியவர். இவருடைய பிம்பம் சைன காஞ்சியில் உள்ளது.

## 184. சயங்கொண்டார்

கலிங்கத்துப் பரணி என்பது இவர் இயற்றிய நூல். இவருடைய ஊர் தீபங்குடியென்று இவருடைய செய்யுளாலேயே தெரிகின்றது. இவ்வூர் திண்டிவனத்தை யடுத்துள்ளது. சோழவரசனின் மீது பரணி பாடி, "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று புகழ்ப்பெற்றவர் இவரே.

அபயன் நுமதூர் யாதென்று கேட்டபோது இவர் பாடிய பாடல்:

செய்யும் வினையு மிருளுண் பதுவும்
 தேனு நறவு மூனுங் களவும்
பொய்யுங் கொலையு மறமுந் தவிரப்
 பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர்
கையு முகமும் இதழும் விழியும்
 காலு நிறமும் போலும் கமலம்
கொய்யு மடவார் விழிவா யதரம்
 கோபங் கமழும் தீபங் குடியே.

## 185. சரதையூர்க் கணக்கர்

இவர் அச்சுதர்ராயர் காலத்தில் **வள்ளியம்மை புராணம்** என்ற ஒரு நூல் செய்திருப்பதாகத் தெரிகின்றது. இந்தப் புராணத்தில் 63-சருக்கங்களும், 1345 செய்யுட்களும் உள்ளன.

## 186. சரவண ஓதுவார்

பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் ஆதீனகர்த்தராக 14-ஆம் பட்டத்தில்

வீற்றிருந்த வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிக்கும் பொருட்டு அங்கு வந்திருந்த போது திருவாவடுதுறை மடத்தின் ஆதீன வித்துவான் களாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் பிற்காலத்தில் கோயம்புத்தூரையடைந்து அங்கே உள்ள பிரபுக்களாலும் வித்துவான்களாலும் ஆத ரிக்கப் பெற்றுப் பலருக்குப் பாடம் சொல்லிப் புகழ் பெற்றவர்.

## 187. சரவணக் கவிராயர்

இவர், சிறுகம்பையூர்க் சருக்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர் காலத்தினர்; இவர் செய்தன வாக ஒன்றும் தெரியவில்லை.

## 188. சரவணப்பெருமாள் கவிராயர் (பழையவர்)

இவர் பிறந்த ஊர் முதுகுளத்தூர். இவரது காலம் சற்றேறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன் என்று கொள்ளலாம். இராணி சேதுபதியவர்களுடைய சமஸ்தான வித்துவானாக இருந்தார். **இராமீசர்** மீது **பணவிடுதூது** பாடியவர். சிவகங்கையை ஆண்ட ஜமீந்தாரவர்களாகிய கௌரி வல்லபத் தேவரவர் களைப் பாடி வானரவீர மதுரைத் தாலுகாவைச் சேர்ந்த புளியங்குளம் என்னும் கிராமத்தைப் பரிசாகப் பெற்றார். இந்தக் கிராமம் பார்த்திபனூருக்கு மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. பணவிடுதூது என்னும் நூலினைத் தவிர வேறு நூல்கள் பாடியதாகத் தெரியவில்லை. இவரது குமாரர் அருணாசலக் கவிராயர். இவரது காலத்தி லிருந்த புலவர்கள் சர்க்கரைப் புலவரும் சவ்வாதுப் புலவரும், வெண்பாப்புலியும், பாலசிங்கக்கவிராயரும். இவர் சென்னை சென்று திரும்பியபொழுது சென்னை முதல் இராமநாதபுரம் வரையுள்ள சுங்கக்காவலர்க்கு **''அவதானியருள''** என்ற பாட்டினைப் பாடி, சுங்கவரி கொடாது பொருளோடு ஊருக்கு வந்தார்.

திருமலைராயன் பட்டினத்திற்கு வந்து அவ் ஊரார் மீது "**யௌவன மனோரமணி**" என்னும் சீட்டுக் கவி பாடி அவ்வூரார் வேண்டுகோளுக்கிணங்கி அங்கு அட்டாவதானஞ் செய்து ஆயிரம் பொன் சம்மானம் பெற்றார். காரைக்கால் இலக்குமண முதலியார் முன்னிலையிலும் அட்டாவதானஞ் செய்தார். இவர் பாடியவசைக்கவிகள் பல. கேரள நாட்டிற்குச் சென்று ஆதிகேரள இராமராஜர் மீது "**மாதுபதி நீதிபதி**" என்ற பாடல் இயற்றினார். அவ்வரசன் அப்பாட்டிற் குறித்தபடி அகத்திய முனிவரைக் கண்டு வந்த பிறகு தன்னைக் காணலாமென்று கூறிப் பின்பு பேட்டி கொடுக்கவில்லை. இவர் மாலை வரை காத்திருந்து பின்பு அஷ்டாவதானம் செய்து தந்தப் பல்லக்கும் மற்றும் பல பொருள்களும் பரிசு பெற்றார்.

"மாதுபதி" என்னுஞ் சீட்டுக்கவியால் நவாபி னுடைய பேட்டி பெற்றுச் சன்மானமும் பெற்றார் என்பது தெரிகின்றது. இவர் இராமநாதபுரம் சோம சுந்தரம் பிள்ளையவர்களிடமும் இலக்கண நூல் பயின்றவர் என்பதைப் பின்வரும் வெண்பாவினால் அறியலாம்.

கண்ணன்றாய் தங்கை களத்திர மாமியம்மான்
வண்ண மருமகளே மைத்துனனென்-றெண்ணியிவை
நாம நடுவெழுத்தை நாடி விலக்கணத்துக
கூமனுஞ் சொல்லானோ வுரை.

குறிப்பு:- 1. அசோதை, 2. விமலை, 3. வசுதை, 4. குந்தி, 5. து? 6. இரதி 7. சம்பு

இவருடைய சந்ததியார் மேற்குறித்த புளியங் குளத்தில் இருந்து வருகின்றார்கள் என்று கேள்வி.

இவர் பாடல்கள் சில:

## திருத்தணிகை

1. பைந்தமிழி னலஞ்சிறந்த முனைப்பாடித்
   திருநாட்டிற் பாகை வேந்தன்
   சுந்தரஞ்சேர் பாரதமாம் வடகலையைத்
   தென்கலையாற் சொல்க வென்ன

சந்தனுவின் சரிதமுதற் பதினெட்டா
நாட்போரிற் சரிதங் காறும்
புந்திமகிழ் தரவில்லி புத்தூராழ்
வான்முன்பு புகன்றிட் டானே.

2. தெரிவுறமா நிலத்திவிவை விளங்கிடுநாண்
மடுவைநகர்த் திம்ம பூபன்
பரிவுடனம் பலத்தாடு மையரைநீ
ராதிபரு வத்தை யெங்கும்
விரிவுதரும் படிக்குரைக்க வேண்டுமென
வுரைத்தனனே வில்லி புத்தூர்ப்
பெரியவன்சொ லுடன்கலந்து பாயிரத்தில்
வான்முறையும் பேசி னானே.

இடந்தருவான் முகிற்குலங்கள் வானவர்கோன்
வெள்ளிபத்தி னெழுந்த ளாவிப்
படர்ந்துமணித் திரைக்கடலின் மேய்ந்துகதி
ரவனிரதப் பாய்மாப் போல
நடந்துதடித் திடித்தெழுந்து நாற்றிசையும்
பரந்தோங்கு நாள்க டோறுங்
குடந்தருநீர் சொரிந்தனபோன் மாறாமற்
பொழிந்தனவக் குமரக் குன்றில்.

கலந்துல கனைத்தும் புரந்திரு மருங்குங்
கதித்திடு மரக்கரை யிடந்து
குலந்தரு கமலத் தாளுடன் கலந்து
கோதில்பன் னகத்திடைக் குலவி
வலந்தரு சங்கா ழியைக்கலந் துயர்ந்து
மாதவ முகுந்தனே ரென்ன
நிலந்தரு பத்திர நதிசெறி செல்வ
நீடிய நெல்லைநன் னாடு.

வண்ட தளத் திரைகடலேழ் தானுமொரு
சுற்றாக வனைந்த பூமான்
கொண்டமதா ணியைநிகராம் நெல்லைநா
டந்நாட்டிற் குலவிச் சூழக்
கண்டசில மாநகரப் பதக்கத்திற்
சூழ்மணிபோற் கலந்து வைக
வண்டர்புகழ் தருங்கோட்டு ரதிலடுநா
யகம்போல் வமர்ந்த மாதோ.

## 189. சவ்வாதுப் புலவர்

இவருடைய ஜனன பூமி திருச்செங்கோடு, முகம்மதிய மதத்தினர். சிறந்த தமிழ்ப் புலவர்களிடம் தமிழ்க் கல்வி முறையே பயின்று, தமிழ் இலக்கண இலக்கியங்களில் வல்லவராகி, விரைவில் செய்யுள் செய்யும் திறமையும் பெற்றுப் பலரால் நன்கு மதிக்கப் பட்டுச் சேதுபதி சமூகத்தை யடைந்து, அங்கேயுள்ள சிறந்த தமிழ் வித்துவான்களுள் ஒருவராகிய சருக்கரைப் புலவரோடு மிகுந்த நட்புடையவராக இருந்து, சேதுபதியின் மீது பாடல்கள் செய்திருக் கின்றனர். இவர் பரம்பரையோர் திருச்செங்கோட்டில் இன்றும் இருக்கின்றார்கள்.

சிவகங்கைச் சீமையை யாண்ட மருது சேர்வைக் காரர், காளையார் கோயிற் கோபுரங்கட்டியபொழுது அவருடைய திருப்பணியின் அருமையைப் பற்றியிவர் செய்த செய்யுள்:

வானம் வெட்டச் சென்றபணம்
வானமட்டுக் குங்குவிய வளர்த்தாணித்ய
தானகன்னன் கோபுர மொட்
டுத் தொகைகா ளீசர்சித்தந் தனக்கே தோன்றும்
ஆனமட்டும் பார்த்தாலு
மூவேழு வள்ளலிவனம் சையுண்டோ
ஞானசனகன் மருத
பாண்டியன் சிவ புண்யமக ராசன்றானே.

[வானம்—அஸ்திவாரம்]

இவர் முதலில் துறைசை மடஞ் சென்று படித்தற்கு முயல, அவர்கள் பிறமதத்தினருக்குப் பாடஞ் சொல்லேமென்று சொல்லி மறுக்கவும், போகாமல் அங்கேயே 6 மாதமிருந்து ஏழைகளோடு அன்னம் புசித்துக் கொண்டு காத்திருப்ப, அவர்கள் இரங்கிப் பாடஞ் சொல்லி விடுத்தனரென்றும், அதனால் இவர் கல்வியில் வல்லுநராயினாரென்றும் சொல்வர். இவர் ஒரு காலத்தில் இராமேசுவரம்

சென்று இராமநாதப் பண்டாரத்தைப் பார்ப்பதற்குப் போய்ப் பேட்டி கிடைக்காத பொழுது அவருக்கு அனுப்பிய சீட்டுக்கவி வெண்பா:

"கல்விக்குச் சவ்வா துகவிசேர் சீட்டுச்
செல்விக்குஞ் செல்விக்குஞ் செல்விக்கும்— செல்வர்
துரை ராமநாதா தொல்புவியோர் போற்று
வரைராம நாதாநீ வா."

இதைப் பார்த்த பண்டாரம் தம்பால் உத்தியோகமா யிருந்த சாமிநாதப் பிள்ளையை அழைத்து இவரை அழைத்து வரும்படி அனுப்ப அவர் வந்து இவருக்குக் கொடுத்தனுப்பிய பாடல்:

வெண்டாமரை யனந்தான் வேறுருக்கொண் டுற்றதுவோ
தண்டா மரையனந்தன் றானிவனோ-வண்ட மிழின்
எண்ணோ எழுத்தோ இசையோ இயற்புலவர்
கண்ணோசவ் வாதுக் கவி.

[சாமிநாத பிள்ளை குன்றக்குடி அப்பாப் பிள்ளை அவர்களுடைய பிதாமகர்]

இவர் குலப் பட்டப் பெயர் சவ்வாதென்பது; இவருடைய ஊர் பரமக்குடிக்கு வடக்கே வையையின் வடகரையிலுள்ளதாகிய யமனேசுவரமென்பது, இவருடைய சமாதி பரமக் குடியிலிருக்கின்றது. அது கீழைப் பள்ளி வாசலென்று சொல்லப்படும். இப்போது இவர் சந்ததியார் யமனேசுவரத்தில் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் பெயர் சருவ சவ்வாதென்பது. இவர் தமிழ் படித்தவர். அப்புல வருக்குச் சிவகங்கை ஜமீன்தாராகிய கவுரிவல்லபத் தேவரென்பவர் நன்கொடையாக அளித்த கிராமம் 'வண்ணவய லென்பது; இராமநாதபுரம் இரகுநாத சேதுபதி இவருக்கு அளித்த கிராமம் சுவாத்த னென்பது. இவர் செய்த நூல்கள்:

1. முகமது நபியவர்கள்மீது பாடிய மிதினத் தந்தாதி. மிதினா அரேபியாவிலுள்ளது.

2. நாகூர் மீரா சாயபு அவர்கள்மீது பாடிய நாகையந்தாதி.

3. முகையத்தீன் ஆண்டவர் பேரிற் செய்த பள்ளைத் தமிழ். இது ஆர்க்காடு நவாபு வினிடத்தில் அரங்கேற்றப்பட்ட தென்பர். சர்க்கரைப் புலவரென்பவர் இவர் காலத்தி னராகக் கூறப்படுவர். இது பற்றியே "சர்க்கரை தொண்டை மட்டும் சவ்வாது கண்ட மட்டும்" என்று ஒரு பழமொழி இவர்கள் ஆற்றலை விளக்குவதாகத் தென் னாட்டில் வழங்கா நின்றது. இவர் காசீம் புலவர் என்றுஞ் சொல்லப்படுவார்.

## 190. சவேரி நாதப் பிள்ளை

வேதநாயகம் பிள்ளையால் அனுப்பப்பட்டுச் சவேரிநாத பிள்ளை என்ற ஒருவர் பிள்ளையவர் களிடம் படிக்க வந்தார். அவருடைய ஊர் காரைக் கால். அவர் நல்ல அறிவாளி. பிள்ளையவர்களிடத்தில் மிக்க பக்தி உள்ளவர். பிரசங்க சத்தி மிக்கவர். மற்றவர்களைக் காட்டிலும் பிள்ளையவர்களுக்கு வேண்டிய தொண்டுகளை அதிகமாகச் செய்து வந்தவர். கிறிஸ்தவ மதத்தினர். சைவர்களைப் போலவே சில முடையவராகவும் மிகுந்த மரியாதை யாகவும் நடந்து வந்தார். ஒரு நாளேனும் இவர் மகாவித்துவான் பிள்ளையவர்களை பிரிந்திருக்க மாட்டார். இனிய சாரீரமுடையவர். பிள்ளையவர்கள் இறுதிக் ;காலம் வரையில் நம்பிக்கையாக அவரைப் போல வேறு எவரும் இருக்கவில்லை. எப்போதும் உற்சாகமுள்ளவராகவே இருப்பார்; வேடிக்கையாகப் பேசுவார்; எவ்வளவு துக்கமாக இருந்தாலும்.

கோபமாக இருந்தாலும் தம்முடைய பேச்சின் திறமையால் அந்நிலையை மறக்கச் செய்வார். நட்புச் செய்து கொள்ளுவதற்குத் தகுதியானவர். அவரோடு சேர்ந்திருந்தால் பொழுது போவதே தெரியாது.

### 191. சாம்பமூர்த்தி ஐயர

இவர் தியாகராச செட்டியார் காலத்தில் ஞானாசிரியராக இருந்தவர்; வடமொழி, தென்மொழி நூல்களில் நல்ல பயிற்சியுள்ளவர்; தேவாரங்களைப் பண்ணோடு ஓதுவதில் வல்லவர்.

### 192. சாம்பவானோடை அம்பலவாண முனிவர்

இவர் ஒரு தமிழ்வித்துவான். இவர் பிறந்த ஊர் தில்லை வளாகத்தைச் சேர்ந்த சாம்பவானோடை என்பது. யோகத்திற் சிறந்தவர். இவர் பரம்பரையோர் இன்றும் சாம்பவானோடையில் இருக்கிறார்கள். இவர் தமது கையால் எழுதப்பெற்ற ஏட்டுப்பிரதி ஒன்றில் இவர் எழுதிய வருஷ மாசந்தேதியை ஆராயுமிடத்து இன்றைக்குச் சற்றேறக் குறைய இவருடைய காலம் 300 வருடத்திற்கு முந்தியதென்று தெரிகிறது. இவர் செய்த நூல் **திருவுசாத்தானப் புராணம்.** அச்சாம்பவானோடையிலேயே இவருடைய சமாதியிருக்கிறது. இவருடைய உருவம் போன்ற கற்சிலையொன்று பூசிக்கப்பட்டு வருகிறது. கோயிலுண்டு.

இவர் கையெழுத்தாகிய சதாசிவ வியாக்கியானம் என்னும் நூலொன்றின் இறுதியில் 'இன்ன நூல் சாலிவாகன சகாப்தம் 1515 இல் எழுதி முடிந்தது. இங்ஙனம் அம்பலவாணன்' என்றுங் கைச்சாத்திட்டிருப்பதை உற்று நோக்குங்கால் இவருடைய காலம் வெளியாகிறது என்று சொல்லுவார்கள்.

## 193. சாமி ஐயங்கார்

இவர் கார்குடி என்னும் ஊரிலிருந்தவர். இவரிடத்தில் டாக்டர். ஐயரவர்கள் கம்பராமாயணம் சுந்தர காண்டத்திற்குப் பொருள் கேட்டறிந்தார்.

## 194. சாமி ஐயா தேசிகர்

இவர் சாம்பமூர்த்தி ஐயா என்பவரின் தமையனார் குமாரர்; அவருக்குப் பின்பு அவர் ஸ்தானத்தை வகித்துவந்தவர். இவர் சைவசித்தாந்த நூல்களில் தேர்ச்சி பெற்றவர்; தம்முடைய மாணாக்கர்களால் சைவசித்தாந்தம் பரவவேண்டுமென்ற நோக்கமுடையவர்.

## 195. சாமிநாத தேசிகர் (1)

இவர் துறைமங்கலம் கருணைச் சிவப்பிரகாசரென்பவருடைய குமாரர். **பழமலைக் கோவை** என்ற நூல் இவரால் இயற்றப் பெற்று அரங்கேற்றப்பட்ட காலம் சாலிவாகன சகாப்தம் 1682 (கி. பி. 1759) என்று அந்நூல் எழுதிய ஏட்டுச் சுவடியிலுள்ள குறிப் பொன்றினால் தெரிகின்றது. எனவே இவருடைய காலம் இன்றைக்கு ஏறக்குறைய 230 வருஷங்களுக்கு முன்பென்று புலப்படுகின்றது.

இந்நூலின் நடை முதலியவற்றைப் பார்க்கையில் இதனைத் தம் இளமையில் இவர் இயற்றியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது; ஆயினும் தலசம்பந்தமான வரலாறுகளையும், தாம் கற்றும் கேட்டும் அறிந்த பல செய்திகளையும் அங்கங்கே அமைத்திருக்கிறார்.

இவர் பல பழைய நூல்களிற் கண்ட சொற்றொடர்களையும், அரிய கருத்துக்களையும் தம்

நூலில் அங்கங்கே அமைத்திருக்கின்றார். தம் முன்னோராகிய சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கிலிருந்து பல கருத்துக்களையும் எடுத்தாண்டிருக்கின்றார்.

இவர் துறைமங்கலம் ஸ்ரீசிவப்பிரகாசசுவாமிகளுடைய இளவலாகிய ஸ்ரீ:கருணைப்பிரகாசருடைய பரம்பரையினராக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.

*சீர்தங்கு பூங்கொடி யாரும் பெரியம்மைத் தேவியர்விண்*
*ஏர்தங்கு நன்முது குன்றர்தங் கோவைக் கினிதருளும்*
*போர்தங்கு மைவர் கதைகொம்பி னாற்பொற் கிரியெழுதும்*
*பார்தங்கு பாதளத் தைங்கரத் தானை பதமலரே.*

## 196. சாமிநாத தேசிகர் (2)

இவரது ஊர் திருவாரூர். இவர் அபிஷிக்தர்; வித்துவான் தியாகராச செட்டியாரவர்களிடம் பாடம் கேட்டவர். திருவாரூரிலிருந்து திரிசிரபுரத்தில் வந்திருந்து பாடம் கேட்டுவந்தார். இவர் நல்ல தமிழ் வித்துவான்; **திருவாரூர்ப் புராணத்தைப்** பதிப்பித்தவர்; **சந்தான குரவர் புராணம்** என்னும் நூலை இயற்றி வெளியிட்டவருமாவர்.

## 197. சார்வாய்க் கதிர்வேற் கவிராயர் (பிள்ளை)

இவர் கடம்பர்கோயில் மதுரை நாயகம் பிள்ளையின் சகோதரியின் குமாரர். இவர் ஊர் சேலம் ஜில்லா ஆற்றூர் தாலுக்கா சார்வாய் கிராமம். இவருடைய பூர்வீக ஊர் புல்வயல். இது புதுக்கோட்டைச் சீமையிலுள்ளது. குமரேச சதகம் செய்த குருபாத தாஸருக்கு இவர் பௌத்திரர். இவர் செய்த நூல்கள் **கதிர்வேலனைஞ்ஞூறு, முருகர் பதிற்றுப்பத்தந்தாதி**

**உயிர் வருக்கத் திருப்புகழ், உயிா வருக்கக் கீர்த்தனை, பஞ்சரத்தினத் திருப்புகழ்** (வேள்வியூர் முருகன் மீது.)

தனிப்பாடல்கள் அநேகம். இவர் சரித்திரம் தில்லையம்பூர் வேங்கடராம ஐயங்கார் எழுதுவதாகக் கேள்வி.

## 198. சார்வாயிக் குமாரசாமிக் கவிராயர்

இவர் சேலத்தைச் சார்ந்த சர்வாய் என்னும் ஊரிலே இருந்த தமிழ் வித்துவான். இவர் அரியிலூரிலும் உடையார் பாளையத்திலும் சிலகாலம் ஸமஸ்தான வித்துவானாக விளங்கினார்.

## 199. சாரம் குமரப்ப முதலியார்

ஞானவாசிட்டம் என்னும் நூலுக்குச்சிறப்புப் பாயிரம் அளித்தவர்களுள் ஒருவர்.

## 200. சாலிவாடீசுர சத்திய வாசக ஞானப் பிரகாசர்

திருவாவடுதுறை மடத்துப் பழைய திருமந்திர ஏட்டுப் பிரதியொன்றன் முதலில் ''சாலிவாடீசுர சத்திய வாசக ஞானப்பிரகாச குருபாதமே கதி" என்று எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் இப் பெயருள்ள ஆசிரியரொருவர் முன்பிருந்தாரென்று சொல்வதற்கிடமுண்டு.

## 201. சாலிவாடீபுரம் ஞானப்பிரகாச தேசிகர்

இவர் சிவஞான சித்தியார் சுபக்ஷத்திற்கு உரை செய்தவர்களுள் ஒருவர். அவ் உரையின் முகவுரையில் **திருமலை ஞான தேசிகர்** சிவக்கொழுந்தாசாரியர் என்பவர்களுக்குக் காலத்தால் பிந்தியவரென்று இவர் நினைக்கப்படுகிறார். அவ்வாக்கியம் இது:

"இதற்கு உரை செய்தவர்கள் திருமலையா தேசிகர் ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியர். இவர்கள் சிவ ஞான சித்திக்குச் செய்த உரைகள் விரிந்தபடியினாலே எழுவாய், பயனிலை, பொருட் புணர்ச்சி, பொள் ளெனத் தோன்றாதாகிலும்."

## 202. சிங்கப்பூர் நாராயணசாமி நாவலர்

சிங்கப்பூரில் நாராயணசாமி நாவலர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் பிள்ளையவர்களுடைய புலமைத் திறத்தைப் பலர் வாயிலாக அறிந்தவர். பிள்ளையவர்களுடைய பழக்கத்தைப் பெற வேண்டு மென்னும் விருப்பம் அவருக்கு மிகுதியாக உண்டு. ஆயினும் நேரிற்கண்டு பழகுவதற்கு இயலாத நெடுந் தூரத்தில் இருந்தவராதலின் கடிதங்கள் மூலமாகத் தம்மை அறிவித்துக் கொண்டார். பிள்ளையவர்களு டைய பூஜைக்கு வேண்டிய பொருள்களையும் அனுப்பிவந்தார். பிள்ளையவர்கள் விஷயமாகச் செய் யுட்களும் எழுதி அனுப்பியதுண்டு. கம்பராமாயணம் முதலியவற்றில் தமக்கு விளங்காத பகுதிகளை எழுதி யனுப்பி இவரிடமிருந்து விடைபெற்றுத் தெரிந்து கொண்டனர். தமக்கு வேண்டிய சில நூல்களை எழுதுவித்து வருவித்துக் கொண்டார்.

## 203. சிங்கவனத்தார் (பாரதியார் எனப்படுபவர்)

திருப்பெருந்துறைக்கு வடகிழக்கில் பத்துமைல் தூரத்திலும், மணமேற்குடிக்கு வடமேற்கில் நான்கு மைல் தூரத்திலும் உள்ளது சிங்கவனம். இது தஞ்சை மன்னர்களால் நன்கு மதிக்கப்பட்டது. ஜமீன்தார் வம்சம் வெகுகாலம் அரசு புரிந்தது. ஆறு தலைமுறைக்கு முந்தியிருந்தவர் பெயர் பெருஞ்சேரிக் கோபாலர். இவர் தமது பகைவரான புதுக்கோட்டை யாரோடு போர்புரிந்து வென்று அவர்கள் மனைவி

யர்கள் கழுத்திலிருந்த தாலியைக் கொண்டு வார்க்கப் பட்டுள்ள சுப்பிரமணிய விக்கிரகம் மேற்படி ஜமீனுக்குள் பெரிய கிராமமாகிய சிங்கவனத்துக்குக் கிழக்கில் அரைமைல் தூரத்தில் உள்ள காரைக் கோட்டை சிவஸ்தலத்தில் இப்போதும் இருக்கிறது.

இந்தச் சமஸ்தான வித்வானாக இருந்தவர் சுப்பிரமணிய பாரதியார் என்பவர். சிங்கவனத்திற்குத் தெற்கு ஒரு மைல் தூரத்திலுள்ள வெள்ளாற்றின் வடகரையிலுள்ள செல்லப்பன் கோட்டை அக்கிர காரத்தில் குடியிருந்தவர். இவர் தினமும் ஒரு முறை மாலையில் ஜமீன்தார் அவர்களோடு வந்திருந்து பிரசங்கம் முதலானவை செய்து பொழுது போக்கின பின்பு, இரவில் தனித்துத் தமது கிருஹத்திற்குப் போவது வழக்கம். இப்படியாக ஒரு நாளிரவில் தாம் வீட்டுக்குப்போகும் வழிமத்தியில் கொள்ளைக்காரர் சிலர் இப்பாரதியாரைத் துரத்தினார்கள். இவர் பல சாலியாகையால் ஓடித் தப்பித்துக் கொண்டார். ஓடும் போது கொள்ளைக்காரர் பின்னின்றெறிந்த ஈட்டி இவர் சரீரத்தில் உராய்ந்து முன் சென்ற அடையாளம் கொண்டு மறுநாள் காலையில் வந்து பார்க்கையில் ஒரு வீட்டில் அகப்பட்டது. தாம் கண்டெடுத்த அந்த ஈட்டியையும் அதன் வரலாற்றையும் துரையவர் களுக்குத் தெரிவித்தனர். உடனே சென்று அவ்வீட்டில் வரைந்திருந்த கொள்ளைக்காரர்களின் பெயரைத் தெரிந்து வேட்டம் ஆடிப்பிடித்து அவர்களையெல் லாம் அரண்மனையின் எதிரிலுள்ள தாமரைக் குளக் கரையில் கழுவேற்றிப் புலவரையமைத்துக் காட்டித் தாமும் திருப்தியடைந்தனர்.

பாரதியாருக்கு இரண்டு பிள்ளைகள், ஒருபெண் உண்டு. ஒரு பிள்ளை சுக்குப் பொடிக்காரனால் போன இடம் தெரியாமல் போனார். மற்றொருவர் இளமையிலேயே இறந்து போனார். எஞ்சிய தமது

கன்னிகையை ஸ்ரீநிவாச ஐயர் என்பவருக்குக் கன்னிகாதானம் செய்து தமது அகத்தை விற்று அவரைப் படிக்க வைத்தார். சுப்பிரமணிய பாரதியாராவது, ஸ்ரீனிவாஸய்யராவது இயற்றிய பிரபந்தங்கள் என ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீநிவாஸ ஐயருக்கு ஒரு குமாரர் உண்டு. இவர்பெயர் வேங்கடபாரதியார். இவர் இலக்கிய இலக்கணங்கள் நிரம்பக்கற்று ஜமீன் சமஸ்தான வித்துவானாக இருந்தார். இவர் காலத்திருந்த மீண்டிசல் ராமுடு அய்யர் என்பவர் அருணாசலக் கவிராயர் இயற்றிய இராமாயணப்பதத்தை எங்கும் பாடி, அப்பதத்தைத் தெரிந்து கொள்ளாத இவரை யவமதித்து வந்தார். அதனால் பாரதியார் சீகாழிக்குப் போய் அருணாசலக் கவிராயரைக் கண்டு கல்வியறிவிற்காக அவரால் நன்கு மதிக்கப்பெற்றனர். அவரொடு சில காலமிருந்து இராமாயணப் பதம் முழுவதையும் எழுதிக் கொண்டு தம்மூர் போய்ச் சேர்ந்தனர். இவர்கள் இயற்றிய நூல்கள்:

(1) கலியாண நாடகம் (2) சேதுயாத்திரை நாடகம் (3) கீலக நாடகம் (4) முத்திரா ராக்ஷஸ நாடகம் (5) சதமுக ராவணன் சண்டை.

இவையன்றி பள்ளு, குறவஞ்சி, விடுபதங்கள், வண்ணங்கள் அளவில்லாதன. இவற்றுள் கலியாண நாடகம், சதமுக ராவணன் சண்டை தவிர மற்றயவை இறந்தன.

(1) **கலியாண நாடகம்:**– இது பிராமணர் வீட்டுப் பிரமசாரிகள் தமக்குக் கலியாணமாக வில்லையென்று குறையுறல், பெண்கேட்கப் போதல், பொருத்தம், முகூர்த்தம் முதலியவை பார்த்தல், விவாகம், தக்ஷிணைகொடுப்பது முதலிய விஷயங்களை உள்ளபடியே கேட்போர் மனங்களிக்கக் கூறுவது.

(2) **சேதுயாத்திரை நாடக**மென்பது ஜனங்கள் ஒன்றுகூடிச் சேது ஸ்நாநத்திற்குப் புறப்படச் சாமான் சேகரிப்பது, யாத்திரை செய்வது, இடையில் கள்வர்கள் கொள்ளையடிப்பது, சத்திரத்தில் உலுப்பை வாங்குவது முதலிய விஷயங்களைப் பற்றிக் கூறுவது.

(3) **கீலக நாடக** மென்பது அவர்களிருந்த காலத்தில் நேர்ந்த கீலக வருஷத்துப் பஞ்சத்தைப் பற்றிக் கூறுவது. இது சோதிடரிடம் போய்ச் சனங்கள் மழை எப்போது பெய்யுமென்று கேட்டல், அச்சோதிடர் பெய்யும் பெய்யாது என்று இருபொருள் படச் சொல்லல், மேகங்கள் ஒன்றோடொன்று சொல்லிக் கொள்வதாகக் கூறியதென்னை யெனில் 'பெய்தாலும் வைவார், பெய்யாதிருந்தாலும் வைவார். நாம் பெய்தென் பய"னென்னும் ஒரு மேகம். 'மழை பெய்யாவிடின் பிடாரிக்கும், ஐயனாருக்கும் சிறப் பெடுப்பதன்றி நமக்குச் சிறப்பு எடுக்கின்றிலர். நாம் பெய்யாதிருந்து விடலே நலம்' என்று ஒரு மேகம் கூறுதலாம்.பஞ்சத்தின் வர்ணனை முதலியவற்றையும் கூறுவது.

4. **முத்திராராக்ஷஸ நாடகம்**:- இது வடமொழி நாடக நூலின் மொழி பெயர்ப்பு.

5. **சதமுக ராவணன் சண்டை**:- இராமன் பட்டாபிஷேகத்தில் அமைந்த பின்னர் சதமுக ராவணன் செய்து வந்த உபத்திரவத்தை ரிஷிகளால் கேள்வியுற்று இராமன் போய் அவனோடு எதிர்த்துப் போர் புரிந்து அபஜயமுறுங் காலத்தில் சீதை விச்வ ரூபங்கொண்டு அவனைச் சங்கரித்த விவரத்தைக் கூறுவது.

இவர்களுக்குச் சின்னு பாரதியார், ஆத்மநாதர் அல்லது அப்பு பாரதியார், ராமு பாரதியார், பாபு வய்யர் என்கிற நான்கு பிள்ளைகள்.

இவர்காலத்தில் இருந்தவர் மகாராசாமெய்க்கன் கோபாலர் என்ற பெரியதுரை. சிவகங்கையில் பெரிய வீரராய் அரசுசெய்து வந்த மருதப்பன் சேர்வைக்காரரிடம் அதிக நட்புக் கொண்டவர். இவர் ஒரு சமயம் சிவகங்கைக்கு அவரைப் பார்க்கப் புறப்பட்டுப்போன போது தமது வித்துவானான பாரதியாரைப் பயந்து பேசும் இயல்பிலராதல் பற்றிக் கூட அழைத்துக் கொண்டு போகாது தம்மூர்க்கு அடுத்த வேட்டனூரில் இருந்த ஒரு சிறு படிப்பு உள்ளவரை அழைத்துப் போயினர். அது தெரிந்த பாரதியார் தனியே புறப்பட்டுத் தாமும் போய்ச் சிவகங்கை சேர்ந்தனர். துரையவர்களும் அவர்களோடு சென்றவர்களும் சேர்வைக்காரர் அளித்த விருந்துண்டு சபைகூடி இருக்கையில் பிரசங்கிப்பதற்கு வேட்டனூரார்க்குத் துரையவர்கள் உத்தரவு செய்தனர். அவர்படிப்பிலும், சொல்வன்மையிலும் குறைவானமையின் கனைத்துக் கொண்டே சிறிது காலம் போக்கினர். பின் ஒரு புறத்திலிருந்த பாரதியார் போலிப் புலவரிருந்த இடம்போய் அவர் கையைப் பிடித்து இழுத்துவிட்டுத் தாம் உட்கார்ந்து அப்பொழுதே தாம் சேர்வைக்காரர் மீது செய்திருந்த பள்ளு, குறவஞ்சி முதலிய நூல்களை அரங்கேற்றினர். சேர்வைக்காரர் அவர்கள் மிகமகிழ்ச்சி அடைந்து ஜமீன்தார் அவர்கள் ஊருக்குப்போன பின்னும் ஒரு மாதம் வரையும் இவர்களை வைத்திருந்து தகுந்த சம்மானம் செய்து அனுப்பினார்கள்.

பாரதியாரவர்கள் ஊர்க்கு வந்தவுடன் தாம் பெற்ற துப்பட்டா முதலிய வெகுமதிகளைக் காட்டத் துரையவர்கள் "பாரதியாரவர்களே! இவை விலையுயர்ந்தவை. நீங்கள் பத்திரமாக வைத்திருக்க மாட்டீர்கள். அரண்மனையிலிருக்கட்டும். உமக்கு வேண்டும்போது தருகிறோம்." என்றனர்.

பாரதியார் "ஐயா இவை நமது வீட்டிலிருக்கட்டும். அரண்மனைக்கு வேண்டும்போது கொடுத்து

அனுப்புவோம்" என்று விடையளித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

துரையவர்கள் உடனே கோபமுற்றுத் தாம் சர்வ மானியமாக விட்டிருந்த நிலத்துக்குத் தீர்வை வசூல் செய்யும்படி சேவகர்களுக்கு உத்தரவு செய்தார். சேவகர்கள் பாரதியாரிடம் போய்த் தெரிவித்தனர். பாரதியாரவர்கள் அதுகேட்டு உடனே சாசனத்தை எடுத்துக்கொண்டு போய் துரைக்குமுன் நின்று "மன்னனும் நீயோ வளநாடும் உன்னதோ" என்னும் பாடலைக் கூறிச் சாசனத்தைக் கிழித்து எறிந்து விட்டு உடனே வீட்டுக்கு வந்து தாமும், தம் புதல்வரும் வடதிசை நோக்கிக் குடும்பத்தோடே புறப்பட்டார்கள். பாரதியாருடைய வசைக்கவிக்குப் பயந்து தமது காறுபாறு முதலிய உத்தியோகஸ்தர்களை அனுப்புவித்து பாரதியாரோடு மைல் அளவு கூடப் போய்த் திரும்பி அழைத்துவர உத்தரவு செய்தார். பாரதியாரவர்கள் அவர்கள் சொற்கிணங்காமல் 'இனி அவ்வூரைத் திரும்பிப் பார்ப்பதில்லை' என்று போயினர். பின்னர் சிங்கவனம் துரையவர்களின் தாயாதியான மதுக்கூர் துரையவர்களிடத்தில் நிலம் வீடு முதலியவை கிடைக்கப்பெற்று அங்கிருந்தார்.

ஒரு சமயம் குடந்தையில் நடந்த தாசி நர்த்தனத்திற்குத் தாம் போனபோது அவள் மரியாதை செய்யாதது கண்டு கோபமுற்றுச் சதிர் ஓய்ந்தவுடன் "மேதினியில் வெகுவேசையர்கள் செய்த, மோசமதைக் கேளாய்" என்று ஆரம்பித்து ஒரு பதத்தை உரக்கப் பாடினார். அதைக் கேட்ட தாசி பயந்து தனக்கு அன்றிரவு கிடைத்த பொருள் முழுவதையும் இவரது பாதகாணிக்கையாக வைத்து நமஸ்காரஞ் செய்தாள். அதில் தமக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு மீதியை அவளிடம் 'இது நாம் கொடுத்தது' என்று திரும்பவும் கொடுத்தனர்.

இவர்களுக்குக் குமாரர்கள் நால்வர். முறையே சின்னு பாரதியார் என்கிற சுப்பிரமணியர், அப்பு பாரதியார் என்கிற ஆத்மநாதர், ராமு பாரதியார், பாபுவய்யர் என்று முன்னே சொன்னோம்.

முதற்பிள்ளையாகிய சின்னுபாரதியார் இலக்கண இலக்கியம் நன்குணர்ந்தவர். அப்பு பாரதியாருக்கு ஆண் குழந்தைகளில்லை. ராமு பாரதியாருக்குச் சுப்புவய்யர் வேங்கடாசலம் ஐயர் என்ற பெயருள்ள இரண்டு பிள்ளைகள். பாபுவய்யருக்குத் திருமணம் ஆகவில்லை. அப்பு பாரதியாருக்கும், ராமு பாரதியாருக்கும் இலக்கிய இலக்கணப்பயிற்சி போதாதாயினும் தமது தந்தையார் இயற்றிய நாடகப் பிரபந்தங்களையெல்லாம் செவ்வையாகப் பாடும் வன்மையுடையவர். சமயோசிதமாய்ப் பேசுவதிலும் வசைபாடுவதிலும் சமர்த்தர்கள்.

அப்பு பாரதியார் ஒரத்தனாடு சத்திரத்துக்குப் போயிருந்ததில் அங்கே அவருக்கு வசூரிவார்த்ததென்று கேள்வியுற்று முதிர்ந்த வயதுள்ள அவரது பிதாவாகிய வேங்கட பாரதியார் நோயுற்ற புதல்வரைப் பார்க்க அவ்வூர்ப் போய்ச் சேர்ந்தனர். நோய் புதல்வருக்குச் சௌகர்யமானவுடன் இவர்களுக்கு ஏற்பட்டு அது காரணமாக இறந்து போயினர்.

ராமு பாரதியார் பிள்ளைகளிருவரில் மூத்தவர் சிங்கவனம் காறுபாறாக வேலை பார்த்து 1892-ல் தஞ்சையில் இறந்தனர். இவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவர் பெயர் சாமுநாதையர். இவர் பி. ஏ. பரீக்ஷையில் தேர்ச்சியடைந்து தஞ்சாவூரில் கலெக்டர் ஆபீஸில் வேலை பார்த்து வருகிறார். இவரது தம்பி அங்கே ஸ்கூலில் மூன்றாவது வகுப்பில் படித்து வருகிறார். ராமு பாரதியாரின் இரண்டாவது பிள்ளையான வேங்கடாசல ஐயர் இருபது வயதுக்குள்

கல்வி கேள்விகளில் நன்குணர்ந்தவராய் மதுக்கூரில் இளம்பிராயத்திலேயே இறந்து போயினர்.

இது நிற்க. சின்னு பாரதியார் தமக்குப் பதினைந்து வயதில் தமது பிதா பாடிக்கொண்டு வந்த ஒரு பதத்தைத் தாம் எழுதி வருகையில் முடிவில் தமது முத்திரையை வைக்க எண்ணி "இந்தப் பதம் சொல்லும் வேங்கட பாரதி" என்று சொல்லக் கேட்டு, சின்னுபாரதியார் "அப்பா, தாங்கள் பாடிய பதம் இது ஒன்றோ; பலவாகலின் விந்தைப் பதம்சொல்லும் வேங்கட பாரதி என்றிருத்தலமையும்" என்று சொல்லக் கேட்ட தந்தை அகமகிழ்ந்தனர். சுமார் பதினெட்டு வயதாயிருக்கும்போது சிங்கவன ஜமீன் துரையவர்களிடம் போய் அக்காலத்துப் புலவர் விருதாகிய வண்டிக் கடுக்கன் செய்து கொடுங்கள் என்று கேட்க "அவர் நம்மீது மூன்று நாட்களுக்குள் ஒரு அற்புதமான வண்ணம் பாடு" என்றார். அங்ஙனமே இயற்றித் துரை அவர்களிடம் போய் படித்துக் காட்டினர். துரையவர்கள் அன்று அஸ்தமனத்திற்குள்ளாகவே உயர்ந்த வண்டிக் கடுக்கன் ஒன்று செய்வித்து, அதனை அணிவிக்கப் பாரதியார் காதில் துளை பற்றாதது கண்டு எழுத்தாணியால் துளையைப் பெருக்கி உடனே போடுவித்தனர்.

ஒரு சமயம் இவர்களது மாதாமகராகிய மந்திரத்தில் வல்ல வன்னிச்சிப் பட்டணம் முத்து வய்யரோடு பெருமனூருக்குப் போய் ஒரு தேவனைப் பார்த்தார்கள். அவன் இவர்களை நிந்தித்து அனுப்பினான். உடனே பாரதியார் வசைக்கவி ஒன்றியற்றினார். இவர்களிருவரும் வேறு இடங்களுக்கு யாத்திரை செய்து ஒரு வாரத்தில் திரும்பி வந்தார்கள். வழியில் பெருமனூர் மயானத்தில் பிணம் எரியக் கண்டு 'இறந்தவர் யார்?' என்று கேட்க அங்குள்ளார் 'தங்களை நிந்தித்த தேவன்' என்றார்கள். முத்துவய்யர் தமது பெயரரைப்பார்த்து ஆச்சரியம் உற்று "ஏதப்பா!

நமது மந்திரத்திலும் உனது வசை கடுமையாக விருக்கிறதே!" என்று வியந்தார்.

இவர்களுக்கு ஒரேபிள்ளை .சுப்புபாரதியார் என்று பெயர். இவர் நந்தன ஆண்டில் பிறந்தவர். இவருக்கு இருபது வயதாக இருக்கும்போது இலக்கண இலக்கியப் பயிற்சியில்லாதிருந்தபோதிலும் பிரசங்கிக்கவும் பாடவும் தெரியும். சிங்கவனத்துக்கு அடுத்த நான்கு மைலிலுள்ள கரவட்டம் குடி என்றும் கிராமத்திலிருந்த இவர்களது பந்துக்களாகிய சுப்பிரமணிய பாரதியார் என்பவர் கீழ்வேளூருக்குப்போய் அவ்விடத்திலிருந்த இலக்கண இலக்கியம் நன்குணர்ந்தவரும், பரிமேலழகருரையை ஒருமுறை மாணவர்களுக்குப் பாடம் சொன்னவரும், கலைமகள் உருவெடுத்தனைய மகா வித்வான் பிள்ளையவர்களுக்கு நன்னூல் இலக்கண விளக்கம் தொல்காப்பிய முதலிய இலக்கணப்பாடம் ஓதுவிக்கப் பெற்றவர்களுமாகிய சுப்பையா பண்டாரம் என்பவர்களிடத்தில் இலக்கணம் படித்து, ஊருக்கு வந்து இலக்கணங் கற்காத இவரைப் பற்றி நிந்தனையாகப் பலரிடம் சொல்லித் திரிந்தனர். இதனால் வெட்கமுற்றுத் தாமும் கீழ்வேளூர் போய் நன்னூல் விருத்தி முதலிய இலக்கணங்களையும், திருவிளையாடல் முதலிய இலக்கியங்களையும் கற்றனர்.

கீழ்வேளூர் கோயிலின் கோபுர வாசலில் பாடங் கேட்ட பொழுதுபோக மீதிநேரம் முழுவதும் இவர்கள் படிப்பதையும் சிந்திப்பதையும் புகழ்ந்து அந்த ஊரிலிலுள்ள சில முதியோர்கள் இப்பொழுதும் சொல்வார்கள். இவ்வாறு படிக்கும் இவர்களுக்கு வயது இருபது. சாதாரணமாக மற்றவர்களைப்போல் இலக்கணத்தை இவர்கள் சிறிது சிறிதாய்ப்பயின்றதை நோக்கி, "ஐயரே முன்னொரு சமயம் நம்மிடத்து மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவர் இலக்கணப்

பாடம் கேட்டார். அவர் பகல்முழுவதும் என்னிடத்துப் பாடம் கேட்பது வழக்கம். கேட்டதை எவ்வாறு சிந்தித்தனரோ அறிகிலம். ஆனால் மூன்று மாதத்திற்குள் இலக்கண விளக்கம், நன்னூல், தொல்காப்பியம் ஆகிய நூல்களின் எழுத்து சொல் இரண்டையும் கற்றுப் போயினர். இவரது "கல்வியன்றோ கல்வி. புத்தியன்றோ புத்தி" என்று புகழ்ந்து சொல்வார்களாம்.

கீழ்வேளூரில் ஒரு வருஷம் வரையில் இருந்து இலக்கிய இலக்கணம்நன்கு பயின்று ஊருக்குச்சென்ற சிலகாலத்திற்கெல்லாம் இவரது தகப்பனார் இறந்து போயினர். அதன்பிறகு இவர்களுக்குச் சுமார் 80 வயதில் திருவாவடுதுறையிலிருந்த பிள்ளையவர்களிடத்திற்குப் போய் நன்கு பழகிக் கல்வியின் பெருமைக்கும். அழுத்தத்திற்கும் மதிக்கப்பெற்றுப் பிள்ளையவர்களோடு நட்பு கொண்டனர். இவர்கள் இருவருக்கும் உள்ள நட்பின்பெருமை, பின்வருகிற இரண்டு விஷயங்களாலும் வெளியிடப்படும். பிள்ளையவர்கள் நாகைக் காரோண ஸ்தல புராணம் பாடி அரங்கேற்றுகையில் பாரதியார், அவர்களைப் பார்ப்பதற்காக நாகைக்குப் போனார். ஒருவரோடு ஒருவர் அளவளாவிப் பேசிக் கொண்டிருக்கையில் பிள்ளையவர்கள் பாரதியாரைப் பார்த்து "ஐயா அரங்கேற்றம் நடக்குமிடத்தில் ஒரு பண்டாரம் தினந்தோறும் வருகிறார். அவர் கல்வியறிவில்லாதவர். விஷயமில்லாத விஷயங்களைப் பற்றியடிக்கடி ஆக்ஷேபித்துப் பிரசங்கத்தை நடக்கவொட்டாமல் தொந்தரவு செய்கிறார். கல்வியுள்ளவர் கேட்பாராயின் நாம் சொல்லும் சமாதானத்தில் திருப்தி அடைவர். இவரோ அப்படி இல்லை" என்று வருத்தமுற்று உரைத்தார். அன்றிரவு அரங்கேற்றுகையில் பண்டாரம் வழக்கம்போல் பயனற்ற கேள்விகளைக் கேட்டார். அப்பொழுது பாரதியார் நான் சொல்லும் பதிலைக் கேளும் என்று அவரிடத்தில் சொல்லுவார்.

''இராவண சங்காரமான பிறகு இராமபிரான் போர் செய்த சிரமத்தினால் அனுமார் மடியில் தலைவைத்து நித்திரை செய்தார். அனுமார் தம் வாலைச் சுற்றிலும் அரணாக வளைத்துக் காத்திருந்தார். இராமபிரான் அயர்ந்து நித்திரை செய்கையில் அனுமார் தம் வால் நுனியை அவரது காதில் நுழைத்தார், திடுக்கிட்டு எழுந்த இராமன் அனுமாரைப் பார்த்து இதென்ன என்று கேட்கக் கைகட்டி வாய்புதைத்து நின்று அனுமார் 'இது என் இயற்கைப்புத்தி. யான் என்ன செய்வேன்' என்றார். அதுபோல் பண்டாரம் நல்லவர் தாம். இயற்கைப்புத்தி விடவில்லை'' என்று சொன்னார். இதைக்கேட்ட சபையோர் எல்லோரும் நகைத்தனர்; பண்டாரம் அதுமுதற் கொண்டு தமது கெட்ட குணத்தை விட்டனர். பிள்ளையவர்கள் அவர் புத்தி சாதுரியத்தை வியந்தார்.

மற்றொரு முறை திருவிடைக்கழி பிள்ளைத் தமிழ் செய்து கொண்டு பிள்ளையவர்கள் இருக்கையில் பாரதியார் அவரைப் பார்க்கும் பொருட்டு அவ்விடத்துக்கு வழக்கம்போல் போனார். பிள்ளைத் தமிழையும் பிரபுக்களின் நோக்கத்தையும் கலந்து பேசின காலையில் 'கேட்பவர்கள் அதிகப்படிப்புடையவர்கள் அல்லர். இன்றிரவில் பிரசங்க காலத்தில் தாங்கள் தக்க கேள்விகள் கேட்டு நாம் பதில் சொல்வோமேயானால் இருப்பவர்களுக்குக் கொஞ்சம் மதிப்பாக இருக்கும்' என்று சொன்னார்கள்.

அவ்வாறே அன்றிரவில் பிள்ளைத்தமிழ் பிரசங்கிக்கும்போது ஒரு கவியில் முருகக்கடவுள் பிள்ளை விளையாட்டில் எழுகடலுள் பாற்கடலைத் தயிர்க்கடலிலும், தயிர்க்கடலை நெய்க்கடலிலுமாக இவ்வாறு போட்டு விளையாடினார் என்று வருணிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது பாரதியார் ''அவ்வாறு ஒரு கடலை ஒரு கடலிற் போட்டு விளையாடினாராயின் அதன்பின் அவையெல்லாம் கலந்து போயிருத்தல்

வேண்டும். அவ்வாறு கலக்காமைக்கு நியாயமென்ன?" என்று கேட்டார். அதற்குப் பிள்ளையவர்கள் "முருகக் கடவுளுக்குக் கைகள் பன்னிரண்டு. நம் போல் கைகளிரண்டல்ல. ஆகையால் ஒரு கடலையெடுத்து ஒரு கையில் வைத்துக் கொண்டு வேறு கடலை வேறொரு கையில் வைத்துக் கொண்டு, வேறு கடலை வேறொரு கையில் வைத்துக் கொண்டு, இவ்வாறே ஒன்றோடொன்று கலக்காமல் விளையாடுவது எளிது" என்று விடையளித்தனர். கேள்வியையும் விடையையும் கேட்ட சபையோர்கள் இவ்விரண்டு புலவர்களின் பெருமையைப்பற்றி வியந்தார்கள்.

தேவகோட்டையிலிருந்த அந்தகராகிய நாராயண செட்டியாரென்பவர் சிறுவயதினர். கல்வியறிவு சிறிதுண்டு. திருப்பெருந்துறை உற்சவத்துக்குப் பாரதியாரும் செட்டியாரும் வருவதுண்டு. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நட்புப்பூண்டனர். ஒரு முறை பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைக்கு வந்து சேர்ந்தார்கள். செட்டியாரும், பாரதியாரும் வழக்கம் போல் உற்சவத்துக்கு வந்தார்கள். செட்டியார் பாரதி யாரவர்களிடத்தில் தம்மை அழைத்துப் போய், பிள்ளையவர்களிடத்தில் காட்டும்படி கேட்டுக் கொள்ள அவ்வாறே இவர்களும் செட்டியாரை அழைத்துப் போய்ப் பிள்ளையவர்களைப் பார்த் தார்கள். செட்டியாரை விசாரித்து இன்னார் என்று தெரிந்து கொண்ட பிறகு செட்டியார் "திருத்தில்லை யமகவந்தாதி"க்குப் பொருள் சொல்ல வேண்டுமென்று பிள்ளையவர்களைக் கேட்டுக் கொண்டார். பிள்ளை யவர்களும் பாடஞ் சொல்லத் தொடங்கினார்கள். பத்துக்கவி இருபது கவிகளிப்ப நிற்காமல் புத்தக முழுமையும் சொல்லச் சொல்லி அன்றிரவே கேட்டு விட்டார். பிள்ளையவர்கள் அதிகம் களிப்புற்றுப்பாரதி யாரைத் தனியே அழைத்து 'நான் வெளியே போய் விடுவதாய்ச் சொல்லி ஒரு புறத்திலிருக்கிறேன். அதிக

கஷ்டமாகிய இவ்வந்தாதி முழுமையும் கேட்டு விட்டாரே. இடையில் நான்கு கவிகளுக்கு அவரைப் பொருள் சொல்லச் சொல்லிக் கேளுங்கள் என்ன செய்கிறார் பார்ப்போம்' என்று சொல்லிச் சமீபத்தில் மறைந்து இருந்தனர். பாரதியார் அவ்வாறே கேட்கப் பிள்ளையவர்கள் சொன்னதொரு மடங்கு தாம் சொல்வது பத்துமடங்காகச் செட்டியார் பொருள் உரைத்தனர். கேட்டு மகிழ்ச்சியடைந்த பிள்ளையவர்கள் வந்து செட்டியாரைத் தழுவிக் கொண்டு 'உம்மிலும் கூரிய புத்திமான்கள் உலகத்திலில்லை' என்று மகிழ்ந்துரைத்தார்.

இவரால் "சைவ வினா விடை" என்னும் பெயருடைய வசன நூல் ஒன்று செய்யப்பட்டுள்ளது. மேற்படி நூலில் 60 வினாவிடைகள் உள்ளன. அந்த, நூலிலுள்ள பாடல் ஒன்று.

சிவபுரம் செட்டி ஞானி சிதம்பர நாதன் மைந்தன்
பவஞானப் பிரகா சன்றான் பரவுசம் பந்தன் சீடன்
உவமையி னன்மை யாளர் மரபினைத் தன்குற் றம்போற்
குவலயத் தஞ்ஞா னப்பேய்க் குருடர்க்குக் குழறி னானே.

## 204. சிதம்பரம் ஆடிய பாததேவர்

18-திருவிருத்தங்களை யுடையதான சர்வ ஞானோத்தர மென்னும் சைவ நூலின் 10-ஆம் செய்யுளில் இவர் துதிக்கப்பட்டிருத்தலின் அந் நூலாசிரியர் இவருடைய மாணாக்கர் என்று தெரிகின்றது.

தருநாமஞ் சாதிகுணங் கிரியையிலா தோங்குஞ்
சச்சிதா னந்தமொரு சகளமய மாகித்
திருநாம மொன்றுதரித் தருட்புலியூர்த் தோன்றித்
திரிபதார்த் தமும் விளங்கச் சரியைமுத லாட

ஒருநாலு விதமுணர்த்தி யதிமோன மாக்கி
உயர்ஞான முத்திரையா லெனைத் தானாய்ச்செய்த
குருநாதன் மெய்ஞ்ஞான மூர்த்திதிருக் கருணை
கூருமா டியபாத தேசிகனைப் பணிவாம்.

இவருடைய மடம் சிதம்பரத்தில் வடக்கு வீதிக்கு வட புறத்தே உள்ள தெருவிலுள்ளது. இத் தெருவிற்கு இம் மடமுள்ள காரணம் பற்றியே அம்பலத்தாடி மடத்தெரு என்பது பெயராக அமைந்துள்ளது. இவர் வீரசைவர் என்று தெரிகிறது.

## 205. சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை

இவரியற்றிய நூல்கள்:-

(1) ஸ்ரீ ராம நாமத் திருப்பதிகம்

(2) திரு எவ்வுளூர் வீரராகவப் பெருமாள் போற்றித் திருப்பஞ்சகம்.

(3) திருக் கண்ண மங்கை இலக்குமி தோத்திரம். இவர் செய்த நூல்களை யெல்லாம் இவர் மாணாக்கர் தொகுத்துப் பதிப்பித்ததோடு அதில் இவர் சரித்திரத்தையும் எழுதியிருக்கிறார்.

## 206. சிதம்பரம் குரு நமச்சிவாயர்

இவர் திருவருணையில் எழுந்தருளியிருந்த குகை நமச்சிவாயருடைய மாணவர். குகை நமச்சிவாயர் இவரை நோக்கி "நீ தில்லையில் சென்றிரு" என்று கட்டளையிட்டார். தில்லைக்கு வரும்பொழுது இரவில் ஒரு இடத்தில் தங்கினார். பசி மிகுதியாயிற்று. அவ் வமயம் அவர் உண்ணாமுலை அம்மையை எண்ணி,

"அண்ணா மலையார் அகத்துக் கினியாளே
உண்ணா முலையே உமையாளே—நண்ணா
நினைதோறும் போற்றிசெய நின்னடியார் உண்ண
மனைதோறும் சோறு கொண்டு வா.

என்னும் வெண்பாவைப் பாடினார். அப்போது ஓர் அம்மையார் உணவு கொண்டு வந்து வழங்கினதாகத் தெரிகிறது. கூத்தபிரான் குரு நமச்சிவாயருக்குத் திருநடனத்தையும் ஆடிக்காட்டினான். இவர் இயற்றிய நூல்கள் சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா, பரமராசிய மாலை முதலியன. எண்ணற்ற தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

## 207. சிந்துக் களஞ்சியப்புலவர்

இவர் சிறந்த புலவருள் ஒருவர்; பாண்டி நாட்டிலிருந்தவர். வசைகவி ஆண்டான் கவிராயர் காலத்திலுள்ளவரென்றும் தெரிகிறது. அவருக்கும் இவருக்கும் வாதம் நடந்ததென்பதை அப்பொழுது இருந்த இருவர் கூறியனவாக வழங்கும் சிலபாடல்கள் தெரிவிக்கின்றன. இவர் இயற்பெயர் தெரியவில்லை. சிந்துப்பாடல்களை மிக விரைவாகவும், கணக்கின்றியும் பாடிய காரணத்தினால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது என்று தெரிகிறது.

ஒரு சமயம் வசைகவி ஆண்டான் கவிராயரைப் பார்த்து "நீ என்னைப்போல் சிந்துப் பாடல்களைப் பாடவல்லையோ" என்றுகேட்க, அவர் தேங்காய் ஒன்றை இவர் முன்வைத்து, "துண்டு துண்டு துண்டு" என்று அடுக்கிச்சொல்ல அத்தனை துண்டுகளாயின தேங்காய். 'இதைப்போல் உன் தலையையும் உடைக்கும் ஆற்றல் உண்டு' என்று சொல்ல இவர் அஞ்சி வசைகவியை வணங்கித் தாம் வந்தவழியே சென்றார் என்பர். மேற்கொண்டு இவரைப்பற்றி அறிய முடியவில்லை.

## 208. சிந்தூரம் பொட்டுக் கவிராயர்

இவருடைய ஊர் பெரிய குளம்; இவர் சாதியால் வேளாளர்; நூற்றைம்பது வருடத்திற்கு முன்பு இருந்தவர்; போடி நாயக்கனூர் ஜமீன்தார் மீது பள்ளு முதலிய சில பிரபந்தங்கள் இவராற் பாடப் பட்டன வென்பர்.

## 209. சிவக் கொழுந்தாசிரியர்

இவர் சிவஞான சித்தியார் சுபக்ஷத்திற்கு ஓர் உரை செய்திருப்பதாகச் சாலிவாடிபுரம் ஞானப் பிரகாச தேசிகர் என்பவர் மேற்படி நூலுக்குச் செய் திருக்கிற உரையின் முகவுரையால் தெரிகின்றது. இதனால் மேற்படி ஞானப் பிரகாசருக்குக் காலத்தால் இவர் முந்தியவரென்று நினைக்கப்படுகின்றார்.

## 210. சிவக்கொழுந்து தேசிகர்

கோடீச்சுரக் கோவையின் ஆசிரியராகிய ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் கோடீச்சுரம், ஏரண்ட புரமென நூல்களில் வழங்குவதும், கும்பகோணத்திற்கு அருகில் காவிரி நதியின் வடபாலுள்ளதும், தேவாரம் பெற்றதுமாகிய கொட்டையூரென்னும் தலத்தில் ஏறக்குறைய நூறு வருடங்களுக்குமுன், பரம்பரைச் சைவாசாரிய மரபினரும் அருணிறைந்த தேசிகர் கோத்திரத்தினருமாகிய தண்டபாணி தேசிகரென் பவருக்குக் குமாரராக உதித்தவர். இவருடைய முன்னோர்கள் சற்றேறக்குறைய 300 வருடங்களாக அவ்வூரிலிருந்து வந்தனரென்று கேள்வி. இவருடைய பெயராகிய சிவக்கொழுந்தென்பது கொட்டை யூருக்குத் தென்பாலுள்ள திருச்சத்தி முற்றத்திற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமமாதலின் இவருடைய முன்னோர்களில் தாய்

வழியினரேனும் தந்தை வழியினரேனும் அத்தலத்திற் பற்றுடையவராக இருந்திருத்தல் கூடுமென்றும், அது பற்றி இவருக்கு இப்பெயர் வைக்கப்பெற்றிருக்கலாமென்றும் தோன்றுகின்றது.

இவர் இளமையிலேயே தக்கவர்களிடம் முறையாகத் தமிழ்க் கல்வி பயின்று பலவகை நூல்களை அறிந்தனர், இன்னாரின்னாரிடம் பாடங்கேட்டனரென்று இப்பொழுது தெரியவில்லை. ஆனாலும், இலக்கண விளக்க நூலாசிரியராகிய ஸ்ரீ வைத்தியநாத தேசிகருடைய பரம்பரையினரும், தமிழ்ப்புலமை வாய்ந்தவரும், திருவாரூரில் இருந்தவருமாகிய ஒரு பெரியாரிடத்தில் இவர் பாடங் கேட்டதுண்டென்று சொல்வார்கள்.

வாழ்க்கைக்குப் போதிய நிலங்களும் வீடுகளும் தோட்டமும் கொட்டையூரில் இவருக்கு இருந்தன. ஆதலால் காவிரி ஸ்நானமும், சிவபூஜையும், சிவ தரிசனமும் செய்துகொண்டும் சில மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லிக் கொண்டும் பல தனிச் செய்யுட்கள் செய்து இன்புற்றும் மனநிறைவொடு காலங்கழித்து வந்தார். இவர் கல்வியிற் சிறந்தவரென்னும் புகழ் எங்கும் பரவியது.

அக்காலத்தில் தஞ்சையில் இருந்த சரபோஜி மன்னர் புதியதாக ஒரு புத்தகசாலையை அமைத்து அதிற் பல பாஷைகளிலுள்ள பலவகை நூல்களைத் தொகுத்தும், பல வித்துவான்களை வருவித்துத் தக்க பொருளுதவி செய்து ஆதரித்துப் பல புதிய நூல்களைச் செய்வித்தும் வந்தனர். அம் மன்னர் இவருடைய முத்தமிழ்ப் புலமைத் திறத்தையும் செய்யுள் செய்யும் வன்மையையும் தக்கவர்களாற் கேள்வியுற்று இவரையும் வருவித்துத் தம் அரண்மனை வித்துவானாக அமர்த்திக் கொண்டார். அவருடைய விருப்பத்திற்கிணங்கப் பலவகைத் தமிழ் நூல் ஏட்டுப் பிரதிகளைத் தக்க விலை கொடுத்து

வருவித்துத் தொகுப்பித்ததன்றி, சரபேந்திரர் வைத்திய முறைகள், சரபேந்திரர் சன்னி ரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம் என்னும் மூன்று நூல்களை இவர் இயற்றினர். அவை அச் சரபோஜி மன்னருடைய விருப்பத்தின்படி அனுபவ வைத்திய முறைகளை அறிந்து தமிழ்ச் செய்யுள் உருவத்தில் அமைக்கப் பெற்றன.

"இம்முறைகேள் யன்பாய்ச் சோழ, மண்டலத்திற்
கதிபதியாஞ் சரபேந்த்ர பூபதி சொல் மார்க்கந்தானே"

(சரபேந்திரர் வைத்திய முறைகள், 18)

"இன்ன முறை தஞ்சை வளர் சரபோஜி மன்னர் மகிழ்ந்
திசைத்த தாமே"

(சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், 161)

"பார்க்கண்வளர் நகர்க்கெல்லா முயர்ந்த தஞ்சைப்
பதிமருவு சரபோஜி மன்னர்முறை யிதுவே"

(சரபேந்திரர் வைத்தியம்)

என்பவற்றால் இச்செய்தி உணரப்படும். அந்நூல்களிலுள்ள செய்யுட்கள் பிற நூல்களிலுள்ள பாடல்களைப் போல் இராமல் நல்ல நடையில் அமைந்துள்ளன. அவற்றிலுள்ள சில செய்யுட்கள் வருமாறு;

### 1. சரபேந்திரர் வைத்திய முறைகள்

ஆசிரிய விருத்தம்

"செங்கழு நீர் கோட்ட மதி மதுரநெல்லி முள்ளி கருஞ்
(சீர கம்பின்
கொங்கடர்ந்த சீரகந்திப் பிலிமூலம் வாய்விளக்கங்
(குணமா மஞ்சள்
அங்கந்தச்சிறுதேக்குமரமஞ்சள் வெட்பாலை யரிசியப்பால்
பங்கமிறிப் பிலி செவிய மிந்துப்பு வசும்பின்னும் பகரு
வோனே."

இந்நூல் 403 செய்யுட்களை உடையது.

## 2. சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள்

வெண்பா

"கைகால் செவியுச்சி கண்ட மூக் குக்குளிர்ந்து
மெய்தான் சுழன்று விழிசிவந்து—பையவே
வாயுமே னோக்கி வயிறுதனிற் சூலைவரின்
ஆயுநிலை யில்லென் றறி."

ஆசிரிய விருத்தம்

"உள்ளிப் பருப்பி லரைப்படிதா
னுறவே யரைத்துச் சேலைதனில்
மெள்ளச் சுருட்டி வேம்பினெய்
விட்டே யெறியும்பெருஞ் சுடரிற்
றெள்ளப் பிடித்துப் பிழிதயிலஞ்
சிரசு பிடரி தமிற்றடவி
உள்ளுக் கீந்தாற் றுடியிடையா
யுடனே தீரும் புறவீச்சு."

இந்நூல் 360 செய்யுட்களை உடையது.

## 3. சரபேந்திரர் வைத்தியம்

வெண்பா

"நாகமல்லி கைவேர் நறுஞ்சா ரணைவேர் பின்
வேக மருவுகொடி வேலிவேர்—வாகாம்
தவசி முருங்கைவேர் கம்பீரச் சாற்றில்
இவையரைத்து மூலத் திடு"

இந்நூல் 362 செய்யுட்களை உடையது.

இவற்றுள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகளென்னும் நூலெழுதிய சுவடியிலுள்ள குறிப்பினால் அந்நூல் கி. பி. 1826 இல் இவரால் இயற்றப் பெற்றதாகத் தெரிகிறது. அக்காலத்தில் இவருடன் அங்கே இருந்த தமிழ்ப் பண்டிதர்கள் காரைக் குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், திருவேங்கடத்தா பிள்ளை, சுப்பராயக் கவிராயர், வேங்கடாசலம் பிள்ளை, முதலியோர்.

இவர் 90 பிராயம் வரையில் இருந்தனரென்பர்; இவருக்கு மனைவிமார் இருவர்; குமாரர்கள் இருவர்; குமாரிகள் ஐவர். முதல் மனைவியார் குமாரர் ஸ்ரீவடுகநாத தேசிகரென்பவர். அவர் வடமொழி தென் மொழிகளில் நல்ல பயிற்சியுடையவராக இருந்தார். ஸ்ரீ வடுகநாத தேசிகருடைய குமாரர் ஸ்ரீகுருசாமி தேசிகர். அவருடை குமாரர்கள் தியாகராஜ தேசிகர், சிவக்கொழுந்து தேசிகர், சோமசுந்தர தேசிகர் என்னும் மூவர். அவர்களுள் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் குமாரர்கள் இப்பொழுது திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாக வீற்றிருந்து விளங்கி வருபவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமி நாத சுவாமிகளவர்கள்.

இரண்டாம் மனைவியாருடைய புதல்வர் ஸ்ரீ சாமிநாத தேசிகர் என்பவர். அவர் திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர் களிடம் பாடங் கேட்டுச் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்து கி. பி. 1864 ஆம் வருஷத்திற் கும்ப கோணம் காலேஜிலும், அதன் பின் திருவனந்தபுரம் மகாராஜா காலேஜிலும், தமிழ்ப் பண்டிதர் வேலை பார்த்துப் பின்பு உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டனர். அவருக்குச் சிவராஜ தேசிகரென்றும் நடராஜ தேசிக ரென்றும் இரண்டு குமாரர்கள் உண்டு.

இப்பதிப்பிலுள்ள (ஐயரவர்கள் பதிப்பு) மூன்று பிரபந்தங்களுள் கோடீச்சுரக் கோவை மிகவும் ஆராய்ந்து செய்யப் பெற்றது. அவ்வப்பொழுது மெல்ல மெல்ல யோசித்து முடித்த ஒவ்வொரு செய்யுளையும் எழுதித் தொகுத்து இவர் அந்நூலை இயற்றி முடித்தார். அதனை இயற்றிக் கொண் டிருக்கும் பொழுது ஒரு நாள் இரவில் சயனித்துக் கொண்டே யோசனை செய்து ஒரு செய்யுள் முற்றுப் பெற்ற பின் உடனே சிகிமுகி (சிக்கி முக்கி)க் கல்லின்

உதவியால் அருகிலிருந்த விளக்கையேற்றி அச் செய்யுளை எழுதி விட்டுப் பின்பு துயின்றனரென்பர். கொட்டையூருக்கு ஓருலா இவரால் இயற்றப் பெற்ற தென்றும் கேள்வியுண்டு. அது கிடைக்கவில்லை. இவர் இயற்றிய குறவஞ்சி நாடக இசைப் பாட்டுக்களின் மெட்டுக்கள் தஞ்சையிலிருந்த பொன்னையா என்னும் நட்டுவர் ஒருவருடைய உதவியினால் அறிந்து அமைக்கப்பட்டன என்பர். அதில் 39 கீர்த்தனை களும்,3 வெண்பாக்களும், 2அகவல்களும், 25விருத்தங் களும். 2 கொச்சகக்கலிப் பாக்களும் உள்ளன.

**உத்தர ராமாயணக் கீர்த்தனை, பாகவதம் தசமஸ்கந்தக் கீர்ததலை** என்னும் இசை நூல்களை இயற்றியுள்ள **ஸ்ரீ அநந்த பாரதி** யென்பவர் தாம் செய்த, **திருவிடை மருதூர் நொண்டி நாடகம்''** என்னும் நூலில்,

> ''வாழி சிவக் கொழுந்தும் பரம்பரையும் வாழி
> வாழி ஐயா றப்பமுனி வரனும் வாழி
> வாழி தஞ்சைச் சரபோஜி ராஜன் வாழி''

என்று பாராட்டிப் பாடியிருத்தலால் அவர் இவரிடத்தில் மிக்க அன்புடையவரென்று தோற்று கின்றது.

திருவிடை மருதூருக்கு இவர் ஒரு புராணம் செய்துள்ளார். அது சரபோஜி மன்னர் விருப்பத்தின் படி பாடப் பெற்ற தென்பர். அதிற் காப்பிய இலக் கணங்கள் செவ்வனே அமைந்துள்ளன. அது 1387 செய்யுட்களையுடையது. ஆச்சாபுரமென வழங்கும் திருப்பெருமண நல்லூருக்கு ஒரு புராணம் இவரால் இயற்றப் பெற்றது. அதன் செய்யுள் நடை முதலிய வற்றை ஊன்றிப் பார்க்கையில் இவர் அதனை இளமையிற் செய்திருக்கலாமென்று தோற்றுகின்றது. அந்நூலில் வரும்,

"புயற்காரின் வருமகவான் பணிவள்ளல் பணிவிடைகள்
பொருந்தி நாளும்
செயற்காக வெங்கள்குலந் தனையடிமை கொண்டுவளர்
தேவ தேவன்
அயற்காதி யமலனருள் செய்தபுர மெனவுலக
மனைத்துங் கூறும்
வயற்காழி நகர்ச்சட்டை நாதனிரு பத மலரை
வணங்கி வாழ்வாம்."

(சட்டைநாதர்காப்பு)

என்னும் செய்யுளும், இவர் தம் முதற்புதல்வருக்கு வடுகநாத தேசிகரென்று பெயர் வைத்ததையும் இவரது குலதெய்வம் சீகாழிச் சட்டைநாதர் என் பதைப் புலப்படுத்துகின்றன. இவருடைய சந்ததி யார்கள் இக்காலத்தும், சீகாழிச் சட்டைநாதப் பெருமானை முதலில்வழிபட்டுப் பின் விவாகம்முதலிய சுபகாரியங்கள் செய்வதும் குழந்தை பிறந்தால் முதல் முடி சீகாழியில் இறக்குவதும் உண்டென்பர். அப் புராணத்திலுள்ள செய்யுட்கள் 533. பல தலங்களைப் பற்றியும் அகத்துறை யமைதியுடையனவும் வினா விடையாக உள்ளனவுமாகிய பல செய்யுட்களை இவர் இயற்றியுள்ளார். அவை **சரசக்கழிநெடில்** என்னும் பெயர் முதலியவற்றால் வழங்கும். அவை இப்பொழுது கிடைக்கவில்லை.

பல வருடங்களுக்கு முன்பு சென்னையில் துரைத்தனத்தார் ஒரு கல்விச் சங்கம் அமைத்துப் பல வித்துவான்களை வருவித்துப் பல நூல்களை இயற்றுவித்தும், பழைய நூல்களை ஆராய்ந்து பதிப் பித்தும், பலருக்குப் பாடஞ்சொல்வித்தும் வந்தார்கள். அக்கல்விச் சங்கத்தில் தலைமைத் தமிழாசிரியராக இருந்து வந்த வித்துவான் ஸ்ரீதாண்டவராய முதலி யாருக்கு உடனிருந்து உதவி செய்ய ஒரு தமிழ் வித்துவான் வேண்டியிருந்தமையின் அச்சங்கத்தார் இவரை அனுப்பவேண்டுமென்று சரபோஜி மன்னருக்

குத் தெரிவித்தனர். அவ்வாறே இவர் அனுப்பப்பட்டுச் சென்னை வந்து தாண்டவராயமுதலியாரோடு தமிழாசிரியராகச் சிலகாலம் நல்ல மதிப்புப் பெற்று இருந்து வந்தனர். **திருவாசகம்** இவரால் அக்காலத்து முதன்முறை அச்சிடப்பட்டது.

65 வருடங்களுக்கு முன்பு கருந்திட்டைக் குடியைச் சார்ந்த ஓர் அக்கிரகாரத்தில் இருந்தவரும், இவருக்கு மிக்க நண்பரும், ஸ்ரீ வைஷ்ணவருமான ஸ்ரீநிவாசாரியரென்னும் முதியார் ஒருவர் இவருடைய பொழுது போக்கையும் பாடஞ் சொல்லும் முறையையும், சுவை பயக்கும் வண்ணம் செய்யுட்களை இயற்றும் ஆற்றலையும், செய்யுட்களின் பொருளை நயம் படக் கூறி விளக்குந் திறனையும் சொல்லி மனம் உருகியதோடு இவர் இயற்றிய **சரசக்கழி நெடிலி** லிருந்து சில செய்யுட்களையும் வேறு தனிப் பாடல்களையும் கூறிப் பொருளுரைத்தார். அவர் கூறிய பாடல்கள் யாவும் செம்பாகமாகவும் இனிய கருத்துக்களை உடையனவாகவும் இருந்து மனத்தைக் கவர்ந்தன. பல இடங்களிலுள்ள தமிழறிஞர்கள் இவருடைய பாடல்களைக் கூறிப் பாராட்டி வந்ததுண்டு.

சென்னையிலிருந்த புரசை அஷ்டாவதானம் ஸ்ரீ சபாபதி முதலியார் இவருடைய சம்பாஷணையால் உண்டாகும் இன்பத்தைக் குறித்துப் பாராட்டிச் சொல்லுவார்.

கொட்டையூரில் சந்திரசேகர மூர்த்தியின் திருவுருவம் கிலமாக இருந்ததை அறிந்து புதிய மூர்த்தி வார்ப்பித்து வைத்ததன்றி, சங்கராந்தியன்று தீர்த்தங் கொடுத்தற்கு அந்த மூர்த்தி எழுந்தருளுவதற்காக இரதம் ஒன்றும் இவர் செய்வித்து அத்திருநாள் வருஷந்தோறும் நடைபெறுவதற்காக அவ்வூரிலுள்ள தென்னந்தோப்பொன்றை வழங்கினார்.

இவர் கொட்டையூரில் அசௌக்கியமாக இருந்ததையறிந்து இவரைப் பார்க்க வந்தவர்களில் ஐரோப்பியர்கள் இருவர் இவருக்குப் பிரியமாக வுள்ளனவென்று அறிந்து விதையில்லாத மாதுளம் பழங்களைக் கையுறையாகக் கொணர்ந்து கொடுத்தன ரென்றும், ஊரார் அக்கனவான்களுடைய அன்பையும், இவருடைய மதிப்பையும் அறிந்ததன்றி அதுகாறும் அறிந்திராத அப்பழங்களை உண்டு வியப்புற்றன ரென்றும் கூறுவர்.

சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பாடல்கள் எளிய நடையில் அமைந்தவை. சொல்லணிகளை அமைப்பதிலும் பலவகையான தொனிகளை அழகு பெற அமைப்பதிலும் இவர் மிக்க ஆற்றலையுடையவர். ஒரு தொகுதியாகவுள்ள பல பொருள்களின் பெயர்களைத் தொனியில் அங்கங்கே அமைத்திருத்தல் அறிந்து பாராட்டுதற்குரியது. கோடீசுரக் கோவையிற் காணப்படும் மிகுதியான தொனிகளைப் போல வேறு எந்தத் தமிழ் நூலிலும் காணல் அரிது. தற்குறிப் பேற்றம் முதலிய அணிகளையும் அங்கங்கே விரவு வித்துப் பாடுவார். ஒரு பொருளினது பெயரைக் கொண்டே பல செய்திகளைக் கற்பித்தலும், பரியாயப் பெயர்களை வைத்து வாக்கியங்களை முடித்தலும், சொல் முரண்கள் பொருள் முரண்கள் மடக்கு முதலியவற்றை அமைத்தலும், தலப் பெயர்களைத்தொனியில் எடுத்தாளுதல், அவற்றின் வரலாற்றைச் சிலேடையாகப் பொருத்தல் முதலியனவும், தலங்களைப் பற்றிக் கூறுவதற்குரிய சந்தர்ப்பத்தைக் கற்பித்துக் கொண்டு அவ்வாறு செய்தலும் இவருடைய சிறப்பியல்புகள்.

பல தலங்களைப் பற்றிய வரலாறுகளை இவர் நூல்களிற் காணலாம். இலக்கணச் செய்திகளை இவர் பல இடங்களில் தொனியிலும் சிலேடையிலும் உவமை

யிலும் வழங்குகின்றார். கோவை உலா என்னும் பிரபந்தங்களின் பெயர்களைத் தொனியில் வைத்துப் பாடிய செய்யுட்கள், இவர் அவ்விரு வகைப் பிரபந் களைச் செய்ய வேண்டுமென்னும் அவாவுடையராக இருந்ததனையும், அந்த அவா **கோடீச்சுரக்கோவை, கோடீச்சுர உலா, பெருவுடையாருலா** என்பவற்றை இயற்றுவதற்குக் காரணமாயிற்றென்பதையும் புலப் படுத்துகின்றன. தாம் பிறந்த தலத்தினிடத்து இவருக் குள்ள அன்பு, அத்தலத்திற்கு ஒரு கோவையும் ஒருலாவும் பாடினமையாலும், அதன் வரலாறு களையும் பெயர்களையும் சிலேடை முதலியவற்றில் அமைய வைத்ததனாலும், அத்தலத்தைப் பற்றிக் குறவஞ்சியிற் கூறியிருத்தலினாலும் உணரப்படும்.

"நஙிகேதந் தீர்த்தருள் கோடீச்சுர நம்பர்",
"நம், ஏய்துதி கொண்டருள் கோடீச்சுரேசர்",
"என்னை முன் னாண்டருள் கோடீச்சுர வள்ளல்
நடத்தொழி றில்லைப் பொதுவிற் செய் தாண் மலர்"
"நாளுமென்னெஞ், சிடத்துறச் செய்பரன்",
"எனைத்தன் னடிமை யெனத்தடுத் தாண்டருளீசர்"

(கோடீச் 91, 194, 207, 287-8)

என்பன இவருக்குள்ள சிவ பக்திப் பெருக்கைத் தெரிவிக்கும்.

இவருடைய தமிழ் நூற்பயிற்சி, கவித்திறன் முதலியவற்றை ஒவ்வொரு பிரபந்தத்துக்கும் முன்னே அமைக்கப்பட்டுள்ள நூன்முகம், ஆராய்ச்சி, குறிப் புரை என்பனவற்றால் அறிந்து கொள்ளலாம்.

இவர் இயற்றிய நூல்கள்:- கோடீச்சுரக் கோவை. தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம், சரபேந்திர வைத்திய முறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம்.

## 212. சிவஞான முனிவர்.

இவர் காஞ்சீ புரத்தின் ஒரு பாலுள்ள திருவா வடு துறை மடத்தில் இருந்து வந்தார். அந்த மடத்தில் மெய்கண்ட சிவாசாரியருடைய கோயில் இருந்தது. அவ்வூரிலிருந்த செங்குந்தர்கள் தினத்திற்கு ஒரு வீடாக முறை வைத்துக் கொண்டு உணவுப் பண்டங்கள் கொடுத்து இவரை ஆதரித்து வந்தார்கள். அங்கே இருக்கையில் காஞ்சிப் புராணம், சிவஞான போத பாஷியம் முதலியவற்றை இயற்றினார். தம்மை ஆதரித்து வந்த செங்குந்தர்களுக்குப் பஞ்சாட்சர உபதேசமும் தீட்சையும் செய்வித்துப் பூசையும் எழுந்தருளிவித்தார். ஒரு முறை சென்னைக்குச் சென்றிருந்த பொழுது அங்கே உள்ள கனவான்களிற் பலர் இவரை ஆதரித்து உபசரித்தனர். சில காரணம் பற்றி இவர் வேறு ஒன்றும் உண்ணாமல், 'இப் பொழுது ஒரு மண்டலம் விரதம் அநுஷ்டிக்க வேண்டியவனாக இருக்கிறேன்' என்று சொல்லிப் பாலும் பழமுமே உண்டுவந்தார்.

இவர் சோமேசர் முதுமொழி வெண்பாவும், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழும், குளந்தைப் பதிற்றுப்பத் தந்தாதியும் இயற்றி விளங்கிய இடம் குளத்தூராகும். தொட்டிக் கலையில் சிவஞான முனிவர் இருந்த மடம் உள்ளது. தொட்டிக் கலைச் சிவாலயத்தின் முன் மண்டபத்தில் சிலாரூபமாக இவர் எழுந்தருளியிருக்கிறார். அங்கே இருக்கும்போது இவரால் இயற்றப்பட்ட நூல்கள்: செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ். கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி, சிவஞான போதச் சிற்றுரை, காஞ்சி யமக வந்தாதி.

காஞ்சிப் புராணத்தில் சுரகரீசப் படலத்தில் மந்தர கிரியின் வளத்தைக் கூறப் புகுந்த சிவஞான முனிவர் பலசித்திர கவிகளை அமைத்திருக்கிறார்.

தொட்டிக் கலையிலிருந்த பிரபுவான கேசவ முதலியார் இவரை ஆதரித்தார்.

இவர் காஞ்சிப் புராணம் அரங்கேற்றிய வரலாறு:

மணியப்ப முதலியார் முதலிய செங்குந்தச் செல்வர்களுடைய உதவியினால் சிவஞான முனிவர் காஞ்சீபுரத்தில் இருந்து வந்தார். தாம் இயற்றி நிறைவேற்றிய காஞ்சிப் புராணத்தின் முதற்காண்டத்தை அப்போது அம்முனிவர் அரங்கேற்றத் தொடங்கினர். கச்சியப்ப முனிவரும் வேறுபல வித்துவான்களும் செல்வர்களும் வந்திருந்தனர். இவர் பால் அழுக்காறு பூண்ட சிலர் 'இவர் ஒரு நூலைப் பாடுவதும் அதனை அரங்கேற்றுவதும் நாம் பார்த்திருப்பதும் சரியா? இவரது புராணத்தில் ஏதேனும் குறைகளைக் கூறி இவருக்குள்ள மதிப்பைக் குறைக்க வேண்டும்' என்று நினைந்து கோயில் ஓதுவார் ஒருவரை அழைத்து ஊக்கிவிட்டு ஆட்சேபணை செய்யும்படி ஏவினார்கள். அவர் கல்விப் பயிற்சியில்லாதவர்; தேவாரம் மட்டும் ஓதுபவர்; அவர்கள் சொல்லியதற்கு உடன்பட்டுத் தைரியத்தோடு சபையில் வந்திருந்தனர்.

அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று. விநாயகர் வணக்கங்களாகிய முதல் இரண்டு செய்யுட்களைப் படித்துப் பொருள் கூறியபின் மூன்றாவது செய்யுளாகிய ஸ்ரீ நடராஜர் பெருமான் துதியை முனிவர் படிக்க ஆரம்பித்தார்; "சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளும்" என்று தொடங்கும் அதனைக் கூறிவிட்டுப் பொருள் சொன்னார். ஓதுவார் முதலில் சங்கையா ஆரம்பித்தீர்கள்? என்று இழிப்புத் தொனியோடு கேட்டார். உடனே சிவஞான முனிவர், "பாடலில் இருப்பது சங்கு என்னும் சொல்தான். உம்முடைய வாக்கில்தான் சங்கை (ஐயம்) உண்டாயிற்று." என்று விடை சொன்னார். ஓதுவார் மீட்டும்

ஆட்சேபிக்கத் தொடங்கி, ''முத்தி நகரங்கள் ஏழி லொன்றும் பிரசித்த ஸ்தலமுமாகிய இந்தக் காஞ்சி புரத்திற்குப் புராணம் பாடவந்த நீங்கள் எப்படிச் சிதம்பரம் நடராஜருக்கு முதலில் துதிகூறலாம்? ஸ்ரீஏகாம்பர நாதர் துதியையல்லவோ முதலில் சொல்ல வேண்டும்? எல்லாத் தல புராணங்களிலு முள்ள அமைப்பைப் பாருங்கள்' என்றார். அப்போது சிவஞான முனிவர் ஸ்ரீசபாபதியின் பெருமை முதலிய வற்றைக்கூறித் தக்க காரணங்களை எடுத்துரைத்தும், ஓதுவார் அவற்றை அங்கீகரியாமல் மேன் மேலும் விதண்டா வாதம் செய்தார்.

இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டே அருகில் இருந்த கச்சியப்பமுனிவர் சிவஞான முனிவரை நோக்கி அஞ்சலி செய்து, ''இவரை அடியேன்பால் விட்டு விடுக; நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லி விட்டு ஓது வாரைப் பார்த்து, ''இங்கே நேரே வந்து இரும்; நீர் யார்? ஏதேனும் படித்ததுண்டா?'' என்று கேட்டார்.

ஓதுவார்: நான் இத்தலத்து ஓதுவார்களுள் ஒருவன்; ஏதோ ஒருவாறு தமிழ் கற்றிருக்கிறேன்.

கச்சி: உமக்குத் தேவாரம் தெரியுமா?

ஓதுவார்: நன்றாகத் தெரியும். என்னுடைய வேலையே தேவாரம் ஓதுவதுதானே? இதைக் கூட கேட்க வேண்டுமா?

கச்சி: அப்படியானால் இந்தத்தலத்துத் தேவாரத்தைச் சொல்லும், பார்க்கலாம்.

ஓதுவார்: ஊக்கத்துடன் சொல்லத் தொடங்கி வழக்கம் போல் 'திருச்சிற்றம்பலம்' என்றார். உடனே கச்சியப்பமுனிவர் கம்பீரமாக, ''நிறுத்தும்;

உம்மைக் காஞ்சிபுரத் தேவாரம் சொல்லச் சொன்னால் திருவேகம்பமென்று சொல்லாமல் திருச்சிற்றம்பல மென்பதை ஏன் சொல்லுகின்றீர்."? என்று கேட்டார்.

ஓதுவார்: எல்லாத்தலங்கட்கும் அது பொதுவானது.

கச்சி: இங்கே புராணத்திற் கூறப்பட்ட காரணமும் அதுவே. பல சைவ நூல்களைப் படித்திருந்தால் இந்த மரபு உமக்குத் தெரிந்திருக்கும்.

உடனே ஓதுவார் தலைகவிழ்ந்து, ''அடியேன் செய்த குற்றத்தை க்ஷமிக்க வேண்டும்'' என்று வருந்திக் கேட்டுக் கொண்டு ஒடுக்க வணக்கத்துடன் இருப்பாராயினர்.

தேவாரம் சொல்லும்போது முதலில், 'திருச் சிற்றம்பலம்' என்று சொல்லிவிட்டு ஆரம்பித்தலே முறை.

திருவாவடுதுறை மடத்துப் புத்தக சாலையி லிருந்த பழஞ் சுவடி ஒன்றில் கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவருடைய மாணாக்கரென்று பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது.

> ''சீர் தரு துறைசை வாழ்சிவ ஞான
> தேவன்மா ணாக்கரின் முதன்மை
> திகழ்ந்துள கச்சியப்ப மாமுனிவன்."

துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நால்வர் நான்மணி மாலையின் சுவையில் ஈடுபட்ட இவர் அந்தப் பிரபந்தத்தை உருண்டை வடிவமான சுவடி ஒன்றில் எழுதித் தம் ருத்திராக்ஷ கண்டியிற் சேர்த்து அணிந்து கொண்டிருப்பாரென்று சொல்லு வார்கள்.

## 213. சிவஞான யோகிகள்

சங்கத் தமிழ் கற்போர் யாவரும் படித்துணரற் பாலதான தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும் அந்நூல் முதற் சூத்திரத்திற்கும் விரிவுரை (பாஷ்யம்) திருவாவடுதுறை யாதீனத்து வித்துவானாக விளங்கிய வராகிய இவரால் இயற்றப்பெற்றது. மேலும் தருக்க சங்கிரகமும், அதன் உரையாகிய அன்னம் பட்டீயமும் வடமொழியிலிருந்து இவரால் மொழி பெயர்க்கப் பட்டு வழங்கி வருகின்றன.

## 214. சிவபுரம் ஞானப்பிரகாசர்

இவர் மேற்படியூர் சிதம்பரநாத ஞானியா ருடைய குமாரர். சம்பந்தர் என்பவருடைய சிஷ்யர். இவரால் சைவ வினாவிடை என்னும் பெயருள்ள வசன நூலொன்று செய்யப்பட்டுள்ளது. மேற்படி நூலில் அறுபது வினாவிடைகளுள்ளன. அந்நூலி லுள்ள பாடலில் ஒன்று:-

> சிவபுரஞ் செட்டி ஞானி சிதம்பர நாதன் மைந்தன்
> பவஞானப் பிரகா சன்றான் பரவுசம் பந்தன் சீடன்
> உவமையி னன்மையாளர் மரபினைத் தன்குற் றம்போல்
> குவலயத் தஞ்ஞா னப் பேய்க் குருடர்க்குக் கூறினானே.

## 215. சிவபுரம் பெரிய பிள்ளை

இவர் திருவாவடுதுறை நமச்சிவாய அம்பல வாண தேசிகருடைய மாணாக்கர்.

இவர் செய்த நூல் சிவபுரம் பெரிய பிள்ளை பாடல். இது 10 வெண்பாக்களையுடையது.

## 216. சிவ வாக்கிய தேவர்

இவர் இயற்றிய நூல் சிவ வாக்கிய மென்பது திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் இறுதிச் செய்யுளில் "சித்த மார்சிவ வாக்கிய தேவரும்" என்று பட்டணத்துப் பிள்ளையால் துதிக்கப்பட்டுள்ளார்.

இவர்தாம் திருமழிசை யாழ்வாராக ஆனாரென்று வைஷ்ணவ குருபரம்பரை தெரிவிக்கின்றது.

சித்தாந்த தரிசனம் என்னும் நூலில் இவர் துதிக்கப்பட்டுள்ளார்; சிவபுராணாதி தோத்திர மஞ்சரியிலும், தாயுமானவர் எந்நாட் கண்ணி (அடியார் வணக்கம்)யில்,

"கண்டதுபொய் என்றகண்டா காரசிவம் மெய்யெனவே
விண்ட சிவ வாக்கியர் தான் மேவுநாள் எந்நாளோ."

என்றும் உள்ளது.

இவர் பாடிய பாடல்களில் இரண்டு:-

'அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல அப்புறம்
கருமை செம்மை வெண்மையுங் கடந்துநின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணு மல்லவே
துரியமுங் கடந்து நின்ற தூரதூர தூரமே."

"கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்த சங்கின் ஓசையும் உயிர்களும் உடல்புகா
வடிந்தவோ ரடையினோடு திர்ந்தபூ மரம்புகா
இறந்து போன மானிடர் இனிப்பிறப்ப தில்லையே."

## 217. சிவாக்கிர யோகி

இவர் சிவஞான சித்தியாருக்கு மணிப்பிரவாளமாகிய உரையொன்று செய்தவர்: சிவாக்கிரவுடையார் என்றும் வழங்கப்படுவர். திருவிடை மருதூருக்குச் சமீபமாகச் சிவாக்கிர யோகி புரமென்று ஊருருள்ளது.

அவ்வூர் இப்பொழுது திருவிடை மருதூர்க் கோவிலுக்குச் சொந்தமாக இருக்கின்றது. அது இவரால் அக்கோவிலுக்குக் கொடுக்கப் பட்டதோ, அரசர்களா லிவருக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டதோ யாதும் விளங்கவில்லை. சிவஞான சித்தியார் உரையிற் கண்ட சிறப்புப் பாயிரச் செய்யுள் இது.

### விருத்தம்

இரவியெழுந் திருளதனை நீக்குவபோ லென்றும்
இறைஞ்சும்படி யவர் மனத்தி னிருளதனை நீக்கக்
கருணைபொறை தவந்தருமங் கல்விசிவ ஞானங்
காசினியி லொருவடிவாய்க் காட்டியபோற் றோன்றிப்

பரசமய கோடார்மே னின்றுநெளி கொண்டு
பலகலையு முணர்ந்து சைவ பரிபாலனாகித்
திரமருவு சிவஞான சித்திதரு பொருளைத்
தெளிந்திடவே விரிந்துரைத்தான் சிவாக்கிர தேசிகனே

இவர் எழுதிய நூல்கள்: சைவ பரிபாஷை, தத்துவ தரிசனம், சித்தாந்த தீபிகை, வேதாந்த தீபிகை முதலியன.

## 218. சிற்றம்பல உபாத்தியாயர்

கொங்கு நாட்டில் இருந்த புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் திருச்செங்கோட்டுத் தலபுராணத்திற்கு ஒருரை எழுதியுள்ளார். இவர் உரை எழுதிய காலத்தைக் கீழ்வரும் செய்யுள் விளக்குகிறது.

"ஏர் விளம்பி வருடமதில் சிரவணத்திங்
களிற் பதினான் கினிய தேதி
சீர்விளம்பு மதிக்கிழமை அமர பக்கம்
பதின்மூன் றாந் தேதிநாட் பூசம்
தேர்விளங்கு திருவீதி நாககிரி
மான்மியத்தைத் தெளிந்து தேர்ந்து
ஆர்விளங்கு புலனமைசிற் றம்பலவன்
உரையெழுதத் தொடங்கினானே."

## 219. சிற்றம்பல நாடிகள்

அறுபது முனிவர்க் கழகிய மன்று
ளாடிய பாத மருள் சிற்றம்பல
நாடி யென்றுயர் ஞான தேசிகனே.

இவர் சிற்றம்பல நாடி வெண்பா முதலிய வற்றில் சீகாழியிலுள்ளவரென்று சொல்லப்படுகிறார்

இவர் தொண்டை நாட்டாரென்று சீகாழியில் சொல்லப்படுகிறார். இவர் சமாதி மூவலூருக்குக் கிழக்கே சித்தக் காட்டில் சாலைக்கு வடக்கே பெரிய கோயிலாக இருக்கிறது.

இவர் கங்கை மெய்கண்ட தேவருடைய மாணாக்கர் என்றும், ஒரே காலத்தில் 60 மாணாக் கருக்கு ஸ்ரீ நடராஜருடைய திருவடியை அருள் செய்தவரென்றும் '**துகளறு போதம்**' என்னும் நூலொன்றியற்றியவரென்றும் 'திருவருள் விளையும், என்று தொடங்கும் அகவல் தெரிவிக்கின்றது. அது வருமாறு:

திருவருள் விளையுந் திறம்பல வெனினு
மொருவகை யிருபத் தெட்டுடன் பிறவு
மாமலை பூத மைந்தின் பழிப்பே
தாமிட மாகச் சார்பொறி யறுத்த
லெழுவளி முயற்சியி னியைந்திடும்; பொருள்களிற்
சுழன்று மந்தக் கரண சுத்தியும்
பல குணம் விடுக்கும் பகுதியைத் தேற்றுங்
கலைமுத லேழுங் கழன்ற நிலையுஞ்
சுத்த தத்துவத் தூடண மைந்துந்
தத்துவா தீத முஞ் சார்முத்திச் சகலமுஞ்
சகல தெரிசனந் தானருட் கேவலந்
திகழ்கே வலத்தின் தெரிசன மதீதந்
தன்னுண் மையொரு சைதன்னிய தரிசன
மென்றும் பன்மூன் றெனவரு மவத்தையு
முரைதரு ஞான தெரிசனத் தோடும்
பரைதெரி சனமே பரையிவ் வியாத்தி

நிருமல சாக்கிரஞ் சாக்கிரா தீதம்
பகர்சுத் தாவத் தைசுக ரூபத்
தோடு சொல்சுகா தீதம் பகர்சிவப்
பேறு பரமா னந்த தரிசனம்
பரமா னந்த யோகம் போகம்
பரமா னந்த மேலி டவச
மானவிப் பதினைந் தவத்தை கூடத்
தானெழு நான்கெனச் சாற்றிய பின்ன
ரஞ்செழுத் தியல்பு மருளாந் தேசிகர்
தஞ்சிறப் பறிந்து சாரும் புதல்வ
ரவர்பணி நிற்றலு மாதியி லியற்றுந்
தவநெறி மூன்றுஞ் சதமெனு மளவிற்
றுடீ ளறு போதச் சுருதியிற் சென்ற
வகலிடத் தவருக்கருள்கூர்ந் துரைத்தனன்
கங்கைமெய் கண்ட கடவுளர் கருணையி
னிங்கெமக் கருளிய இறையோ னிருவகைத்
துறவும் பூண்ட தோன்றலோர் கணத்தின்.

இவர் பால் அருளுபதேசம் பெற்றார் பலர். அவருள் சிறந்தார்கள் அறுபத்து மூன்று மாணவர். திருமயிலாடுதுறை என்னும் கௌரி மாயூரத்துக்கு அண்மையில் உள்ள **சித்தர்காடு** என்னும் இடத்தில் சிவானந்த நிட்டையில் எழுந்தருளியிருந்து சிவபூசை, குருபூசை. மகேசுவர பூசைகளையும் விதிப்படி செய்தார். தம்மை அடுத்த பக்குவர்கட்கு அநுக்கிரகமும் செய்தார்.

## 220. சிறு கம்பையூர் சருக்கரைப் புலவர்

இப்பெயருள்ளார் இருவருளர். இவர்களின் முன்னோர் 'திருச்செந்தூர்க் கோவை' யென்பதொரு பிரபந்தம் செய்திருக்கின்றனர். இது மயூரகிரிக் கோவையின் மூலம் விளங்குகின்றது. இவருடைய சரித்திர விரிவு மயூரகிரிக் கோவைப் பதிப்பின் முகவுரையிற் காணப்படும்.

இவர் இரகுநாத சேதுபதியின் சகோதர ராகிய முத்து வைரவநாத தேவர் முன்பு திருப்புல்லாணியில்

கம்பராமாயணம் பிரசங்கம் செய்து திருப்புல்லாணி கோட்குடி, கொந்தலாம் வயல் ஆகிய இவ்விரண்டு ஊரையும் மானியமாகப் பெற்றவர்; மிழலைச் சதகம் பாடி மிழலை நாட்டாரால்—வேலிக்கு இரண்டரை மரக்காலாக மகிமை பெற்றவர்.

இவர் பாடியனவாகத் திருப்புன வாயிற் பள்ளும், புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி மும்மணிக் கோவையும், சிங்கவனம் ஜமீன்தாரொருவர் மீது வண்ணமும், நக்ஷத்திர மாலையும், சீட்டுக்கவிகளும், தனிப்பாடல்களும் பலவுள்ளன. இவர் பெருமையுடனிருந்து காலங்கழித்த இடம் இராமநாதபுரம். கம்பையூரில் சேதுபதியால் நெட்டி மரக்கல முதலிய விருதுகள் பெற்றவர். புதுக்கோட்டை இரகுநாத தொண்டைமானால் பல்லக்குப் பெற்றவர்.

சவ்வா தென்கிற மேகமெழுந்து பொழிந்தால் சருக்கரைக் குவியல் கரைந்து போகுமென்று சவ்வாதுப் புலவர் சொன்ன பொழுது 'சரவணமிருக்கின்றது; சருக்கரை வீணே போகாது' என்று சரவணக் கவிராய ரென்பவர் சொன்னா ரென்பது கர்ண பரம்பரைக் கதை. இன்னும் சவ்வாதுப் புலவர் 'சருக்கரை தொண்டை மட்டும், சவ்வாது கண்ட மட்டும்' என்று சொன்னபோது இவர் இரண்டு மொன்றுதான் என்றாராம். இவர் பிள்ளை சாந்துக் கவிராயர் முதலியோர்.

இவர் பாடிய மிழலைச் சதகப் பாடலில் ஒன்று:—

> தருதஞ்சை வாழும் ப்ரதாபசிங் கேந்த்ர தருமன்மெச்ச
> வருமணி மாமுத்தி ரைவேங் கடாசல மால் சம்பிரதி
> நரதுங்க மாணிக்க வாசக வேள்சபை நாளையிலே
> யுரைசெய் மிழலைச் சதகத்தைச் சர்க்கரை யோதினனே.

## 221. சிறுகம்பையூர்ச் சாந்துக் கவிராயர்

இவர் சருக்கரைப் புலவர் புதல்வர்களில் மூத்தவர். புலவரென்று கூறப்படுவார். மருத

பாண்டியன்மீது சருக்கரைப் புலவர் அஷ்ட நாக பந்தம் செய்து எழுதி வைத்திருந்த பொழுது, அதன் பக்கத்தில் சிறுநாகபந்தம் ஒன்று இவர் எழுதி அதில் ஒருபாடலை அடக்கி வைத்திருக்க அந்தப்பந்தத்தைக் காட்டக் கண்ட மருத பாண்டியர் 'அஷ்ட நாகத்திற்குக் குட்டியுமுண்டோ' என்று கேட்டு, இவர் செய்ததாகத் தெரிந்து, இவரை வருவித்துப் பார்த்து, இவருடைய பாண்டித்தியத்தை யறிந்து மகிழ்வுற்று, இளமை யிலேயே இவருக்குண்டாகிய கவித் திறமையை வியந்து **குழந்தைக் கவிராய**ரென்று நாமஞ் சூட்டித் தமது ஆஸ்தான வித்துவானாக வைத்துக் கொண் டார். இது பற்றித்தான் மயூரகிரிக் கோவைச் சிறப்புப் பாயிரமாகிய 'செந்திருமார்பன்' என்னுஞ் செய்யுளில் இவர் வாலகவீச்சுரன் என்று போற்றப்பட்டார். இவர் இளமையில் மருத பாண்டியனிடமிருந்து மருதங்குடி, உழக்குடி என்னும் கிராமங்களை நன்கொடையாகப் பெற்றார். இது "பொருதன்பிலார்" என்னுஞ் செய்யுளில் தெரிகிறது. இவர் அப்பாண்டிய னிடத்துச் சேனாதிபதி யுத்தியோகமும் பெற்று வந்தார்.

இவர் செய்த நூல் **மயூரகிரிக் கோவை.** மயூரகிரி என்பது பாண்டிய நாட்டில் தேவாரம் பெற்ற தலங் களுள் ஒன்று. இது குன்றக்குடி என்று வழங்கும். அரசவனம், மயூரபுரம், கண்ணபுரம் என்னும் பெயர் களும் இதற்குண்டு.

இவர் பாடியனவாகச் சில தனிப்பாடல்களும் சீட்டுக்கவிகளுமுள்ளன வென்று தெரிகின்றன. இவர் களுடைய குலதெய்வத்திற்குச் "சாந்தாயி" என்ற பெயர் உள்ளமையின் இவர் இப்பெயர் பெற்றார்.

## 222. சின்னசாமி பிள்ளை

இவர் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதராக இருந்தவர். இவர் மகாவித்துவான்

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப் பாராட்டியவர்களில் ஒருவர். இவர் பாராட்டிய செய்யுள்;

"மலையமுனி தவப்பேறோ, கலைமகளின் தவப்பேறோ
மறிநீர் வைப்பிற்
தலைமைபெறு மிவன்சனன மெனப்பலபிள்ளைத் தமிழைச்
சாற்றும் வல்லோன்
குலைவில்புகழ் மீனாட்சி சுந்தரநா வலரேறு
குடந்தை மேய
மலைமகண்மே லொருபிள்ளைத் தமிழுரைத்த தொரு வியப்போ
மதிமிக் கீரே"

## 223. சின்னைய நாயக்கர்

இவர் ஊர் பால சமுத்திரம். பழநிக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்திலுள்ளது. இவர் கடிகைமுத்துப் புலவர் காலத்தவர்; இவர் "பழனிப்பிள்ளைத் தமிழ்" என்ற நூலை இயற்றியுள்ளார். இந்நூலை ஐயரவர்கள் செந்தமிழ்ப் பிரசுரத்தின் மூலமாக 1932ல் வெளியிட்டுள்ளார். இவர் பாலசமுத்திரம் என்னும் ஊரிலிருந்த ஜமீன்தாராகிய **விஜய கோபால துரை** என்பவரால் ஆதரிக்கப் பெற்றவர் என்று தெரிகிறது. இவருடைய வாக்கினால் முருகக் கடவுளிடத்தில் உண்மையான பக்தியுடையவர் என்று தெரிகிறது. பழனிப் பிள்ளைத் தமிழிலுள்ள வருகைப் பருவத்தில் உள்ள பாடல் ஒன்று.

சீரார் நலஞ்சேர் பூவுலகிற் றேவா சுரரின் மற்றையரில்
தினமும் உனது கொலுக்காணச் செல்லா தாரார் திறைவளங்கள்
தாரா தாரார் உனதுபதந் தனையே வணங்கித் தொழ வேண்டித்
தழுவா தாரா ரெவ்வேளை சமயங் கிடைக்கு மென நினைந்து

வாரா தாரா ருனதருளை வாழ்த்திப் புகழ்ந்து துதிக்கமனம்
வசியா தாரார் பணிவிடைகள் வரிசைப் படியே
நடத்தா தார்
ஆரா ரெனத்தா லாட்டுகின்ற வரசே வருக வருகவே
அருள்சேர் பழனிச் சிவகிரிவா ழையா வருக வருகவே.

## 224. சீகாழி அருணாசலக் கவிராயர்

இவர் இருந்த வீடு சீகாழி வடக்கு வீதியில் வடசிறகில் இருந்தது; கவிராயர் மனையென்று வழங்கி வருகின்றது. இவருடைய பழையவூர் பிறையாற்றுக்கு ஒரு நாழிகை வழி மேற்கேயுள்ள தில்லையாடி.

இவர் செய்த பிரபந்தங்கள் பல உள்ளன.

1. அனுமார் பிள்ளைத் தமிழ்
2. சீகாழிப் பள்ளு

தன்னிடத்து அன்பில்லாத ஒரு பிரபு அனுப்பிய பேயன் பழத்தைக் கொண்டு வந்தவரை நோக்கி இந்தப் பேயன் பழம் எனக்கு வேண்டாம்' என்றும்; தன்னிடத்து மிகவும் அன்புள்ள ஒருவருடையவீட்டில் விருந்துண்ணும் பொழுது 'சிறுக்கி அன்போடு சமைத்தது நன்றாக இருக்கிறது' என்னும் சிலேடைப் பொருள்படக் கூறி ஆங்குள்ளவர்களை மகிழ்வித்தனர் என்றும் கேள்வி.

[பேயன்—என்பது ஒருவகை வாழையும், பித்துக் கொண்டவனும்; சிறுக்கி—சிறியவள்; சிறுகச் செய்து.]

இவ்விரண்டு வார்த்தைகளும் சீகாழி நமச்சிவாயக் கவிராயர் சொன்னவைகளாகவும் கூறப்படும்.

இவர் பாடிய கீர்த்தனைகளை யெல்லாம் நன்றாகப் பாடம் பண்ணி இசையுடன் பாடியவர்

களுள் ஒருவர் மீன்மிசல் ராமுடுவையரென்பவர். இவரெழுதிப் படித்த கந்தரந்தாதி யுரைப் புத்தகவேடு, மாயூரம் கீழைவீதிக் குப்புசாமி பண்டாரம் வீட்டி லிருக்கிறது. (ஐயரவர்கள் காலத்தில்)

## 225. சீகாழி சிவஞான வயிலாரி

**இவரியற்றிய நூல்கள்:-**

1. சத்திய ஞான போதம்
2. பதிபசு பாச விளக்கம்
3. சித்தாந்த தரிசனம்
4. உபதேசமாலை
5. ஞானப் பிரகாச வெண்பா
6. ஞான விளக்கம்
7. அதி ரகசியம்
8. சுருதிசாரம்
9. சிந்தனை வெண்பா
10. தேவிகா லோத்திரம்

இந்நூல்கள் அடங்கிய வள்ளலார் சாஸ்திரம் செய்தவர் இவரே.

## 226. சீகாழி தத்துவப் பிரகாசர்

இவர் திருவாரூர்த் தத்துவப் பிரகாசருக்கு வேறானவர் என்று தெரிகிறது. சிற்றம்பல நாடிகளின் மாணவர்களில் ஒருவர்.

இவருடைய ஊர் சீகாழி. இவர் தத்துவப் பிரகாசம் என்று ஒரு நூல் இயற்றியுள்ளார். இந்த நூல் 337 கலிவிருத்தங்களா லாகியது. இதற்குக்

காண்டிகையுரை என்று ஒன்றுண்டு. அது தத்துவப் பிரகாசக் காண்டிகை என்று வழங்கும்.

**வெண்பா**

ஆறியம்பு சாத்திரமு மாகமங்க ணாலோடு
மாரணங்க ணாலு மடங்கிற்றே—சீரணங்கு
தொன்னூல் கவிதத்துவ பிரகாச விருத்தம்
முந்நூற்று முப்பத்தே ழில்.

(ஆறு சாத்திரம், நாலு ஆகமம், நாலு வேதம் அடங்கிற்று)

## 227. சீகாழி நமச்சிவாயக் கவிராயர்

இவருடைய வீடு சீகாழி வடக்கு வீதியில் அருணாசலக் கவிராயர் வீட்டிற்குக் கிழக்கே யடுத்துள்ளது. இவர் சீகாழி மாலை (10 பாட்டுள்ளது) சட்டைநாதர் பதிகம், தனிப்பாடல்கள் சில பாடியுள்ளார்.

இவர் சீகாழி வடுகநாத தேசிகருடைய பரம்பரையிற் பிறந்தவர். வார்த்தை சொல்லுதலிலும் பாடுதலிலும் சிறந்த திறமையுள்ளவரென்று சொல்வார்கள்.

ஒரு காலத்தில் திருக்குருகாவூரிலிருந்த நடராஜ பிள்ளையென்பவரைப் பார்த்து நானூறு மாங்காய் வேண்டுமென்று இவர் கேட்ட வெண்பா ஒன்று வருமாறு:

தேங்காய்போன் மொத்தமாய்த் தீம்புளிப்பாய் நாரிலதாய்ப்
பாங்காய் முக்காலும் பழுத்ததாய்—மாங்காய்தான்
நான் ஊறு காய்க்குற்றேன் நடராச பூபதியே
நானூறு காய்நல்கு வாய்.

ஒரு சமயத்தில் இவர் திருவாவடுதுறைக்கு வந்தபொழுது வேளூர் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் உம்முடையவூர் யாதென்று வினாவிய பொழுது இவர் சொல்லிய பாடல்:

## விருத்தம்

ஒரு குழந்தையழு துமையுடன் சிவனை
யொருகுளத்தினி லழைத்த வூர்
உக்கிர வீரவர தண்டபாணிமலை
யுச்சிமீதினில் இருக்குமூர்

வருமுகாந்தசல ராசிமீதிலசை
யாததோணிவிடும் வள்ளலூர்
மட்டிலாதவொரு சுக்கிரவாரமதில்
வந்தபேர் வினைகள் சிந்துமூர்

தருமமிக்கபர சமயகோளரி
தனக்கிருக்க நிலைபெற்றவூர்
சங்கமம்குரு விலிங்கமென்றுசிவ
சம்புவே வளருகின்ற வூர்

கருதிடுங் கவுணி யன்புகன்ற பதி
கங்களேழுபதி ருக்குமூர்
காழியூரெமது குடியிருப்புமொரு
காணியூரதனி லாயதே.

இப்படிப் பண்டார சந்நிதியவர்களிடம் இவர் அளவளாவி அருகில் மகிழ்வுற்றிருக்கையில் சிஷ்யராகிய தம்பிரானொருவர் வந்து வணங்கத் தொடங்குகையில் பண்டார சந்நிதி இவரை நோக்கிக் 'காப்பியங்களில் நாட்டுச் சிறப்பின் அயலாக உள்ளது யாது?' என்றார். இவர் நகரச் சிறப்பு என்று சொல்லிக் கொண்டே நகர்ந்து விட்டார்.

இவர் சிதம்பரத்திற்குப் போன பொழுது ஸ்ரீ நடராசர் விஷயமாகச் சொல்லிய செய்யுள்:

## கட்டளைக் கலிப்பா

கொண்டைகட்டியுரு மாலை கட்டியாண்
கோலங் கட்டிய பெண்களைப் பாடியென்
தொண்டை கட்டிய தல்லாமல் வீணிலே
தோடங் கட்டிய தென்றைக்குத் தீருமோ
இண்டை கட்டிய கொன்றையுந் தும்பையு
மிசைத்துக்கட்டி யிறந்தோர்கள் வெண்டலை
மண்டைகட்டுஞ் சடையாய் புலிசைவாழ்
வள்ள லேமழு மானேந்து கையனே.

[புலிசை-புலியூர்]

## 228. சீகாழி நாராயணசாமி முதலியார்

விபவ ஆண்டு ஆடி மாதம் ஞானவாசிட்டம் என்னும் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் செய்தவர்.

## 229. சீகாழி வருணநாத தேசிகர்

ஆபத்துத்தாரண தேசிகருடைய குமாரர் இவர்; சைவ வேளாளர்களில் அபிஷிக்தர் மரபிற் தோன்றியவர்; **சீகாழிக் கலம்பகம்** என்னும் பிரபந்தம் ஒன்று இவரால் செய்யப்பட்டுள்ளது. சீகாழி நமச்சிவாயக் கவிராயர் என்பவர் இவருடைய பரம்பரையிற் பிறந்தவரே.

**தென் திருமுல்லை வாயிற் புராணமும், திருமுல்லை வாயில் யமகவந்தாதியும்** இவராற் செய்யப்பட்டனவே. இவர் முதலில் சீகாழிப் புராணத்தில் சில பாகத்தைப் பாடல்களாகச் செய்து இதே புராணம் அருணாசலக் கவிராயரால் முன்னமே பூர்த்தியாகச் செய்யப் பட்டிருத்தலை அறிந்து மன வருத்த முற்றுத் தாம் செய்தலை நிறுத்தி அக்குறையை நீக்கிக் கொள்வதற் காகவே திருமுல்லை வாயிற் புராணத்தை செய்து முடித்தனர் என்று சொல்லுகின்றனர். இதனால் இவருடைய காலம் அருணாசலக் கவிராயருக்குப் பிற்பட்டதென்று தெரிகிறது.

திருவொற்றியூர் பழைய புராணத்திற் காழிச் சட்டை நாதர் துதிக்கப்பட்டிருத்தலின் அப்புராணம் செய்தவர் இவரே.

இவருக்கு வைத்தியலிங்க தேசிகரென்றும் வேறொரு பெயருண்டு. திருவாவடுதுறை ஆதீனம் வேலப்ப தேசிகரிடம் தமிழிலக்கண இலக்கியங்களை முறையே கற்றவர்; இவருடைய கைப்புத்தகமாகிய

தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் ஏட்டுப் பிரதி யொன்றில் பின்னுள்ள அகவற்பா எழுதப் பட்டிருந்தது.

1. அயிந்திர மகத்திய நயத்தரு மொழிநிறை
தொல்காப் பியமும் பல்காப் பியமுஞ்
செவ்விதிற் றெரிந்து பௌவநீர் வரைப்பில்
நன்னீர்ப் புலவர்க டுன்னிய நாப்பண்
கலைவளர் மதியாய் நிலைபெறு காழியில்
நீதிசேர் வடுக நாததே சிகனிரு
திருவடித் தாமரை சிரத்தின்
மருவுதுந் தமிழ்க்கடல் பருகுதற் பொருட்டே.

2. ஊழியி லழியாக் காழிமா நகர்வாழ்
ஆபதுத் தாரண தேசிக னளித்தோன்
வடுக நாதன் வைத்திய லிங்கமென்
றிடுகுறி யாக விருபெயர் தரித்தோன்
தென்னா வடுதுறை மன்னிவீற் றிருந்த
வேலப்ப தேசிகன் சீலப் பதமலர்
சென்னிமேற் கொண்டவன் றிருவரு ளதனால்
உச்சிமேற் புலவர்கொ ணச்சினார்க் கினியத்
தெழுத்ததி காரஞ் செழிப்புறப் படித்தே
வல்லமை யுடனே சொல்லதி காரக்
கல்வியங் கடலையுங் கடக்கின் றனனே.

3. விழுமிய தமிழ் நிறை கழுமல் நகர்வாழ்
ஆபதுத் தாரண தேசிக னளித்த
வைத்திய லிங்கம் வனைந்துதன் கையாற்
படித்த புத்தக மெனப்பகர்ந் தறியே.

4. வென்றுமத வாதிகளை மேன்மை யருளத்துறைசை
சென்றுவளர் வேலப்ப தேசிகனை—நன்றாய்த்
துலங்குமறி வோர்போற்றுந் தொல்காப் பியத்தின்
பலம்பெறவே நெஞ்சே பணி.

## 230. சினக்கர் பரம்பரை

சினக்கருடைய புதல்வர் சினக்க அருணாசல நயினார். இவரது குமாரர் பஞ்சநத நயினார். இவரது

புத்திரி அலங்கார நாச்சியார். இவரது கணவராகிய அன்னப்பன் பேட்டை மாயூர நயினார், இக்குடும்பத்திற்குத் தலைவரான பின்னர் சினக்கப்பட்டம் பெற்றனர். இவர் 70 வயது வரையில் உயிர்த்திருந்தவர். இவருக்குப் புத்திரப் பேறின்மையாற் கருமஞ் செய்து குடும்பத் தலைமையைப் பெற்றவர் அன்னப்பன் பேட்டை அமிர்தலிங்க நயினார். இவருக்கு அலங்கார நாச்சியாரால் ஒரு உடன் படிக்கைச் சீட்டொன்று செப்பேட்டில் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவர் 69 வயது வரையில் இருந்தவர். இவரது பிள்ளை வைத்தீசுவர நயினார்.

பொய்யா மொழிப் புலவரைத் தடுத்துத் தம்மீது பாடச் செய்த சுப்பிரமணியரும், அரசூருக்கு மேற்புறமாகத் திருவையாற்றுக்குப் போகும் வழியிலுள்ள கோயிலில் இருக்கின்ற கடவுளே என்பது அவ்வூரிலுள்ள சிவன் கோயிலுள் சுப்பிரமணிய வடிவமில்லாமையாற் றெரியக் கூடியதாய் இருக்கின்றது. பொய்யாமொழியார் அரசூரிலிருந்தார் என்பதற்குப் பிரமாணமாக அவ்வூரிலுள்ள பிடாரிக்குப் பொய்யா மொழியம்மன் என்று பெயரிடப்பட்டிருத்தலாலும், பொய்யாமொழிக் கட்டளை என்று வயலுக்குப் பெயரிடப்பட்டிருத்தலாலும் தெரிகின்றது. சினக்கரது வீடு அரண்மனையென்று வழங்கி வந்திருக்கின்றது. அவ்வரண்மனை இருந்தவிடம் இப்பொழுது செங்கல் மேடு என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

இப்பொழுதும் அவ்வூரார் வீடு முதலிய கட்டுதற்காகக் கல் வாங்காமல் இருந்திருப்பாராயின் அம்மேட்டிற் சென்று கீழே வெட்டிப் பிரித்துச் செங்கற்களைக் கொண்டு வந்து கட்டுவதும், அதற்குச் சினக்கர் சல்லி என்று பெயர் கூறுவதும் அங்கே சென்றால் பார்க்கவும் கேட்கவும் கூடும். சினக்கர்

ஆனை கட்டியிருந்த இடத்தில் அவுரித் தொட்டி இப்பொழுது கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டடங்களெல்லாம் கண்டியூருக்குக் கிழக்கே அரை மைல் தூரத்திலிருக்கின்றது.

சீனக்கருடைய அரசூர் முதலாகிய கிராமங்களெல்லாம் வளங்குன்றிச் சில வருஷத்திற்குள்ளாகக் காடாக மாறிவிட்ட படியால் சீனக்கர் மண்டபத்திலிருந்துகொண்டு தனக்குள்ள சொற்ப தானியத்தைக் கொண்டு காலங் கழித்துக் கொண்டிருக்கையில் பொய்யாமொழியார் அந்த வழியில் வந்து பசியாற் களைத்து மரமேறிப் பார்த்த பொழுது மண்டபத்தில் சீனக்கர் சிவபூசை செய்து கொண்டிருந்ததைக் கண்டு இறங்கி அவர்பாற் சென்று உணவு கேட்டபொழுது புளியஞ் சோறளித்தனராம். அந்த மண்டபம் வைத்தீசுவர நயினாரால் இடித்து விற்கப்பட்டு விட்டது. இப்பொழுதும் அரசூரில் நெல் விதைப்பதற்கு முந்தி எல்லோரும் வந்து சீனக்கர் வீட்டில் வந்து கூடி இவர்கள் கையில் நெல் வாங்கிச் சென்று பிறகு நெல் விதைக்கின்றார்கள். கலியாணம் நேர்ந்தாலும் முதற்பாக்கு இவர்களுக்கு வைத்துத் தான் மற்றையருக்கு வைக்கிறார்கள். சுவாமி புறப்பட்டாலும் சீனக்கர் வீட்டில் வந்து பூசையான பிறகு வீதி வலம் வந்து மறுமுறை வரும்பொழுது தான் பிறர் வீடுகளில் நிறுத்திப் பூசை செய்யப்படுகின்றது. கோயிலில் பரிவட்ட முதலிய மரியாதையுண்டு.

## 231. சுந்தர முதலியார்

இவர் ஸ்காந்த கீர்த்தனஞ் செய்த குமாரசாமி முதலியாருடைய புத்திரர்.

## 232. சுப்ரதீபக் கவிராயர்

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த திருமங்கலம் தாலுக்காவில் கம்மாளர்குலத்தில் பிறந்தவர்; பழநியில்

இருந்தவர். நிலக் கோட்டை ஜமீன்தார் பேரில் ஒரு காதல் நூல் பாடியுள்ளார். திருமலை நாயக்கர் காலம், நாகம கூளப்ப நாயக்கன் பேரில் **விறலி விடு தூது** என்ற நூல் இயற்றியுள்ளார்.

இவர் சீனக்கரைப் புகழ்ந்து பாடியுள்ள பாடல் ஒன்று.

அளிக்கொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிக்கொள் சீனக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளிக்குஞ் சோறுமென் புத்தியிற் செந்தமிழ்
தெளிக்குந் தோறெலாந் தித்தியா நிற்குமே.

அரசைக்குமன்—அரசுருக்குத் தலைவன்

## 233. சுப்பிரமணிய பண்டிதர் (சிதம்பரம்)

இவர் "ஞானவாசிட்டம்" என்னும் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் அளித்தவர்களுள் ஒருவர்.

இவர் சிதம்பரத்திலிருந்த முத்தைய ஞானியார் என்பவருக்கு மகனாகத் தோன்றியவர். மருத்துவத்திலும், தமிழ்ப் புலமையிலும் சிறந்து விளங்கியவர். வடமொழியில் உள்ள சிவரட்சாமிர்தம் என்னும் மருத்துவ நூலினைத் தமிழிலே மொழிபெயர்த்தார். இந்நூலுக்குப் பல புலவர்கள் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார்கள். பூபதி மாத்திரைக்கும் பரம சிவத்துக்கும் சிலேடையாக இவர் பாடிய பரமசிவ வணக்கம் வருமாறு:

"சுருதியைவெண் பொடிமணிகப் படிகமுடன்
நீலகண்டம் சுசிபொன் வில்லம்
பொருதனிவீ ரங்கனனற் பரை புரம்பெற்
றழலாடி உரக்கால் வீட்டில்
பொருது சன்மப் பிணிதீர்க்கும் பூபதிமாத்
திரைபோன்றிப் புடவி யெங்கும்
கருதரிய சுகமளிக்கும் பசுபதிதாட்
டுணைமலரைக் கருத்துள் வைப்பாம்."

## 234. சுப்பிரமணிய பாரதியார்

தாம் பிறந்த தேசம், வாழ்ந்த இடம், பழகும் மனிதர்கள் முதலிய தொடர்புகளால் ஒருவருடைய வாழ்க்கையில் சில பழக்கங்கள் அமைகின்றன. ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எட்டயபுரத்திற் பிறந்தவர். இவர் பிறந்த பாண்டி நாடு தமிழுக்கு உரிய நாடு. தமிழ் நாடென்று பழைய காலத்தில் அதற்குத் தான் பெயர். கம்பராமாயணத்தில் ஆஞ்சநேயர் முதலியவர்கள் சுக்கிரீவனால் தென் தேசத்துக்கு அனுப்பப்பட்ட போது அங்கே உள்ளவற்றைச் சுக்கிரீவன் சொல்லுவதாக உள்ள பகுதியொன்றுண்டு, அங்கே ஒரு பாட்டில்,

> "தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்
> தமிழ்ச் சங்கம் சேர்கிற் பீரேல்
> என்று மவனுறை விடமாம்"

என்று அவன் கூறியதாக இருக்கிறது. நீங்கள் பாண்டிய நாட்டை அடைந்தால், அங்கே உள்ள பொதியில் மலைக்கருகில் செல்லும் பொழுது போகும் காரியத்தை மறந்து விடக் கூடாது; ஏனென்றால் அம் மலையில் அகத்தியருக்குரிய தமிழ்ச் சங்கத்தை அணுகினால் தமிழ் நயத்தில் ஈடுபட்டு விடுவீர்கள்" என்று அவன் சொன்னதாகத் தெரிகிறது. இதனால் பாண்டி நாட்டின் பெருமை வெளிப்படுகிறதல்லவா?

பாரதியார் பிறந்த எட்டையபுர ஸமஸ்தானத்தில் பல வித்துவான்கள் இருந்தார்கள். அந்த ஸமஸ்தானத்து வித்துவானாகிய கடிகை முத்துப் புலவருடைய பெருமையை யாரும் அறிவார்கள்.

---

இது 1936—இல் அகில இந்தியக்காங்கிரஸின் பொன் விழாவில் சென்னைக் காங்கிரஸ் மண்டபத்தில் பாரதியாருடைய படம் திறக்கப் பட்ட போது ஐயரவர்கள் செய்த பிரசங்கம் (நினைவு மஞ்சரி .II)

அவருடைய மாணாக்கருள் ஒருவராகிய உமறுப் புலவரென்னும் முகம்மதிய வித்துவான் முகமத் நபியின் சரித்திரமாகிய சீறாப்புராணத்தை இயற்றி யிருக்கிறார். அந் நூல் ஒரு தமிழ்க் காவியமாக இருக் கிறது. எட்டையபுரத்தில் அங்கங்கே உள்ளவர்கள் தமிழ்ப்பாடல்களைச் சொல்லியும் கேட்டும் இன்புற்று வருபவர்கள். இதனால் பாரதியாருக்கு இளமை தொடங்கியே தமிழில் விருப்பம் உண்டாயிற்று. அது வர வர மிக்கது.

இவர் இளமையில் ஆங்கிலக் கல்வி கற்றார். தம்முடைய தமிழறிவை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் சேர்ந்து சில காலம் படித்தார். சிறு பிராய முதற் கொண்டே இவ ருக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாயிற்று. அக் காலத்திலேயே தேசத்தின் நிலைமை இவருடைய மனத்திற் பதிந்தது. தெய்வத்தினிடத்திலும், தேசத்தி னிடத்திலும், பாஷையினிடத்திலும் அன்பில்லாதவர் களைக் கண்டு இவர் மிக வருந்தினார். முயற்சியும் சுறு சுறுப்பும் இல்லாமல் வீணாகக் காலத்தைப் போக்கு பவர்களை வெறுத்தார். புதிய புதிய கருத்துக்களை எளிய நடையில் அமைத்துப் பாட வேண்டுமென்ற உணர்ச்சி இவருக்கு வளர்ந்து கொண்டே வந்தது.

இவர் சில காலம் சேதுபதி ஹைஸ்கூலில் பண்டிதராக இருந்ததுண்டு. பிறகு, சென்னைக்கு வந்தார்: இங்கே ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் இவரிடத்தில் ஈடுபட்டுச் 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியர்களுள் ஒருவராக இருக்கச் செய்தார். கட்டுப் பாடான வேலைகளைச் செய்வதிற் பிரியமில்லாத பாரதியார் அந்த வேலையில் அதிக காலம் இருக்க வில்லை.

சென்னையில் இவர் இருந்த காலத்தில், நான் இவரோடு பல முறை பழகியிருக்கிறேன். பிரசி

டென்ஸி காலேஜில் வாரந்தோறும் நடை பெறும் தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்கு வருவார்; பேசுவார்; புதிய பாட்டுக்களைப் பாடுவார். வருஷ பூர்த்திக் கொண்டாட்டங்களில் புதிய செய்யுட்கள் செய்து வாசிப்பார். ஒரு முறை ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் அச்சங்கத்தில் ஜி. ஏ. வைத்தியராமையர் பேசினார். ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயருடைய தமிழபி மானமும், தமிழ் வித்துவான்களை ஆதரிக்கும் இயல்பும் தெரியாத பலர், 'இவருக்குத் தமிழ் பாஷையில் பழக்கம் இல்லையே; தமிழில் என்ன பேசப் போகிறார்?' என்று நினைத்தனர். அவரோ "தமிழைப் பற்றி அதிகமாகப் பேசுவானேன்? உலகத் திலுள்ள பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு விளங்கும் திருக்குறளைத் திருவள்ளுவர் இயற்றிய பாஷை இந்தப் பாஷை. நவரஸமும் பொருந்திய இராமாயணத்தைக் கம்பர் செய்த பாஷை இது. எல்லோருடைய மனத்தையும் கரைத்து உருக்கித் தெய்வ பக்தியை உண்டாக்கும் தேவாரத்தை நாயன்மார்கள் இயற்றிய பாஷை இது. ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தத்தைப் பாடிய பாஷை இது" என்று உத்ஸாகத்தோடு பிரசங்கம் செய்தார். கேட்ட யாவரும் ஆச்சரிய முற்றார்கள். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த பாரதியார், அந்தப் பிரசங்கத்தில் மிகவும் ஈடுபட்டார். பின்பு கிருஷ்ணசாமி ஐயர் பாஷையின் பெருமையையும் தேசத்தின் பெருமையையும் வெளிப் படுத்தி யாவருக்கும் விளங்கும் படியான பாட்டுக் களைப் பாடியனுப்ப வேண்டுமென்று என்னிடம் சொன்னார். எனக்கு அவகாசம் இல்லாமையால் வேறொருவரை அனுப்பினேன். அவருடைய பாட்டுக்கள் அவருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. பிறகு பாரதியாரே அவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரது பிரசங்கத்தில் இருந்த கருத்துக்களே பாரதியார், "கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்பது போன்ற

பகுதிகளை அமைத்துப் பாடுவதற்குக் காரணமாக இருந்தன.

தேசத்தின் பெருமையை யாவரும் அறிந்து பாராட்டும் படியான பாட்டுக்களைப் பாட வேண்டுமென்ற ஊக்கம் இவருக்கு நிரம்ப இருந்தது. அதனால் இவர் பாடிய பாட்டுக்கள் மிகவும் எளிய நடையில் அமைந்து படிப்பவர்களைத் தம்பால் ஈடுபடுத்துகின்றன. இவர் உண்மையான தேச பக்தியுடன் பாடிய பாட்டுக்களாதலின் அவை இவருக்கு அழியாத பெருமையை உண்டாக்குகின்றன.

பாரதியார் தேசியப் பாட்டுக்களைப் பாடியதோடு வேறு பல துறைகளிலும் பாடியிருக்கிறார். இசைப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். இவர் சங்கீதத்திலும் பழக்கம் உடையவர். கவிகளின் தன்மையை உபமானமாக வைத்து ஒரு புலவர்,

''கல்லார் கவி போற் கலங்கிக்
கலைமாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான்றுறை
தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து
தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ள
இறுத்த தன்றே''

என்று சொல்லியிருக்கிறார். அதற்கேற்ப விளங்குபவை இவருடைய செய்யுட்கள். இப்பாட்டில், ''தேசத்து எல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ள'' என்றது இவருடைய பாட்டுக்களுக்கு மிக்க பொருத்தமுடையதாகும். (வீழ்ந்து-விரும்பி.)

பாட்டுக்களின் பாகம் ஐந்து வகைப்படும். அவை நாளிகேர பாகம், இக்ஷு பாகம், கதலீ பாகம், திராக்ஷாபாகம், இட்சீரபாகம் என்பனவாம். நாளிகேர பாக மென்பது தேங்காயைப் போன்றது.

தேங்காயில் முதலில் மட்டையை உரிக்க வேண்டும்; பிறகு ஓட்டை நீக்க வேண்டும்; அதன் பிறகு துருவிப் பிழிந்து வெல்லம் சேர்த்துச் சாப்பிடவேண்டும். இந்த வகையிலுள்ள பாட்டுக்கள் சில உண்டு. அதைப் பாடுபவர்கள் தம்முடன் அகராதியையும் எடுத்துக் கொண்டு போக வேண்டும். சில சமயங்களில் அவர் களுக்கே தாங்கள் செய்த பாட்டுக்களுக்கு அர்த்தம் விளங்காமற் போய்விடும்.

இக்ஷுபாகமென்பது கரும்பைப் போன்றது. கரும்பைக் கஷ்டப்பட்டுப் பிழிந்து ரஸத்தை உண்ண வேண்டும். கதலீபாகமென்பது வாழைப்பழத்தைத் தோலுரித்து விழுங்குவது போலச் சிறிது சிரமப் பட்டால் இன்சுவையை வெளிப்படுத்துவது. திராக்ஷா பாகம் முந்திரிப்பழத்தைப்போல எளிதில் விளங்குவது. க்ஷீரபால்பாகம் அதனிலும் எளிதில் விளங்குவது; குழந்தை முதல் யாரும் உண்பதற்குரியதாகவும் இனிமை தருவதாகவும் உடலுக்கும் அறிவுக்கும் பயன் தருவதாகவும் இருக்கும் பாலைப் போல் இருப்பது. பாரதியாருடைய கவிகள் க்ஷீரபாகத்தைச் சார்ந்தவை. சிலவற்றைத் திராக்ஷாபாகமாகக்கொள்ள லாம்.

ஆங்கிலம், வங்காளம் முதலிய பாஷைகளிற் பழக்கமுடையவராதலால் அந்தப் பாஷைகளிலுள்ள முறைகளை இவர் தம் கவிதைகளில் அமைத்திருக் கிறார். இவருடைய கவிதைகள் ஸ்வபாவோக்தி யென்னும் தன்மை நவிற்சி யணியை யுடையவை. பழைய காலத்தில் இருந்த சங்கப்புலவர்கள் பாடல் களில் தன்மை நவிற்சி தான் காணப்படும். அனாவசிய மான வருணனைகளும் சொல்லடுக்குகளும் கவியின் ரஸத்தை வெளிப்படுத்துவன வல்ல. சில காலங்களில் சில புலவர்கள் தங்கள் காலத்திலிருந்த சில ஜமீன் தார்கள், பிரபுக்கள் முதலியவர்களுடைய வற்புறுத்

தலுக்காக அனாவசியமான வருணனைகளை அமைத்ததுண்டு.

பாரதியாருடைய பாட்டுக்களில் தெய்வ பக்தியும் தேச பக்தியும் ததும்புகின்றன. தனித் தனியாக உள்ள பாட்டுக்கள் இயற்கைப் பொருள் களின் அழகை விரித்தும், நீதிகளைப் புகட்டியும், உயர்ந்த கருத்துக்களைப் புலப்படுத்தியும் விளங்கு கின்றன.

இவருடைய வசனத்தைப் பற்றிச் சில சொல்ல விரும்புகிறேன். பாட்டைக் காட்டிலும் வசனத்திற்குப் பெருமை உண்டாயிருப்பதன் காரணம் அது பாட்டை விட எளிதில் விளங்குவதனால்தான். பாரதியாருடைய பாட்டும் எளியநடையுடையது; வசனமும் எளிய நடை யுடையது. வருத்தமின்றிப் பொருளைப் புலப்படுத்தும் நடைதான் சிறந்தது. பாரதியாருடைய வசனம் சிறு வாக்கியங்களால் அமைந்தது. அர்த்த புஷ்டியுடையது. இவருடைய கவிகளின் பொருள் படிக்கும் போதே மனத்துக்குள் பதிகின்றது. வீர ரஸம், சிருங்கார ரஸம் ஆகிய இரண்டும் இவருடைய பாட்டுக்களில் அதிக மாகக் காணப்படுகின்றன. பாரதியார் அழகாகப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்.

இவருடைய பாட்டுக்கள் எல்லோருக்கும் உணர்ச்சியை உண்டாக்குவன; தமிழ் நாட்டில் இவ ருடைய பாட்டை யாவரும் பாடி மகிழ்வதனாலேயே இதனை அறிந்து கொள்ளலாம். கடல் கடந்த தேசங் களாகிய இலங்கை, பர்மா, ஜாவா முதலிய இடங் களிலும் இவருடைய பாட்டுக்கள் பரவியிருக்கின்றன. அங்கே உள்ளவர்களில் சிலர் இவரைப் பற்றி எழுத வேண்டுமென எனக்குக் கடிதங்கள் எழுதியதுண்டு. ''மணவைமன் கூத்தன் வகுத்த கவி, தளைபட்ட காலுடனேகட லேழையுந் தாண்டியதே" என்று

ஒரு புலவருடைய கவியைப் பற்றி வேறொரு புலவர் பாடியிருக்கிறார். ஸ்ரீராமனுடைய கவியாகிய ஆஞ்சநேயர் ஒரு கடலைத் தான் தாண்டினார்; மணவைக் கூத்தன் கவியோ ஏழு கடல்களையும் தாண்டி விட்டது. ஸ்ரீ ராமனுடைய கவி தளையில்லாமல் தாண்டியது; அங்ஙனம் செய்தது ஆச்சரியமன்று. இந்தப் புலவர் கவியோ, தளையுடைய காலோடு ஏழு கடலைத் தாண்டியது என்கின்றார். தளையென்பதற்கு விலங்கென்றும் கவிக்குரிய லக்ஷணங்களுள் ஒன்றென்றும் பொருள். இந்தப் பாட்டுக்கு இப்போது இலக்கியமாக இருப்பவை பாரதியாருடைய கவிகளாகும்.

பாரதியார் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஜனங்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்ற கொள்கையுடையவர்; தைரியமுடையவர். இவருடைய புகழ் தமிழ் நாட்டின் புகழாகும்.

## 235. சுப்பிரமணிய முனிவர்

திருவாவடுதுறைக் கோவையின் ஆசிரியராகிய சுப்பிரமணிய முனிவர் சிதம்பரத்தைச் சார்ந்த காட்டுமன்னார் கோயிலில், ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் கோயில் மேலைவீதியின் கீழ்ச்சிறகிலுள்ளதொரு வீட்டிற் கார் காத்த வேளாள வருணத்திற் பூநொடையார் கோத்திரத்தில் தோன்றியவர்; துறவறம் பூண்டொழுகியவர்; சித்தாந்த சைவர்; முருகக் கடவுளை உபாசித்து மந்திரசித்தி பெற்றவர். இவர் பிறந்த வருடமும், இவருடைய இல்லற வரலாறுகளும் இப்பொழுது தெரியவில்லை. ஆனாலும், விசுவாவசு வருஷம் [சாலிவாகன சகாப்தம் 1708, கொல்லமாண்டு 960-61; கி. பி. 1785-6] சித்திரை மாதம் பரிபூரணமான ஸ்ரீசிவ ஞான முனிவருடைய பிரிவையாற்றாது, "நினைத்தாற் சகிக்கப் போமோ"

என்னும் கீர்த்தனையை இயற்றியிருப்பதாலும், ஆவினன் குடிப் பதிற்றுப்பத்தந்தாதியை, பின்னர் கீலக வருஷம் [சாலி 1711; கொல்லம் 963-4; கி. பி. 1788-9] தைமாதத்தில் அரங்கேற்றியதாகத் தெரிகின்றமையாலும் இவர் இன்றைக்கு ஏறக்குறைய 200-வருடங்களுக்கு முன் வரையில் இருந்தாரென்று ஒருவாறு தெரிகின்றது.

**வித்தியாகுரு:** இவர், சிவஞான போதத்தின் திராவிட மகாபாஷ்ய கர்த்தராகிய திருவாவடுதுறை ஸ்ரீசிவ ஞான முனிவரிடம் தமிழ்மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்கள் பலவற்றையும், உரைநடைகளையும், சைவ சாத்திரங்களையும் முறையே கற்றுப் பயின்று அவருடைய மாணாக்கர்கள் பன்னிருவர்களுள் ஒருவராய்ச் செய்யுள் செய்தலிலும் மிக்க வன்மையுடையவராயினர். அம்மகானை வித்தியா குருவாகப் பெற்ற இவர் கற்ற முறையைச் சொல்லவும் வேண்டுமோ! இவர் கல்வி பயின்றது அப் பெரியோருடைய வாழ் நாட்களுட் பிற்காலம். அஃது இவர் தொட்டிக் கலையில் இருந்த காலமென்று தெரிகிறது. [தொட்டிக் கலையென்பது தொண்டை நாட்டிலுள்ள தோரூர்.] அவரிடம் இவருக்கிருந்த மெய்யன்பிற்கு எல்லை யின்று, அவர் மீது இவரியற்றிய "கருணை பொழி திருமுகத்தில்" "திண்ண வின்பச் சேவடியும்," "ஓதரிய வாய்மை" என்னுஞ் செய்யுட்களும், அவர் பரி பூரணமானது தெரிந்து ஒருவாற்றாலும் பிரிவாற்றாது வருந்தி இவ்ரியற்றிய, "நினைத்தாற் சகிக்கப்போமோ வென் சுவாமியை" என்னுங் கீர்த்தனையும் இதனை நன்கு புலப்படுத்தும். பின்னும் அவருடைய பிரிவாற் றாத இவர் தொட்டிக்கலைச் சிதம்பரேசர்திருக்கோயிற் சந்நிதி மண்டபத்தில் அவருடைய திருவுரு வமைப் பித்து அதனை நாள்தோறும் போற்றி வழிபட்டு வந்தனரென்றுஞ் சொல்லுவர்; இது மேற்கூறிய செய்யுட்களுள், "ஓரரிய வாய்மை" என்பதிலுள்ள

"அழகுபொலி கலைசைச் சிதம்பரேசுரரடிக்
கதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோரீ
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவோமே"

என்பதனால் தெரிகின்றது.

**ஞானகுரு:** திருவாவடுதுறை யாதீனத்தில் 13-ஆம் பட்டத்திருந்த அம்பலவாண தேசிகரிடத்துச் சைவ சந்நியாசமும், சிவதீக்ஷையும், ஞானோபதேசமும் பெற்றவர். இவர் இவைகள் பெற்றது, திருச்சிற்றம்பல தேசிகர் பெரிய பட்டத்திலும் அம்பலவாண தேசிகர் சின்னபட்டத்திலுமுள்ள காலமென்று தெரிகிறது. திருச்சிற்றம்பல தேசிகர் எப்பொழுதும் சிவாகம ஆராய்ச்சியையே செய்து வந்தாரென்றும், அதனால், அவர் செய்தற்குரிய காரியங்களிற் பெரும் பாலானவற்றை அவர் கட்டளையில் அம்பலவாண தேசிகர் செய்து வந்தாரென்றும் சொல்லுவர். இவர் திருச்சிற்றம்பல தேசிகர் மீது சிந்து முதலியன செய்திருத்தலும், இவரியற்றிய நூல்கள் வரைந்துள்ள ஏட்டுப் புத்தகங்கள் சிலவற்றில், 'திருக்கைலாய பரம் பரைத் திருவாவடுதுறை நமச்சிவாய குரு மரபில் அம்பலவாண தேசிகருடைய ஞான புத்திரனான சுப்பிரமணிய தம்பிரான் செய்தது இந்நூல்' என்று வரையப்பட்டிருத்தலும் இதற்குத் தக்க சான்றாகும். ஞானாசிரியரை ஞானபிதா வென்றலும். ஞானோபதேசம் பெற்றுக் கொண்ட சிஷ்யரை ஞான புத்திரர் என்றலும் மரபு.

**கல்வி வளர்ச்சி:** ஆதீனத்தில் தம்மைப் போன்றவர் களும் தமக்கு மேலானவர்களுமாக இருந்த பல கல்வி மான்களோடு இடைவிடாது பழகுதலும், மாணாக்கர் களுக்குப் பாடஞ் சொல்லுதலும் அவைக்களத்திற் பிரசங்கித்தலும் ஆகிய இவைகள் புண்ணிய மிகுதி பற்றி இவர்க்கு வாய்த்திருந்தனவாதலால், இவ

ருடைய புலமை மேன்மேலும் மாட்சிமையுற்று விளங்கிற்று; "அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற் செவ்வி தினுரைப்ப வவ்விரு காலும் மையறு புலமை மாண்புடைத் தாகும்" என்றாரன்றோ பெரியோர்.

**விசேட குணங்கள்:** வித்தியா குருவிடத்தும் ஞானாசிரியரிடத்தும் இடைவிடாத மெய்யன்புடைமை, சிவபக்தி, அடியார் பக்தி, கல்விமான்களை ஆதரித்தல், நன்றி மறவாமை, மேன்மேலும் நூல்களை ஆராய்தல், அழுக்காறின்மை, பிறர்பாலுள்ள குணங்களைப்பாராட்டல், ஸ்தல யாத்திரையில் விருப்பம், யாவர்க்கும் பொருள் விளங்க எளிய நடையாக விரைவில் எவ்வகையான செய்யுட்களையும் செய்யும் வன்மை, சங்கீதப் பயிற்சி ஆகிய இவைகள் இவர்பால் அமைந்திருந்த விசேட குணங்கள். இவர் இவற்றை யுடையரா யிருந்தமை இவருடைய சரித்திரத்தையும் இவரியற்றிய செய்யுட் களையும் உற்று நோக்குவோர்க்கு நன்கு விளங்கும்.

**சிறப்புப் பெயர்:** கேட்டவர்கள் வியக்கும்படி மிகவும் இனிமையான செய்யுள் செய்தலில்வல்லுநராயிருந்தது பற்றி, இவர் மதுர கவியென்று ஆதீனத்திற் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். தொட்டிக் கலையில் பெரும்பாலும் இருந்தமையின், தொட்டிக் கலைச் சுப்பிரமணியமுனிவரெனவும் தொட்டிக்கலைச் சுப்பிர மணிய தம்பிரானெனவும் இவர் பெயர் வழங்கும்.

இவர் காலத்துத் தமிழ் வித்துவான்கள் சிலர் பெயர் தெரிகிறது. சிவஞானமுனிவருடையமாணாக்கர் பன்னிரு முனிவருள் இவர் ஒருவரென்று தெரிதலால், அம்முனிவரும், அவருடைய மற்ற மாணாக்கர்களாகிய இலக்கணம் சிதம்பரநாத முனிவர், கச்சியப்ப முனிவர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, காஞ்சீபுரம் சரவண பத்தர் (ஏனை எழுவர் பெயருந்தெரிய வில்லை.) முதலியவர்களும், சென்னையில் ஸ்ரீ கச்சி

யப்ப முனிவர் விநாயக புராணமியற்றும் போது இருந்தவரென்று சொல்லப்படும் சீகாழி வடுகநாததேசிகரும் இவர் காலத்திருந்த தமிழ் வித்துவான்களென்று தெரிகிறது.

**ஆதரித்த பிரபுக்கள்**: தொட்டிக்கலைக் கேசவமுதலியார், வேதாசல முதலியாரென்னுமிருவரும் இவரை மிகப் பாராட்டி வந்ததன்றி அவ் ஊரிற் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ சிதம்பரேசர் சந்நிதியினருகே மடமொன்று கட்டுவித்து அதில் இருக்கும்படி செய்து ஆசிரியராகக் கொண்டு குறிப்பறிந்தொழுகி மிக்க பணிவுடன் ஆதரித்து வந்தார்கள். "தொட்டிக் கலைக் கேசவன்மெய்ப் புகழ்போல் விளங்குங் கதிர்ப் பிறையை" என்றும், "வேதாசலத்தின் புகழ்போல் விளங்குக வெண் சங்கமே" என்றும் தாம் பாடிய கலைசைக் கோவைச் செய்யுட்களில் இவர் அவர்களைப் பாராட்டியிருத்தல் இதனை வலியுறுத்தும். அவ்வூரில் இவரிருந்த மடம் இப்பொழுதும் சாமியார் மடமென்று வழங்கப் படுகின்றது.

**இயற்றிய நூல்கள்**: இவரால் இயற்றப்பட்ட நூல்கள் பல. சில பழைய ஏட்டுச் சுவடிகளில் எழுதப் பெற்றிருந்த குறிப்புக்களாலும் பிறவற்றாலும் இவர் இயற்றியனவாக இப்பொழுது தெரிந்தவை வருமாறு:

1. கலைசைக் கோவை
2. கலைசைச் சிலேடை வெண்பா
3. கலைசைச் சிதம்பரேசர் சந்நிதி முறை (இதிற் பத்தொன்பது பிரபந்தங்கள் உண்டு.)
4. கலைசைச் சிதம்பரேசர் வண்ணம்
5. கலைசைச் சிதம்பரேசர் பஞ்சரத்தினம்
6. கலைசைச் சிவகாமியம்மை பஞ்சரத்தினம்
7. கலைசைச் சிதம்பரேசர் பரணி
8. கலைசைச் சிதம்பரேசர் கட்டியம்

9. திருவாவடுத்துறைக் கோவை
10. திருக்குற்றாலச்சித்திரசபைத்திருவிருத்தம்
11. பழனிக் குழந்தை வேலர் பஞ்சரத்தின மாலை
12. ஸ்ரீ சுப்பிரமணியர் திருவிருத்தம்
13. திருத்தணிகைத் திருவிருத்தம்
14. வட திருமுல்லை வாயிற் கொடியிடையம்மை பிள்ளைத் தமிழ்
15. ஆயலூர் முருகர் பிள்ளைத் தமிழ்
16. திருச் செந்திற் சந்தவிருத்தம்
17. ஆவினன் குடிக் கைலாய நாதர் பதிற்றுப் பத்தந்தாதி
18. திருமாளிகைத் தேவர் திருவிருத்தங்கள்
19. திருச்சிற்றம்பல தேசிகர் சிந்து
20. திருச்சிற்றம்பலதேசிகர் சந்த விருத்தம்
21. அம்பலவாண தேசிகர் பஞ்சரத்தினமாலை
22. அம்பலவாண தேசிகர் ஆனந்தக் களிப்பு
23. அம்பலவாணதேசிகர் வண்ணம்
24. சிவஞான முனிவர் துதி விருத்தங்கள்
25. சிவஞான முனிவர் கீர்த்தனை

இவற்றுள் ஸ்ரீ சுப்பிரமணியர் திருவிருத்தமும், திருத்தணிகைத் திருவிருத்தமும் தம்பால் அன்புடைய இருவர்களுக்கு முறையேநேர்ந்திருந்தகுட்டநோயையும் அந்தகத் தன்மையையும் நீக்கியருளும்படி முருகக் கடவுளைப் பிரார்த்தித்து இவராற் பாடப்பட்டன வென்பர். கலைசைக் கோவையும், திருவாவடுதுறைக் கோவையும் பல வகையில் ஒப்புடையனவாக விளங்குகின்றன.

இவருடைய வரலாறு திருவாவடுதுறை யாதீனத்தில் 16 ஆம் பட்டத்திலிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்அவர்கள், மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், தொட்டிக்கலைக் கேசவ முதலியாருடைய பரம்பரையினரும் சென்னை ஐயாப்பிள்ளை

தெருவில் இருப்பவருமாகிய திரு கிருஷ்ணசாமிமுதலி யார் அவர்கள் முதலியோரும் வேறு சிலரும் கூறிய செய்திகளாலும், இவரியற்றிய நூல்களாலும், அவை வரைந்துள்ள கையெழுத்துப் பிரதிகளிலிருந்த குறிப் புக்களாலும் ஒருவாறு தெரிய வந்தது.

**சஞ்சரித்த இடங்கள்:** இவர் இடை இடையே சென்று சிற்சில வருடங்கள் தொட்டிக் கலையில் இருந்து வந்த தன்றித் திருச்செந்தூர், திருக்குற்றாலம், பழநி, திருத் தணிகை, வட திருமுல்லைவாயில், திருவொற்றியூர், ஆயலூர், ஆவினன் குடி, திருவல்லிக்கேணி முதலிய ஸ்தலங்களுக்கும் யாத்திரையாகச் சென்று அவ்வவ் விடத்தே சிலசில நாள் தங்கி வந்தனர். இதனை இவரி யற்றிய பிரபந்தங்களும் தனிச் செய்யுட்களும் தெரிவிக் கின்றன.

இவர் அவ்வச்சமயங்களில் பாடிய தனிப்பாடல் களும் கீர்த்தனைகளும் பல. ஆதீனத்தில் தேவாரப் பணிவிடை செய்யும் ஓதுவார்களுள் **குருசாமி** ஓதுவா ரென்று ஒருவர் இருந்தார். அவர் இசைப்பயிற்சியும் இனிய சாரீரமும் உடையவர்; இவர்பால் அன்பு பூண் டவர்; இவரியற்றிய **பழநிக் குழந்தைவேலர் பஞ்சரத்தின மாலை** முதலிய பிரபந்தங்களை இசைவரம்புடன் பாடி உவப்பித்து வருபவர். அவர் வழக்கப்படி ஒருநாள் அம்பலவாண தேசிகருடைய பூஜா காலத்தில் மற்றவர் களோடு சேர்ந்து தேவாரங்களைப் பண்ணுடன் ஓது வாராயினார். அப்பொழுது தரிசனத்திற்குச் சென்ற இவர் அவருடைய இனிய சாரீரம் மற்றையோர் சாரீரங்களிலும் சிறந்து விளங்குதலை அறிந்து,

### கட்டளைக் கலித்துறை

"ஒருசாமி வாழ்திருக் கோமுத்தி யூர்தனி லுற்பவித்து
வருசாமி யெங்கள் வயித்திய லிங்கம் வலம்புரிந்து
தருசாமி முத்தமிழ்ச் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
குருசாமி தீங்குர லெந்நாளுங் கோகிலங் கோகிலமே"

என்னும் செய்யுளை இயற்றிப் பூசை மடத்திலிருந்து வெளிப்பட்ட ஆசிரியர்க்கு விண்ணப்பஞ் செய்து உவப்பித்தனர். வைத்தியலிங்கமென்பது குருசாமி யோதுவாருடைய தந்தையார் பெயர்.

## 236. சுப்பையர்

இவர் திருவேரகப் புராணத்திற்கு உரை செய்தவர். இவர் வீரசைவர் என்றுதெரிகிறது. திருவேரகப் புராணம் அரங்கேற்றிய காலம் பின்வரும் செய்யுளால் தெரிகின்றது. இவரையே திருவேரகப் புராணத்தின் நூலாசிரியர் என்றுங் கூறுவர்.

### விருத்தம்

*செந்திரு விளங்கு நற்கலியுகத்திற்*
*சேர்ந்திடு சகாத்தமா யிரத்தின்*
*வந்தெழு நூற்றின் முப்பத்தி னான்காய்*
*வயங்கிடு மாங்கில வருடஞ்*
*சந்தமா மகரத் திங்கள் பூசத்திற்*
*றயங்கிய வுவாவெனும் நாளிற்*
*கந்தமா புரத்தின் மான்மியப் பொருளைக்*
*களிப்புற வுரைத்தன னன்றே.*

## 237. சுழிகைப் புலவர்

இவர் **திருச் சுழியற் புராணம்** செய்தவர்; இவர் சுப்பிரதீபக் கவிராயருடைய வம்சத்தினர்; [சுழிகை—திருச்சுழியல்]

இவருடைய இயற்பெயர் தெரியவில்லை.

## 238. ஆளைச் சுப்பராய நாயகர்

இவர் பெரிய புராணத்திற்குப் பொழிப்புரையொன்று இயற்றியிருக்கிறார். இவர் செய்த சில பதிகங்களும் உண்டு.

## 239. செகநாதர்

இவர், சிவப்பிரகாசத்திற்கு உரைச்செய்ததாகக் காவை அம்பலவருடைய உரைச்சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்டிருத்தலின் இவர் அவருக்கு முற்பட்டவராக நினைக்கப் படுகிறார்.

## 240. செங்கற்பட்டு வைத்தியர் வேங்கடாசல முதலியார்

இவர் ஞானவாசிட்டம் என்னும் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தவர்களுள் ஒருவர்.

## 241. செல்லி நகர்ப் பெரும் பற்றப் புலியூர் நம்பி

இவர் பாண்டிவள நாட்டிலுள்ள செல்லி நகரில் அந்தணர் குலத்தில் ஸ்மார்த்தர்களாகிய வேம்பத்தூர்ச் சோழியர் வகுப்பில், கௌணிய கோத்திரத்தில், சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராசருடைய திருவடிக்கண் மிகுந்த பக்திச் செல்வம் வாய்ந்த குடும்பத்தில் தோன்றியவர். இவர்க்குப் பெரும்பற்றப் புலியூர் நம்பி யெனவும், இவர் பரம்பரையில் பிறந்தவரும், மதுரைத் திருப்பணிமாலையில் கூறப் பெற்றவருமாகிய ஒருவருக்கு ஆனந்த தாண்டவ நம்பி எனவும் பெயர்கள் அமைந்திருத்தலையும் திருவாலவாயுடையார் திருவிளையாடல் கடவுள் வாழ்த்தில்பெரும்பற்றப்புலியூர்த் துதி முதலியன அமைந்திருத்தலையும் உற்று நோக்குகையில் இவர் குடும்பத்தார்கள் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராசர் திருவடிக்கண் மிக்க அன்புடையவர்கள் என்பது வெளியாகின்றது.

இவர் பெயர் தில்லை நம்பியெனவும் வழங்கும், வேம்பத்தூர்ச் சோழியர்களில் அநேகருடைய இயற் பெயர்களின் பின் நம்பியென்பது சார்த்தப்பட்டுப் பண்டைக் காலத்தில் வழங்கி வந்ததென்பதை

அவர்கள் வீட்டிலுள்ள பழைய ஓலைச் சுவடியின் மூலம் அறிய முடிகிறது.

செல்லிநகர் என்பது செல்லி நாடென்றும் பரசுராம சதுர்வேதிமங்கலம் என்றும் செய்யுட்களில் வழங்கப்பெறும். அக்கிரகாரத்தைச்சதுர்வேதிமங்கலம் அல்லது சதுர்வேதமங்கலம் என்றல் மரபு; இது பழைய சிலாசாசன முதலியவற்றாலும் விளங்கும். இந்நகர், இக்காலத்தில் பனையூர் என்று வழங்கப்படுகின்றது. இது சங்கர நயினார் கோயில் தாலுகா, கரிவலம் வந்த நல்லூர்க்குச் சமீபத்தில் உள்ளது. செல்லியாரம்மை என்று பெயருள்ள துர்க்காதேவியைத் தனக்கு அதிதேவதையாக உடைமையின், இவ்வூர் செல்லி நகரென்று பெயர் பெற்றதென்று சொல்லுகின்றனர்.

இவர் வேளாளரிடம் அன்புள்ளவர் என்பதை "புனிதவே ளாண்குலத்தோர்" (திருவிளையாடல் 59-11) என்ற அடியால் அறியலாம்.

பாண்டியர்களில் சிலரைத் தெய்வப் பாண்டியரெனப் பழைய நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும் கூறுதல் மரபு. இவர் அக்கூற்றைத் தழுவியே "தெய்வப் பாண்டியனென்று முடிசூடி," "தெய்வ வானவவழுதி" எனக் கூறுதல் காண்க. இவரால் இயற்றப்பட்ட நூல் **திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.**

இவரது ஊர் செல்லி நகராக இருந்தாலும், திருவிளையாடற் புராணத்தை இயற்றுங்காலத்து இவர் இருந்த இடம், கார்வளங் கொண்ட மண்டலத்திற் கப்பிஞ்சி நாடென்னும் பெயரையுடைய சிறு நாடு என்று தெரிகின்றது; இதனை "கார்வளங் கொண் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டுறைத்தோன்" என்னும் நூற்சிறப்புப்பாயிரத்தாலுணர்க. கார்வளங் கொண் மண்டலமென்றதை மதுரைக்குக் கிழக்கேயுள்ள தான

மமைக்குப் புணை கொடுத்த மங்கல நாடென்று சொல்லுகின்றனர்.

"திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்" என்னும் நூலை ஆக்குவித்தோனாகிய பாண்டியன் ஒருவன் மிக்க சிறப்புடன் இந்நூலை அரங்கேற்றுவித்துப் பல்லக்கு முதலியவிருதுகளையும், பல இரத்தினாபரணங்களையும் கொடுத்தளித்தான் என்றும், அப்பொழுது இவர் மகிழ்ந்து, "பல்லக்கு மேலேறி" என்னும் வெண்பாவைப் பாடினார் என்றும், பின்னர் மகிழ்ந்து இவருடைய சனன பூமியாகிய செல்வி நகரையும், அதனைச் சார்ந்த ஊர்களையும் இவரும் இவர்பரம்பரையோரும் அனுபவிக்கும்படி முற்றூட்டாகக் கொடுத்தானென்றும், அது பற்றிச் செல்வியூரும் அதனைச் சார்ந்த ஊர்களும் செல்வி நாடு என்று வழங்கப்பெற்று வந்தன என்றும், இவர் பரம்பரையோர் மிகுந்த செல்வமுடையவர்களாகிப் பல தருமங்களைச் செய்து விளங்கினார்களென்றும் சொல்லுகின்றனர். இதனை,

"கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்வி
நாடன் கவுணியர் கோன்
நன்னர்க ளெண்ணிய வானந்த
தாண்டவ நம்பிகற்பாள்
தென்னவர் போற்றிய வங்கயற்
கண்ணம்மை செல்விதிருச்
சன்னிதிக் கோபுரங் கட்டினடம்மந்
தமைக்க வென்றே"

என்னும் மதுரைத் திருப்பணிமாலைச் செய்யுளும் வலியுறுத்துகின்றது. (கற்பாள்-மனைவி)

**காலம்:** மேற்கூறிய செய்யுளிற் கூறப்பட்டுள்ள ஆனந்த தாண்டவ நம்பி அம்பிகையின் சந்நிதிக் கோபுரம் கட்டுவித்த காலம் சாலிவாகன சகாப்தம் 1150 (கி.பி, 1227-8; கொல்லம் 402-403) என்று மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றமையால்,

ஆனந்த தாண்டவ நம்பி என்பவர், இன்றைக்கு 700 வருடங்களுக்கு முந்தியிருந்தார் என்றுமட்டும் ஒருவாறு தெரிகின்றது. அதற்கு முன், இவர் காலம் இவ்வளவின தென்று தெரியவில்லை.

**ஞானாசிரியர்:** சிதம்பரம் மாளிகை மடத்தி லிருந்த வெண்காடருடைய சிஷ்யராகிய விநாயகர் என்பவர் இவருடைய ஞானாசிரியர். இதனைத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணகடவுள் வாழ்த்து, 23-ஆம் செய்யுளாலுணரலாம். இங்கேகூறிய மாளிகை மடத்துத் தலைவரொருவர் **வேதாரணிய புராணப்** பாயிரத்திலும் **திருக்கானப்பேர்ப்புராணப்**பாயிரத் திலும் துதிக்கப்பெற்றுள்ளார்.

**குணவிசேடங்கள்:** திருவாலவாயுடையார் திரு விளையாடற்புராண ஆராய்ச்சியால் விளங்கிய ஆசிரி யருடைய குணவிசேடங்கள் பல; அவை: வேதாகமங் களில் மிக்க பிரீதியுடைமை, வடமொழிப் பயிற்சி, தமிழ்ப்பாஷையில் மிக்க அன்பு, தமிழில் ஐந்திலக்கண வுணர்ச்சி, சங்கத்தமிழ் நூல் முதலியவற்றிலும் பழையவுரைகளிலும் தேவாராதிகளிலும், திவ்யப்ரபந் தங்களிலும் மிக்க பயிற்சி, நடுவுநிலைமை, எல்லா வருணத்தாரிடத்தும் எல்லாச் சாதியாரிடத்தும் அன் புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, சிவசின்னங்களில் அன்புடைமை, தம்முடைய கருத்தைப் பிறர் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் செய்யுள் செய்யும் வன்மை, அங்ஙனம் செய்யும் செய்யுட்கள் படிப்பவர் களுடைய மனத்தைக் கவரும்படி இடத்துக்கேற்ற சந்தங்களில் அவற்றை அமைத்தல், பலவகைத் துதி செய்யும் அழகு, வடநூற்கருத்துக்களை அங்கங்கே யமைத்தல்,பிறரை நல்வழிப்படுத்த நினைத்தல்,சரிதம் கூறுகையில் பரம கருணாநிதியாகிய சிவபெருமானு டைய திருவருளின் பெருமையை நினைந்துநினைந்து மனமுருகி இடையிடையே செயலற்றிருத்தல் என்னும்

இவையும் பிறவுமாம். இங்கே எடுத்துக்கூறியவையெல்லாம் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராண அரும்பத முதலியவற்றின் அகராதியைப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

## 242. செவ்வூர்க் கவிராயர் பண்டாரம்

இவர் செவ்வூர்ச் குமாரசாமிக் கவிராயரின் புதல்வர். இவர் ஸ்ரீ ரகுநாத சேதுபதி காத்த தேவர் புதல்வர் ஸ்ரீ விசயரகுநாத சேதுபதி காத்த தேவர் மீது **ஐந்திணைக் கோவை** நூலொன்று பாடிக் கோனார்பட்டென்னும் கிராமம் பெற்றனர். இதற்குப் பட்டயமுண்டு.

## 243. செவ்வூர்க் குமாரசாமிக் கவிராயர்

இவர் தில்லையாடியா பிள்ளையின் புதல்வர்; மிதிலைச் சிற்றம்பலக் கவிராயரின் கனிஷ்டசகோதரர். இவர் முப்பது பிராயம் வரையில் தமிழ்ப் படிப்பின்றி இருந்து ஒரு நாள் ரகுநாத சேதுபதி 'நெல்லுடன் பிறந்ததோ?' என்ற இகழ்ச்சிக் குறிப்பையறிந்து, திருவாவடுதுறையை அடைந்து படித்துத் தேர்ச்சியடைந்து, மீட்டும் சேதுபதியின்பால் சென்று, அவர் மீது தளசிங்கமாலை பாடி நன்கு மதிக்கப் பெற்றுச் செவ்வூர் நன்செய் முழுவதையும் நன்கொடையாகப் பெற்றனர். அவர் செய்த செய்யுட்கள் பல.

இவர்மீது திருவாவடுதுறையார் செய்த பாடல்:-

விரும்பாக மச்சைவச் சிற்றம்பலந் தம்பி மேருவையும்
துரும்பாக வெண்ணுங் குமார சுவாமி சொரிகவின்பா
கரும்பாக வின்பஞ்செய் செம்பாக சாரங் கனிந்துரைப்பத்
தரும்பாக வினிவைச் சாறாகு மற்றவர் தங்கவியே.

(தளசிங்கமாலை, 30)

இவருக்குக் கவிராசரென்று ஒரு பிள்ளையுண்டு.

தனஞ்சேரு மல்லைக் கவிராசன் கோவைத் தமிழ்ப்புனைவிற்
பனஞ்சேர் விசய ரகுநாத சேது பதிவரைவாய்
இனஞ்சேர் செவ்வூரை படப்புர மீந்தன னிதேதஞ்
செய்வோர்
மனஞ்சேர் பசுவை மறையோரைக் கங்கையின்
மாய்ப்பவரே.

## 244. செவ்வூர் வெறி மங்கைபாகக் கவிராயர்

செவ்வூர் சிவகங்கைசமஸ்தானத்தைச்சார்ந்தது. மங்கைபாக ரென்பது பிரான் மலைச் சிவபிரான் பெயர். இவர் தமிழ் இலக்கண இலக்கியத்திலும் செய்யுள் செய்தலிலும் மிக்க வன்மையுடையவராக இருந்தும் ஒருவரையும் மதியாமல் பைத்தியம் பிடித்தவர் போலவேயிருந்து மனம் போனவாறே யலைந்து திரிந்தது பற்றி இவர் இப்பெயர் பெற்றார். ஒரு காலத்தில் சிவகங்கைச் சீமையையாண்ட அரசரொருவரிடம் சென்றபொழுது ''இளித்தவாயா'' என்று அவரைக்கூறி, சினந்து நோக்கிய பிரதானி முதலியவர்களுடைய கடுமைக்குச் சிறிதும் அஞ்சாதவராகி 'நரசிங்க மூர்த்தியென்று மகாராஜாவைச் சொன்னே'னென்று அச்சொல்லுக்குப் பொருள் சொல்லி மகிழ்வித்தனர். இவர் ஒருமுறை சிவகங்கை மகாராஜாவைப் பார்த்த காலையில் அவர், 'நீரெங்கே வந்தீர்' என்று கேட்ப மீனாட்சி தரிசனத்துக்குப்போய் வந்தேனென்பதையுட்கொண்டு 'உம்முடைய மகளைப் பார்த்தற்குப் போய் வந்தே'னென்று கூறி முதலில் அவரை மயங்குவித்துப் பின் அதன் பொருளை விளக்கினாராம்.

## 245. செவ்வைச் சூடுவார்

இவர் வேம்பத்தூர்ச் சோழியப் பிராமண வகுப்பைச் சார்ந்தவர். வேம்பத்தூர் என்பதுபாண்டிய நாட்டில் மதுரைக்கு வடகிழக்கே இரண்டுகாத தூரத்தில் வைகை நதியின் வடகரையில் உள்ளது.

இவ்வூர் பழைய காலத்தில் வேம்பற்றூர் என வழங்கப் பெற்றதாகத் தெரிகிறது. சங்கப் புலவர்களுள் ஒருவரான வேம்பற்றூர்க் குமரனார் என்பவர் இவ்வூரினராகவே கருதப்படுகின்றார். இவ்வூரிலுள்ள வித்துவான்கள் பற்பல நூல்களை இயற்றித் தமிழன்னைக்கு அணிவித்து வந்துள்ளார்கள்.

பாகவதமும் செவ்வைச் சூடுவாரே இயற்றியது என்பது கர்ண பரம்பரையாக வழங்கிவரும் பாடலாலும் அறியப்படும்.

திருமருவு பஞ்சலக் கணவேலை பொங்கிச்
செழிக்குமிரு நிதிசெழிக்கும்
தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
சிறந்தசெவ் வைச்சூடுவார்
சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்
துளங்கும்வா சிட்டமதனைச்
சொல்லினா ராளவந் தான்மாத வப்பட்டர்
சொன்னதிரு விளையாடலும்
............................புகழ் சவுந்தரிய லகரி
பெருமைமிகு கவிராச பண்டிதர் புகன்றனர்
ப்ரதாபமிகு திருநெல்வேலிப்
பெருமாளையன் சொன்ன நெல்லையின் கோவை
பிரபந்த வகை பெருகவே''

இவருக்கு மாதவபண்டிதர் என்னும்மற்றொரு பெயருமுண்டு.

''கதிக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும் பாகவதக் கதையை முன்னம்
மதிக்குமுயர் வடமொழியாற் புனைந்தருளல் வியாதமுனிவரனே மீள
உதிக்குநிம்பை மாதவப்பண் டிதச்செவ்வைச் சூடியென உலகு போற்ற
விதிக்குமறை அவர்குலத்திற் றோன்றியிருந் தமிழாலும் விளம்பினானே.''

என்னும் மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் பாகவத ஏட்டுப் பிரதிகளில் காணப்படும் சிறப்புப்பாயிரச் செய்யுளால்

அறியப்படும். இவர் கௌண்டின்ய கோத்திரத்தினர் என்பது தெரியவருகிறது. இவருடைய காலம் முதலி யன தெரியவில்லை.

### நூற் பெருமை

சுழித்து நல்லமு தொழுகியஞ் சுகமுகஞ் சேர்ந்து
தழைத்த நான்மறைத் தடஞ்சினைக் கற்பக தருவிற்
பழுத்து திர்ந்தது பரமபா கவதமென் றிசைக்கும்
விழுப்பெ ருங்கனி நுகர்ச்சியே விரும்புவார் மேலோர்.

## 246. சென்ன மல்லையார்

இவர் சிதம்பரம் பச்சைக்கரந்தையர் மடத்தைச் சார்ந்தவர். **சிவசிவ வெண்பா** என்ற நூல் அரங்கேற்றிய காலம் சகம் 1690 (கி. பி. 1767-78) என்று சிறப்புப் பாயிரம் தெரிவிக்கின்றது. இப்புலவர் வீரசைவர் ஆதலின் சிவசிவா என்ற முன்னிலையமைத்து, சிவ சிவ வெண்பா என்ற நூலைப் பாடியுள்ளார். இவர் பல நூற் பயிற்சியுடையவர். இவர் சிவசிவ வெண்பா நூலில் குறளுக்கு உதாரணமாகக்காட்டும் வரலாறுகள் இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களி லிருந்தும் பல தலபுராணங்களிலிருந்தும் எடுத்துக் கொண்டவை. இவர் சிவசிவவெண்பாப் பாடல் களுக்குப் பல சைவ புராண வரலாறுகளை உதாரண மாகக் காட்டியுள்ளாராயினும், பாரத, பாகவத, இராமாயண வரலாறுகளே அதிகமாகக் காணப்படு கின்றன. ஆதலின் இவர் வீரசைவராயினும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் குறளின்படி ஒழுகுபவரென்று தெரிகிறது. இவர் நூல் இயற்றிய காலம் முதலியவற்றைக் கீழ்வரும் செய்யுள் தெரிவிக்கின்றது.

"ஆயிரத் தறுநூற் றொன்பது பத்தாம்
ஆண்டுசெல் சகாப்த நாலிதனில்
மாயிரு ஞாலத் ததிகமாந் தில்லை,
மன்றில்வாழ் சென்னமல் லையர்
பாயிருள் துரக்கும் பரிதிபோற் பாவப்
படரகற் றிடுஞ்சிவ வெண்பாத்
தீயவை போக்கிப் பரகதி சேரச்
செப்பினன் தெளிதவத் தவர்க்கே".

## 247. சென்னைத் தாண்டவராய முதலியார்

சில தமிழ் நூல்கள் இவரால் ஆராய்ந்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டும், சிலநூல்கள் நூதனமாக இவரால் இயற்றப்பட்டும் வெளிவந்துள்ளன. அவற்றுள்,

கி. பி. 1831 சாலிவாகன சகம் 1753-இல் நிகழுங் கர வருடத்தில், திருக்குறள் மூலமும், நாலடி மூலமும் அச்சிட்டிருக்கிறார்.

## 248. சேக்கிழார்

பெரியபுராண ஆசிரியர் இவர்; அநபாய சோழன் காலத்தில் இருந்தவர். பெரிய் புராணத்தை இயற்றும் படி இவரை அவ்வரசன் கேட்டுக் கொண்டான். புராணத்தில் இவர் அவனைப் பாராட்டியிருக்கிறார். இவருடைய முயற்சியினால் பலதர்மங்களை அரசன் செய்வித்தான், திருநாகேச்சுரத்தில் இவரது பிம்பமும், இவர் பெயருடைய மண்டபம் ஒன்றும் இருக்கின்றன. இவர் அவதரித்த குன்றத்தூரில் திருநாகேச்சுரமென்னும் ஆலயமொன்று இவராற் கட்டுவிக்கப் பட்டது. தொண்டை நாட்டில் இவருக்கு விசேட அன்பு உண்டு. பெரியபுராணத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் தொண்டைநாட்டின் சிறப்பை மிக விரிவாக வர்ணித்திருக்கிறார். திருவாவடுதுறை ஸ்ரீசிவஞான யோகிகள் அதை மிகவும் பாராட்டியுள்ளார்.

## 249. சேதிராயர்

**திருவிசைப்பா** இயற்றிய ஆசிரியர்களில் ஒன்பதாவதாக விளங்குகின்றார் இவர். இவர் சேதிநாட்டை ஆண்ட குறுநில மன்னர். இந்த நாடு தஞ்சைமாவட்டிற்கும், தென்னார்க்காடு மாவட்டத்திற்கும் நடுவில் உள்ளது. சேதி நாட்டின் தலைநகரம் திருக்கோவலூர், கிளியூர் என்பன. கிளியூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர் சேதிராயர். சேதிராயர் தம் முன்னோர்களைப் போலவே சிவபக்தி, அடியார் பக்திகளில் சிறந்து விளங்கினார், பல சிவதலங்களுக்குச் சென்று வழிபட்டார். இவர் பாடிய திருவிசைப்பா பெற்ற தலம் கோயில் ஒன்றே. [கோயில்-சிதம்பரம்]

"சேலு லாம்வயல் தில்லையுளீர் உமைச்
சால நாள் அயற் சார்வதி னால் இவள்
வேலை யார் விட முண்டுகந் தீரென்று
மால தாகுமென் வாணு தலே.

## 250. சேந்தனார்

**திருவிசைப்பா** ஆசிரியர்களுள் ஒருவர் இவர். **திருப்பல்லாண்டு** இயற்றியவரும் இவரே. நாங்கூர்த்தலைவர். இவருக்குத் திருவெண்காடருடைய பாடலால் தளை நீங்கியது; (சோழ மண்ட. 62; சோழ மண்ட. 36; திருக்களிற்றுப்படியார் 53.)

**திருவெண்காடர்** சரித்திரத்தில் இவர் சரிதம் காணலாம்.

**திருக்களிற்றுப் படியார்** 53-ம் வெண்பாவில் இவரது அருமைச் செயல் பாராட்டப்பட்டிருத்தலின் அந்நூலாசிரியராகிய திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் காலத்திற்கு (சாலீ—1100) இவர்காலம் முற்பட்டதென்று தெரிகின்றது.

இவர் செய்தனவாகச் சில தனிப்பாடல்கள் வழங்குகின்றன.

திருவாவடுதுறைச் **சிவஞான முனிவர்** "வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வருந்தினை" என்று இவரைப் பாராட்டியிருக்கிறார்.

இவர் செய்தவை:

1. கோயில் திருப்பல்லாண்டு
2. திருவீழி மிழலைத் திருவிசைப்பா
3. திருவாவடுதுறை "
4. திருவிடைக்கழி முருகர் "

நான்காவதாகிய திருவிடைக்கழி முருகர் திருவிசைப்பாவால், முருகக் கடவுளையும் இவர் உபாஸித்து வந்தவரென்று தெரிகின்றது.

சேந்தனார் என்று பெயருள்ள சிலருண்டென்று ஒரு சாரார் சொல்வர்.

## 251. சேய்ஞ்ஞலூர் ஞானப்பிரகாச முனிவர்

இவரைப் பற்றிய வணக்கம் **திருவிடைக்கழிப் புராணம்** பாயிரம் 18 ஆம் பாட்டில் வந்திருக்கிறது.

## 252. சேரமான் பெருமாணாயனார்

இவர் செய்த ஆதியுலாவில் அரிவைப் பருவத்தில் "இல்லாரை யெல்லாரும்" என்ற திருக்குறளும், பேரிளம்பெண் பருவத்தில் "கண்டு கேட்டுண்டுயிர்த்து" என்ற திருக்குறளும் எடுத்துக்காட்டப்பட்டிருத்தலின், இவருடைய காலத்திற்கு திருவள்ளுவருடைய காலம் முந்தியதென்று தெரிகின்றது.

சேர அரசர் பரம்பரையிற் பிறந்தவர்; இவர் செய்த நூல்கள் பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய தோழர். பெரிய புராணத்தில் இவர் சரிதம் கூறப்பட்டுள்ளது.

திருவிளையாடலிலும், வேம்பத்தூரார் திருவிளையாடலிலும் இவர் சரிதம் உள்ளது.

## 253. சேற்றூர்ப் பொன்னாயிரங் கவிராயர்

சேற்றூர், பாண்டிய நாட்டில் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலுள்ள ஜமீன் கிராமம். இதைச்சார்ந்த தேவதானம் என்னும் தலத்திற்குப் புராணம் எழுதியுள்ளார். அவாந்திர சைவ வேளாளர் மரபு. தாயார் பெயர்:- அருட்பார்வை. தந்தை:- கனகசபாபதிப்பிள்ளை. இவருடைய பிள்ளைத் திருநாமம் சிந்தாமணிப் பிள்ளை. இவர் வடமொழி, தென்மொழி ஆகிய இருமொழிகளிலும் நல்ல தேர்ச்சியுடையவர்.

**இவர் இயற்றிய நூல்கள்:-** 1. திருக்கண்ணீசுரர் செந்தமிழ்ப் பாமாலை, திருவோலக்கவெற்புமை நான்மணி மாலை, சேறைப்பதிற்றுப்பத்தந்தாதி, சேறையுலா, சேறைக் கலம்பகம், சங்கர குமாரர் பிள்ளைத் தமிழ், உபயவிநாயகர் ஒளிர்மணி மாலை சேறைத் தலபுராணம், தென்மலைத் திரிபுரத்தீசர் புராணம், புதுவை வடவாலீசர் புராணம்.

சேறைத் தலபுராணம் அரங்கேற்றி முடிந்தவுடன் அரசர் பொன்னாயிரம் கொண்டு அபிடேகம் செய்து "பொன்னாயிரங் கவிராயர்" என்ற பட்டத்தையும் அளித்தார்.

## 254. சேறைக் கவிராச பிள்ளை

இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. வீரைக் கவிராச பண்டிதர், செங்கோட்டைக் கவிராச பண்டாரமென்னும் பெயர்களை நோக்குங்கால், பண்டைக் காலத்திற் சிலருக்குக் கவிராசரென்றே இயற்பெயர் இருந்ததாகத் தெரிகின்றது.

சேறைக் கவிராச பிள்ளையென்று இவர் பெயர் வழங்குதலால், இவருடைய ஊர் சேறையென்று தெரி

கின்றது; சேறையென்பது, சோழ நாட்டிலுள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய திருச்சேறையென்பதோ அல்லது சேற்றூர் என்பதன் மருவோ என்பது தெரிந்திலது. தமிழ் நாட்டிற் சேற்றூரென்று பெயருள்ள ஊர்கள் பலவுள்ளன. இவர், ஒரு சமயத்திற் பாண்டி நாட்டினரை நோக்கி, 'இந்தத் தேசப்புலவர் மனத்துக் கிடியென வந்தேன் காண்' என்று கூறியிருத்தலின், பாண்டி நாட்டினரல்லரென்று கருதப்படுகிறார்.

இவர் சாதியால் கருணீகர்; இதனை, 'கருணேசன் சேறைக் கவிராசராசன்' என்பதனா லுணர்க. சைவ சமயம் பூண்டொழுகியவர்; முருகக்கடவுளை உபாசித்து மந்திரசித்தி பெற்றவர்; தமிழிலக்கண இலக்கிய நூல்களிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் சிவ புராணங்களிலும் மிக்க பயிற்சியுள்ளவர்; சொல்லினிமை பொருளினிமை வாய்ந்து அதிவிசித்திரகரமான செய்யுட்கள் செய்தலில் வல்லவர். இவருடைய செய்யுட்கள் செம்பாகமானவை. இவர் இன்னராதல் இவருடைய நூல்களுள் ஏதேனும் ஒருபாகத்தைப் படித்தாலும் விவேகிகளுக்கு நன்கு புலப்படும்.

தமிழ்ப் புலவர்கள்பால் மிக்க வணக்கமுடையவர்; வாதுக்கு வந்தோர்களை வென்று அடக்கும் ஆற்றலுமுடையவர். செய்யுட்களை விரைந்துசெய்யும் ஆற்றலுடையவராய் இருந்தமையின் ஆசுகவிராசரென்றும், அங்ஙனம் பாடும் புலவர்பலரினும் மேம்பட்டு விளங்கினமையின் ஆசுகவிராசராசரென்றும் ஆசுகவிராச சிங்கமென்றும், வண்ணம் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவராக இருந்தமையின் வண்ணக் களஞ்சியமென்றும் வழங்கப் பெறுவர். இவர் வண்ணம் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர் என்பதற்கு ''சிலைக் காமனுட லெரிய'' என்னும் திருவண்ணாமலையார் வண்ணத்தில் சிவஸ்தலப் பெயர்களை அடைமொழியின்றி அமைத்திருத்தலே போதிய சான்றாகவுள்ளது.

திருக்காளத்தியில் இருந்தவரும், செங்குந்தர் மரபினரும், சிவபக்திச் செல்வம் வாய்ந்தவருமாகிய வேங்கடராச முதலியாரென்னும் பிரபுவின் அருமைப் புதல்வர் போலவே இருந்து அவரால் அன்புடன் ஆதரிக்கப் பெற்று அந்தத் தலத்திற் பெரும்பாலுந் தங்கிக் காலங்கழித்தவர்; அவர்பால் மிக்க நன்றியறிவுடையவர். 'தக்கிண கயிலையில்வாழ், செங்குந் தக்குல வேங்கடராயன் றிருவாசகற் புலவன்' எனத் தம்மை இவர் புலப்படுத்தியிருத்தலால் இதனையுணர்க. திருக்காளத்தி நாதருலாவைச் செய்வித்தவர் மேற்கூறிய பிரபுவாகவேயிருக்க வேண்டுமென்றும் இதனால் தெரிகிறது. இந்தப் பிரபுவினாலும் பிற கொடையாளிகளாலும் பல்லக்கு வரிசை முதலியனவும் மிக்க பரிசில்களும் பெற்றவர்.

பாண்டி நாட்டிலிருந்த சீவலமாறருடைய பரம்பரையைச் சார்ந்தவரும் இராம பாண்டியரென்று பெயர் பெற்றவருமாகிய சிற்றரசர் ஒருவரிடம் சென்று விரைவாகப் பாடும் தம்முடைய ஆற்றலைப் புலப்படுத்தி அவரை வியப்புறச் செய்து பலபரிசில்கள் பெற்று மீண்டவர்.

திருவண்ணாமலை நாதர் மீது வண்ணம்பாடிக் கொண்டு அரங்கேற்றுதற்காக அத்தலத்திற்கு இவர் பல சிறப்புடன் சென்றாரென்றும், அக்காலத்தில் அவ்வூரிலிருந்த உண்ணாமுலையெல்லப்ப நயினாரென்னும் தமிழ்ப் புலவர் இவர் வரவைக் கண்டு ஒதுங்கி மறைந்தாரென்றும், அது தெரிந்த பரமேசுவரப் புலவரென்பவர் அவரை அவமதித்துக்கூறினரென்றும் தெரிகின்றன.

அந்தகக் கவி வீரராகவ முதலியார், தாமியற்றிய சேயூர்முருகன் பிள்ளைத்தமிழில் (அம்புலி 10) 'தவிராத' என்னும் செய்யுளில் இவர் செய்த சேயூர்முருகன் உலாவைப் பாராட்டிக் கூறியிருத்தலால், இவருடைய

காலம் அவருடைய காலத்திற்கு முந்தியதென்று தெரி கின்றது. தமிழ் நாவலர் சரிதையில் அந்த முதலியா ருடைய செய்யுட்களுக்கு முன்னே இவருடைய செய் யுட்கள் வைக்கப் பெற்றிருத்தலும் இதனை வலியுறுத் தும். தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் கவிஞர்பெருமான் என்று புகழ்படைத்து விளங்கிய வீரராகவ முதலியார் மேற்கூறிய செய்யுளில் திருமுருகாற்றுப்படை, திருப் புகழ், கந்தபுராணமாகிய இவற்றின் வரிசைகளில் இவரியற்றிய உலாவின் பெயரை வைத்திருத்தலன்றித் 'திருவுலாவைக் கற்றுருகலாம்' என்றும் அருமையாகப் பாராட்டிக் கூறியிருத்தல் இவ்வுடைய வாக்கின் உயர் வையும் அதன் நடையின் இனிமையையும் அதிலமைந் துள்ள பக்திச் சுவையையும் விளங்கச் செய்கின்றது.

மேற்கூறிய சேயூர் முருகன் உலாவில், ''சேறைக் கவிராசன், சொன்ன வுலாப்படித்துச் சோதிபெறத் தாலாட்டி' (உ) என்று கூறியிருத்தலையும், திருக் காளத்தி நாதர் கட்டளைக் கலித்துறை மாலையில், ''செவிராசியம்'' என்னும் 77-ஆம்செய்யுளில், 'புவிராச பாண்டியன் சித்தத்துக் கேற்பப் புகன்ற சித்ர, கவி ராச ராச கயிலா புரேசரங் காளத்தியே' என்று துதித் திருத்தலையும், பிறசெய்யுட்களில் இங்ஙனம் கூறியிருத் தலையும் நோக்குகையில், தம்முடைய வாக்கில் தம் முடைய பெயரையும் தம்முடைய செய்யுள் நயத்தை யும் எந்த வகையாகவாவது எடுத்துக் காட்டும் ஒரு வகைப் பழக்கம் இவருக்கிருந்ததென்று தெரிகின்றது.

திருவண்ணாமலைப் பரமேசுவரப் புலவர், உண்ணாமுலை எல்லப்ப நயினார் முதலியோர்கள் இவர் காலத்திருந்த புலவர்கள்.

திருக்காளத்தி நாதருலா, திருக்காளத்தி நாதர் கட்டளைக் கலித்துறை மாலை, சேயூர் முருகன் உலா திருவாட் போக்கி நாதருலா, திருவண்ணாமலையார் வண்ணம் ஆகிய இந்நூல்களும் சில தனிப்பாடல்களும்

இவராற் செய்யப்பெற்றனவென்று இப்பொழுது தெரி கின்றன.

திருக்காளத்தி நாதருலாவில் 78-ஆம் கண்ணி முதலியவற்றிற் காலவிசேடப் பெயர்களும், 83-ஆம் கண்ணி முதலியவற்றில் பன்னிரண்டு இராசிப் பெயர் களும், 90-ஆம் கண்ணி முதலியவற்றிற் பருத்திநாற் க்ரியப் பொருள்கள் பலவற்றின் பெயர்களும், 270-ஆம் கண்ணி முதலியவற்றிற் பலவகையான நீர்நிலைப் பெயர்களும்,272-ஆம் கண்ணி முதலியவற்றில் ஸ்தலப் பெயர்களும் தொனிக்கும்படி இவர் பாடி இருத்த லையும், பின்னும் ஆங்காங்கு அமைந்துள்ள செம்பாக மான பலவகை அடி மடக்குகள் சிலேடைகள் முதலிய வற்றையும், சிவோத் கருஷங்களையும் உற்று நோக்கு கையில், இவருடைய செய்யுள் நடை திருவானைக்கா உலா உடையராகிய காளமேகப் புலவருடைய அதி விசித்திரகரமான செய்யுள் நடைபோல மதிக்கப் படு கின்றது.

## 255. சேனாவரையர்

இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரை செய்தவர். சேனாவரையர் என்பது முருகக் கட வுளுடைய திருநாமமென்பர். இவர் வடமொழி யிலக் கணம் நன்கு கற்றவர். இவருரை ஆட்சேப சமாதானங் களோடு கூடி அழகாக இருக்கும்.

சேனாவரையர் என்ற பெயர் படைத் தலைவர் என்ற பொருளைத் தரும். சேனாவரையர் என்ற பெயர் இயற் பெயராகவும் இருக்கலாம் என்று கல் வெட்டுக்களின் மூலம் அறியலாம்.

தொல்காப்பியர் வகுத்துள்ள இலக்கண விதி களையும், சூத்திரங்களையும் சேனாவரையர் தம் நுண்

மாண் நுழைபுலம் கொண்டு நுணுகி ஆராய்ந்து நூலாசிரியர் ஒவ்வொரு சொல்லையும் பொருளாழத்துடன் அமைந்திருக்கிறார் என்ற கருத்தினைப் பல இடங்களில் வற்புறுத்திக் கூறுகின்றார். இவருரையைச் சிவஞான முனிவர் பாராட்டிச் சூத்திர விருத்தியில் கூறியிருக்கின்றார்.

## 256. சேஷகிரி புலவர்

இவர் கன்னிவாடி ஜமீன்தார் பேரிற் பாடியது.

'கலை விரித்த தமிழாளி மலையாண்டி
யப்பயவேள் கதலி வாழை
யிலைவிரித்துச் சோறிட்டான் சோற்றின்மே
விட்டகறி யியம்பப் போமோ.

## 257. சேஷையங்கார்

இவம், திரிசிரபுரம் கள்ளத் தெருவிலிருந்தவரும், தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலன்றி வைத்திய நூல்களிலும் பயிற்சி மிக்கவருமான கொட்டடி ஆறுமுகம்பிள்ளை என்பவரிடம் பாடங் கேட்டவர்; சென்னை இராசதானிக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர்; குணாகரம் என்னும் செய்யுள் நூலை இயற்றியவர்.

## 258. சொக்கநாதர்

இவர் ஊர் மூல்லைநகர். இவர் நல்லாப்பிள்ளை பாரதத்திற்கு உரை செய்திருக்கிறார்.

இந்நூலும் இவ்வுரையும் அடங்கிய சுவடி நூல் நிலையத்தில் இருக்கின்றது.

## 259. சொக்கம்பட்டிப் பொன்னம்பலம் பிள்ளை

பொன்னம்பலம் பிள்ளை சிறந்த தமிழ்ப்புலமை வாய்ந்தவர்; **வாசுதேவநல்லூர்ப் புராணத்தையும்**,வேறுபல

**தனிப்பாடல்களையும்** இயற்றியுள்ளனர். இவர் வாசுதேவ நல்லூரிற் பிறந்த வேளாள குல திலகர். பேராற்றலும் அரசியலை ஒழுங்குபெற நடத்தும் மதியூகமும் அவர் பாற் பொருந்தியிருந்தன. அவருடைய நல்லறிவும் ஆட்சிமுறையும் குடிகளுக்கும் சமஸ்தானாதிபதிக்கும் ஒருங்கே இன்பத்தையும் நன்மையையும் உண்டாக்கின.

பழைய காலத்தில் தமிழ்நாட்டிலே சிறந்த நிலையில் இருந்த ஜமீன்களுள் சொக்கம்பட்டியென்பது ஒன்று, வடகரையாதிக்கமென்றும் அந்த ஜமீன் வழங்கப்படும். அங்கே இருந்த ஜமீன்தார்களுள் சின்னணைஞ்சாத்தேவர் என்பவர் புலவர்பாடும் புகழுடையவராக வாழ்ந்தனர். அவர் திருக்குற்றாலம், பாபநாசம், திருமலை முதலிய தலங்களில் பலவகையான நிவந்தங்களை அமைத்தனர்; தண்டமிழ் வாணர்களை மிக்க அன்புடன் ஆதரித்து வந்து பெரும்புகழ் பெற்றார். மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர், செங்கோட்டைக் கவிராச பண்டாரம், கிருஷ்ணாபுரம் கவிராயர் முதலியவர்கள் அவருடைய ஆதரவு பெற்றவர்கள். அக்காலத்தில் அவருடைய ஆட்சியை எல்லோரும் போற்றினர். ஒரு பெரிய அரசாங்கத்துக்கு உதாரணமாகச் சொல்லக்கூடிய நிலையில் அவருடைய சமஸ்தானம் விளங்கியது. அவ்வளவுக்கும் காரணம் அந்த ஜமீன்தாருடைய ஸ்தானாதிபதியாக இருந்த இந்தப் பொன்னம்பலம் பிள்ளையென்பவரது அறிவாற்றலேயாகும்.

பொன்னம்பலம் பிள்ளையின் அறிவின் திறத்தில் ஈடுபட்ட சமஸ்தானாதிபதியாகிய சின்னணைஞ்சாத்தேவர் தம் அமைச்சராகிய அவர் யாது கூறினும் அதன்படியே நடந்துவந்தார். அமைச்சருடைய சாதுரியமான மொழிகளும் தமிழ்ப்புலமையும் அரசியல் யோசனைகளும் யாவரையும் வணங்கச் செய்தன. வேறு சமஸ்தானத் தலைவர்களெல்லாம், "இத்தகைய அமைச்சர் ஒருவர் நமக்கு இல்லையே!" என ஏங்கினர்.

அக்காலத்தில் இருந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர் பொன்னம்பலம் பிள்ளையை ஒரு சமயம் வருவித்து அவரது பெருமைமையை உணர்ந்து மிகவும் போற்றினார். அவரோடு பேசுவதில் சேதுபதிக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அடிக்கடி அவருடைய பழக்கம் இருக்க வேண்டுமென்பது அவ்வரசர் விருப்பம். ஆயினும் தம்முடைய ஜமீன்தாரிடத்தில் அன்பும் அந்தச் சமஸ்தான நிர்வாகத்தில் நோக்கமும் உடைய பொன்னம்பலம் பிள்ளை அங்ஙனம் இருப்பது சாத்தியமாகுமா? பலமுறை சேதுபதி விரும்பினால் ஒருமுறை சென்று சிலநாள் இருந்து வருவார். அப்பொழுது சேதுபதி மன்னர் அவரை இராமநாதபுரத்திலேயே இருத்தி விடுதற்குரிய தந்திரங்கள் பல செய்தும் பலிக்கவில்லை.

ஒருமுறை சேதுபதியரசரிடம் பொன்னம்பலம் பிள்ளை வந்திருந்தபோது அவர் தம் ஜமீன்தாருடைய சிறந்த குணங்களைப் பற்றியும் தம்பால் அவருக்குள்ள அன்பைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

''உங்களுடைய அபிப்பிராயம் இல்லாமல் சமஸ்தானத்தில் ஒரு காரியமும் நடைபெறாதாமே?'' என்று கேட்டார் சேதுபதி.

''ஆம். ஆனால் அப்படி இருப்பது அதிகாரத்தினால் அன்று; அன்பினாலேதான். எங்கள் எஜமானுக்கு நான் செய்வதிற் குறையிராது என்ற நம்பிக்கையுண்டு. நாடும் குடிகளும் நன்மை அடைய வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம்; தாமே நேரில் அதிகாரம் செலுத்த வேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு இல்லை. யாருடைய அதிகாரமாக இருந்தால் என்ன? எல்லாம் அவர்களுடைய பெயராலேயே நடைபெறுகின்றன.''

''அப்படியானால் உங்கள் ஜமீன்தார் உங்கள் யோசனையைக் கேட்டுத்தான் எல்லாக் காரியங்களையும் செய்வாரோ?''

''கூடியவரையில் அப்படித்தான் செய்வது வழக்கம். அவர்களிடம் வெறும் சம்பளம் வாங்கும் மந்திரியாகமட்டும் நடந்து கொள்ளவில்லை. அவர்கள் என்னை ஆருயிர் நண்பனாகவே கருதியிருக்கிறார்கள். ஒரு சமஸ்தானாதிபதி ஒரு காரணமும் இல்லாமல் ஒன்றுக்கும் பற்றாத என்னிடத்தில் இவ்வளவு அன்பு வைக்கும் போது எனது நன்மையைக் காட்டிலும் அவர்களுடைய நன்மையையே சிறந்ததாக நினைப்பது என் கடமையல்லவா?''

''உங்களுடைய சமஸ்தானாதிபதியை ஒருமுறை பார்க்க விரும்புகிறேன்.''

''நன்றாகப் பார்க்கலாம். பரிவாரங்களுடன் சொக்கம்பட்டிக்கு விஜயம் செய்தால் மகாராஜாவை வரவேற்பதைக் காட்டிலும் சந்தோஷந்தரும் செயல் வேறொன்றும் இல்லை.''

''நான் அங்கே வருவதைக் காட்டிலும் உங்கள் சமஸ்தானாதிபதி இங்கே வந்தால் நலம் அல்லவா?''

''அப்படியும் செய்யலாம். ஆனால் அதற்கு இது தக்க சமயமன்று. மகாராஜா அவர்களுக்கு முறையாகத் திருமுகம் அனுப்பி மரியாதையோடு வருவிக்க வேண்டும். அப்படிச் செய்தாலும் நான் அங்கேசென்று அவர்களை வரச்சொன்னால்தான் அவர்கள் விஜயம் செய்வார்கள். என் விருப்பம் இல்லாமல் வரமாட்டார்கள்.''

''நீங்கள் அவரை வரும்படி எழுதியனுப்பலாமே?''

''அவ்வளவு உரிமையை நான் மேற்கொள்ளலாமா? எங்கள் தலைவர் கருணை மிகுதியினால் எனக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை நான் தவறாகச் செலுத்தலாமா?

எனக்கு இணங்கி அவர்கள் நடந்தாலும் அவர்களோ ஒரு சமஸ்தானாதிபதி; நான் ஓர் ஊழியன். நான் என்னுடைய வரம்பு கடந்து நடக்கக்கூடாது. இங்கே வரும்படி நான் எழுதுவது முறையன்று."

"அப்படியானால், நானே ஒரு கடிதம் அனுப்பி வருவிக்கிறேன்."

"மகாராஜாவின் திருமுகத்தைக் கண்டவுடன் அவர்கள் புறப்படமாட்டார்கள். இவ்விஷயமாக என் அபிப்பிராயத்தைஅறிந்துகொண்டுதான் வருவார்கள்."

"உங்களுக்குத் தெரியாமலே நான் அவரை இங்கே வருவித்துவிடுகிறேன்" என்றார் சேதுபதி மன்னர்.

இருவருக்கும் அப்போது வாக்குவாதம் நடை பெற்றது. சேதுபதியோ சொக்கம்பட்டி ஜமீன்தாரை வருவித்து விடுவதாக வீரம் பேசினார். அது முடியா தென்று பொன்னம்பலம்பிள்ளை கூறினார்.

மறுநாள் சேதுபதி வேந்தர் பொன்னம்பலம் பிள்ளை அறியாதபடி அவர் எழுதியதுபோல ஒரு கடிதம் எழுதி ஆள் மூலம் சொக்கம்பட்டி ஜமீன் தாருக்கு அனுப்பினார். 'உடனே புறப்பட்டு இவ்விடத் திற்கு விஜயம் செய்யவேண்டும்' என்று பொன்னம் பலம் பிள்ளை எழுதினதாக அக்கடிதம் அமைந் திருந்தது.

அதுகண்ட சின்னணைஞ்சாத் தேவர் அது வரை சேதுபதியிடம் சென்று வராமையால் சிறிது மயங்கினார். அக்காலத்தில் சேதுபதியைப்போன்ற கௌரவம் சின்னணைஞ்சாத்தேவருக்கும் இருந்தது. 'இங்ஙனம் நம் அமைச்சர் எழுதுவதற்குக் காரணம் தெரியவில்லை. ஆயினும் அவர் நமது நன்மையைக் கருதியே ஒவ்வொரு காரியத்தையும் செய்வார். இப்படி

அவர் முன்பு செய்தது இல்லை. எதற்கும் நாம் அங்கே அதிக ஆடம்பரமின்றிச் சென்று வருவோம்' என்றெண்ணிச் சில வேலைக்காரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

சொக்கம்பட்டியிலிருந்து ஜமீன்தாருடைய பல்லக்கு வருமென்றும், உடனே தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், வந்தவருக்கு இடம் கொடுத்து உபசரிக்க வேண்டுமென்றும் சேதுபதி தம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார், அதிகாரிகளும் சின்னணைஞ்சாத்தேவரை எதிர்பார்த்திருந்தனர். தேவர் வந்து தமக்கென் அமைந்திருந்த விடுதியில் தங்கினார். சேதுபதி வேந்தரைத் தாமே சென்று பார்ப்பது தம் கௌரவத்திற்குக் குறைவாதலாலும், தாம் தம் அமைச்சருடைய விருப்பத்தின்படி வந்திருப்பதாலும் அவர் அங்கேயே தங்கித் தம் அமைச்சரது வரவை எதிர்பார்த்திருந்தார்.

அவர் வந்திருப்பது பொன்னம்பலம் பிள்ளைக்குத் தெரியாது. பிள்ளையை வியப்படையுமாறு செய்ய வேண்டுமென்று கருதிய சேதுபதி அவரையும் அழைத்துக்கொண்டு சின்னணைஞ்சாத் தேவர் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார். நெடுந்தூரத்தில் வரும்போதே தம்முடைய தலைவரைக் கண்டுகொண்ட பொன்னம்பலம் பிள்ளை ஏதோ சூது நடந்திருக்குமென்று தெரிந்துகொண்டார். உள்ளே புகுந்து சின்னணைஞ்சாத் தேவரருகிற் செல்லும்போது அவர் திடுக்கிட்டுப் போவாரென்று சேதுபதி நினைத்தார். அவரோ அங்கே சென்றவுடன், "ஏனடா சின்னணைஞ்சாத் தேவா! ஸமுகத்தில் சௌக்கியமா" என்று கேட்டார். ஸமுகம் என்பது ஸமஸ்தானாதிபதியைக் குறிப்பது. தாமே 'ஸமுகமாக' இருக்கையில் தம்மை இப்படி ஒருமையில் அழைத்துக் கேட்பதுபற்றி ஜமீன்தார் கோபம் அடையவில்லை. தாம் முன்னரே சந்தேகித்த

படி ஏதோ சூழ்ச்சியினால் சேதுபதி தம்மை வருவித்துள்ளாரென்றும், தம் அமைச்சர் தக்க காரணங்கொண்டே அப்படிச் சொன்னாரென்றும் அவர் ஒரு நொடியில் ஊகித்துக்கொண்டார்.

"எஜமான்! ஸமுகத்தில்ஸௌக்கியமே. உங்களைப் பிரிந்திருப்பதுதான் கஷ்டமாக இருக்கிறதாம்" என்று பணிவுடன் அவர் விடையளித்தார்.

"அப்படியா! விரைவிலே புறப்பட வேண்டியதுதான்" என்றுசொல்லிவிட்டுப் பொன்னம்பலம்பிள்ளை மேலே நடந்தார்.

சேதுபதி மன்னருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் அதற்கு முன் சின்னணைஞ்சாத்தேவரைப் பார்த்தவரல்லர்; ஆதலின் அங்கே வந்தவரே ஜமீன்தார் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. 'இவர் ஜமீன்தாராக இருந்தால், நமது முன்னிலையில் இந்த அமைச்சர் இப்படிப் பேசுவாரா? இவர் சமஸ்தானத்தைச் சேர்ந்த அதிகாரியாக இருக்கலாம். அமைச்சரை ஏமாற்ற எண்ணிய நாமே ஏமாந்து போனோம். ஜமீன்தார் இவரைக் காட்டிலும் அறிவாளியென்று தெரிகிறது. தாம் வராமல் தம் பெயருள்ள ஓர் அதிகாரியை அனுப்பிவிட்டார். இல்லாவிட்டால் இவ்வளவு சிறந்தவராகிய பொன்னம்பலம் பிள்ளைக்கு அவரிடத்தில் அன்பு இருப்பதற்கு நியாயம் இல்லையே' என்று எண்ணினார். இருவரும் அரண்மனைக்கு மீண்டார்கள்.

பொன்னம்பலம் பிள்ளை தனியே வந்து தம் ஸமஸ்தானாதிபதியைக் கண்டு பொய்க் கடிதம் வந்ததும் பிறவும் தெரிந்து கொண்டார்; "நான் செய்த அபசாரத்தை மன்னிக்க வேண்டும். ஸமுகத்தின் கௌரவத்திற்கு இங்கெல்லாம் இவ்வளவு சுலபமாக வருதல் ஏற்றதன்று. அதனால், நான் இத்தத் தந்திரம் செய்தேன். ஸமுகத்திற்கு அகௌரவம் ஏற்பட்டா

னும் நம் இருவருக்கு மட்டுந்தானே அது தெரியும்? உரிமை பற்றியும், வேறு வழியில்லாமையாலும் இவ்வாறு செய்தேன். க்ஷமித்தருள வேண்டும்" என்று வேண்டினார். தம் அருமைத் தலைவரை அவ்வாறு பேச நேர்ந்ததேயென்பதை நினைந்து நினைந்து உருகினார்.

சின்னணைஞ்சாத் தேவரோ சிறிதும் மனம் வருந்தாமல், "நீர் நம்முடைய மானத்தைக் காப்பாற்றினீர். நாம் தெரியாமல் செய்த பிழையை உமது சாதுரியத்தால் மாற்றிவிட்டீர். நீர் உள்ள வரையில் நமக்கு என்ன குறை!" என்று கூறித் தம் அமைச்சரைத் தேற்றினார்.

அப்பால் பொன்னம்பலம் பிள்ளை சேதுபதியிடம் தம் அரசர் தம்மை வரும்படியாகச் சொல்லியனுப்பியுள்ளாரென்று கூறி விடைபெற்றுக்கொண்டு சமஸ்தான அதிகாரியாக நடித்த சின்னணைஞ்சாத் தேவருடன் சொக்கம்பட்டி போய்ச் சேர்ந்தார்.

(குறிப்பு: இவ்வரலாற்றை என்னிடம் திருவாவடுதுறையாதீன வித்துவானும் இப்பொழுது அவ்வாதீனத்தைச் சார்ந்த மதுரைக் கட்டளை விசாரணைத் தலைவராக இருப்பவருமாகிய **ஸ்ரீமத் சங்கரலிங்கத் தம்பிரானவர்கள்** தெரிவித்தார்கள்.)

## 260. சோமசுந்தரக் கவிராயர்

இவரை சோமசுந்தரம் பிள்ளையென்றும், சோமசுந்தர குருவென்றும், சோமசுந்தர குருசுவாமி என்றும் கூறுவதுண்டு. இராமநாதபுரத்தில் வாழ்ந்த நெல்லையப்ப ரென்பவருக்குக் குமாரரா யுதித்தவர் இப்புலவர். இவர் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ சிவஞான சுவாமிகளிடம் கல்வி பயின்று சிறப்பெய்திய மாணாக்கர்களுள் ஒருவர்; சேதுபதி அரசரின் ஆஸ்தான வித்துவானாக விளங்கியவர். இராமநாதபுரம் அஷ்டாவதானி பெரிய சரவணக் கவிராயரும் இயற்றமிழாசிரியர் இராமானுஜ கவிராயரும் இவருடைய

மாணாக்கர்கள். இவை, பெரிய சரவணக் கவிராயர் இயற்றிய சீட்டுக் கவிகளாலும், இராமானுஜ கவிராயர் இவரை நன்னூற் காண்டிகை யுரையிற் சிறப்பித்துள்ள பாடல்களாலும் தெரிகின்றன. இவருடைய சிவபக்திச் செல்வமும் சைவசமயப் பற்றும், பாஷாபிமானமும், பரந்த கல்வியாற்றலும் பிற சிறப்பியல்புகளும் இந்நூலைப் படித்தலால் நன்கு விளங்கும். வேதாந்த சூடாமணியுரைக்குப் பாயிரம் இயற்றிய சாமிநாத கவிராயரென்பவர் இவருடைய சகோதரராவர்.

இவ்வாசிரியர் தாம் பாடிய **திருக்கழுக்குன்றக் கோவையில்** அத்தலச் செய்திகளையும் பிற நூற் கருத்துக்களையும் ஆங்காங்கு நன்கு புலப்படுத்தி இருக்கின்றனர். நூல் நிலயத்தில் இந்தக் கோவை அச்சிடப்பட்டுள்ளது.

## 261. ஞானக்கூத்த சுவாமிகள்

இவர் **திருவையாற்றுப்புராணத்**தைப் பன்னிரண்டு சருக்கங்களில் சொல்வளம், பொருள்வளம் பல்கப் பக்திரசம் ததும்ப 487 பாடல்களில் பாடினார். இந்நூலுள் சைவச் சருக்கம் 27-ஆம் பாடலைப் பார்க்குமிடத்து இவர் நிரம்பவழகிய தேசிகரது மாணாக்கர் என்று தெரிகிறது.

திருவையாற்றுப் புராணத்தைப் படிப்பதின் பயனை ஆசிரியர் கூறும் விதம் சிறப்புடையது.

"அஞ்சுவகை நீராடி அருணந்தி தவம்புரியும்
பஞ்சநதிப் புராணத்தைப் படிப்பாரும் வரைவாரும்
விஞ்சுபொருள் கேட்பாரும் விட்டகுறை யால்வந்த
தஞ்சமுருத் திரரவர்க்கே சாரூபம் சத்தியமே."

**அஞ்சுவகை நீர்:-** சூரியபுட்கரிணி தீர்த்தம், கங்கா தீர்த்தம், சந்திரகிரணத்தாலுண்டான அமிர்ததீர்த்தம், உமையம்மையின் தனத்தில் உண்டான பாலாறு,

நந்தி வாய்நுரைத் தீர்த்தம். இவ்வைந்து தீர்த்தங்களும் திருநந்திதேவருக்கு அபிஷேகம் செய்யும் பொருட்டுத் தோன்றியன.

இக்காலத்தில் காவிரி நதியில் மறைந்துவிட்டன. இந்த ஐந்து ஆறுகளுடையதனால் இத்தலத்திற்குத் **திருவையாறு** எனப் பெயர் ஏற்பட்டது.

இவர் செய்த நூல்கள்:-

1. திருவையாற்றுப் புராணம்
2. திருவிடை மருதூர்ப் பழைய புராணம்
3. விருத்தாசல புராணம்

## 262. தஞ்சை ஸ்ரீநிவாஸ பிள்ளை கே. எஸ்.

இவர் கும்பகோணம் காலேஜில் வாசித்தார். வித்துவான் தியாகராச செட்டியாரிடம் வகுப்பில் தமிழ்ப்பாடம் கேட்டதோடு அவர் வீட்டிற்கும்சென்று திருவிளையாடற்புராணம், பிரபுலிங்கலீலை, பண்டார மும்மணிக்கோவை முதலிய நூல்களைத் தனியே கேட்டார். அதனால், செட்டியாரிடத்தில் இவருக்கு அளவற்ற பற்று உண்டாயிற்று. இவர் பிற்காலத்தில், "**தமிழ் வரலாறு**" என்னும் புத்தகத்தை எழுதிவெளியிட்டார். தமிழ் மொழியின் சரித்திரத்தையும் தமிழ் நூல்கள் வரவர விருத்தியடைந்ததையும் விரிவாக அப் புத்தகத்தில் விளக்கியிருக்கிறார். இவருக்குள்ள தமிழன்பையும், ஆராய்ச்சித் திறத்தையும் அந்நூல் புலப்படுத்தும். அதனை இவர் தியாகராச செட்டியாருக்கு அர்ப்பணம் செய்தார். 'அவரிடத்துத் தமிழ் நூல்களைப் படித்ததனால்தான் தமக்குத் தமிழில் ஊக்க முண்டாயிற்றென்று' இவர் அடிக்கடி சொல்வதுண்டு என்று ஐயரவர்கள் வித்துவான் தியாகராச செட்டியார் சரித்திரத்தில் எழுதியிருக்கின்றனர். இவர் தஞ்சையில் வக்கிலாக இருந்து வந்தவர்.

## 263. தண்டபாணி சுவாமிகள்

இவர் முருகதாச சுவாமிகளென்றும் வழங்கப் படுகிறவர். இவருடைய ஊர் திருநெல்வேலி. இவர் செய்த நூல்கள் **அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம்** முதலியன.

இவரது வரலாறுகளெல்லாம் இவர் இயற்றிய புலவர் புராணத்தின் மூலம் விளங்கும். இவரை ஐயரவர்கள் பார்த்திருக்கிறார் என்று தெரிகிறது.

## 264. தண்டலைச்சேரி சாந்தலிங்கக் கவிராயர்

இவர் இயற்றியநூல் **தண்டலையார் சதகம்** அல்லது **பழமொழி விளக்கம், ஆத்திசூடி வெண்பா** இயற்றியவரும் இவரென்றே தெரிகிறது.

**குறிப்பு:** அச்சுப்புத்தகங்களில் தண்டலையார் சதகத்தின் ஆசிரியர் படிக்காசுப் புலவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 265. தண்டியாசிரியர்

இவர் வடமொழியிலுள்ள காவியாதர்சத்தைத் தழுவிச் சூத்திரங்களால் அமைந்த அணியிலக்கண நூலான தண்டியலங்காரத்தை இயற்றியவரென்பர். இவர் வரலாறு பற்றிஅறிய ஆதாரம் கிடைக்கவில்லை. இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவர்,

"சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே"

என்று நூலைத் தொடங்கியுள்ளார்.

## 266. தம்பிப்பட்டி மாரியப்பக் கவிராயர்

இவர் மேற்படி ஊர் முத்துவேல் கவிராயருடைய இரண்டாவது குமாரர்.

## 267. தமிழறியும் பெருமாள்

இவர் தமிழ் விதுஷிகளுள் ஒருவர். கீரனை வென்றவர். உறையூரில் இருந்த பெண்பாற்புலவர்.

## 268. தர்மதானபுரம் கண்ணுவையார்

இவர் பாரதப் பிரசங்கம் செய்வதில் புகழ் வாய்ந்தவர். அங்கங்கே வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தைப் பிரசங்கம் செய்து சம்மானம் பெற்று ஜீவனம் செய்து வந்தார். பிள்ளையவர்களிடம் அபிமானமுடையவர். அவர் வந்த காலத்தில் பாரதத்திலிருந்து இசையுடன் செய்யுட்களைக் கணீரென்று சொல்லிப் பிரசங்கம் செய்தார். அத்தகைய பிரசங்கத்தை முன்பு தாம் கேட்டதில்லையாதலின் அப்போது ஒரு புதிய இன்பம் உண்டாயிற்று என்று ஐயரவர்கள் 'என் சரித்திரத்தில்' குறிப்பிட்டுள்ளார்.

## 269. தருமபுரம் அம்பலவாண கவிராயர்

இவர் தருமபுரம் சிவஞான தேசிகர்காலத்தில் இருந்தவர். இவர் **திருமயிலைச் சிங்காரவேலர்ஐந்திணைக் கோவை** என்னும் பிரபந்தம் இயற்றியவர். இவர் கவிராச சிகாமணியென்றும்அக்காலத்தவரால் பாராட்டப் பட்டவரென்று தெரிகிறது.

## 270. தருமபுரம் பரமசிவத் தம்பிரான்

பிள்ளையவர்கள் திருவாவடுதுறைக்கு வந்து அவ்வாதீன கர்த்தரான மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் கம்பராமாயணம் முதலியவற்றைப் பாடஞ்சொல்லிக் கொண்டு இருந்த போது இவர் பாடங் கேட்டுப்படித்தவர்; தருமபுர ஆதீனத்துச் சிஷ்யர்; வடமொழி தென்மொழிகளில் நல்ல பயிற்சியுள்ளவர்; செய்யுள் இயற்றும் ஆற்றலுடையவர்; சில நூல்களும் இயற்றியுள்ளார்.

## 271. தருமபுரம் மாசிலாமணி தேசிகர்

இவர் திருவாரூர் ஞானப்பிரகாசர் மீது **"நெஞ்சு விடுதூது"** என்னும் ஒரு நூல் இயற்றியிருக்கிறார். உத்தரகோச மங்கைப் புராணத்தில் இவரது துதி வந்துள்ளது. குமர குருபர ஸ்வாமிகள் காலத்தவர் என்று தெரிகின்றது. (சிவபுராணாதி தோத்திர மஞ்சரி-236.) உத்தரகோச மங்கைப் புராணத்தில் அதன் ஆசிரியர் வெள்ளியம்பல வாணத் தம்பிரானால் துதிக்கப்பட்டிருத்தலின் இவர் அவர் காலத்திற்கு முந்தியவர்.

## 272. தருமை சிவஞான தேசிகர்

**பஞ்சாக்கர பதிபசுபாச விளக்க** மென்னும் ஒரு நூல் இவர் செய்ததாக வழங்குகின்றது.

"கோபமே பிறவியைக் கொடுக்கும் கொள்கலம்
கோபமே தனுவினைக் குறைக்கும் துட்டநோய்
கோபமே தாயையும் கொல்லும் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ!"

(பாசவிளக்கம். செய். 19.)

இவர் காலத்தில் மருதூர் அம்பலவாணக் கவி ராயரென்று ஒருவரிருந்ததாகத் தெரிகிறது.

## 273. தாண்டவராயத் தம்பிரான்

இவர் திருவாவடுதுறை யாதீன வித்துவான்; சென்னையில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் இருந்தவர். **பிள்ளை** யவர்கள் இயற்றியதும், 184..-ஆம் வருடம் பதிப்பிக்கப் பெற்றதுமான அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழுக்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்துள்ளார்.

"சிற்பரன்சேர் சிரகிரியெம் மீனாட்சி
சுந்தரமாஞ் சீரார் கொண்மூ
கற்பனைவண் கடல்முகந்து..............
பற்பலரும் புகழ்பிள்ளைக் கவிமழையைப்
பொழிந்ததென்பர் பாவ லோரே"

என்று தம் சிறப்புப் பாயிரத்தில் அப் புலவர்கோமானைப் பாராட்டியிருக்கின்றனர். இவர் 1855-ஆம் வருடத்தில் சென்னையிலிருந்து கல்லிடைக் குறிச்சி செல்வதற்குப் பயணமாகித் திரிசிரபுரம் வந்து மௌன சுவாமிகள் மடத்தில் சிலநாள் தங்கிய காலத்தில் திருப்பேரூர்ப் புராணத்தைப் படித்து இன்புற வேண்டும் என்னும் விருப்பமுடைய பிள்ளையவர்கள் இவர்பால் அத்தல புராணப் பிரதியைப் பெற்றனர். இவர் கல்லிடைக் குறிச்சியிலிருந்து மீண்டும் சென்னைக்குப் புறப்பட்டுச் செல்கையில் முகத்தில் ஒரு பரு உண்டாகி வருந்தினமையால் திருச்சிராப்பள்ளியில் ஐந்து தினங்கள் தங்கினார். அப்பொழுது தம்மைக் காணவந்த பிள்ளையவர்களுடன் இவர் அளவளாவிப் பழகி இன்புற்றது இவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதிய விண்ணப்பத்திலுள்ள அடியிற் கண்ட வாக்கியத்தால் விளங்கும்:

"அடியேன் திரிசிரபுரத்தில் மௌன சுவாமிகள் மடத்தில் தங்கிப்*பருவரலாற் பருவரலுற்று வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய சம்பாஷணையினால்‡அஞ்சு தினங்களையும் அஞ்சு தினங்களாகக் கழித்தேன்."

மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு இவர்பால் சிறந்த மதிப்பும் அன்பும் உண்டு; "நாம் வழிபடுந்

---

* பரு வரல்—பரு (ஒரு வகைச் சிரங்கு) வருதல்; துன்பம். ‡ அஞ்சுதினம்—ஐந்துதினங்கள்; அம் சு தினம்—அழகிய நல்லதினம்.

தெய்வம் பிரத்தியட்சமாகி என்ன வேண்டுமென்று கேட்டால் தாண்டவராயத் தம்பிரானவர்களை நாம் பார்க்கும்படி செய்யவேண்டுமென்று கேட்போம்" என்று இவரைச் சிறப்பித்து அவர் சொல்வதுண்டு.

## 274. தாண்டவராய முதலியார்

இவர் சென்னையில் துரைத்தனத்தார் அமைத்த கல்விச் சங்கத்துத் தலைமைப் புலமையை 1839-ஆம் வருடம் வரையில் நடத்தியவர். பின்பு வேறு உத்தி யோகத்தில் நியமிக்கப்பட்டு விசாகப்பட்டினம் சென்றார். **இலக்கண வினா விடை**யென்னும் நூலொன்று இவரால் இயற்றப்பட்டு 1826-ஆம் வருடம் பதிப்பிக்கப் பெற்றது. இவர் நாலடியாரையும் திவாகரம் முதல் எட்டுத் தொகுதிகளையும் ஆராய்ந்து பதிப்பித்தற்குச் சித்தம் செய்தார். இச்செய்தி கீழ்வரும் இவர் கடிதத்தால் விளங்கும்:

**ம—ள—ள—ஸ்ரீ** கொற்ற மங்களம் இராமசாமிப் பிள்ளை யவர்களுக்கு விஜ்ஞாபனம்:

நாம் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கிய **சேந்தன் றிவாக ரத்தி** லொன்பான்றொகுதி தொடங்குவதற்கு எனக்கு வாய்த்த வேறு தேயத்திருக்கையாலும் பிறிதுக் கருமத்தை கருத்தினாலுந் தீண்ட வொண்ணாக் கருமந்தலைப்பட லாலும், நான் கருதியவாறு முற்றுவித்தற்கியலாத மற்றைத் தொகுதிகளையுமொருவாறு புதுக்குவித்துச் சேர்த்துப் புத்தகத்தை நிறைத்து வெளிப்படுத்துவீராகவென்ற, என் வேண்டுகோளை மேற்கொண்டு அவற்றிலிரண்டாயினுஞ் சேர்த்தமைக்கு அகமகிழ் வுறாநின்றேன். மறவியால் விடு பட்ட சில பொருள்களுஞ் சொற்களும் பின் சேர்ப்பித்தற் பொருட்டு நான் முன் குறித்திருந்த குறிப்பேடெனக்குக் காணப்பட்டாற் காலந்தாழ்க்காமற் பயன் படுத்துவேன்.

விசாகப்பட்டினம்

1839 வருஷம் — இங்ஙனம்.
ஆகஸ்டு மாசம் 72 — தாண்டவராய முதலியார்.
(7-8-1839)

இவரிடம் 22 மாணாக்கர்கள் பாடங்கேட்டு வந்தார்கள். அவர்களில் தாமும் ஒருவரென்று புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் ஐயரவர்களிடம் சொல்லியிருக்கிறார். இவர் **பஞ்சதந்திரத்தை** மராட்டி மொழிபெயர்த்தார். சிறுவர்களுக்காகக் **கதாமஞ்சரி** என்னும் நூலையும் எழுதினார்.

## 275. திரிகூடராசப்பக் கவிராயர்

இவர் திருக்குற்றாலத்தைச் சார்ந்த மேலகரம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த சைவ வேளாளர் மரபினர். இவர் தமிழ் இலக்கிய, இலக்கணங்களையும் உரிய முறையிற் பயின்று, அவற்றில் தெளிந்து அரிய அறிவோடு, சொற்சுவை பொருட்சுவை ததும்பப் பல வகை அணிகளோடு, செய்யுட்கள் இயற்றும்நாவளமும் அமையப் பெற்றவர். இவர் தம் வாழ்நாட்களில்பெரும் பகுதியைத் திருக்குற்றாலநாதர் கோயிலில் திருத் தொண்டு புரிந்து வந்ததில் ஈடுபடுத்தினவர். இதற் இணங்க இவர் தம்மைக் குற்றாலநாதர் கொத்தடிமை யென்று கூறுவது காணலாம். (திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, மகா மகோபாத்யாய டாக்டர் ஐயர் அவர்கள் பதிப்பு முகவுரை.) கொத்தடிமை குடும்ப வழி வசதி அடிமை என்னும்பொருளுடையது. 'கொத்தடிமையான குடிநான் பராபரமே' என்று (பராபரக் கண்ணி. 48) தாயுமானவரும் தம்மைக் கூறிக் கொண்டமை காண்க. இதனால் இவர் குடும்பத்தினோர் பரம்பரையாகக் குற்றாலநாதர் கோயிலில் திருத்தொண்டிலும், வழிபாட்டிலும் சிறந்து விளங்கினார் என்பதோடு, கல்விச் சிறப்பின் மிக்க வர்கள் என்பதும் கொள்ளக் கிடக்கும். இதற்கேற்ப இவ்வாசிரியரது மூத்த மைந்தரான பண்டாரக் கவிராயர் என்பவர் சிவநேயச் செல்வராய் விளங்கிய தோடு இக்குற்றாலத்தைச்சார்ந்ததும், இதன் தொடர் புள்ளதுமான திரு இலஞ்சி என்னும் பதியில் கோயில்

கொண்டு விளங்கும் முருகன் மீது, **திருவிலஞ்சி முருகன் உலா** என்றொரு நூல் இயற்றியுள்ளமை அக்குடியின் மேற்கூறிய சிறப்புக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

திரிகூட ராசப்பக் கவிராயர் பல நூற்களை இயற்றியுள்ளார். அவற்றுள் இப்பொழுது தெரிய வருவன: திருக்குற்றாலத் தல புராணம், திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றால மாலை, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருக்குற்றால யமக வந்தாதி, திருக்குற்றாலக் கோவை, குழல்வாய் மொழியம்மை கலிப்பா மாலை, கோமளமாலை, திருக்குற்றால ஊடல், திருக்குற்றாலப் பரம்பொருள்மாலை, நன்னகர் வெண்பா என்பனவாம்.

இவரை ஆதரித்து வந்தவர் இவர் காலத்தில் மதுரையில் இருந்து ஆட்சி புரிந்து வந்த நாயக்க வம்ச மன்னரான ஸ்ரீ முத்துவிசய சொக்கநாத நாயக்கர் என்பவர் ஆவார். அம்மன்னர் இவ்வாசிரியர் இயற்றிய குற்றாலநாதர் குறவஞ்சி என்னும் நூலைப் பாராட்டி, மகிழ்வெய்தி இவருக்கு மானியமாகச் சில விளை நிலங்கள் வழங்கியுள்ளார் என்பதும் அந்நிலங்கள் உள்ள இடத்திற்குக் குறவஞ்சி மேடு என்ற பெயர் இன்றும் வழங்கி வருகின்றதென்பதும் தெரிய வருகின்றன. இப்புலவர் பெருமான் மேற்கூறிய முத்து விஜய சொக்கநாத நாயக்கர் காலத்தவர் என்று அறியப் பெறுவதால், இவர் வாழ்ந்து வந்த காலம் கி. பி. 18-வது நூற்றாண்டின் முற்பகுதியான ஏறக்குறைய இன்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் என்று கொள்ளலாம்.

## 276. திரிசிரபுரம் கோவிந்த பிள்ளை

இவர் கம்பராமாயணம் முழுவதையும் அச்சிட்டவர்; சுந்தரகாண்டத்தைத் தாம் எழுதிய உரையுடன்

வெளிப்படுத்தியவர்; 'வித்வத் ஜன சேகரர்' என்னும் பட்டமுடையவர். இவர் பாபநாசத்துக்கு வடக்கே யுள்ள கபிஸ்தலம் என்னும் ஊரிலிருந்து கொண்டு அங்குள்ள பெருஞ்செல்வராகிய ஸ்ரீ துரைசாமி மூப்பனார் என்பவருக்குப் பலநூல்கள் பாடம் சொல்லி விட்டுக் கம்பராமாயணமும் பாடம் சொல்லி வந்தார். இவரிடம் ஐயரவர்கள் கம்பராமாயணம் சுந்தர காண்டத்தைப் பாடம் கேட்டனர்.

## 277. திரிசிரபுரம் சோமசுந்தர முதலியார்

இவர் தொண்டை மண்டல வேளாளர்; திரிசிரபுரம் மாணிக்க முதலியாருடைய வீட்டு வித்துவானாக இருந்து விளங்கியவர்; சைவ நூல்களில் நல்ல பயிற்சியை உடையவர்.

## 278. திரிசிரபுரம் தெய்வநாயகம் பிள்ளை

இவர் திரிசிரபுரம் சிற்றம்பலம் பிள்ளை என்பவரின் குமாரர். இவர் இயற்றிய நூல் **சுப்பிரமணிய தேசிகர் இரட்டை மணிமாலை.** சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து நான்காம் குரு மகா சந்நிதானமாகத் திகழ்ந்தவர். அவருக்குப் பட்டமான காலம் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எழுநூற்றிருபத்தாறு, பிரபவாதி வருஷம் ஐம்பத்தேழு. இதன் மேற் செல்லா நின்ற ரக்தாக்ஷி வருடமென்று தெரிவதால் 'சுப்பிரமணிய தேசிகர் இரட்டை மணிமாலை'யின் ஆசிரியராகிய இவர் அக்காலத்தவரென்று தெரிகிறது. இவர் இந்நூலையன்றிப் பின்வரும் பாடலையும் செய்திருப்பதாகத் தெரிகிறது:

உலகமுணர்ந் திறைஞ்சு திரு நந்தி சனற் குமரர்
உற்ற சத்திய ஞான தெரிசனைகள் பரஞ்சோதி.
உண்மையுணர் மெய் கண்ட தேவரரு ணந்தி
உயரு மறைஞான சம் பந்தருமா பதியார்,

மலமகலக் கருணைசெயு மருணமச்சி வாயர்
மகத்துவத்தி னாற்புவியில் வருஞ் சிவப் பிரகாசர்
மனது வந்தன் படியாரிடம் வளர் நமச்சிவாயர்
மகிமைகதித் திடுமம் பலவாணர் மறைஞானர்

குலவுமுருத் திரகோடி குரவர் வேலப்பர்.
குருவிருவர் குமாரசா மிகள் மாசிலா மணியார்
குறித்திடுமி ராமலிங்க ரிருகுரு வேலப்பர்
குணத்திருச்சிற் றம்பலவ ரம்பலவா ணருஞ்சீர்

நிலவுமிரு பதின்மூன்று திருவுருவமாகி
நிறைபுவன பலவுயிர்கள் மலமகற்றி யருள் செய்
நித்தியகுரு வனைத்துமொன்றாய்த் துறைசையில்வந்துதித்தான்
நிமலவுருச் சுப்பிரமணிய குரு தேசிகனே.

இப்பாடல் தியாகராஜ செட்டியாரவர்களிடம் இருந்து கிடைத்த ஏட்டுப் பிரதியில் சுப்பிரமணிய தேசிகர் மாலையின் பின்னே எழுதப்பட்டிருந்தது. இவர் செய்தனவாக இன்னுஞ் சிலபாடல்கள் உள்ளன.

## 279. திருக்கைலைப் புலவர்

இவர் பாண்டிய நாட்டில் சங்கர நாராயணர் கோயில் என்னும் ஊருக்கு அருகிலுள்ள புளியங்குடி என்னும் ஊரில் இருந்தவர். இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர். இவர் ஊற்றுமலை அரண்மனையில் வெகுகாலம் வித்துவானாக இருந்தவர். இவருடைய குமாரர் அண்ணாமலைப் புலவர். இவர் சங்கரநாராயணர் கோயில் கோமதியம்பிகை மீது **சதகநூல்** ஒன்று இயற்றியுள்ளார். இவர் இருதயாலய மருதப்பத்தேவர்மீது பல பாடல்கள் பாடியுள்ளார் என்று தெரிகிறது. அவற்றில் ஒன்று:—

''கஞ்சனங் கைக்குமா ராயங் காட்டுமிக்
கன்னியர்க்கர சானாள்க போலமோ
கஞ்சனங் கைக்குமா ராயிற் பங்கயங்
காலுக்கன்றி யொவ்வாமயல் கூர்ந்து நன்

கஞ்சனங் கைக்குமா ராதிருக் கின்றான்
கனகசப்பிரமஞ் சத்தணை வாயையா
கஞ்சனங் கைக்குமா ராற்றல் காட்டிவெல்
காவலா இருதயாலய பாண்டியனே.''

## 280. திருக்குருகைப் பெருமாள் கவிராயர்

இவர் ஆழ்வார்திருநகரியில்இருந்தவர்; வேளாண் மரபினர்; இலக்கண இலக்கியங்களில் மிகச்சிறந்த அறிவு வாய்ந்தவர்.

நூற்றெட்டுத் திருப்பதிக் கோவை, நம்பெருமான் மும்மணிக்கோவை, மாறன்கிளவி மணிமாலை, குருகை மான்மியம் முதலிய நூல்களுக்கும் இவரே ஆசிரியர். இவர் ''திருவரங்கத்தந்தாதி'' என்னும் நூலுக்கு உரை இயற்றியுள்ளார்.

இவர் நம்மாழ்வார்பால் அன்புடையவர். அகப் பொருளைப் பற்றித் தனியே கூறும் இலக்கணமாகிய மாறனகப்பொரு ளென்ற நூல் இவரால் இயற்றப் பெற்றது. அணியிலக்கணத்தை மட்டும் தெரிவிக்கும் நூலான மாறனலங்காரம் என்பதும் இவரால் இயற் றப்பெற்றது.

''பூமாது மன்னும் புகழ்க்குருகூர் வாழ்புலவர்
கோமா னியற் பெயராற் கூறுமணிப்—பாமாலைக்
காரணனாஞ் செஞ்சொ லலங்காரன் சோலைமலைக்
காரணனா நாரணனே காப்பு.''

## 218. திருக்கோளக்குடி வெறிமங்கைபாகக் கவிராயர்

சுத்தசைவ வேளாளர் இவர். திருமூல சந்தான கோத்திரத்தினர். இவருக்கு ஒரு குழந்தையுண்டு. அது இறந்து போயிற்று. அதனால் சித்தம் மயங்கியிருந் தனர். வெறிமங்கை பாகர் என்றது இதனால் வந்த பெயர். இவர் சிவகங்கை முத்து வடுகநாததுரையும், புதுக்கோட்டைப் போசராசனும், மருங்காபுரி முத்து

வீரப் பூச்சையநாயகரும் உள்ள காலத்தும் இருந்தவர். இவர் செய்த நூல்கள் முத்துவீரப் பூச்சைய நாயக்கன் குறவஞ்சி. மேலும் நாயக்கர்மீது கோவை சீட்டுக் கவிகள் பல பாடியுள்ளார். மேலும் தனிச்செய்யுட்கள் பலவும், வசைக்கவிகள் பலவும் உண்டு.

## 282. திருச்செங்கோடு வீரபத்திரக் கவிராயர்

இவர் ஏகாலியர் குலம். இவர் பல ஊர்களுக்கும் சென்று தாம் பெற்ற கல்வியறிவை எல்லோருக்கும் பயன்படுமாறு அறிவுரைகள் கூறிவந்தார் என்று தெரிகிறது. நொய்யலாற்றுக் கரையில் உள்ள ஆனூர் என்னும் சிற்றூரில் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் என்னும் வள்ளல் மீது ஒரு காதல் நூல் பாடினார்.

> "முகஞ்சோர்ந் தகன்றிடும் ஏகாலிப் பாவலன் முன்ன நின்றே
> இகழ்ந்தேன் இலையைய என்றுசுடு நெயினிற் கையைவிட்
> டுகந்தே யுணுமெச்சில் வாயைக் கழுவி உவப்பியற்றி
> மகிழ்ந்தே புகழ்பெறு சர்க்கரை யுங்கொங்கு மண்டலமே."
>
> (கொங்குமண்டல சதகம்)

## 283. திருச்செந்தூர் வென்றிமாலைக் கவிராயர்

இவருடைய ஊர் திருச்செந்தூர். திரிஸ்வதந்தரர் (முக்காணியர்) என்னும் ஒருவகைச் சோழிய அந்தணர். முருகக் கடவுளையே வழிபட்டு வரம் பெற்றவர். இவரது மதம் சைவம். இவர் செய்த நூல்கள் திருச்செந்தூர்ப்புராணம் முதலியன. அவ்வப்போது பாடிய தனிப்பாடல்களும் உண்டு.

**காலம்:-** இவர் திருச்செந்தூர் முருகக்கடவுளின் மீது பாடிய "இப்போது தேவரீர் எழுந்தருளினது" என்னுங் கீர்த்தனத்தில்,

> எண்ணூற்றிருபத்தொன்பதாம் ஆண்டு இசையும் விசய வருடம் தைமாதத்தில் நண்ணுமிருபத்து மூன்றாந்தேதியில்........

என்று வந்திருத்தலின் இவர் கொல்லமாண்டு 289-ஆண்டிற்கு முன்னும் பின்னும் இருந்து விளங்கியவராக நினைக்கப்படுகிறார். இன்னும் அந்தக் கீர்த்தனத்தில் "காரேறு தண்டலை சூழுஞ் செழுந்தமிழ்க் காவை வடமலையப்பன் றொழுதிட" என்று பாடியிருக்கிறார். இதனால் திருநெல்வேலிச் சீமையை முன்னம் ஆண்ட **காவை வடமலையப்பன்** என்னும் பிரபுவும், அவர்மீது **வடமலைவெண்பா** வென்று ஒரு நீதி நூல் பாடிய **பாகை அழகப்பர்** என்னும் புலவர் பெருமானும் இவர்காலத்தினராக நினைக்கப்படுகிறார்கள். **வென்றிமாலை** கடைய நல்லூரிலுள்ள சாஸ்தாவின் பெயர்.

## 284. திருத்தக்க தேவர்

இவருடைய காலம், இடம் அவரை ஆதரித்த பிரபுவின்பெயர் முதலியவற்றுள் யாதொன்றும் தமிழ் நூல்களால் வெளிப்படையாக விளங்கவில்லை. ஆனாலும் சீவகசிந்தாமணி நூலுரைத் தொடக்கத்தில் நச்சினார்க்கினியர், 'இத்தொடர்நிலைச்செய்யுளைத் தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும்' என்று எழுதியிருத்தலால், இவருடைய காலம் பழமையானதென்று மட்டும் ஒரு வகையாகத் தெரிகிறது. கடைச் சங்கத்தாருக்கு அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கணமாயிருந்தனவென்பதை இறையனார் அகப்பொருளுரை முதலியவற்றாலுணர்க.

"மூந்நீர் வலம்புரி" என்னும் ஓம்படைச் செய்யுளின் உரையில் இவரைச் 'சோழகுலமாகிய கடலிலே பிறந்த வலம்புரி' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால், இவர் சோழகுலத்தில் பிறந்தவர் என்பதும், நச்சினார்க்கினியருரைச்சிறப்புப் பாயிரத்துள்ள "வண்பெரு வஞ்சிப், பொய்யா மொழி புகழ்மையறு சீர்த்தித் திருத்தகு முனிவன்" என்னும் வாக்கியத்தால், இவர் வஞ்சி என்னும் ஊரிலிருந்த பொய்யாமொழி

என்பவரால் புகழ்ப்பெற்றவர் என்பதும் வெளியாகின்றன.

சீவகசிந்தாமணி 3143-ஆம் கவியாலும், "மூவா முதலா" (சீவக) என்னும்கவியுரையினிறுதியில்எழுதப் பெற்றுள்ள, 'செம்பொன்' (சீவக.2) என்பதை முதலிலேயுடைய வாக்கியத்தாலும் இவராசிரியர் இவரை மதித்திருந்தமை புலப்படுகின்றது.

இவர் திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர் திருத்தக்க மகா முனிகள், தேவர் என்றும் வழங்கப் பெறுவர்.

ஒருவர் தம்மைக் குறிப்பால் இகழ்ந்துரைத்துக் கொண்ட பழைய செய்யுளாகிய,

> "திருத்தக்க மாமுனிசிந் தாமணிகம்பர்
> விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
> கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளணுகேம்
> எங்கெழிலென் ஞாயி றெமக்கு"

என்பதனால், இவருடைய வாக்கின்பெருமை முதலியன விளங்குகின்றன.

இத் தமிழ்நாட்டிலுள்ள ஜைனர்களுள், கர்ண பரம்பரையாக வழங்கும் இவருடைய சரித்திரம் வருமாறு:-

திருத்தக்கதேவர் சோழர் குலத்திலே உதித்து உரிய பிராயத்தே வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்றுச் சிறிது கல்விகற்ற பின்பு, நல்லாசிரியர்பால் அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், பழைய சங்கச் செய்யுட்களையும், அக்காலத்து வழங்கிய மற்ற நூல்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, இப்படியே வடமொழியிலும் வல்லவராய்ப் பின்பு தாம் மேற்கொண்ட ஆருகதசமயத்திற்குரிய நூல்கள் எல்லாவற்றையும் கற்று, அவற்றிலே அதிபாண்டித்திய முடையராய், அன்பு, அருள், வாய்மை, அடக்கம்

முதலிய நற்குணங்களனைத்தும் ஒருங்கே அமையப் பெற்று, ஆண்டில் இளையராயினும் அறிவின் முதிய ராய், இளமைப்பருவத்தே துறவறம் பூண்டு, தம்மா சிரியரை விட்டு நீங்காது அவர் கருத்தின்வழி ஒழுகு தலே தமக்குப் பெரும் பயனாகக் கொண்டு, அவ்வாறு அன்போடொழுகுவாராயினர். சிலநாட் சென்ற பின், ஆசிரியருடன் . பாண்டிவளநாட்டிலே யுள்ள மதுரா புரியையடைந்து அவ்விடத்தே சிலகாலம் அமர்ந்தனர்.

அங்ஙனம் அமரும்போது, திருத்தக்கதேவர் அம் மதுரைப்பதியிலேயிருந்த சங்கப்புலவர்களின் புலமை களையுணர்ந்து, அவர்களோடு கூடிப்பழக விரும்பி, ஆசிரியர்பால் அநுமதி பெற்றுச் சென்று அவர்களோடு நாடோறும் பயிலுவாராய்த் தமிழ்மொழியிலுள்ள பழைய செய்யுட்களின் சொற்சுவை பொருட்சுவை களை அவர்கள் எடுத்துக் கூறிப் பாராட்டத் தாமின் புற்றும், தாமும் அவ்வாறே எடுத்து மொழிந்து அவர் களை இன்புறுவித்தும்

''தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்,
இகல்இல ரெஃகுடை யார் தம்முட் குழீஇ,
நகலின் இனிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி''

(நாலடி)

என்றவாறே அவர்களோடு அளவளாவி அளவில்லாத மகிழ்ச்சியடைந்து, அவர்களால் நன்கு மதிக்கப்பெற் றிருந்தனர்.

அப்படியிருக்கும் நாட்களிலே ஒருநாள், அங்கே யுள்ளவர்கள் திருத்தக்கதேவரை நோக்கி, ''ஆருகத சமயத்தாரில் பாடும் புலவர் பலரும் துறவினை வலி யுறுத்திப் பாடத் தெரிந்து கொண்டாரே யன்றிக் காமச் சுவையைப் பாராட்டிப் பாடத் தெரிந்துகொண் டார் அல்லர். இக்காலத்து வழங்கும் காமச்சுவையை யுடைய நூல்கள் பலவற்றுள்ளும் ஒன்றேனும் அவர்

இயற்றியதாகக் காணப்படாமையே அதற்குத் தக்க சான்றாம்" என்று சொல்ல, அவர்க்குத் திருத்தக்க தேவர், "இன்பச் சுவையைப் பாராட்டுதலில் அவர் வெறுப்புற்றிருந்தார் அல்லது பாடத் தெரியாதிருந் தாரல்லர்" என்று கூற, அவர்கள் "அப்படியானால் காமச் சுவை முழுதும் விளங்க அமைத்து, தேவரே! ஒரு நூலியற்றுதிர்" என்றார்கள்.

திருத்தக்க தேவர் அவ்வணம் பாடத் துணிந்து தம்மாசிரியர்பாற் சென்று வணங்கி, நிகழ்ந்ததை விண்ணப்பம் செய்ய, ஆசிரியர் அவ்வாறு பாடுதற் கண்ணே தம் மாணாக்கர் கருத்தை அளந்தறிய ஆலோசித்திருக்கும்பொழுது, அவ்விருவருக்கும் எதிரிலே ஒரு நரியானது ஓட அதனைக் கண்ட ஆசிரியர், மாணாக்கரை நோக்கி, "இந்நரிச் சாதித் தன்மையை ஆதாரமாகக் கொண்டு உமக்குத் தோற்றியவாறே ஒரு சிறிய நூல் இயற்றுதிர்" என்று சொல்ல, திருத்தக்க தேவர் அதனை ஆதாரமாகக் கொண்டு, யாக்கை நிலையாமை, செல்வநிலையாமை முதலியவைகளெல் லாம் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிற் புலப்படும் வண்ணம் விரைவில் "**நரிவிருத்தம்**" என்னும் ஒரு நூல் இயற்றி ஆசிரியருக்குக் காட்ட, ஆசிரியர் மகிழ்ந்து பெரிதும் வியப்புற்றுத் தம் மாணாக்கர் கருத்துத் துறவின்கண்ணே உறுதி கொண்டிருத்தலை நோக்கிக் கழிபேருவகையெய்தி மாணாக்கரைப்பார்த்து, "சங்கப் புலவர்கள் கூறிய வண்ணம் காமச்சுவை பெரிதும் விளங்கும் விதம் சீவகன் கதையை ஒரு பெருங்காப்பிய மாக இயற்றுதிர்" என்று கூறி, "அஃது இடையூறின்றி இனிதுமுடிக" என்று அருகக்கடவுளைப்பிரார்த்தித்து, "செம்பொன் வரைமேல்" (சீவக. 2)என்னுஞ்செய்யுள் ஒன்று இயற்றி அதனால் அக்கடவுளைத் துதித்து, "இச்செய்யுளைக் கடவுள் வாழ்த்தாகக்கொண்டு நீர் நூலியற்றுதிர்" என்று அக்கவியைத் திருத்தக்கதேவ ருக்கு அளித்தனர்.

திருத்தக்கதேவர் அச்செய்யுளையேற்றுச்சிரமேற் கொண்டு, தாம் "மூவா முதலா" (சீவக. 1) என்னுங் கவியால் சித்தனைத் துதியா நிற்க, அக்கவியை ஆசிரியர் கேட்டு, "யான் கூறிய கவியினும் நீர் கூறிய கவி செவ்விதாய் இருத்தலால், அதனை முதலிலே நிறுத்துக" என்று சொல்ல, திருத்தக்கதேவர் தம் ஆசிரியர் கட்டளையை மறுத்தற் கஞ்சித் தாம் கூறிய சித்த சரணமாகிய "மூவா முதலா" என்னும் கவியை முன்னும், ஆசிரியர் கூறிய அருக சரணமாகிய "செம்பொன் வரைமேல்" என்னுங் கவியைப் பின்னுமாக வைத்துப் பாடத்தொடங்கி, சீவகசிந்தாமணி நூலை எட்டு நாளில் நிறைவேற்றி ஆசிரியருக்குக் காட்ட, ஆசிரியர் நோக்கிப் பெரிதும் வியந்து புகழ்ந்து, "இந்நூல் நின்று நிலவுக" என்று ஆசி கூறி "முந்நீர் வலம்புரி" (சீவக. 3143) என்னுங் கவியால் ஓம்படையுரைத்துத் தேவரை நோக்கி, "இனிச் சங்கப்புலவரிடஞ் சென்று அரங்கேற்றி வருதிர்" என்றனர்.

உடனே திருத்தக்க தேவர் சென்று பாண்டிய ராசனவைக்களத்திற் சங்கப்புலவர்கள் முன்னிலையில் இந்நூலை வாசித்துக்காட்ட, அவர்கள் கேட்டு, இந்நூல் சொல்வளம் சந்தவின்பம் செய்யுளிடை முதிர்ச்சி காமச்சுவை முதலியனவும் அலங்காரங்களுமுடைத்தாய், எவ்வெச் சாதியார்க்கும் காலம் இடம் முதலியவற்றிற்கும் ஏற்ற வருணனை முதலியன பெற்றிருத்தலைத் தெரிந்து வியப்புற்றுச் சிரந் துளக்கி, "இங்ஙனம் பாடுதல் யாவர்க்கும் அரிதரிது" என்றுபுகழ்ந்து நன்கு மதித்து மிகப்பாராட்டிப் பெருமகிழ்ச்சியடைந்தனர்; அரசனும் அவ்வாறே புகழ்ந்துபாராட்டினான்; மற்றையோரும் மகிழ்ச்சியடைந்தனர்.

அப்படி நிகழ்ந்தபொழுது ஆங்குள்ளாரிற் சிலர் ஐயமுற்று, "இத்திருத்தக்கதேவர் இளமைப் பருவந் தொடங்கித் துறவு பூண்டிருத்தல் மெய்ம்மையாயின் மற்றச் சுவைகள் போலக் காமச்சுவையை இவ்வாறு

பாராட்டிப் பாடுதல் இவர்க்கு இயலுவதன்று, சீவக சிந்தாமணி என்றும் இந்நூலின் கண்ணோ அச்சுவை அதிகரித்துள்ளது; ஆதலின், இவர் சிற்றின்ப அனுபவ முடையராதல் வேண்டும்" என்று தம்முட் பேசிக் கொண்டனர்.

அதனைத் தேவர் தெரிந்து அவ்வனைவரும் காணும்படி, திரண்ட இரும்பின் கட்டியைத் தழலிற் பழுக்கக் காய்ச்சி வருவித்து, "யான் பாலசந்நியாசி யாக விருத்தல் மெய்ம்மையாயின், இஃது என்னைச் சுடாது ஒழிக" என்று சூளுரைத்து, அக்கட்டியைத் தம் கையினால் தழுவியும் நாவாற் பரிசித்தும் தாம் யாதொரு துன்பமும் அடையாது இன்புற்றிருந்தனர்.

தேவர் அங்ஙனமிருத்தலை முன்பு ஐயமுற்றுப் பேசினோர் கண்டு அஞ்சி, "யாம் என்ன காரியஞ் செய்தோம்!" என்று நடுநடுங்கி, அவரை வணங்கி, "யாங்கள் கருதிப் பேசிய பெருங் குற்றத்தைப் பொறுத் தருள்க" என்று பலமுறை இரந்து வேண்டிக்கொண் டனர். தேவர் அவர்களை நோக்கி, "நீவிர் எனது துறவொழுக்கத்தைப் பலரும் அறியச் செய்திராதலின், எனக்குக் குற்றஞ் செய்தீரல்லீர்; இதுபற்றி நீவிர் அஞ்சன்மின்" என்று பல இனிய மொழிகள் கூறி, அவர்களது அச்சத்தை அகற்றினர்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சங்கப் புலவரும், பாண்டியவரசனும் திருத்தக்க தேவரது துறவொழுக்கத்தையும், மற்ற மேம்பாடு களையும் மிக வியந்து பாராட்டினார்கள்.

பின்பு தேவர் அவர்களிடத்து விடைபெற்றுச் சென்று தம்மாசிரியரிடத்தே ஆங்கு நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறி உடனுறைவாராயினர்.

இவர் இயற்றிய நூல்: **1. நரிவிருத்தம் 2. சீவக சிந்தாமணி.**

## 285. திருத்தணிகை விசாகப் பெருமாளையர்

இவர் பரம்பரையாக வித்துவான்களாக இருந்த குடும்பத்தில் உதித்தவர். வீர சைவர். இவருடைய தந்தையார் திருத்தணிகைக் கந்தப்பையரென்னும் சிறந்த தமிழ் வித்துவான். இவர் இயற்றமிழாசிரியரென்று வித்துவான்களால் அளிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றவர். மழவை மகாலிங்கையருக்குப் பிறகு சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழாசிரியராக இருந்து விளங்கியவர்; சென்னையில் துரைத்தனத்தார் அமைத்த கல்விச் சங்கத்துத் தமிழாசிரியராகவும் இருந்தனர்.

பல தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரை எழுதிப் பதிப்பித்திருக்கிறார். மாணாக்கர்களுக்குப் பெரிதும் உபகாரமாக இருக்கும் பொருட்டுப் பொருளிலக்கணத்தைத்தவிர மற்றநான்கு இலக்கணத்தையும் வினாவிடையாக எழுதியிருக்கின்றார்; **பால போத இலக்கண**மென்ற வசன இலக்கணத்தையும், திருக்குறளுக்குத் **தெளி பொருள் விளக்க**மென்ற ஓர் உரையையும் நன்னூலுக்குக் **காண்டிகை உரை**யொன்றையும் எழுதி அச்சிட்டார்.

இவர் இலக்கணப் புலமை மிக்கவராதலின் இலக்கணம் விசாகப் பெருமாளையரெனவும் வழங்கப் படுவர்.

## 286. திருநெல்வேலி அம்பலவாண கவிராயர்

இவர் சைவவேளாளர். திருவாவடுதுறைஅம்பலவாண தேசிகர்மீது **வண்ணம், இரட்டைமணிமாலை**ஆகிய பிரபந்தங்கள் இயற்றியவர். முதலில் இவருடையஇயற்பெயர் வேறென்றும் அம்பலவாண தேசிகருடைய முன்னிலையில் தமிழ்ப் பிரசங்கம் செய்து—விரைந்து செய்யுள் செய்து தம் பெயரையே அவர் நன்கொடை

யாக அளிக்கப் பெற்றவரென்றும் தெரிகின்றது. சிறந்த தமிழ் வித்துவானாகிய முத்துக்குமாரகவிராயர் என்பவர் இவருடைய புத்திரர்.

### 287. திருநெல்வேலி அழகியசொக்கநாதபிள்ளை

ஆசுகவி. ஆனால் தமிழிலக்கண இலக்கியங்களில் மிக்க பாண்டித்தியம் உள்ளவரல்லர் என்பர். ஐயரவர்கள் இவரைப் பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### 288. திருநெல்வேலிச் சாலிவாடீசுர ஓதுவாமூர்த்தி

இவர் சில நூல்களைத் திருத்திப் பதிப்பித்திருக்கிறார்.

### 289. திருநெல்வேலி நெல்லையப்ப பிள்ளை

இவர் செய்த நூல் திருநெல்வேலிப்புராணம். இந்தப் புராணப் பதிப்பின் பாயிரத்தில் இவர் சரித்திரம் உள்ளது.

### 290. திருநெல்வேலி முத்துக் குமாரசாமி பிள்ளை

இவர் நன்னூலின் உரையாசிரியராகிய திருநெல்வேலிச் சங்கர நமச்சிவாயருடைய புதல்வர். திருவாவடுதுறைத் திருச்சிற்றம்பல தேசிகருடைய சிஷ்யர். இவர் காலம் சாலிவாகன சகம் 1695, கொல்லமாண்டு 948. இவர் சிவஞான சித்தியார் பரபக்ஷத்திற்கு ஒருரை செய்திருக்கின்றனர்.

### 291. திருப்பத்தூர் முத்து மாரிக் கவிராயர்

இவர் வாலசரஸ்வதியென்று புகழ்பெற்றவர். தம்பிப்பட்டி முத்து வேலுக் கவிராயருடைய பாட்டனார். மருதுபாண்டிய சமூக வித்துவான்களில் ஒருவர்.

## 292. திருப்பறியலூர்ச் சபாபதி பிள்ளை

இவர் ஒரு புலவர். இவரால் செய்யப்பட்ட தனிச் செய்யுட்கள் சில ஆங்காங்கு வழங்குகின்றன. இவர் செய்துள்ள திருப்பறியலூர் கும்பாபிடேக சிறப்புப் பாடல் ஒன்றினால் இவர் சாலிவாகன சகாப்தம் 1780ல் இருந்ததாகத் தெரிகின்றது.

## 293. திருப்பாதிரிப்புலியூர்ச் சிவசிதம்பர முதலியார்

இவர் பிள்ளையவர்களின் மாணாக்கர்; யோகப் பயிற்சி உள்ளவர்; திருப்பாதிரிப்புலியூர் விஷயமாகச் சில பிரபந்தங்களை இயற்றினவர்.

## 294. திருப்பாற்கடல்நாதன் கவிராயர்

இவர் திருநெல்வேலியைச் சார்ந்த வண்ணார் பேட்டையில் இருந்தவர். இவர் சென்ற நூற்றாண்டில் உறையூரிலிருந்த விசுவகுல திலகராகிய முத்துவீர வாத்தியார் என்பவரால் இயற்றப்பெற்றதான **முத்து வீரியம்** என்ற இலக்கண நூலுக்கு உரைஎழுதியுள்ளார்.

## 295. திருப்பூவணம் ஒளிவைரப் புலவர்

250வருடங்களுக்கு முன்புஇருந்தவர் இவரென்று ஐயரவர்கள் குறித்துள்ளார்கள். இவர் வரலாறு திரிசிரபுரத்தில் நடைபெற்றுவந்த செந்தமிழ்ச் செல்வனென்னும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

## 296. திருமயிலை அப்பாசாமி முதலியார்

இவர் மயிலாப்பூர் காருணீசர் சந்நிதித்தெருவில் உபாயத்தியாயராக இருந்தவர். இவரியற்றிய சில நூல்களுள் ஒன்று திருமயிலைக் கபாலீசர் துதி.

## 297. திருமாளிகைத் தேவர்

ஒரு சித்தர். திருவிசைப்பாக்கள் இயற்றிய ஆசிரியர்களுள் ஒருவர். போகநாதர் என்னும் சித்தருடைய சீடர்களில் ஒருவர், இவர் சைவ வேளாள குலத்தினர். சோழ மன்னர்களின் தீட்சா குருவாக இருந்தவர். இவரது காலம் 9-ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

இவர் திருவாலங்காட்டுப் புராணத்திலும், அகோரதேவர் செய்த மறைசைப் புராணத்திலும், காளையார் கோயில் புராணத்திலும் துதிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரு சமயம் திருவாவடுதுறைக் கோயில் மதில்களின் மேலுள்ள நந்தி உருவங்களையெல்லாம் உயிர் பெறச் செய்து ஒரு பகையரசனோடு போர்புரிய அனுப்பினார் என்பது பழைய வரலாறு.

## 298. திருமூல நாயனார்

இவர் சரித்திரம் பெரிய புராணத்திலும், திருவாவடுதுறைப் புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. சிவ புராணத் தோத்திர மஞ்சரி என்னும் அச்சுப்பிரதியில் இவர் துதிகள் உள்ளன. அவை:-

"திருமூலர் மாலையெனும் தெப்பத்தைப் பற்றிக்
கருவேலை யைக்கடப்போங் காண்"

**பதிபசு பாச விளக்கம்**

"ஐய மாகட லாழ்ந்த வுயிர்க்கெலாம்
கையி லாமல கம்மெனக் காட்டுவான்
மைய றீர்திரு மந்திரம் செப்பிய
செய்ய பொற்றிரு மூலனைச் சிந்திப்பாம்"

இவர் திருவாவடுதுறைத் தலத்தில் தவம் புரிந்து திருமந்திரத்தை அருளிச் செய்தனர்.

திருவாவடுதுறைக் கோயில் பலிபீடத்தில் திருமந்திரத்தைத் திருஞான சம்பந்தர் எடுத்ததாகக் கர்ண

பரம்பரையில் ஒரு சரித்திரம் வழங்குதலின் இவர் காலம் திருஞான சம்பந்தர் காலத்திற்குமுந்தியதென்று தெரிகின்றது.

இவரியற்றிய திருமந்திரத்திற்குக் கைலாச சித்தரென்பவர் உரை செய்திருக்கின்றார்.

## 299. திருவம்பலத் தின்னமுதம் பிள்ளை

இவர் திருநெல்வேலி அம்பலவாண கவிராயருடைய மாணாக்கர்களுள் ஒருவர்; திருச்சிற்றம்பலத் தின்னமுதம் **பிள்ளை**யென்றும் வழங்கப்படுவர். **பிள்ளை**யவர்கள் காலத்தில் சென்னையில் இருந்த வித்துவான்களுள் இவரும் ஒருவர்; மயிலாப்பூரில் உள்ள திருவண்ணாமலை மடத்தில் இருந்தவர். இவரிடம் **பிள்ளை**யவர்கள் கல்லாடம், திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார், திருக்குறள்—பரிமேலழகருரை முதலியவற்றிலுள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தனர். இவர் **பிள்ளை**யவர்களுக்குத் தமிழ் நூல்களிலுள்ள வேட்கைப் பெருக்கத்தையும், இயற்கையறிவினையும், முன்னரே அவருக்கு அமைந்திருக்கும் அகன்ற நூலாராய்ச்சிப் பெருமையையும், ஞாபக சக்தியையும், அடக்கத்தையும், தருக்கின்மையையும், நட்புடைமை முதலியவற்றையும் குறித்து வியந்தவரானவர்.

> "கலைமுழு துணர்ந்த கவிஞர் குழாத்துள்
> தலைமை நடாத்துஞ் சைவ சிகாமணி
> நாச்சுவை யமுதினு மோங்குநனி சிறக்கும்
> பாச்சுவை யமுதைப் பற்பக றோறும்
> பெருவா னாட்டுப் புலவரும் பெட்புறத்
> தருமீ னாட்சிசுந் தரநா வலனே"

என்று இவர் **பிள்ளை**யவர்கள் இயற்றிய **அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழுக்குத்** தாம் கொடுத்த சிறப்புப்

பாயிரத்தில் அவரைப் பாராட்டியிருக்கின்றனர். இவர், காஞ்சீபுரம் சபாபதி முதலியார், எழும்பூர்த், திருவேங்கடாசல முதலியார் ஆகிய மூவரும் ஒருவருடைய வீட்டிற்கு ஒருவர்போய் நூலாராய்ச்சியின்விஷயமாக ஒருவரோடொருவர் அளவளாவி இன்புறுவது வழக்கம். அநேக புஸ்தகங்கள் ஏட்டில் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவர் எழுதிய ஏடுகளின் இறுதியில் திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை என்ற கையெழுத்திருக்கும். இவர் சங்கச் செய்யுட்களில் மிக்க பழக்கமுடையவர். இவருடைய கையெழுத்துப் புஸ்தகங்கள் இப்பொழுதும் இருக்கின்றன. அப்புஸ்தகங்களில் இவர்எழுதிய சுலோகத்தால் வடமொழியிலும் இவருக்குப் பரிச்சயம் உண்டு என்று தெரிகிறது. **அபிதான மாலை** என்னும் நிகண்டு நூலொன்று இவராற் செய்யப்பட்டுள்ளது.

## 300. திருவாரூர் ஓப்பிலாமணி தேசிகர்

இவர் வேளாளர்; இவரது ஊர் சோழநாட்டிலுள்ள திருவாரூர். சமயம்: சைவம். வைத்தியநாத தேசிகருடையமாணவர்; "**சிவ ரகசியம்**" என்னும்நூலை இயற்றியவர். இந்நூலில் சிவவணக்கம், வில்வமகிமை, பஞ்சாட்சர மகிமை முதலியன கூறப்பட்டுள்ளன. இவருடைய காலம் 19-ஆம் நூற்றாண்டு.

"வந்தனை செய்வோர் நெஞ்சில்
வாசனை மால யற்கும்
சிந்தனை செய்தற் கெட்டாத்
தேவனைத் தேவர் கோனை
வந்தனைக் காழி வாழ்சம்
பந்தனை கடப்பந் தாமக்
கந்தனைத் தந்தோன் தன்னைக்
கருத்தனைக் கருத்துள் வைப்பாம்."

இச்செய்யுள் சிவரகசிய வரலாற்றுச் சருக்க முதற் செய்யுள்.

## 301. திருவாரூர்த் தியாகராச தேசிகர்

இவர் திருவாரூர்ச் சதாசிவ தேசிகருடைய புத்திரர், **அன்பர் போற்றிக் கலிவெண்பா** என்னும் நூலொன்று இவராற் செய்யப்பட்டுள்ளது. வைத்திய நாத தேசிகருடைய பேரர்.

## 302. திருவாரூர் வைத்தியநாத தேசிகர்

இவர் வன்மீகி நாத தேசிகர் என்பவருடைய புதல்வர். சைவப் பெரியாராகிய இவரால் குட்டித் தொல்காப்பியம் என்றும் வழங்கப்படும் **இலக்கண விளக்கம்** என்னும் நூல் இயற்றப்பெற்றது. "திருவாரூரிற் றிருக்கூட்டத்திற் றமிழ்க்கிலக்கரிய வைத்திய நாதன்" என்று இந்நூலாசிரியர் இலக்கணக் கொத்துடையாராற் பாராட்டப் பெற்றுள்ளார்.

இவர் காலத்தில் இருந்த செல்வர் சூணாம்பேட்டு முதலியார் ஒருவரையடைந்து தமது கல்விப் பெருமையைப் புலப்படுத்திப் பெற்ற மானியமும், உப்பளமும் இவருடைய பரம்பரையோரால் அனுபவிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிகிறது. இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய முந்நூற்றிருபது வருஷங்களுக்கு முன் என்று தெரிகிறது.

## 303. திருவாலியமுதனார்

திருவாலியென்பது ஓரூர். அது சீகாழியைச் சார்ந்துள்ளது. திருமங்கையென்று அழைக்கப்படுவர். இவர் திருவிசைப்பா நூலாசிரியர்களுள் ஒருவர்.

இவர்பாடிய திருவிசைப்பாப்பதிகங்கள் நான்கு. அவையனைத்தும் கோயில் என்னும் சிதம்பரத்தைப் பற்றியன. இவருடைய காலம் முதலாம் இராசராச சோழனுடைய காலத்திற்கு முற்பட்டது என்று தெரிகிறது.

"வைத்த பாதங்கள் மாலவன் காணகிலன்
மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந் தின்னமுந் துதிக்கின்றா
எழில்மறை யவற்றாலே
செய்த்த லைக்கம லம்மலர்ந் தோங்கிய
தில்லையம் பலத்தானைப்
பத்தி யாற்சென்று கண்டிட என்மனம்
பதைபதைப் பொழியாதே.

## 304. திருவாவடுதுறை இராமலிங்கத் தம்பிரான்

திருவாவடுதுறை மடத்துக்கு வந்து இளமையிலேயே துறவுபூண்ட தம்பிரான்களுள் ஒருவர்; ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் நூல்கள் பாடங்கேட்டவர். இவர் இலக்கண இலக்கியங்களிலும் செய்யுள் இயற்றுவதிலும் பயிற்சியுள்ளசிறந்த கவிஞர். மடத்திற்கு வரும் வித்துவான்கள் இவருடைய செய்யுட்களைக் கேட்டு நல்ல பாடல்களென்று பாராட்டுவார்கள். 'தமக்கும் நண்பராதலின் தம்பால்மிக்க அன்புடையவராகிப் பழகி வந்தார்' என்று இவரைப் பற்றி ஐயரவர்கள் வித்துவான் தியாகராச செட்டியார் சரித்திரத்தில் எழுதியிருக்கின்றனர்.

இவர் வித்துவான் தியாகராச செட்டியாரவர்களோடு பலகாலம் பழகியவர். பிற்காலத்தில் **வாட்போக்கிப் புராணத்தில்** ஒரு பகுதியை இவர் செய்யுளாக இயற்றியிருக்கிறார்.

## 305. திருவாவடுதுறை இராமலிங்க தேசிகர்

இவர் துறைசை ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகளிலொருவர்.

சங்கர நமச்சிவாயருடைய குமாரர் முத்துக்குமாரசாமிக் கவிராயருடைய ஆசிரியர்.

## 306. திருவாவடுதுறைச் சிவப்பிரகாச முனிவர்

இவர் திருக்களிற்றுப்படியாருக்கு உரை செய்தவர். பின்னுள்ள வெண்பா அதன் உரைச் சிறப்புப் பாயிரம்.

சேடன் படிபுரக்கும் தென்கடவூ ருய்யவந்தான்
பாடுங் களிற்றுப் படிதனக்கு—நீடிமையோர்
தேடுபுகழ்ச் செஞ்சொற் சிவப்பிரகா சன்றிருந்த
நாடியுரை யிட்டான் நயந்து.

## 307. திருவாவடுதுறைச் சுப்பிரமணியத் தம்பிரான்

இவர் தொண்டை நாட்டிலுள்ள ஆயலூர் முருகன்மீது பிள்ளைத் தமிழ் பிரபந்தம் ஒன்று செய்தவர். அந்த நூற் கையெழுத்துப் பிரதியில் திருவாவடுதுறை யம்பலவாண தேசிகர் ஞானபுத்திரனான சுப்பிரமணியத் தம்பிரான் செய்தது இந்நூல் என்று எழுதியிருத்தலால் இவருடைய ஆசிரியர் இன்னார் என்பது ஒருவாறு புலப்படுமாயினும் இன்ன அம்பலவாண தேசிகர் என்பது நன்றாக விளங்கவில்லை.

## 308. திருவாவடுதுறைச் சுப்பு ஓதுவார்

இவர் தமிழ் இலக்கியப் பயிற்சியுடையவர்; திருவாவடுதுறை யாதீன ஓதுவார்களில் ஒருவர்; மதுரை இராமசாமி பிள்ளையென்பவர் ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் முன்பு அடங்கன் முறையைப் பரிசோதித்த பொழுது முழுவதையும் பண்ணோடு படித்துக் காட்டியவர். பிள்ளையவர்கள் கண்டதேவிப் புராணம் செய்வதற்குத் திருவாவடுதுறையிலிருந்து கண்டதேவி என்னும் சிவஸ்தலத்துக்குப் புறப்பட்டுச் சென்ற போது அவருடன் சென்றவர்களுள் இவரும் ஒருவர்.

## 309. திருவாவடுதுறை நமச்சிவாயத் தம்பிரான்

இவர் சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியாருக்கும் இருபாவிரு

பஃறாதிற்கும் வினாவெண்பாவிற்கும் கொடிக்கலிக்கும் உரை செய்தவர்.

திருவாவடுதுறை மடத்து இருபாவிருபஃதுரை ஏட்டும் பிரதியொன்றில் 'துறைசை வேலப்ப தேசிகர் சிஷ்யர் நமச்சிவாயத் தம்பிரான்' என்பது எழுதப்பட்டிருக்கிறது. அந்த ஆதீனத்தில் வேலப்பதேசிகர் என்ற ஆசிரியர்கள் சிலர் உள்ளனராதலின் இன்ன வேலப்ப தேசிகரென்பது விளங்கவில்லை.

இவர் சிவாநுபூதி விளக்கமென்னும் நூல் ஒன்றுக்கு உரை செய்திருப்பதாகவும் தெரிகிறது. இந்த நூல்-65 கண்ணிகளையுடையது.

## 310. திருவாவடுதுறையாதீனத்துச் சுவாமிநாத தேசிகர்

இவர் தமிழிலுள்ள இலக்கண இலக்கியங்களிலும் அவற்றின் உரைகளிலும் இலைமறை காய் போற் காணப்படும் அரிய விஷயங்களைத் தொகுத்து மூன்று பாகுபாடு செய்து மிகத் தெளிவாகச் சூத்திர ரூபமாக **இலக்கணக் கொத்து** என்றோர் இலக்கண நூலை இயற்றியவர்.

## 311. திருவியலூர் ஆளவந்த தேவநாயனார்

இவர் இயற்றிய ஒரு நூல் 45-கலித்தாழிசையிலுள்ளது.

**காலம்:** சாலிவாகன சகாப்தம் 1070. திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனாருடைய ஆசிரியர் இவர். திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரென்றும் கூறப்படுவர்.

[திருவியலூரென்பது சோழ நாட்டில் கும்பகோணத்திற்கு ஈசானதிசையில் 3—நாழிகை வழித்தூரத்தில் காவிரியின் வடகரையில் உள்ளது. பாடல் பெற்ற சிவஸ்தலம் திருவிசை நல்லூர்.]

## 312. திருவீழிமிழலைச் சாமிநாத கவிராயர்

இவர் திருவீழிமிழலையிலுள்ள கல்விமான்கள் சிலரிடம் கருவி நூல்களையும் திருவிளையாடற் புராணம் முதலிய காப்பியங்களையும் முறையே பாடங் கேட்டுத் தெளிந்தனர். பின்பு கம்பராமாயணம், பெரிய புராணம் முதலியவற்றை வாசிக்க வேண்டுமென்னும் விருப்பமுடையவராய்க் குரோதி வருஷத்தில் திரிசிர புரம் வந்து பிள்ளையவர்கள்பால் முதலில் கம்ப ராமாயணத்தைப் பாடங்கேட்டார். இவருடைய நுண் ணறிவையும் இனிய சாரீரத்தையும் அறிந்த பிள்ளை யவர்கள் பிரியத்துடன் பாடஞ்சொன்னார். தாமே எழுதிவைத்த கம்பராமாயண ஏட்டுச்சுவடியொன்றை இவருக்குக் கொடுத்தார். இவர் அவருடைய பேரன்பி னால் அந்நூலில் நல்ல பயிற்சியடைந்தார். அதிலிருக் கும் கருத்தைப் பிறருக்குச் சுவைபடச் சொல்லி மகிழ் விக்கும் ஆற்றலையும் பெற்றார்; அடிக்கடி பிறருடைய முயற்சியினால் அவருக்குத் தெரியாமல் தனியே வேறி டஞ்சென்று கம்பராமாயணப் பிரசங்கம் செய்து வந்தார். அதற்குக் காரணம் அவர்பாலுள்ள அச்சமும் நாணமுமே.

அவ்வாறு இவர் இருத்தலையறிந்து ஒரு நாள் அவர் இவர் பிரசங்கஞ்செய்யுமிடஞ் சென்று மறைவாக இருந்து கேட்டு வியப்புற்று இவரைப் பின்னும் பிரகாசப் படுத்தவேண்டும் என்று நினைத்தார். சில காலத்துக்குப் பின்பு ஒரு சபை கூட்டிக் கம்பராமா யணத்திலுள்ள சில சுவையான பாகங்களை எடுத்துப் பிரசங்கிக்கச் செய்து "கம்பராமாயணப் பிரசங்கவித்து வான்" என்ற பட்டத்தை அளித்ததன்றிச் சால்வை யொன்றையும் தமது கையாலேயே வழங்கினர். அது முதல் இவருக்குத் தமிழ் நாட்டிற் கம்பராமாயணப் பிரசங்க விஷயத்தில் மிக்க கௌரவம் உண்டாயிற்று. வாழ்நாள் முழுவதும் கம்பராமாயணம் முதலியவற்

றைப் பிரசங்கம் செய்து காலங்கழித்து வந்தார். தம்மை நன்னிலைக்குக் கொண்டு வந்த பிள்ளையவர்களை மறவாமல் எந்த இடத்திற் பிரசங்கம் செய்தாலும் அவ்வாசிரியருடைய துதியாக ஒரு பாடலைச் சொல்லி விட்டுத்தான் பின்பு பிரசங்கிக்கத் தொடங்குவார். இங்ஙனம் இவர் துதியாகச் செய்த பாடல்கள் பல.

## 313. திருவெண்ணெய்நல்லூர் இராசப்பக் கவிராயர்

இவர் ஒன்பது சருக்கங்களும், 514 திருவிருத்தங்களும் உள்ளதாகிய **திருநாவலூர்ப் புராணம்** செய்தவர்.

## 314. திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர்

இவர் சந்தானாசிரியர் நால்வருள் ஒருவர். இவருடைய துதிகள் சிவபுராணாதி தோத்திர மஞ்சரியில் (330-ஆம் பக்கம்) வந்துள்ளன.

திருக்கைலாய பரம்பரையில் பரஞ்சோதி முனிவருடைய மாணாக்கர். இவர் பன்னிரண்டு சூத்திரங்களாலாகிய **சிவஞானபோத**மென்னும் நூல்செய்தகாலம் சாலிவாகனசகாப்தம் 1145. இவர் மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மர்.

அடியிற் குறித்த செய்யுட்கள் சிவஞான போத ஏட்டுப் பிரதியொன்றில் எழுதப்பட்டிருந்தன.

### எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

மெய்க்கடந்த வச்சுதனாங் களப்பாளன்றான்
விருப்பமிகுஞ் செல்வனுக்காய் வெண்காடெய்தி
முக்குளத்திற் படித்து தவம் புரியவேண்டி
மோனியெனு மொருபுதல்வன் முதல்வனீந்தான்
தக்கபுகழ்ச் சுவேதவனப் பெருமாளென்று
தனையனுக்குத் திருநாமந்தரிப்பித் தைந்து
கைக்களிறு வரங்கொடுக்கும் வெண்ணெய் நல்லூர்க்
காங்கயபூ பதிமனையிற் கலப்பித் தானே.

பன்னுசிவ சமயநெறி பரவ வேண்டிப்
பரஞ்சோதி யடிகளிந்தப் பதியின் மேவி
மன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமா ளிங்கே
வருகவென விளம்புதலு மவுன நீங்கித்
தன்னிகரி லவனதருள் பெற்று நாளுஞ்
சைவநெறி தழைத்தோங்கத் தமிழ்நூல் செய்தான்
அன்னையிலன் புடையவன்மெய் கண்ட தேவன்
அடியவருக் கடியவர்தா ளகத்துட் சேர்ப்பாம்.

**வெண்பா**

வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வர்
ஓது தமிழிதனி லுள்ளூறுநெய்—போதமிகு
நெய்யின் சுவையாகு நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழின் றிறம்.

பன்னு மிவற்றுட் பயோததியாம் வேதங்கள்
மன்னிய சைவம் வரனுடையோர்—சொன்னதமி
ழாமினித்த தெள்ளமுத மார்சுவையா மெய்கண்டான்
தானுரைத்த தெய்வத் தமிழ்.

## 315. திருவேகம்ப நயினார்

இவர் நாலடியாருக்கு விருத்தியுரையொன்று செய்திருக்கின்றனர்.

## 316. திருவையாற்றுத் தீர்த்தகிரி தேசிகர்

இவர் சாலிவாகன சகம் 1507, திருவு(ஆ)றைப் புராணத்திற்கு உரை செய்தவர்.

## 317. தில்லையாடி அருணாசல செட்டியார்

இவர் வீரசைவர். பிறைசை அருணாசல சுவாமிகளிடம் படித்தவர். வேதாந்த நூல்களில் மிக்க பழக்கமுடையவர்.

## 318. திவாகர முனிவர்

இவர் ஒரு **நிகண்டு நூல்** இயற்றியுள்ளார். அம்பர்ச் சேந்தன் பிரபு இவரை ஆதரித்தார். அவருடைய

வேண்டுகோளால் இயற்றப்பட்டதாதலால் **சேந்தன் திவாகரம்** என்று வழங்கலாயிற்று; இந்த **அம்பர்** என்ற ஊர் பூந்தோட்டம் இரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது.

## 319. துழாவூர் நிரம்ப அழகிய தேசிகர்

இவர் **சேதுபுராண** நூலாசிரியர். இவருடைய ஊர் துழாவூர்; வடமொழி, தென்மொழிகளில் அதிக பரிசயமுடையவர். சிவஞான சித்தியார் முதலிய நூல்களுக்கு உரை செய்திருக்கின்றனர். சேதுபுராணம் அவையடக்கத்தின் பின்புள்ளதாகிய "விரிதரு பைங்கட லுலகம்" என்னும் சிறப்புப்பாயிரத்தாலும் திருவாரூர்ப் புராணமாகிய நகர காண்டத்தின் பாயிரத்தில் உள்ள "உரு நிரம்பு பவப்பிணி" என்னுந் துதியாலும் இவருடைய பெருமைகள் நன்கு விளங்குகின்றன.

மேற்கூறிய "உரு நிரம்பு பவப்பிணி" என்னுஞ் செய்யுளால் ஆரூர்ப்புராண நகர காண்டஞ்செய்த சம்பந்த முனிவருடைய ஆசிரியர் என்றும் தெரிகிறது.

இந்த நகர காண்டத்துப்பாயிரத்தின் இறுதியில் உள்ள "பார்புகழ் சகாப்தம்" என்னும் செய்யுளால் சம்பந்த முனிவர் நகர காண்டத்தை அரங்கேற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் 1514 ஆண்டு ஆகிய பிங்கலம் என்று தெரிதலால் அவருடைய ஆசிரியராகிய இவர் 307 வருடத்திற்கு முற்பட்டவர் என்று தெரிகின்றது.

சேதுபுராணத்தின் இறுதியிலுள்ள "மாது மலை" என்னும் வாழ்த்துச் செய்யுளில் "இராமநாத மா முனிவனீடூழி வாழ்க வாழ்க" என்று இவர் கூறியிருத்தலால் இவர் காலத்தில் இராமநாத முனிவரென்று ஒருவர் இருந்ததாகவும் தெரிகின்றது.

**பாவலர் சரித்திர தீபகத்தில்** இவரைப்பற்றிச் சில விசேடங்கள் எழுதப்பட்டுள்ளன.

இவர் சிஷ்ய பரம்பரை மடம் துழாவூரில் இருக்கின்றது.

## 320. துறைசை நமச்சிவாயத் தம்பிரான்

இவர் பாச்சிலாச்சிரமம் கோயில் விசாரணை செய்து கொண்டிருந்தவர். இந்த ஸ்தலம் திருவாசி யென்றுங் கூறப்படும். 500 செய்யுளுள்ள திருப்பாச்சிலாச் சிரமப் புராண ஆசிரியர் இவர்.

## 321. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

துறைமங்கலம், பெரும்புலியூர்த் தாலுகாவிலுள்ளதோரூர். இவர் சிவப்பிரகாசையர் என்றும் நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர் என்றும் கூறப்படுவார். இவர் தருமை வெள்ளியம்பலத்தம்பிரானவர்களுடைய மாணாக்கர். தம் ஆசிரியராகிய தருமை வெள்ளியம் பலத் தம்பிரானவர்களுடன் தக்ஷிணயாத்திரை செய்த காலத்தில் திருச்செந்தூரில் அவரைக் குதர்க்க வாதம் செய்து ஒரு புலவர் நிந்தித்தார்.

ஆசிரியர் செய்த சபதப்படியே அவருக்காக இவர் **திருச்செந்தூர் நிரோட்டக யமக அந்தாதி** பாடி வென்று அப்புலவரை அடிமையாக்கினர். இவருக்கு விரைவிற்பாடுந்திறமையுண்டு; திருவண்ணாமலையை வலம் வரத்தொடங்கிய இவர் ஒரு முறை வருவதற்குள் **சோணசைலமாலை**யைப் பாடிமுடித்தார்.

இவர் பெருந்துறவி; எல்லையற்ற சிவபக்தி உடையவர்; அடியவர்பால் மிக்க அன்பு பூண்டவர்; வேதாந்த உணர்ச்சியும் ஆகம உணர்ச்சியும் மிகவுடையவர். அலங்கார சாஸ்திரத்தில் மிக்க பரிசயம் உள்ளவர். இலக்கண விஷயங்களைத் தாம் இயற்றும் நூல்களில் ஆங்காங்குப் புலப்படுத்துவார். இவை இவர் பாடிய சோணசைலமாலையினால் நன்கு விளங்கு

கின்றன. இவரைப் பற்றி வியந்து கருணைப் பிரகாசர் முதலியோர் பாடியிருக்கின்றனர். இவர் தருக்க நூலி லும் பரிச்சயம் உள்ளவர். இவர் திருக்குறளின் கருத் தைத் தம் பாடல்களில் நிரம்ப உபயோகித்திருக்கின் றனர்.

இவர் செய்த நூல்களுள் **சிவப்பிரகாச விகாச**மும் ஒன்றென்று அடியில்உள்ள செய்யுள் தெரிவிக்கின்றது.

பொன்புரை கடுக்கை வேணிப்
புகன்றவா கமக்கு ளத்தைத்
தன்பெயர் விகாச நாமச்
சருக்கரை யாச்ச மைத்தான்
குன்றவிற் குழகன் வாழும்
கூவநற் சரிதந் தன்னைத்
தென்றமிழ்க் கவிபு னைந்த
சிவப்பிர காசன் றானே.

கற்பனைக் களஞ்சியம் என்றும், கவிதா சார்வ பௌமரென்றும் அறிஞர்களால் பாராட்டப்படும் இவர் திருவெங்கை என மருவி வழங்கும் வெங்கனூர் என்னும் தலவிஷயமாக 'மந்திரிக்கோவை'யென்று புலவர்களால் சிறப்பித்துப் புகழப்படும் **திருவெங்கைக் கோவை**யும், **திருவெங்கையுலா**வும், **திருவெங்கைக் கலம் பக**மும், **திருவெங்கையலங்கார**முமாக நான்கு பிரபந் தங்கள் பாடியுள்ளார். திருவெங்கைக் கோயிலைக் கட்டிய அண்ணாமலை ரெட்டியார் இவரிடத்தில் அள வற்ற பக்தி பூண்டு பலவகையில் இவரை ஆதரித்து வந்தவர். இவருக்காகப் பல இடங்களிற் பல வசதி களைச் செய்து கொடுத்தவர். அவற்றுள் இவருக்காகக் கட்டுவித்த நடைவாவிகள் சிறந்த வேலைப்பாடுடன் இக்காலத்திலும் காண்போர் கண்களைக் கவர்ந்து விளங்குகின்றன. மனிதர்களைப் பாடாத வீறுபெற்ற இப்புலவர் பெருமான் தம்முடைய அருமைத் திருவாக் கினால் உள்ளங் குளிர்ந்து அண்ணாமலை ரெட்டியா ருடைய புகழைத் திருவெங்கையுலாவில் பலபடப்பாடி யுள்ளார். இவர் தாம் துறவியாக இருந்தும் எம் குடி

தாங்கி என்று அண்ணாமலைரெட்டியாரை நாவாரக் கூறிவாழ்த்தியுள்ளார் (திருவெங்கையுலா—கண்ணி 46)

இவர் பிடாரியென்னும் தெய்வத்திற்கு ஒரு சீட்டுக்கவி எழுதிவிடுத்தார்; அச்சீட்டுக்கவி வருமாறு:-

**விருத்தம்**

திருந்துதமி ழிலக்கணவைந் திணைக்கோவை
திருவெங்கைச் செல்வர்க் கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை
வெங்கனூர்ப் பிடாரி காண்க
இரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்கும் நீநம்
முருங்கைதனை வேரோடுங் களைவதென்றா
லீதுனக்கு முறைநன் றாமோ."

இவர் சிறந்த கல்விமானென்று பெயர் பெற்ற பின்பு திருநெல்வேலியில் சிந்துபூந்துறையில் இருந்த தருமை வெள்ளியம்பலத் தம்பிரானவர்கள் பால் தொல்காப் பியம் பாடங் கேட்டனர். இவர் செய்த **பிரபுலிங்க லீலைக்கு** விருத்தியுரை பிறசை அருணாசல சுவாமி களின் பிரதம மாணாக்கர் ஈசூர்—கணக்கு சச்சிதா னந்தம் பிள்ளையவர்களால் செய்யப்பட்டது. இதற்கு மழவை மகாலிங்கையர் சிறப்புப்பாயிரம் கொடுத்திருக் கின்றனர். 1899ஆம் வருடம் பதிப்பிக்கப்பெற்ற சிவ புராணாதி தோத்திர மஞ்சரியில் [341-ஆம் பக்கம்] இவருடைய துதிகளாக 4-பாடல்கள் வந்துள்ளன.

இவர் செய்த வேறு நூல்கள்: தருக்கபரிபாஷை; நால்வர் நான்மணிமாலை; சதமணிமாலை; சிவஞான பாலைய சுவாமிகள் பற்றிய நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி யெழுச்சி (நான்கு செய்யுட்களைக் கொண்டது) என்பன; கூவப்புராணம்; வேதாந்த சூடாமணி; சித் தாந்த சிகாமணி; பழமலை அந்தாதி; பிக்ஷாடன நவ மணிமாலை; பெரியநாயகியம்மை கட்டளைக் கலித் துறை; பெரியநாயகியம்மை நெடுவிருத்தம்; இயேசுமத

நிராகரணம்; நன்னெறி; சிவநாம மகிமை; தலவெண்பா (இந்நூல் இதுவரை அகப்படவில்லை) இட்டலிங்க அபிடேக மாலை; இட்டலிங்கர் பற்றிய நெடுங்கழிநெடில், குறுங்கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தலமாலை என்பன; சீகாளத்திப்புராணம் இடைப் பகுதி.

## 322. துறையூர் சிவப்பிரகாசர்

இவர் துறையூரிலுள்ள வீரசைவ மடத்து மூல புருஷர். சிவபுராணாதி தோத்திர மஞ்சரியில் (340ஆம் பக்கம்) மூன்று துதிகள் இவர் பேரில் உள்ளன.

## 323. துறையூர் சொக்கலிங்க சிவப்பிரகாசர்

இவர் திருவண்ணாமலையிலுள்ள திருத்துறையூர் வீரசைவ ஆதீனத் தலைவர்களுள் ஒருவர். சாலிவாகன சகாப்தம் 1811-ல் நிகழும் சர்வதாரிவருடத்தில் விருத்தாசலம் **பெரிய நாயகி பிள்ளைத் தமிழ்** என்னும் பிரபந்தம் ஒன்றை இவர் செய்து வெளியிட்டிருக்கின்றனர்.

## 324. தெய்வநாயகம் பிள்ளை

பிள்ளையவர்கள் திரிசிர புரத்தில் இருக்கையில் வந்து படித்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் பிள்ளையவர்களிடம் படித்து மிக்க புகழ்பெற்றவர். இவர்பால் தியாகராச செட்டியாருக்கு அடுத்தபடியான மதிப்பு யாவருக்கும் இருந்து வந்தது. ஆறுமுக நாவலர் பதிப்பித்த திருக்குறள் முதலியவற்றிற்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்தவர்களுள் இவரும் ஒருவர். இவர்தாம் பிள்ளையவர்களிடம் கல்வி கற்றமையைக் குறித்து ஓரிடத்திற் பின்வருமாறு கூறியுள்ளார்.

"துரிசிரா திலங்குந் திரிசிராப் பள்ளியிற்
கடன்மருங் குடுத்த தடநெடும் புடவியில்
உற்றநூல் யாவுங் கற்றவ னென்றும்
தோலா நாவின் மேலோர் வகுத்துத்

தந்தருள் பலபிர பந்த மென்பன
எல்லாஞ் சொல்ல வல்லோ னென்றும்
உமிழ்சுவை யாரியத் துற்றபல் புராணமும்
தமிழின் மொழிபெயர்க்கத் தக்கோ னென்றும்
தனையடைந் தவரை நினைதரு தனைப்போல்
வல்ல வராக்க நல்லதன் னியற்கையாம்
மெலியா வன்பிற் சலியா னென்றும்
மற்றவர் பிறரைச் சொற்றன போலா
துற்ற குணங்கண் முற்ற வுணர்ந்து
செப்பமுள் ளோர்பலர்க் கொப்பயா னுள்ளன
நினைந்துரை செய்வது புனைந்துரை யன்றெனக்
காட்சியின் விளக்கி மாட்சியி னமர்வோன்
கற்றவர் குழுமி யுற்றபே ரவையிற்
கனக்குநுண் ணறிவிலா னெனக்குமோ ரொதுக்கிடம்
தந்த மீனாட்சி சுந்தரப் பெரியோன்."

## 325. தென்றிருப்பேரைக் காரி இரத்தினக் கவிராயர்

இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் இயற்றப் பெற்ற **மாறனலங்காரம்** என்ற அணியிலக்கண நூலின் **உரையாசிரியர்**. இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயருடைய மாணாக்கர். இவை 'தரு காளமேகம்' என்னும் மாறனலங்கார உரைச் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். இவர் திருமேனி இரத்தினக் கவிராயர் என்றும் வழங்கப்படுவர். இவர்குழைக்காதர் பிள்ளைத் தமிழ், திருக்குறுங்குடி அழகிய நம்பி பிள்ளைத் தமிழ் என்ற நூல்களை இயற்றியுள்ளார் என்று தெரிகிறது.

## 326. தென் திருப்பேரைச் சீராமையங்கார்

இவர் சுந்தர பாண்டியனால் வருவிக்கப்பட்ட குடும்பத்தினரில் ஒருவர். நாராயண மங்கலத்தார். விசுவாமித்திர கோத்திரத்தார். அந்த ஊரில் சந்நிதித் தெருவிலிருந்தவர். பிள்ளையில்லாமல் இருந்து குழைக் காதர் விஷயமாகச் **சந்தானப்பத்து** என்னும் நூலினை

இயற்றி மகப்பேற்றினை அடைந்தார். "பாரார்ந்த" என்னும்செய்யுளால் இவர்தென்திருப்பேரைநாராயண தீக்ஷிதர்க்குப் பிற்பட்டவர் என்பது தெரிகிறது. சந்தானப்பத்தில் வந்திருக்கும் "சீராமன் செல்வக்குடி தழைக்க" என்று வந்திருத்தலால் இவர் பெயர் நன்கு தெரிகின்றது.

## 327. தேரையார்

தமிழ் நாவலர் சரித்திர தீபகத்தின் வழியாக இவரது வரலாற்றை அறியலாம்.

## 328. தேவராச பிள்ளை

இவரது ஊர் வல்லூர். இவ்வூர் தொண்டை மண்டலத்திலுள்ளது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களுடைய மாணாக்கர். இவர் **சூதசங்கிதை, குசேலோபாக்கியானம், தணிகாசல மாலை, பஞ்சாக்கர தேதிகர் பதிகம், சேடமலைமாலை** முதலிய நூல்களை இயற்றியுள்ளார். குசேலோபாக்கியானம், சூதசங்கிதை இவ்விரண்டு நூல்களும் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு இவரது பெயரால் அச்சிட்டுக் கொள்ளும்படி பிள்ளையவர்கள் சொன்னதாகத் தெரிகிறது.

## 329. தேவாரம் வீரராகவசாமி ஐயங்கார்

தேவாரம் ஒரு ஜமீன்பெயர். இவர் இயற்றிய நூல் திருப்பதித்தலபுராணம். இவர் தமையன் பிள்ளை செல்லமையங்கார் **கயா மகாத்மியம்** என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். இவர் தமக்கையார் சின்னம்மாள். இவர் தனிப்பதிகள் பலவற்றைப் பற்றித் தனிப்பாடல்கள் பல செய்தனர்.

சொல்லும் பொருளும் சுவையினிது சொற்றொடர்ந்து,
செல்லு மொழுக்கும் சிறந்ததே—வல்லுநர்கள்
பன்னம்மை யார்பனுவற் பண்புளது தேவாரம்
சின்னம்மை யார்பனுவற் றேன்''

## 330. தேவிக்கோட்டை அஷ்டாவதானம் சுப்பிரமணிய ஐயர்

**தேவைப் பிள்ளைத் தமிழ்** என்பதொரு பிரபந்தம் இவர் செய்ததாக வழங்குகின்றது.

## 331. தேவிபட்டணம் முத்துச்சாமி பிள்ளை

இவர் சைவவேளாளர் குலத்தில் பிறந்தவர்; இவருடைய தமிழாசிரியர் இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை. இவர் தமிழிலக்கண விலக்கியங்களில் மிக்க பயிற்சியுள்ளவராக இருந்ததன்றிச் செய்யுள் இயற்றுவதிலும் மிக்க திறமை வாய்ந்தவர். பாடல் பெற்ற ஒவ்வொரு சிவஸ்தலங்களுக்கும் சென்று தமது அன்பும், தமக்குத் தமிழிலிருக்கிற பாண்டித்தியமும் புலப்படும்படி இனிய ஒவ்வொரு வெண்பாக்களை இவர் பாடியதுண்டென்று முதிய பல வேளாளப் பிரபுக்களும், முதிய சிலதமிழ்வித்துவான்களும்சொல்ல ஐயரவர்கள் கேள்விப்பட்டிருக்கின்றார் என்று தெரிகிறது. தமிழ்க்கணக்கில் மிக்க திறமையுள்ளவராக இருந்ததோடு அவதானமும் செய்து வந்தமையால் இவர் கணக்கில் அவதானி என்னும் பட்டமும் பெற்றிருக்கிறார். அடி மடக்கு முதலிய சொல்லணிகளில் இவருக்கு அதிக விருப்பமுண்டு. இவர் பல பாடல்கள் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது; ஆனால் அவை முழுவதும் கிடைக்கவில்லை.

இவர் இயற்றிய பாடல்களுள் சில வருமாறு: தமது வித்தியா குருவாகிய சோமசுந்தரம் பிள்ளைமீது இவர் பாடிய நடுவெழுத்தலங்கார வெண்பா.

கண்ணன்றாய் தங்கை களத்திர மாமியம்மான்
வண்ண மருமகளே மைத்துனனென்—றெண்ணுமிவர்
நாம நடுவெழுத்தை நாடி விலக்கணத்துக்
கூமனுஞ் சொல்லு முரை.

தாய்—யசோதை, தங்கை—விமலை, களத்திரம்—வசுதை, மாமி—குந்தி, அம்மாள்—உததி, மருமகள்—இரதி, மைத்துனன்—சம்பு.

### திருவீழிமிழலை

வீழி மிழலையுறை வேதியனே முன்னொருமன்
வீழி மிழலைமின்றோய் வேணியனே—வீழியின் முன்
மாத்திரையொன் றற்றமலர் மால்புனைதாட் பூபதியென்
மாத்திரைதந் தென்மலநோய் மாற்று.

மன்—பகீரதன். வீழ் இமிழ் அலைமின்—விரும்பிய இனிக்கின்ற அலைகளையுடைய கங்கையாகிய மங்கை.
விழியாகிய மலரை. பூபதியென்பதுமாத்திரை விசேடம்; பூவிற்குப்பதி யென்றும் ஒருபொருள் தோன்றுகின்றது.

### மதுரை

காண்டரிய மேனியுமொண் கந்தரமுஞ் சுந்தரனார்
ஆண்டதுவும் வேணிக் கணிந்ததுவும்—நீண்டமுகில்
மைக்கலிங்க மாகவணி மாடவணி மாமதுரைச்
சொக்கலிங்க மென்றுஞ் சுகம்.

### திருவொற்றியூர்

தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீ ராடு
தகரவரி நாலைந்தைச் சாடும்—தகரவரி
மூவொற்றி யூர்பதங்கண் மூன்றுமங்கை யேந்துமொரு
சேவொற்றி யூரான றாள் சேர்.

நாலைந்து—தீது, மூவொற்றியூர்பதம் — திகிரி. பொருளாம் மூன்று—வேய்ங்குழல், சக்கரம், மலை.

### திருக்கடவூர்

திருக்கண்டி யூரகத்துச் செங்கமலத் தாளால்
திருக்கண்டி யூரரியைச் செற்றோய்—திருக்கண்டி
வாகரனே தூயவறி வாகரனே வண்கடவூர்
வாகரனே யென்றுநெஞ்சே வாழ்த்து.

*மான்றோன்று மம்புலிதோய் மாடமலி: வான்புகார்*
*வான்றோன்று முன்றோன்று வானவனே—கான்றோன்றும்*
*தேன்றோன்றி செப்பனைய செங்கைகொங்கை மங்கைபங்கா*
*தான்றோன்றி நாதா சரண்.*

## 332. தேவூர் மெய்கண்டார்

இவர் சருவப்பிராயச்சித்த சமுச்சயம் என்னும் நூலின் முதற் செய்யுளிலும் இரண்டாம் செய்யுளிலும் துதிக்கப்பட்டிருக்கிறார்.

## 333. தொண்டைமாந்துறை அம்பலத்தாடுமையர்

இவர் வீரசைவர். தெலுங்கிலுள்ள **வசுசரித்திரம்** என்னும் காவியமொன்றைத் தமிழில் மொழிபெயர்த்தவர். இதில் 32 படலங்களும் 1001 விருத்தங்களும் உள்ளன. இவற்றைத் தெரிவிக்கும் விருத்தம் இது.

*விரிபுகழ்சேர் வசுசரித மெனுந்தெலுங்கி*
*னருத்தமதை விரித்து ரைத்தார்*
*இருவர்மா துலர்நமச்சி வாயையன்*
*பாலைய னிவர்கள் பூவிற்*
*சொருபமிகு தமிழ்செய்தான் வீரமிகு*
*தொண்டைமாந் துறையில் வாழும்*
*பெருமைதிகழ்ந் திலகுமம்ப லத்தாடு*
*மையனெனப் பேர்பெற் றோனே.*

## 334. தொல்காப்பியத் தேவர்

**திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்** என்னும் நூல் இவரால் இயற்றப்பெற்றது. இவர் சினாலயமொன்றற்காகச் செங்கல் அறுக்கச் சொன்னபொழுது, திருப்பாதிரிப் புலியூர்க்கோயில் விசாரணைக்காரர் கோபங்கொண்டு இவரை நோக்கி, 'நீர் இங்ஙனஞ் செய்வித்தல் முறையோ' என்று கேட்டனர். உடனே இவர், "வேத மொழிவிசும்பு மேனி" என்னும் ஒரு வெண்பாவைக் கூறி, அதன் முகமாகத் தம்முடைய கருத்தை வெளிப்

படுத்தினர். கேட்டவர்கள், இவருடைய கருத்தை அறிந்து ஆறுதலுற்று, இவருடைய பரிபக்குவத்தையும், பக்தி மிகுதியையும், கல்வி வன்மை முதலியவற்றையும், சிறந்த பிரபந்த வாக்கியாயிருத்தலையுமறிந்து விம்மிதமுற்று இவரைநோக்கி, 'தேவரீர் இவ்வெண்பாவை இடையே அமைத்துத் திருப்பாதிரிப்புலியூர்ச் சிவபெருமான்மீது கலம்பகமொன்று பாடியருளுக' என்று வற்புறுத்தி வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி அங்ஙனமே இந்நூலைப் பாடி முடித்தனர். அப்பால் இக்கலம்பகம் சிறந்த கவிஞர்களாற் பயராட்டிப் படிக்கப் பெற்றுத் தமிழ் நாடெங்கும் பரவி வழங்கலாயிற்று. அக்காலத்தில், சிதம்பரத்துள்ள அடியார் குழாங்கள், அங்கே தரிசனத்திற்கு வந்த இரட்டையர்களை நோக்கி, 'திருப்பாதிரிப் புலியூருக்குத் தொல்காப்பியத் தேவரியற்றியது போலச் சிதம்பரத்திற்கு நீங்கள் ஒரு கலம்பகமியற்றியருள வேண்டும்!' என்று வேண்டினர். உடனே இரட்டையர்கள்,

**கொச்சகக் கலிப்பா**

''தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நானுரைப்ப தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்திற் கண்பிசைந்து
பல்காற் பொருமினர்க்குப் பாற்கடலீலான் றீந்தார்க்கே''

என்னும் செய்யுளைக் கூறி, 'சிவபெருமான் மீது கலம்பகம் பாடுதற்கு யாம் வல்லேமல்லேம்! என்றார்கள். கேட்டவர்கள், அதனால் தடைப்படலின்றி, அங்ஙனம் கூறினமை பற்றியே நன்கு மதித்துக் கலம்பகம் பாடும்படி பின்னும் வற்புறுத்த, அவர்கள் அப்பொழுதும் துணிவின்றி இக்கலம்பக புத்தகத்திற் கயிறு சார்த்திப் பார்த்தார்கள். பார்த்தபொழுது, 'பாடுவார் பாடும்' (16-ஆம் செய்யுள்) என்னும் பாடல் அகப்பட்டது. அதனைக் கண்ணுற்ற இரட்டையர்கள் அச் செய்

யுளின் பின்னரிண்டடியின் பொருளையறிந்து மன முருகித் தம்மைப் பாடும்படி ஸ்ரீ ஆநந்த நடராசர் கட் டளையிட்டருளியதாகவே நினைந்து துணிந்து செய் யத்தொடங்கிச் சிலதினங்களில் தில்லைக் கலம்பகத் தைப் பாடிமுடித்தார்கள். இவ்வரலாறு தமிழ் நாவலர் சரிதையிலிருந்து ஊகித்தறிந்து எழுதப் பெற்றது.

தில்லைக் கலம்பகம் தெய்விகவுலா முதலியவற் றைப் பாடியருளியவர்களும், சிவபக்திச் செல்வம் வாய்ந்தவர்களும், பல சிவஸ்தலங்களின் பண்டைச் சரிதங்களையும், உண்மைநாயன்மார்களுடைய அரு மைச் செயல்களையும், சிவபுராணக் கதைகள் பலவற் றையும், மிகப் புராதனமான நூல்களின் கருத்துக் களையும் தம்முடைய நூல்களுள் மிகஅழகாக அமைத் துப்பாடிப் பிற்காலத்தார்க்கு வழிகாட்டிப் பெரும்புகழ் பெற்ற மஹோபகாரிகளும், "கலம்பகத்திற் கிரட்டை யர்கள்" என்றும்,

"தங்கமு மணியு மிடைக்கிடைக் கொண்டு
தனைநிகர் தபதியாற் சமைத்த
சிங்கமா முகப்புத் தண்டிகை யேறித்
திரியினுஞ் சித்தியில் புலவோர்
பங்கனுங் குருடன் றானுமா நிகழப்
பாவலர் பதத்துகள் புரையார்"

என்று அறிஞர்களாற் புகழப் பெற்றவர்களுமாகிய இரட்டையர்களே பாராட்டிப் புகழ்ந்தனரென்றால், இந்நூலாசிரியரின் பெருமையும் இந்நூலின் பெருமை யையும் என்னுடைய (ஸ்ரீ ஐயரவர்கள்) சொல்லில் அடங்குவனவோ?

இரட்டையர்களுடைய காலத்திற்கு முற்பட்ட வரென்று தெரிதலால், இந்நூலாசிரியர் அவர்களாற் பாடப்பெற்ற வரபதியாட் கொண்டானென்னும் பிரபு வுக்கும், அவன் விருப்பத்தின்படி பாரதம்பாடிய ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வாருக்கும், அவர் காலத்தவர்

களாகிய ஸ்ரீ அருணகிரியார் முதலியவர்களுக்கும் முற்பட்டவராக எண்ணப்படுகிறார்.

திருவாயாத்தூர்க்கலம்பக முதலியவற்றில் இந்நூலின் கருத்துக்களைப் பரக்கக் காணலாம்.

## 335. தொழுவூர் வேலாயுதமுதலியார்

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கரான இராசகோபாலபிள்ளை என்பவருக்குப் பின்பு இவர் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழாசிரியராக இருந்து விளங்கியவர். இவர் இலக்கண இலக்கியப் பயிற்சியிலும், செய்யுள் செய்வதிலும் வசனம் எழுதுவதிலும் பிரசங்கம் செய்வதிலும் சமர்த்தர். பல செய்யுள் நூல்களை இயற்றியிருக்கிறார். **பெரியபுராண வசனம், வேளாண்மரபியல், சங்கர விஜயம், பராசரஸ்மிருதி** முதலிய வசன நூல்கள் இவரால் எழுதப்பட்டன.

## 336. தோலாமொழித் தேவர்

இவர் சூளாமணி என்னும் காப்பியத்தை இயற்றியவர்.

திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசையன்
புயலனைய கையன் தெவ்வைக்
கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி
யரையன்வள நாடற் கேறப்
பொக்கெட்டும் பத்துமிலான் புகழ்த்தரும
தீர்த்தன்மலர்ப் பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வரன்தோலா மொழிசூளா
மணியுணர்வோர் துறைகண் டோரே.

என்ற தனிப்பாடல் இவரது பெயர் தோலாமொழி என்றே கூறுகிறது. 'ஆர்க்குந் தோலாதாய்' (1473) தோலா நாவிற்கச்சுதன் (308) என்ற அரிய பிரயோகத்தைச் சூளாமணிக்காப்பியத்தின் இரண்டிடங்களில்

அந் நூலாசிரியராகிய இவர் கையாண்டமையால், தோலாமொழி என்ற பெயரால் இவரைப் பிற்காலத் தவர் வழங்கலாயினர் என்று கூறுவாரும்உளர். மேலே காட்டிய பாடலால் இவ்வாசிரியர் கார்வெட்டி அரசன் விசயன் என்பான் காலத்தவர் என்பதும், தரும தீர்த்தங்கரரிடம் ஈடுபாடுடையவர் என்பதும் புலனா கின்றன. சூளாமணியின் பாயிரச்செய்யுள் (4) இந் நூல் சேந்தனென்னும் கோமான் அவையில் அரங் கேற்றப்பெற்ற செய்தியைக் கூறுகின்றது. இவ் வேந்தன் அவனி சூளாமணி மாறவர்மனாக இருக்க வேண்டும் என்பர் வரலாற்றுப் பேராசிரியர் திரு கே. ஏ. நீலகண்டசாத்திரியார் சோழர் என்னும் தம் நூலில். சூளாமணியின் காலம் திட்டமாக நிறுவப்பட வில்லை; இதன்காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதி என்று ஒருவாறு கூறப்படுகிறதென்பர்.

## 337. நச்சர்

திருக்குறளுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர். இவர் சமணரல்லர்; வைதிக அந்தணர். இஃது அவருடைய உரைச்சிறப்புப் பாயிரத்தால் நன்கு விளங்குகின்றது; முற்காலத்திருந்த நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் தம்முடைய சமயத்தைநோக்காது எடுத்துக்கொண்ட விஷயத்திற்குத் தக்க வண்ணமே எழுதிக் கொண்டு போவார்கள். இதனை அக்காலத் திருந்த பல உரையாசிரியர்களுடைய நடையிலும் காணலாம்.

## 338. நச்சினார்க்கினியர்

ஆசிரியர் நச்சினார்க்கினியர் பாண்டி வளநாட்டி லுள்ள மதுராபுரியில் அந்தண் வருணத்தில் பாரத் துவாச கோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்மொழியி லுள்ள பலவகையான எல்லா நூல்களிலும் அதிபாண்

டித்தியமுடையவர்; சைவசமயத்தினர்; இவர் இன்ன ராதல்,

> ''வண்டிமிர் சோலை மதுராபுரிதனில்
> எண்டிசை விளங்க வந்த வாசான்
> பயின்ற கேள்விப் பாரத் துவாசன்
> நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
> தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
> தானே யாகிய தன்மை யாளன்''

என்னும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவத்தலங்களுட் சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய, 'திருச்சிற்றம்பலம்' 'பெரும்பற்றப் புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொரு மொழிக்கும் ஏழெழுத்தொரு மொழிக்கும் உதாரணமாக இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழி மரபில், ''ஓரெழுத்தொரு மொழி'' (12) என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையில் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்த நூல்களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார், திருவுலாப்புற முதலியவற்றினின்றும் தமது உரைகளில் பலவிடங்களில் இலக்கிய இலக்கணப் பொருள்களுக்கன்றித் தத்துவப் பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள் கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரையாலும், சீவகசிந்தாமணி 362-ஆம் செய்யுளில் ''போகம் மீன்ற புண்ணியன்'' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படை உரையில் காட்டிய சில நயங்களாலும், மற்றும் சிலவற்றாலும் இவர் சைவசமயியாதல் நன்கு வெளியாகும்.

> ''காக்கைசே ரரவர்போலுங் கறையணி மிடற்றர் போலும்
> பிச்சைகொண் டுண்பர் போலும் பேரரு ளாளர் போலும்
> இச்சையான் மலர்க டூவி யிரவொடு பகலுந் தம்மை
> நச்சுவார்க் கினியர் போலு நாகவீச் சரவ னாரே''

(அப்பர் தேவாரம் திருநாகேச்சரம்)

''பச்சிலை பழம்போ தேனும் பறித்திட்டுப் பத்தி
செய்வோர்க்
கெச்சமி லிருமைப் பேறு மளித்தரு ளிறைவா போற்றி
முச்சக முதலே போற்றி முலைச்சுவட் டணியாய் போற்றி
நச்சினார்க் கினியாய் போற்றி யெனத்துதி நவிலுங்
காலை''

(காஞ்சி. சததநான. 11)

என்பவற்றில், முறையே **'நச்சுவார்க்கினியர்'** **'நச்சினார்க் கினியாய்'** என்றும் வருவனவற்றை நோக்கும்போது இவருடைய பெயர் சிவபெருமானுடைய திருநாம மாகவே கருதப்படுகிறது.

இவர் பத்துப்பாட்டிற்கும் தொல்காப்பியத்திற் கும், கலித்தொகைக்கும் குறுந்தொகையில்பேராசிரியர், பொருள் எழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் சீவகசிந்தாமணிக்கும் உரை செய்தருளினர். இன்னும் சில நூல்களுக்கு இவர் உரை இயற்றினர் என்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச் செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ் சிலவற்றிற்கும் இவர் உரை செய்திருப்பதாக இவருடைய உரைச் சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப் படாமையாலும் அவைகள் இங்கே எழுதப்பட்டில.

இன்றியமையாத இடங்களில் மட்டும் பதப் பொருள், இலக்கணக்குறிப்பு முதலியன இவரால் எழுதப்படும்.

இவர் பதசாரம் எழுதுதல் மிகப்பாராட்டற் பாலது. மேற்கோளாக எடுத்துக்காட்டும் நூலின் பெயரையாவது நூலாசிரியரின் பெயரையாவது எடுத் துக் கூறுதல் பெரும்பாலும் இவருக்கு வழக்கமின்று.

வெளிப்படையாகக் கூறப்படாமலிருந்தும் சில சில குறிப்பைக் கொண்டு மிக ஊகித்தறிந்து இன்ன காலத்தில் இன்னசெய்தி நிகழ்ந்தது என்று இந்நூலுள் அவ்வவ்விடத்துக் கதை நிகழ்ந்த காலத்தை விளக்கிக் கொண்டே போவார்: **சீவக சிந்தாமணி** ~1, 413, 493, 590, 851, 1564, 2029, 2033, 2106, 2706 ஆம் கவிகளின் உரைகளைக் கவனித்தால் நன்குபுலப்படும்.

விரிவிற்கு அஞ்சி ஒரு வாக்கியத்தின் இறுதிச் சொல்லையேனும் அதன் முதற்சொல்லையேனும் எழுதி வாக்கியத்தைக் குறிப்பித்துவிட்டுப் பொருள் எழுதுதலும்,மேற்கூறிய யாதொன்றையும்எழுதாமலே பொருள் எழுதுதலும்,

"அறுவர்தம் நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறான நீக்கி—மறுவரவின்
மாசா ரியனா மறுதலைச்சொன். மாற்றுதலே
ஆசா ரியன தமைவு."

(ஏலாதி.)

என்றபடி நூலின் சமயத்தையும் நூலாசிரியருடைய கொள்கையையும் அவர் கருத்தையும் அறியவேண்டிய அளவு உழைத்தறிந்து! அவற்றிற்கேற்பவே உரை எழுதுதலும் இவருக்கு இயல்பு,இவருரை விகற்பங்கள் இன்னும் பலவகை,

இவர் சீவகசிந்தாமணிக்கு முதன்முறை ஒருரை எழுதி, அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த சைன வித்துவான்கள் சிலருக்குக் காட்ட,மற்றைப்பகுதிகள்போலத் தங்கள் சமயக்கொள்கைகள் முறையே எழுதப்படவில்லை என்றுகூறி அவர்கள் அவ்வுரையை அங்கீகரிக்கவில்லை யென்றும், அப்பால் இவர் ஆருகத நூல்கள் பலவற்றையும் அறிந்தோரிடம் முறையே கற்றறிந்து நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை உரை எழுதி அவர்களுக்குக் காட்ட அவர்கள் உற்றுநோக்கி மகிழ்ந்து பாராட்டி இதனை அங்கீகரித்தார்க

ளென்றும் சைனர்களுள்ளும், ஏனையோருள்ளும் கர்ணபரம்பரையில் ஒரு வரலாறு வழங்குகின்றது.

''அகன்று பொருள்கிடப்பினும்'' (தொல்.செய்.சூ.210) என்பதனுரையில்; 'இனிப் பல செய்யுட்கள் வருமாறு சிந்தாமணியுள் யாங்கூறிய உரைகள் பலவற்றாலுமுணர்க.'' எனவும்,

''பாட்டும் எச்சமும்'' (தொல்.செ.சூ.238) என்பதனுரையில் இவை பொருட்டொடர்; அவை சிந்தாமணி முதலியன; அவை பாவிற்கு இனமாகிய துஸறயும் விருத்தமும் பற்றிச் செய்தன என்பார்க்கு அப்புலவர் செய்யுள் செய்கின்ற காலத்திற்கு நூல், தொல்காப்பியமானவாறும் அவர் இனங் கொள்ளாதவாறும் அவ்வினங்கள் தாம் இலக்கணச் குறைபாடுடையவாறும் கொச்சகம்போற் சிறப்பின்மையும் முன்னர் விளங்கக் கூறியவற்றைக் கொண்டு பின்பு செய்த நூல்கள் முன்பு செய்த செய்யுட்கு விதியாகாதவாறும் கொண்டு மறுக்க' எனவும்

வருவன இவர் தொல்காப்பியத்திற்கு உரை செய்யு முன்னரே சீவகசிந்தாமணிக்கு உரை செய்ததையும்,

சீவகசிந்தாமணி, 72 ஆம் கவியுரையில் ''ஈங்குத் தன்மையையுணர்த்துதல், 'செலவினும் வரவினும்' என்னும் சூத்திரத்திற் கூறினாம்'' எனவும், சீவக 892-ஆம் கவியுரையில் 'ஆசிரியர் நண்டுந் தும்பியும் என்று தும்பியைப் பின் வைத்தது மேல்வரும் சூத்திரத்தில் மாவும் மாக்களும் ஐயறிவென்ப என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கென்றுணர்க; இதனை வராததனால் வந்தது முடித்தலென்னும் தந்திரவுந்தியாற் கொள்கவென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம் எனவும்,

சீவகசிந்தாமணி 1943-ஆம் கவியுரையில், ''சீவகசாமி'' என்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை, பண்புகொள் பெயருமதனோ ரற்றே' என்னும் சூத்திரத்தில் தன்னின முடித்தல் என்பதனால் சீவகசாமியாரென ஆரீறாய்ச் சீவகசாமியீரே என ஈரோடு ஏகாரம் பெற்றதெனக் கூறினாம்'' எனவும்,

சீவக 2690-ஆம் கவியுரையில் 'வயாமரம் என்பதூஉம் மாற்றருஞ் சிறப்பின் மரபன்றி வழக்கின்கண் அடிப்பட்டுச் செய்யுளின்பம் படவந்த மரபென்று மரபியலிற் பாதுகாத்தாம்' எனவும்

வருவன அதற்கு உரை செய்த பின்னரே இவர் உரை செய்ததையும் தெரிவித்து இந்த இரண்டு பகுதி

யுள் முதற்பகுதி இவர் தொல்காப்பியத்திற்கு உரை யியற்றுமுன் சிந்தாமணிக்கு முதன்முறை உரையியற்றி யதையும், இரண்டாவது பகுதி இவர் அந்நூலுக்கு உரையியற்றிய பின் இதற்கு இரண்டாமுறை உரை யியற்றியதையும் ஒருவகையாகப் புலப்படுத்தி மேற் கூறிய வரலாற்றை வலியுறுத்தி நிற்றல் காண்க.

மொழியபிமானத்தையும், தமிழ்மொழியிலுள்ள நூலாராய்ச்சியையும் நூலாசிரியரிடத்துள்ள அன் புடைமையையும் ஒவ்வொன்றையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து ஆராய்ந்து விளங்க எழுதுதலையும், மற்ற குண விசேடங்களையுமுடைய இவர், வடமொழியுரை யாசிரியர்களுள் ஒருவராய்ச் சிறந்து விளங்கிய **ஸ்ரீ மல்லி நாதஸூரி**யைப் போன்றவர் என்று இருமொழியிலும் பாண்டித்தியமுடையவர்கள் சொல்வார்கள்.

நூலாசிரியருடைய ஆழ்ந்த கருத்தை விளக்கி இவர் அவ்வவ்விடத்து எடுத்துக்காட்டும் நயங்கள் மிக்க இன்பத்தை அளிக்கும்.

**தொல்காப்பியவுரை** முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டி நன்கு விளக்கிப் போகின்றமை யாலும். பிறவாற்றாலும் இவரை வடமொழியில் பல வகையான கலைகளிலும் மிக்கபயிற்சியுள்ளவரென்று சொல்லுதற்கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர். ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினால் பிற்பட்டவரென்று தெரிகிறது.

இவர் பழைய செய்யுட்களையேனும், அவற்றின் கருத்தையேனும் உரைநடையாக எழுதுவதுண்டு. அவற்றுள் சில வருமாறு:-

**சீவக.** 3. அருஞ்சுரத்தின் மரம்போல அடைந்தார்க்களித்தல். அவர்க்கியல்பு (**புறநா.** 119; **நாலடி.** 202)

,, 192 அடுத்தது காட்டும் பளிங்கு (**திருக்குறள்**,705)

,, 205 நன்மையுந் தீமையுங்கருதி (**திருக்குறள்**,511)

,, 214 இடித்துக் கூறல் அமைச்சர்க்கியல்பு (**திருக்குறள்**, 638)

,, 252 அரசன் உவாத்தியாயன் தாய் தந்தை தம்முன் (**ஆசாரக்**, 17)

,, 272 இருதலைக் கொள்ளியிடத்து எறும்புபோல் (**திருவா.** நீத்தல், 9)

,, 547 சங்குசுட்டாலும் திறங்கெடாது (**மூதுரை**, 4)

,, 799 குடிப்பிறந்து பழி நாணுவார்க்கு (1998) (**திருக்குறள்**, 794)

,, 1592 சென்வ விடத்தாற் செல்லவிடாதே (**திருக்குறள்**, 422)

,, 1631 இருதலைப் புள்ளின் ஓருயிரேம் (**கலித்**, 89)

,, 1731 ஆடவர் குறுகா வருங்கடி வரைப்பு (**நெடுநல்**, 117)

,, 1813 இடிக்குந் துணையார் சொற் கொள்ளாதே (**திருக்குறள்**, 447)

,, 2353 தேவாசுரம் இராமாயணம் மாபாரதம்(**கலிங்கத்.** களம்பாடினது, 1)

,, 2383 மெய்புகுவன்ன முயக்கம் (**அகநா**, 304)

,, 2802 வார்பிற்கோதை, (**புறநா**, 48)

அமிழ்தினுமினிய தமிழ் மடவரல் செய் அருந் தவத்தின் பெரும்பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் எண்ணற்றவை.

## 339. நந்தி

திருக்குறளுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர்.

## 340. நம்பியாண்டார் நம்பி

இவரியற்றிய நூல்கள் பதினோராந் திருமுறையிற் காணப்படும். திருமுறை கண்ட புராணத்தால் இவர் சரித்திரம் விளங்கும்.

## 341. நம்பிள்ளை

இவர் வைணவ மதத்தினர்; திருவாய் மொழிக்கு ஈடு என்று வழங்குகின்ற முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானஞ் செய்தவர். அந்தத் திருவாய் மொழியின் அவதாரிகையில், "எழுத்தசைச்சீர் பந்தமடி தொடை பாவினம்" **(காரிகை-1)** என்பதை எடுத்து உதகரித்திருத்தலால், இவர் காரிகை நூலாசிரியருக்கும் அக்காரிகை உரையாசிரியருக்கும் பிந்தினவரென்றுந் தெரிகிறது. இவருடைய மாணாக்கரில் ஒருவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை. தம்முடைய உரையில் கம்பராமாயணச் செய்யுட்களுள் இரண்டொன்றை உதகரித்திருக்கின்றார்.

## 342. நம்மாழ்வார்

இவர் பன்னிரு ஆழ்வார்களில் சிறப்பாகக் கூறிப்பிடப்படுவர். இவரது வரலாற்றை குரும்பரம்பரைப் பிரபாவத்தின் மூலம் அறியலாம். இவர் குருகைப் பிரான், மாறர், சடகோபர் முதலிய பெயர்களாலும் வழங்கப்பெறுவர். கம்பர் பாடிய சடகோபரந்தாதியும் பெற்றவர்.

"அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பேர்
அருவி மணிவரன்றி வந்திழிய யானை
வெருவி யரவொடுங்கும் வெற்பு."

## 343. நமச்சிவாயப் புலவர்

சிவஞான முனிவரின் பாட்டனார் விக்கிம சிங்கபுரம் நமச்சிவாயக் கவிராய ரென்று ஒருவர் உண்டு. அவர் காலத்தவர்கள் மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரும் செங்கோட்டைக் கவிராஜ பண்டாரமும். இவருடைய பிரபந்தத் திரட்டு திருவாவடுதுறைப் புஸ்தக சாலையில் ஐயரவர்கள் காலத்தில் இருந்ததாகக் குறித்துள்ளார்கள்.

## 344. நமச்சிவாய தேசிகர்

15-ஆம் பட்டம் அம்பலவாணரிடத்தில் இவர் காஷாயம் பெற்றவர். திருநெல்வேலியிலிருந்த ஐயா சாமி பிள்ளையிடத்துத் தமிழ் அத்வைத சாஸ்திரங்கள் கற்றவர். துறைசை வந்த பின்பு மேலகரம் சுப்பிர மணிய தேசிகரிடத்தில் வேலை பார்த்து வந்தார். பிள்ளையவர்களிடத்துப் பெரிய காவியங்களையும் பாடங்கேட்டார். மத்தியார்ஜுனம் கட்டளையில் ஆறு மாதமும், துறைசைக் காறுபாறாகச் சிலகாலமும் இருந்து, திருவெண்ணெய் நல்லூர் மடாதிபதியாக இருந்து, அங்கே நிலங்களையெல்லாம் திருத்தித் தோப் புக்கள் வைத்து மிகச் சிறப்புறச் செய்தார்.

பிறகு சின்னப்பட்டம் மிக விமரிசையாகப் பெற் றுக் கொண்டார்.

பின்பு சுப்பிரமணிய தேசிகருடன் கல்லிடைக் குறிச்சி சென்று திருவனந்தபுரம் அரசரைப் பேட்டி கண்டு பின்பு கல்லிடைக்குறிச்சி வந்து சேர்ந்தார். அங்கே அவரால் செய்யப்பட்ட திருப்பணிகளும் வாங் கின நிலங்களும் பல. அநேகம்பேர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அக்காலத்தில் அவ ரிடம்படித்தவர்களிற்சூரியனார் கோயில் முத்துக்குமார சுவாமி தம்பிரானவர்களும் பரமசிவ தம்பிரானவர் களும்முக்கியமானவர்கள். இவருடன் கற்றவர் மதுரை இராமசாமிப்பிள்ளையவர்கள்; வன்றொண்டர்.

பிள்ளையவர்களிடம் பாடங் கேட்ட பின்பு, கேட்ட பாடல்களில் திரிபுயமகங்களுக்கு ஏட்டில் உரை யெழுதி வைத்திருப்பார். புத்திவேகம் அதிகம். படிக்கப் போகும் பாடம் எதுவோ அதை முன்பே பார்த்து வைத்திருப்பார். இவர் இயற்பெயர் நச்சாலிங்கம். பிள்ளையவர்கள் காலமான பின் இவரிடத்தில் ஐய

ரவர்கள் காஞ்சிப்புராணம், பேரூர்ப் புராணம் ஆகிய இரண்டும் பாடங் கேட்டுள்ளார்கள்.

இவரிடம் பாடங் கேட்டவர்கள் அருணாசல கவிராயர், சுப்பிரமணியக்கவிராயர், மகாலிங்கத்தம்பிரான் வேம்பத்தூர்ப்பிச்சுவையர். பொருள் விஷயத்தில் இவர் செட்டாக இருப்பார் என்று ஐயரவர்கள் குறித்துள்ளார்கள்.

## 345. நயனப்ப முதலியார்

இவர் கல்விச்சங்க வித்துவானாக இருந்தவர். தாண்டவராய முதலியாருடைய அநுமதிப்படி திவாகரம் 9, 10ஆம் தொகுதிகளைப் பரிசோதித்தளித்தவர்.

## 346. நயினார் கோயில் நாகலிங்கம் பிள்ளை

நயினார் கோயில் என்னும் ஊர் இராமநாதபுரம் சீமையிலுள்ளது; மருதூரென்றும் கூறப்படும். ஸ்தல விருட்சம் = வில்வம்; தீர்த்தம் = நாகதீர்த்தம்.

புலிக்கஞ்சிய வேடனொருவன் வில்வமரத்தின் மேலேறிப் பிழைத்தானென்றும் புலிவிருஷபமானதாகவும் ஐதிஹ்யம். இதைப் பொருளாகக் கொண்ட வேடநாடகமென்று ஒருநூல் இங்கே மகா சிவராத்திரியில் ஆடப்பட்டு வருகின்றது; இத்தலத்திற்கு **மருதூரந்தாதி**யென்ற ஒரு பிரபந்தமும் தமிழ்ப்புராணமொன்றும் உள்ளன. ஸந்நிதி மேற்கு.

இந்த ஊரில் இவருடைய வீடு தெற்குத் தெருவிலுண்டு; சித்திராருடம் இவராற் செய்யப்பட்டதென்பர்.

## 347. நயினார்கோயில் பழனிக்குமாரக் கவிராயர்

இவர் சைவ வேளாளர்; 98-பிராயம் வரையிலிருந்தார். வீடு தெற்குத் தெரு. பிதாவின் பெயர்

செவந்திலிங்கப் பண்டாரம்; இவரும் படித்தவர்; இவர் குமாரர் சுந்தரலிங்கம் பிள்ளை.

## 348. நல்ல பிள்ளை

அடியிற் குறிக்கப்பட்டுள்ள நூல்கள் இவராற் செய்யப்பட்டன.

1. வருமுருகாற்றுப்படை
2. சுருக்கத்திருமுருகாற்றுப்படை
3. அணிமுருகாற்றுப்படை
4. நன்முருகாற்றுப்படை
5. சத்தகோடி மகாமந்திரத் திருப்புகழ்
6. சிவசுப்பிரமணிய கவசம்
7. பழனி இடும்பேசர் துதி
8. சிறை வீடு அந்தாதி

## 349. நல்லாப் பிள்ளை

இவரூர் திண்டிவனம் தாலுகாவிலுள்ள தைலாபுரமென்பது. இவர் சீர் கருணீக சாதியினர்; இவர் செய்த நூல் பாரதம்; வேறு சில நூல்கள் இவராற் செய்யப்பட்டுள்ளனவென்பர். இவருக்குப் பிள்ளைகள் மூவர். அவருள் ஒருவருக்கு இராமசாமிப்பிள்ளையென்று பெயர்.

## 350. நல்லூர் ஆறுமுகநாவலர்

இவர் காந்தம் பதிப்பித்துள்ளார். அந்தப் பதிப்பின் முகவுரையில் 'முதற்பாட்டின் புணர்ச்சி விதியாக 'வீர சோழியத்தை முருகக் கடவுள் கொணர்ந்தா' ரென்றல் ஆராய்ச்சிக் குரித்தே.

## 351. நல்லூர்ச் சின்னத்தம்பி நாவலர்

நல்லூர்—யாழ்ப்பாணத்திலுள்ளது.

இவர் செய்த நூல்கள்

1. கல்வளை யமகவந்தாதி
2. மறைசை யந்தாதி

## 352. நல்லூர்ப் பொன்னம்பலம்பிள்ளை

இவர் வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். சமயம் சைவம். இவர் ஆறுமுக நாவலருடைய மருகரும் மாணாக்கருமாவர்; இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றவர். பாரதம் ஆதிபருவத்திற்கும்; மயூரகிரிப் புராணத்திற்கும் உரை இயற்றியவர்; பிரசங்கம் செய்வதில் வல்லவர். 'வித்துவ சிரோமணி' என எல்லோராலும் பாராட்டப் பெற்றவர்.

## 353; நவாபுமந்திரி இராமசாமிப் பிள்ளை

இவருக்குத் தம்பி பட்டி முத்துவேலுக் கவிராயர் சீட்டுக்கவி எழுதியிருக்கிறார்.

## 354. நாகூர் முத்துப் புலவர்

இவரது ஊர் நாகூர். இவர் எட்டையபுரம் சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்துவானாக இருந்தவர். இவர் கடிகை முத்துப் புலவரின் காலத்தினர் என்று தெரிகிறது. இவர் வெங்கடேசுவர எட்டப்ப பூபதி மேல் பாடிய செய்யுட்கள் ஐம்பத்தொன்று.

## 355. நாகைக் கனகசபாபதி

இவர் சருவப் பிராயச்சித்த சமுச்சய மென்னும் நூலின் முதற் செய்யுளிலும் இரண்டாஞ் செய்யுளிலும் துதிக்கப்பட்டிருக்கிறார்.

## 356. நாகை கிருஷ்ணசாமி உபாத்தியாயர்

இவர் அகம்படி சாதியார். இவர் எண்பது பிராயம் வரையிலிருந்தார்.

இவர் செய்த நூல்கள் ஆறு.

1. நாகை நீலாயதாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
2. பலசந்த மாலை முதலியன.

## 357. நாகை சந்திரசேகரர்

இவர் 'சருவப் பிராயச்சித்த சமுச்சயம்' என்னும் நூலின் முதற்செய்யுளிலும் இரண்டாஞ் செய்யுளிலும் துதிக்கப்பட்டிருக்கிறார்.

## 358. நாகை சுவாமி நாதனார்

இவரும் சருவப் பிராயச்சித்த சமுச்சயம் என்னும் நூலின் முதற் செய்யுளிலும் இரண்டாஞ் செய்யுளிலும் துதிக்கப்பட்டிருக்கிறார்.

## 359. நாகை பொன்னம்பலவர்

இவரும் சருவப் பிராயச் சித்த சமுச்சயம் என்னும் நூலின் முதற் செய்யுளிலும் இரண்டாஞ் செய்யுளிலும் துதிக்கப்பட்டிருக்கிறார்.

## 360. நாட்டரசன் கோட்டை முத்துக் குட்டி ஐயர்

இவர் நாட்டரசன் கோட்டையைச் சார்ந்தவர். இவர் சைவ வேளாளர். இலக்கிய விலக்கண மஹா வித்துவான்; மஹா ஞானவான். அவ்வூர்க் **கண்ணுடையம்மன் பேரில்** 'ஞானப் பள்ளு' பாடி இருக்கின்றாராம். பிரபந்தம் அச்சுக்கு வரவில்லை. ஏடு இருப்பதாகக் கேள்வி. **வசன சம்பிராதய**மெனவோர் நூலியற்றியிருப்பதாகவும் கேள்வி. நாட்டரசன் கோட்டையில் இக் காலத்திலும் அக்காலத்திலும் பிரபல தெய்வமாகிய கருப்பண சுவாமி இவர் கனவில் வந்து 'அப்பா! முத்துக் குட்டி என்மேற் பாடப்பா' என்று சாதிக்க இவர் செத்துப் பிறக்கின்ற தெய்வங்களைப் பாட மாட்டேனென்று சொல்லி, இருந்து விட்டாராம். பின்னர் அவ்வூர்க் கண்ணுடையம்மன் கனவில் வந்து 'கருப்பண்ணனைப் பாடப்பா' என்ன அவ் வுத்தரவைச் சிரமேல் வகித்துக் கருப்பண சுவாமிமேற்

பாடினாராம். அப்பிரபந்தம் அச்சிட்டு இருக்கிறதாம். சிவகங்கை முத்துவடுகநாத துரை இவரை ஒரு சிவ ராத்திரி இரவு மழையிருட்டில் பந்தமும் குடையும் கொடுத்துவிட்டு வரவழைத்துப் போசனஞ் செய்வித்த தாகவும், அவர் கவி சொல்லியதாகவும் கேள்வி. அக் கவியைப் பிழைபட ஒரு செட்டியார் சொன்னார். முன் கேட்டதற்கு ஒத்திருக்கிறது. இவருக்குச் பணிவிடை செய்து கொண்டு வந்த வணிகப் பிரபுவுக்குப் புத்திரப் பேறில்லாமல் இருக்க வெகுநாட் கழித்து அப்பிரபுவின் குலதெய்வமாகிய **குருநாதன்** என்னும் பெயரினை யுடைய சந்நியாசித் தெய்வம் இப் பிரபுவின் கனவில் வந்து 'என்னைப் பாடும்படி முத்துச் குட்டிக்குச் சொல்லு; முத்துக்குட்டி பாடினால் உனக்குப் பிள்ளை தருவே'னென, இதை மனைவியிடம் கூறி விட்டு இதைப்போய் அவர்களிடம் எப்படிச் சொல் கிறதென்று பேசாதே இருந்து விட்டார். 4 மாதங் கழித்துப் மனைவி அவரை நெருக்கிச் 'சுவாமி உத் தரவு கொடுத்தும் உமக்கு ஏன் இம்மதி; போய் ஐயா விடம் சொல்லுங்கள்' என்று வற்புறுத்த, பிரபு வழக்கம் போல் முத்துக்குட்டியையாவிடம், போகாமல் பக் கத்தில் நின்று கொண்டிருந்த குறிப்பை யறிந்து 'ஏனப்பா வந்த காரியத்தைச் சொல்'லென்று கேட்க, இவர் சொல்வதற்கு நாணமடையப் பின்னும் அடிக் கடிச் சொல்லும்படி கேட்டார். அப்போது தனது குல தெய்வமாகிய குருநாத சன்னியாசித் தெய்வம் கனவிற் சாதித்த முறைமையை சொல்லக் கேட்டுக் கவிபாட அது முதலாகக் கெர்ப்பந்தரித்துக் குழந்தை பிறந்த தாகக் கேள்வி.

**கவி**

முக்கண்ணன் றானு முடிந்தானோ முக்கண்ணன்
மக்களிரு பேரு மடிந்தாரோ—பக்கம்
ஒருநாத னில்லையா வுன்கூத்தே கூத்தா
குருநாதா பிள்ளை கொடு.

இவருக்கு முத்துவடுகநாததுரை கிராமங்கள் சர்வமானியமாக விட்டாராம். திருப்புத்தூர் வயிர வரையும் திருக்கோட்டியூர் அம்மனையும் சாதங் கொண்டு வருமப்படி பாடி அவ்வாறே சாப்பிட்டவராம்.

**திருப்புத்தூரில் பாடிய கவி**

புசியா திருப்பவரே புண்ணியர் காணையா
கசியாதோ வுன்றன் கருத்துப்—பசிதான்
உயிரைவா திக்குதே யூட்டம் கொடுகா
வயிரவா சோறுகொண்டு வா.

முத்து வடுக நாததுரை மழையிருட்டில் அன்ன. மிட்ட போது சொல்லியது.

வடவரையை நிகருமுத்து வடுகநா
தேந்த்ரதுரை மகிமையாரில்
அடைமழையி னிசியிருட்டி லன்புவைத்துத்
தேடிமலை யப்பன் கையிற்
குடை கொடுத்துக் கைவிளக்குங் கொடுத்து முத்துக்
கூட்டியை நீ கூட்டிவாவென்
றிடமதனி லருகிருத்தி யனந்தந்தா னவன்போலும்
தெய்வநமக் கில்லைதானே.

## 361. நாதகுத்தனார்

இவர் வணிக மரபினர்; ஐம்பெருங்காப்பியங் களுள் ஒன்றாகிய குண்டலகேசியை இயற்றியவர்.

## 362. நாதமுனி

கம்பர் இராமாயணம் அரங்கேற்றியபோது கூட இருந்தவர்.

## 363. நாராயண தீக்ஷிதர்

தென்திருப்பேரை பாடல் பெற்ற ஒருவைணவத் தலம். இங்கு எழுந்தருளியுள்ள பெருமான் பெயர் மகரநெடுங்குழைக்காதர் என்பதாம். இந்தத்தலத்தில்

தான் நாராயண தீக்ஷிதர் வாழ்ந்து வந்தார். அவர் தலவகார சாமவேதிகளாகிய ஸ்ரீவைஷ்ணவர் குடியிற் பிள்ளை மங்கலத்தார் என்ற குடும்பத்திலே பிறந்தவர். பல ஆண்டுகளுக்குமுன் சுந்தர பாண்டியரென்னும் அரசர் பல ஊர்களில் வசித்த நூற்றெட்டுத் தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீவைஷ்ணவர்கள் குடும்பத்தைத் தென்றிருப்பேரையில்அமைத்து அக்குடும்பத்தினருக்கு வீடுகளும் நிலங்களும் வழங்கினாரென்பர். அந்நூற்றெட்டுக் குடும்பத்தின் வழிவந்தவர்கள் அவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். **தலவகாரம்** என்பது சாம வேதத்தின் சாகைகளுள் ஒன்று.

நாராயண தீக்ஷிதர் தமிழ்நூற் பயற்சியும், மகர நெடுங் குழைக்காதரிடத்தில் பக்தியும் உடையவர்; நம்மாழ்வாரிடத்தில் அளவற்ற அன்பினர். தென்றிருப் பேரைக்கு அருகிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குத் தினந் தோறும் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் நம் மாழ்வாரைத் தரிசித்து வருவார். அவருக்கு நம்மாழ் வார் தாசர் என்றும் ஒரு பெயர் வழங்கும். தீக்ஷிதருக்கு நிலம் வீடு முதலியன இருந்தன. அவற்றை வைத்துக் கொண்டு மகர நெடுங்குழைக்காதரைத் தரிசிப்பதும் தமிழ் நூல்களைப் படித்து இன்புறுவதுமாகிய நற் காரியங்களால் அவர் பொழுது போக்கி வாழ்ந்து வந்தார்.

பயிர் செவ்வையாகப் பயன் தராமையின் ஒரு வருஷம் நாராயணதீக்ஷிதராலும், அவர் இனத்தவர்கள் சிலராலும் அரசிறையைச் செலுத்தமுடியவில்லை. அக்காலத்தில் அவ்வரியை வசூல் செய்வதற்கென்றே ஓர் அதிகாரியை வடமலையப்பப் பிள்ளையன் நியமித் திருந்தார். அவர் ஒரு வன்னெஞ்சர்; அதிகாரத்துக்கு அழகு பிறர்பால் அதனைச் செலுத்தி அவர்களை நடுங்கவைப்பதே என்னும் கொள்கையையுடையவர்; தெய்வபக்தி, தமிழ்ப்பற்று என்பவற்றைச் சிறிதும் அறியாதவர். தமிழ்ப்புலவர்கள் தெய்வபக்தர்கள்

என்பவர்களுடைய பெருமை இன்னதென்பதை அவர்களோடு பழகித்தானே அறியவேண்டும். தமது அதிகார மிடுக்கில் பிறரை மதியாமல் வாழ்பவருக்கு இந்த நல்லோர்களின் உறவு எங்ஙனம் கிடைக்கும்?

நாராயண தீக்ஷிதரும், பிறரும் தாம் வரி செலுத்த இயலாத நிலையில் இருப்பதைப் பணிவாக அவரிடம் தெரிவித்து, இயலும் காலத்தில் செலுத்தி விடுவதாக நயந்து கேட்டுக்கொண்டனர். ஆனால் அவ்வதிகாரி அதற்கு இணங்காமற் சிறிதேனும் இரக்கமின்றி அவர்களைத் திருநெல்வேலி நகரத்திற்குக் கொணர்ந்து சிறையில் இடுவித்தார். அச்சிறைக்கூடம் இருந்த தெரு இப்போதும் காவற்புரைத்தெரு என்னும் பெயரால் வழங்கி வருகின்றதென்று சொல்லுகிறார்கள்.

சிறைப்பட்ட தீக்ஷிதரும் பிறரும் தம்முடைய வினையை நினைந்து நொந்து வருந்தினர். அவர்கள் சிறைப்பட்டதனால் தமக்கு இழிவு உண்டாயிற்று என்று வருந்தவில்லை. குழைக்காதரைப் பிரியும் காலம் நேர்ந்ததே என்பதை நினைந்தே மிகவும் இரங்கி நைந்தனர்.

நாராயண தீக்ஷிதர் 'நாம் எங்கே இருந்தாலும் மகரநெடுங்குழைக்காதர் நம்மை இரட்சிப்பர். இனிப் பாமாலை சூட்டி அவரை நோக்கி உருகி வழிபடுதல் தான் வழி' என்று துணிந்தார்; குழைக்காதர் விஷயமாக ஒரு நூல் செய்யத் தொடங்கினார். அதுதான் ''மகர நெடுங்குழைக்காதர் பாமாலை'' என்னும் நூலாகும். இதனை பாடிச் சிறைவீடு பெற்றார்.

[இதன் விரிவான செய்தியை ஐயரவர்களின் ''புதியதும் பழையதும்'' என்னும் நூலிலுள்ள 'சிறை நீக்கிய செய்யுள்' என்ற கட்டுரையின் மூலமாக அறியலாம்.]

## 364. நாராயண முதலியார்

இவர் ஞானவாசிட்டம் என்னும் நூலிற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தவர்களுள் ஒருவர்.

## 365. நாற்கவிராய நம்பி

அகப்பொருளைப் பற்றித் தனியே கூறும் இலக்கண நூலாகிய நாற்கவிராய நம்பியகப்பொருளென்பது இப்புலவரால் இயற்றப் பெற்றது. இதற்கு ஓருரையும் உண்டு. அதுவும் நாற்கவிராய நம்பியாலேயே இயற்றப்பட்டதென்று அந்நூற் சிறப்புப் பாயிரம் தெரிவிக்கின்றது. அகப்பொருளிலக்கணத்தை யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும்படி முறைப் படுத்தி உபகரித்தவர் இப் பெரியாரே.

## 366. நீர்வேலிச் சங்கர பண்டிதர்

நீர்வேலி யென்பது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரூர். இவ்வூரினரே சங்கர பண்டிதர். இவர் சிவப் பிரகாசரென்பவருடைய புத்திரர்.

## 367. நீர்வேலி சிதம்பரப் புலவர்

இவர் சேனாதிராய முதலியாருடைய மாணாக்கர்; **மறைசைத் திருப்புகழ், மறைசைக்கலம்பகம், நீர்வை வெண்பா** முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது.

> ''மேவுமலை மானை விழைவோ டிடம்வைத்து
> வாவுமலை மானைமுடி வைத்தவா—காவகமேல்
> வந்துவழங் கும்மறைசை வானவா வாழ்த்தெனக்கு
> வந்துவழங் குன்றாண் மலர்.''

மலைமான்-உமாதேவி. வாவும் அலைமான்-கங்கை. வந்து-காற்று. மறைசை-வேதாரணியம்.

## 368. நெல்லிநகர் அருணாசலதாசர்

இவர் மதுரகவி வரதராஜ ஐயங்கார் எனவும் அழைக்கப்படுவார். 9000 பாடல்களுள்ள பாகவத நூலாசிரியர் இவர். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள நெல்லி நகரைச் சார்ந்தவர்.

## 369. நெல்லூர் ஆசு வீரக்கவிராயர்

இவர் அரிசந்திரபுராணம் செய்ததைஅறிந்த அதி வீரராமபாண்டியர் இதனைத் தான் செய்ய வேண்டி யிருப்ப இவர் செய்தனரேயென்று 'மொட்டைக் கவி ராயன் மோசஞ் செய்தனனே' என்று சொன்னதாகப் பழமொழி ஒன்றுண்டு.

## 370. நெல்லைச் சச்சிதானந்தர்

இவர் தருமபுர ஆதீனத்துச் சிஷ்யர்களுள் ஒருவர். ஆசௌச தீபிகை யென்பதோர் நூல் இவராற் செய்யப்பட்டுள்ளது. இந்த நூலில் முதற் செய்யுளில் தருமபுரம் ஞானசம்பந்த தேசிகரும் இரண்டாஞ் செய்யுளில் திருவாரூர் ஞானப் பிரகாச தேசிகரும், மதுரைச் சம்பந்த தேசிகரும் துதிக்கப்பட்டிருக் கிறார்கள். :இந்த நூல் 176-ஆம் செய்யுளில் இவ ருடைய வரலாறு முதலியன கூறப்பட்டுள்ளன.

## 371. நெல்லை ஞானப்பிரகாசர்

இவர் சருவப் பிராயச்சித்த சமுச்சயம் என்னும் நூலில் 8 ஆம் செய்யுளில் துதிக்கப்பட்டிருக்கிறார்.

சாலி வாடிபுரம் ஞானப்பிரகாச தேசிகரென் பவரும் இவரும் ஒருவரோ வேறோ யாதும் புலப்பட வில்லை.

## 372. நெல்லைநாதப் பண்டிதர்

இவர் செய்த நூல் சிவராத்திரிபுராணச் சுருக்கம்.

## 373. நேமம் முத்தப்ப செட்டியார்

இவர் நேமம் (ஊர்) அழகப்ப செட்டியாரென்பவரின் குமாரர். நகரத்தாரைப் பற்றிய **திருமுக விலாசம்** என்னும் நூல் இவராற் செய்யப்பட்டது.

## 374. நையாண்டிப் புலவர்

பரிகாசமாகப் பாடிய காரணத்தால் இவருக்கு நையாண்டிப் புலவர் என்ற பெயர் ஏற்பட்டது போலும். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவரது பாடல்கள் செம்பாகமாக அமைந்தவை.

மேலாடை யின்றிச் சவைபுகுந்
தாலிந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமெண்
ணார்நுவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னாடை
கண்டு மகளைத் தந்தே
ஆலால மீந்தது தோலாடை
சுற்றும் அரன்தனக்கே.

## 375. பகழிக் கூத்தர்

இவருடைய ஊர் ஏறல். இவ்வூர் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்தைச் சார்ந்த பெருங்குளத்துக்குச் கிழக்கிலுள்ளது. கூத்தர் என்பது சில இடங்களில் ஐயனாருக்குப் பெயராக வழங்கிவருகிறது. இவர் இயற்றிய நூல் **திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்.**

இவரைப்பற்றி வழங்குபவை:

இவர் வைணவ மரபினர். இப் பிள்ளைத் தமிழைப்பாடி வயிற்று நோய் நீங்கப் பெற்றார் என்ப. பிள்ளைத்தமிழ் அரங்கேற்றிமுடிந்ததும் சபையோரில் சிலர் இவர் வைணவர் என்று மரியாதை செய்யாது புறக்கணித்தனர். அன்றிரவு முருகவேளுக்குச் சாத்தப்பட்டிருந்த ரத்னப்பதக்கம் காணாமற்போக, விடியற்

காலையில் கோயிலார் தேட, அது நித்திரை செய்து கொண்டிருந்த பகழிக்கூத்தரது கழுத்தில் அணியப் பட்டிருந்ததைக் கண்டு, அவர் மகிமையை அறிந்து தாம் செய்த அபசாரத்தைப் பொறுத்தருளும்படி அவரைக் கேட்டுக்கொண்டு அவரைப்பல்லக்கில் ஏற்றி ஊர்வலம் வந்து மரியாதை செய்தனர் என்ப.

இவர் சன்னாசிக் கிராமத்தினர்;'திருப்புல்லாணி மால் அடியார் தர்ப்பாதனன் மகன் பகழிக்கூத்தன்" என்பர். "**சிந்தாமணிச்சுருக்கம்**" என்னும் நூலும் இவர் எழுதியுள்ளார்.

"செம்பிநாட்டு, வீரநா ராயணச் சதுர்வேதி மங்கலம்
விளங்கவே வந்த நெடுமால், வேதியர் குலாதிபதிதர்ப்பாதனன்
புதல்வன் மிக்க பகழிக் கூத்தனே"—

சிந்தாமணிச் சுருக்கத்துப் பாயிரம்.

சன்னாசிக்கிராமமானது 'வீர நாராயணச்சதுர் வேதி மங்கலம்' எனவும் அழைக்கப்படும். 'நெடுமால் வேதியர் குலாதிபதி' என்பதால் இவர் வைஷ்ணவ பிராமண குலத்தினர் என்பது பெறப்படும். இவர் காலம் துணிந்து கூறுவதற்கில்லை.

(செந்தமிழ்-தொகுதி 6. பக்கம். 180.)

## 376. பட்டினத்துப் பிள்ளையார்

இவர் திருவெண் காடரென்றும் சொல்லப் படுவர். இவர் பிரபந்தங்கள் பதினோராந் திருமுறை யில் சேர்க்கப்பட்டுள்ளன. திருவிடை மருதூர்ப் புராணத்தில் இவர் சரிதம் வந்துள்ளது. தனியேயும் இவர்க்குப் புராணமுண்டு.பக்திரஸத்தைக்காட்டுவதில் இவர்பாடல்கள் மிகச்சிறந்தன. இவர் மாணாக்கர்கள் சேந்தனாரும் பத்திரகிரியாரும். வசன நடையாகவும் ஒரு நூல் இவர் புராணமாக வழங்குகின்றது.

சிவபுராணாதி தோத்திரமஞ்சரி பக்கம் 327.

இவர் இயற்றிய நூல்கள்:- திருக்கழுமல மும் மணிக்கோவை, கோயி னான்மணி மாலை, கச்சித்திரு அகவல், திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, பல் தனிப்பாடல்கள் முதலியன.

> ''என்செய லாவ தியாதொன்று மில்லை யினித்தெய்வமே
> உன்செய லேயென் றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
> பின்செய்த தீவினை யாதொன்று மில்லை மறுப்பதற்கு
> முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.''

## 377. பட்டீச்சுரம் அப்பாப்பிள்ளை

இவர் சத்தி முற்றப் புலவருடைய பரம்பரை யினர். கம்பராமாயணம் முதலிய நூல்களை நன்றாகப் பிரசங்கித்தலிலும் செய்யுள் செய்தலிலும் வன்மை யுள்ளவர்; கபித்தலத்துக் கருப்பைய மூப்பனாரவர்கள் காலத்தில் அவர்களிடம் அடிக்கடி வந்து பரிசுபெற்றுச் செல்வார். இவர் பட்டீச்சுரத்துக்குரிய **பழைசையந்தாதி** யென்ற ஒரு நூல் செய்திருக்கின்றனர்.

## 378. படிக்காசர்

இப்பெயருள்ளார் பலருண்டென்று கேள்வி. படிக்காசுப் பண்டாரமென்றும் படிக்காசுப் புலவ ரென்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவர் களத்தைப் படிக்காசரென்றும் கூறப்படுவர். இவர் தொண்டை மண்டலத்துள்ள களத்தூர் என்ற ஊரினர்; இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத தேசிகருடைய மாணவர்; சந்தக்கவி பாடுதலில் வல்லவர்; ''பகர்சந்தம் படிக்காசலாலொருவர் பகரொணாதே'' என்னும் புகழ்பெற்றவர். இவர் **தொண்டை மண்டல சதகம், வேளூர்க் கலம்பகம்** முதலிய நூல்களையும் பல தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் இரகுநாத சேதுபதிமீது பாடிய பாடல் ஒன்று:

"மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன் றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி ல்லவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே."

## 379. பண்டாரக் கவிராயர்

இவர், திருக்குற்றாலத் தலபுராணம் முதலிய வற்றை இயற்றிய கவிஞர் பெருமானாகிய மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராருடைய முதல் புதல்வர். பண்டாரம் என்பது முருகன் திருநாமங்களுள் ஒன்று. இவர் செய்த **இலஞ்சி முருகன் உலாவில்,**

"செய்ய திரு நாமஞ் சீரடியேற் கன்றளித்த,
மெய்யன் றிருமலைமேல் வீற்றிருப்போன்" (400)

என்று உள்ள குறிப்பால் இவர் முருகக் கடவுளுக்குரிய திருநாமங்களுள் ஒன்றையுடையவரென்பது தெரிகிறது. இவர் செய்தனவாக வேறு நூல்கள் எதுவும் காணப் படவில்லை. திரு இலஞ்சி முருகன் உலாவினால் இவர் முருகவேளிடத்துப் பேரன்புடையாரென்பதும், திருக் குற்றாலத்தலத்தில் ஈடுபாடுடையவரென்பதும் தெரிய வருகின்றன. இந்நூல் நடையைப் பார்க்கும்பொழுது இளம் வயதினிலேயே இந்நூலை இவர் இயற்றி இருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது.

முருகன் தம்மை ஆட்கொண்டதை

"என்னையே, எழுபிறப்பும் இனிப்பிறவா தாளவந்து,
வாழும் இலஞ்சி வடிவேலன்"

என இலஞ்சி உலாவிற் (75) போற்றியுள்ளார்.

## 380. பதினெட்டாங் கோட்டைச் சொக்கலிங்கம் பிள்ளை

இவர் தந்தையார் முத்துக்கருப்ப பிள்ளை; படித்தவர். மதுரையில் பூக்காரக்காத்தண்ணபிள்ளை

தெருவில் இவருடைய பிள்ளை திருச்சிற்றம்பலம் பிள்ளையிருக்கிறார். இவர் செய்த நூல் **மயூரகிரி இரட்டை மணிமாலை.**

### நடுவெழுத்தலங்காரம்

எமதீசன் பாணனுக்காப் பாடுகின்ற யாழோ
டெழிற்றுசமுண்கறியிடத்தி னேந்திழைபே ரெழுத்தின்
அமையு நடு வக்கரத்தோர் முன்பி னெழுத் தெட்டு
மத்தன் சிர கரத்தினணியென வெண்...ணாமல்
நமையடிமை கொண்டுமுத விரண்டினையுந் தந்தான்
நடுநான்கு மன்னையா விடமாகக் கொண்டார்
தமது முனைங் கரற்கின்றி மற்றிரண்டுந்.........
தாங்கொளவெண் ணினரெம்மைத் தடுத்தாட்
கொள்பவரே.

யாழ்—மகதி
துசம்—நந்தி
கறி—மதலை
ஏந்திழை—க்கன்னி

### கிளிவிடுதூது

#### வினாவிடை

வாகிள்ளை யேவொன்று கேள் சொல்லு குன்றை
மலைக்குகன் பால்
ஏகென்ன காரியஞ் சேரவிப்போ தழை யிங்கு வரா
னாகினை யம்பங்க சன்பூச லாமென் றறை மறுத்தால்
வாகுள்ள மார்பலங் கற்கொண்டு வாநன்று மாதரசே.

### மயில் விடு தூது

வா மயிலே ம.........வரை மயிலைக் கண்மயி.........லே.........
தேமயிலுந் தன்மையிற்சொல் செம்மையிலே–மாமையிலே
இம்மையிலே யம்மையிலே யெம்மையிலே யும்மிலையென்
றம்மயிலத் தற்கோதன் பாய்.

குன்றக்குடி சுப்பர்ப்பிள்ளையவர்கள் இவருக்குக் கீழே சிவகங்கை ஸமஸ்தானத்தில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தார்களாம்.

## 381. பதுமனார்

பதினெண் கீழ்க் கணக்குக்களில் நாலடியாருக்கு உரையியற்றிய இவர் நாலடியாரில் திருக்குறளிற்போல அதிகாரம் வகுத்தவர். குடத்துக்குள் யானையைப் புகுத்துவது போற் பல பாடல்களைச் சில அதிகாரங் களில் இவர் புகுத்தியிருக்கிறார்.

## 382. பம்பரஞ் சுற்றிச் சுப்பையர்

இவர் **மயில் ராவணன் சரித்திர கீர்த்தனம்** என்னும் நூலை இயற்றியுள்ளார். பம்பரஞ்சுற்றி யென்பது ஓரூர். இவ்வூர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தது.

## 383. பரஞ்சோதி முனிவர்

(1) இவர் சிதம்பரபுராணம் இயற்றிய புராணத் திருமலை நாதர் என்பவருடைய மகனார். **சிதம்பரப் பாட்டியல்** என்னும் இலக்கண நூலை இயற்றியவர். இவர்சைவர்என்பதைஅந்நூலின்சிறப்புப்பாயிரத்தால் உணரலாம். திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் வேறு; இவர் வேறு. இவரது காலம் 16—ஆம்நூற்றாண்டு என்பர்.

## 384. பரஞ்சோதி முனிவர்

(2)இவர்**திருவிளையாடல் புராண** ஆசிரியர். இவர் தந்தையின் பெயர் மீனாட்சி சுந்தர தேசிகர். இவர் பிறந்தவூர் திருத்தருப்பூண்டிக்குக் கிழக்கே மூன்றுகல் தொலைவிலுள்ளதாகிய குறுக்கையென்பது. இவரு டைய பரம்பரையோர் திருத்தருப்பூண்டியைச் சார்ந்த ஆதிரங்கம் வட்டம் படாகையில் இருக்கிறார்கள். திருவிளையாடலே யன்றி 1173—பாடல்கள் உள்ள **வேதாரணிய புராணமும்** இவராற் செய்யப்பட்ட தென்பர். திருவிளையாடலுக்கு ஏற்பட்ட மானியமும்

இருக்கிறது. இவர் "மதுரை அறுபத்து நான்கு திருவிளையாடல் **போற்றிக் கலிவெண்பா மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி** முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் திருமலை நாயக்கர் காலம் என்று தெரிகிறது. பின்னுள்ள செய்யுட்களும் அவற்றின் பின்னுள்ள வாக்கியமும் துறைசையிலுள்ள பழைய திருவிளையாடலேட்டுப் பிரதி யொன்றிலிருந்தன.

**விருத்தம்**

அருட் கடவுள் வணக்கம்பா யிரத்தொடவை யடக்க
மானதிரு நாடு நக ரருங்கயிலைச் சிறப்புத்
தெருட் பெருகு புராண வழி தலந்தீர்த்த மூர்த்தி
திருவிளையா டற்றொகையவ் விளையாட்டின் வகையோ
டிருட் கெடருச் சனைபீறா யாப்பின் விரி மூவா
யிரத்து முந்நூற் றறுபதின் மூன்றெழின் மதுரைப்புராணம்
பொருட்சுவைசொற் சுவைபெருகப் பரஞ்சோதி முனிவன்
புவிதழைந்து கதியேறப் பொற்புறச்செய் தனனே.

(குறிப்பு: முந்நூற்றறுபத்தேழெனவும் பாடம்.)

வரஞ்சோதி நாண் மழையால் வருமுத்த
நகைபங்கன் வழங்கப் பெற்ற
பரஞ்சோதி மாமுனிவன் பகர்ந்ததிரு
விளையாடற் பாடல் கூடற்
புரஞ்சோதி யாய்நின்ற புநிதரைப் போற்
றடையின்றிப் புகுஞ்சோ மாதித்
தரஞ்சோதி தாழமுனி தமிழ் முனி தென்
மொழியினிற் செய் தகைமைத்தாமே.

### 385. பரத்தை வயல் நாக முத்தையா

இவ்வூர் தேவிகோட்டைக்குச் சமீபனானது. இவர் சைவ வேளாளர்; நன்கு கல்வி கற்றவர்; நயினார் கோவில் சுவாமியம்மனிடம் பேரன்பு பூண்டவர்; **முத்துராமலிங்க சேதுபதி**காலத்தவர். இவர்.

அரண்மனைக்குச் செலுத்த வேண்டிய; பொன்னைந் நூறு பாக்கிப்பட்டு விட்டமையால் தாட்சணிய மின்றித் தாசில்தார் இவரை வருத்தித் தொழுவி லடைத்துவிட **நயினார் கோவில்** சுவாமியைக் கருதிக் "கையிலே" என்னுமொரு கவி சொல்ல அன்றிரவே சுவாமி சேதுபதிபாற் கனவிற் சென்றார். அம்மனும் அவ்வாறே சென்றார். இருவரும் அரசனையடைந்து சுவாமி "ஏஅப்பா, ஏண்டா என்மகன் நாகமுத்தனைச் சிறையிலடைத்தாய்?" என்று சொல்லி மறைந்தார். அம்மனும் "அப்பா! என் தாலிப் பொட்டை அடகு வைத்து வரிப்பணத்தை வாங்கிக் கொள்" என்றாராம். உடனே அரசன் விழித்தெழுந்து நடுக்கமுற்றுக் குதிரை மேலேறிச் சென்று தாசில்தாரைப் பார்த்து "யாரையாவது வரிப்பணத்துக்காக வருத்தித்தொழுவி லடைத்தீரோ?" என அவர் நடந்தவற்றைக் கூற, உடனே தானே தொழுவிற் சென்று அவரை வணங்கி மன்னிப்புக் கேட்டு இரண்டு கிராமம் சர்வமானியம் அளித்தார். அவர் பரம்பரையினோர் அக்கிராமத்தி லிருக்கிறார்களாம்.

இவர் இறைவனை விளித்துப் பாடிய பாடல்:

கையிலே யொருகாசுக் கிடமோ வில்லை
    கடனென்றா லைஞ்ஞூறு பொன்மே லாச்சு
நெய்யிலே கைபோட்டுக் கொடுப்போ மென்றால்
    நிருவாக மரண்மனையா ரறிய மாட்டார்
பையிலே பணமிருக்க நீருஞ் சும்மா
    பார்த்திருக்க நீதியுண்டோ பரனேயையா
மையிலே தோய்ந்தவிழி யுமையாள் பங்கா
    மருதூரா வென்வரிக்கே வழி செய்வாயே.

## 386. பரத்தை வயல் முத்துக் குட்டி ஐயா

இவர் மாம்ஸதாரி; சைவ மதஸ்தர். சிவகங்கை முத்து வடுகநாத துரையின் காலத்திலிருந்தவர்.

திருக்கோட்டியூர்த் தேரடியில் ஓரிரவில் பசித்திருந்த பொழுது பெருமாள் அன்னங் கொடுப்பாரென்று பாடியது.

கடுவா யிலுங்கொடி தேபசி தான் மழைக் காலிருட்டில்
இடுவா ருனக்கெவ ராமுஞ் சோறு மிதென்னபுத்தி
கெடுவாயினியென்னைக்கோட்டிகொள்ளாமற் கிடவுனக்கு
முடுவாய்க் கிடைக்கு விடியட்டுஞ் சாதங்கண் முக்குதற்கே.

பின்பு பெருமாள் அருள் கூர்ந்து அன்னமளித்த பொழுது பாடியது.

ஊருண் டுறங்கியிங் கார்தரு வார்க ளொருசிரங்கை
நீரும் பருக்கையு மென்றிருந் தேனிந்த நீணிலத்தைச்
சாருஞ் சௌமிய நாரா யணன்றன் றயவிருந்தால்
தேருந் தருங்கட் பூச்சோறுங் கடற்கரைச் சீனியுமே.

## 387. பரமக்குடிப் புலவர் நாகலிங்கம் பிள்ளை

இவர் வக்கீல் சோமசுந்தரம்பிள்ளை தமையனார். 77 ஆம் வயதிலிறந்தார் (98 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம்.)

இவர் செய்த நூல்கள்:

1. முத்தாலம்மன் பதிகம் (கிராம தேவதை)
2. திருவேங்கடப் பதிகம் (அச்சிடப்பட்டிருக்கிறது)
3. இராமாயணக் கும்மி (1000 கண்ணிகளுடையது)
4. மருதூர் நாகலிங்க சுவாமி பேரில் பதிகம்
5. நாராயணர் பதிகம்

இவர் புதல்வர்கள் பரமக்குடியில் முத்தியாலம்மன் கோவில் தெருவிலிருக்கிறார்கள். (ஐயரவர்கள் காலத்தில்) இவர் மகன் பெயர் சைவத்துறையா பிள்ளை.

## 388. பரமானந்தர்

இவர் இன்ன, ஊரினர் இன்ன சாதியார், இன்ன காலத்தவர் என்பது முதலிய விவரங்கள் ஒன்றும்

புலப்படவில்லை. ஆனாலும் **ஆனந்த ரகசியம்** என்னும் நூலொன்று இயற்றிய ஆசிரியரென்று பின்னுள்ள கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் தெரிகின்றது.

துகமேர் கருத்துடை யோன்பர மானந்தன் சொல்லியதோர்
நகமீ தினிற்சுட ரன்னவா னந்த ரகசியந்தான்
சகமீ திடுகின்ற பாச விருள்களைத் தானகற்றி
வகையான மோக்க வழிக்கு விளக்கென வாய்த்ததுவே.

இந்த 'ஆனத்த ரகசியம்' என்பது 250 வெண்பாக்களாலாகியது; பாயிரம் முதல் - காட்சி மகிமை இறுதியாகவுள்ள பதினான்கு பகுப்புக்களையுடையது; வேதாந்த நூல்.

## 389. பரித்தி

இவர் திருக்குறளுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர்.

## 390. பரிமேலழகர்

கும்பகோணத்தைச் சார்ந்த கருப்பூரில் உள்ள வேளாளர்களுள் சிலருடைய கோத்திரம் பரிமேலழகர் கோத்திரம் எனச் சொல்லப்படுகின்றது. இவர் பரிமேலழகியாரென்றும் வழங்கப்படுவர். இவர் செய்த குறளுரை பரிமேலழகியார் விருத்தியுரை என்றும் பழைய சுவடிகளில் காணப்படுகின்றது. பின்னுள்ள வெண்பாக்கள் சில குறளுரைக் கையெழுத்துப் பிரதியில் காணப்படுகின்றன.

தருமர் மணக்குடையர் தாமத்தர் நச்சர்
பரிமேலர் நந்தி பரித்திக்—கவிராசர்
மல்லர் சிலைப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லை யுரையெழுதி னோர்.

ஆயமறை நான்கி னறமதனை முப்பாலாய்
வாய்மை பெறவுரைத்த வள்ளுவர்க்குத்—தூய
பரிமே லழகருரை பார்க்குந்தோ றுள்ளந்
தருமே பேருவகை தான்.

அறுப்புக் கோட்டைக்குச் சமீபத்தில் உள்ள ஈராலென்ற ஊரிலே தான் இவர்......ந்ததாகச் சொல்லு கிறார்கள். குறளுக்கு விருத்தியுரையும் தொல்காப் பியத்துக்கு ஒருரையும் செய்திருப்பதாகவும் கேள்வி.

திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
யருந்திறல் வள்ளுவ னாய்ந்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
றிறந்தெரிந் துரைத்த செவ்விய முப்பாற்
கோருரை யன்றியோ ரொன்பது சென்று
மையுற வாக நையுறுங் காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்,
கோதிய பொருளை யுரைத்தன னன்ன
வெழுத்து முதலா விலக்கண வகையும்
வழுக்கில்வே தாகம வகையின் பயனுந்
தங்கிய குறட்பாத் தண்டமிழ் மனுநூற்
கிதுவே பொருளென வெவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்ச
விழுப்பொரு டோன்ற விரித்தினி துரைத்தோன்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவ
னன்பருணா ணொப்புரவு கண்ணோட்ட
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி யீசன தருளா
லுய்த்துணர் வுடைய வொருமை யாளன்
பரிமேலழக னெனப் பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே.

**பாடபேதம்:** அடி 7. வந்துதித்துலகிற்கு, 14. விழுப்புரை தோன்ற விதித்தினிதுரைத்தோன். துறை சையிலிருந்த ஒரு பரிமேலழகருரை ஏட்டுப்பிரதியின் இறுதியிலிருந்த பாடல் இது.

## 391. பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

இவர் பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் என்றும் புலவர் என்றும் சொல்லப்படுவர். இவருடைய

முதலூர் மண்டியூர் (வண்டியூர்) இவர் சுத்த சைவ வேளாளர்; இவருடைய ஊர்சிவகங்கைக்கு வடகிழக்கே யுள்ள கடம்பங்குடி. மதுரைக் கோயிலில் வேலை நடந்தபொழுது கம்மாளர் முதலிய ஐவகையார்க்கும் (பல பட்டடை) கணக்கராய் (மகமைக் கணக்கு) இருந்தது பற்றி இப்பெயர் பெற்றார். இவர்க்குப் பிள்ளைகள் நால்வர். இருவர் பெயர் தெரிகிறது. 1. சுந்தரச் சொக்கநாதப்புலவர்; 2. மருதநாயகப் புலவர். இவர்தான் **சசிவர்ணன் கோவை** செய்தவர். சிவ கங்கைக் கௌரீ வல்லப மஹாராஜாவாற் கொடுக்கப் பட்ட கடம்பங்குடி, இடையன்மேலூரில் சிலபாகமான ஏந்தல்கள் இவர்க்குரியன. அங்கயற்கண்ணியைப் பற்றிப் பல செய்யுட்கள் செய்தவர். மதுரையில் திருக் கல்யாணத்தின் பொழுது கவிசெய்வது இவருக்கு வழக்கம். அப்போது பரிவட்டங் கட்டுதல் முதலிய வழக்கம் அக்காலத்தில் இருந்தது.

### தனிப் பாடல்கள்

1. அணியார் தென்கூடலிற்சொக்கே பிட்டுக்கா அடர் செழியன்
கணியா லடியுண்ட தெவ்வாறு காணின்கை யின்முறுக்குப்
பணியார முண்டு பசுந்தேங் குழலுண்டு பாதகரைத்
துணியார் தடமுத் தலைவே லினும் பருந்தோசை யுண்டே.

2. பாணிக்கோ ரோடுமெய்க் கென்பா பரணம் பவளநிற
வேணிக்குப் பாதிப் பழஞ்சோமன் னாடை வியாக்கிரத்தோ
லாணிக்கை வீடு கடம்பா டவிவெளி யம்பலமாம்
மாணிக்கச் சொக்கரென் றார்பே ருமக்கு வழுத்தினரே?

3. சொக்கருட பாடு தொலைந்ததே யங்கயற்கண்
கைக்கொடுத்த வாசியினாற் கண்டீரே—மிக்கதெரு
வீதியிலே நேற்று விறகெடுத்தா ரின்றுதினத்
தேதியிலே தேரே றினார்.

### தலைவி கூற்று

4. வடிவுண்ட நீறன்றி மானனை யாரை மயக்குசொக்குப்
பொடியுண் டெனிலிங் கெவரறி வார்தொழப்போகையிலே
தொடியுண்டு கையில் வரும்போது காண்கிலேன் சொக்குக்கிப்
படியுண் டெனிற்செல்வ னாதலை வாயிற் படிகடந்தே?

5. நலங்காண் பவர்க்கருள் பொற்றா மரைதனி னாவலர்சூழ்ந்
திலங்கால வாயிற் கயற்கட் பிராட்டிக் கிருகலமுக்
கலங்காணும் வெண்முத் ததனாற் சிறந்த பல்லக்கிலே
அலங்காரச் சேவைபெற்றேன்பெற்ற பேறினி யார்பெற்றதே?

5. தொலையா மலைமக ளேநிதங் கூப்பிட்டுச் சொன்ன சொற்கே
கலையா யுகதர்மத் தாலேயுன் னெஞ்சங் கனிந்துருக
விலையாவிவ் வேளை யெனை வந்து காப்ப துனக்குவெகு
மலையாநீதா னிங்கிலையாசொல்வாய்கனி வாய்திறந்தே.

**சீட்டுக்கவி**

இலக்கண விலக்கியத் தெதிரிட்ட பேர் வாயை
யிருகாது பரியந்தமோ
டெறிவா ளெடுத்துக் கிழித்துநா வையறுத்
தெறியும்ப்ர சண்டவாக்கி
அலக்கணுற் றவர்தமக் கன்புட னியன்றமரி
யாதையருள் கனகமேரு
அக்கணியு மதுரைவளர் முக்கணானைப்பரவு
சொக்கநா தக்கவிஞன் யான்
கலக்கணக் கனன்றுநற் கரும்பிலோர் வட்டு
கவிராயர் முன்படித்துக்
காட்டா தொளிக்கின்ற பாட்டன்று கற்பனையி
லாததோர் கவிதையில்லை
பிலக்கணக் காகச் செலுத்துவது மென்றோர்
பிரபந்தமொன் பதுகோடிபொன்
பெற்றதென முற்றுமுண ருற்றதென வெங்கணருள்
பெரியவுடை யார்மகிபனே!

சிவகங்கைக்கு வடக்கே 4-மைலில் இருக்கும் சோழபுரத்திலுள்ள நந்தவனப் பொய்கைக் கரையில் வன்கண் பெரிய உடையாத் தேவருடன் பல்விளக்கிக் கொண்டு நிற்கையில் நீர்முகக்க வந்த ஒரு மங்கையின் மேற்றுணி காற்றால் விலக உடனே அவள் அதை ஒழுங்கு செய்து கொண்டு நீரெடுத்துக் கரையேறுங் காலையில் தேவர் குறிப்பறிந்து இவர் பின்வருங் கவியைக் கூறினார்.

ஆற்றேனென் றோடிய ராவணன் றன்னை யமர் பொருது
மாற்றிய வன்கண் பெரிதுடை யாரணி மால்வரைமேல்
கூற்றேறுஞ் சென்னி முலைச்சிலை நீக்கிக் கொடுத்ததென்றற்
காற்றே உனைக்கும் பிட்டேன்முனம்போ லின்னங்காட்டுவையே.

இதற்கு மகிழ்ந்து தேவர் இடைய மேலூரில் அவல் **குளமென்னு** மேந்தலைக் கொடுத்தனர்.

இந்தச் சோழபுரந்தான் சிவகங்கைக்குட்பட்ட ஸ்தானம்.

திருநெல்வேலியைச் சார்ந்த செண்பகநல்லூர் ஜமீந்தார்மேல் **வண்டுவிடுதூ**தென்னும் பிரபந்தம் பாடி ஒரு கிராமம் பெற்றனர். இந்த ஜமீன்தார் 'சிவகங்கை யார் என்ன கொடுத்தா'ரென்ற போது "அவல் குள மென்ற ஓரேந்தல் கொடுத்தார். அது பலகாரத்திற் காயிற்று; ஆயிரங்கண்டு ஐந்நூறு காணும்" என்றார். அவர் இரண்டாயிரம் கண்டு ஆயிரம் வரக்கூடிய கிராமமொன்றைக் கொடுத்தாராம்.

பின் **அழகர்கிள்ளை விடுதூது** செய்தனர்; பெருமா ளுடைய கட்டளையால் வண்டியூர் இரண்டு செய் நிலங் கிடைத்தன. ஸ்தானீகர்க்குப் பெருமாள்சொப்பன மளித்து இந்த நிலத்தில் இரண்டடி வைத்து அந் நிலங்க ளளித்தன ரென்பர். இவர் சொன்னபாடல்:

"இருமா நிலத்தையு மீரடி யாற்றந்த தெப்படியோ"

வண்டுவிடுதூதிற்காக **மீனாட்சியம்மை பஞ்ச ரத்தினம்** செய்தனர். ஆட்சேபித்தவர் சண்பகக் குற்றாலக்கவிராயர். இவர் கடம்பங்குடியிலிருந்தார்.

'சோற்றுக்கு அலந்தவன் சொக்கநாதப் புலவர் வீட்டுக்குப் போ'வென்பது பழமொழி.

இவரும் சுப்பிரதீபக் கவிராயரும் ஒரே காலத் தினர். இவர் வம்சத்தினர்—"சிவகங்கைப் போஸ்டு இடைய மேலூர். பெயர் மு. மீனாட்சி சுந்தரக் கவி ராயர்க்கு" என்பது. இவர்—ஏழாவது.

## தனிப்பாடல்கள்

### ஆமை

அஞ்சடக்கிப் பேர்பாதி யாலே யமையுமா
மஞ்சடக்கி யோதி மடநல்லீர்—நெஞ்சடக்கிக்
கச்சுக் கிடக்கையிலே காமசரம் பட்டுழன்று
தைச்சுக் கிடக்கையிலே தான்.

### நிந்தாத்துதி

நாறுங் கடம்பு நடையுடையும் பாவனையும்
வீறுமுனக் கேன்பழநி வேலவா!—கூறுபட
வெட்டுண்டா னுன்றமையன் வெண்ணெய்க்கா கத்திருடிக்
கட்டுண்டா னுன்மாமன் காண்,

### திருவாரூர்

காலவட்டத் துச்சிக் கதிரோனுக் குக்கதலி
யாலவட்டம் வீசுதிரு வாரூரே—ஞாலவட்டத்
தோங்கியனா கத்தொடையா ரோங்கியநா கத்தொடையா
ரோங்கியனா கத்தொடையா ரூர்.

### குடந்தை

இரும்பூத புண்ணுக் கிடுமருந்திங் கென்னோ
கரும்பனையா யென்ன கல்காலம்—விரும்பிக்
குடந்தைக்கும் பேசுரன்மேற் கொண்டமய லல்லால்
மடந்தைக்கும் பேய்பிடிக்கு மா.

சுப்பிரதிபக் கவிராயர் பாதக்குறடு போட்டுவந்த போது பல பட்டடைச் சொக்க நாதப் புலவர் பாடிய கவி:

சாணாருங்கள்ளுக் குடியார் பணிக்கர்சா றாயமுண்ணார்
கோணாமற் பாதக் குறடுஞ்செய் தாற்பெருங் கூலியல்லால்
நாணாம லேறி நடப்பர்க ளோவிந்த நானிலத்தில்
வீணா மடாசுப்ர தீபாவஞ் ஞான விளக்கொளியே!

### தீயரைப் பாடா வரம்தா!

பெரும்பாக்கி யம்வந்த போதே கவலைப் பெருமனத்தை
யிரும்பாக்கிக் கண்ணைக்குருடாக்கிக் காதினை யுஞ்செவிடாய்த்
திரும்பாக் கொடிய கடுமனப் பேய்கொண்ட தீயரிடம்
கரும்பாக் கியசொல்லைச் சொல்லாதருள்செய்கயற்கண்ணியே!

பல பட்டடைச் சொக்கநாதப்புலவர்.................. நாதபுரம் பிரதானியாகிய தெய்வக்கன்னியா பிள்ளை பேரில் **விஞ்சைக்கோவை** செய்தனர். அவர் சில காலங் கழித்து இறந்துபோக அப்போது சுப்பிரதீபக் கவி ராயர் பாடியது:

தேவைரகு நாதன்மெச்சுந் தெய்வகன்னி மீதுவிஞ்சைக்
கோவையென்னும் பில்லிவைத்துக் கொன்றாயே—பாவி
னிட்டிடைச்சொல் லார்பொறுப்பார் ஏதுமறி யாதபல
பட்டடைச்சொக் காமுழுவம் பா.

இவர் செய்த நூல்கள்:-

1. சிறுதொண்டருலா
2. அழகர் கிள்ளைவிடு தூது
3. மதுரை மும்மணிக் கோவை
4. பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது
5. தேவையுலா
6. மதுரையமகவந்தாதி
7. சண்பக நல்லூர் வண்டுவிடுதூது
8. மதுரை மீனாட்சியம்மன் பஞ்சரத்தினம்

## 392. பவணந்தி முனிவர்

முன்னோ ரொழியப் பின்னோர் பலரினுள்
நன்னூ லார்தமக் கெந்நூ லாரும்,
இணையோ வென்னும் துணிவே மன்னுக" (இ.கொ.சூ. 8)

எனவும்,

"பல்கலைக் குருசில் பவணந்தி என்னும்
புலவர் பெருமான்" (நன்.சூ.136 சங். உரை)

எனவும் பாராட்டப் பெற்றவர் பவணந்திமுனிவர்.

இவர் சைன மதத்தினர்; நன்னூலிலுள்ள கடவுள் வணக்கங்கள் இரண்டும் (சூ. 56, 258), மொழிக்கு முதற்காரணம் அணுத்திரள் என்ற கோட்பாடும், உயிர்களை ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் இறுதியாக அமைத்திருக்கும் முறையும், பவணந்தி என்னும் பெயரும் இதனைப் புலப்படுத்தும்; **பிரயோகவிவேக வுரையில்,**

"செய்யப்படுபொருளை ஆக்கல், அழித்தல், அடைதல் முதலாகச் சினேந்திரன் மதம்பற்றி நன்னூலார் பலவாகக்கூறுவர்", "நன்னூலார் வாமனன் சினேந்திரன் செய்த சத்த நூல் பற்றிக் கூறுவர்." (கலித்துறை, 12, 19)

என்று வந்துள்ள வாக்கியங்களும் இங்கே கருதற்பாலன.

இவர் துறவறத்தினர்; "பவணந்தி என்னு நாமத் திருந்தவத் தோனே" (நூற்சிறப்புப் பாயிரம்; 21-2) என்னும் பவணந்தி முனிவரென இவர் வழங்கப் படுதலும் இதனைப் புலப்படுத்தும்; சைனருள் துறவிகள் நந்தியென்று வழங்கப்படுதலை அச்சணந்தி வச்சணந்தி என்னும் பெயர் வழக்குக்களாலும், 'கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமணமா,சுனகநந்தியுந் திவணநந்தியும்' என்னும் தேவாரத்தாலும் அறியலாகும்.

திருவல்லத்திற்கு வடக்கேயுள்ள வள்ளி மலையின் குகையொன்றில் அமைந்திருக்கும், பழைய சைனபிம்பங்களுள் ஒன்றன் கீழே வரையப்பெற்றுள்ள சாஸனத்திற் கண்ட **பவணந்தி பட்டாரர்** என்பவர் நன்னூல் ஆசிரியராக இருத்தல் கூடுமென்று சிலர் கருதுகின்றனர்; சில காரணங்களால் இஃது அங்கீகரிக்கத் தக்கதாயினும் அந்தச் சாஸனத்தின் காலம் விளங்காமையால் இதனை உறுதியாக எண்ணக்கூட வில்லை. மேற்படி சாஸனம் வருமாறு:-

இவருடைய ஆசிரியர் சனகை என்னும் ஊரிலிருந்த சன்மதி முனிவரென்பார். இதனை,

"பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னரும் சிறப்பிற் பவணந்தி" (சிறப்புப் பாயிரம், 20—21)

என்பதனாலும்,

"தொல்காப் பியத்தின் குணதோடந்
தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட
ததனைச் சுருக்கியிசை

ஒல்காப் பெரும்பவ ணந்தியென்
றோதி யுபகரித்த
வல்கா வலன்சீய கங்கனுந்
தான்கொங்கு மண்டலமே''

என்னும் கொங்கு மண்டல சதகச் செய்யுளாலும் இது விளங்கும்.

''முன்னோர் நூலின் வழியே நன்னூற்பெயரின் வகுத்தனன்'' (சிறப்புப்பாயிரம், 18-9) என்பதனால், இவர் தொல்காப்பியத்தில் மட்டுமன்றி அக்காலத்து வழங்கிய அகத்திய சூத்திரங்களிலும், அவிநயம் முதலிய இலக்கண நூல்களிலும், சைனேந்திரம் முதலிய வடமொழி வியாகரணங்களிலும் இருவகை வழக்குக்களிலும் முன்பு வழங்கிப் பின்பு வீழ்ந் தொழிந்தவற்றை நீக்கி வழங்குவனவற்றைத் தழுவி மரபு வழுவின்றி இந்நூலையியற்றினரென்று வெளியாகின்றது.

அகத்திய சூத்திரங்களைப் பின்பற்றினமை நன்னூலிலுள்ள 131, 259, 260, 273, 291, 295, 300, 323, 327, 333, 340, 342, 355, 378, 382, 395-ஆம் சூத்திரவுரைகளாலும்,

தொல்காப்பியத்தைப் பின்பற்றினமை தானெடுத்துமொழிதலாக இவர் எடுத்துக் கொண்ட ''குறியதன் முன்னர்'' (90) என்பது முதலிய ஏழு சூத்திரங்களாலும், 106, 131, 320, 358, 372, 378, 389, 449-ஆம் சூத்திரவுரைகளாலும்,

அகத்தியத்தையும் அவிநயத்தையும் பின்பற்றினமை நுண்பொருண்மாலையுடையார் 571-ஆம் திருக்குறட் குறிப்பில், ''பரிபாட்டினுள், நிவந் தோங்குயர் கொடிக்கும் இவ்வாறு உரைத்தாராதலால், 'ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின்வழாஅ' என்னும் சூத்திரம் நன்னூலில் வருதலால், அகத்தியமாதல்.

அவிநயமாதல் வேண்டுமென்க" என்று எழுதியிருத்தலாலும்,

ஆல், ஆன் என்பவற்றையும் மூன்றனுருபாகக் கூறியிருத்தலாலும் விளங்கும்.

திருவாரூரில் திருக்கூட்டத்தில் தமிழ்க்கிலக்காகிய வைத்தியநாத நாவலர்தாம் இயற்றிய இலக்கண விளக்கத்தில் நன்னூலிலிருந்து ஏறக்குறைய 250 சூத்திரங்களையெடுத்து அமைத்திருத்தலை உற்று நோக்கும்பொழுது, பழைய நூல்களிலிருந்து பொருள்களைத் தொகுத்தல் முதலியவற்றிலும் சில் வகை எழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனாடியிற் செறித்தினிது விளக்கித் திட்ப நுட்பம் பொருந்தச் சூத்திரஞ் செய்தலிலும் இவர் வல்லுநர் என்பது புலப்படும்.

கி. பி. 1178 முதல் 1216—ஆம் வருடம் வரையில் அரசு புரிந்த மூன்றாங்குலோத்துங்கசோழன் காலத்தவனான மேற்கூறிய சீயகங்கன் காலத்தில் இருந்தவராகத் தெரிதலால், இவருடைய காலமும் அதுவேயெனக் கொள்ள வேண்டும்; "பிங்கல முதலா, நல்லோ ரிச்சொலி னயந்தனர் கொளலே (460)" என்பது நன்னூல் சூத்திரமாதலால், பிங்கல நூலாசிரியர் காலத்திற்கு இவர் காலம் பிற்பட்டதென்று தெரிகின்றது. "பைங்கண், பைந்தார், காரா, சேதா" என்றாற் போலும் பண்புத்தொகையாகிய சொற்களைப் பசுமை, கருமை, செம்மை எனப் பண்புப் பெயராக நிறுத்தி, ஈற்றுயிர் மெய்யும் ஈற்றயலுயிரும் கெட்டு ஆதி நீண்டது என்றும், பின்னுள்ளோர் சந்தி முடிக்கின்றது பொருந்தாது (தொல்-எச்ச. சூ. 3. நச். உரை) என்னும் பகுதியை "ஈறு போதல்" (136) என்னும் சூத்திரத்தின் மறுப்பாகக்கொள்ளின், நச்சினார்க்கினியர் காலத்திற்கு இந்நூலாசிரியர் காலம் முற்பட்டதென்று நினைத்தற்கு இடமுண்டு.

## 393. பவளப் பாடிப் புலவர்

இவர் வீரசைவர். இவர் இயற்றிய நூல் சானந்த கணேச புராணம்.

## 394. பழனிக் குமாரத் தம்பிரான்

இவர் சேற்றூர்க் கந்தசாமிக் கவிராயருடைய புதல்வர்; பிள்ளையவர்களின் மாணாக்கர்களுள் ஒருவர்; தமிழ் நூல்களிலும் சைவ சாஸ்திரங்களிலும் பயிற்சியுள்ளவர்; திருவாவடுதுறை யாதீன வித்துவானாகவும் திகழ்ந்தவர். இவர் இராமநாதபுரம் பாண்டித்துரைத் தேவருக்குச் சாஸ்திர பாடம் சொன்னவர்.

## 395. பழனிப் பால சுப்பிரமணியக் கவிராயர்

இவரியற்றிய நூல் **பழனிப்புராணம்.**

## 396. பழனி மாம்பழக் கவிராயர்

மதுரை மேலைப்பட்டமார் தெருவிலிருக்கும் சக்கரபாணி ஜோஸ்யர் ஓரேழையந்தணர்க்கு ஆடையளித்த பொழுது அங்கு வந்திருந்த இவர் அவ்வந்தணரின் மனமகிழ்ச்சியை யறிந்து அந்த ஜோஸ்யர் மீது பாடியது:

அடையலர்கள் பணிவிசயன் விப்ரகுலச்
சக்கரமா லாது லர்க்குக்
கடையிலுள்ள சோமனெல்லாஞ் சலியாம
லெடுத்தெடுத்துக் கையினாலே
கொடைகொடுக்கும் வகைதெரிந்தச் சோமனுளங்
குறித்தேவெண் குவட்டில் வாழும்
உடையவன்பா லடைக்கலஞ்சென் றவன்சடைக்கா
டதனிற்போ யொளித்திட் டானே.

குறிப்பு: சோமன்—ஆடை, சந்திரன்

அந்த ஜோஸ்யர் விருந்தளித்த பொழுது இவர் உண்டு மகிழ்ந்து பாடிய **கலித்துறை:**

**மையு மணக்குங் குழலார் புணர்மதன் வாசகத்தில்**
**மெய்யு மணக்குந் துரைசக் கரமுகில் வீட்டிலென்றும்**
**நெய்யு மணக்கு மறுசுவையோடு நிதமுமுண்ட**
**கையு மணக்குங் கனிவாய் மணக்குமென் காதமுமே.**

முகவைப் பொன்னுசாமித் தேவர் 'கிரியிற் கிரியுருகுங் கேட்டு' என்று ஸமஸ்யை கொடுத்த பொழுது இவர் பாடியது.

**வெண்பா**

*மாலாம்பொன் னுச்சாமி மன்னர்பிரா னன்னாட்டிற்*
*சேலாங்கண் மங்கையர்வா சிக்குநல்யாழ்—நீலாம்*
*பரியிற் பரியகொடும் பாலை குளிரும்மா*
*கிரியிற் கிரியுருகுங் கேட்டு.*

*நீலாம்பரி, ஆகிரி: பண்வகை. பாலை குளிரும், கிரி உருகும்*

**போலென்றெடுத்துக் கண்டென்று முடித்தது.**

*போனுரைமட் டும்புகல்வர் பொங்குபொரு ளொன்றீயார்*
*சீலபொன்னுச் சாமியெனுஞ் சிங்கேறே—சால*
*மனமிரக்க மில்லாத வன்கணரைக் கூடிக்*
*தனத வெனக்கூறிற் கண்டு.*

இவர் செய்த நூல் தேவாங்கப் புராணம். வேறு பல நூல்கள் இயற்றியிருப்பதாகவும் தெரிகிறது.

## 397. பனையம் நாகலப்பட்டிச் செங்கமலக் கவிராயர்

இவ்வூர் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் மேல் பாகத்திலுள்ளது. இவர் சோழநாட்டிலுள்ள குண்டையூர் நமச்சிவாய பண்டாரத்தின் புத்திரர்; இவர்எதையும் ஒருவர்ஒருமுறைசொன்னாலே அதனை உடனேயே அறிந்து திருப்பிச் சொன்னமையின் 'ஏக சந்தக்கிராகி' யென்று சொல்லப்படுவர். இவரும் இவர் தம்பியும் மருங்காபுரி வீரப்ப பூசைய நாயக்கரிடம் பரிசும் கிராமமும் பெற்றனர். மல்லைச்சி குழந்தைக்

கவிராயர் பூச்சைய நாயக்கன்மீது ஒரு கோவையை அவன் முன்னிலையில் அரங்கேற்றிக் கொண்டிருந்த பொழுது அவமதிப்புத் தோன்றும்படி இவர் வினா வினாரராம். இக்கோவைச் செய்யுள் முழுவதையும் ஒரு முறை கேட்ட போதே மனத்தில் வாங்கி 'இந்நூல் எங்களுடைய பிதா இயற்றியதென்று கூறினர்; இரண்டு முறை சொல்லக் கேட்ட இவர் தம்பியாரும் அவ்வாறே கூறினர். இதனையறிந்த குழந்தைக் கவி ராயர் வியந்து அவரையழைத்து வந்து தம்முடைய பெண்களை யவருக்கு விவாகம் செய்து கொடுத்தனர். இவர் செய்த வண்ணங்கள், தனிச்செய்யுட்கள் முதலியன பல.

## 398. பரதை அழகப்பர்

இவர் ஏகசந்தக்கிராகியென்று பெயர் பெற்றவர்; கருநாடக துரைத்தனத்தில் திருநெல்வேலிச் சீமையை யாண்ட காவை வடமலையப்பப் பிள்ளையனுடைய காலத்தவர்; அவரை முன்னிலையாக்கி **வடமலை வெண்பா**வென நீதி நூலொன்று இவரால் இயற்றப் பட்டுள்ளது.

இவர்வைஷ்ணவர் [கொல்லமாண்டு829]. திருநெல் வேலிச் சீமையை அரசாண்ட **காவை வடமலையப்பப் பிள்ளைய**னென்னும் பிரபுவை முன்னிலையாக வைத் துத் திருக்குறளின் அறத்துப்பால் பொருட்பால்களி லுள்ள ஒவ்வோரதிகாரத்திலிருந்தெடுத்த ஒவ்வொரு குறள் வெண்பாக்களைப் பின்னிரண்டடியாகவும் அப்பாக்களுக்கு இலக்கியமான நீதிக் கதைகளை அமைத்துச் செய்யப்பட்டுள்ள அடிகளை முன்னிரண் டடியாகவும் அமைத்துச் செய்யப்பட்டுள்ள 108-வெண்பாக்களையுடையது வடமலை வெண்பா வென்பது. இந்த நூல் [மதம்] முதற்செய்யுளில் "பூமகனை யெல்லாப் புவனத் தொடும்படைத்தோன்,

மாமகள் கோன் காவை வடமலையே" என்று கூறியிருத்தலின் இவர் வைணவசமயத்தினராக நினைக்கப்படுகிறார். கொல்லமாண்டு 1043-ல் வைகாசி மாதத்தில் திருநெல்வேலி முத்தமிழாகர அச்சுக்கூடத்தில் சாலிவாடீசுவர ஓதுவார் மூர்த்தியால் பதிப்பிக்கப்பட்டதான அச்சுப்புத்தகத்தின் முதலிற் காணப்படும் "வடமலை வெண்பாவென்னும் விநாயகர் துதியும், "சீரோங் குலகை" என்னும் முருகக்கடவுள் துதியும் திருநெல்வேலி அம்பலவாணக்கவிராயர் வீட்டுப் பழைய கையெழுத்துப் பிரதியிற் காணப்படாமையால் இவரைச் சைவரென்று ஒரு தலையாகச் சொல்லக் கூடவில்லை.

சிந்தாமணி முதலிய ஐந்து காப்பியத்திலிருந்தும் பெருங்கதை முதலியவற்றிலிருந்தும் கதைகளை ஒழுங்காக எடுத்துக்காட்டியிருத்தலின் இவர் அப்பண்டையிலக்கியங்களில் மிக்க பாண்டித்தியமுடையவரென்று தெரிகிறது.

காலம்:- திருச்செந்தூர் முருகக்கடவுளின் மீது மேற்படியூர் வென்றிமாலைக்கவிராயர் பாடிய "இப்போது தேவரீர்" என்னும் கீர்த்தனத்தில் "எண்ணூற் றிருபத்தொன்பதாமாண்டு இசையும் விசைய வருடம் தை மாதத்தில்" எனவும் "காரேறு தண்டலைசூழுஞ் செழுந்தமிழ்க்காவை வடமலையப்பன் றொழுதிட" எனவும் வந்திருத்தலின், வடமலையப்பப் பிள்ளையன் காலத்திருந்த இவர் கொல்லமாண்டு 829-ன் முன்னும் பின்னுமுள்ளவராக நினைக்கப்படுகிறார். வென்றிமாலைக் கவிராயர் இவர் காலத்தவரே.

## 399. மருவான் முத்தப்பா செட்டியார்

இவர் நாட்டுக் கோட்டை வகையாரைச் சார்ந்தவர்.

## 400. பாபநாச தேசிகர்

இவர் தென்காசியைச் சார்ந்த புலியூரில் இருந்த நெல்லையப்ப தேசிகருடைய புத்திரர். இவருடைய முன்னோர் முதலில் சிதம்பரத்திலிருந்து குலசேகர பாண்டியர் காலத்தில் மேற்கூறிய புலியூருக்கு வந்தார்கள் என்றும் நெல்லையப்ப தேசிகர் ஆவுடையூருக்கு வந்தார் என்றும் தெரிகிறது. சைவ மதத்தினர். அபிஷிக்தர். இளமையிலேயே இலக்கிய இலக்கணங்களில் நல்ல பயிற்சியுற்று வடமொழியிலும் புலமை பெற்ற இவர் அக்காலத்தில் திருவனந்தபுரத்தில் இருந்த ஒருவர் தமிழ் மொழிப்பற்றுள்ளவராக இருத்தலைக் கேள்வியுற்று அவ்வூர் சென்று அவர் மீது வண்ணமும் வேறுசில கவிகளும் பாடிச் செங்கோட்டையில் மடமும், மானியமும் பெற்றுவாழ்ந்தார். இவர் செய்த நூல்கள்:-

மதுரை வசந்த வியாசக் கலித்துறை, திருவாரூர்த் தியாக வசந்தக் கலிப்பா, திருக்காளத்திநாதர் பதிகம், திருமலையந்தாதி, திருக் குற்றாலக் கலம்பகம், நன்னகரச் சிலேடை வெண்பா, புகலூரந்தாதி, திருவனந்தபுர மகாராஜா வண்ணம், வேறு சில தனிப்பாடல்கள் முதலியன.

இவர் கவிராஜ பண்டாரம் என்றும் வழங்கப் படுவர். இவர் காலத்தவர்கள் மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர், விக்கிரம சிங்கபுரம் நமச்சிவாயக் கவிராயர். இவர் திருவனந்தபுரம் அரசனிடம் சென்று பலமுறை நன்கொடை பெற்றவர். சமஸ்தி பாடுவதில் வல்லவர் என்றும் அங்ஙனம் பாடிய பாடல்கள் பலவுள்ளன வென்றும் தெரிகிறது. இவரது பரம்பரையோர் செங்கோட்டை மேலரதவீதியில் வடக்கோரத்தில் இருந்தார்கள்.

## 401. பாபநாச முதலியார்

இவர் கும்பகோணத்தில் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வசித்தவர். அந்நகரத்தில் வாணாதுறை

வடக்கு வீதியில் ஸ்ரீமான் திருவேங்கடம்பிள்ளையென்பவர் வசித்திருந்த வீடு இவர் வீடென்று சில பத்திரங்களால் தெரியவந்தது. இவர் காலத்தில் தஞ்சையில் மகாராஷ்டிர அரசு ஸ்தாபிதமாகி இருந்தது. ஏகோஜி என்பவரை இவர் தாம் இயற்றிய நூலான கும்பேசர் குறவஞ்சி நாடகத்தில் (பாட்டு 6, 43) பாராட்டியுள்ளார். இவர் சிவபக்திச் செல்வர்; தமிழில் அருமையான பல கீர்த்தனங்களைப் பாடியவர். 'நடமாடித் திரிந்த உமக்கு' என்ற காம்போதி ராகக் கீர்த்தனம் இவர் இயற்றியது. தம் கீர்த்தனங்களில் இவர் பாபநாசம் என்ற முத்திரையைப் பாட்டின் பொருளோடு இசைந்து நிற்கும்படி அமைத்திருப்பர்; (கும்பேசர் குறவஞ்சி நாடகம் பாட்டு 35, 49, 58, 72, 89, 113). இவரது கீர்த்தனங்களில் இடையிடையே சில சரணங்கள் தெலுங்கு மொழியில் உள்ளன; (கும்பேசர் குறவஞ்சி நாடகம் பாட்டு 12, 15, 41). அதனால் இவருக்குத் தெலுங்குப் பயிற்சியும் உண்டென்று தெரிகிறது. சங்கீதம் தெரிந்தவர்களுடைய சாகித்யம் என்றால் அதற்கு ஒரு தனிக்கௌரவம் உண்டு. அதில் ராகபாவம் நன்றாகப் பொருந்தியிருக்கும். கீர்த்தனங்களின் நடை சாதாரணமாக இருந்தாலும் அவற்றின் சங்கீத அமைப்பு உயர்ந்தது என்பதைச் சங்கீத வித்துவான்கள் நன்கு அறிவார்கள். இவருடைய கீர்த்தனங்களைக் கனம் கிருஷ்ணையர், மதுர கவி, அனந்த பாரதி, கோபால கிருஷ்ண பாரதியார் முதலிய சங்கீத சாகித்திய வித்துவான்கள் பாடி இன்புற்றார்கள் என்று தெரிகிறது.

## 402. பாம்பன் குமரகுருபரதாசர்

சென்னையில் குமரகுருபர தாச சுவாமிகள் இருந்து வந்தார். அவரைப் பாம்பன் சுவாமிகள் என்பார்கள். அவர் முருகனிடம் இடையறாத அன்பு பூண்டவர்.

சென்னை இராயப்பேட்டையில் உள்ள ஸ்ரீபால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் 17-ஆம் ஆண்டு விழாவில் நானும் (ஐயரவர்களும்) பாம்பன் சுவாமி களும் நேரில் சந்தித்து உரையாடினோம். சுவாமிகள் அவர்கள் பல நூல்கள் இயற்றியுள்ளார்.

## 403. பாலக்கரை வீரராகவ செட்டியார்

இவர் சோடசாவதானம் தி. சுப்பராய செட்டியாருடைய தந்தையார்.

## 404. பால சரஸ்வதி சுப்பிரமணியக் கவிராயர்

இவரது ஊர் திருப்புறம் பயம் என்னும் சிவஸ்தலம். வீரசைவர். இவர் உடையார் பாளையம் ஜமீன்தாராக இருந்த கச்சி ரங்கதுரை என்பவரால் ஆதரிக்கப்பட்டு அவரது சமஸ்தானத்தில் தமிழ்வித்து வானாக இருந்தவர். கச்சிரங்க துரை விஷயமாக உள்ள தனிப்பாடல்கள் பலவற்றுள் இவர் பாடிய செய்யுட்களில் ஒன்று வருமாறு:

கல்லாட மேமுதலாக் கற்றுணர்ந்தாய் கல்வி பெற்றோர்
பல்லாடக் கூடுமோ பார்வேந்தே—சொல்லாடும்
கச்சிரங்க சாமியெனுங் காலாட்கள் தோழா நீ
வச்சிரதே கம்பெற்று வாழ்.

கச்சிரங்கப்ப உடையாரின் குமாரராகிய கச்சிக் கல்யாண ரங்கர் உடையார் பாளையம் ஜமீன் தாராகிக் கொள்ளிடக் கரையிலுள்ள மதனத்தூரில் அன்ன சத்திரத்தைக் கட்டிய காலத்தில் அதனைப் பாராட்டி இவர்,

"திருமால்மண் உண்ணாமல் சிவனும் நஞ்சைத்
தின்னாமல் செங்கமலப் பொகுட்டு தேவன்
உருமாறி யன்ன மெனப் பறந்திடாமல்
உயர் மறையோர் வடிவின் வந்தேயன்ன முண்ணக்

கருமால்நேர் கரதலக்கல் யாண ரங்கக்
காலாட்கள் தோழ மன்னர் கருத்து வந்தே
வருமாம தனத்தூரில் அன்ன சத்ரம்
வைத்திட்டா ரெவரும்வந்து துய்த்திட் டாரே.''

## 405. பால சுப்பிரமணியக் கவிராயர்

இவர் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் என்று தெரிகிறது. இவர் சைவ வேளாளர், இவர் தமையனார் பெரியவன் கவிராயர். இவரும் நல்ல கவிஞரே. பழநிஸ்தல புராணத்தை முதலில் அச்சிட்டவர் ஈரோடு தண்டபாணி ஸ்வாமிகள், பின்பு உரையுடன் அச்சிட்டவர் யாழ்ப்பாணம் கதிரை வேற் பிள்ளையவர்கள்.

இவர் இயற்றியுள்ள நூல்கள்:- பழநித்தல புராணம், பழநி யமக வந்தாதி, பழநி யிரட்டைமணி மாலை, கந்தர் நாடகம் (கந்தபுராணக் கீர்த்தனை இது;ஓரியண்டல் லைப்ரேரியிலுள்ளது.)

## 406. பிச்சப்பிள்ளை

இவர் குற்றாலத்திற்கு அந்தாதியொன்று செய் திருக்கிறார். இவர் வரலாறறைக் குற்றாலக் குறவஞ்சி 'மேயினுமைமையே' என்னும் தருவில் காண்க. இவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் காலத்திற்கு முந்தியவரென்று தெரிகிறது.

## 407. பிரபாகரர்

இவர் வடநூல் மீமாம்சகர். 'உணவு கசப்பாக இருக்கிறது' என்று சொன்னவுடன் ஆசிரியரால் விடை கொடுத்தனுப்பப் பெற்றவர்.

## 408. பிள்ளைப் பெருமாளையங்கார்

**பரப்பிரமவிவேகம்** என்பதொரு நூல் இவர் செய்த தாக வழங்குகின்றது.

இவர் செய்துள்ள திருவரங்கத்து யமக வந்தாதிக்குத் **திருகுருகைப் பெருமாள் கவிராயர்** என்பவர் உரை செய்திருத்தலின் அவர் இவர் காலத்திற்குப் பிந்தியவரென்று தெரிகின்றது.

இவர் **திருவரங்கக் கோவையொன்று** செய்திருப்பதாகவும் தெரிகின்றது.

திருவரங்கத் தாசற்றிருநாமத்துத் தனியனில் 'வெண்மணிப் பிள்ளைப்பெருமாள்' என்று கூறப் பட்டிருத்தலின் இவருடைய ஊர் வெண்மணி என்று தெரிகின்றது.

## 409. பிறையாறு அருணாசல முதலியார்

இவர் வேதாந்த நூல்கள் பலவற்றிற்கு உரை செய்திருக்கிறார்.

## 410. பிறையாறு கதிர்வேற் கவிராயர்

இவருடைய ஊர் பிறையாறு. குமார கோயில் வடக்கு வீதியில் வடசிறகில் மேலைக் கோடி வீடு; சாதியிற் சோழிய வேளாளர்; இவர் இவ்வூரிலிருந்த வண்ணக்களஞ்சியப் புலவரிடம் முதலிற் படித்து அப்பால் வேறு சிலரிடத்துக் கற்றுத் தமிழிலக்கண இலக்கிய நூல்களிலும் செய்யுள் செய்தலிலும் தேர்ச்சியடைந்தவர்; தமிழ் நாடெங்கும் புகழ் படைத்தவர். இவர் பெரும்பாலும் திருநெல்வேலி, புதுக்கோட்டை, சென்னை முதலிய இடங்களில் தங்கி ஆங்காங்குள்ள பிரபுக்களாலும் ஜமீன்தாரர்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்து இறுதிக்காலத்தில் சென்னையிலேயே இருந்து காலங்கழித்து வந்தார். முதலில் கிறிஸ்துவ மதத்தில் அன்புள்ளவராக இருந்து அம்மதத்தைச் சார்ந்த சில கனவான்களுடைய முயற்சியால் சில நூல்களியற்றினரென்றும், பின்பு அம்மதத்தை விட்டு விலகிச் சைவ சமயத்தைச் சார்ந்து இதில் அன்பு வைத்து ஒழுகியதன்றிக் கிறிஸ்துமத கண்டனங்களாகப் பற்பல நூல்

களியற்றினரென்றுஞ் சொல்லுவார்கள். இவராற் செய்யப்பட்ட தனிப்பாடல்கள் பலவும் கீர்த்தனங்கள் பலவும் ஆங்காங்கு வழங்குகின்றன. பூர்த்தியாக அகப் படாமையால் அவற்றை இங்கே எடுத்துஎழுதவில்லை. இவர் 83—பிராயம் வரையிலிருந்தார். இற்றைக்கு 97 வருடங்களுக்கு முன்பு சென்னையில் தேகவியோக மடைந்தாரென்று தெரிகின்றது.

## 411. பிறையாற்று வண்ணக்களஞ்சியப் புலவர்

இவர் துலுக்கர்; வண்ணம் பாடுவதில் சமர்த்தர். இவரிடம் படித்தவர்களுள்ளே பிறையாற்றுக் கதிர் வேற் கவிராயரும் ஒருவர்; அவர் பல நூல்கள் செய் திருப்பதாகக் கேள்வி. இவருடைய பரம்பரையோர் பிறையாற்றிற் சோனகத் தெருவிலிருக்கிறார்கள்

## 412. புகழேந்திப் புலவர்

இவரைச் சந்திரன் சுவர்க்கி என்ற அரசன் ஆதரித்தான். நளவெண்பாவில் சில இடங்களில் இவர் அவனைப் புகழ்ந்திருக்கிறார். இவருடைய ஊர் பொன் விளைந்த களத்தூர் என்றும், முதுகளத்தூர் என்றும் சோழ நாட்டுள்ள களப்பாழ் என்றும் பலவாறு சொல்லுகிறார்கள். முதுகளத்தூராக இருக்கலா மென்பதே சிலர் துணிபு. களந்தையென்பது மரூஉ மொழி.

## 413. புத்தமித்திரர்

பௌத்த சமயத்தாராகிய இவரால் ஐந்திலக் கணங்களையும் உடைய நூலான **வீர சோழியம்** என்பது இயற்றப்பட்டது.

## 414. புதுவைச் சுப்பராமசாமி முதலியார்

**கோகிலாம்பிகை மாலை** என்பதொரு நூலும், **வில்வ வனத்தந்தாதி** என்பதொரு நூலும் இவர் செய்த தாக வழங்குகின்றது.

## 415. புதுவைப் பொன்னையா முதலியார்

இவர் வெள்ளை முத்து முதலியாருடைய குமாரர். **மயிலாசலமுருகர்மும்மணிக்கோவை**யென்பதொரு நூல் செய்ததாக வழங்குகின்றது.

## 416. புரசைப்பாக்கம், அஷ்டாவதானம் சபாபதி முதலியார்

இவர், சென்னபட்டணம் தாண்டவராய முதலி யாரிடத்தும், காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடத்தும் கல்வி பயின்றவர்.

## 417. புராணத் திருமலைநாதர்

இவரது இயற்பெயர் திருமலைநாதரென்பது. இவர் காஞ்சிபுரம் ஞானப்பிரகாச மடத்துச் சிஷ்ய பரம்பரையைச்சார்ந்தவர். திருமுறைகளிலும், பழைய தமிழ் நூல்களிலும், ஸ்தலபுராணங்களிலும், பிரபந்தங் களிலும், சைவ சாஸ்திரங்களிலும் பயிற்சியுள்ளவர். இவருடைய பக்தியையும் செய்யுள் செய்யும் நயத் தையும் அறிந்த தில்லை மூவாயிரவரும் யதிகளும் மற்றப் பெரியோர்களும் சைவ புராணத்தின் ஒரு பகுதியாகிய சிதம்பர புராணத்தைத் தமிழிற் செய்யுள் நடையாக மொழிபெயர்க்கும்படி சொன்னமையால் அங்ஙனமே செய்ய உடன்பட்டனர். மலைநாட்டி லிருந்து வடமொழிப் பிரதியொன்றை வருவித்து அதனைக்கொண்டு அவர்கள் கூறிய வண்ணம் மொழி பெயர்த்தனரென்றும், அப்பிரதியில் அப்புராணத்தின் பிற்பகுதி இல்லையென்றும், பின்பு அகப்படாமையால்

அப்பகுதி இவராற் செய்யப் படவில்லையென்றும், அது கிடைக்கவில்லையே யென்ற வருத்தம் இவருக்கு இருந்ததென்றும் தெரிகின்றது.

அப்புராணத்தைக் கேட்டு அதன் சொற்சுவை பொருட்சுவைகளை நன்றாக அறிந்த பெரியோர்கள் இன்புற்று இவரைப் புராணத் திருமலை நாதரென்று சிறப்பித்து வழங்குவராயினர். அப்புராணத்திலுள்ள, "முற்று முணர்" என்னும் செய்யுளால் இவர் உமாபதி சிவாசாரியாரிடத்திற் பேரன்பு பூண்டொழுகியவரென் பதும் அவர் காலத்திற்குப் பிற்பட்டவரென்பதும் அறியப்படுகின்றன.

இன்னும், அப்புராணத்திலுள்ள, "சூழுமாகடல்" என்னும் செய்யுள் இவர் சாலிவாகன சகாப்தம் 1430-ஆம் (கி. பி. 1507) வருடத்தில் அந்தப் புராணத்தைச் செய்யத் தொடங்கியதாகக் கூறுதலால் இவர் காலம் இன்றைக்கு 400 வருடங்களுக்கு முற்பட்டதென்று தெரிகின்றது.

சொக்கநாதருலாவிலுள்ள, "மன்னன் குடைவீர மாறன் குலதிலகன்" (33) என்னுங் கண்ணியாலும், "வேதநூற் றென்முழைசை" என்னும் சிறப்புப் பாயிரச் செய்யுளாலும் இவர், மதுரையில் அரசாண்டு கொண்டிருந்த வீரமாறனென்பவனால் ஆதரிக்கப் பெற்றவரென்றும் அவனது வேண்டுகோளின்மேல் இந்நூல் செய்து அரங்கேற்றப் பெற்றதென்றும் விளங்குகின்றது.

பின்னும் இவ்வுலாவில் வந்துள்ள மண்டபங் கணாயன், முத்தளக்குந்திருவாசல் என்னும் இரண்டும் மதுரைத் திருப்பணி மாலையிலுள்ள, "தென்ன வனடத் தாவணி மூலத்தின்" என்னும் செய்யுள் முதலியவற்றால் மல்லைய சின்னப்ப நாயக்கரென்பவ ரால் சகவருடம் 1448 (கி. பி. 1526) இல் செய்விக்கப் பெற்றன...வென்று தெரிதலால் அக்காலத்தின் பின்னர்

இவ்வுலா இயற்றப் பெற்றதென்று விளக்குகின்றது. இச்செய்யுளிற் குறிப்பிடப்பட்ட தென்னவன் இவ்வீர மாறன்றானோ வேறு யாரோ தெரியவில்லை.

இவருக்குப் பரஞ்சோதியென்ற பெயருள்ள குமாரர் ஒருவர் இருந்தார். அவர் இவரிடத்தே தமிழ்க் கல்வி கற்றவர்; இலக்கண, இலக்கியங்களில் நல்ல பயிற்சியுள்ளவர்; சிதம்பரத்தில் தந்தையாரைப் போலவே விசேடப் பற்றுடையவராக இருந்தார். பொருத்த இலக்கணமும் பிரபந்த இலக்கணமும் அமைந்த **சிதம்பரப் பாட்டியல்** என்னும் நூலொன்று அவரால் செய்யப்பெற்றது.

இந்நூலாசிரியர் செய்த நூல்களாக இப்பொழுது தெரிந்தவை சிதம்பர புராணமும் இந்தச் சொக்கநாதர் உலாவுமே. "சிதம்பர புராண முதனூலும் மதுரை யுலாவும் பகர்ந்தோன்" (சிதம்பரப் பாட்டியல் சிறப்புப்.) என்பதனால் இவ்விரண்டையன்றி வேறு சில நூல்களும் இவரால் செய்யப் பெற்றனவென்று சொல்வதற்கிடமுண்டு. அவை இப்பொழுது கிடைக்க வில்லை.

இவர் செய்த நூல்களை ஆராயும் பொழுது இவர் சைவ சமயத்திலும் சிவ ஸ்தலங்களிலும் மிக்க பற்றுடையவரென்றும், பல ஸ்தலங்களுடைய சரித் திரங்களையறிந்து அவற்றைப் பற்றிய செய்திகளை அழகுபெற அமைக்கும் தன்மை வாய்ந்தவரென்றும், சிவஞானத்தைப் பெறவேண்டுமென்னும் நோக்க முடையவராக இருந்தாரென்றும், யாவர்க்கும் புலப் படும்படி எளிய சொற்களையும் சொற்றொடர் களையும் அமைத்துச் சந்தக்கவி செய்தலில் ஆற்றல் உடையவரென்றும், சிவபெருமானுடைய குண விசே டங்களையும் திருவிளையாடல்களையும் பாராட்டித் துதிப்பதில் பெருவேட்கையுடையவரென்றும், தமிழ் மொழியிடத்து மிக்க அன்புடையவராக இருந்தா ரென்றும் தெரிகின்றது.

இந்நூலில் சைவசமயத்தை வைதிக சைவம் (கண்ணி 32), சைவச்சலதி (70), சுத்தநெறி (96) எனச் சிறப்பித்தலும் "சைவ சவுராதி சண்டாந்த வர்ச்சனைகள்" (47) எனலும் இவருடைய சைவ சமயப்பற்றையும், தேவாரங்களை, "அருட்பாடல்" (8), "மறைத்தண்டமிழ்" (35-6) "முத்திருச் சொல்" (154), "சுத்தத் திருப்பதிகம்" (154-5), "அரிய நெறிச் செய்கைத் தமிழ்" (47-8) எனப் பாராட்டுதல் இவருக்கு அவற்றின் பாலுள்ள அன்பையும், சொக்கநாதர் திருவுலாப் போதுகையில் உடன்வந்தவர்களைப் பற்றிச் சொல்லும் பகுதியில் முதலில், சைவ சமயாசாரியர்களையும் பிறபெரியார்களையும் கூறிப் பின்பு கடவுளர்களைக் கூறுதல் இவருக்குச் சிவனடியார் மாட்டுள்ள பக்தியையும் புலப்படுத்தும்.

இவர் இந்நூலுள் இடைஇடையே உவமை, உருவகம், சிலேடை, சொற்பொருட் பின்வருநிலை, முதலிய அணிகளமையப் பாடியுள்ளார். அவ்வணிகளோடு நீதிகள் சிலவற்றையும் விளக்கியிருக்கின்றனர்.

இந்நூலாசிரியர் வரலாற்றை அறிந்து கொள்வதற்குக் கருவியாக இருந்த செய்யுட்கள்.

"முற்றுமுணர் மெய்கண்ட சந்ததிக்கோர்
தீபமென முதன்மை கொண்ட
கொற்றவன்றன் குடிமருவு குலவுமுமா
பதிசிவன்பொற் கோயி லுண்மை
சொற்றபுரா ணமுமிருக்கப் பின்னுமொரு
வகையானும் சொல்வான் புக்கேன்
மற்றவன்றன் றிருவாயின் வழி வந்தோர்க்
கடியனெனும் வழக்கான் மன்னோ.

ஆற்றல் சான்றமூ வாயிர மறையவ ரரனுக்
கேற்ற தொண்டர்கண் மறைநெறி யெதிகளா யுள்ளோர்
போற்ற குஞ்சிதம் பரத்திடைப் புகழினைத் திகழச்
சாற்று வாய்வட மொழிவழித் தமிழினா லென்றார்.

மறுவி லிங்கிது கூறயான் வல்லனோ புலத்தைச்
செறுநர் கேட்டிடச் சிதம்பரச் புராணமென் றருட்பேர்
நிறுவி யிப்பவ நீத்தற்கு நிமித்தமெய்ஞ் ஞானம்
பெறுது மென்பதோர் கருத்தினாற் றுணிந்தனன் பெரிதும்.

சூழு மாகடற் புடவியாள் சுடர்முடிச் சகற்கீ
ரேழு நூறுடன் முப்பஃ தியைந்தவாண் டெல்லைத்
தாழு மாமதிச் சடைமுடித் தனிமுத லென்றும்
வாழு மம்பலப் பெருமையை வழுத்தலுற் றனன்யான்.

(சிதம்பர புராணம் பாயிரம் 13, 15, 17-8)

இந்த வெல்லை மலைநாட் டிடத்தினும்
வந்த தெய்வ வடமொழி யின்படிச்
செந்த மிழ்த்தொடை நூற்பாற் றெரித்தனம்
முந்து மற்றதும் வந்தான் மொழிதுமால்.

(தரிசனச் சருக்கம், 98)

பூமன்னு பொழில்வெண்ணெய் மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைதத் துவஞான ப்ரகாசமாய் வந்து
பாமன்ன வுரையென்ன வவனருளா லவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்தான்.

மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலும்
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரிபு ராணத்
திருமலைநா யகனருளின் றேசுபூண் டோனே.

## 418. புருடோத்தம நம்பி

இவர் திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவர். புருஷோத்தமன் என்ற பெயர் திருமால் பெயர்களுள் ஒன்று. இவர் செய்த பதிகம் பெற்ற ஸ்தலம் கோயில் பதி. 2, பா. 22. இந்தப் பதிகங்களுள் முதற்பதிகத்திறுதியில் இவர் தம்மை வண்புருடோத்தமனென்று கூறிக் கொள்வதால் இவர் வைணவ அந்தணர் குலத்தில் தோன்றியவர். வண்புருடோத்தமமென்பது சோழ நாட்டுள்ள திருமால் திருப்பதிகளுள் ஒன்று. இவர் அருளிச் செய்த திருவிசைப்பா பதிகங்கள் இரண்டு.

இவை கோயில் என்னும் சிதம்பரத்தைப் பற்றிய...
நம்பி என்பது இவரது சிறப்புப் பெயர்.

## 419. புலவர் வேலங்குடி

இவ்வூர் பார்த்திபனூர்க்குத் தென்மேற்கில் 6-மைல் தூரத்திலுள்ளது. இதிலுள்ளவர்களுக்கெல்லாம் புலவரென்றுபட்டமுண்டு. இவர்களின் முன்னோரொருவருக்குச் சிவகங்கைக் கௌரீ வல்லப ராஜாவால் இவ்வூர் மானியமாக விடப்பட்டதாம்.

## 420. புலிக்குளத்துச்சாமி

இவர் சிவகங்கை ஜமீன்தாரைச் சார்ந்தவர்; சரவணப் பெருமாள் கவிராயர் மாணாக்கர்.

## 421. புலியூர்ச் சிதம்பரரேவணசித்தர்

புலியூர் என்பது தொண்டை நாட்டிலுள்ளது. இவர் சோழ நாட்டிலுள்ள திருப்பட்டீச்சர மென்னும் ஸ்தலத்தில் பலநாளிருந்து ஸ்ரீ தேனு நாயகரை உபாஸனை செய்தொழுகியவர். திருவலஞ்சுழிக்கும் திருமேற்றளிக்கும் புராணஞ் செய்தவர். காவித் தொடையார்; மேழித்துவசன்; வேளாளர். **அகராதி நிகண்டு** என்று ஒரு நூல் இயற்றினர். இது பட்டீச்சரத்திலிருந்தே யியற்றப்பட்டதென்று தெரிகின்றது. அகராதி நிகண்டில் **பிங்கலம்** திவாகரம் என்பவைகள் கூறப்பட்டிருத்தலின், இவர் காலம் அந்நூல்களின் ஆசிரியர் காலங்கட்குப் **பிற்**பட்டதென்று தெரிகின்றது. பழைய பதிப்பாகிய 11-வது நிகண்டில் முதல்இரண்டு தொகுதிகளில் மேற்கோள்களாகப் பதிப்பித்திருப்பதைக் கொண்டு இவர் பதினோராவது நிகண்டும் செய்துள்ளாரென்று தெரிகின்றது. இவர் **சிவஞான தீபம், பட்டீச்சுரப்புராணம்** முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**சிவஞான தீபம்**

“படைக்கலங்கள் கொலைத்தொழில்கள் பலசெய் தாலும்
பாவவிதம் படைக்கலத்தை மேவி டாவாம்
படைக்கலங்கொண் டவன்பா னின்றாற் போலப்
பரனருளின் வசமாகிப் பணிசெய் வோர்கள்
துடைத்திடுவர் மலத்தினையெத் தொழில்செய் வோர்கள்
துக்கக்கப் பவக்கடலிற் றோயா ரென்றும்
அடைக்கலமா யாண்டசிவன் பாத நீழல்
அடைந்திடுவர் எப்பதமும் பொருந்தி டாரே.”

## 422. புளியங்குடி உய்யவந்தார்

இவர் சைனர்; **நாற்கவிராய நம்பி**யின் தந்தையார்; தமிழாசிரியரென்றும் கூறப்படுவர்.

## 423. புளியங்குடி பெரியசாமிப் புலவர்

இவர் சங்கர நயினார் கோவிலைச் சார்ந்த புளியங் குடியில் எழுபது வருடங்களுக்கு முன் இருந்தவர். இவருடைய குமாரர்தான் ஊற்றுமலையில் இருப்பவ ராகிய முத்துவீரப்பப் புலவர். (என்று ஐயரவர்கள் குறித்துள்ளார்கள்.)

## 424. புளியங்குடி நாற்கவிராய நம்பி

இவர் சைனர். தமிழாசிரியராகிய புளியங்குடி உய்யவந்தாருடைய புத்திரரிவர். இவரியற்றிய நூல் **நாற்கவிராய நம்பி யகப்பொருள்** என்பது.

## 425. புளியங்குளம் அருணாசலக் கவிராயர்

இவரது காலம் எண்பது வருடங்களுக்கு முந்தியது. இவர் பிறந்த ஊர் புளியங்குளம். இவர் தம்முடைய தந்தையாகிய சரவணப்பெருமாள் கவிராயரிடம் இலக்கண விலக்கியநூல்கள் பாடங்கேட்டவர். அஷ்டாவதானி சிவகங்கை ஸமஸ்தானம் இஸ்திமிரா ஜமீன் தாரவர்களாகிய கௌரி வல்லபத் தேவரவர்கள் மீது

"சக்ரவாளத்தகடு" என்னும் சீட்டுக்கவிப் பாட்டைப் பாடியவர் இவரே. இன்னும் பற்பல தருணத்துப் பலர் மீது பற்பல சீட்டுக்கவிகள் இவராற் பாடப்பட்டன. இராமநாதபுரம், சிவகங்கையென்னும் இரண்டு சமஸ்தானங்களிலும் வித்துவானாக இருந்தவர். இவரது புத்திரர் சரவணப் பெருமாள் கவிராயர்.

## 426. பூசைத்தாயார்

ஊற்றுமலையென்பது திருநெல்வேலிஜில்லாவில் இருந்துவரும் ஒரு பழைய ஜமீன். அதில் ஜமீன்தார்களாக இருந்தவர்கள் வீரத்திலும் கல்வியிலும் சிறந்தவர்கள். வடகரையென்னும் சொக்கம்பட்டியில் பெரிய சாமிச் சின்னணைஞ்சாத் தேவர் தலைமை வகித்து வந்த காலத்தில் ஊற்றுமலையில் இருந்த ஜமீன்தார் தென்மலையென்னும் சிவகிரியிலிருந்த ஜமீன்தாருக்கு உதவிபுரிந்து வந்தனர். வடகரையாருக்கு நண்பராகிய சேற்றூர் ஜமீன்தாருக்குப் பல இடையூறுகளை விளைவித்தனர் தென்மலையார். வடகரை ஸ்தானாதிபதியாக இருந்த பொன்னம்பலம்பிள்ளை பல படையுடன் சேற்றூராருக்கு உதவியாக நின்று தென்மலையாரை வென்றனர். அதன்பின் தென்மலையும் அதற்கு உதவியாக நின்ற ஊற்றுமலை ஜமீனும் தம்முடைய நிலையிற் குலைந்தன. ஊற்றுமலை ஜமீன்தார் பகைவர் கையில் அகப்பட்டார்; அவர் தம்முடைய மனைவியாரையும் இரண்டு சிறுபிள்ளைகளையும் விட்டு இறந்தனர்.

அவர் மனைவியாரின் பெயர் பூசைத்தாயாரென்பது. அவர் தம் குழந்தைகளுக்காகவே உயிர் வைத்திருந்தனர். குழந்தைகளில் மூத்தவர் மருதப்பத்தேவர்; இளையவர் சிவலவதேவர் என்பார். பூசைத்தாயர் தெய்வ பக்தியும் தைரியமும் தமிழிற் சிறந்த பயிற்சியும் உடையவர். ஊற்றுமலை ஜமீன் அரண்மனையில் அடிக்கடி வித்துவான்களுடைய பேச்சுக்கள்

நடந்து வருகையில் அவ்வம்மையார் ஜமீன்தார் அருகி லிருந்து அவற்றைக் கவனிப்பது வழக்கம்; ஆதலின் செய்யுட்களின் சுவை தெரிந்து அனுபவிக்கவும் புதிய செய்யுட்களை இயற்றவும் ஆற்றலுடையவராக ஆனார்.

தம்முடைய கணவர் இறந்தபோது, 'மிகவும் இளைஞர்களாக இருக்கும் குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவது?' என்று அவர் மனம் ஏங்கினார். ஊற்றுமலையில் தனியே இருப்பின் தம் குலக்கொழுந்து களாகிய அவ்விருவருக்கும் ஆபத்து வருமென்று பயந்து தென்காசிக்குச் சென்று அங்கே அடக்கமான வாழ்க்கையை நடத்தி வருவாராயினர். புலமை நிரம்பிய பெண்மணியாராதலின், கல்வியினால் உண் டாகும் பெருமையே பெருமை என்றுணர்ந்து எவ்வா றேனும் தம் மக்களுக்குக் கல்வியறிவூட்டவேண்டு மென்னும் ஊக்கமுடையவராக இருந்தார். தென் காசியில் இருந்த பள்ளிக்கூடமொன்றில் தம் குமாரர் இருவரையும் சேர்ப்பித்துப் படிக்கச்செய்தார்.

அவ்விருவருள் இளையவராகிய சீவலவதேவர் நல்ல லக்ஷணமும், வசீகரமான தோற்றமும் உடை யவர். தைரியமும், சோம்பலின்றி உழைக்கும் ஊக்கமும் அவருக்குப் பிறவியிலே அமைந்திருந்தன. பிறர் உள்ளக் கருத்தைக் குறிப்பாக அறியும் நுண்ணறிவும் அவர்பால் இருந்தது. அவருடைய முகத்தைப் பார்த்துப் பூசைத் தாயார், 'இவனால் நாம் ஈடேறலாம்' என்று எண்ணி மகிழ்ந்து வந்தார்.

ஒரு நாள் சகோதரர் இருவரும் பள்ளிக்கூடம் செல்லும்போது அத்தலத்தில் உள்ள தேரடியில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர் களைக் கண்டபோது இளங்குழந்தையாகிய சீவலவ தேவருக்குத் தாமும் விளையாட வேண்டுமென்னும் ஆசை உண்டாயிற்று. சிறிதுநேரம் அவர்களோடு

சேர்ந்து விளையாடத் தொடங்கினார். அவருடைய தமையனாராகிய மருதப்பத்தேவர் பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டதென்று கூறினார். அதனைக் காதில் வாங்காமல் சிவலவதேவர் விளையாடிக்கொண்டே இருந்ததால், மூத்தவருக்குக் கோபம் மூண்டது; உடனே தம்பியை அடித்துப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போனார்.

சீவலவதேவர் மானமுள்ளவராதலின் பள்ளிக் கூடத்திலிருந்து வந்து தாயாரைக் கண்டவுடன் கோ வென்று அழத்தொடங்கினார். தம்முடைய கண்மணி யைப் போன்ற குழந்தை அங்ஙனம் எதிர்பாராத வித மாக அழுவதைக் கண்ட பூசைத்தாயாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. விசாரித்தபோது விஷயம் தெரிந்தது. குற்றம் இருவரிடமும் இருப்பதாக அவர் எண்ணினார். கல்வியே செல்வமென்று எண்ணி அவர்களைப் படிக்க வைத்தவராதலின் இளையபிள்ளை விளையாட்டிற் போதைக் கழித்தது குற்றமென்பதும், இருப்பினும் நல்லுரை கூறாது இளங்குழந்தையை அடித்தது மூத்தவரது குற்றமென்பதும் அவர் கருத்து. யாரை நோவது? 'எல்லாம் நம்முடைய பழைய நிலையி லிருந்து மாறியதனால் உண்டாகியவையே' என்று எண்ணும்போது பூசைத்தாயாருக்குத் துக்கம் பொங்கி வந்தது. தம்முடைய உள்ளுணர்ச்சியை வெளிப்படை யாக அந்தக் குழந்தைகளுக்கு உணர்த்தத் துணிய வில்லை. ஆயினும் தமிழ்க் கல்வியறிவுடைய அப்பெண் மணியார் ஒரு செய்யுளால் அதை வெளியிட்டார். அது வருமாறு:

"தேரோடு நின்று தெருவோ டலைகிற செய்திதனை
ஆரோடு சொல்லி முறையிடு வோமிந்த அம்புவியில்
சீரோடு நாமும் நடந்துகொண் டாலிந்தத் தீவினைகள்
வாராவ டாதம்பி சீவல ராய மருதப்பனே."

இச்செய்யுளைச் சொல்லும்போதே அவர் கண்களில் நீர் துளித்தது.

அடிபட்ட சிவலவதேவர் தம்முடைய துக்கத்தை மறந்தார். தம் தாயார் அவ்வாறு வருந்துவதற்குக் காரணமென்ன என்பதில் அவர் மனம் சென்றது. தங்களை அன்போடு பாதுகாத்துவரும் அன்னையார் வருந்துவதைக் கண்டபோது அவர் மனம் உருகியது. துணையற்ற நிலையில் இருந்தாலும் தம் உள்ளத்துள் இருந்த துயரத்தை அதுகாறும் அவ்வம்மையார் வெளியிட்டதேயில்லை; தைரியமாகவே இருந்துவந்தார். தம்முடைய பழைய நிலையையும் குழந்தைகளுக்குச் சொல்லவில்லை. அன்றைத்தினமோ வருத்தம் அடக்குவதற்கு அரிதாகி விட்டமையால் அந்தச் செய்யுளைக் கூற நேர்ந்தது.

ஒருநாளும் வருந்தாத தாயார் அங்ஙனம் வருந்துவதைக் கண்டு பொறாத இளையவர் 'நம்மால் அல்லவா இந்த வருத்தம் தாய்க்கு வந்தது!' என்று எண்ணி அதிகமாக அழுதார். ''நீ ஏனம்மா இப்படி வருத்தமடைகிறாய்? இதற்குக் காரணம் என்ன? சொல்லத்தான் வேண்டும்'' என்று பிடிவாதம் செய்தார். தாயார் வேறு வழியில்லாமல் எல்லாச் செய்திகளையும் குழந்தைகளிடம் சொல்லி வருந்ினார்.

''இனிமேல் எப்படி அம்மா நாம் பழைய நிலைக்கு வரமுடியும்?'' என்று சிவலவதேவர் கேட்டார்.

''ஆண்டவன் அருள் செய்ய வேண்டும். இப்போது வடகரையார் மிக்க பராக்கிரமம் கொண்டு விளங்குகிறார்கள். அவர்கள் மனம் வைத்தால் நம்மைப் பழையபடியே நிலைநாட்டலாம்'' என்றார் பூசைத் தாயார்.

''வடகரை யரசரை நான் போய்ப் பார்த்துவரட்டுமா, அம்மா?'' என்று தைரியத்துடன் சிவலவதேவர் கேட்டார்.

"உனக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா? வட கரை ஸமஸ்தானாதிபதியைப் பார்ப்பது அவ்வளவு சுலபமான காரியமல்லவே!"

"பின் என்ன செய்வதம்மா?"

"பார்க்க முடியாது. ஆனால்............"

தாயார் சிறிதுயோசித்தார். அவர் மனத்தில் ஏதோ ஒரு புதிய கருத்து உதித்தது.

"பொன்னம்பலம் பிள்ளையென்பவர் அந்த ஸமஸ் தானத்தில் ஸ்தானாதிபதியாக இருக்கிறார்; அவர் மிகவும் நல்லவர்; தமிழில் சிறந்த புலமையுடையவர் அவர் மனம் வைத்து நமக்கு உதவி செய்ய இசைந்தா ரானால் ஸமஸ்தானாதிபதியும் இணங்குவார்" என்று தாயார் கூறினார்.

"அவரையே போய்ப்பார்த்து வருகிறேனே. உன் னுடைய அன்பையும் ஆண்டவன் கிருபையையும் துணையாகக் கொண்டு நான் போய் வருகிறேன்" என்று சீவலவ தேவர் முன் வந்தார்.

வீரக்குடியிற் பிறந்த பெண்மணியாராகிய பூசைத் தாயாருக்கும் தம் மகனிடத்தில் அளவற்ற நம்பிக்கை இருந்தது. "போய்வா"என்று வாழ்த்தி அனுப்பினார்.

சீவலவதேவர் தென்காசியிலிருந்து புறப்பட்டுச் சொக்கம்பட்டிக்கு வந்து பொன்னம்பலம் பிள்ளையின் வீட்டை விசாரித்துக் கொண்டு சென்று அங்கே திண்ணையில் உட்கார்ந்திருந்தார். நடுப்பகலாதலின் உள்ளே பொன்னம்பலம் பிள்ளை நீராடிப் பூஜை பண்ணிவிட்டு ஆகாரம் செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அரண்மனையிலிருந்து, "மகாராஜா உடனே வரச்சொன்னார்" என்று ஒருசேவகன் வந்து அழைக்கவே விரைவாக ஆகாரம் அருந்தி எழுந்தார். கரசுத்தி செய்து கொண்டவுடன் அரண்மனைக்குச் செல்லும்பொருட்டு வெளியே வருகையில் அங்கே

திண்ணையில் உட்கார்ந்திருந்த இளைஞராகிய சிவலவ தேவர் மேல் அவர் பார்வை சென்றது. அவருடைய அழகிய முகத்தின் வசீகர சக்தி பிள்ளையின் உள்ளத்திற் பதிந்தது.

"நீ யாரப்பா?" என்று ஸ்தானாதிபதி வினவினார்.

சிவலவதேவர் தாம் இன்னாரென்பதை அறிவித்தார். ஊற்றுமலை ஜமீன்தாரிணி நன்றாகப் படித்தவரென்பதை முன்னரே பொன்னம்பலம் பிள்ளை அறிந்திருந்தார். அவ்வம்மையாருக்கு இரண்டு இளங் குழந்தைகள் இருப்பதையும் கேள்வியுற்றிருந்தார். ஆதலின் சிவலவதேவர் இன்னாரென்று தெரிந்தவுடன் அவருக்குத் திடுக்கிட்டது. அவர், "இங்கே யாரேனும் உம்மை இன்னாரென்று தெரிந்து கொண்டால் உம்முடைய தலை தப்பாதே!" என்று அஞ்சினார்.

"ஆண்டவன் திருவருளின்படியே எல்லாம் நடைபெறும்" என்றார் இளைஞர்.

அவ்விளைஞர் காட்டிய பணிவு பொன்னம்பலம் பிள்ளைக்கு மனக்கசிவை உண்டாக்கியது. அப்பொழுதே, 'இவர்களைப் பழைய நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும்' என்ற சங்கற்பத்தைச் செய்து கொண்டார். பிறகு மிக்க களைப்புடன் இருந்த சிவலவ தேவரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று உணவு செய்யச் சொல்லிவிட்டு, "இங்கே படுத்து இளைப்பாறிக் கொண்டிரும்; நான் அரசரிடம் சென்று வருகிறேன். ஒருவரிடமும் தாம் இன்னாரென்று தெரிவிக்க வேண்டாம்" என்று சொல்லி அரண்மனைக்குச் சென்றார்.

பொன்னம்பலம்பிள்ளை தம்முடைய தலைவராகிய சின்னணைஞ்சாத் தேவரிடம் அவர் அழைத்த விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கையில், "நம்மால்

அழிக்கப்பட்ட ஊற்றுமலையார் வேறு சிலருடைய உதவியை நாடிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போது அந்த ஜமீன் பரம்பரையில் இரண்டு இளைஞர்களே இருக்கிறார்கள். நமக்கும் அவர்களுக்கும் நேரே பகைமையில்லை. சமுகத்துக்குப் பரம்பரையாக அவர்கள் உறவினர்களல்லவா? சேற்றூராருக்கும் தென்மலையாருக்குமே பகை. சேற்றூராருக்கு நாம் உதவி செய்தோம்; தென்மலையாருக்கு அவர்கள் உதவி செய்தார்கள். அங்ஙனம் உதவி செய்த ஜமீன்தாரும் இப்போது இல்லை. ஊற்றுமலை ஜமீன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துக் காப்பாற்றும் புகழை யுடையது. அதன் அழிவுக்கு நாமே காரணமாக இருந்தோம். இப்போது மீட்டும் அந்த ஜமீனை நாமே நிலை நிறுத்தினால் நமக்கு அளவற்ற புகழ் உண்டாகும்; அநாவசியமான பகையுணர்ச்சியும் இல்லாமற்போம்'' என்றார்.

''நீர் எப்படிச் செய்தாலும் நமக்குச் சம்மதமே'' என்று கூறினார் ஸமஸ்தானாதிபதி.

பொன்னம்பலம் பிள்ளை உடனே தென்காசிக்குப் பல்லக்கு அனுப்பிப் பூசைத்தாயாரையும் மருதப்பத் தேவரையும் வருவித்தார். அவர் பூசைத்தாயாரைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்தார். தமிழ்ப்புலமை யையுடைய அவரைச் சந்தித்தபோது பொன்னம்பலம் பிள்ளைக்கு அளவற்ற வருத்தம் உண்டாயிற்று. ''இவ்வளவு சிறந்த அறிவுடைய இவரை இந்நிலைக்கு உள்ளாக்கியதற்கு நாமல்லவோ காரணம்!'' என்று இரங்கினார்.

அப்பால் பூசைத்தாயாருக்கும் அவர் குமாரர்களுக்கும் தக்க வசதி அமைக்கப்பட்டது.

பொன்னம்பலம்பிள்ளை ஏவலாளர்களுடன் ஊற்றுமலை சென்று அங்கே பழுதுபட்டிருந்த

கோட்டை, அரண்மனை முதலியவற்றைச் செப்பஞ் செய்வித்தார். பிறகு நல்ல லக்கினத்தில் கிருகப் பிர வேசம் நடத்த ஏற்பாடு செய்து, வடகரையிலிருந்து பல்லக்கில் ஊற்றுமலை ஜமீன்தாரிணியையும் இரண்டு குமாரர்களையும் வருவித்தார். கிருகப் பிரவேசம் மிகவும் விமரிசையாக நடந்தது. நல்ல வேளையில் தமக் குரிய நிலையைப் பெற்று அவர்கள் மகிழ்ந்தார்கள்.

ஊற்றுமலையில் மீட்டும் வாழ்வோமென்று நம்பிக்கையை முழுதும் இழந்திருந்த பூசைத்தாயா ருக்கு அந்நிகழ்ச்சி அளவிறந்த விம்மிதத்தை உண் டாக்கியது. பொன்னம்பலம் பிள்ளையே அதற்குக் காரணமென்பதை அவர் அறிந்தார். தம்முடைய நன்றியறிவை அவர் ஒரு பாடலால் தெரிவித்துக் கொண்டார். அது வருமாறு:

''கூட்டினான் மிகுந்தபா ளையக்காரர் சேகரத்தைக் குறைவ ராமல்
சூட்டினான் மணிமகுடந் துரைபெரியசாமிசெய்யுஞ் சுகிர்தத் தாலே
தீட்டினா னம்பலம்பொன் னம்பலத்தான் றிரிகூடவரையிற்கீர்த்தி
நாட்டினா னூற்றுமலை நாட்டரசு தழைக்கநிலை நாட்டினானே.''

குறிப்பு: அம்பலமென்றது திருக்குற்றாலத்துள்ள சித்திர சபையை; அதனைப் பொன்னம்பலம் பிள்ளை புதுப்பித்தாரென்று தெரிகிறது.

பூசைத்தாயாரின் பொறுமையும் புலமையும் அவர்களுடையநன்மைக்குக்காரணமாயின; தம்முடைய அரசை நிலைநாட்டித் தழைக்கவைத்த அமைசசாபிரா னாகிய பொன்னம்பலம் பிள்ளையை அவர்கள் தம் குல தெய்வமாகவே போற்றிவந்தனர்.

## 427. நூண்டி அரங்கநாத முதலியார்

தொட்டிக்கலைக் கேசவ முதலியார் பரம்பரை யினருக்கு நெருங்கிய உறவினரும், தமிழ் மொழியில் நல்ல பயிற்சியுள்ளவரும், பெரிய உத்தியோகத்தில் இருந்தவருமான சுப்பாராய முதலியாரென்பவருடைய

தவப்புதல்வராக அரங்கநாத முதலியார் 1844 ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய முன்னோர்கள் தொண்டை நாட்டிலுள்ள பூண்டி என்னும் ஊரின ராதலின், பூண்டி அரங்கநாத முதலியாரென்று அவர் பெயர் வழங்கலாயிற்று.

அரங்கநாத முதலியார் தம்முடைய தந்தையாரிடத் திலும் வேறு பலரிடத்திலும் தமிழ்க்கல்வியும், பள்ளிக் கூடங்களில் ஆங்கிலக்கல்வியும் கற்றவர். அவர் ஒவ் வொரு பரீக்ஷையிலும் பரிசுகளைப் பெற்றார். எம். ஏ. பட்டம் பெற்றவர்களிற் சிறந்தவராக விளங்கி யமையின் அவரை எம். ஏ. அரங்கநாத முதலியார் என்று யாவரும் அழைப்பாராயினர். அவர் பல்லாரி புரொவின்ஷியல் ஸ்கூலிலும், கும்பகோணம் காலே ஜிலும், பிரஸிடென்ஸி காலேஜிலும் முக்கிய ஆசிரிய ராகவும், அரசாங்கத்துத் தமிழ் மொழிபெயர்ப்பாள ராகவும் இருந்து விளங்கினார். பல்வகையான கல்விச் சபைகளிலும் வேறு பல ஸ்தாபனங்களிலும் அவர் உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்தார். 1893 ஆம் வருஷத்தில் தம் குணங்களையும், கல்விப் பெருமை யையும் தமிழுலகம் நினைத்து நினைத்து இரங்கும் படி உயிர்நீத்தார்.

குறிப்பு: ஐயரவர்கள் இவருடைய விரிவான வரலாற்றை நல்லுரைக் கோவை முதற்பாகத்தில் எழுதியிருக்கின்றார்கள்; 'என் சரித்திர'த்திலும் இவரைப் பற்றிக் கூறியிருக்கின்றார்கள்.

## 428. பூந்துருத்தி காடநம்பி

இவர் திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவர்; பூந்துருத்தி நம்பி காடவர் கோனென்றும் இவர் பெயர் வழங்கும்.

இவர் இயற்றியவை:

| | | |
|---|---|---|
| 1. திருவாரூர்த் திருவிசைப்பா | பதி—1 | பா. 2 |
| 2. கோயில் திருவிசைப்பா | பதி—1 | பா. 10 |
| | ஆக | 12 |

திருவையாற்றிற்கு மேற்கே . திருப்பூந்துருத்தி யென்று ஒரு சிவஸ்தலமுள்ளது. இவரூர் அதுவோ வேறோ தெரியவில்லை.

### 429. பூந்துறைக் காளியண்ணப் புலவர்

40 வருடத்திற்கு முன் இருந்தவர். இவர் பூந்துறை முத்தண்ண கவுண்டன் மீது சதகமொன்றும் சீட்டுக்கவிகள் பலவும் இயற்றினர்.

### 430. பூவை பிரதக்ஷிணாந்தன்

திருப்பனந்தாள் புராணஞ் செய்தவர்.

### 431. பெரிய வாச்சான் பிள்ளை

திவ்யப்ரபந்தம் நாலாயிரத்திற்கும் இவர் வியாக்கியானஞ் செய்திருக்கின்றார். இவருடைய ஊர் சேய்ஞலூர், இவர் மணவாள மாமுனிகளுடைய காலத்திற்கு முந்தியவர்.

### 432. பெருங்கருணை யட்டாவதான முத்துஜகரையங்கார்

பெருங்கருணையென்பது இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்த ஓரூர். இவர் சோழிய வைணவப் பிராமணர். இலக்கண இலக்கியங்களிலும், விரைந்து செய்யுள் செய்தலிலும் வல்லவர். மதுரை ஜில்லா கோர்ட் வக்கீலாக இருந்தவர். இப்பொழுது இவருடைய குமாரரிருக்கிறார் என்றும் ஐயரவர்கள் குறித்துள்ளார்கள்.

### 433. பெருமத்தூர் வேலையார்

இவர் துறைமங்கலம் சிவப்பிரகாசருடைய பின்னவர். திருவண்ணாமலைக் குருதேவராதீனத்தார். இவரியற்றிய நூல்கள் **திருநல்லூர்ப் புராணம், வீரசிங்காதனப் புராணம்.**

## 434. பெருமாளையர்

விருத்தாசல ரெட்டியாருடைய நண்பராகிய பெருமாளையர் என்னும் காணியாள அந்தணர் ஒருவர் பெரும்பாலும் ரெட்டியாருடனே இருப்பார். யாப்பிலக்கணத்திலும் பொருத்த இலக்கணங்களிலும் சித்திர கவிகளிலும் நல்ல பழக்கம் இருந்தது. நன்றாக அவர் சித்திரம் எழுதுவார். ரதபந்தம், நாகபந்தம், கமலபந்தம், சக்கரபந்தங்கள் முதலியவற்றை அவர் போட்டுத் தருவார்; தாமே அவற்றுள் செய்யுளை அடைப்பார். நானும் (ஐயரவர்களும்) அச்சித்திரங் களை வரைவேன்.

நான் (ஐயரவர்கள்) ஒருநாள் அறுசீரடி ஆசிரிய விருத்தம் ஒன்று எழுதிப் பெருமாளையரிடம் காட்டி னேன். அச்செய்யுளில் நான்கு அடிகள் இருந்தன; ஆறு சீர்கள் இருந்தன; எதுகை மோனை எல்லாம் இருந்தன; ஆனால் ஓசை சரியாக இல்லை. பெருமாளையர் அதைப் பார்த்துச் சிரித்தார். ''ஏன்? இதில் என்ன பிழை'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''நீரே படித்துப்பாரும். ஓசை சரியாக இருக் கிறதா என்று கவனியும்'' என்றார். சிலமுறை படித் தேன். ஓசை சரியாக இல்லை என்பது ஓரளவு தெரிந்தும் அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை; ''ஆறு சீர்கள் இல்லையா'' என்றேன். ஆறுசீர்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் எந்தச் சீர் எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அப்படி இல்லை. அதனால்தான் ஓசை பிறழ்கிறது.'' என்று கூறிப் பிரபுலிங்க லீலை என்னும் தமிழ்நூலை எடுத்துச் சில பாடல்களைப் படித்துக் காட்டினார். நான் விருத்த இலக்கணம் படித்த காலத்தில் சீர் 'அளவொத்து' இருக்கவேண்டுமென்று தெரிந்து கொண்டேன். ஓரடியில் ஆறு சீர்கள் இருந்தால் மற்ற அடிகளிலும் ஆறு சீர்களே இருக்க வேண்டு மென்றும், ஏழு சீர்கள் இருந்தால் மற்ற அடிகளிலும்

ஏழு சீர்களே இருக்க வேண்டுமென்றும், இவ்வாறே சீர்களின் எண்ணிக்கை நான்கடிகளிலும் சமமாக இருக்க வேண்டுமென்றும் நினைத்தேன். 'அளவொத்தல்' என்பதற்கு இதற்கு மேலும் ஓர் அர்த்தம் உண்டென்பதை அதற்கு முன் அறிந்து கொள்ளவில்லை. அதைப் பெருமாளையர் விளக்கினார்.

குறிப்பு: என் சரித்திரம். பக்கம் 145—146 பார்க்க.

## 435. பேரளம் இரேவணாத்திரியார்

இவரியற்றிய நூல்கள் **சிவஞான தீபம், பரம ரகசியம்.**

## 436. பேராசிரியர்

"நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்."

என்பது நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்றன் பகுதி, இதன்கண், இவர் (பேராசிரியர்) தம்முடைய கல்வித் திறனும் அறிவு வன்மையும் உலகினர் அறியும்படி குறுந்தொகைக்குப் பொருளெழுதினரென்பதும், இருபது செய்யுட்களுக்கு மட்டும் எழுதவில்லையென்பதும், அவ்விருபது செய்யுட்களுக்கும் நச்சினார்க்கினியர் உரையெழுதினரென்பதும் கூறப்படுகின்றன.

தொல்காப்பியம் அகத்திணையியலில்,

"உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே" (46)

என்னும் சூத்திரத்தின் உரையில் நச்சினார்க்கினியர் ஏனையுவமம் வந்த செய்யுளுக்குக் குறுந்தொகையிலுள்ள, "யானே யீண்டையேனே" (54) என்பதைக் காட்டி,

"பேராசிரியரும் இப்பாட்டில் மீனெறி தூண்டிலென்றதனை ஏனையுவம மென்றார்."

என எழுதியுள்ளார். இதனாலும் இவர் குறுந்தொகைக்கு உரையெழுதியிருத்தல் வலியுறுகின்றது. இவர் அங்கங்கே இலக்கணக் குறிப்புக்கள் எழுதியிருக்க வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது. இவர் உரையெழுதாது விடுத்த இருபது செய்யுட்கள் இறுதிப்பகுதி இருபது செய்யுட்களாக இருத்தல் கூடும். இடையிடையே பொருள் தோற்றாமல் விட்ட செய்யுட்களெனக் கொள்ளுதல், 'நல்லறிவுடைய தொல் பேராசானாகிய இவரது பெருமைக்கு இழுக்காகும். இவர் தம் முதுமையில் குறுந்தொகைக்கு உரையெழுதத் தொடங்கி 380-செய்யுட்களுக்கு எழுதி முடித்தபின்னர் நோய்வாய்ப்பட்டதாலோ பிறகாரணத்தாலோ மேல் எழுத இயலாத நிலையையடைந்தனரென்று கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் அவ்வரிய உரையைப் பின்பற்றி அதற்கேற்ப எஞ்சிய செய்யுட்களுக்கு உரையெழுதியிருத்தல் கூடும். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை செய்தவர்.

## 437. பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள்

இவர் வீரசைவர்; திருப்போரூர்ச் சிதம்பர முனிவரால் துதிக்கப்பட்டுள்ளார். இவர் செய்த நூல்கள் **வைராக்கிய சதகம்** முதலியன.

## 438. பொய்யாமொழியில்லார் புலவர்

இவர்கள் தமிழ்ச்சங்கப் புலவர்கள். பெரிய புராணம், இருவகைத் திருவிளையாடல்கள் ஆகிய நூல்களில் இவர்கள் வரலாறு வந்துள்ளது. சங்கத்தைப் பற்றிய புகழெல்லாம் இவர்களுடையதே. சிவபுராணாதி தோத்திர மஞ்சரியில் இவர்கள் துதி வந்துள்ளது.

## 439. பொய்யாமொழிப் புலவர்

பாண்டியனுடைய வேண்டுகோளின்படி இவர் பொற்றாமரைக் கரையிலிருந்த சங்கத்தார் பிம்பங்கள் தலையசைக்கவும், பொற்றாமரை வாவியில் மூழ்கியிருந்த சங்கப்பலகை மிதக்கவும் பாடினாரென்ற ஒரு செய்தி 'உங்களிலே', 'பூவேந்தர்' என்ற முதற்குறிப்புக்களையுடைய இரண்டு செய்யுட்களுடனும் வழங்கி வருகின்றது.

## 440. பொன்னங்கால் அமிர்த கவிராயர்

அமுத கவிராயர் எனவும் சொல்லப்படுவார். இவர் திருநெல்வேலியிலே சைவ வேளாளர் மரபிலே பிறந்தவர். இவரைப் பற்றி ஒரு வரலாறு உள்ளது. அது வருமாறு:

சிறுபிராயத்திலே கல்வி கேள்வியில் வல்லராய் விளங்கி வருங்காலத்திலே தமது குடும்ப பாரத்தை வகித்து வந்த பிதா முதலானோர் மரணம் அடைந்து விட்டமையாலும், பெருங்குடும்பமாதலாலும், அதற்கு வேண்டும் பொருள் வருவாயின்மையாலும் வறுமையால் தாக்குண்டு குடும்ப ரட்சணார்த்தமாக உத்தர திசையை வருவாராயினர். வருங்காலத்தில் இவருடைய சாந்தமான குணாதிசயங்களையும் கல்வித் திறமையையும் அறிந்தவர்கள் உபசரித்தார்கள். இப்படி வருங்கால் சிலர் இவரைப் பார்த்து "ஐயா, இராமநாதபுரத்தில் இரகுநாத சேதுபதி மகாராஜா அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல வித்துவான். அநேக வித்துவான்களை ஆதரித்து வருகிறார்கள். தங்களுடைய வித்துவச் சாமர்த்தியத்தைக்கண்டால் உங்களை விடமாட்டார்கள். அங்கே செல்லுங்கள்" என்று கூறினார்கள். அவைகளைக் கேட்டு இராமநாதபுரம் வந்தார். அப்படி வந்தும் தாமிருக்கும் நிலைமைக்கு இராஜபேட்டி கிடைப்பது அரிதாக விருந்தது. அங்கு

அநேக வித்துவான்கள் அரண்மனைக்குப் போவதை யும், வருவதையும் பார்த்துக் கொண்டிருந்தவர் அவர் களுள் சிரேஷ்டமான வித்துவானாக இருந்த ஒருவர் வீட்டுக்குப் போனார். அவ்வித்துவான் ''யார் எங்கு வந்தாய்?'' என்று கேட்டார். தான் திருநெல்வேலியில் இருப்பவன் என்றும், சைவர் என்றும், வறுமையால் பீடிக்கப்பட்டு இராமநாதபுரம் வந்ததாகவும் கூறினார். ''உனக்குச் சமையல் வேலை தெரியுமா?'' என்று கேட்டார். ''தெரியும்'' என்றார். ''அப்படியானால் நமக்குச் சமையல் செய்வதோடு நமது ஏவலைக் கேட்டுக் கொண்டிருக்கிறாயா?'' என்று கேட்க, அவர் மடைவளத் தொழில் செய்பவர் ஆனார்.

இப்படி இருக்கும் நாளில் சில சமயங்களில் அவ் வித்துவான் தனது ஏட்டுக் கட்டுக்களையும், மற்றுள்ள வற்றையும் எடுத்துக்கொண்டுவரும்படிசொல்லிஅரண் மனைக்கு அழைத்து கொண்டு போவார். அவ்வேட்டுக் கட்டுக்களைக் கொண்டு போய், வைத்துவிட்டு ஒரு சார் நின்று இராஜசதசில் வித்துவான் பாடுவதையும், பிரசங்கிப்பதையும் அரசன் மனமகிழ்வதையும் பார்த்துக் கொண்டு நின்றுபின், வித்துவான் வீட்டுக்கு வரும்போது தான் கொண்டு வந்தவற்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு அவரோடு வருவார்.

ஒருநாள் வழக்கம்போல் வித்துவானோடுஅரண் மனைக்குப் போயிருந்தார். அன்று தினத்தில் ஒரு வித்துவான் ஒரு கோவைப் பிரபந்தம் பிரசங்கம் பண்ணினார். அதை இவரும் கேட்டுக் கொண்டிருந் தார். அதில் நாணிக்கண் புதைத்தல் என்னும் துறை யைச் சொன்ன மாத்திரத்தில் சேதுபதி மிகுந்த சந்தோஷமடைதலைக் கண்டு மற்ற வித்துவான்களும் தங்களுக்குத் தெரிந்த கோவைகளிலுள்ள நாணிக்கண் புதைத்தல் என்னும் துறையமைந்த செய்யுளை ஒவ்வொருவரும் சொன்னார்கள். அது கேட்ட அரசன் அடங்கா மகிழ்வுற்றதையும், அவ்வரசனுடைய விவே

கத்தின் பெருக்கத்தையும், கல்வித்திறமையையும், தினந்தோறும் கண்டும், ஒவ்வொருவருடைய நிதானத்தையும் கல்வியளவையும் தெரிந்த அமுதகவிராயராகிய தவசிப்பிள்ளை யோசிப்பாரானார். 'சேதுபதியவர்களுக்கு நாணிக்கண்புதைத்தல் என்னும் துறைச் செய்யுளில் மிகுந்த பிரியம் இருக்கின்றமையால் நாணிக் கண்புதைத்தலாகிய ஒரு துறையை நானூறாகச்செய்ய வேண்டும். அந்நானூறும் அகப்பொருள் நானூறுவிதம் அர்த்தம் பண்ணவேண்டும். ஒவ்வொர் கவிகட்கும் உலக நடையாகிய ஒவ்வொரு புறப்பொருள்கள் தோன்ற வேண்டும். தலைவியின் வாய்மொழியின்றித் தலைவனைக் கண்ட மாத்திரமே வெட்கமுற்றவளாகி இரண்டு கண்களையும் பொத்தியதற்குக் காரணமான கண்ணிடத்தும் கையினிடத்துந் தோன்றும் அபிநயம் ஏககருத்தாகப் பாடவேண்டும்' எனத் தீர்மானித்துத் தன் வேலையொழிந்த சமயங்களில் கவி எழுதத் தொடங்கினார். அப்படி எழுதிய கவிகளை மறுமுறை பார்க்கும்போது எண்ணூறு :செய்யுளிருந்தன. அவற்றுள் விசேடகற்பனை அமைந்த நானூறு செய்யுளைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு மற்றவற்றைக் கழித்து விட்டு இந்நானூறு செய்யுட்களையும் ஏட்டுள் அமைய நன்றாய் எழுதி மைக்காப்பிட்டுத் தன்னை ஆதரித்து வருகிற வித்துவானிடம் கொடுத்து "இது நான் பாடினேன்; பாருங்கள்" என்று கொடுத்தார்.

அவ்வித்துவான் வாங்கிப் பார்த்து உள்ளுக்குள் திகிலடைந்து, அதி ஆச்சர்யமுற்று இனிமேல் இவன் இங்கிருந்தால் நமக்கு மதிப்புப் போய் விடும்' என்று நிச்சயஞ்செய்து கொண்டு, தவசிப்பிள்ளையைப் பார்த்து, 'நல்ல பாட்டுப்பாடினாய்!' என்று நகைத்து ஏட்டைக் கொடுத்து விட்டுத் தன் வீட்டினின்றும் விலக்கியதோடும் அரண்மனை வாயிற் பாராச் சேவகனிடமும் 'இனிமேல் நமது தவசிப்பிள்ளை வந்தானானால் உள்ளேவிடாதே' என்று உத்தரவு அளித்துப்

போய் விட்டார். இவர் இருந்தும் பார்த்தார்; நின்றும் பார்த்தார். அரண்மனையுட் பிரவேசிக்கக்கூட முடிய வில்லை. சாப்பாடும் கிடைக்கவில்லை. இரண்டு நாள் வரையிலும் இருந்து பார்த்துவிட்டு ஏட்டையும் எடுத்துக்கொண்டு வடதிசையை நோக்கிச் சென்றார். 45நாழிகை வழிநடந்து,பசிக்களைப்பால் வழியினின்ற மரத்தடியில் ஏட்டைத் தலைக்குயரமாக வைத்துக் கொண்டு படுத்திருந்தார்.

இவர் இப்படிப் படுத்திருக்கும் சமயத்தில் வடக்கேயிருந்து தாலுகாப்பணம் கொண்டு இராம நாதபுரம் போகவேண்டி வந்தவரும்,கல்வி கற்றவரும், சராப்பு வேலையில் உள்ளவருமாகிய ஒருவர் அமுதகவி ராயராகிய தவசிப்பிள்ளை படுத்திருந்த மரத்தடியை அடைந்து இவரைக் கூப்பிட்டார். இவர் ஸ்மரணை யின்றிக் கிடப்பதைப் பார்த்துத் தலைக்கீழ் இருக்கும் ஏட்டை எடுத்துப் பார்க்கும்போது அது அமுதம் போன்ற கவியாய்த் தமதுஅரசன் மேற் பாடியபிரபந்த மாய் இருத்தலைக் கண்டு, பேரானந்தமடைந்து பின்னும் கவிராயரைத் தட்டி எழுப்பினார். கவிராய ரைப் பார்த்து ''எவ்வூர்? என்னைவரலாறு?''என்றார். கவிராயர் ''எனக்குச் சாப்பாடு செய்வித்தால் அதற்கு மேல் சொல்லுகிறேன். பசி காதை அடைக்கின்றது'' என்றார். உடனே அவ்வுத்தியோகஸ்தர் கஜனாப் பணத்தை நிறுத்தி வைத்துவிட்டு வித்துவானைக் கைப்பற்றாக அழைத்துக் கொண்டுபோய் ஒருவீட்டில் போசனம் செய்வித்து, கவிராயர் தான் திருநெல் வேலியில் இருந்துவந்ததுமுதல் அன்றுவரை நடந்தவை களைக் கூறக்கேட்ட அவ்வுத்தியோகஸ்தர் கஜானா வுக்குப் போகவேண்டிய பணத்தைக்கொண்டு போகா மல் அப்பணத்தை அவ்வூரில் கொண்டுவந்து போட்டு, அவ்வூர் அம்பாகாரன் பெரிய தனக்காரர் முதலியோர் களை வருவித்து அவர்களிடம் 'பணத்தையும் காத்து ஒப்பிக்கக்கடவீ'ரென உத்தரவளித்து இராமுழுதும்

தோட்டி முதலியோர்களால் பறையறையச் செய்வித்துத் தான் அவ்வேட்டையும் கஜானாவுக்குக்கொண்டு வந்த இருசாற் கணக்கையும் கையிலெடுத்துக்கொண்டு இராமநாதபுரம்போய் இருசால் கணக்கையும் கஜானா தலைமை சராப்பிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கிப்பார்த்துப் பணமெங்கே என்றார். இவர் பேசாது மூங்கைபோன்றிருந்தார். பின்னும்அவர்பணம் எங்கே என்று வற்புறுத்திக் கேட்க. 'நீயார் பணம் கேட்பதற்கு?' என்று ஒரு வார்த்தை சொன்னார். பின்னொன்றும் பேசுகிறாரில்லை. பின்பிரதானிகேட்கவும் அப்படியே சொன்னார். அதன்மேல் சேதுபதியவர்கட்கு அறிவிக்க அரசன் அவரை வரவழைத்துப் பணம் எங்கே என்று கேட்கப் பேசாது நின்றார். அரசன் மற்றையோரை நோக்கி 'இவர் யோக்கியரா? இவர் நடை எத்தன்மைத்து?' என்றுகேட்டார். மற்றையோர் 'இவர் மிகவும் யோக்கியர்; நன்றாய்ப்படித்தவர்' என்றார்கள். பின்னும் அவரை அரசன் பார்த்து 'பிரதானி முதலானோர் பணம் எங்கே என்று கேட்க நீர்யார் பணம் கேட்க என்றீராமே! நான்தான் கேட்கிறேன். நான் அந்தப் பணத்துக்குரியவன் தானே! சொல்லும்' என்றார். "மகாராஜா உரியவர்கள்" என்று சொல்லிவிட்டுப் பேசாது நின்றார் அவர். பின்னும் பணம் எங்கே என்று கேட்க ஒருதுறைக் கோவை எழுதிய சுவடியை அரசன்முன் வைத்து விழுந்து நமஸ்கரித்து 'இதுதான் பணம்' என்றார். மற்றெல்லாரும் 'இவருக்குப் பயித்தியம் பிடித்திருக்கலாம்' என்றார்கள். அரசன் 'அந்தக்காரியத்தின் உண்மையைச் சொல்ல வேண்டும்' என்று கேட்க, 'இவர்களை எல்லாம் வெளியில் போகும்படி சொன்னால் தெரிவிக்கிறேன்' என்று சொல்ல, அரசன் அவ்வாறே செய்தபின் நடந்தவைகளை எல்லாம் சொல்லி அக்கோவைச்செய்யுளையும் வாசித்துக் காட்டினார். அரசன்கேட்டு மகிழ்ந்து இவருக்குத் தெரியாமல் ஒற்றரை யனுப்பிப் பணமும் வித்துவானும் காக்கப்பட்டிருத்தலைக் கேள்வியுற்று,

'இனிச் செய்யவேண்டுவதென்ன?' என்று அச்சராப்பு உத்தியோகஸ்தரைக் கேட்டார். 'தாங்கள் நவராத்திரிக்கு அம்புபோடப்போகும் ஆடம்பரம்போல் விருது சைனியங்கள் என்கூட வரவேண்டும்' என்று சொல்ல அரசன் பிரதானியை அழைத்து, "நாளையுதயத்திற்கு இவர் சொல்லும் ஆடம்பரத்தோடும் போய் வித்துவானை அழைத்து வரக்கடவீர்கள்!" எனக்கட்டளையிட அவ்வாறே சென்று கவிராயரைப் பல்லக்கில் ஏற்றிப் பல்லக்கோடு அரண்மனையுட் கொண்டுபோக அரசர் எதிர்வந்து அழைத்து உபசரித்து அதன்மேற் கோவைப் பிரபந்தத்தை அரங்கேற்றச்செய்து அவ்வாறே தினந்தினம் கேட்டு அளவளாவி மகிழ்வுற்றுப் பிரபந்தமுடிந்த தினத்தில் கவிராயரைப் பல்லக்கில் ஏற்றித்தான் முன்கொம்பு தாங்கி நகர்வலஞ்செய்வித்து வேண்டிய ஆடையாபரணங்கள் அளித்து எட்டுக் கிராமங்கள் சர்வமானியமாக அளித்துச் சமஸ்தான வித்துவானாகத் தமதருகில் வைத்துக் கொண்டார்.

## 441. பொன்னம்பலம் பிள்ளை

இவருடைய ஊர் தென்காசி. இராமநாதபுரத்திலிருந்த சேதுபதி ஒருவரிடத்து இவர் மிக்க நேயமுடையவர். அவருக்கெழுதிய சீட்டுக்கவிகள் பலவுண்டென்றும் அவர்மீது இவராற் செய்யப்பட்டுப் பொன்னம்பலம்பிள்ளை வண்ணமென்று பெயருள்ள வண்ணமொன்றுண்டென்றும் சொல்லுவார்கள். சின்னணைஞ்சாத்தேவர் தம்மைக் கொல்ல நினைத்ததையறிந்து தம்முடைய பல்லக்கில் வேலைக்காரனொருவனை வைத்து விட்டுத் தாம் போகியாகச் சுமந்துசெல்லுகையில் அவர் அவனைக் கொன்று விட்டார். அப்பொழுது இவர் சொல்லிய பாடல்:

நானா விதத்திலும் பாளையக் காரற்கு நன்றி செய்யும்
தானா வதிச்சொட்டு மாந்தர்க ளேபுத்தி தானில்லையோ
மானா பிமான மிலையோஉத் திரமு மாகடலோ
ஏனாயைப் போலலை கின்றீர் இதிலு மிறத்தல் நன்றே.

பின்பு ஆறை அழகப்ப முதலியாரிடம் வந்து அவரால ஆதரிக்கப்பட்டிருப்பாராயினார். அப்பொழுது ஒருநாள் சில்ரோடு பள்ளமானவிடத்தில்புசித்துக்கொண்டிருந்த பொழுது "பள்ளப் பந்திக்கெல்லாம் வந்ததா?" வென்று சமத்காரமாகக் கேட்க, இவர் "தாங்கள் குடும்பப் பிரதானியாக விருந்து விசாரிக்கின்ற காலத்தி லெங் களுக்கென்ன குறைவிருக்கிறது என்று சொன்னார். (குடும்பர்—பள்ளர்)

இவர் ஒரு கணக்கப் பிள்ளை மகனென்று தெரி கிறது. இவர் இன்னாரிடத்து வாசித்து வந்தவரென்று தெரியவில்லை; இளமைப் பிராயத்தில்புலவர்கோடாலி என்று பெயர் பெற்றவரும்; எழுத்தாணிக்கைந்து பணம் வாங்குபவருமாகிய ஒருவர் வந்து வாசித்த பொழுது அவருந்தாமுமாக வஞ்சினஞ்செய்துகொண்டு காதில் துரட்டி மாட்டிக் கொண்டு ஆங்குள்ள சிவால யத்தை பிரதட்சிணம் வருவதற்குள் ஒரு வண்ணஞ் செய்து முடிக்க வேண்டுமென்றும் அதில் பெண்களை அவரும், ஆண்களைத் தானும் செய்வதாக வரையறை செய்துகொண்டு சுற்றி வருவதற்குள் அவர் முடிக்காம லிருக்கத் தான் முடித்து அவர் காதை இவர் அறுத்து விட்டதாகத் தெரிகிறது.

சின்னணைஞ்சாத் தேவரிறந்தபொழுது அவரு டைய அருமைபெருமையைப்பாராட்டி இவர்சொல்லிய பாடல்:

வானா டரசாளப் போன மஹராஜன்
தானாதி பதியெனயென் தன்னை மதித்தானே,
சேனாபதிப் பெருமான் சின்னணைஞ்சான் போனவழி
போனா லொழியமனப் புண்பா டொழியாதே.

இவர் காலமுந் திரிகூடராசப்பக் கவிராயர் காலமும் சற்றேறக்குறைய முன்னும் பின்னுமாக இருக்கலாம்.

சொக்கம்பட்டி பொன்னம்பலம் பிள்ளையும் இவரும் ஒருவரா வேறா என்பது தெரியவில்லை.

## 442. பொன்னு கூடக் கவிராயர்

இவர் ஊர் பேரையூர் என்று தெரிகிறது. இவர் ஷோடசாவதானம் செய்தவர். இவர் பிள்ளைஅஷ்டாவதானம் மீனாட்சிசுந்தரக் கவிராயர். பிறவிக்குருடர்.

## 443. பொன்னுசாமி முதலியார்

மதரஸா ஆலம் என்ற கல்விச்சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தியவர். இவர் பாரதவசனத்தைப் பார்வையிட்டுப் பதிப்பிக்கச் செய்தவர். சாலி. 1783. ரௌத்திரி வருஷம் ஆவணிமாதம் கி. பி. 1860 ஆகஸ்ட்.

## 444. போரூர் வாத்தியார்

சென்னையில் வித்துவானாக இருந்தவர். இவர் கச்சியப்பமுனிவர் சென்னையிலிருந்து விநாயக புராணத்தை அரங்கேற்றியபொழுது சிறப்புப்பாயிரம் அளித்த பெரியோர்களுள் ஒருவர்.

## 445. மங்கலமுடைய பிள்ளை

இவர் மருதூர் அந்தாதிக்கு உரை செய்தவர். மருதூர் என்பது நயினார் கோயில் என்று வழங்கப் படும் பாண்டிநாட்டுத் தலம் என்றும், சோழநாட்டுத் திருவிடை மருதூர் என்றும் கூறாநிற்பர். இந்நூல் மருதூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடப் பெற்றது.

## 446. மடவளாகம் இலட்சுமண பாரதி

இவர் குருக்கள். இவர் காரையூர் தலசம்பந்தமாகப் பாடல்பாடியுள்ளார். திருநணா நிரோட்டக அந்தாதி பாடியுள்ளார்.

## 447. மணக்குடவர்

திருக்குறளுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர். மணக்குடையரென்றுங் கூறப்படுவர். இவர் உரை இப்பொழுது உள்ளது. அகநானூற்றில் உள்ள முதல் 90 செய்யுட்களுக்கு அரும்பதவுரையெழுதியிருக்கின்றனர். மாணிக்கவாசகர் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவையாருக்கும் இவர் உரை செய்துள்ளார்.

## 448. மணல்மேற்குடி கிருஷ்ணையர்

சிறந்த தமிழ் வித்துவான்; செய்யுள் செய்வதிலும் பல நூல் ஆராய்ச்சியிலும் நல்ல ஆற்றலுடையவர். பல பிரபந்தங்கள் செய்தவர்.

## 449. மணவாள மாமுனிகள்

இவர் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் சொல்லப்படுபவர். இவர் பெரிய வாச்சான் பிள்ளை காலத்திற்கு முற்பட்டவர்.

இவருடைய ஆசிரியர் திருவாய் மொழிப்பிள்ளையென்பவர், இவருடைய நியமனப்படியேதான் முதலாயிரத்தில் திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியின் இறுதி முப்பது செய்யுளு மொழிந்த இடையிலுள்ள நானூற்றுச் சில்லரைப் பாசுரங்களுக்குப்பெரிய வாச்சான்பிள்ளைசெய்தருளின வியாக்கியானம் லுப்தமாய் விட்டமையால், அவற்றிற்கு வியாக்கியானம் செய்தனரென்றும் கூறுவர்.

**'பிரமாணத் திரட்டு'** என்று ஒரு நூல் இவராற் செய்யப்பட்டுள்ளது. அதாவது பெரிய வாச்சான் பிள்ளை முதலிய உரையாசிரியர்களால் பழைய உரைகளில் எடுத்துக் காட்டப்பட்ட விளங்காத மேற்கோள்களையெல்லாம் இடம் விளங்கும்படி காட்டியுள்ளார்.

## 450. மதுரகவி

இவர் ஸ்மார்த்த வடமப் பிராமணர். இவரால் செய்யப்பட்ட சிருங்காரமான இனிய கீர்த்தனைகள் மிகப் பல. இசையிலும் வல்லவர். இவருடைய ஊர் சிவகங்கையைச் சார்ந்த பெருங்கரை. இவருடைய மாணாக்கர் கவிகுஞ்சரமையரென்பவர்; பெருங்கரை பரமக்குடிக்கு ஏழு மைல் தூரத்திலுள்ளது.

## 451. மதுர கவிராயர்

இவர் சேதுநாட்டில் தோன்றியவர்; இசையில் புலமை பெற்றவர். சேதுநாட்டு அமைச்சர் முத்திருளப்ப பிள்ளையையும், சிவகங்கையை ஆண்ட மருது பாண்டியனையும் புகழ்ந்துபாடியுள்ளார். சேதுசமஸ்தானத்தை அரசாண்ட மங்களேசுவரி ராணியார் என்பவரைப்பாடிக் காக்கைகுளம் என்னும்ஊரினைப் பரிசிலாகப் பெற்றார்.

காக்கை குளத்தில் இருந்தஉடையான்என்பவன் பொறாமையால் இவருக்குப் பல துன்பங்களைக் கொடுத்தான். இவர் ஆறாயிரம் என்பவனிடம்தெரியப் படுத்த அவர் உடையானை அடக்கினார். அப்பொழுது இவர் பாடிய பாடல்.

> ''காக்கை குளமாம் கடிமலர்ப்பூம் பொய்கையந்த
> ஊர்க்குட் கரவாம் உடையானே—நீர்க்குவந்த
> வாரணமே நல்ல மதுரகவி நேமிதொட்ட
> ஆரணனே ஆறா யிரம்.''

## 452. மதுர முத்துச் செட்டியார்

இவர் திரிசிரபுரம் ஆறுமுகம் பிள்ளையின் மாணாக்கர். **அருணேசர்மாலை** யென்னும் நூலொன்று இவர் செய்ததாக வழங்குகின்றது.

## 453. மதுராபுரி மெய்ப்பாத புராணிகர்

இவர் வீரசைவர். இவர் திருப்பைஞ்ஞீலிப் புராணமும் அத்தலத்து ரத்ந சபாபதி மாலையும், அறப்பள்ளீசுரப் புராணமும் பாடியிருக்கிறார். திருப்பைஞ்ஞீலிப் புராணம் அரங்கேற்றுகையில் கேட்டோர் தக்க சன்மானம் செய்யவில்லையென்று அந்தப்புராணத்தின் இறுதிப் படலத்தைக்கையிற்-கொண்டு போய்விட்டார் என்றும், அதனால் அவ்வத்தியாயம் கிடைக்கவில்லையென்றும் சொல்லுகின்றனர். இது கர்ண பரம்பரைச் செய்தி.

## 454. மதுரைக் கந்தசாமிப் புலவர்

கல்விச் சங்கத்திலிருந்தவர். ஸ்மிருதி சந்திரிகை முதலியவற்றைத் தமிழில் இயற்றியவர் அந்நூல் 1825-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது.

## 455. மதுரை ஞானப்பிரகாசப் பண்டாரம்

இவர் சிவப்பிரகாசத்திற்கு ஓர் உரைசெய்தவர்.

## 456. மயிலாடுதுறை ஞான தேசிகர்

இவர் திருவாவடுதுறை மறைஞான தேசிகருடைய திருவருள் பெற்றவர். மெய்ஞ்ஞானமுனி யென்றும் அழைக்கப்படுவர். இவர் திருவீழி மிழலைப்புராணமும் திருப்பாச்சிலாச்சிரமப் புராணமும் இயற்றிய ஆசிரியர். அத்திருவீழிமிழலைப் புராணம் 35-ஆம் பாடலால் இவர் அப்புராணத்தை யரங்கேற்றிய காலம் சாலிவாகன சகாப்தம்1273-க்குமேல்நிகழும் கரவருடம் ஐப்பசி மாதம் என்று தெரிதலால் இவர்காலம்ஒருவாறு வெளியாகின்றது.

**விருத்தம்**

பரன்வீழி நாதனுயர் மான்மியவா ரியத்தைப்
பார்த்தினிய செந்தமிழாற் பகராவங் கவர்கள்
சரணார விந்தமலர் பரவியவர் திருமுன்
சாற்றியதிப் புராணமெய்நூல் சொற்றனனா ரென்னில்

வரம்பெறுமா வடுதண்டு றைநகரில் வாழும்
மறைஞான தேசிகன்றன் றிருவருள்பெற் றுடையோன்
திரமாரு மயிலாடு துறைநகர் வாழ் ஞான
தேசிகன்மெய் ஞானிமுனி யெனுமுயர்மா தவனே.

**வேறு**

நலமிகுமா யிரத்தைஞ்ஞூற் றெழுபத்து
மூன்றென்று நவில் சகாத்தம்
உலகினிற்சென் றதற்பின்செல் கரவருடத்
தைப்பசியெ னுயர்மா தத்தி
விலகுதிரு வீழிமிழ லைப்புராணந்
தமிழாலி சைத்தேனிந்நூல்
அலகில்புகழ் சேரிரவி போற்புடவி
யெங்கும்வல மாக மாதோ.

## 457. மயிலேறும் பெருமாள் பிள்ளை

இவர் திருநெல்வேலியில் இருந்த ஒரு வேளாளப் பிரபுவாவர்; கல்வி கேள்விகளில் மிகச்சிறந்தவராக இருந்தார். கல்லாடம் என்னும் நூலுக்கு இவர் உரை இயற்றினார்; நச்சினார்க்கினியர் இயற்றிய உரை என்று ஒரு காலத்தில் என்னை* அது நினைக்கச் செய்தது. இவரிடத்திலேதான் இலக்கணக்கொத்துச் சுவாமிநாததேசிகர் கல்விகற்றார்.

குறிப்பு. * சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும், பக்கம். 177

## 458. மயிலைநாதர்

நன்னூலின் உரையாசிரியராகிய இவர் தொல்காப்பியம் அவிநயம் முதலிய இலக்கண நூல்களிலும், அவற்றின் உரைகளிலும், அக்காலத்து வழங்கிய அகத்திய சூத்திரங்களிலும், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய சங்க நூல் களிலும், ஐம்பெருங்காப்பியம் முதலிய சங்கஇலக்கியங் களிலும், சைனசமய நூல்களிலும், பிறவற்றிலும் பயிற்சியுள்ளவர்.

மயிலைநாதர் என்னும் பெயரைஉடைமையாலும், நன்னூலின் உரையுள், சைனசமய வழக்குகளையும் அச்சமய நூற் செய்யுட்களையும் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருத்தலாலும், அருகதேவனைப் பலபடப் பாராட்டியிருத்தலாலும் இவர் சைன மதத்தினராக எண்ணப்படுகிறார்.

இப்பொழுது மயிலாப்பூர் என வழங்கும் மயிலையில் முன்பு இருந்ததான* சினாலயத்தில் எழுந்தருளியிருந்த 22-ஆம் தீர்த்தங்கரரான நேமிநாதருடைய திருநாமமாகிய மயிலைநாதரென்பதே அம்மதத்தினராகிய இவருக்கு இடப்பட்டதென்பர்.

"கருங்குழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத் திருந்திய செங்கோற் சீய கங்கன்" (நன்னூல் சிறப்பு. அடி, 15-6) என்பதனுரையில் சீயகங்கனை இவர் மிகவும் பாராட்டியிருத்தலையும், "பல்வகைத்தாதுவின்" என்பதனுரையில் "கங்க னகன் மார்பன்" என்னும் இனிய வெண்பா ஒன்றை உதாரணமாகக் காட்டியிருத்தலையும், கங்கனென்னும் பெயரைக் குடிப்பெயருக்கு உதாரணமாகக்கொடுத்திருத்தலையும் நோக்கும்போது நன்னூலை ஆக்குவித்த சீயகங்க

---

* மயிலையில் சினாலயம் இருந்தமையும் பிறவும்,

"மறமேமுனிந்து மயிலா புரிநின்று மன்னுயிர்கட்
கறமே பொழியு மருட்கொண்டலே" (திருநூற். காப்பு),

"தேனிமிர் பைம்பொழிற் திருமயி லாபுரி, நீனிறக் கடவு
ணேமி நாதர்" (நே. பாயிரவுரை) என்பவற்றாலும்,

மயிலாப்பூர்ப் பத்து, திருமயிலாபுரிப்பத்து, திருமயிலாபுரி நேமிநாதர் பத்து என்னும் சைனப்பதிகங்களாலும் தெரியவருகின்றன. இவ்வாலயம் சிலநூற்றாண்டுகளுக்கு முன்பு கடல் கொள்ளப்பட்டதென்றும் கடல் கொள்ளுமென்பதை முன்னதாக அறிந்த சைனப் பெரியோர் இதிலிருந்த படிமை மூன்றையும் எடுத்துச் சென்று அவற்றுள் நேமிநாதருடைய சிலாவிக்கிரகத்தைச் சிற்றாமூரிலும் அவருடைய தாமிர விக்கிரகத்தையும் இயக்கி விக்கிரகத்தையும் இளங்காட்டிலும் தாபித்தனரென்றுங் கூறுவர்; இந்த இயக்கி வடிவைப் பெருமண்டூரில் தாபித்ததாகச் சொல்வதுமுண்டு.

னாலோ அல்லது அவன் பரம்பரையில் விளங்கிய ஓர் உபகாரியினாலோ இவர் ஆதரிக்கப்பெற்று நன்னூலுக்கு உரைசெய்யும்படி தூண்டப்பட்டவரென்று தோற்றுகின்றது.

நன்னூற் சூத்திரங்களுள், பொருள் விளங்குவன வற்றிற்குச் சுருக்கமாகவும், ஏனையவற்றிற்கு விரிவாகவும், சிலவற்றிற்கு வினாவிடையாகவும், சிலவற்றிற்கு மோனை எதுகை முதலிய தொடை நயம் படவும், ஒவ்வொன்றைப் பிரித்துப் பிரித்துத் தனித்தனியாகவும், பலவற்றைத் தொகுத்து அவற்றின் இறுதியிற் பிண்டமாகவும் பொருளெழுதிச் செல்லுதல் இவர்க்கு இயல்பு.

நன்னூலின் உரையிற் சிற்சில இடங்களில், "உரைப்பாருமுளர், கூறுவாருமுளர்" என்றுவந்துள்ள பகுதிகளைக் கொண்டு இவரது உரைக்குமுன் நன்னூலுக்கு வேறு உரை இருந்திருக்க வேண்டுமென்று சிலர் ஊகித்தல் கூடும். ஆயினும், அப்பகுதிகளிற் கண்டவை இப்போது வழங்கிவரும் பிற உரைகளிற் காணப்படாமையாலும், விருத்தியுரைகாரரால் மறுக்கப்பட்டவை இவருடைய உரையிற் காணப்படுவதாலும், நன்னூலுக்கு இப்போது வழங்கிவரும் உரைகளுள் இதுவே பழமையானதென்று தெரிகிறது.

உளங்கூர் கேள்வி யிளம்பூ ரணரெனு மேதமின் மாதவர், தண்டலங் கிழவன் றகைவரு நேமி யெண்டிசை நிறைபெய ரிராச பவித்திரப் பல்லவதரையன்" (அவிநய வுரையாசிரியர்)

என உரையாசிரியர்களையும்,

"மிகத்தெளி கேள்வி யகத்தியனார், ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார், அளவறு புலமை யவிநயனார், புவிபுகழ் பெருமை யவினயனார், ஆசிரியச் அகத்தியனார், ஆசிரியர் தொல் காப்பியனார், ஆசிரியர் அவிநயனார்"

என நூலாசிரியர்களையும் இவர் பாராட்டிக் கூறியிருத்தலால் முன்னோர்களிடத்து இவருக்குள்ள அன்பும் மதிப்பும் நன்கு விளங்கும்.

இளம்பூரணர், அவிநயவுரையாசிரியர் இவர்களுடைய உரைகளைத் தமது உரையில் அங்கங்கே எடுத்தாண்டிருத்தலின் அவர்கள் காலத்திற்கும், 'அன்' என்பது தன்மையொருமை வினைமுற்று விகுதியாக வருமென்பதற்குக் காரிகைக் கடவுள் வாழ்த்திலுள்ள "பாவினங் கூறுவன்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டியிருத்தலின் அமுதசாகரர் காலத்திற்கும் இவ்வுரையாசிரியர்காலம் பிற்பட்டதென்று தெரிகின்றது.

நன்னூலின் பாயிரஉரை இறையனாரகப் பொருட் பாயிரவுரைக் கருத்துக்களையும், ஏனைய பாகங்களினுரைகள் தொல்காப்பிய இளம் பூரணருரையையும் பெரும்பாலும் பின்பற்றிச் செல்லுகின்றன.

இவ்வுரையாசிரியர் தாமெடுத்துக் காட்டும் மேற்கோள்களுட்சிலவற்றைஇன்னாரின்னார் வாக்கென்று புலப்படுத்தியிருத்தலும், சில இடங்களில் நூலாசிரியர் கொள்கைக்கும் தம்முடைய கொள்கைக்கும் ஆதாரங் காட்டியிருத்தலும், நன்னூலின் ஆசிரியர் பொருள்களைத் தொகை, வகை, விரியாகக் கூறியிருத்தலை அங்கங்கே விளக்கிச் செல்லுதலும் பாராட்டற்பாலன.

இவர் செய்த நன்னூலின் உரையால் அக்கால வழக்கங்களும், சில நூலாசிரியர் உரையாசிரியர் பெயர்களும், சில நூற் பெயர்களும், இக்காலத்து வழங்காத சில செய்யுட்கள் சில வாக்கியங்கள் சில சொற்கள் சில சொன்முடிவுகள் சில சொற்களின் உண்மைப் பொருள்கள் சில மரூஉப்பெயர்களின் பண்டை வடிவங்களும், சில தெய்வப்பெயர்களும், சில அரசர் பெயர்களும், சில ஆற்றின் பெயர்கள் சில தேயப் பெயர்கள் சில நகரப்பெயர்கள் சில ஊர்ப் பெயர்களும், சில சாதிப்பெயர்கள் சில பட்டப்பெயர்களும், சில மரபுப்பெயர்களும், சில தொகைப் பெயர்களும், சில மரங்கள் செடிகள் கொடிகளின் பெயர்களும், இவை போல்வன பிறவும் இவ்வுரையால்

தெரிய வந்தன; இன்னும் சில மேற்கோள்களின் தொடக்கங்கள் இன்னவையென்றும், மேற்கோள் களுள் வேறுரைகளில் இரண்டாகக் காணப்பெற்றவை ஒன்றென்றும், சில உரைநடைக்கு ஆதாரமான சூத்திரங்களின் முழுவடிவங்கள் இன்னவையென்றும் விளங்கின.

இது வரை விளங்காதிருந்தவற்றிற் பல இவருடைய உரையால் விளங்கின; அவற்றுட் சில வருமாறு:-

1. அணுத்திரளை மொழிக்கு முதற் காரணமாகக் கோடலின், அவிநய நூலாசிரியர் சைன மதத்தின் ரென்பதும், ''தன்னையுணர்த்தினெழுத்தாம்'' என்னும் வெண்பா அவிநய மென்றுதெரிதலால் அதில் நூற்பாவன்றி வெண்பாவுமுண்டென்பதும் (நன்னூல் மயிநாதருரை பக். 26, 44);

2. இது வரையிற் கையெழுத்துப் பிரதி யொன்றிலும் காணப்படாமலிருந்த பழமொழியின் முதற் செய்யுள் இன்ன தென்பது (நன்னூல் மயிலை நாதருரை பக். 288);

3. ''தாதிவர் தாமரை'' என்னுங் கடவுள் வாழ்த்தால் எண்ணூலெனப் பண்டைக்காலத்தில் ஒரு நூல் தமிழிலிருந்த தென்பது (நன்னூல் மயிலைநாதருரை பக். 168);

4. ''விதந்த மொழியினம் வேறுஞ் செப்பும்'' என்பது பரிமாண நூலிலுள்ள தென்பது (நன்னூல் மயிலைநாதருரை பக். 219);

5. அவிநய நூலுரையாசிரியர் இன்னாரென்பது (பக். 189);

6. இளம்பூரணர் துறவியென்பது (நன்னூல் மயிலை நாதருரை பக். 190);

7. உரை நடையாகவுள்ள இலக்கணவாக்கியங்களுக்குரிய பழைய சூத்திரங்கள் இன்னவையென்பது (நன்னூல் மயிலை நாதருரை பக். 44, 97)

இவர்நன்னூலுக்குத்தாம் செய்த உரையிற்காட்டும் வசனமாகிய மேற்கோள்களுள், சில பழைய செய்யுட் களின் உறுப்புக்களாகவும், சில அவற்றின் உரைநடை

களாகவும், சில மோனை எதுகைத்தொடைகளமைந்த கட்டுரைகளாகவும், சில ஒன்றன் பரியாயப் பெயர்களாகவும் காணப்படுகின்றன;

### பழைய செய்யுட்களின் உறுப்புக்கள்

1. ஆடாவடகு (பக் 122) — "ஆடாவடகினுளுங் காணேன்" (திணைமாலை .4)

2. தீத்தீண்டுகையார் (பக். 122) — "தீத்தீண்டு கையார் தெரிவித்தல் காண்" (திணைமாலை .4)

3. இதனை, இதனால் (பக். 70)— "இதனையிதனாலிவன் முடிக்கும்" (குறள் 517.)

4. அமரீர், அசுரீர் (பக் 150) —" அமரீரசுரீ ரமுனா கரையீர்" (யா-வி. சூ. 53 உரை, மேற்.)

### பழைய செய்யுட்களின் உரை நடை

1. தச்சனால் இயற்றப்பட்ட வையம் (பக். 147)— "தச்சன் செய்த சிறுமா வையம்" (குறுந்—61)

2. குழை கொண்டு கோழியெறியும் வாழ்க்கையவர் (பக் 221) — "நேரிழை மகளி ருணங்குணாக் கவருங், கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை" (பட்.22-3)

3. குறுங்கானம் போப (பக்.181)— சிறுபஞ்ச 92, உரை)

4. தைந்நீராடுப (பக் 181)— "தவத் தைந்நீ ராடுதல்" (பரி.11)

5. எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழை பெய்தது. (பக். 209)— "பொய்யா வெழிலி பெய்விட நோக்கி, முட்டை கொண்டு வற்புலஞ் சேருஞ், சிறு நுண்ணெறும்பின் சில்லொழுக்கு" (புறநா. 173)

### மோனை எதுகைத் தொடைகளமைந்த கட்டுரை

1. அடை, ஆடை; நரை, நாரை; முளை, மூளை; (பக். 36)

2. பைதல், பொய்தல் (பக். 36.) 121-ஆம் சூத்திரத்தின் உதாரணங்கள் முதலியவற்றாலுமுணர்க.

ஒன்றன் பரியாயப் பெயர்கள்:-

கமலம், சரோருகம், தாமரை, பங்கயம் (பக். 71)

**நன்னூலின் உரையால் தெரிந்த இவருடைய கொள்கைகளுட் சில பின்வருமாறு:-**

1. ஆவி, உயிர், மெய், உடம்பு, எழுத்து என்னும் பெயர்கள் இடுகுறியென்பது (பக். 21)
2. அவன் முதலியவற்றைப் பகாப்பதமென்றல் (பக். 46)
3. சாரியை இன்னொலியே பயனாக வருமென்றல் (பக். 47)
4. வாவென்பது வம்மென்றாகுமென்றல் (பக். 57)
5. தமிழில் வரும் வடமொழிப் பதங்களும் பொதுவெழுத்தால் வருவன சிறப்புடையன; அல்லவை சிறப்பில்லாதனவென்றல் (பக். 58)
6. ஏகார வினா இட முதலிய ஐந்தினும், யாவினா கால முதலிய நான்கினும் வருதலரிதென்றல் (பக். 136)
7. 'அனைத்து' என்னும் சொல் பன்மையென்றல் (பக் 195)

பகுபத முடிபில் இவர் கொள்கை வேறு; பிற்காலத்தவர் கொள்கை வேறு. இவர் நன்னூல் உரையில் எடுத்துக் காட்டிய நூல் மேற்கோள்களுள் தெரிந்தவற்றின் பெயர்கள் வருமாறு:-

**இலக்கியம்:** அகநானூறு, ஐங்குறுநூறு, ஐந்திணையெழுபது, ஐந்திணையைம்பது, கலித்தொகை, களவழி நாற்பது, கார்நாற்பது, குறுந்தொகை, சிலப்பதிகாரம், சிறுபாணாற்றுப்படை, சீவகசிந்தாமணி, சூளாமணி, திணைமாலை நூற்றைம்பது, திரிகடுகம், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார், திருமுருகாற்றுப்படை, நற்றிணை, நாலடியார், நான்மணிக்கடிகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், பழமொழி, புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மணிமேகலை, மலைபடுகடாம், முத்தொள்ளாயிரம், முதுமொழிக்காஞ்சி.

**இலக்கணம்:-** அகத்தியம், அவிநயம், தொல்காப்பியம், பனம்பாரம், புறப்பொருள் வெண்பாலை, யாப்பருங்கலக்காரிகை.

சில ஏட்டுப் பிரதிகளின் இறுதியில், "காண்டிகையுரை முற்றிற்று" என்னும் வாக்கியம் காணப்படுவதால் இவர் செய்த நன்னூலின் உரை காண்டிகையுரையென்று கொள்ளற்பாலது.

## 459. மருதநாயகம் பிள்ளை

இவர் இலக்கிய இலக்கணங்களிலும் மெய்கண்ட சாத்திரத்திலும் நல்ல பயிற்சியுடையவர். முதன்

முதலாக மெய்கண்ட சாத்திரங்களைப் பதிப்பித்தவர் இவரே.

## 460. மருதூர் அம்பலவாணர்

இவர் **திருச்சோற்றுத் துறைப்** புராணம், **ஆதித்த** புராணம் செய்தவர்; தருமைச்சிவஞான தேசிகருடைய சிஷ்யர். ஆதித்தபுரமென்பது திருக்கருப்பறியலூர். திருவிளையாடல் பதிப்புரையில் திருவுசாத்தானப் புராணம் இயற்றியதாகக் காணப்படும். அம்பலவாண முனிவர் சீகாழிக்கு அருகிலுள்ள திருக்கருப்பறியிலூர்ப் புராணம் இயற்றியுள்ளார் என்பது பின்வரும்சிறப்புப் பாயிரத்தால் விளங்கும்.

முற்பாவு மொழிந்தவரு மினிப்பாடல்
முறைமுறையாய் மொழிகு வாரும்
கற்பாருங் கேட்பாரு மல்லாமற்
றாம்பாடல் கழறும் வண்ணம்
பொற்பாவு மாதித்த புரமகிமைத்
தண்டமிழால் புனைந்தா னென்றுஞ்
சொற்பாவின் சயம்படைத்த மருதூரம்
பலவாண சுமுகத் தோனே.

## 461. மருதூர் நாகலிங்கக் கவிராயர்

இவர் 90 வயதுவரை இருந்தார். சிவஸ்தோத் திரம் பல செய்திருக்கிறார்.

## 462. மலைக் கொழுந்துக் கவிராயர்

இவருடைய ஊர் திருப்பாண்டிக் கொடுமுடி; **திருத்தொண்டர் சதகம்** என்று ஒருநூல் செய்திருக்கிறார். இப்புஸ்தகம் திருவாவடுதுறை வித்தியாநிதி புஸ்தக சாலையில் இருக்கின்றது, இவருடைய ஊர் கொடு முடிக்கு வடக்கேயுள்ளதாகிய குன்றத்தூர் என்றுங் கூறுவர். இவர் பிள்ளை இராசலிங்கக் கவிராயர்.

திருத்தொண்டர் சதகம் திருவாவடுதுறைஆதீன வெளியீடாக 1968 ஆம் ஆண்டு அச்சாகியுள்ளது.

## 463. மலையலங்காரக் கவிராயர்

இவர் சண்ட மாருதக் கவிராயருடைய புதல்வர். இவர் பாரதக் கதையை வண்ணமாகச் செய்திருக்கின்றனர். பாரத வண்ணம் மிக வியக்கத்தக்கது.

## 464. மலையாண்டியப்ப நாயக்கர்

இவர் கன்னிவாடி ஜமீன் சிற்றரசராகவும் வித்வானாகவும் இருந்தவர்.

பேரையூர் அரைக்கிரையைப் பற்றி நான்கு செய்யுட்கள் பாடியுள்ளார் என்று தெரிகிறது.

## 465. மழவராயனேந்தல் சிதம்பர பாரதி

இவர்செய்தநூல் **குன்றக்குடிமுருகர்பிள்ளைத்தமிழ்.** (மழவை)மதுரைக்குக் கிழக்கே வையையாற்றின் வடகரையிலுள்ளதோரூர்.

## 466. மழவை மகாலிங்கையர்

மதுரைக்குக் கிழக்கேயுள்ள மழவராயனேந்தலென்பது இவர் ஊர். அதன் பெயரின் மரூஉவே மழவையென்பது. இவர் திருத்தணிகை விசாகப்பெருமாளையரிடத்தும், அவர் சகோதரர் சரவணப்பெருமாளையரிடத்தும் தமிழ்நூல்களை முறையே பாடங்கேட்டவர்; கேட்டவற்றை ஆராய்ந்து தெளிந்தவர்; கம்பராமாயணம், திருத்தணிகைப் புராணம் முதலிய பெருங்காப்பியங்களில்நல்லபயிற்சியுள்ளவர்;இலக்கண அறிவை விசேடமாகப் பெற்றவர்; அஞ்சாநெஞ்சினர்; எதையும் விரைந்து செய்யும் ஆற்றலுடையவர்; ஸங்கீத லோலர்; சிநேக வாத்ஸல்யசீலர்; ஆதிசைவகுல திலகர்; தாண்டவராயத் தம்பிரானுக்கு உயிர்த்தோழர். சென்னை பிரசிடென்ஸி ஸ்கூல் காலேஜான ஆரம்பத்தில் தமிழாசிரியராக இருந்தவர் இவர். அக்காலத்தில் சென்னையில் தமிழ் விஷயமாக எந்த

நிகழ்ச்சி நடைபெற்றாலும் இவருடைய சம்பந்தம் இருக்கும். பாடசாலை வைத்துப் பிள்ளைகளைப்படிப் பித்து வந்த இவர் முதலில் சிறுவர்களுக்கு உபயோக மாகும்படி வசனநடையில் ஓர் இலக்கணம்எழுதினார். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையை 1847 ஆம்வருஷம் பதிப்பித்தார். **மழவைச்சிங்கார சதகம்** முதலிய சில செய்யுள் நூல்களையும் இயற்றி னார். இவர் திருநூற்றந்தாதிக்குஉரையெழுதியுள்ளார். நைடத உரைப் பதிப்பிற்குச் சிறப்புப்பாயிர மொன்று சுபகிருது வருடத்தில் கொடுத்திருக்கிறார். பெரிய புராணத்தில் முதல் 900 செய்யுட்களுக்கு உரை செய் திருக்கின்றனர். பிரபுலிங்க லீலைப் பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரம் ஒன்றுகொடுத்துள்ளார். அருணாசல புராண உரையும் செய்தனர். நைடத உரைச் சிறப்புப் பாயிரத்தால் முருகக்கடவுளே ஞான சம்பந்தராக அவதரித்தாரென்பது இவர் கொள்கையென்பது தெரி கின்றது. பூம்பாவை சிங்கார முதலியார் என்பவர் இவருடைய நட்பினர். இவர் யூனிவர்சிட்டியென்னும் சகல சாஸ்திரசாலைத் தமிழ்ப்புலவர். ரெவரண்ட் பி. பார்ஸிவல் துரையவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரைக் கொண்டு மொழிபெயர்த்த பைபிளை இவர் பார்த்துத் திருத்தமாக இருப்பதாக ஒப்புக் கொண்ட பின்னரே பாதிரிமார்கள் திருப்தி யுற்றனர்.

விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமா ளையரென்னுமிருவருடைய ஆசிரியராகிய இராமாநுச கவிராயர், அவ்விருவரையும் பிற வித்துவான்களையும் இழிவுபடுத்திப் பேசுவதும் தம்மையே புகழ்ந்து கொள் வதும் கண்டு வருந்திய அறிஞர் பலர் அவருடைய இந்தச் செயலை நீக்க வேண்டுமென்று இவரிடம் வற் புறுத்திக் கூறினார்கள். இவர் அதற்கு இணங்கி இராமாநுச கவிராயரை எந்தவிடத்தில் எவ்வளவு கூட்டத்துக்கு இடையிற் கண்டாலும் தமிழ் நூல்களி

லுள்ள விடுத்தற்கரிய பல கேள்விகளைக் கேட்டு அவரை விடையளிக்க வொண்ணாதபடி செய்து வந்தார். இதனால் இவருக்குப் பெருமதிப்பும், குற்றத்தைப் பட்சபாதமின்றிக் கண்டிக்கும் இயல்புடையவரென்னும் பெயரும் உண்டாயின.

பிள்ளையவர்கள் இளைஞராயிருக்குங்காலத்தில் சென்னையிலிருந்த தமிழ் வித்துவானாகிய இவரைக் கண்டு பழக வேண்டுமென்னும் தமது நெடுநாளைய விருப்பத்துடன் காஞ்சீபுரம் சபாபதி முதலியார், திருவேங்கடாசல முதலியார், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையென்னும் சென்னை வித்துவான்கள் மூவராலும் அழைத்துச் செல்லப்பட்டுச் சென்னையிலுள்ள இவரது வீட்டிற்கு வந்தபோது இவர் அவர்களை மகிழ்வுடன் வரவேற்றுத் தக்க இடங்களில் இருக்கச்செய்து தாமும் இருந்தார். பிள்ளையவர்கள் வணக்கத்தோடு ஒரு பக்கத்தில் இருந்தனர். இவர் அவரைச் சுட்டி, "இவர் யார்?" என்றார். சபாபதி முதலியார், "இவர் இருப்பது திரிசிரபுரம்; மீனாட்சிசுந்தரம் பிள்ளையென்பது இவருடைய பெயர். இந்த ஊருக்குச் சில காரியமாக வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார்; தமிழ் பயின்றவர்; செய்யுட்களை இயற்றும் பயிற்சியுமுடையவர்" என விடை கூறினார். தமிழ்ப்பயின்றவர் என்றதைக் கேட்ட இவர் பிள்ளையவர்களை நோக்கி "நீர் எந்த எந்த நூல்கள் வாசித்திருக்கிறீர்?" என்றார். அவர் தாம் படித்த நூல்களின் பெயர்கள்சிலவற்றைச்சொன்னார். பின்னர் இவர், "ஏதாவது ஒரு பாடல் சொல்லும்" என்றார். உடனே அவர்,

"இரசத வரையமர் பவள விலங்க
    விடம்படர் பைங்கொடியே
இமையவர் மகிழ்வொடு புகழுஞ்சிமயத்
    திமயம் வரும்பிடியே
சரணினை பவருட் டிமிரஞ் சிதறச்
    சாரு மிளங்கதிரே

சதுமறை யாலு மளப்பரி தான
தயங்கு பொளாமணியே
மரகத வரையிள கியவெழி லெனவெழில்
வாய்த்த செழுஞ்சுடரே
மதுரித நவரச மொழுகக் கனியும்
வளத்த நறுங் கனியே
தரணி மிசைப்பொலி தருமக் குயிலே
தாலோ தாலேலோ
தழையுந் தந்தி வனத்தமர் மயிலே
தாலோ தாலேலோ" (தாலப் 6)

என்னும் பாடலைப் பொருள் விளங்கும்படி மெல்லச் சொன்னார். அவர் செய்யுளை அவ்வாறு சொல்லும் முறையினாலே இவர் 'அவர் நல்ல அறிவுடையவராக விருக்க வேண்டு'மென்றெண்ணினார். "இப்பாடல் ஒரு பிள்ளைத் தமிழிலுள்ளது போலிருக்கிறது. சொற்களும் பொருளும் நயம்பெற இதில் அமைந்துள்ளன. அப்பிள்ளைத்தமிழ் எந்தக் கவிசிகாமணியின்வாக்கோ? இந்த நூல் அந்தத் திரிசிரபுர முதலிய இடங்களில் மட்டும் வழங்குகின்றது போலும். இதன் பெயரை யாவது இவ்வூரில் ஒருவரும் நம்மிடத்துச் சொன்னாரில்லையே!" என்று பலவாறாக நினைந்து அவரை நோக்கி "இச்செய்யுள் எந்த நூலிலுள்ளது?" என்று கேட்டார். பிள்ளையவர்கள் வணக்கத்தோடு, "அடியேன் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழில் உள்ளது" என்றார். உடனே இவர் மிகவும் வியப்புற்று 'இவ்வளவு அருமையான நூலைச் செய்த இவர் (பிள்ளையவர்கள்) அடங்கியிருப்பது என்ன ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது! இவர் எவ்வளவோ நூல்களைப் படித்திருக்க வேண்டுமே! எவ்வளவோ செய்யுட்கள் செய்து பழகியிருக்கவேண்டுமே! அளவற்ற பாடல்களைச் செய்திருந்தால்தானே இங்ஙனம் செய்யுள் செய்ய வரும்! இவருடையஅடக்கமேஅடக்கம். இவரைப் போன்றவர்களை இதுகாறும் யாம் கண்டிலமே! இங்ஙனம் இருப்பதன்றோ கல்விக்கழகு!' என்று தம்முட் பலவாறாக நினைத்து இவரைநோக்கி,

"தயை செய்து இச்செய்யுளை இன்னும் ஒருமுறை சொல்லுங்கள்" என்று சொல்லி இரண்டுமூன்றுமுறை சொல்வித்துக் கேட்டார். பின்னும் அந்நூலிலிருந்து சில செய்யுட்களைச் சொல்லும்படி செய்து கேட்டு அவற்றின் பொருட்சுவைகளை நுகர்ந்து இன்புற்றார். பின்பு சிறிதுநேரம் யோசித்து, "நானும் ஒரு பாடல் சொல்லுவேன்; கேட்கவேண்டும்" என்று கூறி,

"தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி
சார்* பகழிக் கூத்தனெனத் தரணி யோர்சொல்
இருவருமே நன்கு பிள்ளைத் தமிழைச் செய்தற்
கேற்றவரென் றிடுமுரைவெந் நிட்ட தம்மா
அருமைபெறு* காவையகி லாண்ட வல்லி
யம்மைமேன் மேற்படிநற் றமிழை யாய்ந்து
சுருதிநெறி தவறாத குணன்மீ னாட்சி
சுந்தரமா லன்பினொடு சொல்லும் போதே"

என்னும் செய்யுளைச் சொல்லிக்காட்டினர். அப்பால் சபாபதிமுதலியார்முதலியவர்களைநோக்கி, "இவ்வளவு படித்துப்பாடத்தெரிந்தும் இவர்கள் எவ்வளவு அடக்கமாயிருக்கிறார்கள்! என்ன ஆச்சரியம்!" என்று வியந்து பாராட்டினர். கேட்டசபாபதிமுதலியார், "அதைத்தான் நாங்கள்அறிவிக்க வந்தோம்" என்றார். இவர் பிள்ளையவர்களுடைய வரலாற்றைவிசாரித்துவியந்துபுகழ்ந்துவிட்டுப் பின்பு அவரைப் பார்த்து, "இந்நூல் அச்சிற் பதிப்பிக்கப் பெற்றதா? இல்லையாயின் விரைந்து பதிப்பித்து விடவேண்டும். படித்தவர்களுக்கு இது நல்ல இனிய விருந்தாக விளங்கும்" என்று அன்புடன் சொன்னதோடு, "நீங்கள் இந்நகரில் எவ்வளவுநாள் இருத்தற்கு எண்ணியிருக்கிறீர்கள்? வேறு எவ்வளவு காரியங்கள் இருப்பினும் என்னோடு கூடவிருந்தே பெரும்பாலும்பொழுது போக்க வேண்டும். உங்களுக்கு

---

* இவர் இயற்றிய நூல் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

* காவை—திருவானைக்கா

ஆகவேண்டிய காரியம் என்னவிருந்தாலும் அதனைச் செவ்வனே செய்து முடித்தற்குச் சித்தனாகவிருக்கிறேன்; யோசிக்க வேண்டாம்." என்று மிகவும் வற்புறுத்தினார். அங்ஙனம் செய்விக்க வேண்டுமென்று சபாபதி முதலியார் முதலியோரையும் கேட்டுக் கொண்டனர். பிள்ளையவர்கள் அவர்களுடைய குறிப்பையறிந்து அங்ஙனம் செய்வதாக உடன்பட்டனர். அப்பால் எல்லோரும் இவரிடம் விடைபெற்றுக் கொண்டு தத்தம் உறைவிடம் சென்றார்கள்.

பிள்ளையவர்கள் அக்காலந்தொடங்கி இவருடன் பழகுதலை மிகுதியாக வைத்துக் கொண்டு இவரிடம் நன்னூல் விருத்தியுரை, காரிகையுரை, தண்டியலங்கார உரை, நாற்கவிராய நம்பியகப் பொருளுரை முதலியவற்றிலும் பிறவற்றிலும் அங்கங்கே தமக்கிருந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து, அதுவரை தமக்கு அகப்படாமல் இருந்ததாகிய இலக்கணக் கொத்துரையையும் இவர்பாற் பாடங்கேட்டனர். இலக்கணக் கொத்துரையை இவர் அவரிடம் கொடுத்த பொழுது, "இந்த நூலைப் பெற வேண்டுமென்னும் ஆர்வத்தினாற் பல இடங்களில் தேடினேன்; திருவாவடுதுறை மடத்திலும் மிக முயன்றேன்; கிடைக்கவில்லை. பின்பு நண்பர் தாண்டவராயத் தம்பிரானவர்களிடத்தே பெற்றேன். இதனை மிகவும் சாக்கிரதையாக வைத்துக்கொள்ளவேண்டும்" என்றார். அவர் அதனைப் பெற்றுப் பிரதி செய்து கொண்டார். இவர் எவ்வெவ்விடங்களுக்குப் போவதாக இருந்தாலும் அப்புலவர்பெருமானைத் தம்முடைய வண்டியிலேயே வைத்துக்கொண்டு சென்று மீளுவதும், அக்காலங்களில் இலக்கண சம்பந்தமான சல்லாபமேஅவருடைய விருப்பத்தின்படி அவரிடம் மிகுதியாகச் செய்வதும், தமக்குத் தோற்றாதவற்றை அவர்பால் தெரிவித்துக் கொள்வதும் இவருக்கு வழக்கமாக இருந்தன.

ஒரு நாள் பல இடங்களுக்குப் போதற்கு இருவரும் வண்டியொன்றில் ஏறிப் புறப்பட்ட பொழுது

பிள்ளையவர்கள் இவரைப்பார்த்து, "நீங்கள் காலேஜில் இலக்கணக் கேள்விகளை எவ்வாறு கேட்பது வழக்கம்?" என்று கேட்டார். இவர் ஒரு பாடலைச் சொல்லச் சொல்லி அந்தப் பாடலில் அமைந்துள்ள சொன்முடிபு பொருண்முடிவுகளையும், புணர்ச்சி விதிகளையும், பிற இலக்கணங்களையும் கேட்டுக்கொண்டே வந்தனர். அவ்வாறு கேட்டு வருகையில் நன்னூலிலுள்ள பெரும்பான்மையான இலக்கண விதிகளும் பிற இலக்கண நூல் விதிகளும் அவ்வொரு பாடலில் அமைந்தவற்றைக் கொண்டே கேட்டு விட்டனர். பார்க்க வேண்டிய இடங்களுக்கெல்லாம் போய்ப் பார்த்து வீடு திரும்பும் வரையில் அவ்வொரு பாட்டிலுள்ள இலக்கண அமைதிகளையே பல வகையாகக் கேட்பதிலும் விடையளிப்பதிலும் பொழுது சென்றது. அதனாற் பலவிஷயங்கள் பிள்ளையவர்களுக்குப் புதியனவாகத் தெரிய வந்தன. இவ்வாறு இருவரும் அளவளாவிப் பலவிஷயங்களை அறிந்தும் அறிவித்தும் வந்தனர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" அன்றோ?*

சென்னையில் இருக்கும் போது தம்முடன் நெருங்கிப்பழகிய திருவாவடுதுறை யாதீனவித்துவான் தாண்டவராயத் தம்பிரான் திருவாவடுதுறைக்கு சென்ற பின்பு அவரது பிரிவாற்றாது வருந்திய இவர்,

"விரிந்தகம லாலயத்து மின்னாளுக்
கணியாகி மேம்பாடுற்றுப்
பரிந்துசிவ யோகிகள்வாழ் துறைசையுளா
யிருகலையின் பகுப்பை நன்கு
தெரிந்ததாண் டவராய மாதவமெய்ச்
சித்தாந்தச் செல்வா நின்னைப்
பிரிந்ததனால் மணியிழந்த கண்ணதுபோல்
வாடுகின்றேன் பேதை யேனே."

என்னுஞ் செய்யுளை அவருக்கு எழுதியனுப்பினார்.

---

* இச்செய்தி ஐயரவர்கள் கும்பகோணம் காலேஜில் வேலையை ஏற்றுக் கொண்ட தினத்தில் ஸ்ரீ தியாகராச செட்டியாரவர்கள் தமக்குப் பிள்ளையவர்களே சொல்லியதாகக் கூறியது.

இவர் பிரஸிடென்ஸி காலேஜை விட்டு விலகும் போது தம்முடையஆசிரியராகிய வீரசைவ வித்துவான் விசாகப் பெருமாளையரைத் தம் ஸ்தானத்தில் இருக்கும்படி செய்வித்தார்.

## 467. மறைஞான முனிவர்

இவர் சிவஞான சித்தியார் சுபக்கம் 327செய்யுட்களுக்கு உரை செய்திருக்கின்றனர்.

இவர் சாலிவாடிபுரம் ஞானப்பிரகாசருக்குக் காலத்தால் முந்தியவர் என்று தெரிகிறது.

நிலையடைய வநுதினமும் நினையெனது மனமே
தொலைவிலரு டருமதமா மலமுமுறு துயரும்
மலைவுடைய வுணர்வுடைய மதியடைய வருளும்
மலையின்மறை ஞானமுனி யுரைசெய் திருமொழியே.

## 468. மாடம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்

இவர் சேலம் பாடசாலையில் தமிழ்த் தலைமை புலமை நடாத்தியவர். பாலகாண்டவுரை யியற்றியவர். கி. பி. 1861.

## 469. மாணிக்கநாட்டுப் பெரிய முத்துமாரியப்பக் கவிராயர்

இவர் மருதுபாண்டியருடைய சமூகவித்துவான். தம்பிப்பட்டி முத்துவேலுக் கவிராயரின் சீட்டுக்கவியாகிய "புனிதமிகு" என்பதில்தமிழ்ச்சிகாமணியென்று புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறார்.

## 470. மாணிக்கவாசக முனிவர்

இவரியற்றியதாகிய நூல் **குவலாயனந்தம்** என்பதோர் அணியிலக்கணம்.

## 471. மாதைத் திருவேங்கட நாதையர்

இவர் இலக்கண விளக்க நூலாசிரியராகிய ஸ்ரீவைத்திய நாத தேசிகர் காலத்தவரென்று தெரி

கின்றது. இவருடைய ஊர் மாதையென்பது. இவர் தென்மொழியிலும் வடமொழியிலும் மிகவும் பாண்டித்தியமுடையவர். இவர் வாரை அந்தணர். கண்ண பிரானிடத்து மிக்க பத்திமைபூண்டு அவரையே வழிபட்டொழுகுபவர்; வேதாந்த நூற்பயிற்சி மிகுதியாகவுள்ளவர்; அக்காலத்திருந்த..............ரிடம்........... உத்தியோகத்தைப் பெற்றுச் சோழ நாட்டைப் பரிபாலித்து வந்தனர்; தமிழ்நாட்டினர்க்குப் பரமோபகாரமாகும்படி மேற்கூறிய திருவாரூர் வைத்தியநாத தேசிகரென்பவரைக் கொண்டு தமிழில் ஐந்திலக்கணமுமடங்கிய **இலக்கண விளக்க** நூலையும் அதற்கு உரையையும் செய்வித்து வெளிப்படுத்திய மகோபகாரி இவரே. வடமொழியில் கிருஷ்ண மிசிரரென்பவரால் செய்யப்பட்டிருந்த **பிரபோத சந்திரோதயம்** என்னும் வேதாந்த நாடகத்தை முதலில் இராகவேந்திர யோகியென்னும் பெரியவரொருவர் கட்டளையின்படி தமிழிலும் பின்பு வடமொழியிலும் அந்தப் பெயரையே சூட்டிச் சிறந்த காப்பியமாக்கி வெளிப்படுத்திய கவிப் பெருமானும் இவரே. இன்னும் **ஞானசோபன**மென்று பெயர்பெற்ற வேதாந்தப் பிரபந்தமொன்றும் இவராற் செய்யப்பட்டுள்ளது; அதன் கருத்தும் பிரபோத சந்திரோதயத்தின் கருத்தும் பெரும்பாலும் ஒத்திருக்கும், இந்த வரலாறுகளெல்லாம், இலக்கண விளக்கப் பாயிரத்தாலும் பிரபோத சந்திரோதயத்தின் முன்புள்ள பதிகத்தாலும் ஞானசோபனத்தின் இறுதியிலுள்ள வாக்கியங்களாலும் நன்கு புலப்படும். ஞானசோபனம். திரு வேங்கட நாதன் சோபனமெனவும் வழங்கும்.

### 472. மாயூரம் இராமையர்

இவர் அந்தணகுலதிலகர். இவருடைய ஊர் மாயூரம். இவர் தமிழிலக்கணங்கள் ஐந்தையும் கற்றுத் தேர்ந்தவர். இவை, இவர் இயற்றிய 'திருமயிலைத் திரிபந்தாதி' நூற் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும்.

இவர் இயற்றிய வேறு நூல் திருநாகைக் காரோணத்தைச் சார்ந்த **நாகூர்த் தலபுராணம்.** அஃது இவருடைய இளமைப்பிராயத்தில் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்று அதன் நடையால் தோற்றுகின்றது. அதனாற் சில பழக்க வழக்கங்களும், ஆலய வழிபாட்டுமுறையும், விழாக்களின் நிகழ்ச்சிமுறையும், பிற அரிய விஷயங்களும் விளங்கும். இவர் சிவபக்தி மிக்கவரென்பதும், செய்யுட்களை வருத்தமின்றிப் பாடும் இயல்பினரென்பதும், இயற்கை வளத்தை அறிந்து அனுபவித்தவரென்பதும் திருமயிலைத் திரிபந்தாதியால் விளங்குகின்றன.

[தாம் பதிப்பித்த திருமயிலைத் திரிபந்தாதி அச்சுப்புத்தகத்தின் முகவுரையில் நாகூர்த் தலபுராணமென்றும், தம் கையெழுத்தில் எழுதிவைத்திருந்த குறிப்பில் நாகைப் புராணமென்றும் எழுதியுள்ளார்கள் ஐயரவர்கள்.]

## 473. மாயூரம் சிவலிங்க வாத்தியார்

பிள்ளையவர்கள் மாயூரத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்டு மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லி வருகையில் அவரிடம் பாடங்கேட்ட முக்கியமானவர்களுள் இவரும் ஒருவர். இவராற் செய்யப் பெற்ற பிரபந்தங்கள் சில உண்டு.

## 474. மாயூரம் பட்டமங்கலம் சபாபதி ஐயர்

இவர் மாயூரத்தில் இருந்த தமிழ்வித்துவான்; பிள்ளையவர்கள் மாயூரத்தில் சில காலம் தங்கியிருந்தபோது அவர் நூதனமாகச் செய்யுள் செய்வதைக் கேட்டும் பாடஞ் சொல்லுகையில் உடன் இருந்து கேட்டும், மகிழ்ந்து செல்வார். இவர் எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியாரிடத்திற் பாடங்கேட்டவர்; தம்முடைய இளமை தொடங்கிக் கூறைநாட்டில் சாலியச் செல்வர்களிடத்தில் இராமாயணப் பிரசங்கம் செய்து ஜீவித்தவர்.

## 475. மாயூரம் வேதநாயகம் பிள்ளை

கேட்பவருடைய உள்ளத்தை நல்வழியிற்புகுத்தி விடுமென்பதிற் சிறிதும் ஐயமில்லாத கீர்த்தனங்களை, அவற்றில் சாஸ்திரக் கருத்துக்களையமைத்துச் செய்த சான்றோர் இவர்.

## 476. மாரி முத்தா பிள்ளை (தில்லைவிடங்கன்)

புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலிவிடு தூது முதலியவற்றையும், சில கீர்த்தனங்களையும் இயற்றியவர்.

## 477. மாவாடிக் கோட்டை அப்பு சாமிப் புலவர்

இவர் தந்தை சுப்பிரமணியப் புலவர். அவரும் தமிழ்ப் பயிற்சியுடையவரே. குறவஞ்சி ஒன்றியற்றி நெற்குப்பம் ஏகாம்பர சேர்வைகாரர் முன்பு அரங்கேற்றி அவரால் மானியம் விடப்பெற்றவர். அப்பு சாமிப் புலவர் திருப்பெருந்துறையில் கட்டளையதிகாரம் பெற்றிருந்த வேள்விலிங்கத் தம்பிரானிடம் பாடங்கேட்டவர். இவர் செய்த நூல்கள்:

1. ஏம்பல் முத்தையசாமிப் பிள்ளைத் தமிழ்
2. ஏம்பல் முத்தையசாமிப் பள்ளு

இவர் இறக்கும்போது இவருக்கு வயது 67 இருக்கலாம்.

## 478. மாளிகைத் தேவர்

அருணகிரி புராணத்தும் காளையார் கோயிற் புராணத்தும் இவர் துதி கூறப்பட்டுள்ளது; திருமாளிகைத் தேவர் வேறு; இவர் வேறு.

## 479. மிதிலைப்பட்டி பாடி மங்கைபாகக் கவிராயர்

இவர் ஆதி சிற்றம்பலக் கவிராயருடைய மூத்த புதல்வர். இவர் நத்தம் ஜமீன்தாராகிய இம்முடி

லிங்கைய நாயகர் குமாரர் சொக்கலிங்க நாயகர் மீது வருக்கைக்கோவை பாடி 'பூசாரிப்பட்டி' என்னும் கிராமத்தைப் பெற்றார். இவர் புதல்வர் சிற்றம்பலக் கவிராயர், சிற்றம்பலக் கவிராயருடைய மகனார் குழந்தைக் கவிராயர். இவருடைய மகனார் அழகிய சிற்றம்பலக் கவிராயர். இவருடைய மகனார் குழந்தைக் கவிராயர்.

## 480. மிதிலைப் பட்டிப் பாண்டிக் கவிராயர்

இவர் தொந்திலிங்கக் குழந்தைக்கவிராயருடைய இரண்டாவது புத்திரர்; குன்றக்குடி முருகக்கடவுள் மீது கவிபாடுவார்.

இவர் செய்த நூல்கள்:

1. விரையாச்சிலை அடைக்கலங் காத்த அம்மன் மீது சந்தக் கும்மி.
2. செவ்லூர் நாச்சியாரம்மன்மீது சந்தக்கும்மி
3. நளன் கும்மி.

இவருடைய புதல்வர் அழகிய சிற்றம்பலக் கவிராயர்.

அகிலாண்டேசுவரியென்னும் மகளுக்கு ரகுநாத சேதுபதி சிவகங்கையைப் பிரித்துக் கொடுத்தார். அகிலாண்டேசுவரி சத்திரமென்று சிவகங்கைக்குத் தென்புறத்துள்ளது. 'அன்னங் கொடுத்தால் உப்புக் கொடுக்க வேண்டும்' என்றபடி தொண்டியைச்சார்ந்த உப்பளத்தையும் கொடுத்தார்.

## 481. மீன்பிசல் ராமுரு ஐயர்

இவர் சீகாழி அருணாசலக் கவிராயர் பாடிய இராமாயணக் கீர்த்தனங்களை அவரிடம் இருந்து கொண்டு செவ்வையாகவே பாடிக் காலங் கழித்தவர்.

## 482. முத்தமிழ்க் கவிஞர்

இவரது இயற் பெயர் தெரியவில்லை. இவரியற்றிய நூல் சுசீந்திரபுராணம். அந்நூலிலுள்ள பாடல் ஒன்று. (சுசீந்திரம் குமரிக்கு அருகிலுள்ள ஊர்.)

"பூமா துபொருந் தியமார் பினனும்
நாமா துதிருந் தியநா வினனும்
தாமா தரனுஞ் சிவதா ணுவெனும்
சீமா னைநினைந் துதினம் பணிவாம்."

## 483. முத்தமிழ்க் கவிராச சேகரர்

இவர் கும்பகோணம் பாபநாச முதலியாருடைய தந்தை; இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை.

## 484. முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்

இவர் செய்த நூல்கள்:-

1. திருவேங்கடக் கலம்பகம்
2. திருக்கண்ண மங்கை மாலை
3. கச்சிப் பெருந் தேவித் தாயார் பஞ்சரத்தினம்
4. பாலூர்க் கலம்பகம்
5. செய்யூர் பிள்ளைத் தமிழ்

இவர் சரித்திரத்தைத் திருவேங்கடக் கலம்பகம் முகவுரையில் வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் எழுதியிருக்கிறார்.

கவி வீரராகவ முதலியாருக்குப் பரம்பரையாரொருவரைக் கண்டு கேட்டு எழுதியது. இவர் 500 வருடத்திற்கு முன்பிருந்தவர்; இவர் பொன் விளைந்த களத்தூரிற் பிறந்தவர்; திருக்கழுக்குன்றப் புராணஞ் செய்தவர். ஈழம் போய் யானைக் கன்றும் வளநாடும் பெற்றவர். கண்டசுத்தி பாடுபவர். இவர் பெண்ணின் குமாரர்தான் முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார். இவர் பரம்பரையோரிருக்கிறார்கள்.

## 485. முத்தாலங்குறிச்சிக் கந்தசாமிப் புலவர்

இவர் சைவர். இவருடைய ஊர் பாண்டிநாட்டில் தாம்பிரபன்னி நதிக்கரையிலுள்ளதாகிய முத்தாலங் குறிச்சியென்பது. இவர் ஈழுவ மரபினர்; முருகக் கடவுளை வழிபடுதலையே இயல்பாகவுடையவர்; சிறந்த வாக்கி. முதலில் வறுமையால் மிகுந்த துன் புற்று, கீழக் கரையிலிருந்த சீதக்காதியையடைந்து அவர்மீது 'நொண்டி நாடகம்' ஒன்று பாடிச் சிறந்த பரிசிலும் யானைக்கன்றும் வளநாடும் அவர்கொடுக்கப் பெற்று வாழ்ந்தவர். ஒரு சமயத்தில் இரண்டுகண்களும் தெரியாமற்போகத் திருச்செந்தூர் முருகக் கடவுள் மீது பல சிருங்காரக் கீர்த்தனங்கள் பாடி, அவருடைய கட்டளையின்படி 'திருச்செந்தூர் நொண்டி நாடகம்' ஒன்றும் பாடி அக்குருடு நீங்கப்பெற்றனர். 'பாஞ்சாலங் குறிச்சியிலிருந்த கட்ட ' பொம்ம நாயகரென்னும் பிரபுவுக்கும் இவருக்கும் மிகுந்த சிநேகமுண்டுஎன்றும், அவரால் மிக்க பரிசில் பெற்றவரென்றுங் கூறுவர். பின்னொரு காலத்தில் திருவாங்கூரிலிருந்து அரசு புரிந்துவந்த மார்த்தாண்ட வர்ம குலசேகர ராமராஜ மஹாராஜாவவர்களால் அன்புடனழைக்கப் பெற்றுத் 'திருவனந்தபுர நொண்டி நாடகம் என்னும் பிரபந்த மொன்று பாடி அவரால் தாம் மிகுந்த பரிசில் பெற்ற தன்றித் திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய சுவாமியாலயத் திலும் அவரைக் கொண்டு சில திருப்பணிகள் செய் வித்தனர்; இவர் செய்த தனிப்பாடல்கள் பலவென்று தெரிகின்றது.

சீதக்காதி நொண்டி நாடகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருவனந்தபுரம் நொண்டி நாடகம் என்ற மூன்று பிரபந்தங்களையன்றி இவர் செய்ததாக வேறொரு பிரபந்தமும் கேள்வி.

கீழக்கரைச் சீதக்காதி மரக்காயரும் பாஞ் சாலங் குறிச்சி கட்டப் பொம்மநாயக்கரும் திருவாங்கூர்

மார்த்தாண்டவர்ம குலசேகரராம ராஜமஹாராஜாவும் இவரை ஆதரித்த பிரபுக்களென்று தெரிகின்றமையால் இவர்கள் அவர்கள் காலத்தினரென்பது சொல்லாமலே விளங்குகின்றது. சீதக்காதியைச் செய்தக்காதி என்றும் சொல்லுகின்றனர்.

முருகக் கடவுளையே வழிபட்டு வந்தவரென்று தெரிதலால் இவருடைய மதம் சைவமென்றே சொல்ல வேண்டி இருக்கிறது. அவருடைய சரித்திரம், சென்ற பார்த்திவ வருஷத்தில் பாளையங் கோட்டையில் சிந்தாமணி யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டுள்ள திருச்செந்தூர் நொண்டி நாடகத்தின் முதலில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

## 486. முத்துக் கிருஷ்ண பிரஹ்மம்

இவர் திருமூலர் மரபிலுள்ள முத்துராமப் பிரஹ்மத்தின் மருகரும் இளவரசுமாக இருந்தவர். 'நிஷ்டானுபூதி'யின் உரையாசிரியர்.

## 487. முத்துசாமிக் கவிராயர் (காரைக்கால்)

இவர் பிள்ளையவர்கள் இயற்றிய அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியவர்களுள் ஒருவர். இவர் அச் சிறப்புப்பாயிரத்தில் பிள்ளையவர்களை,

> ''போராட்டச் செயலுணரா மீனாட்சி
> சுந்தரனாம் புலவன்''

என்று பாராட்டியுள்ளார்.

## 488. முத்து மாணிக்கக்கவிராயர்

கவிராயர் புளியங்குடியில் (பார்த்தனூர்அஞ்சல்: மானாமதுரைத் தாலுகா) இருப்பவர். இவ்வூர் முதல்

சரவணக் கவிராயருக்குச் சிவகங்கை ஜமீன்தாரால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டமையின் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

### 489. முத்துராமக் கவிராயர்

இவருடைய ஊர் திருப்போரூருக்கு வடக்கே ஆறு மைலிலுள்ள கோவளம் என்பது. இவ்வூர் ஒரு துறைக் கோவையில் 'சென்றத்தை" என்னும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இவர் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவர். பெட்டுராஜா இராமச்சந்திர கவிராஜருடைய மாணாக்கர். இவருடைய தமையனாருள் ஒருவராகிய சண்முக முதலியார் பெரிய கோர்ட்டில் துபாஷியாயிருந்தவர். இவர் செய்த தனிப்பாடல்கள் பல. நூல்கள்: பாரத கீர்த்தனம்; திருத்தணிகை நொண்டி. இன்னும் இவராற் பாடப்பட்ட வசைச் செய்யுள் பல. இவருடைய மாணாக்கர் பலர். இவர் வேளாளர் (கொடிக்கால் வேளாளர்.) வண்ணம் பாடுதலில் சமர்த்தர்.

மதியணிவ ராகிபுவ னேஸ்வரித்ரி கோணிசிவ
வடிவடிமையான துல்யம்
வனச கலை வாணிபீ டஞ்சந்த வண்ணப்ர
வாகமுயர் ஞான ரத்னம்
மந்த்ர சாஸ்த்ர ப்ரசித் தங்கியானசங்கீத
வாகசுக ரத்னாகரம்
மதுரத் தமிழ்க்கடற் குடித்துநற் கவிதையெனும்
மதமழைபெயுஞ் சிந்துரம்
விதியாக வேலன்மேல் முந்நூறு கீர்த்தனம்
விருப்புட னளித்த வுரவோன்
விமரிமே னானூறு கீர்த்தனைகள் ஞானநய
மேவப் புகன்ற துல்யன்
மெச்சுபா ரதமெலாங் கீர்த்தனைக ளாகவே
வீரதுவ சங்கட்டினோன்
வித்வஜனர் புகழ்முத்து ராமகவி ராஜவில்
விஜயன்வர விட்ட நிருபம்
முதிரிரவில் வந்தவர னுக்களறி விட்டநென்
முளைவாரி யமுத ளித்தோன்

முறையாகச் சோதிக்க வந்தவர்க்கெலாஞ் சூலி
துகிலன்னமும் படைத்தோன்
மொழி வண்ண மொன்றுக்கு நாகமணி தந்திந்த
முச்சகமு மிலகு புகழோன்
முந்திகவி வாணனுக் காகதன் தம்பிமணி
முடிதுணிபடக் கொடுத்தோன்
சதிர்கொள்கோ வைக்குநா னூறுபொற் கனியீந்து
சந்ததமு நெஞ்சு வந்தோன்
தம்பியி னுயிர்போ யிருக்க வரு வாணனொடு
தன் குறைசொ லாம லுண்டோன்
தக்க வினை யலவெனத் தண்ணருள்கொள் முருகப்ப
தனபதி தவத்தில் வந்த
தலவிதல சுதலநல் லதலபா தலமுமந்
தரமுநிறை கீர்த்தி கொண்ட
நதிகுலசி காமணி மணக்குவளை மாலையணி
நாயகன் சாந்தமுதல்வன்
நயமதுர பாஷணன் நவரசகு ணாகரன்
ஞான விற்பன விசேடன்
நலனுற்ற வளனோங்கி மேவுசீர்க் கொன்றை நன்
னகரி லமை வுற்றசெல்வன்
நானிலந் துதிசெயுஞ் சிங்கார வேலு நன்
னர்பதி யெதிர்ந்து காண்க
புதுமையாம் பாரதக் கீர்த்தனைக் குதவியருள்
புரிகுவோ ரிந்த சென்னைப்
புரியிலொரு வருமில்லை கீழ்த்திசை யினுமில்லை
பொங்கு தென் னாட்டிலுமிலை
போயின்மேற் றிசையினு மில்லைவட திசைநோக்கிப்
போயினுங் கேட் போரிலை
பொன்னாடு தனிலுமிலை யிதையெந்த வுத்தமன்
பூர்த்தியாக் குவ னென்னவே
அதிகதுய ருடனலை கடற்றுரும்பா யென்
னகமெலி வுறும் போதிலே
யைந்தருவை நிகரெனத் தோன்றியென் மெலிவினை
யகற்றியாதரவு செய்து
அன்றுவிது ரன்சிறுத் தொண்டனிரு வர்க்கிடு
மமுதமிணை யல்லவெனவே
அமுதமிட் டடவான் பொருடந்து காத்தருள்
நின்சமு கத்தை நாடி

யிதவாக கட்டளைப்படியங்கு வரவெனக்
கிப்பொழுது சம்பவித்த
விடரினால் வரவில்லை யவ்விடரை யுன்மனதி
லெண்ணியென் மீதி லிப்போ
தெள்ளளவு மாயாச மில்லாமல் மகிழ்வுட
னெனையங்கு வருவித்துநீ
இன்பமாய்க் கீர்த்தனைகள் கேட்டுநற் பரிசெனக்
கீந்துபுகழ் பெறவேண் டுமே.

### சீட்டுக்கவி

வடித்ததமிழ்க் கரசான முருகப்பா
பாரதத்தை வாயினாலே
நடத்திவெகு சீர்த்திபெற்றாய் மேலுமந்த
மாயனைப்போ னண்ணுமேனி
யெடுத்த வொரு பார்ப்பானை யிரவுபகல்
உள்ளங்கால் எலும்பு தோன்ற
நடத்துவதி லென்னபல னில்லையெனி
லெப்பலனு நண்ணு வாயே.

பத்தியுட னரிச்சந்த்ரன் சொன்ன மொழி
காக்கத்தான் பறையன் வீட்டிற்
கொத்தடிமை யாயிருந்தான் மனைவி மறை
யவனிடத்திற் குறுகி நின்றாள்
சத்தியந்தப் பியமனிதன் றான்பறைய
னின்மொழியைத் தவற வேண்டா
மெத்திசையும் புகழருணா சலமென்னும்
பெயர்மேவு மினிய மாலே.

### சீட்டுக்கவி

சதிர்பெருகு செந்தமிழ்க் கவிராஜ ராஜர் நிறை
தவவாதி புரிவடிவுடைத்
தாயடிமை யர்முத்து ராமனெனு மெய்ஞ்ஞான
ஜனகனெழு துங்காயிதம்
தங்குசெங் குவ்ளையான் பகீரதி குலத்தினான்
தஞ்சைவாழ் செங்கோ லினான்
தவமுற்ற வருளப்ப னருள்சுத்த துரைமுத்து
சாமியெதிர் கொண்டு காண்க

அதிவிரைவி லிக்காயி தங்கொண்டங் கோடிவரு
மாஞ்சியப் பவனென் றனை
யடுத்தவன் மேலுமிக நல்லவன் சன்மார்க்க
னவனுமோ ரனுவலாக
அன்பர்க ளுடன்திருப் போரூர் தனக்கேகி
யவணிங்கி வருபா தையில்
அவ்லூர்க் கிவன்போகு முன்போனசில துஷ்டர்
அணுகி வீணாகவிவனை

யெதிரிட்டு நேர்ந்தபடி வைதடித்தே கொல்ல
வெண்ணமிட் டார் களிந்த
வேளையுடன் வந்தவர்க ளஞ்சுபேர் தடியரீ
ரெட்டுபேர் தொடர்ந்த வர்களால்
இவர் வெல்ல மாட்டாமல் வாணியன் சத்திரத்
தெதிர்நின்று கூச்ச லிட்டார்
ஏனென்று சிலர்கூடி னாரதைக் காணவே
எதிரிகள் பதுங்கி னாரப்

பதிதர்க ளிருப்பதோ ராயபுர நீயிவன்
பங்கில் குல தெய்வ மாகப்
பக்ஷமொடு போலீசு கில்லிதுரை யொடுசொல்லி
பக்குவ மாய்ப்பிராது
பண்ணிவைத்தே சாக்ஷி நன்றாய் விசாரித்துப்
பக்ஷபாதக மிலாமற்
பண்டருக் கேத்ததண் டனைசெயச் செய்து நற்
பாரின்மிசை சீர் பெறுவையே!

**சீட்டுக்கவி (24 சீர் ஆசிரிய விருத்தம்)**

இக்குசர்க் கரையமுத மெனமுத் தமிழ்க்கவி
யியம்பும் பிரசண்ட வாக்யன்
இமசேது பரியந்த மிசைபெற்ற கவிமுத்து
ராமனெழு தினிது நிருபம்
இலகியநெ ரும்பூரில் வாழ்நல்ல தம்பிமா
லின்றசற் புத்ரனான
இங்கிதமி குந்தவெங் கடராம மதிமந்த்ரி
யெட்டடி யெதிர்ந்து காண்க

பக்குவம தாகமா பாரதக் கீர்த்தனம்
பாடமன தாயிரண்டு
பருவங்கள் பாடினோன் மற்றுமுள பதினாறு
பருவங்களிந்த சென்னப்
பட்டினந் தனிற்பாடி முடிந்திடாதேதெனிற்
பாத்திர மறிந்தோர்களிற்
பாக்யவந் தர்களில்லை யாகையாற் சீரங்க
பட்டினந் தன்னை யாளும்

சக்ரபதி நீதிபதி யாதுபதி சதுரங்க
தளபதி மகாவகண்ட
சாம்ராஜ்ய பதிமாது பதியளகை யாண்டிடும்
தனபதி பிரகாச தவள
சத்ரபதி மகபதி நராதிபதி சண்ட தோர்த்
தண்ட சங்க்ராம சிம்மா
ஜனபதி கஜேந்திரபதி கர்த்தரக மகிழுஞ்
சமஸ்தான மந்த்ரி யென்னும்

விக்ரமன் செங்கோலி ராமசாமிப் பிரமுக
வேளான வுனது தந்தை
வேணுமென் றாலிப்ர பந்தமு முடியுமவ்
வேந்துதவியுங் கிடைக்கும்
விருதுபல வுங்கிடைத்•திடுமாகை யாலுனது
மித்திரற்கும் மவர்க்கும்
மேன்மையா மென்செய லெலாங் காகி தங்களில்
விரைந்தெழுதிவிட வேண்டுமே.

(அறுசீர் விருத்தம்)

பொன்போலு மிலங்குபல தெய்வங்க
டமிலாதி புரியின் வாழ்வே
யுன்போலு மசைவில்கருங் கல்லுமில்லை
பயனளித்த வுயிர்க டம்மில்
என்போலும் பாவியில்லை யறிந்திருந்தும்
அந்தோயா னின்ன மேனோ
மின்போலு மருங்குலுற்ற வடிவேநின்
புகழ்பாட வியக்கின் றேனே

கலையின்மே னடம்புரிந்து கற்றவர்க
ளகத்துறைந்து கவினார் வெள்ளி
மலையின்மே லரசிருக்கு மாதவஞ்சே
ராதிபுரி வடிவே: கொல்லன்

உலையின்மே லுறுமெழுகா வுள்ளுருக்கொ
டும்பிணியா லுலையு மென்றன்
றலையின்மேற் பெருவெள்ள மோடிப்பின்
போவருள்வாய் சாற்று வாயே.

முதலையையன் றடர்த்தானை முன்வருமா
யனுமயனு முழக்க மார்ப்பப்
பதலையைவி டாதடர்ந்த பத்திரகா
ளிக்கெதிரம் பலத்தா டுங்கண்
ணுதலையையா றணிப்பொருளை நோக்கிமகிழ்
வடிவனையே நோயா லென்றன்
மதலையையிப் படிவருத்தல் மாட்சிமையோ
நின்றனக்கு வழுத்து வாயே.

அட்டைக்கேன் மணிமந்த்ர முருகனுக்கேன்
சூர்வாளி யலம்பி டும்பீக்
குட்டைக்கேன் பொற்படிகள் குருடனுக்கேன்
கண்ணாடி கொள்ளுங் கள்ளிப்
பட்டைக்கேன் சம்பாரம் படுபாவி
முருகனெனும் பழந்து டைப்பக்
கட்டைக்கே னூர்விருந்து புலவீர்கா
ணீங்களிது கழறு வீரே.

(குறிப்பு: இது மட்டும் அச்சாகியுள்ளது)

**கலித்துறை**

ஈட்டுக் கொவ் வாப்பற நாய்ச்சிங்கந் தன்னையெதிர்த்ததுபோ
னாட்டுக்க சத்தி யனாமெனுஞ்செங்கல்வ ராயனென்னைக்
கோட்டுக்க ழைக்கவந் தானவ னங்கங் கொளுத்தசுடு
காட்டுக்க ழைப்பதென் றோவொற்றி வாழுங் கயற்கண்ணியே!

**வசை கவி**

(14 சீர் விருத்தம்)

வறிபட்டமூதேவி முன்முகத் தினிலாட
மடிசுளகு முதுகி லாட
மாற்றலர் செருப்பெலாங் கன்னத்தி லாடவவர்
மந்த்ரவடி வாளி னாலே

தறிபட்ட தலையாட நீர்க்குடம் போல்வயிறு
தளதளன் றாட வாவி
தள்ளாட மனையவள் துடித்தாட எமதூதர்
தாவி வாதாட வாகாக்
குறிபட்ட வெம்பாடை மீதுடற் றிண்டாட
கொடியசாப் பறைகளாடக்
கூடிகா கங்களாடப்பேய்கள் தசையுணக்
குறுகி தாண்டவ மாடவே
செறிபட்ட கட்டைமேற் றீப்பொறிக ளாடவிரு
செந் தீயி லாடியுருளே.
தீதுற்ற முனிநாத மாதுஷ்ட லோபியே
செந்தீயி லாடி யுருளே.

**சீட்டுக்கவி**

(நாதமுனி முதலியாருக்கு)

மாதுவளர் கொன்றையுறை சிங்கார வேலு ஸ்ரீ
மன்மகா மண்ட லேச
வரபால நதிகுலோத் துங்க கனமுற்ற மதி
மந்த்ரியே யொன்று கேண்மோ
ஓதுநின் விடைகொண்டு தண்டலஞ் சேர்ந்தபின்
பொருவிதப் பட்டு நோயுற்
றுண்ணும்படிக் கிருக் கின்றதா யினுமுற்று
மொழியவலைமேலு நின்னைக்
காதலாய்க் காண்பனே லிவ்வினையு நீங்குமென்
கலிநீங்கு மற்று முள்ள
கவலை யெல்லா நீங்கவென்று தெய்வங்கடைக்
கண்பார்க்கு மோவறிகிலேன்,
போதமுறு மிந்தமா ணாக்கன் வசம்பத்துப்
பொன்னுமொரு ஜோடி சோமன்
பொற்சரிகை யிட்டதாய் வரவிடுவை யேலிசை
பொருந்து முலகுள;மட்டுமே.

குறிப்பு: இவர் கொண்ணூர் முருகப்ப முதலியார் மகன் டம்பாசாரி அருணாசல முதலியாருடைய தம்பி.

தண்டமிழ்க் கவியமுத சாகர நாற்கவி
தழைத்துவளர் தாருவீர
சைவசித் தாந்தகுரு பீடமுயர் சங்கீத
சாம்ராஜ்ய கோலா கலம்
சங்கநிதி பத்மநிதி யொத்தலெட் சணிவசிய
சாநித்ய புருஷ மேரு

ஸ்தம்பனத் தோடிந்த்ர காருட மாமந்த்ர
சாஸ்த்ர வவதான புஞ்சம்
அண்டபர மேட்டி சிர்ஷ்டிக்கு முருவொன்றுபோ
லாயிர மியற்று கொண்டல்
அருள்ஞான நிக்ஷேபம் வன்மூடர் நெஞ்சிரு
ளகற்றுமார்த் தாண்ட பிம்பம்

அயிற்கொண்ட சண்முகக் கடவுளடி யார்களுக்
கடிமை செயு மடியவர்க்கும்
அடிமையாங் கவிமூத்து ராமனிரு செங்கையா
லன்புபூண் டெழுது நிருபம்
மண்டலேஸ் வரனக்கிர கண்ணியனுத் தண்டபுய
மந்தரன் தளதந் திரன்
மலர்மாது கலைமாது வளர்சபா பூஷணன்
மதுரநவ ரசபாஷணன்
மதகண்ட வுக்ரகோ தண்ட தீட்சிதர் குரு
வசந்த பஞ் சாஸ்திர மதனன்
வைபோக சாம்ராஜ்ய வாகண்ட லானித்திய
மங்களகல் யாண போஜன்
எண்டிசை விளங்காரை யூர்க்கொடைக் கன்னன் மண
மேய்குவளை யணி விற்பனன்
இசைவீர பத்ரனருள் சத்திரபதி முத்துகிருஷ்
ணேந்திர னெதிர்ந்து காண்க
இனியகவி சொல்லிப்பரி சேந்துவோ மல்ல
நாமிறைவ னே நின் குணத்தின்
இயல்கேள்வி யானதால் கண்டுசம் பாஷிக்க
விச்சை கொண்டோம் வரற்கே
முதிர்தமிழ்க் குதவாமல் வேசையர்க் குதவுவோர்
முன்கையை யறுக்கும் வடிவாள்
முன்கண் டிருந்து மறியார்போ லிருப்போர் கண்
முழிதனைக் கிளறு மம்பு
முறை தெரிந் தஞ்சலி புரிந்திடாப் புல்லர்
முடி பிளக் குங்குடாரம்
முந்தி கற் றவர்கண்மு னெட்டி வாரார்கள் கால்
முறித்திடும் வச்சிர தண்டம்
எதிரிட்டு மூர்க்கமாய்ப் பேசுஜண்டி கணாவி
லேறவிடு வுக்ர சூலம்
இவ்வேளை சமயமிலை நாளைவா வென்போர்க
ளீரலைத் திருகும் வங்கியம்

என்னய முமறியா வுலுத்தருட லங்களை
யிரண்டுபிள வாக்கு மயில்வேல்
இதமோர்ந்து தம்பிதஞ் செய்யாகு லாமர்பிட
ரியீலேற்று முய ரங்குசம்
கதிதங்கு பூச்சக்கிர வாளமெல் லாஞ்சட்டைக்
கட்டிப் பறந்துலவநற்
கவிதைபுக லற்புதப் பிரசண்ட வாக்கியன் சகல
கலை வினாவிய ஞாபகன்
கருணைவடி வன்னையின் வரப்ரசா தன்தவள
கமலமலர் வாணி பீடம்
கல்விமத யானையெனு முத்துராம ப்ரபல
கவிராஜ னெழுது நிருபம்:
சதிர்கொண்ட சிற்றேரி மேவுபகி ரதிகுல
சாம்ப்ரதா யப்ரதாப
சரசம்ருது வசனசற் சனசபா ரஞ்சிதவி
சாலசம் பூர்ணசுகம
தனலலித அருணைகிரி யெனும் விஜய விக்ரம
தனஞ்செய னுகந்து காண்க
தகுமெனது பாமாலை யைப்புனைந் தணிவரிசை
தந்து புகழ்பெற வேண்டுமே.

(வேறு)

மேவிதத்தி யென்மனைவி பெண்குழந்தை
பெற்றனளவ் வேதை தீர்த்த
நாவிதத்தி யுடைதரு வண்ணாத்திசோ
றாக்கு மம்மைநலங் கொளிந்த
மூவிதத்தி னேர்ந்தவொரு கடன்றவா
யொன்னார்கண் முடிகள் சிந்தத்
தாவிதத்தி வரும்பரியா * **தஞ்சை முத்து
சாமிமன்னா** சார்பு ளாயே.

* இவர் போலிஸில் துவி பாஷியாக விருந்தவர்.

## 490. முத்துராமலிங்க சேதுபதி

இப்பெயருள்ள சேதுபதிகள் இராமநாத புரத்தில் சிலருண்டு. **நீதிபோத வெண்பாவென** ஒருநூல் இவரால் இயற்றப்பட்டுள்ளது.

## 491. முத்துவீர வாத்தியார்

இவர் சென்ற நூற்றாண்டில் உறையூரிலிருந்த விசுவகுல திலகர். **முத்துவீரியம்** என்ற இலக்கண நூல் இவரால் இயற்றப் பெற்றது. அந்நூல் சூத்திரங்களாலாகியது. இவர் பூரண ஆயுள் உடையவராயிருந்தனர். குடும்பத்தாரால் பாதுகாக்க முடியாத நிலைமையில் இவர் இருந்ததைக் கண்டு மனமிரங்கி உணவு முதலியவற்றைப் பற்றி இவருக்கு யாதொரு கவலையும் இல்லாதபடி இவருடைய மாணாக்கர்களில் ஒருவரும் அக்காலத்தில் இஞ்சினீயரராய் இருந்தவருமாகிய ஸ்ரீசுப்பராயாசாரியா ரென்பவர் மாதமொன்றுக்கு ரூபாய் 30 விகிதம் உதவி செய்து இவரைப் பாதுகாத்து வந்தனர்.

## 492. முதுகந்திடல் சண்டமாருதக் கவிராயர்

முதுகந்திடல் மதுரைக்குக் கிழக்கே முத்தனேந்தலுக்கு மேற்கே 3 மைலிலுள்ளது. இன்றைக்கு 250 வருடத்திற்கு முன்பிருந்தவர் இவர்.

இவர் செய்த நூல்கள்:

1. திருப்பூவணநாதர் வண்ணம் 2. பாரத வண்ணம். இந்நூலின் இறுதியில் சிறப்புக் கவியுண்டு.

## 493. முதுகுளத்தூர் ஆறுமுகம் பிள்ளை

இவரியற்றிய நூல்களாவன:

1. திருவிளையாடற் புராண வண்ணம்
2. அரிச்சந்திர புராண வண்ணம்.
3, நவப்பிரபந்தம்.

## 494. முதுகுளத்தூர் சரவணைப் பெருமாள் கவிராயர் (பேரர்)

இவர் திருவாவடுதுறை ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரவர்களிடத்துப் பாடங்கேட்டவர். துவாத்திரிம் சாவ

தானி முத்துராமலிங்க சேதுபதியவர்கள் காலத்தில் சமஸ்தான வித்துவானாக இருந்தவர். இவர் காலத்தில் இராமநாபுரத்திலிருந்த வித்துவான்கள், அஷ்டாவதானி கிருஷ்ணையங்காரும், முத்துவீரப் பிள்ளையும், தேவி பட்டணம் முத்துச்சாமி பிள்ளையும், கிருஷ்ண ரெட்டியாரும் ஆவர், இராமநாதபுரம் சிவஸ்வாமித் தேவர்மீது விறலிவிடுதூது செய்தவர் இவரே.

இவர் செய்த வேறுநூல்கள்:

1. மதுரைச் சிலேடை வெண்பா
2. குன்றக்குடிச் சிலேடை வெண்பா
3. பழனிச் சிலேடை வெண்பா
4. கந்த வருக்கச் சந்த வெண்பா
5. புவனேந்திர னம்மானை
6. புவனேந்திர நாடகம்
7. இராமாயண வண்ணம்
8. நாட்டரசன் கோட்டைக் கண்ணுடையம்மை யமக அந்தாதி
9. திருச்சுழிகைப் பூமி நாதேசுரர் மீது ஓரெழுத்தந்தாதி.

இன்னும் இவராற் பாடப்பட்ட ஓரெழுத்தந் தாதிகளும் யமகமுந் திரிபுமாகிய அந்தாதிகளும் பல. திருட்டுக்கும்மி பாடிய அஷ்டாவதானம் வேலாயுதக் கவிராயர் இவர் மைத்துனர். இவரும் வேலாயுதக் கவிராயரும் இராமநாதபுரத்தில் பருவத வர்த்தினி நாச்சியாரவர்களாகிய இராணி நாச்சியாரவர்கள் அரசு புரியுங்காலத்தில் மானேசர் வேலை பார்த்து வந்த கோட்டைச் சாமித் தேவரவர்கள் நவராத்திரியில் மற்றைய வித்துவான்களைப் போலச் சமத்தி கொடுத்துப் பூரணஞ் செய்யச் சொல்லச் சமஸ்தான வித்வான்களாகிய நாங்கள் பரீக்ஷகர்களின் வரிசையினிற்ற லொழிந்து இங்ஙனம் பாடோமென்று சொல்ல மேற்குறித்த தேவரவர்கள் பாடவே வேண்டுமென்று வற்புறுத்திய பொழுது,

கற்ற புலவோர் கலியிருளை மாற்றியிசை
பெற்றபுகழ்க் கோட்டைமன்னா பேசக்கேள்—சிற்றறிவை
யெங்கே படித்தாய் எவருனக்குப் புத்திசொன்னார்
துங்காநீ வாழ்ந்ததுபோ தும்.

என்னும் வெண்பாவைத் தம்முடைய மைத்துனராகிய வேலாயுதக் கவிராயராற் பாடுவித்தனர். இடைக் காட்டூர்ப் பாதிரியாரால் சிவகங்கையில் இருந்த ஒரு ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்தனர்.

**கட்டளைக் கலித்துறை**

வேலையில் வேல்விட்ட வேள்சோம சுந்தர வேந்தன்வெற்பில்
காலையிற் செவ்வந்தி மாலைகண் டேன்றென்னங் காயின்கரும்
பாலையின் சுண்டலில் வேலவன் றாரமு மாலைப்பெண்ணின்
மூலமுங் கண்டனன் மக்கள் படுக்கையென் முன்வைக்கவே.

1. தேங்காய் வள்ளிக் கிழங்கு
2. சர்க்கரை வள்ளிக் கிழங்கு
3. பள்ளி.

## 495. முதுகுளத்தூர் சொஸ்திகைப் புலவர்

இவர் செய்த நூல் **வீரசூர புராணம்.**

**ஒரு பாடல்**

மருக்கரையா வனசமலர்த் திருவே மானே
மாங்குயிலே தீங்கரும்பா வடித்த சீனிச்
சருக்கரையே கற்கண்டே தேனே நான்செய்
தவமேமெய்த் தவப்பயனே:தனியாய் நீயும்
தெருக்கரையில் விறகு விற்றுத் திரிவ தென்கொல்
செப்புகென நானுமது செப்பக் கேட்டே
உருக்கரைய உயிர்கரைய வெய்து யிர்த்தே
ஒண்டொடியும் விழுந்தழுதே யுரைப்ப தானாள்.

## 496. முதுகுளத்தூர்ப் பிச்சைப் புலவர்

சாதியிற் சிரஞ்சீவி. சிறந்தவாக்கி. இவர் செய்த பிரபந்தம்:

1. பெருநாழி வில்லியணைத் தேவர் பள்ளு
2. குளந்தை முருகர் பதிகம்.

## 497. முதுகுளத்தூர் பொன்னம்பலப் புலவர்

இவர் சரவணப் பெருமாள் கவிராயர் பரம்பரை. இவர் செய்த பாடல் ஒன்று:

பொன்னிரு வேற்கைக் குமரகுட்
டிநீயும் புலவனெனில்
என்னிரு கைக்கு மரக்கிட்டி
வீழ்ந்த தினியுனது
பன்னிரு கைக்கு மறக்கிட்டி
வீழ்ந்து படுவைபின்புன்
மின்னிரு வர்க்குங் கழுத்திடு
நாணிற்று வீழ்ந்திடுமே.

## 498. முருகவேள்

''விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும்'' என்னும் செய்யுளால் பொய்யா மொழியாரைப் புகழ்ந்தார். இவர் வேட வடிவம் கொண்டு வழிப்பறி செய்யத் தொடங்கி, அவர் உன் பெயர் என்ன என்று கேட்ப முட்டையென்று கூறி அவர் ''பொன்போலும்'' என்னும் வெண்பாவாற் புகழ் பெற்றார். இவர் வேட வடிவம் கொண்ட இடம் தஞ்சாவூருக்கு வடக்கே உள்ளது என்பர். இச்சரித்திரம் அருணகிரியார் புராணத்துள்ளது.

## 499. முல்லா ஸாகிப்

இவர் நயினார் கோயில் ஸ்வாமி மேற்பாடிய பாட்டு;

ஆரோ நயினாரென் றம்புவியெல் லாந்திரிந்தேன்
நீரோ நயினார் நிசங்கண்டேன்—போரேனும்
முல்லாவின் பெண்பார்ப்ப மேடந் திறந்து வைத்த
அல்லாவு நீரா கையால்.

## 500. முனைய தரையன்

இவர் ஒரு பிரபு. "இன்றுவரில்", "குழுகுலப்பனை" என்று இரண்டு செய்யுட்கள் வழங்குகின்றன. இவர் பெயரால். 'முனைய தரையன் பொங்கல்' எனப் பொங்கல், திருக்கண்ண மங்கையில் சவுரிராயப் பெருமானாருக்கு நிவேதனஞ் செய்யப்பட்டு வருகிறது. (சோழமண். 39.)

திருக்கண்ணபுரம் சவுரிராசப் பெருமாள் கோயிலில் கீழைப் பிராகாரத்தில் வாயிலுக்குத் தென்புறமாக மேற்குப் பார்க்க முனைய தரையன் பிள்ளை விக்கிரகமுள்ள கோயிலொன்றுண்டு. பெருமாள் எழுந்தருளுகிற காலந்தோறும் இந்தவிக்கிரகத்திற்குஸ்ரீசடகோபம் சாதிப்பதும், அபிஷேக காலங்களில் முறைக்காரியாகிய தாஸி இந்த விக்கிரத்திற்கு அபிஷேகஞ் செய்வதும் வழக்கம். இதற்கு உற்சவ விக்கிரகமில்லை. இவர் வைத்திருந்த தாஸியின் கோயில் இவர் கோயிலுக்கு வடமேற்கிலிருக்கும் ஒருமண்டபத்திலிருக்கிறது. இந்த விக்கிரத்திற்கு அபிஷேகம் மட்டும் உண்டு. சடகோபமில்லை.

## 501. மேகவர்ணப் புலவர்

இவர் 'மருதூர்ச் சிவராத்திரி நாடக' மென்று ஒரு நூல் செய்திருக்கிறார். இந்நூல் மிதிலைப்பட்டியிலுள்ளது.

## 502. மேலகரம் திரிகூடப் பண்டாரக் கவிராயர்

இவர் திரிகூட ராசப்பக் கவிராயருடைய புதல்வர்; இவர் செய்த நூல் **தென்காசி விசுவேசருலா.** இவர் செய்த நூல் வேறொன்றுந் தெரியவில்லை. இவர் 70 வயது வரை இருந்ததாகக் கேள்வி.

## 503. மேலகரம் வைத்தியலிங்கக் கவிராயர்

இவர் மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராய ருடைய பிள்ளை. இவர் சகோதரர் சிவஞானக் கவி ராயர். இவர் 75 வயது வரை வாழ்ந்து வந்தார்.

## 504. மேலை ஆய்குடி கணக்குப் பிள்ளை

மேலை ஆய்குடி பரம்பக் குடிக்குச் சமீபத்தி லுள்ளது. இவர் பாண்டி வேளாளர். மதம் சைவம். இவர் கொடும்பாளூர் முருகக் கடவுள் மீது ஆனந்தக் களிப்பொன்று செய்திருக்கிறார். வாக்கு நல்லதன்று.

## 505. மேலை வீரராகவபுரம் சங்கரன் பிள்ளை

இவ்வூர் திருநெல்வேலியைச் சார்ந்தது. இவர் 'தாம்பிரபன்னி மஹாத்மியம்' என்னும் தமிழ் நூலாசிரியர்.

## 506. மோசுகுடி குப்பண்ணைப் புலவர்

இவ்வூர் பார்த்திபனூர்க்குத் தெற்கே 4 மைலி லுள்ளது. இவர் செய்த நூல்களுள் **சாத்துடையான் பள்ளு** என்பது ஒன்று; மிகச் சிறந்தது; இதைக் கேட்ட பாட்டுடைத்தலைவர் கிஸ்திப் பணத்தைக் கொடுத்து விட்டுத் தண்டனைப் பட்டாரென்பர்; இன்றைக்கு 200 வருடத்திற்கு முன்பிருந்தவர்.

## 507. மௌனம் சிதம்பரநாத முனிவர்

பழைய **உறையூர்ப் புராணஞ்** செய்வித்தவர். திருச் சிராப்பள்ளித் தாயுமானவர் கோயிற் கட்டளை விசார ணைக் கருத்தரான மௌனச் சிதம்பரநாத முனிவர் என்பவர் மீது செய்யப்பட்டதோர் பிரபந்தம் இரட்டை மணிமாலை; ஆக்கியோர் பெயர் தெரியவில்லை.

## 508. யமனேச்சுரம் தண்டியப்ப முதலியார்

இவ்வூர் பரமகுடிக்கு வடக்கேயுள்ள ஊர். இப்புலவர் குறளுக்கு மாறாகக் 'கிறள்' என்று ஒரு நூல் பாடினர்.

1. சிறப்பொடு பூனை: யிறப்பி லிருக்கையில்
புறப்பட மாட்டா தெலி.

2. "அந்திப்பீ சந்திப்பீ பேள தவரைச்
சாமப்பீ தட்டியெழுப் பும்"

3. செடியொன்றிப் பேளாதான் வாழ்க்கை தினமும்
தடிகண்ட நாயொடொக் கும்.

## 509. யாழ்ப்பாணம் சதாசிவ பிள்ளை

இவர் ஆறுமுக நாவலர் மாணாக்கர்; நாவலர் முதலில் பதிப்பித்த நூல்களைப் பின்பு பதிப்பித்தும் அவர் இயற்றிய தர்மங்களைப் பரிபாலனஞ் செய்து கொண்டும் இருந்தவர்.

## 510. யாழ்ப்பாணம் மயில்வாகனப் புலவர்

இவர் வேளாண் மரபினர். 'வையா' என்னும் புலவரது பரம்பரையில் தோன்றியவர். இவருடைய ஆசிரியர் கூழங்கைத் தம்பிரான் என்பவர். இவருடன் கல்வி கற்றவர் வைத்திய லிங்கச் செட்டியார். இவர் இயற்றிய நூல்கள்:

1. புலியூரந்தாதி 2. ஞானாலங்கார ரூப நாடகம். 3. காசி யாத்திரை விளக்கம் 4. யாழ்ப்பாண வைபவ மாலை.

வரதபண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார். அச்செய்யுள்:-

"பரத ராசன்உயர் அசல ராசன்மகள்
பங்கன் அன்புதரு பண்புசேர்
விரத ராசசிவ நிசியின் நீள்சரிதம்
மிகவி ளங்கிட விளம்பினான்

கரத ராசனைய மொழிஅ ரங்கன் அருள்
கருணை மாரிநிகர் பருணிதன்
வரத ராசன்மறை வாண ராசன்மிகு
மதுர 'ஆசுகவி ராசனே."

## 511. வகுளாபரணம் வீரராகவ சுவாமி

தேசிகப் பிரபந்த வியாக்கியானம் செய்தவர்.

## 512. வஞ்சி ராமவர்மர்

இவர் பழைய சரவணப் பெருமாள் கவிராயரால் "இலை நாட்டும் வேல்" என்னும் செய்யுள் பாடித் துதிக்கப் பெற்றவர்.

## 513. வடமலையப்ப பிள்ளை

இவர் வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். காலம் ஏறக்குறைய 290 ஆண்டுகளுக்கு முன் என்று தெரிகிறது. சமயம்-சைவம். "சத்திய வாசகமும் தமிழறி புலனும், புத்திசாதுரியமும் பொலிவுறு நிபுணன்" என்றும், "இரசைப் பதிவளர் இருளப் பனையருள், வரிசைப் பெரியவன் வடமலை யப்பனை" என்றும் புகழப் பெறுவர். மச்சபுராணமும், திருநீடூர்ப் புராணமும் இயற்றினார். திருநெல்வேலியை ஆண்டவர்.

## 514. வண்டானம் முத்துசாமி ஐயர்

குமாரசாமித் தம்பிரானிடம் இவர் படித்துக் கொண்டிருந்தார். இவருடைய ஊர் எட்டயபுரத்தைச் சார்ந்த வண்டானம் என்பது. சூடாமணி நிகண்டிலுள்ள பன்னிரண்டு தொகுதிகளும் இவருக்கு மனப் பாடமுண்டு. சில சிலேடை வெண்பாக்கள், சில அந்தாதிகள் முதலியவற்றை முறையாகப் பாடங் கேட்டவர். இயல்பாகவே தமிழறிவையுடைய குடும்பத்தில் பிறந்தவராகையால் நல்ல தமிழ்ப்பயிற்சியடைந்தார்.

அவர் பிறரிடத்தில் பேசுதல் மிக அருமை. பிறர் சொல்வதையும் முகங்கொடுத்துக்கேளார்; யாரோடும் கலந்து பேசார். எப்பொழுதும் தனியே இருப்பதன்றி மௌனமாகவும் இருப்பார்; அகங்காரத்தினால் அவ்வாறிருந்தவரல்லர். அவருடைய இயல்பே அது. சிலேடையாகப் பேசுவார். அவர் மற்றவர்களோடு பழக விரும்பாதவராதலால் எல்லோரும் உண்ட பின்னரே மடத்தைச் சார்ந்த சத்திரத்தில் அகாலத்தில் வந்து ஆகாரம் செய்து கொள்ளுவார். அவருடைய நிலைமையை உத்தேசித்து எல்லாரும் அவரை "வண்டானம் வந்தது, போயிற்று" என்று அஃறிணையொருமையாகவே வழங்குவார்கள். படித்த கோஷ்டிக்கு அவரிடம் மதிப்பு இல்லை, அவர் உடை அழுக்கு மலிந்திருக்கும்.

இவர் இவ்விதம் பரம சாதுவாகவும், நாகரிகமில்லாதவராகவும் இருத்தலைக் கண்ட மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் இவரிடம் நன்மதிப்பு உண்டாகவில்லை. இவரைக் கண்டால் யாவரும் பரிகாசம் செய்வார்கள். இப்படி ஒருவர் இருப்பது ஸ்ரீசுப்பிரமணிய தேசிகருக்கேனும் பிள்ளையவர்களுக்கேனும் தெரியாது.

எவரேனும் சிலேடையாகப்பேசினால் இவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகும். அப்பொழுது தான் இவர் முகத்தில் சிறிது மலர்ச்சி காணப்படும். இவர் ஏதாவது பேசின் அது சிலேடையாகவே இருக்கும். ஒருநாள் மாணாக்கராகிய தம்பிரான் ஒருவர் இவரைப் பார்த்து "வண்டானம் இப்பொழுது என்ன செய்கிறது?" என்று நகைப்புடன் கேட்டபொழுது இவர் சினமுற்று "நீங்கள் சிவப்புத்தேள்" என்று சிலேடையாகப் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். சிவனாகிய தேவன் (சிவ புத்தேள்) எனவும், சிவப்பு நிறம் பொருந்திய தேள் எனவும் அத்தொடர் இரண்டு பொருள்படும். இவர் வார்த்தையால் யாருக்கும் கோபம்உண்டாகாது. இவ்வாறு இவர் கூறிய சிலேடைகள் அளவிறந்தன.

ஒருநாள் இவரைநோக்கி, "வாரும் இரும் படியும்" என்றபோது "வாரும் இரும்பு அடியுமா?" என்றார் இவர். மற்றொருநாள் ஒருவரை "வேஷ்டியைத் துவைக்கின்றீரோ" என்று கேட்க வந்த இவர் "கலையைச் சிலையில் கலையாமல் தோய்த்துத் தோய்த்துத் துவைக்கிறீரோ" என்றார். வேறொரு நாள் "உண்டு வந்தீரோ" என்று வினவிய பொழுது "உண்டு உவந்தீரோ?" என்று பிரித்துக் கூறிச் சிறிது மகிழ்ச்சி கொண்டார்.

ஒரு நாள் சாப்பாட்டு விடுதியின் சுவரிற் பின் வரும் பாடல் மாக்கல்லால் எழுதப்பட்டிருந்தது.

"இந்தவறச் சாலைதனி லேயிரவும் பகலும்
வந்தவரி முதல்மதிதம் வரைவாங்கிக் கொண்டே
அந்தணருக் கடிசிலிட யாதுமிலை யெனலான்
சுந்தரசுப் பிரமணிய தேவனிடம் சொல்மின்."

அங்கே சென்று உண்டுவந்த ஒரு மாணாக்கர் சுவரில் இச்செய்யுள் எழுதியிருப்பதைக்கண்டு ஞாபகப் படுத்திக் கொண்டு பிற்பகலிற் பிள்ளையவர்கள்பால் பாடங்கேட்பதற்காக வந்திருந்த தம் நண்பர்களிடம் தனித்துச் சொல்லிக் காட்டிக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள், "என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்க அதை அவர்களிடத்தும் சொன்னார். கேட்ட அவர்கள் 'இதனை யார் செய்திருக்கக் கூடும்?" என்று ஐயமுற்று அவ்விடுதியில் உண்பவர்களுள் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு ஆராயத் தொடங்கினார்கள். அப்பொழுது குமாரசாமித் தம்பிரான் "என்னிடம் பாடம் கேட்டு வரும் வண்டானம் எழுதியிருக்கலாம். அது பெரும்பாலும் அகாலத்திலே தான் சென்று உண்ணுவது வழக்கம். தனக்கு ஆகாரம் சரியானபடி கிடைப்பதில்லை யென்று சில சமயங்களில் என்னிடம் சொல்லியிருக்கிறது. அதை விசாரிக்க வேண்டும்" என்றார். "அவரைப் பார்க்கவேண்டும்; இங்கே வருவிக்கலாமே" என்று பிள்ளையவர்கள் சொன்னார்கள்.

உடனிருந்தவர்களுக்கு இவரை எப்படியேனும் கண்டுபிடித்து அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்ற ஊக்கம் உண்டாயிற்று. சிலர் விரைந்து சென்று பல இடங்களில் தேடியும் இவர் அகப்படவில்லை. அப்பால் ஊருக்கு வடபாலுள்ள தோட்டத்தில் ஒரு மரத்தடியில் இவர் ஏதோ யோசனை செய்து கொண்டிருத்தலை அவர்கள் கண்டார்கள். அப்பொழுது பிற்பகல் இரண்டு மணி இருக்கும். கண்டு அழைக்கையில் இவர் விரைவில் எழவில்லை. சென்றவர்கள், 'ஓய்! உமக்கு நல்லகாலம் பிறந்து விட்டது. வாரும். பிள்ளையவர்கள் அழைக்கிறார்கள்'' என்று கூறி இவரைப் பிள்ளையவர்களிடம் அழைத்து வந்தார்கள்.

இவர் யாதுமறியாதவராகி அழைத்தது எதற்காகவோ என்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் இவரை இருக்கச் செய்து, "இந்தப் பாடலைச் செய்தவர் யார்?" என்று அன்புடன் கேட்ட பொழுது இவர் "நான் செய்யவில்லை" என்று கூறி விட்டார். அப்பால் ஒருவரை உண்ணும் விடுதிக்கு அனுப்பி அப்பாடலை யார் எழுதியதென்று விசாரிக்கச் செய்ததில் அப்பாடலின் விஷயத்தையறியாத சமையற்காரர் "ஏதோ ஒரு நாள் வண்டானம் வந்து சிறிது நேரம் நின்று எழுதிக் கொண்டிருந்தது" என்றார். விசாரித்தவர் வந்து அதனைப் பிள்ளையவர்களிடம் சொன்னார். சொன்னவுடன் அவர்கள் இன்னும் இவரை வற்புறுத்திக் கேட்கவே, "சரியாக நடந்து கொள்ளாமற் போனால் பின் என்ன செய்கிறது?" என்றார். குமாரசாமித்தம்பிரான் "அகாலத்தில் போனால் உனக்கு என்ன கிடைக்கும்? உன்னுடைய தவறு அது" என்று சினத்துடன் சொல்லவே, பிள்ளையவர்கள், "சும்மா இருக்க வேண்டும்" என்று கையமர்த்தி விட்டு "இதனால் இவரே இதனைச் செய்தவரென்று தெரிகின்றது. இந்தச் செய்யுளின் நடையைப் பார்க்

கும்பொழுது இதற்குமுன் இவர் பல பாடல்கள் செய்து பழகியிருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. அதைப் பற்றி விசாரிக்க வேண்டும்” என்றார்கள். பின்பு விசாரித்ததில் இவர் தாம் யாதொன்றும் செய்ததிலையென அஞ்சிக் கூறினார். “உமக்குப் பாடுகிற பழக்கம் உண்டென்பதை இப்பாடலே தெரிவிக்கின்றது. செய்திருந்தால் சொல்லும்” என்று பின்னும் பிள்ளையவர்கள் முதுகைத் தட்டிக்கொடுத்து வற்புறுத்திக் கேட்டார்கள். அப்போது தாம் முன்னமே செய்திருந்தவற்றுள் சாதாரணமான சில பாடல்களை ஒன்றன்பின் ஒன்றாக இவர் சொல்ல ஆரம்பித்தார். கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அப்பால் சிறிது ஊக்கமுற்ற இவர் தாம் இயற்றிய திரிபு, யமகம், சிலேடை முதலியன அமைந்த சிலசெய்யுட்களைச் சொல்லிக் காட்டினார். தம்மூருக்கு அருகிலுள்ள பசுவந்தனை என்னும் தலத்தைப்பற்றித் தாம் இயற்றிய **‘பசுவந்தை யந்தாதி’** என்பதிலுள்ள சில பாடல்களையும் அப்பால் சந்தங்கள் வண்ணங்கள் முதலியவற்றையும் சொன்னார். அவை சுவையுடையனவாக இருந்தன. பிள்ளையவர்கள் சுப்பிரமணிய தேசிகரவர்கள் மீது இயற்றியுள்ள ‘துங்கஞ்சார்’ என்ற நோட்டின் மெட்டில் தம்மை ஆதரித்த பிச்சுவையர் என்பவர்மேல் இயற்றிய கீர்த்தனம் ஒன்றையும் சொன்னார். “உச்சஞ்சார் வண்டானத்துறை பிச்சுவைய தயாநிதியே” என்ற அதன் பல்லவி மட்டும் இப்போது என் ஞாபகத்தில் இருக்கிறது.

இவர் சொன்னசெய்யுட்களைக் கேட்ட பிள்ளையவர்கள் இவரைப் பார்த்து மிகவும் வருந்தி, “இப்படி ஒருவர் இருப்பது இது வரையில் நமக்குத் தெரியவில்லையே! இவர் இவ்வளவு அழுக்கான உடையை உடுத்திக் கொண்டு தமிழ்ச் சுவையை யறிந்த இந்த ஊரில் ஏனென்று கேட்பாரில்லாமல் எல்லாரும் பரிகசிக்கும்படி இருப்பது மிகுந்த வருத்தத்திற்கு இடமாக

இருக்கிறது. உங்களுடைய அலட்சியத்துக்கு இடையில் இவர் இவ்வளவு சுவையுள்ள செய்யுட்களைப் பாடியிருக்கிறார், நீங்கள் அன்புடன் ஆதரித்து வந்திருந்தால் இன்னும் எவ்வளவு பிரகாசிப்பார்? இவர் சாதுவாக இருக்கிறாரென்று நீங்கள் புறக்கணித்தால் தமிழையே புறக்கணித்ததாக எண்ணவேண்டும். இனி இவருடைய அருமையை அறிந்து பாராட்டல் நல்லது. படித்தவர்களைப் படித்தவர்களே அறிந்து கொள்ளாவிட்டால் வேறு யார் அறியப் போகிறார்கள்? சந்நிதானத்திற்கும் அறிவிக்க வேண்டும்." என்று மனங்கனிந்து கூறினார்கள். அருகிலிருந்த மாணவர்களுக்கெல்லாம் அப்பொழுதுதான் முத்துசாமி ஐயரின் கல்வித்திறன் நன்றாக விளங்கிற்று. தாங்கள் அவர்பாற் காட்டிய அவமதிப்பை நினைந்து இரங்கினார்கள். பிள்ளையவர்கள் "சந்நிதானம் உமது செய்யுட்களைக் கேட்டால் மிக்க திருப்தியை அடையும். ஆதலின் ஆடை கொடுக்க வேண்டுமென்று அவர்கள் விஷயமாக ஒரு செய்யுள் செய்யும்" என்றார்கள். அவ்வாறே ஐந்து நிமிஷத்தில் இவர்

மாசாரக் கவி நுவல்வோர் குறை மடமை யடியோட
மாற்ற வெண்ணித்
தூசார நிதியமுனி வடிசுடர றெரிந்து பெறத்
துணிந்து வந்தேன்
ஏசார வறுமையெனும் கொடும்பிணியா னெடுந்துயருற்
றிருக்கின் றேற்கின்
றாசார மளித்தருள்சுப் பிரமணிய தேசிகமெய்
யறிஞ ரேறே.

என்னும் செய்யுளைச் சொல்லிக் காட்டினார்.

இதனைக் கேட்ட பிள்ளையவர்கள் மிகமகிழ்ந்து "சந்நிதானத்திடம் இவரை அழைத்துச் சென்று இப்பாடலைச் சொல்லிக் காட்டச் செய்து இங்கே நிகழ்ந்தவற்றையும் தெரிவிக்க வேண்டும்" என்று என்னிடம் சொன்னார்கள். அப்படியே நான் இவரைத் தேசிகர்

பால் அழைத்துச் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி இச் செய்யுளைச் சொல்லச் செய்தேன். தேசிகரவர்கள் இப்பாடலின் சுவையையறிந்து இன்புற்றதன்றிச் சரிகைக் கரையுள்ள இரண்டு ஜோடி வஸ்திரங்களை அளித்து, "உடுத்திக்கொண்டு பிள்ளையவர்களிடம் செல்ல வேண்டும்" என்று கட்டளையிட்டார்கள். அப்படியே இவர்பிள்ளையவர்களிடம் புதியஉடை தரித்து வந்தார். அவர்களும், மற்றவர்களும் மகிழ்ந்தார்கள்.

அது முதல் மாணாக்கர்கள் இவரிடம் பிரியமுடன் நடக்க ஆரம்பித்தனர். இவரும் எல்லாரோடும் பேசிப் பழகி வந்தார். நூல்களிலுள்ள பாடல்களைப் பற்றி இவருடைய அபிப்ராயத்தைத் கேட்டால், "முதலாவது இது; இரண்டாவது இது; இதில் இன்ன பாகம் சுவையுடையது" என்று கூறுவார். செய்யுட்களின் சுவையை அறிந்து தரம் கூறுதலில் இவர் வல்லவராக இருத்தலைப் பலமுறை கேட்டறிந்திருக்கிறேன்.

நான் கும்பகோணத்திற்கு வேலையாகச் சென்ற பின்பு ஒரு சமயம் திருவாவடுதுறைக்கு வந்து தேசிகரிடம் செல்லும் போது உள்ளே செல்லச் சமயம் பார்த்துக் கொண்டு வெளியே இவர் நின்றனர். நான் பார்த்து "இன்னும் கல்யாணம் இல்லையா?" என்றேன். இவர் "கல்யாணம் இல்லை," என்றார். அந்த விடையில் 'மணமாகவில்லை' என்ற பொருளும் 'பணம் இல்லை' என்ற பொருளும் சிலேடையாக அமைந்துள்ளன.

ஊற்றுமலை ஜமீன்தாராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரிடம் ஒரு சமயம் இவர் சென்று அவர் விஷயமாகச் சில செய்யுட்களைப் பாடிக் காட்டித் தமக்கு விவாகம் ஆக வேண்டியிருப்பதால் அதற்குரிய பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஜமீன்தார் "நீர் முகூர்த்தம் வைத்துக் கொண்டு வந்தால் நான் நூறு ரூபாய் தருவேன்" என்றார். இவர்

தம்மூர் சென்று சில காலம் கழித்து வந்து தமக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதென்றும் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டார்.

**ஜமீன்தார்:-** எவ்வளவு தருவேன் என்று முன்பு சொன்னேன்?

**முத்துசாமி ஐயர்:-** நானூறு ரூபாய் தருவேன் என்றீர்கள்!

**ஜமீன்தார்:-** இராதே, அப்படி சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லையே.

**முத்துசாமி ஐயர்:-** (அச்சங்கொண்டவர் போல்) முந்நூறு தருவேன் என்றீர்கள்!

**ஜமீன்தார்:-** அப்படியும் சொல்லவில்லையே.

**முத்து:-** இல்லை; இருநூறு தருவேன் என்றீர்கள்!

**ஜமீன்தார்:-** என்ன பொய் சொல்லுகிறீரே!

**முத்து:-** இல்லை! நூறு ரூபாய் தருவதாகச் சொன்னீர்கள்.

**ஜமீன்தார்:-** பின் எதற்காக நானூறு முந்நூறு இருநூறு என்று ஏமாற்றுகிறீர்?

**முத்து:-** நான் உள்ளதைத்தானே சொன்னேன். நீங்கள் "நான் நூறு தருவேன்" என்று சொல்லவில்லையா? முன் (நான் வந்தபொழுது) நூறு தருவதாகச் சொல்லவில்லையா? இரு (காத்திரு) நூறு தருகிறேன் என்றதும் பொய்யா!

இவ்வாறு உடனுடன் சாதுரியமாக விடை பகர்ந்ததைக் கேட்ட ஜமீன்தார் வியந்து தாம் வாக்களித்த நூறு ரூபாயோடு மற்றொரு நூறு ரூபாயும் சேர்த்து இருநூறாக அளித்தார்.

இத்தகைய அறிஞரிடம் உலகியல் அறிவு இல்லாமையே இவரைப் பிரகாசிக்கச் செய்யவில்லை.

ஆனாலும் தெரிந்தவர்கள் இவரைப் பாராட்டிக் கொண்டுதான் இருந்தார்கள்.

## 515. வண்ணைக் களஞ்சியப் புலவர்

இவர் இராஜ நாயக புராணம் பாடியவர். ஹிஜரி—1223வருடம் முதல் மாதம் 14தேதிக்கு அட்சய வருடம் பங்குனி மாதம் 2 ஆம் தேதி திங்கள் கிழமை உத்திர நக்ஷத்திரம் சித்தயோகத்தில் அரங்கேற்றியது. படலம் 46 செய்யுள் 2240.

இவர் முகமது மதத்தினர். இவரது இயற் பெயர் மீசலெ்ன்பது. இவருடைய ஊர் மதுரை. தம் புராணத்தில் இவர் சவ்வாதுப் புலவரை வணங்கியிருக் கிறார்.

## 516. வண்ணார் பேட்டை ஆழ்வாரப்பன் கவிராயர்

இந்தஊர் திருநெல்வேலிக்குக்கிழக்கே உள்ளது. இவர் பாடிய செய்யுள்:

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சு | | | | | |
| | | | | ன | வா | தே | | | | |
| | | | ன் | ற | மி | க் | க | | | |
| | | கி | பு | ம் | ந | ர் | த | த் | | |
| | ற் | பு | ணை | யா | ம் | வி | வே | க | மு | |
| கொ | ஞ் | கு | க் | லு | மா | டு | ண் | தொ | த | த் |
| | க் | கு | ம் | வா | ழ் | து | ணை | த | ண | |
| | | ர் | வோ | ழ் | வா | றி | ன் | மி | | |
| | | | ழ் | வோ | ர் | க் | கு | | | |
| | | | | வா | து | த் | | | | |
| | | | | இ | ணை | பொ | | | | |

இணையொத்து வாழ்வோர்க்கு மின்றிவாழ் வோர்க்கும்
வாழ்
துணைதணத்த தொண்டுமா லுக்குஞ்சொற்,-புணையம்
விவேக முத்தர் நம்புகின்ற மிக்க தேவான
சுவாமிநம் மாழ்வார் துணை.

தென்திருப்பேரை

கண்டதுண்டோ சோதிக் கதிரோனே நீயுமிந்த
மண்டலங்க ளெங்கும்போய் வந்தாயே—தண்டமிழ்சேர்
கோடாத பேரைக் குழைக்காதர் செம்முகம் போல்
வாடாத செந்தா மரை.

## 517. வண்ணார்பேட்டைக் கள்ளப்பிரான் கவிராயர்

கள்ளப்பிரான் என்பது திருவைகுந்தத்துப் பெருமாள் பெயர். இவர் வண்ணார்பேட்டைத் திருப் பாற்கடனாதன் கவிராயருடைய குமாரர்.

## 518. வண்ணார்பேட்டைத் திருப்பாற் கடனாதன் கவிராயர்

இவர் வண்ணார்பேட்டைக் கள்ளப்பிரான் கவி ராயருடைய தந்தையார். எவ்வளவோ பழைய தமிழ்ப் புத்தகங்களை ஏட்டுப் புத்தகங்களில் எழுதித் தொகுத் தவர். திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயருடைய மாணாக்கர்.

## 519. வரதுங்க பாண்டியன்

இவர் அதிவீரராம பாண்டியருடைய மூத்த சகோதரர். இவர் செய்த நூல் **பிரமோத்திரகாண்டம், கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி** முதலிய மூன்றந்தந்தாதிகள் என்று சொல்வதுண்டு. இவருடைய மனைவி மிக்க தமிழ்க் கல்வியும் செவ்விதாகப் பாடுந் திறமையு முடையவர்.

இவருக்குப் புத்திரர் இல்லாமையால் கரிவலம் வந்த நல்லூர்ப் பெருமானாகிய பால்வண்ண நாதர் இவருக்கு அபரக்கிரியை செய்தாரென்றும் அவ் வழக் கத்தை யநுசரித்து ஒவ்வொரு வருடத்தும் சோளபுரத் தில் மகா சுத்த நவமியில் பால் வண்ண நாதர் ஒரு

தோப்பிலெழுந்தருளி இவருக்குத் திதி கொடுக்கும் ஐதீகம் உற்சவ ரூபமாக நடைபெற்று வருகிறதென்றும் சொல்லுவர்.

**'கொக்கோகம்'** என்னும் நூல் இவர் செய்தது ஆகவே அதன் பழைய பதிப்புச் சிறப்புப்பாயிரத்தால் தெரிகிறது.

## 520. வல்லம் கந்தசாமி பிள்ளை

இவர் சொந்த ஊர் வல்லம்; **பிள்ளை**யவர்களின் முக்கியமான மாணாக்கர்களுள் இவரும் ஒருவர்; சீகாழிக் கோவை அரங்கேற்றி முடிந்த பின்பு, **பிள்ளை**யவர்கள் பின்னும் சில மாதங்கள் சீகாழியில் இருந்து வந்த காலத்தில் அவரிடம் வந்து பாடம் கேட்டவர். **பிள்ளை**யவர்கள் மாயூரத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்டு மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லி வருகையில் இவர் திருவழுந்தூரி லிருந்துகொண்டு அடிக்கடி அவரிடம் பாடங் கேட்டுச் செல்லுவார். இசைப் பயிற்சி உள்ளவராதலின் **பிள்ளை**யவர்கள் இயற்றிய 'திருவிடைக்கழிக் குறவஞ்சி'யை அத்தலத்தில் அரங்கேற்றும் போது அந்நூலை இசையுடன் படித்தவரும் இவரே. இவராற் செய்யப் பெற்ற நூல்கள் சில உண்டு.

## 521. வன்றொண்டர்

தன வைசிய வகுப்பினர்; கண்பார்வை யற்றவர். தீவிரமான சிவ பக்தியும் கடினமான நியமானுஷ்டானங்களும் உடையவர்; தமிழ் வித்துவான்; சிறந்த ஞாபக சக்தியுள்ளவர். **பிள்ளை**யவர்களிடத்திலும், ஆறுமுக நாவலரிடத்திலும் பாடம் கேட்டவர். எதையும் ஆழ்ந்து படித்துத் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் இயல்புடையவர். **பிள்ளை**யவர்களிடத்தில் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. **பிள்ளை**யவர்கள் தாமே படித்துப் பாடஞ் சொல்வார். அங்ஙனம் இவர் படிக்க அவர் பாடங் கேட்ட நூல் விநாயக புராணம். அவருக்கு

ஞாபகசக்தி அதிகம் உண்டு. பாடம் நடக்கையில் 'இவ்வளவு பாடங்களாயின; நிறுத்தலா'மென்பார். ஒரு பாடலை மறு முறை கேட்க வேண்டின் 'மறுத்து' என்று சொல்வது அவரது இயல்பு. தம்முடைய ஊருக்குச் சென்று பாடங்களைச் சிந்தித்து ஐயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்து மீண்டும் பிள்ளையவர்களிடம் வந்து சிலநாளிருந்து தெளிந்து கொண்டு செல்வது வழக்கம். கேட்கும் பொழுது இன்ன படலத்தில் இன்ன செய்யுளில் இன்ன அடியென்று ஞாபகம் வைத்திருந்தே கேட்பார். அது யாவருக்கும் ஆச்சரியத்தைத் தரும். அவருடைய நித்திய நியமங்கள் பின்வருமாறு:

ஒவ்வொரு நாளும் காலையில் ஸ்நானம் செய்து பின்பு விநாயகருக்கு ஆயிரத்தெட்டுக் குட்டுக்கள் குட்டிக் கொண்டு முடித்து விட்டுப் பஞ்சாட்சரம் ஆயிரத்தெட்டு உரு ஜபிப்பார். அகத்தியத் திரட்டைப் பதம் பதமாக நிறுத்தி உச்சரித்து முழுவதும் பாராயணஞ் செய்து தேவாரத்தில் வேறு சில பதிகங்களையும், திருவாசகத்தில் சில பாடல்களையும் பாராயணம் செய்து விட்டுப் பின்பு திருமுருகாற்றுப்படையை ஆறுமுறை பாராயணம் செய்வார். அவ்வாறு குறைவின்றிச் செய்து முடித்து விட்ட பின்புதான் ஆகாரம் செய்வார். நியமம் பகலில் முடியாவிடின் மாலையில் தொடர்ந்து செய்து விட்டுத்தான் சாப்பிடுவார். ஒரு நாள் செய்யாவிடின் மறுநாள் நிறைவேற்றி விட்டே உண்பார். அவருடைய கல்வியறிவின் முதிர்ச்சிக்குக் காரணம் அவருடைய சிவ பக்தியும், நித்திய நியமங்களுமேயாகும்.

பல சிவநேசச் செல்வர்கள் அவருக்கு 'வன்றொண்டர்' என்ற பெயரிட்டு வழங்கவேண்டுமென்று பிள்ளையவர்களிடம் சொன்னார்கள். பிள்ளையவர்கள் கேட்டு 'நீங்கள் சொன்னது தக்கதே' என்று அங்கிகரித்து,

"சத்திவாழ் வாமத்துச் சங்கரன்பொற் றாட்கமலப்
பத்தியாற் றேவார பாராயணத்தினால்
வான்றோய் புகழ்மிகுந்த வன்றொண்ட னென்னும்பேர்
சான்றோய் நினக்குத் தகும்"

என்னும் பாடலைக் கூறி அன்று முதல் வன்றொண்டரென்றே அழைத்து வரலாயினர்.

## 522. வன்னிச்சிப்பட்டினம் முத்துச் சுப்பிரமணிய பாரதி

இவ்வூர் பட்டுக்கோட்டைத் தாலுகாவில் தென் கிழக்கில் கடற்கரையோரத்தில் மணல்மேற்குடிக்குத் தெற்கே 3 மைல் தூரத்தில் உள்ளது. இவர் அந்தணர். மேற்படி ஊர் வேங்கட சுப்பிரமணிய பாரதியாரின் புதல்வர்; தமிழ் இலக்கண இலக்கியங்களில் நல்ல பயிற்சியுடையவர்; தமது தந்தையாரிடமே கல்வி பயின்றவர். இவர் மணன்மேற்குடியிலுள்ள புத்திராதி செட்டியாருடைய பரம்பரையோரால் ஆதரிக்கப்பட்டு வந்தவர். இவர் பலர்மீது அவ்வச்சமயங்களில் செய்துள்ள சீட்டுக்கவிகள் பல.

ஒரு பாடல்

திருமருவு முகின்மருக வறுகுமதி புனைசடில
திரிபுர ஹர சுரநதி
யுமைசிறுவ சதுமறையி னிறையவனை முறையிடவெ ருவுசிறையி
லிடுகுழவி வடிவேல்
முருக குக குமரகுரு பரசரவணபவ வறு
முகவ குறுமுனி பரவவே
முதியதமிழ் உத்தியினை யெளிதினனை வரு முணர
மொழி பழ னிமலை மீது வாழ்
அருமைபெறும் வளிகணவ வெனுமொழிகள் தொழுது சொலி
யகமகிழ வுளநெகிழவே
யழகொழுகு முபயபத கமலமதில் எனது மனம்
அரைநொடியி னளவு பொழுதே
உருகியிரு விழிசெருகி யழுதுபுனல் பெருகிவர
வுதவியெனை யருள்புரிகவே
உரககண பணமுடிக ணெளிய மயில்கடவிவள
ருலகுதொழ வருகடவுளே!

## 523. வன்னிச்சிப் பட்டனம் வேங்கட சுப்பிரமணிய பாரதி

இவர் அந்தணர். இவரின்னாரிடம் படித்தார் என்று விளங்கவில்லை. இவர் 97—பிராயம் வரையி லிருந்தார்; அக்காலத்தில் மணல்மேற்குடியிலிருந்த புத்திராதி செட்டியார்ரால் ஆதரிக்கப்பட்டு வந்தவர். இந்தச் செட்டியார்மீது பல சிட்டுக்கவிகள் செய்திருக் கின்றனர். அவைமணல் மேற்குடியில் வழங்குகின்றன. **இரட்டையாசிரிய விருத்தம், இலக்கியதீபம்** என்பதொருநிகண்டு இவரால் செய்யப்பட்டுள்ளன. இந்நூலில் சிற்சில பாட்டுக்கள் ஆங்காங்குச் சுற்றுப் பக்கத்து வழங்கு கின்றன. மந்திர சாஸ்திரத்தில் மிகுந்த வன்மையுடை யவர். இவருடைய பிள்ளைகள் மூவர். அவர்களுள் இரண்டாவதாகிய முத்துச் சுப்பிரமணிய பாரதி என்பவர் சிறந்த தமிழ் வித்துவான். இவருடைய குமாரர் ஜகந்நாதையர்; இவருடைய குமாரர் சுப்பிர மணிய ஐயர்; இவர் ராஜாமடத்தில் ஸ்கூல் மாஸ்டராக இருந்தார். இவர் பலருக்குத் தமிழ்ப்பாடம் சொல்லி வந்தனராம். பல ஜாதியாரும் மணல்மேற்குடியிலுள்ள மகாராஜா சத்திரத்தில் உண்டு விட்டுப் படிப்பார்கள்.

## 524. வாகடாசிரியர்

இவரால் இயற்றப்பட்ட நூல் **வாகடம்** என்பது. பொதுவாக எல்லா வைத்திய சாத்திரங்களையும் வாகடம் என்றே பிற்காலத்தில் வழங்கலாயினர்.

## 525. வாதைப்பதி மரபுயகர் சநாயன்

இவர் காழி(க் கண்ணுடை) வள்ளலார் சந்தானத்தில் விடையேறும் வள்ளல் என்பவருடைய புதல்வரென்றும் **சிவபூஜா தீபம்** என்னும் சைவ நூலொன்று இவராற் செய்யப்பட்டுள்ள தென்றும் பின்னுள்ள பாடல் தெரிவிக்கின்றது:

தீதில்சிவா கமமுரைத்த படியிறைவன் றன்னைச்
சிறப்புடனே யருச்சிக்கும் செம்மைதெரிந் தெவரும்
பூதலத்தில் வழுவாது புரிதொழில்சா மீபம்
பொருந்துதற்குச் சிவபூசா தீபமெனப் புகன்றான்
தாதுலவும் பொழில் புடைசூழ் வெங்குருவாழ் வள்ளல்
சந்தானம் விளங்கவரு சைவசிகா மணிதென்
லாதைவளம் பதிமருவும் விடையேறும் வள்ளல்
மகிழ்ந்துதவு மரபுபகர் சகாயன் வளம் பெறவே.

குறிப்பு: வெங்குரு-சீகாழி

இந்த நூல் நாற்பத்தைந்து திரு விருத்தங்களால் அமைந்ததொரு சைவ நூல்.

## 526. வானமாமலை ஐயங்கார்

உபயவேதாந்த காலட்சேப வித்துவான். திவ்யப் பிரபந்த வியாக்யானம் செய்திருக்கிறார். வானமாமலை ஆஸ்தான வித்துவான்.

## 527. விக்கிரமசிங்கபுரம் நமச்சிவாய கவிராயர்

இந்த ஊர் நெல்லை ஜில்லா பாபநாசம் கோயிலைச் சார்ந்துள்ள ஊர். சிங்கை எனவும் வழங்கும். இந்த ஊரினர் இவர்; பாண்டி நாட்டு வேளாளர் மரபிற் பிறந்தவர்; திருவாவடுதுறைச் சிவஞான முனிவருடைய பாட்டனார். மேலகரம் திரிகூட ராஜப்பக் கவிராயரும், செங்கோட்டைக் கவிராஜ பண்டாரமும் இவர் காலத்தினர்கள். பொதியில் மலைச் சாரலிலுள்ள பாபநாசத்துச் சிவ பெருமான் மீதும் அத்தலத்து அம்பிகையாகிய உலகம்மை மீதும் சில நூல்கள் இவர் செய்திருக் கின்றனர். அந்தப் பிரபந்தங்களாவன:

1. சிங்கைச் சிலேடை வெண்பா
2. இன்னிசைக் கலிப்பா
3. உலகம்மைப் பதிற்றுப்பத்தந்தாதி
4. உலகம்மை சந்த விருத்தம்

5. உலகம்மை பிள்ளைத் தமிழ்
6. பாப விநாச வண்ணம்
7. உலகம்மை யந்தாதி

இவர் செய்த தனிப்பாடல்கள் சில ஆங்காங்கு வழங்குகின்றன.

## 528. விசயாலய தேவன்

பிறந்த பிறப்பாற் பெரும்பேறு பெற்றேம்
மறந்து மினிப்பிறக்க வாரேஞ்—சிறந்தமதி
சேர்த்தானைத் புத்தூர்த் திருத்தளியா னைப்புவனங்
கர்த்தானைக் கூத்தாடக் கண்டு.

இச்செய்யுள் விசயாலய தேவன் சங்கத்தார்க்கு எழுதியனுப்பின பாடல். தியாகராச செட்டியாரவர்கள் சூரைமாநகர்த் தல புராணத்தில் காட்டியுள்ளார்.

## 529. விசாகப்பெருமாளையர்

இவர் கந்தப்பையருடைய புதல்வர். குலம் சங்கமர் குலம். சமயம் வீரசைவம். இலக்கணச்சுருக்கவினா விடை, நன்னூற் காண்டிகையுரை பிறவும் செய்தவர்.

வாசிட்டப்பதிப்புக்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்திருக்கின்றனர். வாசிட்டவுரைக் குறிப்பு விபவவருஷம் ஆடிமாதம் அச்சிடப்பட்டது. கம்ப. பாலகாண்ட உரைச் சிறப்புப் பாயிரம் இயற்றியவர்; கல்விச் சங்கத்துத்தமிழாசிரியர். கி. பி. 1861ல் மழவை மகாலிங்கஐயர் இவரிடம் தமிழ்நூல்களை முறையே பாடங் கேட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

இலக்கணச் சுருக்க வினாவிடையிலே எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் சுருக்கிக் கூறுவர்.

"உலகு மேதகு மிவனெனக் கொருமுத லெனக்கொண்
டிலக வாழரு ளிடத்தனா மீசனை யிறைஞ்சிக்
குலவு நூற்பொரு ளுணர்த்திய குரவரைப் பழிச்சி
அலகில் சீரெழுத் தாதியைந் தறைகுவ னமைந்தே"

## 530. விருத்தாசலம் குமார தேவர்

இவர் வீரசைவர்; விருத்தாசலத்திலுள்ளதோர் மடத்திற்குத் தலைவர். 'மகாராசா துறவு' என்பதோர் நூல் இவராற் செய்யப்பட்டது.

இவர் திருப்போரூர்ச் சிதம்பர ஸ்வாமிகளால் பஞ்சாதிகார விளக்கத்தில் துதிக்கப்பட்டுள்ளார். இவர் துறையூர் வீரசைவாதீனத்தவர்.

பெரிய நாயகியாருடைய அருளினால் இவர் சோடசமகா சாத்திரங்களையும் இயற்றினார் என்று தெரிகிறது.

**சோடச மகா சாத்திரங்களாவன:-**

1. மகாராஜாதுறவு 2. சுத்த சாதகம் 3. விஞ்ஞான சாரம் 4. அத்துவித வுண்மை 5. பிரமானுபூதி விளக்கம் 6. ஞானவம்மானை 7. வேதாந்த தசாவத்தைக் கட்டளைச் சுருக்கம் 8. தசகாரியக் கட்டளை 9. சகசநிட்டை 10. உபதேச சித்தாந்தக் கட்டளை 11. பிரம்மசித்தியகவல் 12. சிவதரிசன அகவல் 13. ஆகம நெறி யகவல் 14. வேதநெறி யகவல் 15. பிரமானுபவ அகவல் 16. சிவசமரச வாத அகவல்.

## 531. விருத்தாசலம் தியாகராசக் கவிராயர்

இவருடைய ஊர்விருத்தாசலம். இவர் திருவாலங் காட்டுப் புராணத்திற்குப் பொழிப்புரை யெழுதியிருக் கிறார்.

அந்நூற் பதிப்புச் சிறப்புப் பாயிரத்தில் பல ராலும் இவர் நன்கு துதிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் திருவாலங்காட்டு மான்மியத்தைச்சுருக்கி அகவற்பாவிற் செய்து பதிப்பித்திருக்கிறார்.

விஷ்டரம்—தேவலோகம், வடமொழி; விட்டரத்தை விட்டரமென்று கொண்டார் ஒரு பாடலில்.

மருதூரந்தாதி இவராற்பதிப்பிக்கப்பட்டுள்ளது. மருதூரைத் திருவிடை மருதூரென்றும், சொல்வர்.

## 532. விருத்தாசல ரெட்டியார்

செங்கணத்தில் நாட்டாண்மைக் காரரில் பெரிய பண்ணையார். சின்னப் பண்ணையார், பட்டணத்துப் பண்ணையார், என்ற பகுப்பினர் இருந்தனர். விருத்தாசல ரெட்டியார் சின்னப் பண்ணையார் என்னும் பகுப்பினர். இம்மூவகையினரையும் நாட்டார் என்று வழங்குவர். அவர்களுக்குத் தமிழ்ப் பயிற்சி இருந்தமையால் எங்கள் (ஐயரவர்கள்) குடும்பத்தினரிடம் அன்பு வைத்து அவ்வப்போது வேண்டிய உபகாரங்களைச் செய்து வந்தார்கள். அவர்களில் சிலர் சைவ சமயத்தையும், சிலர் வைணவ சமயத்தையும் தழுவியவர்கள் ஆயினும் அவர்களுக்குள் திருமண சம்பந்தம் முதலியன உண்டு.

விருத்தாசல ரெட்டியார் குட்டையான வடிவினர்: கறுப்பு நிறத்தினர். தேகம் பளபளப்பாக இருக்கும். எப்பொழுதும் சுத்தமாக இருப்பார். காலை ஐந்து மணிக்கு எழுவார். ஊரைச் சுற்றிலும் காடுகளும், நீருற்றமும் மணற்பரப்புமுள்ள ஓடைகளும் உண்டு. ஏதேனும் ஒரு பக்கம் சென்று தந்த சுத்தி முதலியவற்றை முடித்து கொண்டு ஏழு மணிக்கு வீட்டிற்கு வருவார். கால்கையைச் சுத்தம் செய்து கொண்டு, பிறகு திருநீற்றை உத்தூளனமாக இட்டுக் கொண்டு படிக்கத் தொடங்குவார். பதினொரு மணி வரையிற் படித்துக்கொண்டே யிருப்பார். படிக்கும் நூல்களிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஆழ்ந்து படித்துச் சிந்தித்துச் சொல்வார். மதிய உணவு உண்ட பிறகு இரவு எட்டுமணி வரையில் படித்துக்கொண்டே

யிருப்பார். அவருடைய மூத்த குமாரராகிய நல்லப்ப ரெட்டியாருக்குக் கம்பராமாயணப் பாடம் சொல்வார்.

பல தமிழ் ஏட்டுச் சுவடிகளையும் அச்சுப் புத்தகங்களையும் விருத்தாசல ரெட்டியார் தொகுத்து வைத்திருந்தார். தம்மிடம் இல்லாத அரிய தமிழ் நூல்கள் கிடைத்தால் அவற்றை எழுதிக் கொள்வார். ஏட்டுச் சுவடியில் விரைவாகவும், நன்றாகவும் எழுதும் ஆற்றல் உண்டு. எனக்காகச் (ஐயரவர்களுக்காக) சில தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடியில் எழுதித் தந்திருக்கிறார்.

படித்தலும், பாடஞ் சொல்லுதலும், வந்தவர்களிடம் சம்பாஷணை செய்தலுமின்றி வேறு ஒரு காரியத்திலும் அவர் புத்தியைச் செலுத்துவதில்லை.

## 533. விரூபாக்ஷி தேவர்

இவர் இயற்றிய நூல் **கணேச புராணம்.**

## 534. வில்லிபுத்தூராழ்வார்

இவர் ஊர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர். குலம் வேதியர் குலம். சமயம் வைணவம். காலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய ஐந்நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் என்பர். இவரது மகனார் வரந்தருவார். சந்தக்கவி பாடுவதில் சமர்த்தர். வக்கபாகை அரசன் ஆட்கொண்டான் வேண்டுகோளுக்கிணங்க பாரதம் என்ற நூலை இயற்றினார். வடமொழி நன்கு அறிந்தவர்.

## 535. வீமநாயக்கன்பாளையம் இருளாண்டி வாத்தியார்

இவருடைய கால்கள் பயனற்றவாக இருந்தமையால் எருத்தின் மேலேறி ஒரு மாணாக்கனை உடன் அழைத்துக் கொண்டு செல்வவான்களிடம் சென்று தமது பாண்டித்தியத்தை வெளிப்படுத்திப் பரிசு பெற்றுவரும் இயல்புடையவர்.

## 536. வீரபாண்டியக் கவிராயர்

இவர், பாஞ்சாலங் குறிச்சியில் முன்பிருந்த சிற்றரசராகிய வீரபாண்டிய கட்டப் பொம்மு நாயகருடைய ஆஸ்தான வித்துவானாக இருந்தவரென்று தெரிதலால், இவர் காலம் அவருடைய காலமென்றே நினைக்கப்படுகிறது. இவர் சாதியால் பாணர். ஊமைத்துரையின் மூன்று தலைமுறைக்கு முந்தியவர்.

மணிநாக்கு அறப்பாடியது:

**வெண்பா**

*நானே யடிமையெனி னானே குடிமையெனி*
*னானேயுன் பாவல னாமென்னின்,—ஞானத்*
*திசையான பாகம் பிரியாள் சபேசா*
*வசையா மணிநாக் கற.*

**கட்டளைக் கலித்துறை**

வேலுக்குச் சொல்லி மயிலுக்குச் சொல்லிநின் வீரதண்டைக்
காலுக்குச் சொல்லி யபயமிட் டேன்பின் கருங்குறப்பெண்
பாலுக்குஞ் சொல்லி யழுதுவிட் டேன்முகம் பார் குமரா
மாலுக்குச் சொல்லிய மால்யானை யுய்ந்தவகையென்னவே.

மேற்படி பிரபுவும் தாமுமாக இரண்டு சிவிகையில் சமமாகப்போகையில் இடையில் தடையாக இருந்த புளியங் கொம்பு ஒடியும்படி பாடவேண்டுமென்று அவர் சொல்லியபொழுது இவர் பாடியது:-

**வெண்பா**

"எப்படியுஞ் செந்தூர்க் கிறைவனே யிப்புளியங்
கொப்பொடிய வேண்டுங் குருபரா—மைப்படியு
மங்கைக் கிசைந்த மணவாளா றெய்வானை
கொங்கைக் கிசைந்தகொழு னா"

என்று பாடியவுடன் புளியங்கொம்பு ஒடிந்தது.

## 537. வீரமாமுனிவர்

இத்தாலி தேசத்தில் வெனிஸ் மாகாணத்தில் காஸ்தி கிளியோன் என்னும் ஊரில் 1680-ஆம் ஆண்டு

நவம்பர் மாதம் 8 ஆம் நாள் தோன்றினார். இவரது தந்தை பெயர் கொண்டல்போ பெங்கி, தாயார் பெயர் எலிசபெத். இவர் தத்துவபோதக சுவாமி எனவும், தைரியநாதசுவாமி எனவும் வழங்கப்பெறுவர். இவர் தமிழ் நாட்டிற்கு வந்து திரிசிரபுரம், காயற்பட்டினம் முதலிய நகரங்களில் வசித்தார். தமிழ் மொழியில் பலவகை இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றார். இவர் இயற்றிய நூல்கள்:

1. தேம்பாவணி 2. தொன்னூல் விளக்கம் 3. திருக்காவலூர்க் கலம்பகம் 4. பரமார்த்தகுரு கதை 5. அடைக்கல நாயகி கலிவெண்பா 6. அடைக்கலநாயகி மாலை 7. அடைக்கல நாயகி உலா 8. அன்னை அழுங்கல் அந்தாதி 9. கருணாம்பரப் பதிகம் 10. சித்தேரியம்மாள் அம்மானை 11. "சதுரகராதி 12. வேத விளக்கம் 13. வேதியர் ஒழுக்கம் முதலியன.

## 538. வீரராகவர்

**வில்லைப் புராணம்** என்ற தமிழ்ப் புராணத்தின் ஆசிரியர் இவர் என்பது இந்நூல் சுவடிகளிலேனும் இந்நூல் செய்யுட்களிலேனும் காணப்படவில்லை. ஆயினும், இத்தலத்து முருகக் கடவுள் விஷயமாக அருணாசலக் கவியென்பவர் பாடிய வில்லை முத்துக் குமாரர் பிள்ளைத் தமிழென்னும் பிரபந்தத்தில் அம்புலிப் பருவத்திலுள்ள எட்டாம் செய்யுளால் இப்புராணத்தின் ஆசிரியர் வீரராகவரென்னும் பெயருடையாரென்று தெரியவருகிறது. அச்செய்யுள் வருமாறு:-

"கந்தமுறு கடிகையெனு முத்தநதி வளமெலாங்
கண்டுசந் தோஷிக்கலாம்
கயமா மிருத்தாப நாசத்தி னான்முயற்
கறைக்குறை யகற்றியிடலாம்
சந்தமுறு வீரரா கவனுரைபு ராணமொடு
தலமகத் துவமுமருணா
சலனுரைசெய் வரகவிதை யானபிள் ளைத்தமிழ்
தனைக்கேட்டு மனமகிழலாம்

வந்தொருத ருமபால கன்செய்சி வாலயம்
　　வளமையொடு தெரிசிக்கலாம்
மாங்கானம் வரும்பெரிய தம்பிசெய்திடு சித்ர
　　மண்டபத் திடை யுலவலாம்
அந்தமுட னடுவறியும் நாதரைப் பணியலா
　　மம்புலீ யாடவாவே
அழகுபெறு வில்லைமுத் துக்குமர னுடன் மகிழ்ந்
　　தம்புலீ யாடவாவே

வீரராகவ னென்னும் பெயருடைமையின் இவ்வாசிரியர் மிகச் சிறந்த தமிழ்ப் புலவராகிய அந்தகக் கவி வீரராகவ முதலியாருடைய பரம்பரையினரென்று கருதவும் இடமுண்டு. இப்புராணத்தி லுள்ள 16-ஆம் செய்யுளால் இதனை ஆக்குவித்தோர் விசயராயரென்னும் பெயரையுடைய கார்காத்த வேளாளர் என்ற செய்தி மாத்திரம் தெரிகின்றது.

## 539. வீரராகவையன்

இவர் நந்திகேசுவரரால் இயற்றப்பெற்றதான வடமொழி அபிநய தர்ப்பணத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்.

"ஆதிநா தரைப்பண் பாடு மருள்குரு கூர்நம் மாழ்வார்
பாதபங் கயம்ப ணிந்து பரதசாத் திரத்தின் முன்னோர்
ஓதிய வடமொ ழிச்சொ லுரையபி நயநன் னூலை
மேதகுந் தமிழாற் செய்தான் வீரரா கவையன் றானே"

## 540. வீரை மண்டல புருடர்

வீரை—வீரபுரம்: இது இக்காலத்துப் பெருமண்டூரென்று வழங்கும்.

## 541. வீரை ஆளவந்தார்

வீரைக் கவிராஜ பண்டிதருடைய குமாரர். இவர் இயற்றிய நூல் **ஞானவாசிஷ்டம்**. இவருக்கு மட்டிப்

பிள்ளை என்று ஒரு பெயர் உண்டு. கவிராஜபண்டிதர் சமாதியிலிருக்கும்போது அவர் கால் பெருவிரலைப் பிடித்துப் பாடிய பாடல்:

உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றகிலேன் பொன்னும்வெள்ளியும்போல்
ஒளியிட்ட செந்தா மரைமலர்ப் பாதத்தை யுள்ளடக்கி
வெளியிட்டு நின்றுவிட் டாய்பர மானந்த வீட்டகத்தே.

## 542. வெண்பாப்புலி சொக்கலிங்கக் கவிராயர்

இவர் ஊர் மணப்பச்சேரி. இவ்வூர் பிரான் மலைக்குத் தென்மேற்கில் ஆறுமைலில் உள்ளது. இவர் சைவர்; இயற்பெயர் சொக்கலிங்கக் கவிராயர்; சக்தி உபாஸகர். இவருடைய பிதாவிற்கும் வெண்பாப் புலி என்ற பெயர் உண்டு. வெண்பாப்புலி என்பது இவருடைய வம்சத்துக்குரிய பெயர். தேவி பூசை செய்யும் பொழுது கள்ளையும் மாமிஸத்தையும் நிவேதித்து அவற்றையுண்பார், குடித்தல் மிகுதியாக உண்டு. அஞ்சு பணம் யாரிடத்தும் பெறுவது இவருக்கு வழக்கம். பூஜாகால முதலியவற்றில் போதையாகவே இருப்பார். சிவகங்கையில் இருந்த கௌரீவல்லப மகா ராஜாவிடம் போன பொழுது அதிகாரம் நன்றாக இன்மை பற்றிச் சொன்ன வெண்பா,

வள்ளலெனும் கௌரி வல்லபா உன்சீமை
கொள்ளைகொண்டு போகுதுகாண் கூ கூ கூ—கள்ளனுடை
தொண்டைமான் சீமையைப்பார் சோழனுடைச் சீமையைப்பார்
கண்டா கிலும் பிழைப்பாய் காண்.

குறிப்பு: 'கண்ட கண்ட பேர்சாட்சிகாண்' என்றும்பாடம் உண்டு.

திருப்பத்தூர் தம்பிபட்டி வேலுக் கவிராயர் கௌரி வல்லப ராஜாவின் மீது குறவஞ்சி பாடிப் போய் உள்ளே பிரசங்கித்துக் கொண்டிருந்த பொழுது வெண்பாப்புலிக் கவிராயர் சென்று 'புலி வருகின்றது' என்று சொல்லியனுப்பிய பொழுது 'வேல் இருக்கிறது' என்று அவர் சொன்னாராம். தம்மைச் சார்ந்தவ

ரொருவர் நாகப்பட்டணத்தில் உத்தியோகமாக இருந் தாராம். அவரைப் பார்ப்பதற்குப் போய்ச் சிலகாலம் அங்கிருந்து விட்டு வருவது இவருக்கு வழக்கம். ஒரு முறை போகையில் வழியிலிருந்த கொல்லு மாங்குடியில் நிறையக் குடித்து விட்டுப் புரையேறி இறப்பாரா யினார். இறக்கும்பொழுது கொல்லு மாங்குடி கொல்லு மாங்குடி என்று பல முறை சொன்னாராம்.

## 543. வெண்பாப்புலி வேலுச்சாமி பிள்ளை

இவர் தில்லை விடங்கன் மாரிமுத்தா பிள்ளையின் பரம்பரையினர்; பிள்ளையவர்களோடு கூடப் படித்த ஒரு சாலை மாணாக்கராகிய சென்னை அஷ்டாவ தானம் சபாபதி முதலியாரிடம் படித்துக் கொண் டிருந்தவர். அவர் இவரை மேலும் நன்றாகப் படிப்பிக்க நினைத்து, தமக்கும் பிள்ளையவர்களுக்குமுள்ள சிநேக பாவத்தைப் புலப்படுத்தி, 'இவரைப் படிப்பித்து முன்னுக்கு வரச் செய்ய வேண்டும்' என்று ஒரு கடித மெழுதிக் கொடுத்தனுப்பினார். இவர் வந்து பிள்ளை யவர்களை வணங்கி அக்கடிதத்தைக் கொடுத்தனர். அதைப் பார்த்து விட்டு அவர் இவரை அங்கீகரித்து அப்படியே பாடம் சொன்னார். நாளடைவில் இவருடைய கல்வி மிகப் பெருகியது. அவரிடத்திற் படித்தமையாற் கவித்துவ சக்தியும் நன்றாக இவருக்கு உண்டாயிற்று. பெரும்பாலும் வெண்பாவே பாடுவார். பாடுவதிற் கஷ்டமென்று சொல்லப்படும் அந்தப் பாவை விரைவாகப் பாடுவதைத் தெரிந்து உடன் படிக்கும் மாணாக்கர்கள் 'வெண்பாப்புலி' என்று இவரை அழைப்பாராயினர். அதுவே பின்பு இவருக் குரிய பட்டப் பெயராக அமைந்து வழங்கலாயிற்று. இவர் பிற்காலத்திற் காஞ்சிபுரம் ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்தார்.

## 544. வெள்ளியம்பலவாண முனிவர்

இவர் முதுமொழி மேல்வைப்பின் ஆசிரியர்; தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்தவர். முதுமொழி மேல்வைப்பின்

சிறப்புப் பாயிரத்தாலும் இது தெரிகின்றது. சிறப்புப் பாயிரத்தில் உள்ள 'கமலை வெள்ளியம்பல வாணர்' என்ற தொடர்மொழியால் இவர் திருவாரூரிற் பிறந்தார் என்று சொல்லலாம்.

தருமபுர ஆதீனத்தில் நான்காம் பட்டத்திலிருந்த மாசிலாமணி தேசிகரிடம் சமயதீக்ஷையும், விசேஷ தீக்ஷையும், சைவசந்நியாசமும், ஐந்தாம் பட்டத் திலிருந்த ஞான சம்பந்த தேசிகரிடம் ஞானதீக்ஷையும் இவர் பெற்றார்.

இவர் திருப்பனந்தாள்மடத்து ஸ்ரீ ஆதிகுமர குருபர சுவாமிகளை வித்தியா குருவாக அடைந்து அவர்களிடம் வடமொழி, தென்மொழி இரண்டையும் நன்கு பயின்றவர். ஆங்காங்கு இவர் பலபுராணப் பிரசங்கங்களைச் செய்தும், தம் ஞான தேசிகர் மீது **சமுகமாலை, திருப்பள்ளியெழுச்சி, தாலாட்டு** என்ற நூல்களை இயற்றியும், அந்த ஞானாசிரியர் இயற்றிய **முத்தி நிச்சயம்** என்ற நூலுக்குச் சிற்றுரை பேருரை என இரண்டு உரைகளையும், சிவஞான சித்தியார்க்கு **ஞானாவரண விளக்கம்** என்னும் பாஷியத்தையும் எழுதியும், திருநெல் வேலி சிந்து பூந்துறைமடத்தில் போதகாசிரியராக இருந்து பல மாணவர்களுக்குக் கல்விபுகட்டியும் கல்வி யறிவை நன்கு பரப்பி விளங்கினார்.

படிக்காசுப் புலவர் இவருடன் இருந்து ஆதி குமரகுருபரரிடம் கல்வி பயின்றவரென்பதும், துறை மங்கலம் சிவப்பிரகாசரும், அவர் சகோதரர்களாகிய கருணைப் பிரகாசரும், வேலையரும், கந்த புராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்த சரணாலயரும், காவை அம்பலவாண முனிவரும், புன்கூர் சிவப்பிரகாச முனிவரும் இவரிடம் கல்வி பயின்றவர்கள் என்றும் தெரிகிறது. தாம் சொந்தமாகப் பாடிய கவிகளை வேறு நூல்களிற் சேர்த்து இவர் தம் கவித்திறத்தைப் புலப்படுத்தியுள்ளனர். தேவாரத்திலும், பெரிய

புராணம் முதலிய நூல்களிலும் இவருடைய பாடல்கள் கலந்துள்ளனவென்று பெரியோர் கூறுவர். வெள்ளிபாடல் என்று தமிழ் உலகத்தில் வழங்குவது இவருடைய பாடலே.

சிவபரமான புராணங்களிலும், சைவ சாஸ்திரங்களிலும் இவருக்கிருந்த பேராற்றல் முதுமொழி மேல் வைப்பில் இவர் காட்டிய உதாரணங்களால் நன்கு புலனாகும். இவர் போதகாசிரியராக இருந்த காலத்தே சிவகதைகளை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டி முதுமொழி மேல் வைப்பை எளிய நடையில் இயற்றியிருத்தல் வேண்டுமென்றோ, மிகச்சிறு பிராயத்தில் பாடியிருத்தல் வேண்டுமென்றோ தோற்றுகிறது. முதுமொழி மேல் வைப்பிலுள்ள இவருடைய கருத்துக்கள் பல, துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் தம் பிரபந்தங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளன. (முதுமொழி மேல் வைப்பு 15, 18, 20 முதலியன)

திருச்செந்தூரில் இவருக்குப் பகைஞனாகிய விதண்டாவாதி ஒருவன் பெரும்புலவனென்று பேர் வைத்துக் கொண்டு இருந்தானென்றும், இவருடைய ஆக்ஞைப்படி சிவப்பிரகாசர் திருச்செந்தூர் நிரோட்டயமக அந்தாதி பாடி அவனை வென்று இவருக்கு அடிமையாக்கி வைத்தாரென்றும் ஒரு கர்ணபரம்பரைச் செய்தி வழங்குகின்றது.

திருவள்ளுவ நாயனார் சுத்த சைவர் என்பதற்கு ஆதாரமாகக் காணப்படும் திருக்குறட்பாக்களை இவ்வாசிரியர் முதுமொழி மேல் வைப்பினுள் எடுத்துக் காட்டி விளக்கியிருப்பது போற்றத் தக்கது.

'திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மதுரையில் சமணரைக் கழுவேற்றவில்லை. அவர்கள் தாமாகவே ஏறினர்' (முதுமாழிமேல்வைப்பு—செய்யுள் 35, 100) என்று கூறும் முகத்தால் சைவ சமயத்தின் பாலுள்ள அருட்டன்மையை இவர் புலப்படுத்தியிருக்கிறார். தக்க

யாகப் பரணியாலும் இது விளங்கும். இவரது சமயக் கொள்கை முத்தி நிச்சயத்துக்கு இவர் எழுதிய சிற்றுரையின் பகுதியால் விளங்கும். அது வருமாறு:-

"ஆன்மாக்கள் சோபான முறையிற் சைவசமயத்தைத் தலைப்பட்டு, சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்தல் ஆகிய சித்தாந்த முத்தியடைதற் பொருட்டுப் புறச் சமயங்களெல்லாம் சிவபிரானால் தூல சூக்கும முறையின் வைத்து முதனூலுட் கூறியருளப் பட்டமையின் அவற்றையும் பயன் கருதி ஆங்காங்கு உளவாக விடுத்து, அவற்றால் குன்றிய சைவ சமயத்தை யாவரும் முடிந்த பெரும் பேறடைவான் கருதி விளக்கஞ் செய்தாரென்பார் பிறர் சமயம் நந்தாது தோற்றுவித்த நற்குரவனென்றார்.

"நந்தாது தோற்றுவித்தல்—புறச் சமயங்கள் துவரக்கெட்டொழியாமல் அவையும் உளவாகச் சைவ சமயத்தை வெளிப்படுத்தல். 'வளவர்கோன் பாவையும், மந்திரி குலச்சிறையாரும் அருகசமயத்தை நிராகரித்துச் சைவ சமயத்தை ஸ்தாபிக்குமாறு வேண்டிய காலத்துப் பிள்ளையார் அதற்கு உடன்பாடு உடன் கூறி, ஆலவாயழனிறக் கடவுள் சந்திப்புக்கு 'வேத வேள்வியை நிந்தனை செய்துழ லாதமில்லி யமணொடு தேரரை வாதில்வென் றழிக்கத் திருவுள்ளமே' என வினாவிடை பெற்றுச் சென்று வெற்றி கொண்டமையும் மதங்கள் சிவபிரானாற் சோபான முறையாக உண்டாக்கப் பட்டமையை நன்கு உணர்த்தும்."

உரையாற்றல் தோன்ற எழுதுபவர் இவர் என்பது கீழ்வரும் பகுதிகளால் நன்கு விளங்கும்:—

இல்லறமல்லது நல்லறமன்று என்பது: இல்லறம்—இல்லறமும், அல்லது—அதுவல்லாததாகிய துறவறமும், நல்லறம்; அன்று—(அஃஃதனைதயனுட்டிக்கும் அறிவாற்றலுடையார்க்கு) நன்மைபயக்கும் அறங்களாம்; அன்று—தீமை பயக்கும் அறங்களல்ல எனப் பொருள் தரலின் மேலதனோடு இது முரணாமை யுணர்க. பான் மயக்க முறாமைப் பொருட்டு அன்று என்பதனை இல்லறத்தோடுங் கூட்டித் தனித்தனி முடிவு செய்து கொள்க.

சிற்றின்பம்—உலக இன்பம்; அது சிறிது போழ்தினுள் நிலவுவதன்றி அழிந்து போதரலின் அப் பெயர்த்தாயிற்று. இக் கருத்துப் பற்றியே அரதன வாக்கிய அடிகளும் 'தினைத்தனை யுள்ள தோர் பூவினிற்றேன்' என்று சிலேடையாகத் திருவாசகத்துள் ஓதியருளியது மென்றுணர்க.

சைவ நூல்களில் விசேஷமான பற்றுடைய இவர் சிவராச தானியாக விளங்கும் சிதம்பரஸ்தலத்தில் மிக்க ஈடுபாடுடையவர் (முதுமொழி மேல் வைப்பு 196.) சிதம்பரம் ஆலயத்திலுள்ள பொதுச் சபை இவரால் கட்டப்பட்டதென்று சொல்வார்கள்.

தம் இறுதிக் காலத்தில் இவர் சிதம்பரம் சென்று அங்கே பரிபூரண நிலையை அடைந்தனர் என்பர்.

## 545. வெள்ளூர்க் கவிராயர்

வெள்ளூர் என்னும் ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார்திருநகரி என்னும் ஊருக்குப்பக்கத்தில் உள்ளது என்று தெரிகிறது.

## 546. வேங்கடத் துறைவான் கவிராயர்

மாறன் கோவை என்னும் நூலின் ஆசிரியர்.

## 547. வேங்கட நாராயணையங்கார்

இவர் இயற்றிய நூல் நட்சத்திர மாலை.

## 548. வேணாட்டடிகள்

வேணாடென்பது கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று.

இவர் திருவிசைப்பாவாசிரியர்களுள் ஒருவர். இவர் செய்த திருவிசைப்பாப் பெற்ற ஸ்தலம் 1. கோயில் பதி. 1 பா. 10.

"மண்ணோடு விண்ணளவும் மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா தொழிதலும்நான் மிகக்கலங்கி
அண்ணாவோ என்றண்ணாந் தலமந்து விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே."

## 549, வேதாந்த தேசிகர்

இவரது இயற்பெயர் வேங்கடநாதாசாரியர் என்பது; நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் கூறப்படுவர். இவரது ஊர் காஞ்சிபுரத்தைச் சார்ந்த தூப்புல்; விசுவாமித்திர கோத்திரத்திற் பிறந்தவர்; ஸம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய இரு மொழிப் புலமை வாய்ந்தவர். இவர் இயற்றிய தமிழ் நூல்கள்:-

மும்மணிக்கோவை, நவரத்தின மாலை, ஊசற்பா, பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஏசற்பா, பரமத பங்கம், திருச்சின்ன மாலை, அடைக்கலப் பத்து, பன்னிரு நாமப் பாட்டு, வைணவ தினசரி, அத்திகிரி மகாத்மியம், சீரங்க நாச்சியார் துதி, பூத்துதி, நீளாத்துதி, தசாவதார தோத்திரம், பரமபத சோபானம், பிரபந்தசாரம், ஆகார நியமம், திருமந்திரச் சுருக்கு, சரமச்சுலோகச் சுருக்கு, கீதார்த்த சங்கிரகம்.

இவர் வடமொழியில் எண்பத்திரண்டு நூல்கள் இயற்றியுள்ளார். இவர் புதல்வர் வரதர்.

## 550. வேதாரணியம் சிவகுரு தேசிகர்

இவர் வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழியிலும் வல்லவர்; மாயூரம் முத்து வைத்தியநாத தேசிகர்க்குப் பாடஞ் சொன்னவர்.

## 551. வேதாரணியம் சோமாக்கந்த பட்டாரகர்

இவர் சைவ வேளாளரில் அபிஷிக்த மரபினர்; மாணிக்கப்பட்டாரகருடைய புத்திரர். மறைசை வீரகத்துச் சேதக விநாயகர் இருபா விருபஃது என்னும் பிரபந்தமொன்று இவராற் செய்யப்பட்டுள்ளது.

## 552. வேதாரணியம் திருச்சிற்றம்பல முனிவர்

மறைசைத் திருச்சிற்றம்பல முனிவரென்றுங் கூறப்படுவர்; ஞானமூர்த்தி பரம்பரையினர். அத்தி

யாயம் 36ம்,விருத்தம் 1474-ம் உள்ள **காவேரிப் புராணம்** என்பது இவராற் செய்யப்பட்டுள்ளது. இதில் நூல் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்றுண்டு.

## 553. வேம்பத்தூர் பிச்சுவையர்

**கனலும் நீரும்**

வானத் துலாவுகையால் வன்குளக்கண் மேவுதலால்
ஈனமிலா வண்டரையா னின்பத்தாற்—பானக்
கனலே விளைகுன்றைக் கந்தவே ணாட்டி
லனலே குளிர்ச்சிதரு மாரம்.

**காக்கையும் மயிலும்**

அங்குமர னடைந்தே யண்ணுபலத் தோகையுற்றே
துங்கவன மேயுந் தோற்றத்தாற்—சங்கையிலா
வாக்கை யெடுக்காம லருள்குன்றை வேள்கிரியிற்
காக்கை மயிலாகுங் காண்.

**வேறு**

நிம்பையில் வந்துங் கனனே ரநவரத
மும்பயில் யாப்புக்கள் மொழிபலருள்—ளும்பலகால்
மெய்யன்போ டேகற்றோர் மெச்சப்பா டும்பிச்சு
வைய்யன்போற் பாடுபவ ரார்.

## 554. வேளூர் ஆத்மநாத தேசிகர்

இவர் சோழ மண்டலஞ் சென்ற பின்பு சிலருக்குச் சீட்டுக்கவிகள் அனுப்பியிருக்கின்றனர். சோழ மண்டல சதகத்தின் இறுதிச் செய்யுட்களால் இவர் சரித்திரத்தில் சில தெரிகின்றன.

இவர் திருவாவடுதுறை இராமலிங்க தேசிகர் காலத்திருந்தவர். இவர் **சோழ மண்டல சதக** ஆசிரியர்.

## 555. வேளூர் இராமச்சந்திரக் கவிராயர்

இவர் ஊர் தொண்டை நாட்டைச்சேர்ந்த இராசநல்லூர். இவர் பட்டுராஜா. இவர் முன்கூறிய முத்துராமக் கவிராயருடைய ஆசிரியர். கம்மாள இராம

சாமிக் கவிராயருடைய மாணாக்கர். பெரும் பாலும் சென்னையிலேயே வசித்தவர். இவர் செய்த நூல்கள்;

சகுந்தலை விலாசம், தாருகா விலாசம், இரணிய வாசகப்பா, இரங்கூன் சண்டை நாடகம், புரூரவச் சக்கரவர்த்தி நாடகம், மகா பாரத விலாசம் (வில் வளைப்பு, அரக்கு மாளிகை கொளுத்தல்)

இவர் செய்த தனிப்பாடல்கள் பல. வண்ணம் செய்தலில் வல்லவர். இவர் சிறந்த நாடக ஆசிரியர்.

''ஆவீன மழைபொழிய வில்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சிணைகள் கொடுவென் றாரே''

''கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தா னாரைத்தா
னோவத்தா னையோ வெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணி னானே.''

''கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்
காடெறியும் அவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநா னல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே''

## 556. வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

திருவாவடுதுறையில் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திக்குப் பின் 14-ஆம் பட்டத்தில் வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் என்பவர் ஆதீனகர்த்தராக வீற்றிருந்தார். அவர் வடமொழி தென்மொழி நூல்களிலும், சிவாகமங்களிலும், மெய்கண்ட சாத்திரம், பண்டாரசாத்திரம், சித்த நூல்கள் முதலியவற்றிலும் பிரசங்கப் பயிற்சி மிக்கவர்; பாடஞ்சொல்வதில் மிக்க ஆற்றலுடையவர். பிரசங்க சத்தி வாய்ந்தவர்; வடமொழி வித்துவான்கள் தென்மொழி வாணர் பலருடைய இடையே இருந்து தினந்தோறும் அவர்களுடன் சல்லாபம் செய்து கொண்டு மகிழ்ச்சியோடு காலங்கழிப்பவர். அவர் அவ்வப்பொழுது சமயோசிதமாகப் பேசிவந்த வார்த்தைகளும், சிலேடையான மொழிகளும், வாக்கியங்களும் இன்றும் அங்கங்கே பலரால் மிகவும் பாராட்டி வழங்கப்படுகின்றன. அம் மடத்தில் இப்பொழுது பல வகையாக எழுதப்படும் திருமுக சம்பிரதாயங்களும், கடித வக்கணைகளும், உள்ள சட்ட திட்டங்களும் அவர் புதுப்பித்தனவே என்பர்.

## 557. வைத்திய நாத தேசிகர்

**வழுவூர் வீரட்டானப் புராண ஆசிரியர்.**

விதுவை யணிந்த பிரான்வழுவூர்
வீரட்டானப் புராணத்தைப்
புதுமை பெறு செந் தமிழதனாற்
புவியோர் போற்றப் புனைதல்செய்தான்
சதுரன் றவத்துக் கணையான
சைவன் தமிழ்நற் கடலானோன்
மதுரக் கவிதை பொழி கவியாம்
வயித்திய நாத தேசிகனே.

என்பதனாலுணர்க. இதில் 'கருத்த திருமலையின் மன்னன் ஆரநெல்லையின் மகிபன், பகட முடைக் குரிசில், அருணாசலம் வாழி' யென்று கூறப்பட்டுள்ளது.

## 558. வைத்தியநாத தேசிகர்

திருவாரூர் வன்மீகநாத தேசிகரின் மூத்த தாரத்தின் புதல்வர். தலவணை கோத்திரம். தபஸ்வினி கோத்திரம். இவர்களுக்குத் திருவாரூர். கோயில் தியாகேசன் உற்சவத்தில் ஆதிசண்டேசுரர் சந்நிதியில் தமிழ் மொழியில் உத்ஸவ செலவை மொழி பெயர்க்கும் பெருமை பெற்றவர். இவருக்கு அறுவர் புதல்வர். துர்வாசமடத்துத் தலைவரும் கோயிலுட் குறைக் கட்டளை விசாரணை கர்த்தருமாகிய அகோரத் தம்பிரானிடம் கற்றவர். யோகபட்டம் கட்டியிருந்த (தியானம்) பொழுது காளத்தியில்அகோரத்தம்பிரான் குருவாகத் தோன்றியது கண்டு காசி சென்றார். காளஹஸ்தியிற் றுயின்ற பொழுது தலைமேல் அரவுபடமெடுத்தது கண்டு அகோரத் தம்பிரான் "உன்னால் தமிழ்நாட்டிற்குப் பெருநலன் விளையும்; திரும்பிச் செல்க!" என்று விடுத்துச் சென்றவர் என்றும்கூறுவர்.

நெல்லையில் தொல்காப்பியம் முற்றும் தெரிந்த ஒருவரிருப்பதாக அறிந்து பாடங் கேட்கச் செல்லுகையில் அவர் இறந்து விட்டதை அறிந்து அவர் வீட்டிலிருந்த சுவடிகளைப் பெற்று வந்தனர். மயிலத்திற்கு வந்து ஸ்ரீசிவஞான பாலையர் மீது **பாசவதைப் பரணியும், மயிலம் பிள்ளைத்தமிழும்** பாடினார். சிவஞான பாலையர் சித்தபரம்பரை.

பிறநூல்கள்: இலக்கண விளக்கம், ரத்னகிரி புராணம், திருவாரூர் பன்மணி மாலை, நல்லூர்ப் புராணம்.

குமாரர்கள் சதாசிவ தேசிகர்; இவர் குமாரர் தியாகராஜ தேசிகர். இவர் செய்தது அன்பர்போற்றிக் கலிவெண்பா, திருக்கூட்டச் சதகம்.

திருவாரூர்ப் பள்ளுப் பண்டார மென்பவர் தருமபுரத்தின் ஆசிரியராகிய ஞானப்பிரகாசரே.

வைத்தியநாத தேசிகர் பரம்பரையினர் இருந்த இடம் மணிவிளானென்னும் கிராமம். இது தாமோதரம் பிள்ளையால் தியாகராஜ தேசிகருக்கு முற்றூட்டாகக் கொடுக்கப்பட்டது. தியாகராஜ தேசிகர் பிள்ளைகள் அறுவருள் ஒருவராகிய வன்மீகநாத தேசிகரிடம் கீழ்வேளூர்ச் சுப்பையா பண்டாரம் படித்தார். இலக்கண விளக்க வைத்தியநாத தேசிகர் அவர்கள் இருந்த வீடு கமலாலயத் தென்கரையின் தெற்குத் தம்பிரான் புதுத்தெரு (இப்பொழுது செட்டி வேலைக்காரன் தெருவிற்) தென்சிறகில் இருந்தது. சூணாம்பட்டில் பாசவதைப் பரணி பாடினதற்காக சிவஞான பாலையராற் கொடுக்கப்பட்ட உப்பளமும் நிலமும் உண்டு.

## 559. வைத்தியநாத முனிவர்

இவரது ஊர் யாழ்ப்பாணத்துள்ள அளவெட்டி. பிற்காலத்தில் சிதம்பரத்தில் இருந்தார். குலம்: வேளாளர் குலம். சமயம் சைவம். வடமொழி தென்மொழிகளில் வல்லவர். **வியாக்கிரபுர மான்மியம்** நூலாசிரியர், புகலூரிலிருந்த அகஸ்திய குலத்துப் பிறந்த சரவணபவருடைய சிஷ்யர்.

''மாதங்க வரைவி லேந்தி
    மாலம்பால் புரங்கள் எய்த
மாதங்க மொருபால் உற்ற
    வானவன் மைந்தன் வாழும்
மாதங்க மார்பி னான்றன்
    மருகனான் மங்கை முக்கண்
மாதங்க முகத்தி னான்றன்
    மலர்ப்பதம் வழுத்து வாமே.''

## 560. ஸ்ரீநிவாச ராகவாசாரியார்

இவர் வடமொழியிலும் தென்மொழியிலும் புலமை வாய்ந்தவர்; திருத்தணிகை விசாகப் பெருமாளையருக்குப் பின்பு சென்னை பிரஸிடென்ஸி

காலேஜில் தமிழாசிரியராக இருந்து விளங்கியவர். **விஷ்ணு புராணத்தையும், உத்தர ராமாயணத்தையும்** தமிழில் பெயர்த்து வெளியிட்டிருக்கிறார். **தண்டியலங்கார சாரம்** என்ற மிகவும் அருமையான தான அலங்கார இலக்கண வசன நூலொன்றையும் இயற்றினார்.

## 561. ஸ்ரீநிவாஸையங்கார்

இவர் என் ஆசிரியராகிய சடகோபையங்காருடைய பாட்டனார். சிறந்த ஞானி. அத்வைதசாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவர். தமிழ்ப்புலமையும் மிக்கவர். இவர் **நவராத்திரி நாடகம், சாரங்கபாணி நொண்டி நாடகம்** முதலியவற்றை இயற்றியிருக்கிறார். இவருக்கு இவர் குடிப்பெயராகிய சண்பக மன்னாரென்பதே இயற்பெயரைப் போல வழங்கி வந்தது. இவரிடம் வேதாந்த சாஸ்திரங்களைப் பாடங் கேட்டுத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அங்கங்கே உள்ள ஊர்களில் மடங்களை அமைத்துக் கொண்டு அடக்கமாகக் காலங்கழித்து வந்த பரதேசிகள் பலர். இவரும் அரியலூரில் தமக்கென ஒரு மடம்கட்டி அங்கேயே இருந்து பாடஞ் சொல்லி வந்தார். பிற்காலத்தில் இவருடைய குருபூஜை அரியலூரிலும், இவர் மாணாக்கர்கள் இருந்த இடங்களிலும் வருஷந்தோறும் நடந்து வந்தது. இவர் பேரராகிய சடகோபையங்காரை உட்கார வைத்து அந்தக் குருபூஜையில் சண்பக மன்னாராகப் பாவித்து வழிபடுவார்கள்.

## 562. ஸ்ரீ வில்லிபுத்தூர் திருவடி தாசர்

இவர் சோழியர்; அந்தத் தலத்து ஆண்டாள் கோயிலில் மடைப்பள்ளி கைங்கர்யம் செய்து வந்தவர். அங்ஙனம் செய்து வருங்காலத்தில் குட்டவியாதியுண்டாயிற்று. அதுபற்றி மேலதிகாரிகளால் அவ்வேலையினின்று நீக்கப்பட்டார். அந்நோய் அதிகரித்தது.

அதனால் வீட்டுக்கு வெளியே தனியிடத்தில் குடிசை கட்டி அதில் வைக்கப்பட்டார். இவரை நீராட்டி ஆகாரம் கொடுத்து வருவது தாயின் வழக்கமாக இருந்தது. தாயின் பெயர் கோதை. மழை மிகுதியால் ஒருநாள் அவள் வருவதற்குக் காலதாமதமாயிற்று. கோயிலில் உண்டாகிய வாத்திய முழக்கங்களை முறையே கேட்டு, இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன நிவேதனங்கள் அமுது செய்யப்படுமென்பதை அறிந்து, கோதையை நினைந்து, 'அடியேன் பசியால் வருந்துகின்றேனே! உமக்கு அடியேன் பால் அருளில்லையே' யென்று வருந்திக் கொண்டிருக்கும் போது கோதை என்ற ஒரு பெண் தாம்பாளம் ஒன்றில் பல வகையான சிற்றுண்டிகளையும் பேருண்டிகளையும் எடுத்து வந்து இவரை யுண்பித்துக் கையால் இவர் தேகத்தையும் தடவிக் கொடுத்து விட்டுச் சென்றாள். பின்பு மழை நின்றவுடன் வழக்கப்படி தாய் வந்தாள். நீ இப்பொழுதுதானே வந்து போனா யென்றார். அவள் திகைத்து நின்றாள். கோயிலில்உணவின் வகைகளில் கட்டி ஒவ்வொன்று குறைந்திருப்பது கண்டு ஒருவருக்கொருவர் வாதம் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது ஒருவர்மீது ஆவேசமாக வந்த நாச்சியார் 'இன்ன இடத்திலுள்ள என் அடியவன் பொருட்டு நானே எடுத்துக் கொடுத்து வந்தனன். அவனைச் சென்று பார்த்து வாருங்கள்' என்றார். உடனே இவர்கள் போய்ப் பார்க்கையில் யாதொரு வியாதியுமின்றி அவர் மிகுந்த ஒளியோடிருத்தலைக் கண்டு விம்மித மெய்தினார். அப்போது திருவடி தாஸர் கோதையின் மீது **சந்திர கலா மாலை** என்று ஒரு நூல் இயற்றினர். அப்பால் தாய் முதலியவர்கள் இவரை வீட்டுக்கழைத்து வந்து உபசரித்தனர்.

**அந்த நூலில் உள்ள சில பாடல்கள்:**

1. ஆசுமது ரஞ்சித்ர வித்தார மெனவகுத்
   தறையுமிய லிசைநாடகத்
   தகவல்வெண் பாவஞ்சி கலியெனும் பாநான்க
   தாகியவகை தொகையினால்

ஓசைபெறு சொற்பொரு ளெழுத்தலங் காரம் யாப்
 புறுபஞ்ச வதிகாரமென்
றோதிய விலக்கணத் தேதமிழ்க் கவிதையுட்
 பெரும்பிரபந் தங்கள் யாவும்
பேசுமுறை யேதுமறி யாதவென் புன்றொடைப்
 பிழைதீரு மென்ப தெண்ணிற்
பெய்திடு மணற்சோறு தன்னிற் பிராய்ந்து
 பேணுமென லோங்கு மாடத்
தேசுதிகழ் புதுவையிற் கோதையரு ளென்னுமச்
 செய்கையை யுணர்ந் தெனதுசொற்
செந்தொடை யை நன்றெனக் கொளுமினிய வமுதெனுஞ்
 செந்தமிழ்க் கவிவாணரே.

2. பூமாதெனத் தேவர் போற்றிடத் தவமுனிவர்
 புண்ணியப் பலனி தென்னப்
புவியோ டனைத்துலகு மீன்றதா யெனவறிஞர்
 போதமிகு செல்வ மென்ன
நாமா தெனப்புலவர் கொண்டாட வாழ்வார்கள்
 நங்குல மடந்தை யென்ன
நந்திரு வரங்கேசர் தந்திருத் தேவியென
 நானிலத் தவத ரித்தாய்
பாமாறன் முத்தமிழ்த் திருவாய் மொழிப்பனுவல்
 பாராட்டிப் பாராட்டிடப்
பள்ளிதுயில் கொள்ளுமென் கிள்ளைக்கு வள்ளப்
 பசுந்தேற லூட்ட மெல்லத்
தேமா நறுங்கனி யருத்திக் கருத்துடன்
 செங்கையி லிருத்தி வேதத்
திருப்பாவை மங்கையர் விருப்பாற் பயிற்றிடுந்
 திருமல்லி வள நாடியே!

3. புழுநெளிந் துண்டுவளர் தசைநரம் பென்புதோல்
 புண்ணிணக் கும்பி நாற்றப்
புலைப்பாழ் குழிச்சல மலச்சேற் றழுந்திப்
 புதைந்துவீழ்ந் தேனை யெவரும்
தொழுமினிய பங்கயத் தாளா லெடுத்துமெய்ச்
 சோதியமு தாலயமலர்த்
துணைவிழியி லானந்த வருண்மாரி பெய்திடத்
 தோயக் குளிப்பாட் டினை

தழுவுகுங் குமமுலைக் கெழுதுவார் சிந்துரஞ்
சாத்துவார் பூச்செருகுவார்
தண்டமிழ்ப் பாடுவார் தெண்டனிட் டாடுவார்
சந்தியிற் பந்தடிப்பார்
செழுநிலவு கந்திளைஞர் மயலுற முயங்குவார்
தெருவினிற் குரவை பிணைவார்
தேர்த்திரு விழாத்தினம் போற்றிவிளை யாட்டுறுந்
திருமல்லி வளநாடியே!

4. காற்றைப் பிடித்தொரு பீற்றற் றுருத்தியைக்
கலிவிடுதி வீட்டை மோட்டுக்
காக்கைகழு கீர்த்துண்ணும் யாக்கையைத் தேக்குபொய்க்
காமநோய்த் தீமனத்துச்
சோற்றுச் சுவர்க்குருதி நாற்றச் சவத்தைவெகு
துன்பப் பெரும் பொந்தினைத்
துர்க்கந்த முற்றமல பாண்டத்தை யென்னாற்
சுமக்கமுடி யாதுகண்டாய்.
ஆற்றிற் கிடந்தகய லேற்றைப் பிளந்துசுற
வலையிற் புகுந்து வயலூ
டாளைத் துரந்து விரிபாளைக் கருங்கமுக
லைத்துக் குலைசெந்நெல் சூழ்
சேற்றிற் குதித்துவயல் நாற்றைப் பதிக்குமவர்
செம்முகத் துலவு கெண்டைத்
திண்டிறற் கஞ்சியுயர் கொண்டல்புக் குய்ந்து வளர்
திருமல்லி வளநாடியே!

## 563. ஸ்ரீ வில்லிபுத்தூர் பொன்னுசெட்டியார்

இவர் சைவர். விடுகவிகள் பல இயற்றியவர். வித்துவான்கள் நூல்கள் அரங்கேற்றம் செய்யும்போது அவைத் தலைமை வகிப்பார்.

## 564. ஸ்ரீ வில்லிபுத்தூர் ராமலுவையங்கார்

இவர் தெலுங்கு வைணவர். இவர் குமாரர் வித்துவான் ஸ்ரீநிவாசையங்கார். இவர் பேரையூர் சமஸ்தான வித்வான் பரம்பரையைச் சார்ந்தவர்.

## 565. ஷேக்கனாப் புலவர்

உமறுகவி காலத்தவர். இவராற் செய்யப்பட்ட நூல் புதூஹேஷாமென்பது. இவர் முகம்மதியர்.

# பிற்சேர்க்கை

புத்தகம் அச்சிடத் தொடங்கிய பின் பெறப்பட்ட சில புலவர்களின் வரலாறுகள் தொகுக்கப்பட்டு அவையும் அகராதி வரிசையிலேயே இதன்பின் கொடுக்கப்பட்டுள்ளன.

## 566. அடியார்க்கு நல்லார்

இவருடைய வருணம், சமயம், காலமாகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப் படுவனற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தல் பற்றி இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. இவர் மற்றையுரையாசிரியர்கள் போலன்றித் தாம் எடுத்துக் காட்டும் மேற்கோள் இன்ன இன்ன நூல்களின்கண் உள்ளனவென்று பெரும்பாலும் புலப்படுத்தியிருக்கிறார். சில சிலவிடத்துப் பதப்பிரயோசனமும், அலங்காரமும், மெய்ப்பாடுகளும், வேறு சில குறிப்புக்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

ஐந்திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருளாகிய இவற்றுள் ஒவ்வொன்றின் வகை பலவற்றிற்கும் சிலப்பதிகாரத்திலிருந்தே உதாரணம் காட்டி விளக்கியிருக்கின்றனர். இந்நூல் செய்யப்படும் பொழுதிருந்த இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்கள் பலவும் இவர் காலத்து இறந்து போனமையால் இவர் அவ்விசை நாடகப்பகுதிகட்கு இசைநுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல் என்னும் ஐந்து நூல்களையுமே மேற்கோளாகக் கொண்டனர். சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில், "சித்திரைத் திங்கள் சேர்ந்தென" (அடி, 64) என்றும், கட்டுரை காதையில் "ஆடித் திங்கட் பேரிருள் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று வெள்ளி வாரத்து" (அடி 133-5) என்றும் சொல்லப்பட்டுள்ள காலவரையறையைக் கொண்டும், அவ்வவ்விடத்து நிகழ்ந்தவற்றைக் கொண்டும், ஊகித்துக் கோவலன் கண்ணகி இருவரும் இன்ன காலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டார்களென்றும், இன்ன இன்ன காலத்து இன்னது இன்னது செய்தார்களென்றும் எழுதிக்

கொண்டு போகிறார்; பக்கம் 235, 267, 342, 372-3, 386. இதனால் இவருடைய கணிதநூற்பயிற்சி விளங்குகின்றது.

இவருடைய உரைநடை சிற்சிலவிடத்து எதுகை மோனை முதலியவற்றோடு கூடி இனிய சுவை பயந்து செய்யுள் நடையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப் பகுதி ஆங்காங்குள்ள உரையாலேயே புலப்படவேண்டுமென்பது இவருடைய கருத்தாதலால் முன்னெழுதியவற்றையே பின்னுமெழுதுவர். இவர் கருத்து இன்னதாதலை இப்புத்தகத்தின் 379-ஆம் பக்கம் முதலியவற்றிற் காண்க. மூலத்தில் எவ்விடத்தேனும் திசைச்சொற்கள் வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக் காட்டி இன்ன சொல் இன்ன நாட்டு வழக்கென்றும், முற்காலத்து வழங்கிய பழமொழிகளின் கருத்து எவ்விடத்தேனும் வந்திருக்குமாயின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்னது இன்ன பழமொழியென்றும் புலப்படுத்துவார். ஒரு தலையாகப் பொருள் கொள்ளாது பலரும் தத்தமக்குத் தெரிந்தவாறே பொருள் கொள்ளக் கிடந்த போற்றியென்பதை இவர் இகரவீற்று வியங்கோளாகக் கொண்டு போற்றுவாயாக என்று பொருள் செய்திருக்கிறார்; பக்கம் 345. நச்சினார்க்கினியரும் காட்டியென்பதை இகரவீற்று வியங்கோளாகக் கொண்டார் (சீவக 466.) இவர், "கானல் வரியில் விரியக் கூறுதும் (பக் 88, 100) என்றும், 'முன்னர் ஆணி என்பதனுட் கூறினாம் (பக் 231) என்றும் எழுதியிருத்தலால் இவர் கானல் வரிக்கு உரை செய்திருந்தனர் என்பதும், 'அழற்படுகாதைக் கண்ணே விரித்துக் கூறுதும் (பக். 115) என்றும், கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம் (பக். 235) என்றும் எழுதியிருத்தலால், அழற்படுகாதை முதலியவற்றிற்கும் உரை செய்யவெண்ணியிருந்தனர் என்பதும் வெளியாகின்றன,

இவரைக் கொண்டு சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றுவித்தவர் பொப்பண்ண காங்கேயர் கோன் என்பவர். இவருடைய பெருமையை மூன்று பாடல் களால் நன்கு அறியலாம். அவையாவன:-

பருந்து நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளும்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான்.

ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவு மனையா னிரம்பயர் காவலனே.

காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்தக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே.

சிலப்பதிகார உரையால் இவர்காலத்தில் இன்ன இன்ன நூல்கள் வழங்கிவந்தனவென்றும், வசனநடை யாகக் கட்டுரைச் சுவைப்பட எழுதும் வன்மையுள்ளவ ரென்றும் தெரிகிறது. மற்றவர்களைப் போலன்றி இடை இடையே காட்டும் சூத்திரங்கள், பாடல்கள் முதலியவற்றை இன்ன இன்ன நூலைச் சார்ந்தவை யென்று விளக்கிக்கொண்டு போவர்.

அடியார்க்கு நல்லார் என்பது மதுரை சோம சுந்தரக் கடவுளுடைய திருநாமங்களுள் ஒன்றாகப் பழைய திருவிளையாடலில் வருதலின் இவர் பெயர் அதுவாக இருக்கலாமோ என்று தோன்றுகிறது.

இவர் சைன நூல்களில் நல்ல பயிற்சியுள்ளவர் என்பதைச் சிலப்பதிகார உரையின் மூலம் அறியலாம்.

அடியார்க்கு நல்லான் என்ற பெயரினால் இவர் சைவசமயத்தைச் சார்ந்தவர் என்று அறுதியிட்டும் கூறலாம் என்று தெரிகிறது.

## 567. அரும்பதவுரையாசிரியர்

இவருடைய பெயர் முதலியவற்றுள் யாதொன்றும் தெரியவில்லை. இவ்வரும்பத வுரையையே பெருங் கருவியாகக் கொண்டு சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் உரை செய்தனர். அஃது இவ்விரண்டு உரைகளையும் வைத்து ஒப்பு நோக்கின் நன்கு விளங்கும். ஆயினும் சிலப்பதிகாரத்தில் இவ்விரண்டு உரையாசிரியர்களும் கொண்ட பாடம் சிலசில விடத்து வேறுபட்டுள்ளன; அவ்வேறுபாடுகள் அவ்வவ்விடத்துள்ள உரைநடைகளால் நன்கு புலப்படும். அடியார்க்கு நல்லார் உரையிற் காணப்படாத பலமேற்கோள்களும் சில நூற்பெயர்களும்இவ்வுரையிற் காணப்படுகின்றன. வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும் முதலை மட்டுமேனும் சொற்களையேனும் எழுதிப்பொருளெழுதுவதும், ஒன்றையுமெழுதாது பொருளை மட்டும் எழுதிக் கொண்டு போவதும் இவ்வுரையாசிரியருடைய கொள்கையாக இருக்கின்றன. இதில் சங்கச் செய்யுட்களுடைய கருத்து முதலியவற்றை இவர் ஆங்காங்கு விளக்கியிருப்பதுடன் சிலசிலவிடத்து மிகச் செவ்விதாகப் பதசாரமும் எழுதியிருக்கிறார். அடியார்க்கு நல்லாருரையால் புலப்படாத சில விஷயங்களை இவ்வரும்பதவுரையாசிரியர் விளக்குகின்றார். இவர் உரையில் பல இடங்களில் வாக்கியங்கள் பூரணமாக எழுதப்படவில்லை. சில பாகங்களுக்கு ஒரு வகையாக உரையெழுதிப் பின்பு வேறு உரை எழுதும்பொழுது அதனைப் புலப்படுத்தற்குரிய உம்மை முதலியன கிடையா. இவ்வுரையிலுள்ள முடிவுகளும் பொருளும் இல்லையாயின் அடியார்க்கு நல்லாருடைய உரை கிடையாத பாகங்களுக்குப்பொருள் காண்பது அரிது.

## 568. அய்யுசாமிப் புலவர்

இவர் திருப்பெருந்துறையைச் சார்ந்த ஏம்பலென்னும் ஊரினர்; பரம்பரைக் கல்விமான்; இவர்

தம்முடைய குமாரரான அருணாசலப் புலவரென்பவரை அழைத்துக் கொண்டு வந்து பிள்ளையவர்களிடம் விட்டு, "சில வருடம் இவனை உடன் வைத்துப் படிப்பித்து அனுப்ப வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டார். அவ்வாறே அவருக்குப் பிள்ளையவர்கள் பாடஞ் சொல்லி வந்தார். அப்பால் இவர் ஏம்பலிலுள்ள முத்தையனென்னும் ஐயனார்மீது தாம் பாடியிருந்த பிள்ளைத் தமிழொன்றைப் படித்துக்காட்டிச் செப்பஞ்செய்து கொண்டதன்றிப் பிள்ளையவர்களுடைய சிறப்புப்பாயிரமொன்றையும் பெற்றுச் சென்றார். அச்சிறப்புப் பாயிரம் வருமாறு:

"குவளையரு கதன்முதலல் லவைகூடப் பிறையெனவுட்
 கொண்டு நாணித்
தவளைகுதித் திடுதடஞ்சா ரேம்பல்நகர் முத்தையன்
 தன்றாட் சேயன்
புவளைதரும் படிபிள்ளைத் தமிழ்சொற்றா ணியற்சொல்லும்
 பொருளும் வாய்ப்பத்
திவளையிலக் கணமுந்தே ரப்புச்சா மிப்புலவன்
 திறன்மிக் கோனே.

[குவளை யருகு—குவளைமலரின் பக்கத்தே. குவளை யென்னுஞ் சொல்லின் முதலெழுத்தல்லாத எழுத்துக்கள்: வளை; வளை—சங்கு. அன்பு வளைதரும். திவள் ஐயிலக்கணம்—விளங்குகின்ற பஞ்ச லட்சணம்]

## 569. அம்மைச்சி

காஞ்சீபுரத்தில் அம்மைச்சி யென்ற ஒருத்தி இருந்தாள். அவள் தமிழ்ப் புலமை யுடையவள். அவள்வீடு வரதராஜப் பெருமானது தேரோடும் வீதியில் இருந்தது. ஒருமுறை அந்தத் தேர் போகும் பொருட்டு அவள் வீட்டைச் சிலர் இடித்துவிட்டார்கள். அப்போது அவள் வருந்தி இரண்டு செய்யுட்கள் பாடினாள். அவற்றுள், 'பெருமாளே! பாம்பையுங் குரங்கையும் உமக்கு ஊழியக்காரராகக் கூட்டி

வந்தீரே! என்னுடைய வீட்டை இலங்கைக் கோட்டை யென்று நினைத்தீரோ?" என்னும் கருத்துடையது ஒன்று. அது வருமாறு:

"பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பமைந்த
கொம்மைச்சிகரிலங்கைக் கோட்டையென்று கொண்டீரோ
அம்மைச்சி வாழு மகம்?

இதில் தன் வீட்டை இடித்தவர்களைப் பாம்பென்றும் குரங்கென்றும் சமற்காரமாக நிந்தித்திருப்பது அவளுடைய புலமையின் பயனென்று தெரிகின்றதல்லவா!

## 570. அனந்த கவிராயர்

இவர் இரகுநாத சேதுபதி வேந்தருடைய ஆஸ்தான வித்துவானாக இருந்தவர். இவர் அமிர்த கவிராயருக்கு உறவினர்; தமிழ்ச் செய்யுட்களை விரைவிலே பாடக்கூடியவர்; மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி என்ற நூலைப் பாடியவர். இவர் இரகுநாத சேதுபதி அவர்களைப் பாராட்டிப் பல செய்யுட்களை இயற்றியுள்ளார். இவர் சில பிரபந்தங்கள் பாடியிருக்கலாம் என்று தெரிகிறது, ஆனால் அவை இப்போது கிடைக்கவில்லை. சேதுபதி வேந்தர் அனந்த கவிராயருக்கு மானூர் என்றதோர் ஊரை வழங்கினார். அதுநல்ல வளப்பமுடையது.

மானூரைப் பெற்ற கவிராயர் மிக மகிழ்ந்து, "மகாராஜா அவர்கள் பல கலைகளைத் தம்மிடம் கொண்டு மானை எனக்கு வழங்கினார்கள்" என்று சாதுரியமாகக் கூறினார். கலையறிவுள்ளவரானமையாலேயே இந்தப் பரிசு வழங்கினாரென்ற கருத்துக் கொண்டு இங்ஙனம் கூறினார்.

இந்த வாக்கியத்திலே "அரசர் பல ஆண்மான்களை வைத்துக் கொண்டு எனக்கு ஒரு பெண்மானை அளித்தார்" என்றும் ஒருபொருள் தொனிக்கிறது. அதுகேட்ட அரசர் "உங்கள் மானுக்குக் கலையும் தருகிறேன்" என்று சொல்லிக் கலையூர் என்றதோர் ஊரையும் கவிராயருக்குப் பரிசாக அளித்தார்.

அரசருடைய சாதுரியத்தையும் வள்ளன்மையையும் புலவர்கள் பாராட்டினார்கள். அனந்த கவிராயர் மானூரையும், கலையூரையும் ஒருங்கே தமக்கு உரியனவாக்கிக் கொண்டார்.

ஒரு சமயம் அனந்த கவிராயரும் அமிர்த கவிராயரும் ஒரு கவிதைப் போரில் ஈடுபட்டார்கள். வண்ணம் ஒன்றைக் குறித்த காலவரையறைக்குள் இருவரும் பாடவேண்டுமென்றும், அதில் இன்ன இன்ன பொருளும் இன்ன இன்ன முறையில் அமைய வேண்டுமென்றும். யார் முதலில் பாடி முடிக்கின்றாரோ அவர் மற்றவரின் காதை அறுத்துவிடுவதென்றும் வரையறை செய்து கொண்டார்கள். அரசர்முன்னிலையில் இது நடைபெற்றது.

இருவரும் வண்ணம் பாடத் தொடங்கினர். அமிர்த கவிராயர் வண்ணம் பாடி எழுதி முடித்து வைத்து விட்டார். அப்போது அனந்த கவிராயர் இறுதி வரியை எழுதிக் கொண்டிருந்தார்.

அமிர்தனார் கையில் தோட்டியை எடுத்துக் கொண்டு, "இவரே தோற்றார்; இன்னும் வண்ணத்தை முடிக்கவில்லை. இவர் காதை அறுத்து விடுவேன்" என்று அனந்தனாரை அணுகினார். அதற்கு அனந்தனார் வண்ணத்தை முடித்துவிட்டு, "பைத்தியமே! காதிருந்தாலல்லவோ அறுக்க முடியும்? அனந்தனுக்குக் காது ஏது?" என்று சாதுரியமாகக் கேட்டார்.

அனந்தன் என்பது **ஆதிசேடனது** பெயர். பாம்புக்குக் கண்ணே காதாக உதவுவதென்றும் அதற்குத் தனியே காதில்லை என்றும் சொல்லுவார்கள். அனந்தனுக்குக் காது ஏதென்ற வாக்கியம் ஆதிசேடனுக்குக் காதில்லை என்ற பொருளைத் தோற்றச் செய்தது. அனந்தனார் தாம் தோற்றதாகச் சொல்லிக் கொள்ளாமல் சாதுரிய மாக இங்ஙனம் கேட்கவே யாவரும் கொல்லென்று நகைத்தார்கள். அமிர்தகவிராயர் தோட்டியைக் கீழே போட்டு விட்டார். காதை அறுக்க வேண்டுமென்பது அவர் கருத்தன்று.

அரசர் அனந்தகவிராயரது பேச்சினால் கவரப் பட்டார். அப்பேச்சுக்காகத் தனியே பரிசு வழங்கப் பட்டது. ''அனந்த கவிராயர் பாட்டுக்கும் பரிசு பெறு வார்; பேச்சுக்கும் பரிசு பெறுவார்'' என்று புலவர்கள் பேசிக் கொண்டார்கள்.

## 571. ஆண்டாள்

திருமாலின் அடியார்களாகிய பெண்மக்களில் இவர் தலைசிறந்தவர். இவர் ஆழ்வார்கள் பன்னிரு வருள் ஒருவராக விளங்குகிறார். இவருடையபாசுரங்கள் திவ்யப் பிரபந்தத்தில் ஒரு பகுதியாக விளங்குகின்றன. ஸ்ரீரங்கநாதனுக்குப் பூமாலையைச் சூடிக்கொடுத்த நாச்சியாராகிய இவர் பாமாலையைப் பாடிக் கொடுத் தார். ஆனால் இவர் சூடிக்கொடுத்த பூமாலை அக் காலத்தில் திருமாலுக்கே பயன்பட்டது; இவர் பாடிக் கொடுத்த பாமாலையோ எவ்வளவோ வருஷங்கள் கடந்தும் வாடாமல் யாவருக்கும் பயன்படுகின்றது.

## 572. ஆவூர்ப் பசுபதி பண்டாரம்

ஆவூர் பட்டீச்சுரத்தின் தென்பாலுள்ளதும், தேவாரம் பெற்றதுமான ஒரு சிவஸ்தலம். இவர் தேவாரம் முதலியவற்றைப் பயிற்சியுற்று அவற்றைப்

பண்ணோடு ஓதுபவர்; பெரிய புராணம், திருவிளையாடல் முதலிய சைவ நூல்களிலும் பிரபந்தங்களிலும் முறையான பயிற்சியும் பிரசங்கம் செய்யும் வன்மையும் பெற்றவர்; சுற்றுப் பக்கங்களில் உள்ளவர்களால் தமிழ் வித்துவானென்று மதிக்கப்பெற்றவர்.

## 573. ஆறுமுக நாவலர்

தமிழ் நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப்பினும் நாவலரென்று கூறிய மாத்திரத்தில் அச்சொல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரையே குறிக்கும். இதற்குக் காரணம் அவர் நாவலர்களுக்குள் சிறந்தவராக விளங்கியமையே ஆகும்.

தமிழ்ப் புலவர்களில் கவி, கமகன், வாதி, வாக்கி என நான்கு வகையினர் உண்டு. எந்தச் சமயத்திலும், கொடுத்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசும் ஆற்றலுடையவரை வாக்கி என்று சொல்வார்கள். வாக்மி என்ற வடசொல்லின் திரிபே அது. அதனையே 'நாவலர்' என்று தமிழிற் கூறலாம். பண்டைக்காலத்தில் கவிபாடும் ஆற்றலுடையாரையும் நாவலரென்று வழங்கினர். இக்காலத்தில் நல்ல பிரசங்க சக்தி வாய்ந்தவர்களை நாவலரென்று சொல்வதிற் பிழையொன்றுமில்லை.

ஆறுமுக நாவலரை நான் பார்த்துப் பழகுவதற்குரிய சமயம் நேர்ந்ததில்லை. ஆயினும் அவரோடு பழகியவர்களிடமிருந்தும், அவரிடம் பாடம் கேட்டவர்களிடமிருந்தும் அவரைப் பற்றிப் பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றைக் கொண்டு என் அகக் கண்ணில் ஓர் உருவத்தை அமைத்துப் பார்ப்பது என் வழக்கம்.

அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது வாழ்க்கை நெறி என் உள்ளத்தைக் கவரும். கல்வி

யறிவு மிகச் சிறந்ததே; ஆயினும் அவ்வறிவு ஒழுககத்தோடு இயையும்போது அதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டாகின்றது.

நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும் பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் யாழ்ப்பாணத்தில் அமைத்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்.

அவருடைய பிரசங்க சக்தி அவருக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று. நாவலரென்னும் பெயரும் அதனாலே வந்தது போலும். "வார்த்தை பதினாயிரத் தொருவர்" என்பது ஒரு தமிழ்ச் செய்யுட்பகுதி 'படைகளோடு சென்று போர் புரிந்து சாவார் எளியர்; சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர்' என்று திருவள்ளுவரும் கூறினார். அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்திலே நன்கு அமைந்திருந்தது.

அக்காலத்துக்கு முன்பு பெரும்பாலும் புராணப் பிரசங்கங்களும் வாதங்களுமே சபைகளில் நடைபெற்று வந்தன. பொதுவாக ஒரு விஷயத்தை மேற்கொண்டு முறைப்படுத்திக் காரண காரியங்களைக் காட்டி ஆக்ஷேப சமாதானங்களோடு பேசும் வழக்கம் தமிழ்நாட்டில் மிகவும் குறைவாக இருந்தது. கிறிஸ்தவ சமயப் பாதிரியார்கள் செய்த உபந்நியாசங்களின் முறை தெளிவாகவும் எளிதிலே யாவரும் அறிந்து சுவைப்பதற்கு உரியதாகவும் இருந்தது. அந்த முறையை நாவலர் பயின்று அதிற் பேராற்றலை அடைந்தார்.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அவர் செய்த அருஞ் செயல்களுக்கு அடையாளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. அவருடைய பதிப்பு முறை தமிழ்நாட்டாராற் பெரிதும் மதிக்கப் படுவது.

நூலாசிரிய முறையில் நாவலர் எழுதிய நூல்கள் இந்நாட்டில் உலவுகின்றன. பால பாடங்கள் ஒழுக்கத்தையும் சைவ சமய உணர்ச்சியையும் உண்டாக்குவன. நன்னூலுக்கு அவர் ஒரு காண்டிகை யுரை எழுதியிருக்கின்றார். இலக்கணச் சுருக்கம் முதலிய சிற்றிலக்கண நூல்கள் சிலவற்றையும் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இவை தமிழிலக்கணம் பயிலும் மாணாக்கர்களுக்கு மிக்க பயன்படுவன வாகும்.

சில இலக்கிய நூல்களுக்கும் அவர் உரை எழுதி யிருக்கின்றனர். அவருடைய வசன நடை எளியது; வட சொற்களோடு கலந்து அழகுபெறுவது. பாலர் முதல் பண்டிதர் ஈறாகவுள்ள யாவருக்கும் பயன் தரத் தக்கது. அவர் காலத்தில் தமிழில் அழகிய வசனநடை எழுதுவோர் மிக அரியராக இருந்தனர். பிறரிடம் குறைகாணின் கண்டிப்பது நாவலர் இயல்பு. பொது நிலையங்களிலும், தர்ம ஸ்தாபனங்களிலும் நிகழும் தவறுகளை யாருக்கும் அஞ்சாது வெளியிட்டார். அவர் எழுதிய கண்டனப் பத்திரங்கள் பல. அவற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு ஸ்தாபனமும் நெறி வழாமல் நடைபெற்று வரவேண்டுமென்பதில் அவருக்கு இருந்த ஊக்கம் புலப்படும்.

நாவலர் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் உயர்வும், கல்விப் பெருமையும், சைவ சீலத்தின் சிறப்பும் கமழ்ந்தன. அவர் சமயத்தொண்டராகவும், நாவன்மை மிக்கவராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராக வும் விளங்கினர்.

என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவலருடைய குணாதிசயங் களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது தமிழ் நாட்டினருக்குத் தமிழி னிடத்தில் அன்பு வளர்ச்சி பெற்று வருகின்றது. அதற்கு ஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒரு காரணம் ஆவர். அவர் என்றும் தமிழ் நாட்டினரது நினைவில் இருப்பவ ராதலின் அவருடைய புகழுடம்பு என்றும் மறைத லின்றி நிலவி ஒளிருமென்பதில் ஐயமில்லை.

## 574. இராகவையர்

இவர் ஆந்திரர்; பாபநாசம் பிரதம பாடசாலை யில் உபாத்தியாயராக இருந்தவர்; மழவை மகாலிங் கையர் எழுதிய இலக்கணமும், நன்னூற் காண்டிகை யுரையில் முதல் இரண்டு இயல்களும் எனக்குப் பாடம் சொன்னவர். இவர் மதுரைக் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்து பிற்காலத்தில் ஸன்னியாசம் வாங்கிக் கொண்டார்.

## 575. சீகாழி இராசாத்துரை பிள்ளை

பிள்ளையவர்கள் சம்பந்தியின் தந்தையார்; திருவாசகத்துக்கு உரையெழுதியவர்; அவ்வுரையை யும் இவர் பாலிருந்த பதினோராந் திருமுறையையும் ஆறுமுக நாவலர் வாங்கிச் சென்றனரென்பர்.

## 576. இராமசாமிப் பிள்ளை

கல்விச்சங்கத்துப் புத்தக பரிபாலகர் (Librarian) ஆக இருந்தவர்; தாண்டவராய முதலியாரா

பரிசோதிக்கப்பட்ட திவாகரத்தை 1839-ஆம் வருஷத்திற் பதிப்பித்தவர். இவர் ஊர் கொற்றமங்கலம்.

### 577. இராமநாதபுரம் சுப்பராய வாத்தியார்

இவர் கன்னடப் பிராமணர். செங்நெல்குடி சாமுக்குட்டி ஐயரவர்களுடைய மாதாமகர். தர்ப்ப சயனத்துப் பெருமாள்மீது இவர் செய்த வெண்பா ஒன்று உண்டு. இவர் விஷ்ணு புராணத்தைத் தமிழிற் செய்தவர். பிரபந்தங்கள் பலவும் செய்தவர். **இராமநாத வண்ணம், பகவதி நித்திய கல்யாணி** என்று நூல்களையும் இயற்றியுள்ளார்.

### 578. இயற்றமிழாசிரியர் இராமாநுச கவிராயர்

இவர் வின்ஸ்லோ அகராதி பதிப்பிக்கும் பொழுது உடனிருந்து சகாயஞ் செய்தவர்களுள் ஒருவர். இவர் பரிசோதித்தும் உரையெழுதியும் பதிப்பித்த நூல்களிற் சில:

| | | |
|---|---|---|
| திருக்குறள் பரிமேலழகருரை | பதிப்பித்த ஆண்டு | 1840 |
| நன்னூல் விருத்தியுரை | ,, | 1845 |
| கொன்றை வேந்தன் | ,, | 1847 |
| இலக்கணச் சுருக்கம் | ,, | 1848 |
| ஆத்திசூடி, வெற்றிவேற்கை | ,, | 1849 |

### 579. இளைய நாயக மதுரகவி

இவர் **அப்ரமேய தல புராணம், அவிநாசித் தலபுராணம்** பாடியுள்ளார்.

### 580. ஓரியூர்ச் சீனிச் சர்க்கரைப் புலவர்

இவர் **மிழலைச் சதகம்** இயற்றிய சர்க்கரைப் புலவரின் மூன்றாம் மனைவியினுடைய புதல்வர். ஓரியூர் என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானையிலிருந்து 16. கி.மீ. தொலைவில் இருக்கிறது. திருவாசகத்தில் இவ்வூர் குறிப்பிடப்படுகிறது.

## 581. கந்தியார்

இவர் சைன சந்நியாஸினி. இவர் சீவக சிந்தாமணி முதலிய நூல்களினிடையே சில பாடல்களைப் பாடிச் சேர்த்திருக்கின்றார். அவர் செய்தது குற்றமாயினும் அச்செயல் அவருடைய புலமையைத் தெரிவிக்கின்றது. அங்ஙனம் உள்ள செய்யுட்களின் கீழ் ஏட்டுப் பிரதிகளில், 'இவை கந்தியார் பாடல்' என்ற குறிப்பு எழுதப்பட்டிருக்கும். **நச்சினார்க்கினியரும்** தம் உரையிற் குறித்திருக்கின்றார்.

## 582. காளத்தி

இவர் **கடம்பர் கோயில் அந்தாதி** இயற்றியவர். இச் செய்தி "காளத்தி யந்தாதி கொண்ட கடம்பைச் சிவசங்கரனாம்" என்னும் கடம்பர் கோயில் உலாவின் 120 ஆம் கண்ணியால் தெரியவருகின்றது.

## 583. கீழ்வேளூர்க் குருசாமி ஐயர்

கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகருடைய தந்தை. தியாகராசருடைய **வெறிவிலக்கல்** 400 பாடல்களுள்ள **கோவை** பாடியவர். **பல்லக்கு நாடகம், நாகப்பட்டினப் புராணம்** முதலிய நூல்களையும் இயற்றியவர்.

## 584. கோவிந்த பிள்ளை

இவர் திரிசிரபுரத்திலிருந்த வைணவவித்துவான்; சிலகாலம் சென்னையிலிருந்தார்; கம்பராமாயணம் சுந்தரகாண்டத்திற்கும்' சடகோபரந்தாதி முதலியவற்றிற்கும் உரையெழுதியவர்; திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களிற் சிறந்த பயிற்சி உள்ளவர்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு என்னும் நான்கு இலக்கணங்களையும் இவ்வண்ணமே இவர்

இளமை தொடங்கித் தக்கவர்களிடம் பாடங்கேட்டும் ஆராய்ந்தும் படித்தார். பின்பு தண்டியலங்காரம் படிக்க வேண்டுமென்று விரும்பினார். அதைப் பாடஞ் சொல்பவர்கள் கிடைக்கவில்லை. யாரிடமேனும் அந் நூல் இருந்தால் பிரதி செய்து கொண்டு படிக்கலா மென்று எண்ணிப் பலவாறு முயன்றார். அவ்வூரில் ஒவ்வொரு நாளும் வீடுதோறும் சென்று அன்னப் பிட்சை எடுத்து உண்டு காலங்கழித்து வந்த பரதேசி ஒருவர் தமிழ் நூல்களில் பழக்கமும் அவற்றுள் தண்டி யலங்காரத்தில் அதிகப்பயிற்சியும் உடையவராயிருந் தார். ஆனாலும் அப்பரதேசி பிறரை மதிப்பதில்லை. முறையாக ஒருவருக்கும் பாடம் சொன்னதுமில்லை. அவர் தாம் இருந்த மடத்தில் சில ஏட்டுப் புத்தகங் களைச் சேமித்து வைத்திருந்தார். அவர் தாமாக விரும்புவாராயின் ஏதேனும் சிலதமிழ் நூல்களிலுள்ள கருத்துக்களை வந்தவர்களுக்குச் சொல்லுவார்: "தானே தரக்கொளி னல்லது தன்பால், மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை" என்னும் உவமைக்கு அவரை இலக்கியமாகச் சொல்லலாம்.

அவர் நன்றாகப் படித்தவரென்பதையும், அவரிடம் தண்டியலங்காரப்பிரதியிருப்பதையும் கேள்வி யுற்ற இவர், எவ்வாறேனும் அவரிடம் தண்டியலங் காரத்தைப் பெற்றுப் பாடங் கேட்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு அவர் பிட்சையெடுக்க வரும் காலமறிந்து தெருத்தோறும் கூடவே தொடர்ந்து பேசிக் கொண்டு சென்றும், அவருக்குப் பிரியமான கஞ்சாவை வாங்கி வைத்திருந்து உரியகாலத்தில் சேர்ப் பித்தும் அவர் உவகையோடு இருந்த சமயத்தில் தம் கருத்தை மெல்லப் புலப்படுத்தி அவரிடமிருந்த புத்த கத்தைப் பெற்றுக் கொண்டு பாடமும் கேட்டார். இவ்வாறு பணிவுடன் தம்மொடு தொடர்ந்து வந்து கேட்டது அவருக்குத் திருப்தியே. அதனால் இவருக்கு அவரிடமிருந்து வேறு சிலநூல்களும் கிடைத்தன.

இவ்வாறு ஐந்திலக்கணங்களையும் முறையே தெரிந்தவர்களிடம் சென்று சென்று இவர் கற்றுக் கொண்டார். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள கற்குடியில் இருந்த ஒரு பெரியவரிடத்தில் பொருத்த இலக்கணத்தையும், அஷ்டநாகபந்தம் முதலிய சித்திர கவிகளின் இலக்கணத்தையும் அறிந்து கொண்டார்.

இவர் இப்படி அங்கங்கே கலைகளைத் தேடி அறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்தகாலத்தில் இவருடன் ஒத்த பிராயத்தினர் சிலர் தமிழ்க்கல்வி கற்று வந்தனர். அவர்களும் இவரும் ஒருவரையொருவர் விஞ்ச வேண்டும் என்று நினைத்து மிக முயன்று படித்தார்கள்.

## 585. சுந்தரதாஸ பாண்டியர்

இவர் சேற்றூர் ஜமீன்தாராகிய முத்துசாமி பாண்டியருடைய குமாரர். தமிழ்க்கல்வி கேள்விகளிற் சிறந்தவர். இவருக்கும் திருவநந்தபுரம் அரசராயிருந்த ராமவர்மாவென்பவருக்கும் நட்புண்டு. ஒரு சமயம் இவர் திருவநந்தபுரத்து அரசர்மீது ஒருவண்ணம் பாடினார். அதற்குத் தக்க வித்துவான்களால் சிறப்புப் பாயிரம் பெறவேண்டுமென்பதுஇவருடைய விருப்பம். சேற்றூரிலிருந்த வித்துவான்கள் பிள்ளையவர்களிடமிருந்து பெற்றால் சிறப்பாக இருக்குமென்று தெரிவித்தார்கள். இவருக்கும் அங்ஙனமே பெறவேண்டுமென்னும் வேணவா உண்டாயிற்று. ஆனால் இவருக்கும் அக்கவிஞர் பிரானுக்கும் பழக்கமில்லை. அதனால் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு அவ்வண்ணத்தை அனுப்பித் தம்முடைய விருப்பத்தையும் விண்ணப்பம் செய்து கொண்டார். தேசிகர் பிள்ளையவர்களிடம் அதனை அளித்தனர். அவர் தேசிகர் கட்டளைப்படி அவ்வண்ணத்தைச் சிறப்பித்து ஐந்து செய்யுட்கள் இயற்றியனுப்பினார். அவற்றில் திரு

வநந்தபுர ஸமஸ்தானத்தைப் பற்றிச் சொல்லுகையில் 'இந்தக் கலிகாலத்தில் மற்றத் தேசங்களில் ஒருகாலால் நடக்கும் தர்மமாகிய ரிஷபம் நான்குகாலாலும் நடக்கும் இடம்' என்னும் கருத்தை அமைத்திருந்தார். அன்றியும் வண்ணத்தின் இலக்கணத்தைப் புலப்படுத்தியிருந்தார். அச்செய்யுட்களைச் சுப்பிரமணிய தேசிகர் இவருக்கு அனுப்பினார். அவற்றைப் பெற்ற இவர் பிள்ளையவர்கள் தம்மை அறியாமலிருந்தும் தம் பாடலை மதித்துச் சிறப்புப் பாயிரம் அளித்ததைப் பாராட்டி நேரே அக்கவிஞர் பிரானுக்குத் தம் வந்தனத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினார்.

## 586. சுப்பையர்

*[''லாடு லட்டுச் சுமை'' என்ற தலைப்பில் சுப்பையர் வரலாறு ஐயரவர்களால் எழுதப்பட்டுள்ளது. அது வருமாறு:]*

இராமநாதபுரம் ஜில்லா வேம்பத்தூர் வாசியான சிலேடைப்புலி பிச்சுவையரைப் பலர் கேட்டிருப்பார்கள். அவர் வியக்கத்தக்க வண்ணம் அதிவிரைவில் கவிபாடும் ஆற்றலையுடையவர். அவரிடம் சுப்பையர் என்னும் ஓரிளைஞர் அடிக்கடி வந்து பாடங்கேட்டு வந்தார். பிச்சுவையர் வெளியூருக்குப் போகையில் சுப்பையரையும் அழைத்துச் செல்வதுண்டு.

ஊற்றுமலை ஜமீன்தார்களுக்குக் குலதெய்வமாகிய நவநீதகிருஷ்ணஸ்வாமியின் உத்ஸவத்துக்கு ஒரு சமயம் பிச்சுவையர் சுப்பையரையும் உடன் அழைத்துக்கொண்டு ஊற்றுமலை போயிருந்தார். அவரிடம் ஜமீன்தாருக்கு மிக்க அன்பு உண்டு. அவருடைய சாதுரியமான செய்யுட்களைக் கேட்டுப் பொழுது போக்குவதில் ஜமீன்தார் சலிப்படைவதில்லை. உத்ஸவம் நடந்த பிறகு பிச்சுவையர் தம் ஊருக்குப் புறப்பட்டார். வழக்கப்படி அவருக்கு அளிக்கவேண்டிய சம்மானங்களை அளித்த ஜமீன்

தார், "உங்களுக்கென்று இரண்டு மூன்று நாள் பிரசாதங்களை எடுத்துவைக்கச் சொல்லியிருக்கிறேன். அவற்றைக் கொண்டுபோய் உங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும்" என்றார். பிச்சுவையரிடம் அவை கொடுக்கப்பட்டன. அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொள்ளுகையில் உடன்வந்த இளைஞராகிய சுப்பையர், "நான் எடுத்து வருகிறேன்" என்று சொல்லி வாங்கிக் கொண்டார். சுமை சிறிது பெரிதாகவேயிருந்ததால் சுப்பையர் அதைத் தம் தலையில் வைத்துத் தூக்கிவந்தார்.

வழியில், பிச்சுவையர் சிறிது தங்கிச்செல்ல நேர்ந்தது; "நீ முன்னே போ; நான் சற்று நேரத்தில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லி இவரை முன்னே அனுப்பினார். இவர் சிறிது தூரம் சென்றார். நடந்து வந்ததனாலே களைப்பு ஏற்பட்டது; பசியும் உண்டாயிற்று. இவர் உடனே பக்ஷிய மூட்டையைக் கீழே வைத்தார். அதன் மணம் இவர் மூக்கைத் துளைத்தது. நாவில் நீர் ஊறிற்று. அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே மூட்டையை அவிழ்த்துச் சிறிது சிறிதாகப் பக்ஷியத்தைச் சுவை பார்க்கலானார். அதன் சுவை இவரைத் தன் வசப்படுத்தி விட்டது. பின்னால் பிச்சுவையர் வருவாரென்ற நினைவேயில்லாமல் ஒரே ஞாபகத்தோடு அந்த வேலையில் இவர் ஈடுபட்டிருந்தார்.

சிறிதுநேரம் சென்றது. "என்னடா பண்ணுகிறாய்?" என்ற குரலைக் கேட்டவுடன் சுப்பையர் திடுக்கிட்டார். இவர் பக்ஷியங்களை ஊக்கத்தோடு தின்றுகொண்டிருக்கும் காட்சியைப் பிச்சுவையர் பார்த்து வியந்தார்; "என்னிடம் சொன்னால் நான் வேண்டாமென்றா சொல்லுவேன்?" என்று கேட்டார் அவர்.

"நான் என்ன செய்வேன்! கால் வலித்தது; பசியும் உண்டாயிற்று. இப்படிச் செய்வதைவிட வேறு வழியேது?" என்றார் சுப்பையர்.

பிச்சுவையர், "அதற்காக இப்படி வழியிலே மூட்டையைப் போட்டுக்கொண்டா தின்ன வேண்டும்? சரி, மூட்டையைத் தூக்கு" என்றுசொல்லிக்கொண்டே அதனைக் கட்டி சுப்பையரிடம் கொடுக்கலானார்.

உடனே சுப்பையர் தம் கையிலிருந்த பக்ஷியங்களைத் தின்றுகொண்டே, "இச்சுமையைப் பிச்சுவையா வென்றலையி லேற்றுவது மியல்பு தானோ?" என்றார். ஒருபாட்டின் ஓரடியாக இருந்தது அது.

பிச்சுவையர், "நீ செய்யுள்கூடச் செய்வாய் போலிருக்கிறதே!" என்று பின்னும் வியப்புடன் கூறினார்.

"எல்லாம் உங்களுடைய ஆசீர்வாதந்தான்.

"சரி; அப்படியானால் உன் கையிலுள்ள பக்ஷியத்தைத் தின்று பூர்த்தி செய்துவிட்டு அந்தச் செய்யுளையும் பூர்த்திசெய்."

சுப்பையர் அங்ஙனமே பூர்த்தி செய்தார். அந்தச் செய்யுள் வருமாறு:—

**(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)**

எச்சகமும் புகழ்படைத்த தென்னூற்று மலைமருதப்
பேந்த்ரன் போற்றும்
நச்சரவி னடிப்பவர்க்கு நைவேதித் திட்டதிவ்ய
லாடு லட்டு
வச்சுவச்சுத் தின்றுதின்று வயிறுகுறை யாமன்மிக
வருந்தும் வேளை
இச்சுமையைப் பிச்சுவையா வென்றலையி லேற்றுவதும்
இயல்பு தானோ.

[இவ் வரலாறு பிச்சுவையரவர்களால் அறிந்தது.]

## 586. செட்டிப்பாளையம் வாசுதேவ முதலியார்

இவர் பவானி ஸ்தலபுராணம் பாடியவர். இந்நூல் அச்சிடப் பட்டுள்ளது.

## 587. சேக்கிழார்

உமாபதி சிவாசாரியார் செய்த புராணத்தால் இவர் சரிதம் நன்கு விளங்கும். திருநாகேசுரத்தில் இவருடைய வடிவமும் இவர் தம்பி வடிவமும் பூசிக்கப் பட்டு வருகின்றன. மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இவர்மீது பிள்ளைத் தமிழ் ஒன்று இயற்றியுள்ளார். சிவபுராணாதி தோத்திரமஞ்சரியில் இவரது துதிகள் வந்துள்ளன. திருநாகேசுரத் திருக்கோயிலில் இவர் கட்டிய மண்டபமொன்று இன்றும் உள்ளது. குன்றத் தூரில் இவருடைய ஆலயமுண்டு. அந்த ஆலயம் இருக் கின்ற இடமே இவர் பிறந்த வீடு என்று தெரிகிறது. இவர் தம்பி வெட்டிய குளம் ஒன்று சிலாசாசனத் துடன் அவ்வூரில் உள்ளது. அது தாமரைக்குளமாக இருக்கிறது. அவ்வூரில் ஒரு குன்றில் மிகவும் அழகான சுப்பிரமணியர் ஆலயமும், கீழே மிக்க வேலைப்பாடு அமைந்த சிவாலயமும் விஷ்ணுவாலயமும் உள்ளன. இக்குன்றை வைத்துக் குன்றத்தூர் என்று பெயர் வந்திருக்கலாமென்று தோற்றுகிறது. மேற்குப்பக்கத் தில் செம்பரும்பாக்க ஏரி என்ற மிகப்பெரிய ஏரியின் பாய்ச்சலால் அவ்வூர் சோழநாட்டைப் போலவே காணப்படும். ஸ்ரீ வாலிநாதஸ்வாமி கோயில் என்று இடிந்துபோன கோயில் ஒன்று அவ்வூரில் உள்ளது.

## 588. ஞானக் கூத்தர்

இவர் துறையூரிலுள்ள வீரசைவ ஆதீனத் தலைவர்களில் ஒருவர்; திருவிடைமருதூர், விருத்தா சலம், திருவையாறென்னும் ஸ்தலங்களின் புராணங் களைத் தமிழ்ச் செய்யுட்களாக மொழிபெயர்த்தவர்.

## 589. தஞ்சை ஐயாசாமிப் பிள்ளை

இவர் மார்ஷல் காலேஜில் முதல் தமிழ்ப்பண்டித ராக இருந்தவர்; திருத்தில்லை யமகவந்தாதிக்கு உரை இயற்றியவர்.

## 590. நஞ்சையாப் புலவர்

இவர் வேளாளர். இவரது ஊர் திங்களூர் தோரணவாவி. இவர் எருமை மேய்த்துக் கொண்டிருந் தவர். அருண்மலையின் எருமைக் கன்றைப் புலி கொண்டுபோய்விட்டது. கோவில் அர்ச்சகர் சுப்பையா எருக்கம் பாலைக் கறந்து கொடுத்தபோது இவர் ஒரு பாடல் பாடினார் என்று தெரிகிறது. சிவகிரி வேலாயுத சுவாமி பேரில் மழைபெய்யும்படி பாடினார்.

## 591. நவநீத நடனார்

இவர் நவநீதப் பாட்டியலை இயற்றியவர் என்பது அந்நூலின் சிறப்புப் பாயிரத்தால் புலனாகும். நவநீதநடன் என்பது கண்ணபிரானைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. இவர் வாழ்ந்து வந்தது நவநீத நாடு என்று நவநீதப் பாட்டியலின் உரை கூறும். கம்ப நாடு கம்பர் என்ற பெயர்களுக்குத் தொடர்பிருத்தல் போல, நவநீதநாடு நவநீதநடன் என்ற பெயர்களுக் குள்ளும் தொடர்பு காணப்படுகிறது. இந்நாடு இன்ன இடத்திலுள்ளதென்று இப்பொழுது தெரியவில்லை.

நவநீதப்பாட்டியலின் உரை இவரை அரிபத்தர் (திருமாலின் அடியார்) என்று குறிக்கின்றது. இவரு டைய பெயரும், நவநீதப் பாட்டியலின் தொடக்கத்தில் திருமாலின் விஷயமாக இவர் கூறும் காப்பும் இதனை வலியுறுத்தும். திரிசிரபுரம்மகாவித்துவான்ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பயின்ற வித்துவான் சுப்பராய செட்டியாரிடமிருந்த நவநீதப் பாட்டியல் ஏட்டுப் பிரதியொன்றில்,

'கரிமுகத் தண்ணல் கட்வுள ரைங்கரக் கணபதியைப்
பரிவுரை மாமலர் சாத்திப் பணிந்துள பாவினத்தை
அரிமத னான நவநீத னென்று மியான் வகுத்த
உரைசெ யிலக்கண நவநீதப் பாட்டிய லுலகினுக்கே'

என்று ஒருபாட்டு காணப்படுகிறது.

இச்செய்யுளின் தளை பிழைபட்டிருந்தும் இவர் வைணவ மதத்தவரென்பதும், வேறு கடவுளரிடத்தில் இவருக்குத் துவேஷ புத்தியில்லையென்பதும் இக்கவியினாற் புலனாகின்றன. நவநீதப் பாட்டியல் சிறப்புப் பாயிரத்திற் காணப்படும், 'வேதத்தவன்' என்ற சொல் இவர் அந்தணராவர் என்பதனைக் காட்டும்.

இவர் தமிழ் மொழியில் நல்ல புலமை வாய்ந்தவர்; அதனிடத்து நிறைந்த பற்றுள்ளவர், தமிழ் மொழியை, 'வேதமுனி நாவார் தமிழ்' என்று இவர் கூறுகின்றார். அகத்திய முனிவரைப் பலவிடங்களிற் பாராட்டுகிறார். 'ஓதுவார் தொன்னூற் பருணிதரே', 'அறைவர் கற்றோர்', 'நாவலர் ஓதினரே', 'சான்றவர் கொள்ளார்' 'புலவரெல்லாம் இயம்புவாரே' போன்ற தொடர்களைப் பெரும்பாலும் நவநீதப் பாட்டியலின் ஒவ்வொரு செய்யுளிலும் பெய்து கூறுவது இவருக்கு இயல்பு. இவருடைய கலித்துறைகள் (நவநீதப் பாட்டியல்) உரையின் துணையின்றி எளிதில்பொருள் விளங்குவனவாக அமைந்துள்ளன.

## 592. நாராயணசாமி வாத்தியார்

இவர் முத்தாம்பாள்புரம் (ஒரத்தநாடு) தமிழ்க் கலாசாலையில் உபாத்தியாயராக விளங்கியவர்; முத்தாம்பாள்புரம் கோபால பிள்ளையென்பவருக்கு அவர் பிள்ளையவர்களிடம் மாணாக்கராக வருவதற்கு முன்பு பாடஞ் சொன்னவர்; சிறந்த கவிஞர். இவர் **திருக்கண்ணப்புராணம்** முதலியவற்றை இயற்றியவர்.

## 593. நெற்குன்றவாண முதலியார்

[புலியூர்க் கோட்டம் என்பது தொண்டை மண்டல உட்பிரிவுகளுள் ஒன்று. நெற்குன்றம் அந்தக் கோட்டத்திலுள்ள ஓரூர். இவ்வூரிலிருந்தவரே இவர். இவர் வரலாறு 'பாவலர் மானம் காத்த பாவை' என்ற தலைப்பில் ஐயரவர்களால் எழுதப்பட்டுள்ளது. அதுவே இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.]

சோழநாட்டை இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்டு வந்த காலத்தில் ஒட்டக்கூத்தர் அவனுடைய ஆஸ்தான வித்துவானாகவும் குருவாகவும் விளங்கினார். இவனுடைய ஆதரவு பெற்றுப் பல வித்துவான்கள் தங்கள் புலமைத் திறத்தை வெளிப்படுத்தி அக்காலத்திற் பல நூல்களை இயற்றினார்கள். சைவத்திலும் தமிழிலும் பற்றுடைய அம்மன்னன் அங்கங்கே தக்க அதிகாரிகளை நியமித்துத் தன்னுடைய பேரரசைப் பாதுகாத்து வந்தான்.

அவனது ஆட்சியின் கீழ் அவனுடைய முன்னோர்கள் வென்று அடிப்படுத்திய வேற்று நாடுகளும் இருந்தன. தொண்டை மண்டலமும் சோழர்களுக்கு அடங்கியதாக இருந்தது. அதனால் அம்மண்டலத்துக்கு ஐயங்கொண்ட சோழ மண்டலமென்ற பெயர் வழங்கி வந்தது.

சோழ நாடு முதலிய இடங்களிலுள்ள உட்பிரிவுகளுக்கும் தொண்டை நாட்டிலுள்ள உட்பிரிவுகளுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அவற்றுள்ளே புலியூர்க் கோட்டமென்பது ஒன்று. சென்னையைச் சார்ந்த கோடம்பாக்கம் முதலிய ஊர்களை உள்ளடக்கியது அது. **சேக்கிழார்** இருந்த குன்றத்தூரென்பது அக் கோட்டத்தில் இருப்பதே.

நெற்குன்றமென்பது அக் கோட்டத்திலுள்ள ஓர் ஊர். அவ்வூரில் நெற்குன்றவாண முதலியாரென்னும்

வேளாளச் செல்வரொருவர் வாழ்ந்துவந்தார். ஏழை மக்களுக்கு வேண்டிய பொருள்களையீவதிலும், வித்து வான்களை ஆதரிப்பதிலும், சிவபெருமானிடத்துப் பக்தி பூண்டு ஒழுகுவதிலும் அவர் சிறந்தவர். சிறந்த தமிழ்ப் புலமையும் அவருக்கு உண்டு.

சிவபக்திச் செல்வம் மிக்கவராதலின் ஒவ்வொரு வருஷமும் சிலகாலம் யாத்திரைசெய்து தம் நாட்டிலும், சோழ நாடு பாண்டிய நாடுமுதலிய வேறு நாடுகளிலும் உள்ள சிவ ஸ்தலங்களைத் தரிசித்து வருவது அவர் வழக்கம். சோழ நாட்டு ஸ்தலங்களைத் தரிசித்து வந்த போது திருப்புகலூர் என்னும் ஸ்தலத்தில் அவருக்கு ஈடுபாடு அதிகமாயிற்று. அதனால் அடிக்கடி அந்த ஸ்தலத்துக்குச் சென்றுசிவதரிசனம் செய்து வருவதில் அவர் மிக்க இன்பத்தைக் கண்டார். அந்த ஸ்தலத்தில் சில நிவந்தங்களையும் அமைத்தார்.

ஒரு வருஷம் மழையின்மையால்நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. அதனால் நெற்குன்றவாண முதலியா ருடைய நிலவளம் சுருங்கவே அவர் இயல்பாகச் செய் யும் தருமங்களைச் செய்ய முடியாமல் வருந்தினார். சிலவற்றைக் குறைத்துக்கொண்டார். ஆயினும் திருப் புகலூர் சென்று தரிசனம் செய்வதை மாத்திரம் நிறுத்த அவர் மனம் துணியவில்லை.

அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத் தைச் செலுத்துவதற்கும் வழியில்லாமல் அவர் மிகவும் வருந்தினார். சோழ சக்கரவர்த்தியின் அதிகாரியாக இருந்தவருக்கு நெற்குன்றவாண முதலியாரைக் கண் டிக்க மனம் வரவில்லை. பல முறை வற்புறுத்தினார்; இறுதியில் சக்கரவர்த்திக்குத் தெரிவித்து அவரிடம் வரியை வாங்குவதற்குத் தண்ட முறையைப் பின்பற்று வதே தகுதியென்று விண்ணப்பம்செய்து கொண்டார்.

இந்த நிலையில் தமக்கு நேர்ந்துள்ள இடையூற் றுக்குப் புகலூர்ப் பெருமானையே புகலாக எண்ணிய

முதலியார் சோழ நாட்டுக்குப் போய்ப் புகலூரை அடைந்தார். அப்போது, அப்பெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் செங்கல்லைப் பொன்னாக்கி உதவின அருள் விளையாட்டு ஞாபகத்துக்கு வந்தது. சக்கரவர்த்தியின் அதிகாரத்தால்தான் அவரிடம் வரியை வாங்க முடியும் என்று எண்ணியிருந்த தொண்டை மண்டல அதிகாரி அந்தச் சந்தர்ப்பத்தில் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று நினைத்தார். உடனே முதலியார் புகலூருக்கு வந்துள்ளாரென்றும், அங்கே அவசர அதிகாரத்தால் வற்புறுத்தி வரியை வாங்க முயற்சி செய்யலாமென்றும் அரசனுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்.

நெற்குன்ற வாண முதலியார் புகலூரை அடைந்து அந்த ஸ்தலத்து மூர்த்திகளைத் தரிசனம் செய்வதிலே மனத்தை ஈடுபடுத்தி உலகையே மறந்திருந்தார். திருப்புகலூரில் முக்காலத்துக்கும் தலைவராகிய சிவபெருமானுடைய மூர்த்தங்கள் எழுந்தருளியிருக்கும் பூதேசுவரம், வர்த்தமானேசுவரம், பவிஷ்யேசுவரம் என்ற மூன்று சந்நிதிகள் உண்டு. அவற்றுள் வர்த்தமானேசுவர மென்னும் சந்நிதியில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தனியே பாராட்டும் தேவாரப் பதிகம் ஒன்று உண்டு. அங்கே ஓர் அகழி இருக்கிறது. அதன் கரையில் பதினெட்டுச் சித்தர்களுடைய ஆலயங்கள் உள்ளன.

முதலியார் அந்த ஸ்தலத்தில் இருப்பதையறிந்த அதிகாரிகள் அவரைச் சிறைப்படுத்த உத்தரவு செய்தனர். காவலாளர் ஒருநாட் காலையில் அவரைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்துச் செல்லலாயினர். அப்பொழுது அவர்களை முதலியார் நோக்கி, "உங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். நான் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்து சிவபூஜையும், சிவதரிசனமும் செய்வது வழக்கம். எதிர்பாராதபடி என்னைக் காவலில் வைக்கும் நிலை ஏற்

பட்டுவிட்டது. இனிப் புகலூர்ப் பெருமானை எப் பொழுது காண்பேனோ, காணாமலே என் வாழ்க்கை முடிந்துவிடுமோ அறியேன். ஆதலால் இன்று மாத் திரம் அப்பெருமானைத் தரிசித்துக்கொண்டு வர அனுமதி செய்தால் உங்களுக்கு எவ்வளவோ புண்ணியம் உண்டு" என்று கண்ணீர் விடாக் குறை யாகக் கூறினார். அவரது கம்பீரமான தோற்றத்தி னாலும், நடையுடை பாவனைகளாலும், பேச்சின் அமைதியாலும் அவர் பெருந்தன்மையை உணர்ந்த காவலாளர்கள் மனமிரங்கி, "செய்யலாம்" என்று சொல்லி அனுமதி செய்தனர்.

பெரும்பேறு பெற்றவரைப் போல மகிழ்ந்த நெற்குன்ற வாணர் மரண காலத்தில் உள்ளம் ஒன்றிய பக்தியோடு இறைவனை நினைந்துருகும் சிவ பக்தரைப் போல ஆனார். உடனே அகழியில் நீராடி முறைப்படி ஆலய தரிசனம் செய்யத் தொடங்கினார். அங்கே எழுந்தருளிய விநாயகரைத் தரிசித்தார். அவ ருடைய பக்தியும் புலமையும் இணைந்து நின்றன. அவ்விநாயகர் விஷயமாக ஒரு செய்யுள் இயற்றிப் பாட லானார்; அது வருமாறு;—

"உரைசெய் மறைக்கும் தலைதெரி
யாவொரு கொம்பையென்றே
பரசு மவர்க்குப் பெருநிழ
லாக்கும் பழனமெல்லாம்
திரைசெய் கடற்றுறைச்
சங்க முலாவுந் திருப்புகலூர்
அரசி னிடத்து மகிழ்வஞ்சி
யீன்றவோ ரத்திநின்றே."

[வயல்களி லெல்லாம் அலையைச்செய்யும் கடல் துறையிலுள்ள சங்குகள் உலவும் திருப்புகலூர் இறை வனது வாம பாகத்தில் எழுந்தருளிய உமாதேவியார் ஈன்ற யானைமுகப் பிரானாகிய விநாயகர், தோத்திரஞ் செய்யும் வேதத்தின் சிரமாகிய உபநிடதத்

தாலும் அறியப்படாத ஒற்றைக்கொம்பை யுடையா யென்று துதி செய்பவர்களுக்கு மிக்க தண்ணளியைச் செய்வார். இதில் அரசு வஞ்சி அத்தி என்னும் மூன்று மரப் பெயர்கள் ஈற்றடியில் ஒருங்கே தொனிக்கின்றன. ஒரு கொம்பை-ஒற்றைக் கொம்பை உடையாய். பரசும்-துதிக்கும். நிழல்-சாயை, தண்ணளி; சிலேடை. பழனம்-வயல், திருப்புகலூர் அரசு-திருப்புகலூர்ச் சிவ பெருமான். வஞ்சி-உமா தேவியார்.]

அந்த ஸ்தலத்து ருத்திர கணிகையர்களுள் ஒருத்தியும், பல திருப்பணிகள் செய்தவளும், பிராயமும் செல்வமும் நிறைந்தவளுமாகிய ஒரு பெண்மணி அன்று காலையில் நீராடிவிட்டு அவ்வழியே ஆலய தரிசனத்துக்காக அப்போது போய்க்கொண்டிருந்தாள். அவள் காதில் நெற்குன்றவாணர் சொல்லிய பாடல் விழுந்தது. அந்தப் பாட்டு அழகாக அமைந்திருப்பதை அவள் அறிந்து அதனைப் பாடியவர் யாரென்று பார்த்தாள். யாரோ வித்துவானாக இருக்கலாமென்று ஊகித்த அவள், 'இந்த அழகான செய்யுள் விநாயகர் விஷயமாக இருக்கிறது. இத்தலத்துச் சிவபெருமான் விஷயமாகவும் இவர் பாடினால் எவ்வளவோ நன்றாக இருக்குமே' என்று எண்ணினாள். உடனே வாய்விட்டு, "இந்தப்பாட்டை ஓர் அந்தாதிக்குக் காப்பாக்கலாமே" என்று மெல்லச் சொன்னாள்.

அதுகாறும் விநாயக வணக்கத்தில் மூழ்கியிருந்த முதலியார் அந்த வார்த்தையைக் கேட்டுத் திரும்பினார். ஒரு தாசி சிவ வேடப் பொலிவோடு நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார். 'ஆம், அந்தாதிக்குக் காப்பாக்கலாம். ஆனால்...' என்று எதையோ நினைந்துருகினார். அந்தக் கணிகைக்கு விடை சொல்ல வேண்டுமென்ற உணர்ச்சி யொன்று அவர் உள்ளத்தே இருந்து தூண்டியது.

"உண்மைதான்; அந்தாதிக்குக் காப்பாக்கலாம். காப்பாக்கினால் அரசனுக்குப் பணம் ஆகுமா?" என்று அவர் கேட்டுவிட்டார்.

அந்தக் கேள்வி கணிகைக்கு விளங்கவில்லை. அவர் ஏதோ சங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டுள்ளார் என்று மட்டும் ஊகித்துக் கொண்டாள். அப்போதுதான் அவள் அருகில் நின்றவர் களை உற்றுப் பார்த்தாள். காவலாளர் நிற்பதை உணர்ந்து அவர்களிடமே விஷயத்தை விசாரித்தாள். வரி கொடுக்க இயலாத நிலையில் அவரைச் சிறைப் படுத்தப்போகும் செய்தியை அறிந்து மிக்க வருத் தத்தை அடைந்தாள்.

உடனே, "எவ்வளவு வரி செலுத்த வேண்டும்?" என்ற கேள்வி அவள் வாயிலிருந்து எழுந்தது. காவலர் மூலமாகத்தொகை இன்னதென்று அறிந்து கொண்டு, "அரசனுக்குப் பணத்தைச் செலுத்தி விடலாம். இனி இவரை விட்டு விடுங்கள். இவர் பணத்தை நான் கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லிப் பணத்தை யளித்து முதலியாரை மீட்டாள்.

சிவபக்தி மிக்க அவள் செயல் புகலூர்ப் பெருமா னுடைய திருவருளால் நிகழ்ந்ததென்று கருதிய முதலியார் மிக்க நன்றியறிவோடு அவளைப் பாராட்டி னார். அவள், "எல்லாம் திருவருட்செயல், நீங்கள் சொன்ன விநாயக வணக்கத்தைக் காப்பாக வைத்துக் கொண்டு ஓர் அந்தாதி பாடி முடிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

"ஆம், அச்செய்யுள் காப்புச் செய்யுளாக இருக் கும் தகுதியுடையதுதான். என் மானத்துக்கும் உயிருக்கும் காப்பை அளித்த அச்செய்யுள் அந்தா திக்குக் காப்பாகவும் இருக்கும்" என்று சொல்லி நூறு செய்யுட்களால் ஓர் அந்தாதி பாடி நிறைவேற்றினார். அது திருப்புகலூரந்தாதி என்ற பெயரோடு வித்து வான்களால் பாராட்டப் பெற்று விளங்குகின்றது.

நெற்குன்ற வாணர் தம் ஊர் சென்றார். பஞ்ச காலம் போய் நல்லகாலம் வந்தவுடன் தம்மைச் சிறை

மீட்ட கணிகைக்கு ஒரு பெருந் தொகையை அனுப்பி நன்றி பாராட்டினார். அப் பெண்மணி அப்பொருளைப் புகலூர்ப் பெருமான் திருப்பணிக்கே வழங்கி விட்டாள்.

### 594. பட்டீச்சுரம் [illegible] பிள்ளை

இவர் திருச்சத்தி முற்றப் புலவர் பரம்பரையினர்; **பட்டீச்சுர யமகவந்தாதி** யென்னும் நூல் முதலியவற்றை இயற்றியவர். பிள்ளையவர்கள் தம்முடைய இருபத்தொன்றாம் பிராயத்தில் (1836 ஆம் ஆண்டு) திருவாவடுதுறை செல்ல நினைந்து அன்புள்ள மாணாக்கரொருவரை உடன் அழைத்துக்கொண்டு வழியிலுள்ள தலங்களைத் தரிசனம் செய்பவராய் அங்கங்கேயுள்ள தமிழபிமானிகளையும், தமிழ்வித்துவான்களையும் கண்டு அளவளாவிப் பட்டீச்சுரம் என்னும் தலத்திற்கு வந்தார். அங்கே இவருடைய வீட்டுக்குச் சென்றார். இவரும் அவரும் (பிள்ளையவர்களும்) தாம் தாம் இயற்றிய செய்யுட்களை ஒருவருக்கொருவர் கூறித் தம்முள் மகிழ்ந்தனர். இளமையில் அவருக்கிருந்த கல்விப் பெருமையை அறிந்து இவர் பாராட்டுவாராயினர். இவர் பிள்ளையவர்களை அவ்வூரிலிருந்த பெரிய செல்வவானும் உபகாரியுமாகிய நமச்சிவாய பிள்ளையென்பவரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்வித்துக் கௌரவிக்கச் செய்தார்.

### 595. புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்

இவர் பிள்ளையவர்கள் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் படிக்கும் காலத்தில் அவருடன் படித்த ஒரு சாலை மாணாக்கர்; அவர் இயற்றிய அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழுக்கும், காசி ரகசியத்துக்கும் சிறப்புப் பாயிரம் வழங்கியவர்களுள் ஒருவர். சேது யாத்திரை சென்று திரிசிரபுரத்திற்கு

வந்த இவர் தம்முடைய நண்பராகிய பிள்ளையவர்களைக் கண்டார். அவர் சில தினம் இருந்து செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு இவரிசைந்து அவ்வாறே இருப்பாராயினர். அப்பொழுது இவருடைய கல்விப் பெருமையையும் அவதான விசேடத்தையும் அவரால் தெரிந்துகொண்ட பல பிரபுக்களும் வித்துவான்களும் இவர் அஷ்டாவதானம் செய்வதைத் தாம் பார்க்க வேண்டுமென்று பிள்ளையவர்களைக் கேட்டுக், கொண்டார்கள். அதற்கிசைந்த அவர் ஒரு பெரிய சபை கூட்டி இவரைக் கொண்டு அஷ்டாவதானம் செய்வித்த பொழுது யாவருங் கண்டு களித்து உபசரித்தனர். அப்பொழுது அங்கு வந்திருந்த சிரஸ்தெதார் செல்லப்பா முதலியாரென்ற பிரபு இவரை நோக்கி, "இவர்கள் அஷ்டாவதானம் செய்தது மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது." என்று வியந்துரைத்தார். சென்னையைச் சார்ந்த கோமளீசுவரன் பேட்டையிலுள்ள திருவாதவூரடிகள் பக்த ஜனசபையின் தலைவராகிய நாராயணசாமி முதலியாரென்பவர் சேக்கிழார் புராணத்திற்கும் திருமுறை கண்ட புராணத்திற்கும் உரைசெய்து தரும்படி இவரைக் கேட்டுக் கொண்டனர். இவரும் அப்படியே இரண்டிற்கும் உரைசெய்து முடித்துவிட்டு அவற்றிற்குச் சிறப்புப்பாயிரம் அனுப்ப வேண்டுமென்று பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதினார்.

## 596. புரசைபாக்கம் பொன்னம்பல முதலியார்

இவர் பிள்ளையவர்கள் சென்னையில் தங்கியிருந்த போது அவரிடம் பாடங் கேட்ட மாணாக்கர்களுள் ஒருவர். இவர் கும்பகோணம் காலேஜில் தமிழாசிரியராக இருந்து பின்பு சென்னை இராசதானிக் கலாசாலையிலும் அவ்வேலையில் இருந்தவர். இவர் பிள்ளையவர்கள் இயற்றிய அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழை மழவை மகாலிங்கையர் முதலிய

பலர் வழங்கிய சிறப்புப் பாயிரங்களோடு 1842-ஆம் வருஷம் பதிப்பித்தார். இவர் அந்நூலுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரத்தில் பிள்ளையவர்களை,

"........சிறந்த சைவ சமயமோங்கத்
தகரநறுங் குழல்பாகன் றிரு வருளாற்
சிராப் பளியென் தலத்தில் வாழ்வோன்
சிகரவட வரைப்புயத்தெம் மீனாட்சி
சுந்தரமால் திருந்தெந் நூலும் பகரவலோன்"

என்று பாராட்டியுள்ளார்.

## 597. மகாதேவ பாரதியார்

இவர் வேம்பத்தூர் சிலேடைப் புலி பிச்சுவையரின் மூத்தகுமாரர்; விரைவிலே செய்யுள்இயற்றுபவர். அவரைப் பற்றிய வரலாறு ஒன்று வருமாறு:

ஒரு நாள் பாஸ்கர சேதுபதியவர்களின் மாப்பிள்ளையவர்களது மாளிகையில் பல வித்துவான்கள் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அநுபவத்தை மகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினர். அப்பொழுது காலை 9 மணி இருக்கும். இயல்பான காற்று இல்லாமையால் அதிக வெப்பமாக இருந்தது. அம்மாளிகையில் பெரிய பங்காக்கள் இருந்ததைக் கண்ட நான் "பங்கா இழுப்பவன் இல்லையோ?" என்று கேட்டேன். உடனே அக்கூட்டத்திலிருந்த மகாதேவ பாரதியார் திடீரென்று எழுந்து அங்கிருந்த பங்காவின் கயிறு கட்டியிருந்த நிலைக்கு அப்புறம் விரைந்து சென்றார். நிலையின் மேல் ஒரு துவாரத்தின் வழியாக வெளியில் விடப்பட்டிருந்த கயிறு முடியப்பட்டிருந்தது. அங்குச் சென்ற பாரதியார் எழும்பி அந்த முடிச்சை எட்டிப் பிடித்துக் கொண்டார். பங்காக் காற்றை அநுபவிக்க அறிந்த அவர் அதனை இழுக்கும் முறையை அறியாமல் எப்படியாவது பங்காவை இழுத்து விரைவில் வெப்பத்தைப் போக்க வேண்டுமென்பதை எண்ணி அவசரமாக அந்தக் கயிற்று முடிச்சைக் கையிற் பிடித்து

இழுத்தார். அது கீழே வந்தது; பின்பு மேலே போயிற்று. அதைப் பிடித்துக் கொண்டிருந்த பாரதியார் அதை விட்டு விட்டால், மறுபடியும் பிடித்து இழுக்க நேரமாகுமென்றெண்ணி அதுமேலே போகும்பொழுது அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே தாமும் மேலே எழும்பிப் போனார். நிலை மிக உயரமானது; அவரோ மெல்லிய தேகத்தையுடையவர். ஆதலின் இப்படிக் கீழே வருகையில் இழுத்தும் மேலே போகையில் மேலே உடன்சென்றும் தம்மையே மறந்து பங்காவை இழுத்துக்கொண்டிருந்த அவரது நிலைமையை யாவரும்கண்டு வியப்புற்றனர். பின்னர் பங்காக்காரன் வந்துவிட்டான்.

அவன் கயிற்றை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு வழக்கம்போல் முடிச்சை அவிழ்த்துக் கயிற்றை நெடுகவிட்டு இழுக்க ஆரம்பித்தான். மகா தேவ பாரதியார் அவனுடைய செயலைச் சிறிதுநேரம் கூர்த்து கவனித்துவிட்டு வந்தார். "உயர்குலத் தோன்றலும் கவிஞருமாகிய நீர் இவ்விதம் செய்யலாமா? உமக்கு முன்பு பழக்கம் இல்லையே!" என்று கேட்டேன். அவர் உற்சாகத்தோடும் உவகையோடும் "பங்கா இழுப்பதென் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே" என்று பாட்டாக விடையளித்தார். அந்த அடி ஒருகட்டளைக் கலித்துறையின் ஈற்றடியாவதற்கு ஏற்றதாக இருத்தலை அறிந்து, "பாட்டை முடித்துச் சொல்லவேண்டும்" என்றேன். உடனே அவர் சற்றும் தயங்காமல்,

"கொங்கார் பொழில்புடை சூழ்முக
வாபுரிக் கொற்றவனாம்
மங்காத சீர்த்தி வளர்பாற்
கரமுகின் மாப்பிள்ளையின்
சிங்கார மாளிகை யிற்புல
வோர்க்குஞ் சிரத்தையுடன்
பங்கா இழுப்பதென் முன்னோர்கள்
செய்திட்ட பாக்கியமே"

என்ற கட்டளைக் கலித்துறையைச் சொல்லித் தமது பரம்பரைப் பெருமையை விளக்கினார். அங்கிருந்த யாவரும் அவருடைய ஆற்றலையும் வித்துவான்களிடத்தில் அவருக்கிருந்த அன்பையும் வியந்து பாராட்டினார்கள். அன்று மாலை ஸ்ரீ ராஜராஜேசுவர சேதுபதியவர்கள் வீற்றிருந்த சபையில் இந்த நிகழ்ச்சியை நான் தெரிவித்தபொழுது அவர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள்.

## பொது

*[விதியின் திறன்' என்ற தலைப்பில் ஐயரவர்கள் ஒரு புலவரின் வரலாற்றை எழுதியுள்ளார்கள். அது வருமாறு:]*

நமது நாட்டில் ஆங்காங்கு வழங்கும் தனிப் பாடல்கள் பல. அவற்றைப் பாடிய புலவர்கள் பலருடைய வரலாறுகள் சொல்வாரற்று மறைந்து போயின. சிலதனிப்பாடல்கள் இயற்றிய புலவர்களைப் பற்றியும்,அவற்றின் சந்தர்ப்பங்களைப்பற்றியும்,கர்ண பரம்பரையாக அங்கங்கே சில சில செய்திகள் மட்டும் அப்பாடல்களோடு வழங்கி வருகின்றன. என்னுடைய இளமைக்காலத்தில் அத்தகைய செய்திகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். சில தனிப்பாடல்கள் சம்பந்தமான வரலாறுகள் மிகுந்த வியப்பை உண்டாக்கும். அவற்றுள் ஒன்று வருமாறு:

'மூவேந்தரு மற்றுச் சங்கமும் போய்' விட்ட காலத்தில் தமிழ் நாட்டில் ஒருசமயம் பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது புலவர்களை ஆதரிக்கும் பிரபுக்கள் அரியராயினர். கொள்ளைக் கூட்டங்கள் அதிகரித்தன. புலவர்கள் வறுமையின் மிகுதியால் தாம் கற்ற கல்வியையே வெறுத்துப் பேசும் நிலைமைக்கு வந்துவிட்டனர்.

அக்காலத்தில் ஒரு புலவர் தம்மை ஆதரிப்பாரின்றி வருந்தினார். அவர் சிவபக்திச் செல்வம் நிரம்பி

யவர்; வேறொரு தொழிலும் செய்ய அறியார்; ஆதலின் எங்கேயாவது சென்று ஜீவனம் செய்யலாமென்னும் நினைவுடன் தம் இல்லாளோடு அவர் வீட்டை விட்டு அயலிடத்துக்குப் புறப்படலானார்.

புலவரும் மனைவியும் ஒரு காட்டின் வழியே செல்ல நேர்ந்தது. அக்காட்டில் சிலர் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் புலவரையும் அவர் மனைவியையும் கண்டு நெருங்கி வந்தார்கள். அவர்களுடைய தோற்றம் அஞ்சத்தக்கதாக இருந்தது. அக்கூட்டத்தினரைக் கண்ட புலவருடைய மனைவி பயந்து, "சகோதரர்களே, என்னையும் என் கணவரையும் காப்பாற்றுங்கள். நாங்கள் ஜீவனத்துக்கு வழியில்லாமல் வேறு இடங்கள் சென்று பிழைக்கலாமென்றெண்ணி வருகிறோம். உங்களைக் கண்டால் நல்ல புண்ணியசாலிகளென்று தோற்றுகிறது" என்று சொல்லிஅழுதாள். சகோதரர்களென்று அவள் அழைத்ததை அக்கூட்டத்தில் இருந்த ஒருவன் கேட்டு மனமிரங்கி அவ்விருவரையும் பார்த்து, "நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களை நாங்கள் காப்பாற்றுகிறோம். நீங்கள் இனிமேல் எங்களோடே இருக்கலாம். எங்களுடைய சகோதரியையும் சகோதரி புருஷரையும் போல உங்களை நாங்கள் பார்த்து வருவோம். எங்களுக்கு வரும் லாபத்தில் உங்களுக்கும் பங்கு தருவோம். எங்களோடு சேர்ந்து உழைக்க வேண்டும்" என்றான்.

**புலவர்**:—அப்படியே செய்கிறேன். நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?

**அவன்**;—நாங்கள் திருட்டுத் தொழில் செய்வோம்.

புலவருக்கும் அவருடைய மனைவிக்கும் அப்பொழுதுதான் அவர்கள் கள்வரென்று தெரிய வந்தது. புலவர் சற்று நேரம் யோசித்தார்.

**கள்வர் தலைவன்:**—என்ன யோசிக்கிறீர்? எங்களுக்குள் ஒரு தருமம் இருக்கிறது. ஏழைகள் வீடுகளிலும் தருமவான்கள் வீடுகளிலும் போய் நாங்கள் திருடமாட்டோம். பிறருக்குக் கொடாமல் தாமும் உண்ணாமல் பணத்தைச் சேர்த்து வைத்திருக்கும் லோபிகள் வீட்டிலேதான் திருடுவோம். நல்லவர்கள் வீட்டிற்கு நாங்கள் திருடப்போனால் அபசகுனங்கள் உண்டாகும். கன்னம் வைக்கும்போது தேள் கையில் கொட்டும். அப்பொழுது நாங்கள் பயந்து திரும்பி விடுவோம்.

கள்வர் தலைவன் திருட்டுத் தொழிலைப்பற்றி வேறுசில செய்திகளும் சொல்லி நிறுத்தினான்.

புலவர் 'இதுவும் சிவன் செயல்போலும்!' என்று எண்ணி வேறுவழி இல்லாமையால் அவர்களோடு இருக்க உடன்பட்டார். கள்வர்கள் அவ்விருவருக்கும் காட்டுக்குள் ஒரு தனி இடம் அமைத்துக்கொடுத்து வேண்டியவற்றை அளித்து ஆதரித்து வந்தார்கள். தீத்தொழிலை உடையவர்களானாலும் அவர்களுக்கு இருந்த அன்புடைமையை நினைந்து நினைந்து அப்புலவர் வியந்தார்; நாளடைவில் நல்லுபதேசம் செய்து அவர்களைத் திருத்திவிடலாமென்று அவர் எண்ணினார்.

ஒருநாள் கள்வர்தலைவன் புலவரையும் திருட வரும்படி அழைத்தான். 'குரங்குக்கு வாழ்க்கைப் பட்டால் மரம் ஏறாதிருக்க முடியுமோ?" முன்பே வாக்குக் கொடுத்தபடி செய்ய வேண்டியவராதலின் புலவர் அதற்கு இணங்கினார்.

பக்கத்திலிருந்த ஊரிலுள்ள ஒரு ஜமீன்தாருடைய அரண்மனையில் அன்று திருட எண்ணிக் கள்வர் சென்றனர். புலவரும் உடன் சென்றார். சென்ற கள்வர்கள் ஜமீன்தாரின் அரண்மனையை

அடைந்து ஒரு பக்கத்திலே கன்னமிட்டுப் புலவரை உள்ளே போய் உளவறிந்துவரச் செய்தனர்.

கன்னமிட்ட துவாரத்தின் வழியே புலவர் நுழைந்து உள்ளே சென்றார். அவர் சென்ற இடம் அரண்மனையின் அந்தப்புரமாக இருந்தது. அங்கே ஓரிடத்தில் ஒரு பெரிய மஞ்சத்தில் ஜமீன்தாரும் அவர் மனைவியும் உறங்கிக் கொண்டிருந்தனர். நிலைக் கண்ணாடிகளும் அழகிய விளக்குகளும் வேறு பல அலங்காரப் பொருள்களும் அவ்விடத்தை அழகு செய்துவிளங்கின. அவற்றைக் கண்ட புலவர் வியந்து இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தார்; பிறகு அந்த மஞ்சத்தின் கீழே புகுந்து மறைவாக இருந்து என்ன செய்வதென்று யோசிக்கலானார்.

இரவின் நான்காம் ஜாமத்தில் ஜமீன்தாரும் அவர் மனைவியும் விழித்துக்கொண்டனர். ஜமீன்தார் தமிழ்ப்பயிற்சி மிக்கவர்; தமிழ்நயம் கண்டு இன்புற்றுப் பொழுது போக்கும் இயல்புள்ளவர். அவர் மனைவியும் தமிழன்பு மிக்கவள். விழித்துக்கொண்ட அவ்விருவரும் ஒருவரோடொருவர் பல விஷயங்கள் பேச ஆரம்பித்தார்கள். சில நேரத்திற்குப் பின் இருவரும் சேர்ந்து நூதனமாக ஒரு செய்யுளை இயற்றலானார்கள்.

ஜமீன்தார் முதல் இரண்டடியை ஒரு வினாவாக அமைத்தார். அவர் மனைவி அவ்வினாவுக்குரிய விடையை அமைத்துப் பின் இரண்டடியையும் பூர்த்தி செய்ய முயன்றாள்.

புலவர் கீழே இருந்து எல்லாவற்றையும்கவனித்துக் கொண்டிருந்தார். அவர் காதில் அத்தமிழ்ச் செய்யுள் இனிமையோடு புகுந்தது. கள்வருக்கிடையே இருக்கையில் தமிழ் நூல்களைப்பற்றி நினைக்கச் சமயம் ஏது? ஆதலின், தமிழுக்கு அலந்திருந்த அவர்

மனம் அப்பொழுது ஒரு புதிய உணர்ச்சியை அடைந்தது. உடனே அவர் அவ்விருவர் சம்பாஷணையிலும் ஒன்றிவிட்டார். ஜமீன்தார் சொன்ன செய்யுளின் முற்பாதிக்கு ஏற்ற பிற்பாதி அநாயாசமாக அவருக்குத் தோற்றியது. அதைச் செவ்வையாக மனத்துக்குள் அமைத்துக் கொண்டார். தமக்கு அப்பொழுது உண்டான ஊக்கத்தில் அவர் தாம் களவுசெய்ய வந்திருப்பதையும், மறைவாக இருப்பதையும் மறந்தார். ஒரு சபையில் தமக்குக் கொடுக்கப்பட்ட ஸமஸ்யையை முடிக்கவேண்டிய நிலையில் இருப்பதாக எண்ணினார். ஜமீன்தார் தாம் முடித்த முற்பாதியை மீண்டும் மனைவிக்குச் சொல்லிக் காட்டினர். உடனே புலவர் தாம் முன்பே மனத்துள் முடித்து வைத்திருந்த பிற்பாதியைத் தொடர்ந்து கீழே இருந்தபடியே கூறினார்.[1]

ஜமீன்தார் திடுக்கிட்டார். அவர் மனைவி சரேலென்றெழுந்து வேறிடஞ் சென்றாள். ஜமீன்தார், "யார் அங்கே?" என்று அதட்டிக் கேட்டார். புலவர் தம்முடைய நிலை இன்னதென்பதை அப்பொழுது தான் உணர்ந்தார்; மெல்ல வெளியே வந்து உடல் நடுக்கத்தோடு நாக் குழற அவர் தம்முடைய வரலாற்றை உரைக்கலானார்.

ஜமீன்தார் முதலில் கோபம் கொண்டவராக இருந்தாலும் தமிழ்ச் சுவையறிந்தவராதலின் புலவர் தமது வரலாற்றைக் கூறிக்கொண்டு வரவர அவர் மனம் இளகியது. பசிப்பிணியே புலவரை அந் நிலைக்குக் கொண்டுவந்ததென்பதை நினைத்து நினைத்து அவர் மிகவும் மனம் இரங்கினார்.

**புலவர்:**—ஏதோ ஊழ்வினை வசத்தால் இந்த ஸங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டேன். நான் முன்பே

---

[1] அச்செய்யுள் இப்பொழுது என் ஞாபகத்திற்கு வரவில்லை.

உயிரைவிட்டிருப்பேன். தமிழை மறந்து விட்டு உயிர்தரித்திருப்பதில் என்ன பயன் இருக்கிறது? என்னுடைய மனைவியொருத்தி இருக்கிறாள். அவளுக்காக உயிர்வைத்திருக்கிறேன். என்செய்வேன்! என்னை எஜமானவர்கள் காப்பாற்ற வேண்டும். அன்றியும் மற்றொரு வரம் அருளவேண்டும். என்னோடு வந்திருக்கும் கள்வர்கள் சில நற்குணங்களை உடையவர்கள்; லோபிகள் வீடுகளிலேதான் அவர்கள் திருடுவார். இன்று தவறி இங்கே வந்து விட்டார்கள். இதுவரையில் எங்களை அவர்கள் பாதுகாத்து வந்தார்கள். அவர்களை இப்பொழுது எஜமானவர்கள் துன்புறுத்தாமல் விட்டு விட வேண்டும். என்னால் அவர்கள் அகப்பட்டு வருந்தலாகாது.

புலவருடைய நன்றியறிவின் மிகுதியை ஜமீன்தார் உணர்ந்தார். அவருடைய மனம் அதிகமாக இரங்கியது.

"ஐயா! நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் உம்முடைய நண்பர்களை நான் ஒன்றும் செய்யேன், இதோ என்னுடைய பொக்கிஷ அறையைக் காட்டுகிறேன். அங்கே உள்ளவற்றில் உமக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு போய் உம்முடைய நண்பர்களுக்கும் கொடுத்துச் சௌக்கியமாக இரும்" என்று சொல்லி ஜமீன்தார் புலவரை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார். அவ்வறையில் பல வகையான ஆடையாபரணங்கள் நிறைந்திருந்தன. மூலைகளில் முத்துமாலைகளும் ரத்தினமாலைகளும் பொன் மாலைகளும் மாட்டப்பட்டுத் தொங்கின. கொடிகளில் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள் இருந்தன. அவைகளையன்றிக் கீழே சில பெட்டிகளும் காணப்பட்டன.

ஜமீன்தார், "இவற்றுள் எதுவேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்" என்றார். அங்கே இருந்த

வற்றைக்கண்ட புலவர் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார். இன்னதை எடுத்துக் கொள்வதென்று தோன்றவில்லை. 'யாவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கத் தக்கதாக இருக்க வேண்டுமே என்று யோசித்தார். சில சில ஆபரணங்களைக் கையால் தொட்டுப் பார்த்தார். சிலவற்றை எடுத்து நோக்கினார். பித்துப் பிடித்தவர் போல ஒரு நாழிகை ஒன்றும் தோன்றாமல் இப்படி நின்று பிறகு முடிவில் ஒரு பெட்டியைக் காட்டி, "இதை எடுத்துப் போகிறேன்" என்றார். "அப்படியே செய்யும்" என்று சொல்லிவிட்டு ஜமீன்தார் அதன் ஒரு பக்கத்தைப் பிடித்துக் கொண்டார்; புலவர் மற்றொரு பக்கத்தைப் பிடித்துக் கொண்டார். அதை இருவரும் கன்னவாசல் வரையில் தூக்கி வந்தனர். அவ்வாசலுக்குள் பெட்டி செல்லவில்லை. அதையறிந்த ஜமீன்தார் சில ஆயுதங்களை எடுத்து வந்து அந்தத் துவாரத்தைப் பெரிதாக்கினர்; வெளியே பெட்டியைக் கொணர்ந்து புலவர் தலையில் தூக்கி வைத்தார்; "புலவரே, ஞாபகம் இருக்கவேண்டும். கஷ்டப்பட்டால் கூசாமல் என்னிடம் வந்துவிடும். எப்பொழுது உமக்கு வரமுடியுமோ அப்பொழுது வாரும். சௌக்கியமாக இங்கேயே இருக்கலாம். இந்த இடம் உம்முடைய இடமே. இதோ அந்தப்பெட்டியின் திறவுகோல் இருக்கிறது" என்று சொல்லி ஒரு திறவுகோலை அளித்து விடை கொடுத்தனுப்பினார்.

உள்ளே சென்றவர் நெடுநேரமாகியும் வாராமையினாலும், உள்ளிருந்து ஏதோ பேசும் குரல் கேட்டமையாலும் புலவர் அகப்பட்டுக் கொண்டாரென்று பயந்து கள்வர்கள் ஓடிப்போய்விட்டனர். வெளியில் வந்த புலவர் அவர்களைக் காணவில்லை. ஆதலின் அவர் 'இன்றைக்கு நல்ல லாபம் நம்மால் உண்டாயிற்றென்று கள்வர்கள் ஸந்தோஷப்படுவார்கள். அவர்களைத் திருத்துவதற்கு இது நல்ல சமயம்' என்று எண்ணிக்கொண்டு பெட்டியின் பாரத்தைப் பொருட்

படுத்தாமல் ஊக்கத்தோடு அதனைச் சுமந்துகொண்டு தம்முடைய உறைவிடத்துக்கு வந்தார். அவருடைய நிலை என்ன ஆகுமோ என்றெண்ணிய அவர்மனைவி அவரது வரவை மிக்க ஆவலோடு எதிர்பார்த்து இருந்தாள். புலவர் மகிழ்ச்சியோடு தள்ளாடித் தள்ளாடிப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வருவதைக்கண்ட அவளுக்குப் போன உயிர் வந்தது; எதிர்சென்று அவர் தலையிலிருந்து பெட்டியை இறக்கினாள். அதைக்கீழே வைத்துவிட்டு நிகழ்ந்தவற்றையெல்லாம் அவர் சொன்னார். அவர் மனைவி கேட்டு வியப்புற்றாள்.

அந்தப் பெட்டியில் என்ன என்ன பொருள்கள் இருக்கின்றனவோ என்று :பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு இருந்தது. ஆதலின் திறவுகோலைக்கொண்டு புலவர் திறந்து கைவைத்துப் பார்த்தார். முத்தும் இரத்தினங்களும் பொன்னும் ஆடையும் அதில் நிரம்பியிருக்குமென்று அவர் நம்பியிருந்தார். பாவம்! அப்பெட்டி முழுவதும் உப்பு நிறைந்திருந்தது. புலவருக்கு உண்டான வருத்தத்துக்கு எல்லையில்லை; "எவ்வளவு சிரமப்பட்டுத் தூக்கி வந்தேன்! வேறு பெட்டியை எடுத்து வந்திருக்கலாகாதா? ஜமீன்தார் நினைத்திருந்தால் அங்கேயே என்னைக் கொன்றிருக்கலாம்! அவர் எவ்வளவு அன்புடன் பேசினார்! தம்முடைய பொக்கிஷத்தை அவரே திறந்து காட்டி 'எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்' என்றாரே; சில முத்துமாலைகளையோ பொன்மாலைகளையோ எடுத்து வந்தேனில்லையே! சில பட்டாடைகளையாவது மூட்டை கட்டி எடுத்து வந்திருக்கலாகாதா! என்னுடைய துரதிர்ஷ்டம் இப்படியா வந்து முடியவேண்டும்?" என்று பெருமூச்சுவிட்டு வருத்தமுற்றார். அவர் மனைவியும் வருந்தினாள்.

அப்பால் சிறிது நேரம் கழிந்த பின்னர் அவர் மனைவி, "இனி வருத்தப்படுவதில் என்ன பயன்?

இந்த உப்பைக் கீரைக்கு வைத்துக் கொள்ளலாம்" என்று சொல்லி அதில் சிறிது கையிலெடுத்தாள். என்ன ஆச்சரியம்! அது வாண உப்பாக இருந்தது. "இது நல்ல உப்புக்கூட அன்றே! வாண உப்பாக இருக்கிறதே!" என்றாள். புலவருடைய மனம் எப்படி யிருந்ததென்பதை வார்த்தைகளால் சொல்ல முடியுமோ? கொஞ்ச நாழிகை அவர் மௌனமாக இருந்தார். பிறகு அவருடைய உணர்ச்சி,

"நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின்
நதியெலாம் நவமணி தரினும்
காடெலாம் ஆடை காய்க்கினும் மேகம்
கனகமே பொழியினும் மடவாய்
ஆடலே புரியும் அம்பல வாணர்
அவரவர்க் கமைத்ததே யல்லால்
வீடெலாம் கிடந்துபுரண்டுருண் டழினும்
விதியலால் வேறுமொன் றுளதோ?"

என்ற செய்யுளாக வெளிப்பட்டது. விதியின் திறத்தையன்றி அவர் வேறு என்ன நினைந்து ஆறுதலடைய முடியும்?

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 8 | மிகவம் | மிகவும் |
| 12 | 8 | திருசிரபுரம் | திரிசிரபுரம் |
| 23 | 23 | விகாதச் | விவாதச் |
| 31 | 12 | புனிதமாகு | புனிதமிகு |
| 32 | 14 | ஆழ்வார் சுப்பிரமணிய | ஆழ்வார் திருநகரி சுப்பிரமணிய |
| 33 | 1 | திருக்குருக்கை | திருக்குருகை |
| 57 | 7 | வீருத்தாசலத்திற்குப் | விருத்தாசலத்திற்குப் |
| 59 | 3 | பார்த்திவழுசை | பார்த்திவபூசை |
| 72 | 11 | நாதா | ராதா |
| 75 | 15 | இரன்டாம் | இரண்டாம் |
| 90 | 19 | வின்ங்குகின்றது | விளங்குகின்றது |
| 102 | 8 | சுருக்கங்கள் | சருக்கங்கள் |
| 110 | 22 | யாயிரத்தில் | பாயிரத்தில் |
| 113 | 18 | ரென்னும் | என்னும் |
| 119 | 25 | நாண்மணிமாலை | நான்மணிமாலை |
| 124 | 12 | ன்கு | நன்கு |
| 126 | 15 | கிறந்த | சிறந்த |
| 139 | 14 | சமயோகிதம் | சமயோசிதம் |
| 141 | 35 | கருத்துவிகோ | கருத்துலகோ |
| 144 | 8 | யிற்றும் | யியற்றும் |
| 145 | 3 | முடவன்கோலுன்றி | முடவன் கோலூன்றி |
| 151 | 10 | பட்டை | பேட்டை |
| 153 | 27 | தமிழறவை | தமிழறிவை |
| 153 | 30 | ஐயரவர்களுடைய | ஐயரவர்களுடைய |
| 154 | 4 | நூல் | நூல்கள் |
| 154 | 27 | கற்றுணந்தவர் | கற்றுணர்ந்தவர் |
| 157 | 14 | விளையு | வினையு |
| 167 | 1 | உயிர | உயிர் |
| 174 | 26 | சாமுநாதையர் | சாமிநாதையர் |
| 183 | 15 | கோழீச்சுரக் | கோடீச்சுரக் |
| 183 | 16 | கோழீச்சுரம் | கோடீச்சுரம் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 186 | 20 | மருவுகொடி | மருவுகொடு |
| 186 | 21 | கம்பீரச் | சம்பீரச் |
| 188 | 17 | தஞ்சைக் | தஞ்சைச் |
| 190 | 9 | ஸ்ரீ நிவாசாரிய | ஸ்ரீ நிவாசாசாரிய |
| 191 | 16 | கோடீசுரக் | கோடீச்சுரக் |
| 199 | 12 | னின்றுநெளி | னின்றுநெறி |
| 218 | 16 | உண்பதங்குரிய | உண்பதற்குரிய |
| 231 | 8 | புராணகடவுள் | புராணக்கடவுள் |
| 240 | 12 | தமழிலக்கண | தமிழிலக்கண |
| 241 | 9 | இதணை | இதனை |
| 272 | 8 | ராலிவாடீசுர | சாலிவாடீசுர |
| 275 | 29 | அகிலாண் | அகிலாண்ட |
| 280 | 1 | பஃாதிறகும் | பஃதிற்கும் |
| 280 | 4 | ஏட்டும் | ஏட்டுப் |
| 289 | 20 | இவை | இது |
| 290 | 15 | தேதிகர் | தேசிகர் |
| 304 | 24 | விக்கிம | விக்கிரம |
| 316 | 21 | பெருங்குளத்துக்குச் | பெருங்குளத்துக்குக் |
| 325 | 8 | ஆனத்த | ஆனந்த் |
| 338 | 22 | தண்டலைசூழந் | தண்டலைநூழஞ் |
| 343 | 11 | அருணசல | அருணாசல |

குறிப்பு:-

பக்க எண் வரிசையில் பக்கம் 33 முதல் 40 வரை விடுபட்டுள்ளது; ஆதலின் முதல் எட்டுப் பக்கங்களுக்கு எண் *கொடுக்கப்பட வில்லை.